# படகு வீடு



ரா .கி .ரங்கராஜன்

# படகு வீடு

KOLK
16888
3289699

## ஒன்று

பதின்மூவாயிரத்து ஐந்நூறு அடி உயரம்— ஐந்நூற்றுச் சொச்சம் மைல் வேகம்.

வாணலியில் பட்டாணிபோல வெய்யிலில் வறுபட்டு மினுமினுத்த பழைய டில்லியும் புது டில்லியும் எப்போதோ மறைந்துவிட்டன. ரொட்டித் துண்டம்போல் கதுப்புக் கதுப்பாய்த் தெரியும் வறண்ட நிலப்பரப்பு, இயற்கையன்னை விளையாடுகிற சதுரங்கப் பலகைபோல் கறுப்பும் வெளுப்புமாகப் பல கட்டங்களாகக் காட்சி தருகிறது.

விமானத்துக்கு உள்ளே, சிற்றுண்டி முடிந்து சிரம பரிகாரங்கள். பத்திரிகைகளின் சளசளப்பு பிரயாணிகளை நோட்டமிடுவதுபோல் ஓசையின்றி உலவும் சிகரெட் புகைகள்.

டக். டக். டக்.— சிற்றுண்டி வைக்கப்பட்ட செருகு பலகைகள், ஆசனத்தோடு திரும்பப் பொருத்தப்படுகின்றன.

''மிஸ். ஒரு தலையணை ப்ளீஸ்''

பணிப் பெண் எடுத்துத் தருகிறாள் மேலேயிருந்த பலகையிலிருந்து. பெற்றுக்கொண்ட இளைஞர், வழவழவென்றுள்ள அந்த வெளிர் நீல பேபி தலையணையை ஆசையுடன் தடவியபடி புன்னகை பூக்கிறார்.

''டயம்ஸ் அஃப் இந்தியா அங்கே யாரிடமாவது இருக்கிறதா பாருங்களேன்'' என்று கேட்பவர் கனமான சரீரமுள்ள பஞ்சாபி அம்மையார்.

பணிப் பெண் மறுபுறம் போகிறாள். அரை வழுக்கையும் குறுந்தாடியும் ஒற்றை மூக்குக் கண்ணாடியும் அணிந்த நபரின் கையில் 'டயம்ஸ் அஃப் இந்தியா' இருக்கிறது. ஆனால் அவரைக் கேட்க விருப்பமில்லை. ஜலதோஷமோ என்னவோ அடிக்கடி கைக்குட்டையால் முகத்தைப் பொத்திக் கொள்கிறார் அவர். சற்று முன் காப்பியா டீயா என்று வினவியபோது, ''தொந்தரவு செய்யாமல் இருந்தால் போதும்'' என்று கடுமையாகப் பதிலளித்தவர்.

இந்த வரிசைக் கடைசியில் இருந்தவர்கள் அமெரிக்கத் தம்பதிகள். அவர்கள் தாங்களே கொணர்ந்திருந்த 'டயம்' பத்திரிகையைச் சேர்ந்தாற்போல் புரட்டிக் கொண்டிருக்கிறார்கள். அமெரிக்க 'டயம்.'

ஜி—3, 4 ஆசனங்களில் சிலோனுக்குப் போகிறவர்கள் போல் தோன்றிய இரண்டு வாலிபர்கள். கைலி வேட்டி, ஜிப்பும் கையும் வைத்த பனியன்கள். நல்ல உறக்கம்.

கேபினுக்குச் சமீபமான இடங்களில் பலவிதக் கதம்பம்.

புதுப் புது நாகரிகங்களைப் பார்த்துச் சலித்த பணிப் பெண்ணையே கூர்ந்து கவனிக்க வைத்த கொண்டையலங்காரத்துடன் ஒரு மலையாளப் பெண்மணி. கிரிக்கெட் மட்டையைத் தொடையில் சாய்த்தபடி 'ஸ்போர்ட்ஸ்' பத்திரிக்கையைப் புரட்டிக் கொண்டிருக்கும் 'மதறாஸி.' அவருக்கு இடது கைப்புறம் ஒரு சாமியார். மழுங்க மழித்த சிரம். காவி ஜிப்பாவினுள் மெல்லிய செயின் மினுமினுக்கிறது. இளம் வயது. கட்டான உடல். ''இன்று உபவாசம்'' என்று முறுவலுடன் சிற்றுண்டி மறுத்தவர்.

அவரிடம் தினசரித் தான் இருக்கிறது. மடிந்த நிலையில்



''படித்தாகி விட்டதா? அங்கே ஒருவர் கேட்கிறார்.''

''ஓ'' என்று எடுத்துத் தரும்போது, தான் நனைந்திருப்பதைக் கவனிக்கிறாள் பணிப் பெண். திடுக்கிட்டு நிமிர்ந்து நோக்கியதும், மேலே, காற்றைக் குளிர்வித்துத் தரும் குமிழ்கள் சில்லிட்டு நீர்த் துளிகள் நிறைந்திருப்பது தெரிகிறது.

''ஸாரி ஸ்வாமிஜி?'' என்று கூறி, நாப்கின் துண்டினால் குமிழ்களைத் துடைத்து விடுகிறாள்.

''பரவாயில்லை. அதுவும் ஒரு ஆனந்தம்,'' என்கிறார் துறவி.

'டயம்ஸ் ஆஃப் இந்தியா' கேட்ட அம்மையாருக்கு இப்போது அது தேவையில்லாமலே உறக்கம் வந்து விட்டது. சிரிப்பை அடக்கிக்கொண்டு பணிப் பெண் வெளியே பார்த்தவண்ணம் நிற்கிறாள்.

இறக்கையில் கறுப்புப் பட்டைகள். 'இங்கு கடக்காதே— இதற்கு வெளியே கால் வைக்காதே' என்ற எச்சரிக்கைகள் கொண்ட ஆங்கில வாசகங்கள் பொடிப் பொடியாய்த் தெரிகின்றன. வெகு கீழே கடலும் பூமியும் இணைவதற்குச் சாட்சி நிற்கும் வெள்ளைக் கோடு. மேகத் திட்டுகள், பிள்ளையார் எறும்புகள் மொய்த்திருக்கும் வெல்லத்துண்டம் போலச் சிறு சிறு கறுப்புக் கிராமங்கள்.

கிரிக்கெட் மட்டை வைத்திருப்பவர் எதற்கோ கூப்பிடுகிறார். அப்போது காப்பி வேண்டாம் என்றவர், இப்போது கேட்பாரோ?

பணிப் பெண் நகருகிறாள்.

''இவ்வளவு வசதி செய்திருக்கிறீர்கள். நல்லதாய்க் கொஞ்சம் ரெகார்டுகளும் வைப்பதுதானே? பாட்டுக் கேட்டுக் கொண்டிருக்கலாமே?'' என்கிறார் கிரிக்கெட் இளைஞர்.

''சில பேருக்குத் தூக்கம் கெடும்'' என்று அவருக்கு இனிமையாகப் பதில் தரும்போதே, மறுபுறத்திலிருந்து தலையணை வாலிபர் புன்சிரிப்புடன் கண் ஜாடை காட்டி அழைப்பது தெரிகிறது.

அங்கே சென்று, ''என்ன வேண்டும்?'' என்று கேட்கிறாள்.

''ஆசாமி தானே பாடத் தொடங்கிவிடப் போகிறார், ஜாக்கிரதை'' என்கிறார் தலையணை.

புன்னகையில் பெருமை நிறையப் பணிப்பெண், காபின் அறைக்குள் நுழைகிறாள். அழகில்லாத நீலப் புடவையினால் அடிக்கடி ஏற்படுகின்ற மனக் குறை, இப்படி வலியப் பேசுகிறவர்களால்தான் தீர்கிறது.

தம்பூர் சுருதி மாதிரி விமானம் ரீங்கரிக்கிறது. பதின்மூவாயிரத்துச் சொச்சம் அடி உயரம். ஐந்நூற்றுச் சொச்சம் மைல் வேகம், சென்னையை நோக்கி.

★

கழுதைப் படம்.

நாலு கால், நீளச் செவிகள், வேண்டுமென்றே நீட்டி விடப்பட்டிருந்த வால். கால்களில் ஒன்று உதைக்கிறது.

'சத்யாக் கழுதை,' என்று படத்தின் கீழே வாசகம்.

சத்யா சிரித்துக் கொண்டாள்.

ராதா அத்தான் காஷ்மீரிலிருந்து ஒரு மாதத்துக்கு முன்பு எழுதியனுப்பியது இது— சத்யா எம். பி. பி. எஸ். என்பதோடல்லாமல் 'ஹவுஸ் சர்ஜன்' என்று சேர்த்து எழுதியிருந்தார் ராதா அத்தான்.

தபால்காரன் கொண்டுவந்து தந்தபோது, ''என்னடி? யார் கடிதம்?'' என்று பூஜை அறையிலிருந்து அம்மா



கேட்டதையும் சரி; ஆபீஸ் அறையில் உயர்தரப் போலீஸ் அதிகாரிகள் புடைசூழக் கோலோச்சிக் கொண்டிருந்த தந்தை டெபுடி கமிஷனர் சாரங்கபாணி, தம் பேச்சை நிறுத்திக்கொண்டு, ''யார் சத்யா?'' என்று வினவியதையும் சரி; அப்பாவின் பர்ஸனல் அஸிஸ்டென்ட்டான மணி, ''வேறே ஆபீஸ் கடிதம் எதுவும் வரவில்லையே?'' என்று பின்னாலேயே வந்து விசாரிக்கும் சாக்கில் அந்தக் கடித உறையை நோட்டமிட முயன்றதையும் சரி; வேலைக்காரக்குட்டி, ''எனக்குத் தெரிஞ்சு போச்சுது சின்னம்மா'' என்று கை கொட்டி நகைத்ததையும் சரி; மாடியேறும் கைப்பிடிச் சட்டத்தில் துருத்திக் கொண்டிருந்த பொல்லாத ஆணியொன்று பட்டுச் சேலையைப் பதம் பார்த்ததையும் சரி, சத்யா பொருட்படுத்தவில்லை எதையும்.

குடுகுடுவெனத் தன் அறைக்குச் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டாள், சத்யா. பரபரவென்று உறையைக் கிழித்தாள். அதற்குள்ளிருந்து இந்த வெள்ளிமூக்குக் குதிரையொன்று மட்டுமே வெளியே வந்து விழுந்ததையும், அன்று பூரா அவளுக்குக் கோபம் கோபமாய் வந்து எல்லார்மீதும் எரிந்து எரிந்து விழுந்ததையும் இன்று நினைத்துக் கொண்ட போது சிரிப்புத்தான் வந்தது சத்யாவுக்கு.

சிரித்தாள். ஆனந்தம் பொங்கி வழிந்துகொண்டிருந்தது அவளுடைய செழுமையான இதயத்துக்குள்ளே. தலையை நாற்பத்தைந்து டிகிரி கோணத்தில் திருப்பி, தன் பருவத்தின் மதர்ப்பைப் பார்த்துத் தானே ரசித்துக் கொண்டவளாய், மெல்லிய ஒற்றை வடச் செயின் நெக்லஸ் சேலைக்கு வெளிப்புறம் மிதக்க விட்டுக் கொண்டாள்.

'...... எனது மைத்துனர் லேட் பாலகிருஷ்ணனின் குமாரனான ராதா என்ற சிரஞ்சீவி ராதாகிருஷ்ணனுக்கும் எனது குமாரத்தி சௌபாக்கியவதி சத்யாவுக்கும்...'

கல்யாணப் பத்திரிகைக்காகப் பிரஸ்ஸில் அனுப்பியிருந்த 'புரூப்' டிரஸ்ஸிங் டேபிளின் மறு ஓரத்தில் விரிந்து கிடந்தது. அப்பா எதையும் நவீனமாகச் செய்ய ஆசைப்படுகிறவர். பனை ஓலை மாதிரியே ஒரு காகிதம் இருக்கிறதாம். அதில் அச்சடிக்கப் போகிறாராம்.

அவள் பார்வை நிலைகொள்ளாமல் கன்றுபோல் துள்ளிக் கொண்டிருந்தது.

*சத்யாக் கழுதை...*

*ஏன்? அப்படிச் செய்தால் என்ன?*

உதட்டிலே இள நகை விளையாட, சிப்பைத் தலையிலே செருகிக்கொண்டு மேஜையடியில் உட்கார்ந்தாள் சத்யா. பேனாவைத் திறந்து, அந்தக் கழுதைக்குப் பக்கத்திலேயே இன்னொரு கழுதை வரைந்தாள். ஈயென்று இளித்துக் கொண்டிருக்கிற மாதிரி வாயை நன்றாக இழுத்து விட்டாள்.

'இது எந்தக் கழுதை?' என்று ஒரு வரி எழுதி, படத்தை மடித்தாள்; ஜாக்கெட்டுக்குள் செருகிக் கொண்டாள்.

ஏரோட்ரோமில் சந்தித்ததும் முதல் காரியமாக இதைக் கொடுக்காவிட்டால் என் பெயர் சத்யா இல்லை!

மிச்ச அலங்காரத்தில் இறங்கியபோது அவள் உள்ளம் குதியாட்டம் போட்டுக் கொண்டிருந்தது.

குறும்புக்கார அத்தான். மற்றவர்கள் அப்படி நினைப்பதில்லை. ஏன், அப்பாவுக்கும் அம்மாவுக்கும்கூட, கிளியை வளர்த்துப் பூனை கையில் கொடுக்கிறோமோ என்று சந்தேகம்தான், பயம்தான் உள்ளூர. ஆனால், முறைப் பையன். தாய் தந்தை இல்லாத ஏராள சொத்துக்காரன். ஒரே மகன். அந்த நாளிலேயே குடும்பங்களுக்குள் பேசி முடித்துக் கொண்ட விஷயம். ஆகவே, இவ்வளவு தூரத்துக்கு நிச்சயம் பண்ணியாகி விட்டது......



ஆயிற்று, டெல்லியிலிருந்து விமானம் புறப்பட்டிருக்கும். ஒரு கடிதம் போடக் கூடாது? தந்தி அடிக்கக் கூடாது? இத்தனாம் தேதி, இன்ன நேரம் வந்து சேருகிறேன் என்று? ஊஹூம்.

'சத்யாக் கழுதை' என்ற படம் வந்து சேர்ந்த பிறகு இந்த ஒரு மாதமாய்க் கடிதம் கிடிதம் எதுவுமே கிடையாது. ஆனால், மூன்று மாதம் முந்தி புறப்பட்ட போதே சொல்லியிருந்தார், ஜுலை நாலாம் தேதி, பகல், காரவலிட டாணென்று வந்து விடுவேன் என்று.

''சத்யா, ஏ சத்யா, அலங்காரம் முடிந்ததா, இன்னும் பாக்கி இருக்கிறதா?'' என்று கீழேயிருந்து மீனலோசனி கூப்பிட்டாள்.

''இதோ வந்தேனம்மா'' என்று பதிலளித்துவிட்டு, கடைசி முறையாக ஒரு தரம் கண்ணாடியைப் பார்த்து விட்டுக் கீழே இறங்கி வந்தாள் சத்யா.

கையில் தீபக் கரண்டியும் திருநீற்றுக் கிண்ணமும் வைத்துக்கொண்டிருந்த தாய், மகளின் நெற்றியில் ஒரு விபூதிப் பொட்டு இழுத்துவிட்டு, ''ஏண்டி பெண்ணே, ஆஸ்பத்திரிக்கு இந்தக் கொண்டை போட்டுக் கொண்டு போனால் யாரோ பெரிய டாக்டர் திட்டுகிறாரென்று ஒருநாள் சொன்னாயே?'' என்று வினவினாள்.

''ஆமாம், இல்லையென்று யார் சொன்னது?''

''பின்னே இதைப் போட்டுக் கொண்டிருக்கிறாயே?''

''நான் ஆஸ்பத்திரிக்குப் போகப் போகிறேன் என்று யார் உனக்குச் சொன்னது?''

''புண்ணியம் உண்டு, புதிர் போடாமல் பேசு, தயவு பண்ணி'' என்றாள் மீனலோசனி.

''அப்புறம் அவள் மண்டை வெடித்துவிடுமே!'' என்று பரிகாசம் பண்ணினார் சோபாவில் அமர்ந்தவாறே

காலுறைகளை மாட்டிக் கொண்டிருந்த அஸிஸ்டெண்ட் கமிஷனர் சாரங்கபாணி.

''புதிர் என்னம்மா? நானும் உங்களோடு ஏரோட்ரோமுக்கு வரப்போகிறேன்.''

வினாடி நேரம் திகைத்துப் போன மீனலோசனி ''சமர்த்து வழிகிறது, போ! கல்யாணப் பெண்ணாய் லட்சணமாய் இரு. யாராவது பார்த்தால் சிரிப்பார்கள். காலேஜுக்குப் போகாவிட்டால் பரவாயில்லை. வீட்டில் இருந்தால் சரி. உன் அத்தானை யாரும் கொத்திக்கொண்டு போய்விட மாட்டார்கள். பத்திரமாய் அழைத்து வருகிறோம்'' என்றாள் படபடவென்று தாழ்ந்தும், உயர்ந்தும் வெளிப்பட்ட குரலில்.

சத்யாவின் முகம் சுருங்கியது. ''போம்மா! நீ சுத்தக் கட்டுப் பெட்டி'' என்று சிணுங்குகையிலே—

''சத்யா!'' என்று போலீஸ் குரலில் அதட்டினார் சாரங்கபாணி. ''இந்த மாதிரி விஷயங்களில் நானும் கட்டுப் பெட்டிதான். பேசாமல் ஹாஸ்பிடலுக்குப் புறப்பட்டுப் போய்ச் சேர். ராதாவை அழைத்துவர எங்களுக்குத் தெரியும்.''

சத்யா பதில் கூறவில்லை. உதட்டைச் சுழித்துக் கொண்டு வாசலுக்குப் போனாள். போர்டிகோ படிகளில் உட்கார்ந்திருந்த ஆர்டர்லியும் டிரைவரும் சட்டென எழுந்து கொண்டு கும்பிட்டார்கள். அவர்களை ஏறெடுத்துக்கூடப் பாராமலே தோட்டத்து வழியே மெல்ல நடந்து டிரஸ்டுபுரத்தின் புதிய கப்பிச் சாலையை அடைந்தாள்.

ஏமாற்றமும், சினமும் அவள் சிந்தையை அடைத்திருந்தன. ஸ்லிப்பரால் மண்ணைக் கிளறினாற்போல் தயங்கித் தயங்கி நடந்தபோது டாக்ஸியொன்று அவளை நெருங்கி நின்றது. ''வண்டி வேணுமாம்மா?'' என்று கேட்டார் டிரைவர்.



யோசனையின்றியே, ''ஆமாம்'' என்று கூறிவிட்டு, ஏறியமர்ந்தாள் சத்யா.

'கொடி'யை இறக்கிவிட்டுத் திரும்பிய டாக்ஸியோட்டி எங்கே என்று கேட்கும் பாவனையில் பார்த்தார்.

''மீனம்பாக்கம் ஏரோட்ரோம்'' என்றாள் சத்யா.

தியாகராயநகர் உஸ்மான் ரோடிலிருந்து, தோரணம் கிழித்த மாதிரி பிரியும் பல தெருக்களில் ஒன்றில் இரண்டாவது வீடு. சிறியதென்றாலும் பளிச்சென்று இருக்கிறது. கேட்டுக்கு வலது பக்கம் 'மணி, பி.எஸ்.ஸி' என்ற பித்தளைப் பலகையும், மறுபக்கம் 'பிருந்தா' என்ற வீட்டுப் பெயரும் காணப்படுகின்றன.

கேட்டிலிருந்து பத்தடி இடைவெளி விட்டு, காம்பவுண்டு சுவர்களுக்கு எட்டடி இடம் விட்டு, மாடியில்லாத வீட்டின் இருபக்கத்து அறைகளும், நடுவே சிறிய ஹாலும் தெரிகின்றன.

வலது பக்கத்து அறையைத் திறந்து கொண்டு கண்ணைக் கசக்கிக் கொண்டு மெல்ல வெளியே வந்தான் மணி, பி.எஸ்.ஸி. தெருவிலே தெரிந்த வெளிச்சமும், கேட்ட சந்தடியும் அவனுக்கு ஆச்சரியத்தை விளைவித்தன. கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டான். ''எட்டாகி விட்டதே!'' என்று சிறிது திகைப்புடன் அவன் சொல்லிக் கொண்டதிலிருந்து, இன்னும் முன்னதாகவே எழுந்திருக்க நினைத்திருந்தான் என்று புலப்பட்டது.

முன் வெராந்தாவில் கிடக்கும் ஆங்கிலத் தினசரியைக் கையிலெடுக்கும் போது அவன் முகம் சினத்தைக் காட்டியது. பேப்பரை எடுத்து, சுத்தமாய் மடித்து, வேண்டுமென்றே ஓசையுடன் தட்டிவிட்டு, ஹாலிலிருந்த வட்ட மேஜைமீது வைத்தான்.

பேப்பர் தட்டிய ஓசைக்குப் பலன் கிடைத்தது.

பின்புறத்துச் சமையல் கட்டிலிருந்து தோசைக் கரண்டியுடன் வேலைக்கார வீரப்பன் பயத்துடன் தலை குனிந்து கொண்டான், எஜமானனின் பார்வையைத் தாங்க மாட்டாமல்.

''நூற்றெட்டாவது தடவை'' என்று சொல்லிவிட்டு மணி தன் அறைக்குத் திரும்பி, துவாலையை எடுத்துத் தோளின் குறுக்காக மாலை மாதிரி போட்டுக் கொண்டு வெளியே வந்தான்.

''எது நூற்றெட்டாவது தடவை?'' என்று வேலைக்காரன் வினவவில்லை. எஜமானனின் நறுவிசுக்கு விரோதமாகத் தான் என்ன செய்தோம்— செய்ய மறந்தோம்— என்பது அவனுக்குப் புரிந்துவிட்டது. 'அட ஆண்டவனே! அந்த பேப்பரை மடித்து மேஜைமீது வைத்திருக்க வேண்டும் என்பதை ஒரு நாளாவது எனக்குச் சமயத்தில் நினைவூட்ட மாட்டாயா!' என்று நொந்து கொண்டு, ஓசையில்லாமல் தோசையைத் திருப்புவதில் இறங்கினான்.

அறையைச் சாத்திக் கொண்டு புறப்பட்ட மணிக்கு, வெராந்தாக் கயிற்றிலே உலர்ந்து கொண்டிருந்த சட்டையும், வேட்டியும் கண்ணில் எரிச்சலேற்படுத்தின. ஒரு குச்சியை எடுத்து அவற்றைக் கெந்தி எடுப்பதற்கும், தெரு வழியே ஒரு குடுகுடுப்பைக்காரன் செல்வதற்கும் சரியாயிருந்தது.

''இந்தாப்பா'' என்று மணி கூப்பிட்டதும், குடுகுடுப்பை ஓடோடி வந்தான் வாயெல்லாம் பல்லாக.

குச்சியோடு துணிகளை அவனிடம் மணி தூக்கிப் போட்டதும்—

''சார்! சார்!'' என்று அலறிக் கொண்டு உள்ளேயிருந்து ஓடி வந்தான் வீரப்பன். ''அதெல்லாம் என்னது சார்! என்னது!''

குடுகுடுப்பைக்காரன் தயங்கி நின்றான்.



''நீ போப்பா!'' என்று மணி உறுமிய உறுமல் அவனை நகர வைத்தது.

தொடர்ந்து ஓட முயன்ற வீரப்பனை வழி மறித்தான் மணி. ''ஊம். வாசலுக்குப் போனாயோ, அப்படியே போக வேண்டியதுதான், என்ன சொல்கிறாய்?''

''தெரியாமல் உலர்த்திட்டேன் சார்! இனிமேல் மாட்டேன் சார்! வேட்டியும் சட்டையும் புதிசு சார்!''

''அவ்வளவுக்கவ்வளவு நல்லது. கண்ணராவி அசிங்கமாய் இங்கே எதையும் உலர்த்தக் கூடாதென்பது இனிமேல் நன்றாய் நினைவிருக்கும் இல்லையா?''

''கொல்லைப் பக்கம்தான் உலர்த்தியிருந்தேன் சார், ராவு மழை பெய்ததுங்க, அப்புறம்தான் இங்கே கொணாந்து போட்டேன். இந்த ஒரு வாட்டி......'' வீரப்பனுக்குப் பிரனமாய் அழுகை வெடித்துக் கொண்டு வந்தது.

''ஏன், ஈரமாவே மாட்டிக் கொள்வதுதானே? உடம்பு சூட்டிலே சீக்கிரமாய் உலர்ந்து விடுமே! போ உள்ளே! ஊம்.''

வீரப்பனின் கண்கள் சிவந்திருந்தன. குரல் பாதாளத்துக்குப் போயிருந்தது. வாயைத் திறவாமலே சிற்றுண்டியைப் பரிமாறினான்.

எதிரே கொட்டக் கொட்டத் தேதி காட்டிக் கொண்டிருந்த காலண்டரின்மீது மணியின் பார்வை தாவியது.

''டேய் மூதேவி! என்னடா காலண்டர் வைத்துக் கொண்டிருக்கிறே?''

ஒரே பாய்ச்சலில் வீரப்பன் காலண்டரை எட்டி, இரண்டு தாள்களைக் கிழித்தான்.

நாலு, நாலாம் தேதி......

ஜூலை நாலு, ஜூலை நாலு.

அந்தத் தேதி மணியின் நெஞ்சில் எதையோ நெருடியது. கையை உதறிக் கொண்டு எழுந்து, காப்பியை அரை டம்ளர் குடித்துவிட்டு, அறைக்குள் சென்று டயரியைப் புரட்டினான்.

''ஏ.வி.யின் மருமகன் காஷ்மீரிலிருந்து இன்று வந்து சேருவார். விமான நிலையத்துக்குப் போக வேண்டும்.''

பல நாட்கள் முன்பே குறித்துக் கொண்ட குறிப்பு. 'ஹும்' மணி பெருமூச்சு விட்டான். பண்ணாத கலாட்டாவெல்லாம் பண்ணிவிட்டுக் காஷ்மீர் ஓடியவனுக்கு இன்று மாப்பிள்ளை வரவேற்புக் காத்திருக்கிறது. அவன் ராஜ்யம் தனி. என்ன கொட்டமடித்தாலும் ராதா. என்ன அநியாயம் இழைத்தாலும் ராதா. என்ன காசை வாரியிறைத்தாலும் ராதா. எது செய்தாலும், எங்கே சென்றாலும், எப்போது பார்த்தாலும் ராதா, ராதா, ராதா. அது அவன் முகராசி. பர்ஸனாலிட்டி.

★

விமானம் தாமதமாய் வருகிறதா என்பதை அறிய, அறிவிப்புப் பலகையை படித்துக் கொண்டிருந்தார் சாரங்கபாணி. ''என்னங்க போட்டிருக்குது?'' என்று விசாரித்துக் கொண்டிருந்த மீனலோசனி, ''அடி பாவி'' என்று வாய் விட்டுக் கூவி விட்டாள்.

அவள் பார்வை சென்ற திக்கில் நோக்கினார் சாரங்கபாணி. கோபத்தில் அவர் முகம் சிவந்தது.

தாவணியை லேசாய்த் தூக்கிப் பிடித்தவண்ணம், முள்ளின் அசைவைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டு, எடை இயந்திரத்தின்மீது நின்று கொண்டிருந்தது சத்யாவேதான்.



''நாலு பவுண்டு குறைந்து விட்டேன்'' என்று மகிழ்ச்சியுடன் சொல்லிக் கொண்டபடி இறங்கி வந்தாளே தவிர, சத்யா பதற்றமோ பீதியோ அடைந்ததாகத் தெரியவில்லை. ''அத்தான் என்னைச் சும்மா சும்மா குண்டு என்று பரிகாசம் செய்ததே. இப்போ சொல்லட்டும்.''

''நீ செய்தது நியாயமாய்த் தோன்றுகிறதாடி?'' என்றுதான் மீனலோசனியால் சொல்ல முடிந்தது.

சாரங்கபாணி பல்லைக் கடித்து, ''அவளுக்கு வர வர......'' என்று ஆரம்பித்தவர், ''ஹலோ மிஸ் சத்யா, ஹாஸ்பிடலுக்கு போய் விட்டீர்களாக்கும் என்று நினைத்தேன்'' என்று கேட்டபடி அருகில் பி. ஏ. மணி வந்து நின்றுவிட்டதால் நிறுத்திக் கொண்டார்.

''உலகமே எனக்கு ஓர் ஆஸ்பத்திரிதான்'' என்று புன்னகையுடன் பதிலளித்த சத்யா, கைக்கடிகாரத்தைக் கவனித்து, ''பிளேன் லேட்டாமா அப்பா?'' என்றாள் கொஞ்சலாக.

''என்னோடு நீ பேச வேண்டாம்'' என்று கூறிவிட்டுப் போலீஸ் நடையில் மறுபுறம் சென்றார் சாரங்கபாணி.

''ஆனாலும் உனக்கு இத்தனை துணிச்சல் ஆகாது'' என்று மகளைக் கண்டித்த தாயும் கணவனைப் பின் தொடர்ந்தாள்.

மணி, சத்யாவை வைத்த கண் வாங்காமல் பார்த்தான், ''அலங்காரம் பிரமாதமாயிருக்கிறதே, மிஸ் சத்யா! தினம் இப்படி பண்ணிக்கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போனால் தாங்காது. பல மாரடைப்புகள் நேரும்'' என்றான்.

''விமான நிலையம் தாங்குமில்லையா?'' என்று கேட்டுவிட்டு ஒய்யாரமாக நடந்தாள் சத்யா.

அவள் பின்னழகைப் பார்த்து ரசித்தபடி, ''மிஸ்டர் ராதாவிடமிருந்து அப்புறம் கடிதம் வந்ததா?'' என்று அவள் கூடவே நடந்தான்.

''இல்லை.''

''அவர் ஒரு சுத்த இது.''

சத்யா ஆச்சரியத்துடன் அவனை நோக்கினாள். ''என்ன சொன்னீர்கள்?''

''சொல்லவில்லை, நினைத்துக்கொண்டேன்.''

''என்ன நினைத்துக் கொண்டீர்கள்?''

''நானாயிருந்தால் தினத்துக்கு நாலு கடிதம் எழுதிப் போட்டிருப்பேனே என்று நினைத்துக் கொண்டேன்.''

''நானாயிருந்தால் அதைப் படிக்காமலேயே கிழித் தெறிந்து விடுவேனே'' என்றாள் சத்யா வெடுக்கென்று.

இதற்கெல்லாம் அசைகிறவனல்ல மணி. ''இன்றைக் குப் பிரமாத உற்சாகத்தில் இருக்கிறீர்களே!'' என்று பாராட்டி விட்டு நகர்ந்தான்.

நட்ட நடுப்பகல்.

விமானம் இறங்குமிடங்களில் பூச்சு பறந்து கொண் டிருந்தது. வெய்யிலில் சளசளவென்று கூட்டம். டெல்லியி லிருந்து வருவோரை வரவேற்கப் பாதிப்பேர், அதே விமானத்தில் டெல்லிக்குப் புறப்படப் பாதிப்பேர். இருப்புக் கிராதிகளின் மீது ஏறி நின்று விளையாடும் குழந்தைகள். அதட்டி அவர்களைக் கீழிறக்கும் தாய்மார் கள். ''யுவர் அட்டென்ஷன் ப்ளீஸ்'' என்ற மைக் அறிவிப்புகள். டக்டக் என்ற குதிகாலுயர்ந்த ஜோடுகளின் நடமாட்டம். வெள்ளை யூனிபாரங்கள்.

''கரக்ட் டயத்துக்கு வந்துவிடுகிறதாம்'' என்றான் சத்யாவின் அருகில் வந்து நின்று கொண்ட மணி.

''சந்தோஷம்'' என்றாள் சத்யா, 'உனக்கு எப்படியிருந் தாலும்' என்று சொல்லாமற் சொன்ன மாதிரியிருந்தது.

அதோ, அதோ என்று கை காட்டினார்கள்.



வெள்ளித் துண்டொன்றை வானத்தில் வீசியெறிந்த மாதிரி, மினுமினுக்கும் காரவல் கண்ணில் பட்டது.

சத்யாவும், மணியும் சாரங்கபாணியின் அருகில் சேர்ந்து கொண்டார்கள்.

செவிடு படுத்தும் ஓசையுடன் பூதாகாரமான வாகனம் வழுக்கிக் கொண்டு வந்து நின்றது. சக்கர ஏணி தடதட வென்று விரைய, சிப்பந்திகள் குறுக்கும் நெடுக்கும் ஓட, காத்திருந்தோரின் கூட்டத்தில் பரபரப்புக் கட்டவிழ, பத்து நிமிடத்துக்குள் விமானக் கூடம் சுறுசுறுப்பின் சின்னமாகத் திகழ்ந்தது.

பிரயாணிகள் இறங்கி வரலானார்கள்.

ஏர்வேஸ் பைகளைத் தோளில் மாட்டியவர்கள், காமிராக்கள், ஓவர்கோட்டுகள், சால்வைகளைக் கரங் களிலே தாங்கியவர்கள், குழந்தையை அணைத்துக் கொண்டவர்கள், வாக்கிங் ஸ்டிக்கை வீசியவர்கள் என்று பல பேர் தாண்டிச் சென்றார்கள்.

கிரிக்கெட் மட்டையுடன் இளைஞன். குழந்தையுடன் தாய். கடுகடுப்புடன் வெள்ளைக்காரப் பெண்மணி, வியர்வையைத் துடைத்துக் கொள்ளும் பஞ்சாபிப் பெண்மணி, காவி ஜிப்பாவும் காவி வேட்டியும் கட்டிய இளம் சாமியார், கைலி அணிந்த சிலோன் வாலிபர்கள், பேப்பரை மடித்துக்கொண்டே கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக்கொண்டிருக்கும் ஜலதோஷக்காரர், இதுதான் சென்னையா என்று வியந்து பார்த்தவாறு நடக்கும் அமெரிக்கத் தம்பதிகள்—

எல்லோரும் போய்விட்டார்கள்.

சாரங்கபாணியும், மீனலோசனியும், மணியும், சத்யா வும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''மிஸ்டர் ராதா கடிதம் ஏதும் போடவில்லையே என்று எனக்கு அப்போதே சந்தேகம்தான்'' என்று அபிப்பிராயம் தெரிவித்தான் மணி கடைசியாக.

''ஷட் அப்.'' சாரங்கபாணிக்குக் கோபம் வந்தது. ''போகும்போது நிச்சயமாய்ச் சொல்லியிருந்தான். அதை வைத்துத்தான் நான் சொன்னேன்.''

சத்யா இடிந்து போய் நின்றாள். ஏமாற்றமும், வேதனையும், துயரமும் அவளுடைய இதயத்தின் ஆழத்திலிருந்து குபுகுபுவெனப் பொங்கி வந்து கொண்டிருந்தன. ''சத்யா! அழாதே'' என்று யாரேனும் ஒருவர் சொல்ல வேண்டியதுதான், வெடித்துக்கொண்டு வந்திருக்கும் அழுகை.

ஈ காக்கை இல்லாமல் மைதானம் காலியாகிவிட்டது.

மௌனத்தையே பெரும் பாரமாகக் கழுத்தில் கட்டிக் கொண்ட மாதிரி மூன்று பேர் கண்ணாடிப் படியேறி விமான நிலையக் கட்டடத்தின் பரந்த ஹாலை அடைந்தார்கள்.

மீனலோசனி பயந்த குரலில், ''நம்ம மேலூர் பிள்ளையாண்டான் டெல்லியில்தானே இருக்கிறான்? ராதாவுக்கு ரொம்ப சினேகமாச்சே? அங்கே தங்கியிருப்பான். டிரங்கு போட்டு விசாரியுங்கள்'' என்றாள்.

''மேலூர் மிஸ்டர் கோதண்டத்தைச் சொல்கிறீர்களாம்மா?'' என்று குறுக்கிட்டான் மணி.

''ஆமாம் தம்பி, ஆமாம். நீதான் விசாரியேன்.''

சத்யா, மணியின் முகத்தைத் துடிப்புடன் நோக்கினாள். 'ஐயோ, யாராவது ஏதாவது செய்யுங்கள். எப்படியாவது விசாரியுங்கள். என் ராதா எங்கே என்று என்ன செய்தாவது தெரிந்து சொல்லுங்கள்' என்று அவள் உள்ளம் கூவிற்று.

மணி பணிவோடு, ''அந்த மேலூர் கோதண்டத்துக்கும், ராதாவுக்கும் சண்டை வந்து ஒரு வருஷமாகிறதாம். ரேஸ் கோர்ஸில் போன மாசம் பார்த்தேன் அவரை, சொன்னார். பேச்சு வார்த்தை கிடையாதாம்; அவர்



சொன்னதைப் பார்த்தால், நம்ம ராதாவைத் தன் வீட்டுப் படியேற விடமாட்டார் என்று தோன்றிற்று,'' என்றான்.

சத்யாவின் உள்ளம் விசும்பிய அதே சமயம், இரக்கமில்லாமல் பேசும் மணியின்மீது அளவு கடந்த வெறுப்பும் ஏற்பட்டது.

''எஜமான்! எஜமான்!''

கூவிக் கொண்டே ஓடி வருவது யார்?

சாரங்கபாணியின் டிரைவர் தான்.

''அவரு... ராதா ஐயா வந்திருக்கிறாரு...'' என்றான் நாக்குக் குழற.

''எங்கே? எங்கே?'' என்று பல குரல்கள் அவனை மொய்த்துக்கொண்டன. அடுத்த வினாடி: ''நாங்கள் இங்கேதானே நிற்கிறோம். ரயிலில் வந்தானாமா? சொல்லேண்டா; மரம் மாதிரி நிற்கிறாயே?''

''அந்த... அந்தச் சாமியார் ஒருத்தர் வரலீங்க?... மொட்டைத் தலை... காவி வேட்டி, காவி ஜிப்பா போட்டுக்கிட்டு.''

''ஆமாம், அவர் சொன்னாரா? என்ன சொன்னார்?''

டிரைவர் மிடறு விழுங்கிக் கொண்டான். ''அவர் ஒண்ணும் சொல்லலிங்க... அவரு... அவர்தானுங்க நம்ம ராதா ஐயா... ஐயோ, ராதா ஐயா சாமியாராப் போயிட்டாருங்க'' என்று விம்மினான் அவன்.

## இரண்டு

தலையணையை டொம்மென்று கீழே போட்ட பிறகு ஏற்படுகிற அமைதி மாதிரி, ஒரு நிமிடம் நிசப்தம் கோலோச்சியது.

மணி சுதாரித்துக்[1] கொண்டு, "என்னடா உளறு கிறாய்?" என்று டிரைவரின் சட்டைக்காலரை ஓர் உலுக்கு உலுக்கினான்.

"மெய்யாய்தானுங்க... சத்தியமாய்ச் சொல்றேன். கண்ணாலே பார்த்தேனுங்க. ராதா ஐயாவை எனக்குத் தெரியாதுங்களா?" என்று கடகடவெனச் சொன்ன டிரைவர் பேச்சின் முடிவில் விசும்ப ஆரம்பித்து விட்டான்.

சத்யா, யாருடைய பதிலுக்காகவும் காத்திருக்க வில்லை. "எங்கே? எங்கேயடா அவரைப் பார்த்தாய்?" என்று டிரைவரைக் கேட்டுக் கொண்டே விமான தளத்தின் விரிந்த வெராந்தாக்களுக்கிடையே ஜனங்கள்மீது மோதிக் கொண்டு ஓடினாள்.

"என்னங்க சொல்றான் இவன்" என்று மீனலோசனி பதறியதற்குச் சாரங்கபாணி பதில் தரவில்லை. உத்தி யோக அந்தஸ்துக்குக் குந்தகம் விளையாத அளவுக்கு வேகமாக அவரும் மகளைப் பின் தொடர்ந்தார்.

வெளியே பல கார்கள் புறப்பட்டுக் கொண்டிருந்தன. போர்ட்டிகோவில் நின்றிருந்த ஜீப்பில், விமானப்படை அதிகாரியொருவர் வெகு அதட்டலாகத் தமது லக்கேஜ் களை ஏற்றிக் கொண்டிருந்தார். பட்டப்பகல் வெய்யிலில் குட்டை மரங்களும், நெட்டைச் செடிகளும் நிழலுக்கு இடம் தேடுகிற மாதிரி வெறிச்சென்று நின்றிருந்தன.

கண்ணைத் துடைத்துக் கொண்டே ஓடிவந்த சாரங்க பாணியின் டிரைவர், "இங்கே... இங்கேதானுங்க நின்னிட்டிருந்தார்... இன்னொரு சாமியரோடு பேசிக் கிட்டிருந்தாரே" என்று சுற்றுமுற்றும் நோக்கித் திருதிரு வென விழித்தான்.

"என்னடா, சுயநினைவோடுதான் பேசுகிறாயா?" என்றான் மணி சினத்துடன்.

சாரங்கபாணி மணியைக் கண் ஜாடை காட்டி அருகே அழைத்து, "இந்த டிரைவர் எப்படி? எத்தனை நாளாய் சர்வீசில் இருக்கிறான்?" என்று சந்தேகத்துடன் கேட்டார்.



"பத்து வருஷமாய் இருக்கிறான். முன்னே ஏ. வி. மேனனிடம் இருந்தவன். பொதுவாய் நம்பகமானவன் தான் சார்" என்று மணி தாழ்ந்த குரலில் தெரிவித்தான்.

"தண்ணி?"

"நாற்றம் எதுவும் காணோம். முதலில் நானும் அப்படித்தான் நினைத்து, அவன் முகத்தருகே பேசினேன்."

கையைப் பிசைந்துகொண்டு பார்வையைப் புரட்டிக் கொண்டிருந்த சத்யா, டிரைவரை நெருங்கினாள். "நீ அவரோடு பேசினாயா? நாங்களெல்லாம் வந்திருக்கிறோ மென்று சொன்னாயா?"

"இல்லங்க. நான் யாரோ ஒரு சாமி பேசிக்கிட்டி ருக்கும்னு மரியாதையோடு ஓரமாய் ஒதுங்கினேனுங்க. என்னவோ தோணிச்சு, நிமிர்ந்து பார்க்கிறேன், அவரே தானுங்க. ராதா ஐயா. அந்தக் கோலத்தில் அவரைக் கண்டதும் எனக்குப் பேசவே வரலீங்க, ஓட்டமாய் ஓடியாந்தேன் உங்களிடம்."

அருகிலிருந்த சோபாவில் பொத்தென்று உட்கார்ந் தாள் சத்யா. அவளுடைய தலை மட்டுமல்ல, உடலின் ஒவ்வோர் அணுவும் பம்பரமாய்ச் சுழல்வது போலிருந்தது. மூளைக்குள்ளே கிர்கிர்ரென்று எதுவோ ஓசையிட்டது. "என்னடி சத்யா இதெல்லாம்? லட்சம் லட்சமாய்ச் சொத்தும் நிலமும் நீச்சும் இருக்கிற ராஜா, அவனுக்குத் தலையெழுத்தா ஆண்டிப் பண்டாரமாய் ஆகணும்னு? இதிலெல்லாம் கூடவா விளையாட்டு? எனக்கு ஒன்றுமே புரியலியே!" என்று புலம்பியபடி தன்னை அணைத்துக் கொள்ளும் தாயின் கைகள்கூட அவளுக்கு முள்காடாய் உறுத்தின. விலக்கி கொண்டு, இருகைகளாலும் கன்னத்தை அழுத்திக் கொண்டாள். மார்பில் எதுவோ நெருடியது.

அந்தப் படம்.

இரண்டு கழுதைகள் போட்ட படம். அவளுக்கு அழுகை குமுட்டிக்கொண்டு வந்தது. இடம், சூழ்நிலை,

மனிதர்கள் எல்லாவற்றையும் மறந்து ஹோவென்று கதற வேண்டும் போலிருந்தது. பயங்கரமான துர்க்கனவொன்று கண்டு கொண்டிருப்பது போலவும், மூச்சுத் திணறத் திணற அதிலிருந்து விடுதலை பெற்று விழித்தெழ முயலுவது போலவும் அவள் உடலும் உள்ளமும் போராடின.

சாரங்கபாணி விரலைச் சொடுக்கி அங்கே நின்றிருந்த ஒரு போர்ட்டரைக் கூப்பிட்டார். ''சாமியார் யாராவது இங்கே வந்திருந்தார்களாப்பா?'' என்று வினவினார்.

''ஆமாங்க. ஒருத்தரு வந்திருந்தாரே டெல்லி ப்ளேனில். அவர் இப்பத்தான் போறார், டாக்ஸியிலே'' என்றான் அவன்.

சத்யா பதறினாள், ''வந்தவர் எப்படி இருந்தார்?''

''சிறு வயசுங்க. உயரமாய் நல்லாயிருந்தாரு. காவி ஜிப்பாவும், வேட்டியும் போட்டுக்கிட்டிருந்தாரு'' என்று சொன்னதோடு அவன் நிறுத்திக் கொண்டிருக்கலாம். ''அந்த டிரஸ் அவருக்கு ரொம்பக் கம்பீரமாய், அமைப்பாய் இருந்ததுங்க. பார்க்கிறப்பவே பயமும், மரியாதையும் ஏற்படற மாதிரி...'' என்றான்.

மணி குறுக்கிட்டு, ''எனக்கு ஒன்று தோன்றுகிறது சார்'' என்றான். ''டில்லியிலிருந்து வந்த பாசஞ்சர்கள் லிஸ்டு இருக்குமல்லவா ஆபீஸில்? அங்கே விசாரித்தால்...''

''நல்ல ஐடியா'' என்று சரேலென எழுந்து கொண்டவள் சத்யாதான்.

சாரங்கபாணி மோவாயைத் தடவிக் கொண்டார். ''யோசனை சரிதான். அனாவசிய கலாட்டாவாகப் பண்ணிவிடக்கூடாது. எதற்கும் நீ வீட்டுக்கு போன் பண்ணி ஏதாவது மெஸேஜ் வந்திருக்கிறதா என்று விசாரி. பிரயாணத்தை ஒத்திப் போட்டிருப்பதாக ராதா தந்தியோ, டிரங்க்காலோ கொடுத்திருந்தால்?''



''எஸ் ஸார்'' என்று சொல்லி வேகமாக வெளியேறிய போது, மணியின் பார்வை மின்வெட்டு நேரத்துக்கு சத்யாவின்மீது தாவிச் சென்றது. ஐந்து நிமிடத்தில் திரும்பியவன் ''ஒன்றும் வரவில்லையாம் சார். சமையற்காரன் சொன்னான். ஏர்போர்ட் ஆபீசில் நாம் விசாரிக்கலாம். அதில் ஒரு தப்புமில்லை'' என்றான்.

சாரங்கபாணி அவனைப் பின் தொடர்ந்தார். ''கூடக்கூட நீ எதுக்கம்மா?'' என்று தாயிடம் சிடுசிடுத்து விட்டு, சத்யாவும் அவர்கள் பின்னே நடந்தாள்.

சாரங்கபாணியின் உத்தியோகம் முதலானவற்றைச் சொல்லி, அனுமதி பெறுவதற்கு முன்னே போனான் மணி. வெளியே காத்திருந்த இரண்டு நிமிட இடைவெளியில் சாரங்கபாணி குறுக்கும் நெடுக்குமாக உலவினாரே தவிர மகளுக்கு ஆறுதலாகப் பேச முன்வரவில்லை. சத்யா உள்ளுக்குள் பயந்தபடி வேறுபுறம் நோக்கிக் கொண்டிருந்தாள். 'தடுத்தபோது வந்தாயில்லையா? அதுதான் இத்தனை ரகளை.' என்று அவர் சீறுவாரோ என்ற கலக்கம் அவளை ஆட்டிக் கொண்டிருந்தது.

''வாருங்கள் சார்'' என்று பாதிக் கதவைத் திறந்து நின்று கொண்டு அழைத்தான் மணி. உள்ளேயிருந்த அதிகாரி எழுந்து வந்து சாரங்கபாணியைக் கை குலுக்கி, சத்யாவுக்கு வணக்கம் தெரிவித்தார்.

''நான் என்ன உதவி செய்ய வேண்டும்?'' என்ற மரியாதையாக விசாரித்தபோது சாரங்கபாணி சிறிது தயங்கினார்.

பிறகு, ''தொந்தரவுக்கு மன்னிக்க வேண்டும். டெல்லியிலிருந்து ஒருவரை எதிர்பார்த்தேன். அவர் வந்தாரா வரவில்லையா என்று தெரியவில்லை...'' என்றார்.

''அதற்கென்ன, பார்த்துச் சொல்கிறேன்... உத்தியோக முறையில் விசாரணையா அல்லது...''

''நோ, நோ, என் தனிப்பட்ட சமாசாரம். என் உறவுக்காரப் பையன்தான். மருமகன்.''

''பெயர்?''

''ராதாகிருஷ்ணன்.''

மேஜை மீதிருந்த ஃபைலிலிருந்து ஒரு தாளை எடுத்து வைத்துக் கொண்டு பார்த்தார் அவர். சிறிது உரக்கவே பெயர்களைப் படித்தார். ''பானர்ஜி, குருவில்லா, ராமசாமி, மிஸ் ஃபாதிமா, அமரசிங்கா, ராதா, நோ... நோ. ஸாஹினி, வீரமுத்து, வின்ஸெண்ட்.'' சுமார் நாற்பது பெயர்கள்போல் படித்து முடித்தார். பின்னர் அனுதாபமான புன்னகையுடன், ''ஸாரி, நீங்கள் கேட்ட பெயர் இல்லையே. அவர் வரவில்லை போலிருக்கிறது'' என்றார்.

சாரங்கபாணி எழுந்து கொண்டார், தொடையில் சலிப்புடன் தட்டிக் கொண்டவாறே.

''வந்து சார்...'' சத்யா குறுக்கிட்டாள் பணிவோடு. ''ராதா என்று ஒரு பெயர் வாசித்தீர்களே, நடுவில்? அது என்ன?''

''ராதாகிருஷ்ணன் இல்லையே அது? வேறொன்று.'' அதிகாரி மீண்டும் காகிதத்தை நோக்கினார். ''ராதநந்தா... இல்லை... ராதாநந்தா... ஏதோ மடத்தைச் சேர்ந்த சுவாமிஜி போலிருக்கிறது. ஆனந்தா என்று அவர்கள் தான் வைத்துக் கொள்வார்கள்... ராதானந்தா.''

ஒருமுறைக்கு இருமுறையாக அந்தப் பெயரை உச்சரித்தவாறு அந்த அதிகாரி தலை நிமிர்ந்தார். திடுக்கிட்டார். ஏன் அப்படி அத்தனை பேரும் பேயடித்த மாதிரி தன்னையே வெறித்து நோக்குகிறார்கள்? சொல்லக் கூடாதது என்ன சொல்லி விட்டோம்? அவர் தடுமாறினார்.

அதைப் போக்கினான் மணி தனது சுறுசுறுப்பான குரலில். ரொம்ப தாங்ஸ் சார். நீங்கள் பிஸியாயிருந்த சமயம் தொந்தரவு...''



''நோ, நோ, நீங்களெல்லாம் அறிமுகமானதில் ரொம்ப சந்தோஷம் ஐ ஆம் ஆல்வேஸ் அட் யுவர் சர்வீஸ்'' என்று விடை கொடுத்தார் அதிகாரி.

கிழுதட்டைக் கடித்தவாறு வரும் மகளையும் உணர்ச்சியற்றுக் காட்சி தரும் கணவனையும், பின்கையைக் கட்டிக் கொண்டு யோசனை செய்தவாறு நடக்கும் மணியையும் கண்டவுடனேயே மீனலோசனி அம்மாள் பதறி எழுந்து கொண்டாள்.

''உஸ்! எல்லாம் வீட்டுக்குப் போய்'' என்று சாரங்கபாணி தடை போட்டு விட்டார்.

குடும்ப மொத்தம் மௌனமாகக் காரேறியது.

''நான் ஓட்டிக் கொள்கிறேன், நீ பஸ்ஸில் வா'' என்று டிரைவரை இறக்கிவிட்டு மணி தானே ஸ்டியரிங்கைப் பிடித்தான். விமான தளக் கட்டடத்துக்கு வெளியே வந்த போது ''டிரைவரை வாட்ச் பண்ணும்படி ஒரு கான்ஸ்டபிளிடம் சொல்லியிருக்கிறேன் சார்'' என்று தெரிவித்தான்.

''நல்ல காரியம்... ஆனால் அவன் பொய் சொல்லக் காரணமில்லை'' என்றார் சாரங்கபாணி.

காரின் பின் ஸீட்டில் அமர்ந்திருந்த சத்யா திடீரென்று தன் தாயின் மடியில் முகத்தைக் கவிழ்த்துக் கொண்டாள். அவள் உடம்பு குலுங்கிக் குலுங்கி அடங்கியது.

''ஊஹூம், கண்ணல்ல... என்னம்மா இது... ஏங்க, இதைப் பாருங்க'' என்று பெண்ணின் முதுகைத் தடவிக் கொடுத்தபடி கண் கலங்கினாள் மீனலோசனி.

''நீ சும்மா இருக்கமாட்டாய், சத்யா? ஹவுஸ் சர்ஜனாயிருக்கிற பெண்ணா நீ, கண்ட கதைகளையெல்லாம் நம்ப! சுத்த அபத்தமாயிருக்கிறது. எங்கள் போலீஸ் ரெகார்டிலேகூட இந்த மாதிரி கட்டுக் கதையெல்லாம் எடுபடாது. சன்னியாசியாகிறானாம் சன்னியாசி! இவன் விளையாடினால் எல்லோரும்

விளையாடுவார்கள் என்று நினைத்தால் போலிருக்கு. உலுக்கி விடுவேன் உலுக்கி, ஹ்ஹ்க்கும்'' என்று சாரங்கபாணி அதட்டினார்.

சீரான வேகத்தில் காரை செலுத்திக்கொண்டிருந்த மணி ''ராதா யாதிரிதான் இந்தக் காலத்துக் காலேஜ் ஸ்டூடண்ட்கள் எல்லோரும் சார்'' என்றான். தான் ஏதோ மூப்பை எட்டிப் பிடித்துக் கொண்டிருப்பவன்போல, ''அதுவும் நம்ப ராதா ரொம்ப விளையாட்டுக்காரர். ஏதாவது பந்தயத்துக்காகக்கூட இப்படிப் பண்ணி யிருந்தால் ஆச்சரியமில்லை.''

''ஆமாம்மப்பா. அப்படியும் இருக்குமோ?'' என்ற போது பர்சனல் குமாஸ்தாவின் பேச்சை அலட்சியமாகத் தள்ளும் போலீஸ் அதிகாரியாகச் சாரங்கபாணி இருக்க வில்லை. எந்தத் துரும்பையும் பிடித்துக்கொண்டு கரையேறத் தவிக்கும் சராசரி மனிதராகவே இருந்தார்.

மணி, ''அப்படியே உண்மையென்றாலும், இதெல் லாம் ஒரு ஃபான்ஸி. நாலு நாளில் மயக்கம் தீர்ந்துவிடும். ராதாவுடைய குஷால் என்ன, கும்மாளம் என்ன, ஆட்ட பாட்டம் என்ன! அவராவது டெரிலின் சட்டையை எறிந்துவிட்டுக் காவி மாட்டுவதாவது! நல்ல வேடிக்கை பண்ணுகிறார் ராதா!''

பேசிக்கொண்டே அவன் தலைக்கு மேலிருந்த கண்ணாடியைப் பார்த்தான். ஏக்கமும் நம்பிக்கையும் விழிகளில் மாறி மாறிப் பளபளக்க, சத்யா மெல்லத் தலை தூக்கிக் கொண்டு உட்காருவது தெரிந்தது.

உயிர்க்களை இழந்து மொத்தப் பங்களாவும் சோகத்தில் கம்பிக் கொண்டிருந்தது. தோட்டத்தில் நிழல்கள் நீள நீள, வார்த்தைக்குக் கட்டுப்படாத ஒருவிதப் புழுக்கம் ஒவ்வொருவருடைய மனத்தையும் அடைத்துக் கொள்ளத் தொடங்கிற்று.

ஹாலிலிருந்த வட்டமேஜையில், சமையற்காரன் கொணர்ந்து வைத்திருந்த தேநீர் ஆறி, கோப்பைகளின்



மீது மெல்லிய ஆடை உருவாகிக் கொண்டிருந்தது. சாரங்கபாணி, இரு கைகளையும் கழுத்தின் பின்புறம் கோத்தபடி சோபாவில் சாய்ந்து கிடந்தார். மீனலோசனி, பின்புறம் செல்லும் நிலைவாசலின் ஓரமாகத் தரையில் அமர்ந்து, கதர்த்திரைச் சீலையின் நுனிகளை விரலால் சுருட்டிப் பிரித்துச் சுருட்டிப் பிரித்துத் தலைகுனிந்தவாறு இருந்தாள். பிரம்பு போன்ற ஸ்டீல்கூடை நாற்காலியில் இருகால்களையும் தூக்கி வைத்துக்கொண்டு குந்தினாற் போல் உட்கார்ந்திருந்த சத்யா, மடிமீதிருந்த தினசரித் தாளில் பேனாவால் கிறுக்கிக் கொண்டிருந்தாள். தன்னை அறியாமலே கை ஒரு கழுதையின் உருவத்தை வரைவதைக் கண்டதும் ஆத்திரம் குமுறிக்கொண்டு வந்தது. எறிந்தாள்.

டெலிபோன் டயலைச் சுழற்றி யாருடனோ பேசிய மணி, உள்ளங்கையால் அதன் வாயைப் பொத்திக்கொண்டு ''ஆபீசுக்குச் சொல்லி விட்டேன் சார், இன்று நீங்கள் வரு கிறாற்போல் இருக்காதென்று. விட்டல்தான் பேசுகிறார். பிரைவேட்டாக ஏதாவது தகவல் சேகரிக்கும்படி சொல் லட்டுமா?'' என்றான்.

''வேண்டாம்'' என்று சொல்லிவிட்டு எழுந்தார் சாரங்கபாணி. சட்டென ஒரு யோசனை தோன்றிய வராக, டெலிபோனுக்கருகே போட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு டெலிபோனை எடுத்தார். ''ராமகிருஷ்ண மடம் நம்பர் என்ன, டைரக்டரியைப் பார்த்துச் சொல், மணி'' என்றார்.

மணி பரபரவென்று பக்கங்களைப் புரட்டி எண்ணைத் தெரிவித்தான்.

சத்யாவும் அருகில் வந்து நின்றுகொண்டாள் இப்போது.

சாரங்கபாணி மணிவோடு பேசினார், டெலிபோனில். ''ஹலோ! ஒன்றுமில்லை, ஒரு சிறு தகவல் தேவை.''

''என்ன சொல்லுங்களேன்?'' என்று பரிவுடன் பதில் வந்தது.

''டெல்லியிலிருந்து தங்கள் மடத்துக்கு இன்று பகல் விமானத்தில் சுவாமிஜி யாராவது வந்திருக்கிறார்களா?'' என்று சாரங்கபாணி கேட்டார்.

''எங்கள் மடத்துக்கா? யாரும் வரவில்லையே! சுவாமிஜியின் பெயர் தெரியுமா?''

சாரங்கபாணி சிறிது தயங்கினார்.

''ராதாநந்தா என்று சொன்னார்கள்.''

''ராதாநந்தாவா? எங்கள் மடத்துக்கு யாரும் அப்படி வரவில்லை.''

''ரொம்ப நன்றி, வேறு எங்கெங்கே மிஷன்—அதாவது மடம்— இங்கே வீதியில் இருக்கிறது?''

''எத்தனையோ வகையான மடங்கள் இருக்கின்றன. எதையென்று சொல்வது?''

டெலிபோனை அவர் திரும்பி வைக்கையில், ''வாசலில் யாரோ ஆள் தேடுகிறார்கள்'' என்று ஓர் ஆர்டர்லி வந்து தெரிவித்தான்.

''போய்ப் பார்'' என்று சலிப்புடன் மணியை ஏவினார் சாரங்கபாணி.

மணி யாருடனோ வாதாடுவது காதில் விழுந்தது. சற்றைக்கெல்லாம், ''சந்தர்ப்பம் தெரியாமல்...'' என்று முணுமுணுத்துக் கொண்டே அவன் திரும்பி வந்தான்.

''யார்?'' என்று சாரங்கபாணி கேட்டார்.

''ஒருத்தருமில்லை சார்'' என்று கூறிவிட்டு மணி சத்யாவைப் பார்த்த பார்வையிலே வேறு ஏதோ ஒளிந்திருப்பது தெரிந்தது.

''யார் சொல்லேன்'' என்று சாரங்கபாணி வற்புறுத்தினார்.



''ஒன்றுமில்லை சார். அச்சாபீசிலிருந்து ஆள் வந்தான். கல்யாண அழைப்பிதழ் புரூப் பார்த்தாகி விட்டதா, அச்சடிக்கலாமா என்று கேட்டான்.''

முகத்தைப் பொத்திக்கொண்டு சத்யா மாடிக்கு ஓடினாள். மீனலோசனி தலை, மேலும் கவிழ்ந்தது.

சாரங்கபாணி குரலை இரும்பாக்கிக் கொண்டு ''என்ன சொன்னாய்?'' என்று கேட்டார்.

''அப்புறம் தெரிவிக்கிறேன் என்றேன் சார்.''

ஏமாற்றமும் அதிர்ச்சியும் நிறைந்த தகவல்களால் குழம்பியிருந்த சாரங்கபாணியின் உள்ளம், முதல் தடவையாக எதிர் காலத்தைப்பற்றி, தமது அந்தஸ்து, கௌரவம், மானாவமானம் ஆகியவை பற்றி, அவற்றுக்குக் கிடைக்கவிருக்கும் பலமான அடியைப்பற்றிச் சிந்தனை செய்தது. அந்தப் பயங்கரக் கற்பனைகளில் கோபத்தால் கொந்தளித்த அவரைச் சாந்தப்படுத்துவது போல டெலிபோன் கிணுகிணுத்தது.

மணி கேட்டான். பிறகு குழாயைப் பொத்திக் கொண்டு ''சத்யாவின் சிநேகிதி யாரோ கூப்பிடுகிறார்கள்,'' என்று அறிவித்துவிட்டு டெலிபோனில், ''ஒரு நிமிஷம் இருங்கள், அழைத்து வருகிறேன்'' என்று கூறியவன் மாடிக்கு விரைந்தான். மேல் மாடியை அடைந்து, சத்யா இருந்த அறையினுள் நுழைந்தான்.

கட்டிலின் சட்டத்தில் தலை கவிழ்ந்து சத்யா படுத்திருந்தாள். நளினமான கொண்டையலங்காரம் கலைந்து கேசம் பல கூறுகளாகப் பிரிந்து, அவளுடைய வாளிப்பான முதுகெங்கும் பரந்திருந்தது. ரவிக்கையின் உட்புறத்தில் செல்லும் கழுத்து நரம்புகள் அவள் மேனியைக் காட்டிலும் வெளுத்திருந்தன. சோலையின் குறுக்காக ஓடும் செம்மண் ஓடைபோல் கழுத்தின் நடுவே மெல்லிய செயின் புரண்டு கொண்டிருந்தது. தோள்

லிருந்து புடைத்தெழுந்திருந்த புஜத்தின் திண்மையில் பெண்மையின் மென்மையும் கவர்ச்சியும் தென்பட்டன.

ஒரு வினாடி நின்று அந்த அழகுக் குவியலைச் சுவைத்த மணி "நோ மிஸ் சத்யா, நோ நோ, நீங்கள் இப்படி மனசை வாட்டிக் கொள்ளக்கூடாது." என்றான்.

சரேலென நிமிர்ந்த சத்யா, சரிவுற்ற ஆடையைச் சீர்படுத்திக்கொண்டு, "தாங்க்ஸ், தங்கள் ஆறுதல் தேவைப் படும்போது நானே கூப்பிடுகிறேன்," என்றாள்.

"உங்கள் சிநேகிதி யாரோ டெலிபோனில் கூப்பிட்டார்கள். அதற்காகத்தான் வந்தேன்," என்றான் மணி.

"நான் யாருடனும் பேசத் தயாராயில்லை."

"உங்கள் வேதனை எனக்குப் புரிகிறது, சத்யா. தயவு பண்ணி என்னை நம்புங்கள். உங்கள் உள்ளத்துக்கு ஆறுதல் தருவதற்காக உயிரைக் கொடுக்க வேண்டி யிருந்தாலும் இந்த மணி கொடுப்பான். ராதாவுக்கு ஏதோ பெரிய அதிர்ச்சி நேர்ந்திருக்கிறது. அல்லது அவர் மனசை யாரோ கலைத்திருக்கிறார்கள். அந்த உண்மை யைக் கண்டுபிடிக்காத வரையில் இந்த மணி உண்ண மாட்டான், உறங்க மாட்டான்."

கலங்கிய விழிகளுடன் அவனை ஒரு முறை நோக்கி விட்டு சத்யா படியிறங்கி வந்தாள்.

பச்சினம் சிசுவைப்போல் ஒருக்களித்துக் கிடந்தது டெலிபோன். அதைக் கையிலெடுத்து, "ஹலோ, நான் சத்யா பேசுகிறேன்" என்றாள்.

"ஓ! சௌக்கியமா? நான் ராணி பேசுகிறேன்."

"யார்?"

"ராணி! என்னை நினைவில்லை? குமாரி ராணி."

வியர்த்துக் கொட்டின மாதிரி இருந்தது சத்யாவுக்கு. டெலிபோன் தீயாய்ச் சுட்டது கையை. ராணி! தனக்கும் ராதாவுக்கும் மட்டுமே தெரிந்த பல ரகசியங்கள் சத்யாவின் மனத்தினுள் அடுக்கடுக்காகக் கிளர்ந்தெழுந்தன.



"தெரியவில்லை என்னை?" டெலிபோன் துளைத்தது.

"ஊம் தெரிகிறது" என்று பதில் அளித்துவிட்டு, ரகசியமாய்க் கண்களைச் சுழற்றினாள். தந்தையும் தாயும் அவர்கள் கவலையிலே மூழ்கியிருந்தனர். மணியின் கூரிய பார்வை மட்டும் அவளைத் துளைத்துக் கொண்டிருந்தது.

குமாரி ராணி தொடர்ந்து, "ராதாகிருஷ்ணன்—உங்கள் அத்தான் இன்று ஊரிலிருந்து வர வேண்டுமே? வந்துவிட்டாரா என்று கேட்கத்தான் போன் பண்ணி னேன்" என்றாள்.

"இல்லை, வரவில்லை." சத்யாவின் நெற்றியில் முத்து முத்தாக வியர்க்கத் தொடங்கியது.

குமாரி ராணி கடகடவென்று சிரித்தாள். "உங்களுக் குத் தெரிந்தது அவ்வளவுதான். ராதாகிருஷ்ணனின் விஜயங்களை இங்கே நான் ஒருத்தியும் கவனித்துக் கொண்டிருப்பதை மறந்து விட்டீர்களே! நீங்கள் ஓர் அப்பாவி. இன்றைய பேப்பர் இருக்கிறதா?"

"என்ன?"

"பேப்பர் இருக்கிறதா என்று கேட்டேன். டெய்லி பேப்பர், செய்தித்தாள் இருந்தால் 'இன்றைய நிகழ்ச்சிகள்' பத்தியைப் பாருங்கள்."

"டக்"—

டெலிபோன் வைக்கப்பட்டுவிட்டது.

## மூன்று

டெலிபோனைத் திரும்ப வைத்துவிட்டு, சத்யா அசையாமல் நின்றாள்.

மணி முன் வந்தான். "என்ன வேண்டும்?"

"இன்றைய பேப்பர்" என்று முணுமுணுக்கும் போதே கடை நாற்காலியில் கிடந்த செய்தித்தாள் அவள் கண்ணில் தென்பட்டது.

அவள் தினசரியைப் பிரிப்பதைச் சாரங்கபாணி கவனிக்கவில்லை. "ஆபீஸிலிருந்து பைல் வந்திருக்கிறதா பார், மணி. லெட்டர்களெல்லாம் டைப் அடித்தாகி விட்டதா?" என்று வினவியவாறு தம் அலுவலறைக்கு எழுந்து சென்றார்.

அவரது முகத்தில் அலாதியான கடினமொன்று விழுந்திருந்தது.

தஞ்சாவூர் ஜில்லாவில், திருவையாற்றுக்குப் பக்கத்துக் கிராமமொன்றில், தினத்துக்கொரு வீட்டில் தர்மச் சாப்பாடு உண்டவண்ணம் படித்துவந்த காலத்தில்கூட அவர் இப்படி இடிந்துபோனதில்லை. ராஜதானியில் முதலாவதாக பி. ஏ. தேறியும் வேலை கிடைக்காமல் இரண்டு வருடம் திண்டாடினாரே அப்போது உற்சாக மிழக்காதவர் அவர். போலீஸ் சர்வீஸில் புகுந்த புதிதில் வெள்ளைக்கார ஏஜண்டுகளின் கீழே பல தலைக்குனிவு அடைந்தவர். அப்போதும் மனம் தளர்ந்தவரல்ல. கல்யாணம் ஆனதும், நாலு வருடங்களில் மூன்று குறைப் பிரசவம் நேர்ந்தது மீனலோசினிக்கு. அதிலேயும் சோர்ந்தது கிடையாது.

அப்படிப்பட்ட சாரங்கபாணி இன்று நடை தள்ளாடினார்.

சத்யா நடுங்கும் விரல்களில் தினத்தாளைப் புரட்டினாள். முதல் நான்கு பக்கங்களில் எதையும் காணோம். ஐந்திலும் இல்லை— ஆறாவதில்—

'இன்றைக்கு...' என்ற தலைப்பின் கீழே பல நிகழ்ச்சிகள் கொடுக்கப்பட்டிருந்தன.



வழக்கம்போல ராமாயண, பாரத உபன்யாசங்கள்; திறப்பு, ஆண்டு விழாக்கள்; அரசியல் கூட்டங்கள்... ராணி எதைக் குறிப்பிட்டிருப்பாள்?

சத்யாவின் இதயம் கண நேரம் அடித்துக் கொள்ள மறந்தது. தினசரியைக் கையில் பிரித்தபடியே நாற்காலியில் அமர்ந்து கொண்டாள்.

"வரவேற்பு; சுவாமி ராதானந்தாவுக்கு— இரவு ஏழு மணி பவானி மடம், சாந்தோம்."

கொஞ்ச நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தாள் சத்யா.

பிறகு ஒரு தீர்மானத்துக்கு வந்தவளாய், குளியலறைக்குச் சென்றாள். முகத்தைக் கழுவிக்கொண்டிருக்கும் போது, சோப்பு நுரைகள் குமிழ்த்துக் குமிழ்த்து வெடித்துக் கொண்டிருந்தபோது, அவள் நெஞ்சில் கனம் குறையத் தொடங்கியது. என்ன இருந்தாலும் இதுவரை கேட்டதெல்லாம் மூன்றாவது வாய்மொழிதான். இப்போது நேரில் பார்த்துவிடப் போகிறோம். பார்த்த பிறகு, கேட்காமலிருக்க முடியாது. நாலு வார்த்தை கேட்டும் விடப்போகிறோம். அதற்கப்புறமும் அவருடைய ரோஷமாகட்டும், வைராக்கியமாகட்டும்— அதையும்தான் பார்த்துவிடலாமே!

இரும்பு பீரோவைத் திறந்ததும் தவழ்ந்து வெளி வந்தது மல்லிகைப்பூ செண்ட். மேலோடு இருந்த வழக்கமான தாவணிகளைப் புரட்டிவிட்டு, எப்போதாவது அணியும் விசேட வகைகளை ஆராய்ந்தாள். ராதாவுக்கு லைட் கலர்கள்தான் பிடிக்கும். அதுவும் சந்தனக் கலர். ('ஐயையோ, என்ன சத்யா? நீ ஒன்றுமே டிரஸ் மாட்டிக் கொள்ளாமல் வந்துவிட்டாய்?' 'என்ன பரிகாசம் பண்ணுகிறீர்கள்? இந்தத் தாவணியும் ஜாக்கெட்டும் உங்களுக்குப் பிடிக்கவில்லையா?' 'ஓ! ஓ! ஓ! சந்தனக் கலரா, சரிதான். சத்யா, சொல்கிறேன் கோபித்துக்கொள்ள மாட்டாயே? என்ன? தயவு பண்ணி இந்த மாதிரி சந்தனக் கலர் டிரஸ்

இனிமேல் போட்டுக் கொள்ளாதே உன் உடம்பு நிறத்துக்கும், இதற்கும் வித்தியாசம் தெரியாததால் நீ ஒன்றுமே கட்டிக்கொள்ளாமல் பிறந்த மேனியோடு வந்துவிட்டாயாக்கும் என்று நினைத்துவிட்டேன், 'தூ தூ தூ! வெட்கமாகயில்லை, இப்படியெல்லாம் பேச?')

சத்யாவின் கன்னங்கள் சிவந்தன நாணத்தினால்—அன்று போலவே இன்றும்.

''அடி என்னடி நீயும் உன் சிநேகிதிகளும். இன்றைக்கென்று பார்த்து ஆள்மேல் ஆளாய்க் கூப்பிட்டுக் கொண்டே இருக்கிறார்கள் டெலிபோனில்'' என்று சொன்னவண்ணம் மூச்சு இறைக்க மாடியேறி வந்தாள் மீனலோசனி.

''இந்தப் பிளட் பிரஷர் கம்ப்ளெயிண்ட் இருக்கிறவரைக்கும் மாடியேறி வரவேண்டாம் என்று உனக்கு எத்தனை தரம் சொல்லியிருக்கிறேன்? கீழேயிருந்து கூப்பிட்டால் போதாது?'' என்று தாயைக் கடிந்து கொண்டே கீழே வந்தாள் சத்யா. டெலிபோனைக் கையிலெடுத்தாள்.

''சத்யா பிஸியாயிருந்தாயா? ஒரு சின்ன ஹெல்ப்!''

''என்ன வனிதா?''

''வந்து... ரொம்ப அவசரம், இல்லாவிட்டால் உன்னைத் தொந்தரவு செய்யமாட்டேன், சத்யா.''

''விஷயத்தைச் சொல்.''

''இன்று ராத்திரி எனக்கு டியூட்டி போட்டிருக்கிறது.''

''சரி.''

''ஊரிலே என் தங்கைக்குக் கல்யாணம் நிச்சயமாகி விட்டதாம். நான் போய்த்தான் பல விஷயங்கள் கவனிக்கணும். உடனே கிளம்பி வரச் சொல்லி டிரங்கால் கொஞ்சம் முந்தி...''

''ராத்திரி வண்டியில் போகப் போகிறாயா?''



''ஆமாம். ஆனால் நீ மனசு வைத்தால்தான் முடியும். ராத்திரி எனக்குப் பர்த்தியாய் ஆஸ்பத்திரியில் நீ போய் இருந்து கொள். நாளையிலிருந்து ஒரு வாரத்துக்கு லீவு போட்டிருக்கிறேன்.''

சத்யா பதிலளிக்கவில்லை. படவானி மடம்—சாந்தோம்— வரவேற்பு.

''என்ன சத்யா? செய்ய மாட்டாயா?''

''மாட்டேன் என்பேனா... எனக்கும் ஒரு முக்கிய வேலையிருக்கிறதே என்று யோசித்தேன்.''

''என்ன அப்படித் தலை போகிற வேலை? நீயும் கல்யாணப் பெண்ணா என்ன?'' திடீரென்று வனிதாவின் குரலில் பரிகாசம் தொனித்தது. ''ஓகோகோ! புரிகிறது. புரிகிறது.''

''என்ன புரிகிறது?''

''இன்றைக்குத் தேதி நாலு இல்லை? நீ முன்பே சொல்லியிருந்தாயே, எனக்கு மறந்துவிட்டது. உன் அத்தான் வந்திருப்பார். வீட்டை விட்டு அடியெடுத்து வைப்பாயா நீ! ஞாபகமில்லாமல் சொல்லிவிட்டேன். மன்னித்துக்கொள்.''

அந்தக் கசப்பை மௌனமாக விழுங்கிக்கொண்டாள் சத்யா.

வனிதா ஏமாற்றத்துடன் பெருமூச்சு விட்டாள்.

''பரவாயில்லை சத்யா. 'நான் இப்போது வருவதற்கில்லை' என்று ஊருக்குத் தந்தி கொடுத்து விடுகிறேன். நீ சிரமப்படாதே.''

சத்யாவுக்கு இரக்கம் உண்டாயிற்று.

''வேண்டாம் வனிதா! நானே ஹாஸ்பிடலுக்குப் போகிறேன். நீ கவலையில்லாமல் ஊருக்குப் போய் வா. கல்யாண காரியங்களைக் கவனி'' என்று கூறிவிட்டு, சத்யா மெல்ல வாசல்புறம் வந்து கார் ஷெட்டைப் பார்த்தாள்.

எங்கிருந்தோ விரைந்து வந்து நின்ற மணி, "சின்ன வண்டி ஷெட்டில்தான் இருக்கிறது. நான் எடுதது வரவா? அல்லது டிரைவரைக் கூப்பிடட்டுமா?" என்று கேட்டான்.

"யாரும் வேண்டாம். நானே போய்க் கொள்கிறேன்." படியிறங்கிய சத்யா திரும்பினாள். "அம்மாவிடம் மட்டும் சொல்லி விடுங்கள். நைட் ட்யூட்டி. காலையில்தான் வருவேன்."

ஓ. பி. வார்டுக்குக் கொஞ்சம் தள்ளி, தூங்குமூஞ்சி மரத்தினடியில் காரை நிறுத்தியபோது, "ஹலோ! குட் ஈவினிங் சத்யா!" என்று இளமை ததும்பும் சம்பத்தின் குரல் அவளை வரவேற்றது.

"குட் ஈவினிங் டாக்டர்," என்று சத்யா யந்திரம் போல் வணக்கம் தெரிவித்துவிட்டு, வராந்தாவில் நடந்தாள். அவரும் கூட வந்தார்.

"இந்த வாரம் நைட்டா, என்ன?"

"இல்லை டாக்டர். வனிதா வரவேண்டும். அவளுக்கு ஒரு முக்கியமான வேலை இருந்தது."

"நீங்கள் வந்ததும் நல்லதாயிற்று" என்றார் சம்பத், ஸ்டெதஸ்கோப்பினால் தம் உள்ளங்கையில் மெல்லத் தட்டிக்கொண்டே.

அவள் அவரைத் திரும்பிப் பார்த்தாள்.

"என்ன டாக்டர்?"

"அந்த முஸ்லிம் கிழவன்— ரொம்பச் சிபாரிசு செய்து பெட் வாங்கிக் கொடுத்தீர்களே..."

"ஆமாம். தஸ்தகீர் பாய். அவருக்கென்ன?" சத்யாவின் நெற்றியில் சுருக்கம் விழுந்தது.

"ஒன்றுமில்லை— இப்போதைக்கு. நீங்கள் அக்கறை காட்டிய பேஷண்ட்டாயிற்றே என்று நானும் கவனம் எடுத்துக்கொண்டேன்."

"தாங்க்ஸ் டாக்டர்," என்றாள் சத்யா நன்றி சுரந்த குரலில். டாக்டர் சம்பத் இளைஞரானாலும் சென்ற



வருடம்தான் இங்கிலாந்திலிருந்து திரும்பியவர். ஆஸ்பத்திரியின் ஒரு டஜன் பெருந்தலைகளில் ஒருவர். அவரே அக்கறை எடுத்துக் கொண்டாரென்றால், தஸ்தகீர் பாயின் உடம்பைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்.

அவள் நம்பிக்கை உடனேயே சிதறியது, அடுத்து டாக்டர் சொன்ன வார்த்தைகளால். "கான்ஸர். அட்வான்ஸ்ட் ஸ்டேஜ். அதிக பட்சம் ஒரு மாத டயம்தான் கொடுப்பேன்."

"டாக்டர்!"

"ஸாரி, சத்யா. நிஜத்தைச் சொன்னேன். அந்தக் கிழவன் உங்களுக்கு ரொம்ப வேண்டியவனா?"

"நினைவு தெரிந்த நாள் முதல் எனக்குப் பாவாடை சட்டை அவன்தான் தைத்துக் கொடுப்பது. எங்கள் தெருக் கோடியில் சின்னக் கடை. பாவம், ரொம்ப ஏழை. ஒரே ஒரு பேரன் மட்டும்தான் இருக்கிறான். அவனும் சின்னப் பையனாம்."

"இருதய நோயும் இருக்குமோ என்று ஒரு சந்தேகம். எல்லாவற்றையுமே 'செக்கப்' செய்து விடுகிறேன். உங்களுக்கு எங்கே ட்யூட்டி?"

"இங்கேதான் ஆபரேஷன் தியேட்டர் அருகில்."

"நல்லது." சம்பத் திரும்பினார். "எக்ஸ்-ரே பிலிம் கிடைக்காமல் ரொம்பக் கஷ்டமாயிருக்கிறது. விசாரிக்கச் சொல்லியிருந்தேன். போய்ப் பார்க்கிறேன்."

சத்யா இடப்புறம் திரும்பினாள், ஆபரேஷன் தியேட்டருக்காக.

"எங்க தாத்தா செத்துப் பூடுங்களா?"

குரலையும், தன் அங்கியின் முனையைப் பிடித்திழுக்கும் உரிமையையும் கண்டு திடுக்கிட்டவளாக சத்யா குனிந்து பார்த்தாள்.

ஒட்டுப் போட்ட கைலியும், கலங்கிய பார்வையுமாயிருந்த அந்த முஸ்லிம் சிறுவனுக்கு ஒன்பது வயதிருக்கும்.

''யார் தம்பி நீ?'' என்றாள் வியப்புடன்.

''என்னைத் தெரியாதுங்க? அப்துல்? நஸ்ருதீர் தாத்தாவோட பேரன். நான் உங்களை எத்தினியோவாட்டி பார்த்திருக்கிறேனே?'' என்றான் சிறுவன்.

''அப்படியா? நினைவில்லை. நீ ஒன்றியாகவா வந்தாய்?''

''ஆமாங்க. தாத்தா செத்துப் பூடுங்களாமே?''

ஒச்சி! யாரப்பா சொன்னது?'' என்று கோபித்துக் கொண்டே, சிறுவனை அணைத்துக் கொண்டாள் சத்யா.

விழி முனையில் நின்ற கண்ணீரை, கிழிசல் சொக்காயின் முனையினால் துடைத்துக் கொண்டான் அப்துல். ''ஒரு நர்சம்மா சொல்லிச்சுங்க.''

''வரட்டும், அந்த நர்சம்மாளைத் தூக்கிலே போட்டு விடுகிறேன்,'' என்றாள் சத்யா. ''தாத்தா ஜம்மென்று உடம்பு சரியாகி வந்து விடுவார் பார். அதிருக்கட்டும், அப்துல். இன்றைக்கு எத்தனை சட்டைக்குக் காஜா எடுத்தாய்?''

''மூன்று.''

''அப்படியானால் இந்தா.'' இந்த மாதிரிச் சந்தர்ப்பங்களுக்காகவே, அங்கியின் நீண்ட பையின் அடியில் போட்டு வைத்திருக்கும் சாக்லேட்டுகளை வெளியில் எடுத்தாள் சத்யா. ''மூணு சட்டைக்குக் காஜா. மூணு சாக்லேட்.''

''சாக்லேட் பையனுக்கு மட்டும்தானா? எனக்குக் கிடையாதா?''

சத்யா நிமிர்ந்து பார்த்தாள். டாக்டர் சம்பத்துதான்.

''பிலிம் என்ன ஆயிற்று டாக்டர்?''

''வண்டி வண்டியாய்க் கிடைக்கிறதாம்.''

''அப்படியானால் நீங்களல்லவா சாக்லேட் வாங்கி விணியோகிக்க வேண்டும்!''

சிறுவனை முதுகில் தட்டிக் கொடுத்தாள் அவள். ''என் கார் தெரியுமில்லையா உனக்கு? அதிலே போய்ப் படுத்திரு.



எனக்குச் சாப்பாடு வரும். உனக்கு அனுப்புகிறேன். காலையில் என்னோடயே திரும்பிவிடலாம்.''

''ஓ,'' என்று குதித்துக்கொண்டே ஓடிவிட்டான் சிறுவன். டாக்டர் சம்பத், ''சத்யா, உங்கள் தகப்பனார் கொஞ்ச நேரம் முந்தி என்னை டெலிபோனில் கூப்பிட்டார்'' என்றார்.

''அப்பாவா?'' வியப்பு சத்யாவின் குரலில் நிறைந்திருந்தது. ''எதற்கு?''

''ஒன்றுமில்லை. சும்மாதான். அடிக்கடி ஏதோ வயிற்று வலி வருகிறதாமே, 'ஸ்பெஷலிஸ்டு யாராவது சொல்லுங்கள்' என்றார். 'சரி' என்றேன். 'வருவதேயில்லையே வீட்டுப் பக்கம்? வாருங்கள் ஒரு நாள்' என்றார். 'ஆகட்டும்' என்றேன்.''

பண்பாட்டை உத்தேசித்து, ''ஆமாம். நீங்கள் வந்து ரொம்ப நாள்தான் ஆகிறது,'' என்று சொல்லாதிருக்க முடியவில்லை சத்யாவினால். ஆனால் அந்த வார்த்தையைக் கேட்டதும் சம்பத்தின் முகத்தில் சட்டெனத் தோன்றிய மலர்ச்சி அவளுக்குச் சங்கடத்தையே தந்தது.

''அடுத்த வாரத்தில் ஒரு நாள் வருகிறேன்.''

டார்டர் சம்பத் போய்விட்டார்.

அங்கிருந்து நகர, சத்யாவுக்குப் பல வினாடிகள் பிடித்தன.

முன்பெல்லாம் டாக்டர் சம்பத் அடிக்கடி அவளுடைய வீட்டுக்கு வருகிறவர்தான். அப்பாவோடும் அம்மாவோடும் பேசிக் கொண்டிருப்பவர்தான். போன வருடத்தில் ஒருநாள் சம்பத்தின் உறவினர் என்று ஒருவர் வந்து, சம்பத்துக்கும் சத்யாவுக்கும் மணம் முடிக்கலாமே என்று பேச்செடுத்தார். அப்பா, தாழ்மையாக, டாக்டர் சம்பத்தைப் போன்ற சிறந்த மாப்பிள்ளை கிடைப்பது பெரிய பாக்கியம்தான். ஆனால் வேறு முறைப் பையன் இருக்கிறான் என்று பதில் சொல்லியனுப்பினார். அதற்கப்புறம் சம்பத்தின் வரவு கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைந்து நின்றே போய் விட்டது.

இப்போது, இன்றைக்குப் பார்த்து அவன் அப்பாவுக்குச் சம்பத்தின் நினைவு வருவானேன்? வயிற்றுவலி எதுவும் இல்லாதபோது வலிய அவருடன் பேச்சுக் கொடுப்பானேன்? என் முன்போல வருவதில்லை என்று கேட்பானேன்?

கனவில் நடப்பவன்போல் தன் கடமையை நோக்கி நடந்தான் சத்யா.

குளித்து, மடிவுடுத்தி, மஞ்சளின் மினுமினுப்பு உடம்பெங்கும் நிறைந்திருக்க, ''நகரு, நகரு! மேலே படாதே, கிட்ட வராதே'' என்று வேலைக்காரர்களை விரட்டிய வண்ணம் தோட்டத்திலிருந்து குடலையில் பூ சேகரித்து எடுத்துக் கொண்டு, கோவிலுக்குப் புறப்பட மீனலோசனி தயாரான போது, மாடியிலிருந்து வந்து நின்றான் மகன்.

''தூங்கவில்லை சத்யா? பன்னிரண்டு மணி வரையில் உன்னை யாரும் எழுப்பக்கூடாதென்று இப்போதுதான் அவர்களுக்கெல்லாம் சொல்லிவிட்டுப் புறப்பட்டேன். போ, போ!'' என்றாள் மீனலோசனி.

''தூக்கம் வரவில்லை, அம்மா.''

''வா என்றால் வருமா? கட்டிலில் படுத்திரு. நைட்டுட்டியில் கண்ணெல்லாம் ரத்தமாய்ச் சிவந்து கிடக்கிறது. செல்லமல்ல, போய்த் தூங்கம்மா, அப்புறம் உடம்பு என்னத்துக்கு ஆகும்?''

''பரவாயில்லை அம்மா. ஒரு இடத்துக்கு உன்னை அழைத்துக்கொண்டு போகத்தான் வந்தேன். வா என்னோடு.''

''இன்றைக்கு வெள்ளிக்கிழமை, சத்யா. நான் கோயிலுக்குப் போக வேண்டும். நீயும் அலையாமல் கொள்ளாமல் கொஞ்சம் தூங்கு.''

சத்யா கோபமாய்ப் பேசினான்: ''என் தூக்கத்தையும் உன் கோபத்தையும்விடப் பெரிய விஷயம் இது. நீ வரப் போகிறாயா இல்லையா?''



கார் விரைந்து கொண்டிருந்தது. மீனலோசனி புலம்பினாள். ''அவரானால்— உன் அப்பாவைத்தான் சொல்கிறேன்— என்னமோ உம்மென்று யோசனை பண்ணிக் கொண்டேயிருக்கிறார். மனசுக்குள் என்னமோ திட்டம் போட்டுக் கொண்டேயிருக்கிறார் போல் தெரிகிறது.''

சத்யா உணர்ச்சியின்றித் தாயைப் பார்த்தான். ''என்ன திட்டம்?''

''அதென்னவோ, எனக்கென்ன தெரியும்? ஒன்று தோன்றுகிறது. அனேகமாய் அப்படித்தான் இருக்கும்.''

''என்னதான், சொல்லேன்.''

''என் அண்ணா— ராதாவோட அப்பாவைச் சொல்கிறேன்— போகிறபோது உன் அப்பா பெயருக்குத்தானே எல்லாச் சொத்தையும் எழுதி வைத்தார். ராதா யோக்கியவளாய், உருப்படுகிறவளாய்த் தோன்றினால் சொத்தைக் கொடுக்கலாம், இல்லாவிட்டால் மாப்பிள்ளை இஷ்டம் போல் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று உயில் எழுதி வைத்தார் இல்லையா?''

அதனாலே?'' சத்யா விரக்தியாகச் சிரித்தான்.

மீனலோசனி பதில் கூறுமுன் பவானி மடம் வந்து விட்டது. ''இறங்கம்மா.''

சிறிய கட்டடம். 'ஓம்' என்ற எழுத்து செக்கச் சிவந்த கண்ணாடிக்குழாய் வடிவத்தில் காலை வெய்யிலில் பளபளத்துக் கொண்டிருந்தது. தொலைவில் நீலக்கடல் தெரிந்தது.

தூரத்திலிருந்து வரும் அலைகடலின் இரைச்சலுக்குச் சுருதி கூட்டுவது போல, பவானி மடத்துக்குள்ளிருந்து அமைதியான கானம் கேட்டுக் கொண்டிருந்தது.

மடத்துத் தொண்டர் மாதிரி இருந்த ஒரு மூக்குக் கண்ணாடிக்காரரை நெருங்கினான் சத்யா. ''இதுதானே பவானி மடம்?''

''ஆமாம். உங்களுக்கு யாரைப் பார்க்க வேண்டும்?''

சத்யாவுக்குச் சட்டென்று பேச்சு வரவில்லை. ''அவர்... புதிதாக வந்திருக்கிறாரே......, வந்து......''

''சுவாமி ராதானந்தா?''

''ஆமாம், ஆமாம்.'' அம்மா வாய்விட்டுத் திகைப்பதும் அவள் காதில் விழுந்தது.

''அதோ மேடையிலே அமர்ந்திருக்கிறாரே! உள்ளே போங்கள். பிரார்த்தனை நடந்து கொண்டிருக்கிறது. நீங்களும் கலந்து கொள்ளலாம்'' என்றார் மூக்குக் கண்ணாடிக்காரர்.

உள்ளே தொலைவில் ஒரு மேடையையும், நிமிர்ந்த மார்புடன் நடுநாயகமாக வீற்றிருக்கும் துறவியையும் கண்டாள் சத்யா. அன்னையின் கையை இறுகப் பற்றிக் கொண்டது அவளது கரம்.

## நான்கு

மடத்தினுள்ளே நுழைந்தாள் சத்யா.

கற்புக்கரசியான பெண்ணின் அடக்கமான புன்னகையைப் போல, குத்து விளக்கின் சுடர் மென்மையாக அசைந்து கொண்டிருந்தது மேடைக்குக் கீழே.

நிலைகொள்ளாதவளாகத் தாயின் கையை மெல்லப் பிடித்தபடி அமர்ந்து இங்குமங்கும் நோக்கினாள் சத்யா. நூறே பேருக்குட்பட்ட அந்தச் சிறு கூட்டம் அவளுடைய தவிப்பை உணராமல், குத்துவிளக்கின் பக்கத்திலே அமர்ந்துள்ள மூன்று காவியுருவங்களிடம் லயித்து நின்றது. அவர்களுக்குச் சற்றுத் தள்ளி, ஒரு சிறுவன் வெண்கலக் குரலில் பாடல்களையும் சுலோகங்களையும் பொழிந்துகொண்டிருந்தான்.

இரும்புக் கதவுபோல் கனத்து, அகல மறுத்துக் கொண்டிருந்தன சத்யாவின் விழி இமைகள். வலுக்கட்டாயமாக அவற்றைப் பிரித்து மேடையை நோக்கினாள்.



பளிச்சென்று ஆதிசங்கரரின் படமொன்றுதான் கண்ணில் பட்டது. அவள் கண்கள் மின்னல் வேகத்தில் அந்தச் சிறு மேடையை— மூன்று பெஞ்சுகளைச் சேர்த்து அமைக்கப்பட்டிருந்தது அது— ஆராய்ந்தன. கண்ணிமைக்கும் நேரத்துக்கு அவள் இதயம் சந்தோஷத்தால் துள்ளியது. அவர் இல்லை! ராதா அத்தான் இங்கே இல்லை! வேறு யார் யாரோ—

அவள் இதயம் நடக்கென்று நின்றது.

என்ன பைத்தியக்காரி! பழைய சுருள் முடி ராதாவைத் தேடினாள் அவள். அவன் இல்லை. ஆனால் அந்த விசால நெற்றி, ஆழ்ந்த கண்கள், லேசான பெண்மை தோன்றும் உடல்— காவித் துணிகளாலும் மொட்டைச் சிரத்தினாலும் மறைக்க முடியாதவையாயிற்றே!

ஒரே வினாடியில் ராதாவை அவள் அடையாளம் கண்டு கொண்டாள். பல யுகங்களாகத் தான் மரமாக நின்றுவிட்ட உணர்ச்சி அவளுக்குத் தோன்றியது. மீனலோசனி தன் வெடவெடக்கும் கைகளால் அவள் தோளை அழுத்தியபோதுதான் சத்யாவுக்குப் பிரக்ஞை பிறந்தது.

தன்னையுமறியாமல் கை குவித்துக் கும்பிட்டுவிட்டு அமர்ந்தாள் யந்திரம்போல. ஏன் கும்பிட்டோம்? அவளுக்கு அடுத்த கணமே தன்மீது சினம் பிறந்தது. ஏன் கும்பிட்டோம்? அவரது வேடத்தை ஒப்புக்கொண்டு விட்டோம் என்று பொருளா? இந்த அலங்கோலத்திடம் எதற்காக நம்மை மறந்து மரியாதை செலுத்தினோம்?

சத்யா இடிந்துபோய்க் கசப்புடன் உட்கார்ந்து கொண்டாள் சுவர் ஓரமாக.

காரில் வந்து கொண்டிருந்தபோது ஒரு காரணமுமில்லாமல், மழையில் நாய்க்குடை வளருகிற மாதிரி அவளுடைய ஆசை நம்பிக்கைகள் படபடவெனக் கிளைத்திருந்தன. படிப்படியாக அவள் உள்ளம் கெட்டிப்பட்டுக் கொண்டு வந்தது. காரிலிருந்து இறங்கியவுடனே

''சத்யா!'' என்று ஆசையுடன் கூவியபடி ஓடிவந்து அணைத்துக் கொள்ளும் ராதாவின் உருவமொன்றே அவள் கண்ணெதிரில் நின்றது.

சாந்தோம் கடற்கரைச் சாலையில் அந்தச் சிறிய பவானி மடத்தின் வாசலில் நின்றபோது, நம்பிக்கை ஆடத் தொடங்கியதென்றால், உள்ளே கூட்டத்தோடு கூட்டமாக அமர்ந்து, துறவிக் கோலத்திலிருந்த தன் காதலனைக் கண்ணுற்றபோது பொடிப்பொடியாகச் சிதறியது.

குள்ளமான சன்னியாசி ஒருவர் மிகத் தாழ்வான குரலில் பேசிக்கொண்டிருந்தார். முப்பது நாற்பது வருட காலம் ட்யூட்டராகவே காலத்தை ஓட்டிவிட்ட ஆங்கில ஆசிரியரொருவரை சத்யாவுக்குத் தெரியும். அவரைப் போலவே இருந்தார் இந்த சுவாமிஜியும்.

மனத்திலிருந்த பரபரப்பில் அவர் பேசியது சத்யாவின் புத்தியை எட்டவேயில்லை. சில சில சொற்கள் செவியைத் தொட்டுவிட்டுச் சென்றன.

''டெல்லியிலிருந்து பெரிய சுவாமிகள் செய்தியனுப்பியிருக்கிறார்கள். இவர்கள்தான் நமது சென்னை மடத்தின் நிர்வாகத்தை ஏற்றுக்கொள்ளப் போகிறவர்கள்... சுவாமிஜி நமக்கு அன்னியரல்ல. பூர்வாசிரமத்தில் இங்கே பிறந்து வளர்ந்து சமீப காலம் வரையில் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தவர்தான்...''

மெல்லத் தலையை உயர்த்தித் தன் தாயைப் பார்த்தாள் சத்யா. அம்மாவின் கண்கள் கலங்கியிருந்தன.

திடுமென்று 'அவர்' குரல்—

''வணக்கம்.''

கொஞ்சநஞ்சமிருந்த சலசலப்பும் அடியோடு மடிந்து, ஹாலில் பூரண நிசப்தம் நிலவியது. அத்தனை விழிகளும் அத்தனை செவிகளும் மந்திரத்துக்குக் கட்டுப்பட்ட மாதிரி மேடையில் லயித்தன. சத்யாவின் உள்ளம் ஒருகணம் பெருமிதத்தால் விம்மியது. இத்தனை பேரையும் கட்டுப்



படுத்தக்கூடிய வசிய சக்தி என் ராதாவுக்கு இருக்கிறது. இத்தனை பேர் அவரைப் பயபக்தியோடு பார்க்கிறார்கள். கவனத்தோடு கேட்கிறார்கள்.

''சீ...!'' என்று தனக்குள்ளேயே ஓர் அதட்டல் போட்டுக் கொண்டாள் சத்யா. எதை எதிர்ப்பதற்காக, எதை மாற்றுவதற்காக இங்கே வந்திருக்கிறோமோ அதற்கே அடிமையாகிப் பாராட்டுவதா? தூ!

இருந்தாலும், அவள் காதும் ஆர்வத்தோடு வாங்கிக் கொண்டன ராதானந்த சுவாமிகளின் பேச்சை.

''எனக்கு லெக்சர்கள் கொடுப்பதற்கான ஞானம் எதுவும் கிடையாது. நீங்களெல்லாரும் இந்த மடத்துக்குப் பழக்கப்பட்டவர்கள். நான் புதியவன். உங்களிடமிருந்து தான் நான் கற்றுக்கொள்ள வேண்டும். சொற்பொழிவுக்கும் எனக்கும் வெகுதூரம். ஹைஸ்கூலில் வாசித்தபோது ஒருதரம் பேச்சுப் போட்டிக்கு என் பெயரைக் கொடுத்தேன். போட்டி நடக்கிற தினத்தன்று, என் பெயரைக் கூப்பிட்டவுடனே ஓட்டமாய் ஓடினேன்— மேடைக்கல்ல; வீட்டுக்கு!''

அவையோர் கடகடவென்று சிரித்தார்கள். அது நாராசமாய் ஒலித்தது சத்யாவின் காதில். இது ராதா. என்ன ராதானந்த சுவாமிகளாக மாறினாலும் இதுதான் ராதா. கலகலவென்று பேசியே எவரையும் அடிமை கொள்ளும் ராதா. என்ன பண்டார வேஷம் போட்டாலும், இவரால் உம்மணாமூச்சி சாமியாராக மாற முடியாது...

''ஆகவே, உபன்னியாசங்கள், லெக்சர்கள் முதலான வற்றை வேறு சுவாமிஜிகளைக் கொண்டு ஏற்பாடு செய்யலாம். என்னைப் பொறுத்தவரையில் பஜனை நடத்துவோம். தியானம் செய்வோம். அது ஒன்றுதான் எனக்குப் பழக்கமான வித்தை.''

அவர் என்ன சைகை காட்டினாரோ, சத்யா கவனிக்கவில்லை. சட்சட்டென்று ஹாலில் விளக்குகள் அணைந்தன.

குத்து விளக்கின் ஒளியில் இரண்டு மூன்று பேர் கூட்டாகப் பாடினார்கள். மற்றவர்களும் சேர்ந்து கொண்டார்கள். ஒரு சிறுவன் சுலோகங்கள் படித்தான்.

''தியானம்,'' என்று அறிவிப்பு வந்தது மேடையிலிருந்து.

பெரும்பாலோர் பழக்கப்பட்டவர்கள் போலும், கைகளை மடியில் வைத்துக்கொண்டு நிமிர்ந்து அமர்ந்தார்கள்.

மௌனமே பெரும் ஓசையாக சத்யாவை மோதி மோதிச் சென்றது. அவள் இருக்கை கொள்ளாமல் நெளிந்தாள். தான் செய்யும் சின்னஞ்சிறு ஓசைகூட மாபெரும் குற்றமாகிவிடும் என்று உணர்ந்தவளாக, மூச்சை அடக்கிக் கொண்டு தன்னுள் போராடினாள்.

விரிந்த மார்பு நிதானமாக ஏறியிறங்க, இமையின் மயிர்க்கால்களில்கூடச் சலனமில்லாதவாறு சிலையாய் அமர்ந்திருக்கும் ராதாவைவிட்டு அவள் பார்வை அகல மறுத்தது. ஒளியும் நிழலும் மாறி மாறி விளையாடும் அந்த உடம்பைப் பிடித்து உலுக்கு உலுக்கென்று உலுக்கி, இத்தனை கிறுக்குத்தனங்களையும் நொடியிலே பொடியாக்கிவிட வேண்டும் என்ற வெறி அவளை ஆட்டி வைத்தது. பல்லைக் கடித்துக்கொண்டு பொறுத்தாள்.

திடீரென விளக்குகள் மீண்டும் எரிந்தன. வியர்த்திருந்த முகங்களைப் பலர் துடைத்துக்கொண்டவாறு எழுந்து கொண்டார்கள்.

அவர் மேடையை விட்டிறங்கினார். டக்டக்கென்ற சப்தத்தைக் கேட்டாள் சத்யா. வழுக்கிக்கொண்டு ஓடும் ஸ்லிப்பர்கள் அவரிடம் இப்போதும் இல்லை. இதயமற்ற, உணர்ச்சிகளற்ற பாதக் குறடு— உலர்ந்த கட்டை.

அடுத்தது என்ன? அம்மா, முந்தானையைத் தோளைச் சுற்றி நன்றாய் இழுத்து விட்டுக்கொண்டு நிற்பதைக் கண்டாள்.

''சந்தோஷம்... நன்றி... ஆமாம்... நேற்றுக் காலையில்தான் வந்தேன்... ஓ! எனக்கு நினைவில்லை...''

சூழ்ந்து நிற்கும் நபர்களோடு அவர் பேசுகிறார். ஆளுக்கொரு வார்த்தை அன்பாகச் சொல்கிறார். மனம் விட்டு, வாய்விட்டுச் சிரிக்கிறார். சிரிக்கலாமா? சாமியார்கள் சிரிப்பதுண்டா? சத்யாவை அதிர்ச்சியும், தவிப்பும் மாறி மாறிக் கொட்டின.

ஒவ்வோர் அடியும் சத்யாவை நெருங்கி வர வர அவளுக்குத் தலை சுற்றியது. எப்படிப் பார்ப்பேன், என்ன கேட்பேன், என்ன பேசுவேன்?...

ஐயையோ! அம்மா—

''ராதா! என்னப்பா இப்படி......'' என்று பெரும் விம்மலோடு அவரைக் கட்டிக்கொண்டு விட்டாள் மீனலோசனி!

சத்யாவுக்கு ஒரே சமயத்தில் அதிர்ச்சியும் ஆறுதலும் ஏற்பட்டன. யாராவது ஒருவர் இதை உடைத்துத்தான் ஆக வேண்டும். பழைய மனுஷியான அம்மா, நாசூக்கில்லாமல் அவளுக்கே உரிய கர்நாடகமான முறையில் உடைத்துவிட்டாள்.

கூடியிருந்தவர்கள்— சின்னச் சாமியார் உள்பட— திடுக்கிட்டு நின்று விட்டார்கள். குலுங்கக் குலுங்க விம்மும் மூதாட்டியையும், 'என்னப்பா' என்று சுவாமிஜியை அவர் ஒருமையில் கூப்பிட்டுவிட்ட விதத்தையும் கண்டு, அந்த அம்மாளுக்குப் பக்கத்திலேயே இளம் கன்றுபோல நடுங்கியவாறிருக்கும் யுவதியையும் பார்த்து ஆளுக்கொரு கற்பனை செய்துகொண்டு ஸ்தம்பித்து நின்றார்கள் போலும்.

அயராதிருந்தவர் ஒருவர்தான், ராதானந்தர்.

தன்னை அணைத்துக் கொண்ட மூதாட்டியை, ஒருவித வித்தியாசமும் இல்லாமல் முதுகில் தட்டிக் கொடுத்தார் பரிவோடு. ''என்ன நேர்ந்து விட்டது எனக்கு? முன்னைக் காட்டிலும் இப்போது அதிக சந்தோஷமாயிருக்கிறேன்.

அதிலே உங்களுக்கு மகிழ்ச்சி இல்லையா, என்ன? உங்களுடைய ஆசீர்வாதம் எனக்கு வேண்டும்."

கண்ணைத் துடைத்துக்கொண்டு விலகி நின்று தலை குனிந்தாள் மீனலோசனி. இவ்வளவு ஆட்களுக்கு மத்தியில் தான் நாணமில்லாமல் நடந்து கொண்டுவிட்ட முறை அவளுக்கு வெட்கம் ஏற்படுத்தியது.

சத்யாவின் தலை கிர்கிர்ரெனச் சுழன்றது. தன் உடம்புக்குள்ளே ஒரு வெடி கொளுத்தப்பட்டுவிட்டாற் போலவும், எந்த நிமிடமும் அது தன்னைத் தூள்தூளாகச் சிதறச் செய்யப் போவது போலவும் அவன் மெய் துடித்துக் கொண்டிருந்தது. இதோ, இதோ, அவர் பார்வை அவன் மீது விழுகிறது. முறுவல் செய்கிறார்.

"ஓ! நீகூட வந்திருக்கிறாயா? ஏதோவொரு ஹோட்டலுக்கு ஒரு முதல் வகுப்பு டிக்கெட் நஷ்டம்!"

சுற்றியிருந்தவர்கள்— இரக்கமற்ற பாவிகள்— கொல்லென்று நகைத்தார்கள். கரிக்கும் கண்ணீரை விழுங்கிக் கொண்டு சத்யாவும் சிரித்தான். சிரிக்க வேண்டி நேர்ந்த குரூரமான விதியை எண்ணிச் சிரித்தான்.

ஹாலுக்கு அடுத்த அறையை நோக்கிப் பாதக் குறடுகளின் ஓசை தேய்ந்து மறைந்து விட்டது.

கூட்டத்தில் சிலர் தங்களைச் சுட்டிக் காட்டிப் பேசுவது சத்யாவுக்குத் தெரிந்தது. அம்மாவின் கையைப் பிடித்துக் கொண்டு முன்னே நடந்தான். வெறுப்பு, அடுப்பில் பால் போல அவனுக்குள் பொங்கி எழும்பிக் கொண்டிருந்தது. வேஷம். எல்லாமே வேஷம். அவர் ஒரு வேஷம் போடுகிறார் அங்கே. நான் ஒரு வேஷம் போடுகிறேன் இங்கே. எதுவுமே நடவாததுபோல் அவர் நடிக்கிறார். நானும் நடிக்கிறேன். பூகம்பம் நிகழ்ந்த பின்னரும் தென்றலை அனுபவிக்கிறவன் போல் நடித்துக்கொண்டே நடக்கிறேன்.

"பேச்சுக்குப் பத்துத் தரம் அத்தை அத்தை என்பானே, எப்படி ஒரு அத்தைகூடப் போடாமல் பேசினான்



16888
2289699

பார்த்தாயா?" என்றாள் மீனலோசனி, கண்ணீர் அடைந்த குரலில்.

அந்த உண்மை அப்போதுதான் சத்யாவுக்கு உறைத்தது. ஆமாம். மூச்சுக்கு முப்பது முறை சத்யா போடுவாரே, அதுகூடத்தான் போய்விட்டது. அத்தை உறவில்லை, சத்யா உறவில்லை.

மீனலோசனி மூக்கை உறிஞ்சிக்கொண்டு கண்ணைத் துடைத்துக் கொண்டாள். "என் குழந்தை என்னமாய் ஆகிவிட்டான்! சத்யா, நான் உட்கார்ந்திருந்த இடத்துக்குப் பக்கத்திலே ஒருத்தர் இருந்தார். இந்த மடத்திலே நிர்வாகி போலிருக்கு அவர் கிட்டே ஒரு ஆள் வந்து குனிந்து— சமையற்காரனோ என்னமோ— 'புது சுவாமிஜிக்கு ராத்திரி என்ன ஆகாரம்?' என்று விசாரித்தான். அவர், 'ஆகாரமா! அவர் ராத்திரி ஒன்றும் சாப்பிடுகிற வழக்கம் கிடையாது!' என்று சொன்னார். அதை கேட்டும் நான் உயிரோடு இருக்கிறேன் பார். பாவி, பட்டணம் வந்தானானால் ராத்திரி பன்னிரண்டு மணிக்கு என்னை எழுப்பி, 'அத்தை, கொறிக்கிறதுக்கு ஒன்றும் கிடையாதா' என்று கேட்பானே! அவனா பட்டினியும் உபவாசமும் கிடக்கிறான்!"

அம்மா பேசப் பேச சத்யாவுக்கு ஆத்திரம்தான் மூண்டது

தாயின் கரத்தைக் கவ்வினாற்போல் இறுகப் பிடித்தான் அவன். நிற்க நிற்கத் தூய்மையும் தெளிவும் ஏற்படுத்த வேண்டிய புனிதமான அந்தத் தரை, நிற்கின்ற ஒவ்வொரு வினாடியும் வெறியையும் குழப்பத்தையும்தான் தந்தது, சத்யாவைப் பொறுத்தமட்டில். தன்னை அறியாமலே ஆவேசமாக எதையாவது செய்து விடுவோமா என்று அஞ்சினான் அவன்.

மடத்தின் உட்பகுதிக்குத் திரும்பிவிட்ட கூட்டத்தையே பார்த்துக் கொண்டு செயலிழந்து நின்ற மீனலோசனி, மகனின் அழுத்தமான பிடிப்பை பொறுக்க

மாட்டாமல் தன் சுய நினைவுக்கு வந்து கையையும் வேதனையுடன் உதறி விடுவித்துக் கொண்டாள்.

தாழ்ந்த குரலில் அழுத்தமாகக் கூறினாள் சத்யா:

''நமக்கு இங்கே ஒரு வேலையும் இல்லை. நீ வரா விட்டால் நான் போகிறேன். தாராளமாய் நீயும் ஒரு காவித் துணியைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திரு இங்கேயே.''

மீனலோசனி பரிதாபமாக முறையிட்டாள் ''என்னடி சத்யா, நான் தவிக்கிற தவிப்புத் தெரியாமல் கோபிக்கிறாய்? எப்படியடி விட்டுவிட்டு வருவேன் ராதாவை?''

''எப்படியா?'' சத்யா பல்லைக் கடித்தாள். ''உன் மருமானையே போய்க் கேட்டுத் தெரிந்து கொள். 'இவ்வளவு பாசம் வைத்திருக்கிற எங்களையெல்லாம் தூசி தட்டுகிற மாதிரி தட்டிவிட்டுப் போய் விட்டாயே அப்பா, அந்த வித்தையை எனக்கும் கற்றுக் கொடு' என்று கேள். கற்றுத் தருவார்.''

அப்போதுதான் தன்னை இரண்டொருவர் கவனிக்கத் தொடங்குவதை உணர்ந்தாள் சத்யா. சத்தமாகப் பேசி விட்டோமென்ற உணர்வு ஏற்படவே, தாய் பிற்பாடு வரட்டும் என்று தீர்மானித்துக் காருக்குச் சென்றாள்.

ஸ்விட்ச் துளையில் சாவியைப் பொருத்திவிட்டு அம்மாவுக்காகக் காத்துக் கொண்டிருந்த போது, கூட்டத்துக்கு வந்திருந்த சிலர் வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள். சத்யா அவர்களைக்கூடப் பார்க்கப் பிடிக்காதவளாய் மறுபக்கம் முகத்தைத் திருப்பிக்கொண்ட போதிலும், அவளைத் தாண்டிக் கொண்டு அடுத்த காருக்குச் சென்றவாறிருந்த இரண்டு பேருடைய உரையாடல் அவளுக்குத் தெளிவாகவே கேட்டது.

''வயசில் ரொம்பச் சின்னவராய் இருக்கிறார், இல்லை?''

''ஆமாம். மூன்று நாலு மாசம் முன்னால் வரையில் கூடக் காலேஜில் வாசித்துக் கொண்டிருந்தவராமே?''



''அப்படியா? பின்னே எப்படிப் பெரிய சுவாமிகள் இவருக்குச் சன்னியாச தீட்சை கொடுத்தார்? ரொம்பக் கண்டிப்புக் காட்டுகிறவராயிற்றே இந்த மாதிரி விஷயங்களில்?''

''கண்டிப்புக் காட்டவில்லையென்று யார் சொன்னது? இப்போதும் இந்த ராதானந்தாவுக்கு மடத்தை நிர்வகிக்கிற பொறுப்பைக் கொடுத்திருக்கிறாரே தவிர, தீட்சை கொடுத்து முழுச் சன்னியாசியாக்கி விடவில்லை.''

ஸ்டியரிங் சக்கரத்தோடு படுத்த மாதிரி குனிந்திருந்த சத்யா சட்டென்று நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள். இன்னும் முழுச் சன்னியாசியாக்கவில்லையா?

''அப்படியானால்?'' என்று அவளே கேட்ட மாதிரி மற்றவர் கேட்டார்.

சத்யா செவியைத் தீட்டிக் கொண்டாள்.

''எல்வளவு தூரம் மனசில் உறுதியும் வைராக்கியமும் இருக்கிறதென்பதை ஒரு வருட காலம் பார்க்கப் போகிறாராம். ஒரு வருஷத்துக்குள் இவர் தவறாமலிருந்து, தன் உறுதியைக் காட்டிவிட்டால் பிறகுதான் சன்னியாசம்.''

உற்சாகத்துடன் சத்யா விரலைச் சொடுக்கிக் கொண்டு, சாவியைத் திருப்பிய ஜோரைக் கண்டு அயர்ந்து போனாள் காருக்குள் ஏறவிருந்த மீனலோசனி.

''சத்யா! என்னடி ஏற்பட்டு விட்டது உனக்கு?''

''அட, சுதலைச் சாத்தம்மா சொல்கிறேன்!'' என்று கூறிய சத்யா, இன்னொரு தரம் சொடுக்கிக் கொணடே கியரை வெடுக்கென்று இழுத்து, ஆக்ஸிலரேட்டரைச் சதக்கென்று உதைத்தாள்.

''வர வர உன்னோடு காரில் வரவே எனக்குப் பயமாயிருக்கிறதடி பெண்ணே! என்ன வந்துவிட்டதென்று இப்போது திடீரென்று துள்ளிக் குதிக்கிறாய்?'' என்று அதட்டினாள் மீனலோசனி.

நீரிலே ஓடும் மீனைப்போலச் சர்ரென்று சாலையில் பாய்ந்து கொண்டிருந்தது கார்.

''என்ன வந்துவிட்டதென்றா கேட்கிறாய்? இழந்ததெல்லாம் வந்து விட்டது! காதல் வந்துவிட்டது! வாழ்வு வந்து விட்டது! வேறென்ன வரவேண்டும்?'' என்று சத்யா தாய்க்குப் பதில் சொல்லவில்லையே தவிர, அவள் உள்ளம் அப்படித்தான் குதியாட்டம் போட்டுக் கொண்டிருந்தது.

ஒரு வருஷம்! முழுசாக முந்நூற்றறுபது நாள் இருக்கிறது— ராதாவின் உறுதியை மட்டுமல்ல; என் உறுதியின் பலத்தை, காதலின் வலுவைப் புடம் போட்டுப் பார்த்து விட. அவனை அடியோடு இழந்து விடவில்லை. எனக்கு எதிர்த் திசையிலே போய்க் கொண்டிருக்கிற அவரது பாதையைச் சுற்றி வளைத்து என் பின்னாலேயே கொண்டு வந்து முடித்து விடலாம்.

சுடுகாடாகி விட்டது என்று அவள் எண்ணியிருந்த காதல் இனிமேல்தான் சோலையாகப் போகிறது.

மீனலோசனியின் முணுமுணுப்பு நிற்கவில்லை. ''எப்படியிருந்த பிள்ளை எப்படி ஆகிவிட்டான்! எனக்கு நம்பிக்கை இல்லை. இனிமேல் ஒரு நாளும் அவனை மீட்க முடியாது...''

''அப்படிச் சொல்லாதே அம்மா! எனக்கு நம்பிக்கை இருக்கிறது,'' என்றாள் சத்யா திடமாக.

மீனலோசனி அதிசயத்துடன் மகளை நோக்கினாள்: ''நம்பிக்கை இருக்கிறதா? சத்யா, எதை வைத்துச் சொல்கிறாய் நீ?''

எதை வைத்து என்று சத்யா சொல்லவில்லை. தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

## ஐந்து

சத்யா நம்பிக்கையுடன் சிரித்துக் கொண்டதற்குக் காரணம் இருந்தது.



இன்றைக்கு மட்டும்தானா? இதற்கு முன்பு எத்தனை தரம் ராதாவை அவள் இழந்து விட்டிருக்கிறாள்! எத்தனை முறை அவனைத் திரும்ப வென்றிருக்கிறாள்!

இன்றைக்குத்தான் சத்யாவைத் துறந்து, மறந்து, நிராகரித்து அவன் போகிறானா? இதற்கு முன்பும் பல சமயம் அப்படிப் போகிற மாதிரி போய் இறுதியில் அவள் பின்னாலேயே வந்து நின்றவன்தானே!

பல பல வருஷங்களுக்கு முன்னே, 'வயது எட்டாகிறது. பாவாடைகூடக் கட்டிக் கொள்ளத் தெரியவில்லையே என் பெண்ணுக்கு' என்று அம்மா மூச்சுக்கு மூச்சு புலம்பிக் கொண்டிருந்த காலத்தில் அந்த முதல் சந்திப்பு நிகழ்ந்தது.

சாரங்கபாணி இத்தனை பெரிய பதவிக்கு வரா விட்டாலும், வசதியாக வாழத் தொடங்கியிருந்த நாள் அப்போது. ஒரு மகாமக உற்சவம் நடைபெற்ற சமயம். மீனலோசனி ரொம்பப் பிடிவாதமாகக் கும்பகோணம் புறப்பட்டேயாக வேண்டும் என்று கணவனுடன் வாதாடி, வெற்றியும் பெற்றுவிட்டாள். தூரத்து உறவினரொருவரின் வீட்டில் அவர்கள் தங்க ஏற்பாடு செய்தார் சாரங்கபாணி.

தாங்க முடியாத கூட்டத்தின் நடுவே, மாட்டு வண்டி ஒன்றுகூடக் கிடைக்காமல், சத்யா, அவள் அப்பா, அம்மா மூன்று பேரும் ஆளுக்கொரு பெட்டி படுக்கையைத் தூக்கிக் கொண்டு நடையிலேயே வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். சரியாய் மூன்று மைல் நடை. கும்பகோணத்தின் இந்தண்டைக் கோடியில் ரயில்வே ஸ்டேஷன் என்றால் அந்தண்டைக் கோடியிலிருந்தது அவர்களது உறவினரின் வீடு. வாசலில் ஒரு பெரிய குளம். தென்னை மரங்கள். இடிந்தும் சரிந்தும் போன மதில் சுவர். (அவ்வளவுதான் இன்று ஞாபகம் இருக்கிறது.)

நடையிலே தொபேலென்று ஒரு மூட்டையை சத்யா போட்டதும், உள்ளேயிருந்து வந்த ஒரு பையன்— அரை

டிராயர், கிராப்பு ஸ்டைலாய் வாரிக் கொண்டிருந்தான். சட்டைக் காலர் தூக்கி நின்றது— "ஏய் பொண்ணு! இப்படி வழியிலே வைக்கிறாயே? நான் விழுந்து மண்டை உடையவா? உள்ளே கொண்டு போய் வை!" என்று அதட்டல் போட்டு விட்டுத் தெருவுக்குப் போனான்.

பின்னாலேயே வந்த மீனலோசனி, "அது நம்ம ராதா போலிருக்கிறதே? அண்ணாவும் வந்திருக்கிறாரா என்ன?" என்று வியப்பும் மகிழ்ச்சியுமாகக் கணவரிடம் சொல்லிக் கொண்டே உள்ளே சென்றாள்.

கூடத்தில் ஈஸிசேரில் சாய்ந்திருந்த மனிதர்— ஆமாம். புருபுருவென்ற மீசையும் அரை வழுக்கைத் தலையுமாக இருந்தார். அரையடி ஸ்கேல் நீளத்துக்கு கன்னங்கரே லென்று ஒரு சுருட்டுப் புகைந்து கொண்டிருந்தது அவர் கையில்.

"அண்ணா! நீங்க வரப்போறீங்கன்னு தெரியவே தெரியாதே! சௌக்கியமாயிருக்கீங்களா? துரும்பா இளைச்சுப் போயிட்டீங்களே அண்ணா!" என்று அம்மா புலம்பினபோது, அவர் அப்படியொன்றும் இளைத்த ஆசாமியாகத் தெரியவில்லையே என்று சத்யா நினைத்துக் கொண்டாள்.

"வாங்க மாப்பிள்ளை," என்று சாரங்கபாணியை வரவேற்றுவிட்டு, "இதுதான் உங்க குட்டியா?" என்று சத்யாவைச் சுட்டிக் காட்டிக் கேட்டார். அவர் அதிகமாய்ப் பேசுகிறவரல்ல என்று தோன்றியது.

"என் பொண்ணுதான் அண்ணா. பட்டணத்துக்கு வருஷத்துக்கு ஒருவாட்டியாவது வந்தீங்கன்னா தெரிஞ்சிருக்கும். அண்ணி போனதோடு உறவே போயிட்டுது. உங்களுக்கு மாடுங்கதான் உறவுக்காரங்க இப்போ வெல்லாம்," என்று மீனலோசனி குற்றம் சாட்டினாள். அவர் சுருட்டுச் சாம்பலைத் தட்டிவிட்டு, சத்யாவைத் தன் பெரிய கண்களால் துளைத்து நோக்கினார்.



பக்கத்து முக்காலியில் உட்கார்ந்து, சட்டையைக் கழற்றத் தொடங்கிய சாரங்கபாணி, "டெல்லி கால்நடைக் கண்காட்சியிலேயும் உங்கள் மாடுகள் பரிசு தட்டிவிட்டாற் போலிருக்கிறதே! ஹிந்துவிலே போட்டோவும் பெயரும் பார்த்தேன்," என்றார்.

"பின்னே என்ன? இங்கே சௌத்திலே மட்டும் கொடி கட்டிப் பறந்தால் போதுமா? வடக்கே ராஜஸ்தான்காரங் களுக்கே பட்டயம் எழுதி வைச்சிருக்காங்களே! அதை உடைக்க வேணாம்?" என்றார் வானமாமலை. (குடும்பப் பெயர், வானமாமலைதான். பாலகிருஷ்ணன் என்பது கையெழுத்துப் பெயர்.) அண்ணாந்து பார்த்தபடி குப்பென்று புகையை வீசியபோது அவர் முகத்தில் பெருமை பளபளத்தது.

பிற்பாடுதான் தெரிந்து கொண்டாள் சத்யா. மதுரைக்குப் பக்கத்திலே ஒரு பெரிய கால்நடைப் பண்ணை நடத்தி வருகிறவராம் மாமா. மாடு— கன்று இதுவேதான் அவருக்கு உயிராம். இந்தியாவில் அவருடைய மாடுகள் பரிசு பெறாத இடம் கிடையாதாம். அவருக்கு அவருடைய தொழிலும், சாரங்கபாணிக்கு அவருடைய உத்தியோகமும் சரியாகி விட்டதால் இரண்டு குடும்பங்களுக்கும் போக்கு வரத்து இல்லாமலே போய்விட்டது. என்னவோ இந்த மகாமகத்துக்குக் கும்பகோணம் வரத் தோன்றியிருக்கிறது. இந்த வீட்டுக்காரர்கள் அவருக்கும் உறவாகையால் இங்கேயே வந்து இறங்கியிருக்கிறார். அதுவும் இரண்டு நாள் முன்புதான்.

சத்யா வந்தது சாயந்தர வண்டியாதலால், குளித்து உடை மாற்றிக் கொண்டபோது விளக்கு வைத்தாகி விட்டது. சாப்பிட அமர்ந்தார்கள். (எத்தனை பெரிய வாழையிலை! கையே எட்டவில்லை. எம்பி எம்பிப் பதார்த்தங்களை எடுக்க வேண்டியிருந்ததே!)

வானமாமலை, "ஏ குட்டி! இப்படி வந்து உட்கார்," என்று தன்னருகே சத்யாவை அமர்த்திக் கொண்டார்.

''என்ன அண்ணா மருமகனை இப்பவே சரிக்கட்டி வைத்துக் கொள்ளப் பார்க்கறீங்களா?'' என்று மீனலோசனி பரிகாசம் பண்ணினாள்.

தனது புருபுரு மீசையை வருடியவாறே, ''ஊம் ஊம்! யாருக்கு எப்படிப் பிராப்தமோ பார்க்கலாம். நம்ம பிள்ளை லட்சணம் தெரியாமல் பேசாதே,'' என்றார் வானமாமலை.

சாரங்கபாணி, ''நாங்க வர்றபோது வெளியே போனவன்தானே ராதா? இன்னுமா வரவில்லை?'' என்று கேட்டார்.

''எங்கேயாச்சும் ஊர் சுத்திக்கிட்டிருப்பான் தன்னாலே வருவான்,'' என்றார் வானமாமலை.

மீனலோசனி அவரையே சிறிது உற்றுப் பார்த்து விட்டு, ''இருந்தாலும் நீங்க இப்படி விட்டேத்தியாய் இருக்கக்கூடாது அண்ணா. தாயில்லாப்பிள்ளை. பாலம், பட்டணத்துக்கு அனுப்பினால் நாங்க பார்த்துக்கொள்ள மாட்டமா?'' என்று குறைப்பட்டாள்.

''இப்ப நான் என்ன கவனிக்காமல் இருந்திட்டேன்? ஆயிரத்து முந்நூற்றைம்பது மாடுங்களுக்குத் தீனி போடறேனே தினம்? இவன் ஒருத்தனுக்குப் போடாமலா இருப்பேன்?'' என்றார் கசப்புடன்.

சத்யாவுக்கு அதிகமாய்ப் புரியாவிட்டாலும், மகனிடம் அவருக்கு அவ்வளவு பாசமில்லை என்று ஊகித்துக் கொண்டாள். ஸ்டைல் கிராப்புடன், காலரை உசுப்பிக் கொண்டு சென்ற சிறுவனின் முகம் அவள் கண்ணெதிரில் நின்றது. தந்தை மனம் நோகும்படி நடந்து கொள்கிறான் அவன் என்று அவளால் எண்ண முடியவில்லை. அந்தப் பிள்ளையை இந்த மீசைக்காரர் கொடுமைப்படுத்துகிறார் என்றுதான் நினைத்துக் கொண்டாள்.

சாப்பாடு முடிந்ததும் அவள் வாசலுக்கு வந்தாள். திண்ணையில் ஒரு பழைய இரும்புக் கட்டில் கிடந்தது.



அதிலே படுத்தபடி, எதிரே இருந்த குளத்தில் இருட்டு செய்யும் ஜாலங்களை ரசிக்கலானாள். வெகு நேரம் வரை தெரு ஜேஜே என்றிருந்தது. காவலுக்காக வந்திருந்த இரண்டு வெளியூர் போலீஸ்காரர்கள் திண்ணையின் இன்னொரு கோடியில் உட்கார்ந்து பீடி பிடித்துக் கொண்டிருந்தார்கள். வாசல் பக்கம் வந்த சாரங்கபாணி, அவர்களிடம் ஏதேதோ விசாரித்துக் கொண்டிருந்தார். அம்மா வந்து, ''உள்ளே வந்து படு சத்யா,'' என்று அழைத்தாள். ''இந்த இடமே பிடித்திருக்கம்மா,'' என்று பதிலளித்தாள் சத்யா.

எப்போது கண்ணயர்ந்தாளோ, யாரோ அவளை உலுக்கு உலுக்கென்று உலுக்கினார்கள். ''ஏய்! எழுந்திரு!'' என்று அதட்டல் கேட்டது.

கண் விழித்தபோது தெரு ஒரே இருட்டாயிருந்தது. எதிரே அந்தப் பையன்— ராதா நின்றிருந்தான்.

''எழுந்து உள்ளே போ. இது என் இடம்,'' என்று அவன் அலட்சியமாகச் சொன்னான்.

''எழுதி வைச்சிருக்குதாக்கும்?'' என்று கேட்டுவிட்டு எழுந்து கொண்டாள் சத்யா.

அவன் காலை நீட்டிக்கொண்டு மல்லாந்து படுத்தான் கட்டிலில். சத்யா திண்ணையிலிருந்து இறங்கியபோது, ''ஏய்! நாளைக் காலையிலே நீ அந்தக் குளத்திலே போய்க் குளிக்கப் போகிறாயா?'' என்று திடுப்பெனக் கேட்டான்.

''எந்தக் குளத்திலே?''

''மகாமகக் குளத்திலே.''

''ஏன்?''

''குளிக்காதே. ஒரே நாத்தம். அழுக்கு. கும்பி. சாக்கடை.''

'முருகா முருகா' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள் சத்யா. பாவமான காரியம் செய்தாலும், பாவமான வார்த்தை கேட்டாலும் இரண்டு தரம் 'முருகா' என்று

சொல்லும்படி அவள் அம்மா சொல்லித் தந்திருந்தாள்.

''என்ன, காதிலே விழுந்திச்சா?'' என்று அவன் அதிகார தோரணையில் கேட்டான்.

சத்யா, ''மகாமகக் குளத்திலே குளிக்கத்தானே இவ்வளவு தூரம் வந்திருக்கிறோம்? குளிச்சால் புண்ணியம்'' என்றாள்.

''உன் மூஞ்சி!'' என்று கடுகடுத்தான் ராதா. ''நீயும் ஒரு அழுக்கு! நாத்தம்! போ போ!''

உதட்டைச் சுழித்து அழகு காட்டிவிட்டு சத்யா உள்ளே சென்று அம்மாவின் பக்கத்தில் படுத்துக் கொண்டாள்.

விடிகாலையில் எல்லோரும் எழுந்து கொண்ட போதும், கூட்டத்திலே இடித்துப் புடைத்துக் கொண்டு மகாமகக் குளத்துக்கு விரைந்தபோதும், ராதாவைக் காணவில்லை. ஆனால், முழங்கால் மட்டுமிருந்த தண்ணீரில் முங்கி எழுந்த போது திடீரென்று சத்யாவின் பின்னால் அவன் முளைத்தான். அவன் உடம்பு பூராவிலும் தலையிலும் சொட்டச் சொட்ட ஈரம்.

சத்யா அவனை வியப்புடன் நோக்கினாள். அவன் உடனே, ''நான் ஒன்றும் உனக்காக வரலை. நானாகவே தான் வந்தேன்!'' என்றான்.

சத்யா சிரிப்பை அடக்கிக் கொண்டாள்.

பகல் சாப்பாட்டுக்குப் பிறகு எல்லோரும் கூடத்தில் உட்கார்ந்திருந்தபோது, ''எங்க சத்யா டான்ஸ் ஆடி நீங்கள் பார்த்ததில்லையே அண்ணா?'' என்று மீனலோசனி கேட்டாள்.

''இல்லையே?''

''ஸ்கூலிலே கற்றுக் கொள்கிறாள். சத்யா, மாமாவுக்கு ஒரு டான்ஸ் ஆடிக் காட்டம்மா,'' என்றாள் மீனலோசனி. (பாவம் அம்மா. குமாரி கமலா மாதிரி சத்யாவும் பிரமாதமான நடனக்காரியாய் வரவேண்டும் என்று கொள்ளை ஆசைப்பட்டாள் அந்த நாளில். 'பிணத்தை அறுத்துப் பார்க்கிற' படிப்புப் படித்து, வெள்ளைக் கவுன் மாட்டிக் கொண்டு ஹவுஸ் சர்ஜனாக ஆகியிருக்கிற இந்த நிலைக்கும் அவளுடைய ஆசைக் கற்பனைக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது.)



சத்யா கொஞ்சம் பிகு செய்து கொண்ட பிறகு, எல்லோரையும் நகரும்படி சொல்லிவிட்டு, 'நேற்றந்தி நேரத்திலே' என்ற பதத்துக்கு அபிநயம் பிடித்து ஆடினாள். பாதி ஆடிக்கொண்டிருந்தபோது, வாசலுக்குள் ராதா நுழைவது தெரிந்தது. மாடிப்படி ஓரமாக நின்று சிறிது கவனித்துவிட்டுப் போய் விட்டான்.

''பலே! பலே! பிரமாதமாய் ஆடுகிறாளே!'' என்று வானமாமலை கை தட்டினார்.

கொஞ்ச நேரம் கழித்து சத்யா கிணற்றடிக்குப் போன போது, ராதா முகம் கழுவிக் கொள்ள அங்கே வந்தவன், ''ஏய், உன் டான்ஸ்...'' என்று சொல்லி நிறுத்தினான்.

''ஊம்?'' என்று தலை நிமிர்ந்து ஆவலுடன் சத்யா கேட்டாள்.

''சகிக்கலை! மூஞ்சியைப் பாரு! நாத்தம்! ஒரே நாத்தம்!''

சோப்புப் பெட்டியை அவள் கால்மீது எறிந்துவிட்டு அவன் போய்விட்டான்.

என்ன ரோஷம் வந்தது சத்யாவுக்கு! ''நீ மட்டும் பெரிய வாசனையாக்கும்! மாட்டு நாத்தம்! பன்னை நாத்தம்!'' என்றெல்லாம் அவள் திட்டிக் கொண்டிருக் கையிலேயே அவன் ஓடிவிட்டான்.

அன்று பகல்— அவள் தூங்கிக் கொண்டிருந்தபோது— வானமாமலை ராதாவுடன் ஊருக்குப் புறப்பட்டுப் போய் விட்டார்,

சண்டை போட்டுக் கொண்டே பிரிந்து விட்டோமே என்று சத்யாவின் குழந்தை மனம் ஒரு வினாடிதான்

வருத்தியது. மறுவிநாடி, தன் தலையணையை நகர்த்திய போது, அதன் கீழேயிருந்த ஐந்நூறு சாக்லேட்டுகளைக் கண்டாள். அவைகளை யார் அங்கே வைத்திருக்க முடியும் என்பது உடனேயே புரிந்து விட்டது. சிரிப்பும் அழுகையும் கலந்து வந்தன அவளுக்கு.

அதற்கு அடுத்த நாள் சத்யாவும் சென்னை திரும்பினாள். பல நாட்கள் வரைக்கும், மகாமகப் பிரயாணமும் நிகழ்ச்சிகளும் அவள் மனத்தில் ஏதோவொரு விதமான இடம் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தன. ராதா என்ற அந்தத் துடுக்கான பையனைப் பற்றி நினைக்கையில் அவளுக்கு எரிச்சலும், ஆத்திரமும் ஏற்பட்டாலும் மீண்டும் மீண்டும் தன்னிடமே அவன் திரும்பி வந்ததை எண்ணி இன்புறாதிருக்கவும் முடியவில்லை.

ஊர் திரும்பிய புதிதில் மீனலோசனி ஒரு கடிதம் எழுதினாள் அண்ணாவுக்கு. அதற்குப் பதில் வரவில்லை. ரயில் சந்திப்பு மாதிரி இந்தச் சந்திப்பும் திடுமென்று ஆரம்பித்து, திடுமென்று முடிந்து விட்டது.

வருடங்கள் ஓட ஓட, சாரங்கபாணியின் உத்தியோகத்தில் பல மாறுதல்களும் உயர்வுகளும் ஏற்பட்டன. சத்யாவின் இருப்பிடம், படிப்பு, வேலைக்காரர்கள், சிநேகிதம் முதலிய பலவும் பல வகைகளில் புரண்டு புரண்டு மாறின. ராதா என்ற ஒரு சிறுவனின் அகங்காரமான தோற்றம் அவள் இதயத்திலிருந்து மெல்ல நகர்ந்தது— இல்லை, நகரவில்லை. கிணற்றில் விழுந்த பொருள் சற்று நேரம் மிதந்து விட்டு, பிறகு அடியாழத்துக்குத்தானே இறங்குகிறது? மறைந்து விடுவதில்லையே? அவன் நினைவும் மனத்தின் வெகு ஆழத்திலே படிந்து விட்டதால், அப்படியொன்று இருந்ததே தெரியாமல் சுவடு மறைந்து விட்டது.

ராதாவை அவள் சந்திக்கவேயில்லை. ஆனால் அவன் குரலை மட்டும் ஒரு நாள் எதிர்பாராத விதமாய்க் கேட்டாள்.



நன்றாய் நினைவிருக்கிறது. எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை முடிவுகள் பேப்பரில் வெளியாகியிருந்தன அன்று. சத்யாவும் வெற்றி பெற்ற மற்றத் தோழிகளும் சேர்ந்து அன்று மாலைப் பொழுதை ஓட்டலிலும் தியேட்டரிலும் கொண்டாட முடிவு செய்திருந்தார்கள்.

பிற்பகல் நாலு மணி இருக்கும். அந்த ஹைதராபாத் ஜிமிக்கியைக் காதிலே மாட்டி விடும்படி அம்மாவின் காலடியில் குனிந்து உட்கார்ந்திருந்தபோது டெலிபோன் மணியடித்தது. டெலிபோனை எடுத்துக் கேட்டாள்.

''ஹலோ! வந்து... சாரங்கபாணியின் வீடா? அத்தை இருக்கிறார்களா?''

அத்தை? சத்யா புரிந்து கொண்டாள். ஆனால் சட்டென்று பேச வரவில்லை. எப்படி அவரை அழைப்பது? ''நீங்கள்... மிஸ்டர்... மதுரையிலிருந்து...'' என்று தடுமாறினாள்.

''ஓ! என் அத்தை மகள் ரத்தினமா?'' அவன் சிரிக்கும் ஒலி. ''நான்தான் முறைப் பையன் பேசுகிறேன்...''

''எங்கிருந்து... எப்போது வந்தீர்கள்... மாமா...?''

''சௌக்கியம். நான் என். ஸி. ஸி. குரூப்பிலே வந்திருக்கிறேன். படிப்பு, மதுரை அமெரிக்கன் காலேஜ். ஆக்ரா போகிறோம்.''

''யாரடி அது?'' என்று அம்மா இந்தப்புறம் கேட்டுக் கொண்டே யிருந்ததால், ''அவர்தானம்மா... ராதா அத்தான்,'' என்று கூறி டெலிபோனை மீனலோசனியிடம் கொடுத்தாள் சத்யா. அவள் நெஞ்சுக்குள் இனம் தெரியாத படபடப்பு ஏற்பட்டிருந்தது. ஆண்களுடன் சரிசமமாகப் பழகவும் பேசவும் அவள் கற்றுக்கொண்டு பல நாட்களாகியிருந்த போதிலும், இவர்... இவர்...

''ஏண்டாப்பா ராதா, இவ்வளவுதான் எங்கள் உறவா? யாரோ வழியோடு போகிறவன் மாதிரி பேசுகிறாயே? எங்கேயிருக்கிறாய் இப்போது?... ஒரு நடை

எட்டிப் பார்த்துவிட்டு அப்புறம் போகலாம்... ராத்திரி நானே வண்டி... ஆமாம், கட்டாயம் வா,'' என்று சொல்லி டெலிபோனை வைத்த மீனலோசனி மறுவினாடியே பரபரப்படைந்தாள். ''சமையற்காரர் எங்கே? கூப்பிடு சொல்கிறேன். அவர் பாட்டுக்கு வற்றல் குழம்பும் ஊறுகாயும் வைத்திருப்பார். வடை தட்டிப் பாயசம் செய்யணும்.''

அம்மா உள்ளே போய்விட்டாள். சத்யாவுக்குத் தன் சிந்தனைகளை ஒருமுகப்படுத்த முடியவில்லை. பல வருடங்களுக்கு முன்பு கும்பகோணத்தில் கண்ட அந்தக் குழந்தை முகத்தை நினைவுக்குக் கொண்டுவரப் பார்த்தாள். இயலவில்லை. அமெரிக்கன் காலேஜாமே... எப்படி இருப்பார் இப்போது?...

''இந்தாடி பெண்ணே, சினிமாவுமாச்சு, இனிமாவுமாச்சு. அப்பா எங்கே போய் உட்கார்ந்திருக்கிறாரோ தெரியவில்லை. நீயும் கிளம்பிவிடாதே. மரியாதையாயிருக்காது.'' என்று அம்மா கட்டளையிட்டபோது, தனக்காகவே அவள் முடிவெடுத்த மாதிரி இருந்தது சத்யாவுக்கு.

''போம்மா, என் சிநேகிதிகளெல்லாம் கேலி செய்வார்கள்,'' என்று ஒப்புக்குப் பிகு செய்துகொண்டே போன் செய்து தெரிவித்துவிட்டாள் தான் வரவில்லை என்று.

மணி ஆறாயிற்று. ஏழாயிற்று. எட்டுமாயிற்று. சாரங்கபாணிகூடத் தகவல் தெரிந்து வீட்டுக்கு வந்துவிட்டார். உள்ளே கொதிக்கும் சமையலின் மணம் கம்மென்று வீடு பூரா தவழ்ந்து கொண்டிருந்தது.

''எங்கேயிருந்து பேசினான் என்று கேட்டு வைத்துக் கொள்ள வேண்டாம்? இப்போது கூப்பிட்டு விசாரிக்கலாம் அல்லவா?'' என்று, மணி ஒன்பதைத் தாண்டியதும் சாரங்கபாணி கோபித்துக் கொண்டார்.

விருந்துச் சமையல் வீணாகியே போய்விட்டது.



''ஆக்ராவிலிருந்து திரும்பும்போது கட்டாயம் வருவான்,'' என்று அம்மா சொல்லிக் கொண்டிருந்தாள்.

'காம்ப்' முடிந்து பல நாட்களாகி விட்டன. மீனலோசனி அப்படியே சொல்லிக் கொண்டிருந்தாள். அர்த்தமில்லாத பேச்சாக அது முடிந்தது.

குரலைக் கேட்டதோடு சரி. ராதா அவள் வீட்டுக்கு வராமலே போய்விட்டான்.

சத்யாவுக்குக் கோபம் பொங்கிக்கொண்டு வந்தது. தன்னைச் சந்திக்கும் கடுகத்தனை ஆவல்கூடக் காட்டாதவன் வந்தாலென்ன, போனாலென்ன? அதைப் பற்றி நினைத்து நினைத்து ஏன் உழல வேண்டும்? பிரயாசையுடன் தன் புத்தியை வேறு விஷயங்களில் செலுத்தினாள்.

திடீரென்று ஒரு நாள் ஒரு கார்டு வந்தது.

''கோபமா? சிநேகிதர்கள் விடவில்லை— ராதா,'' என்று இரண்டே வரிதான் இருந்தது அதிலே.

சத்யா திகைப்புடன் மறுபுறத்தைக் கவனித்தாள். 'சத்யா' என்று அவள் பெயரே இருந்தது முகவரியில். அவன் கையாலே எழுதிய அவள் பெயர்.

கிளுகிளுத்தது அவள் உள்ளம். எட்டி எட்டிப் போகிற மாதிரி இருப்பதெல்லாம் வெறும் தோற்றம்தான். அவர் உள்ளத்திலே இந்த சத்யாவுக்குத் தனியான இடம் உண்டு... சத்யாவின் உணர்ச்சிகளுக்கு மதிப்பளிக்கும் பண்பும் உண்டு...

லீவு முடிந்து கல்லூரியில் சேர்ந்தாள் சத்யா. (அவ்வளவு பெரிய பதவி வகித்த போதிலும் அப்பா எத்தனை திண்டாடிவிட்டார், ஓர் இடம் பிடிக்க! கேவலம் இன்னோர் ஐம்பது மார்க் கூடுதலாக மட்டும் வாங்கியிருந்தால், வெற்றிலை பாக்கு வைத்து மேளதாளத்தோடு அழைத்திருப்பார்கள்!)

நவராத்திரி விடுமுறையின்போது அந்தத் திடீர் மதுரைப் பயணமும் விசித்திரமான சந்திப்பும் நிகழ்ந்தன.

சாரங்கபாணி, போலீஸ் அதிகாரிகள் மாநாடு ஒன்றில் கலந்துகொள்ளப் புதுடெல்லி போயிருந்தார். வீட்டில் அம்மாவும் பெண்ணும் மட்டும் இருந்த வேளை.

நவராத்திரிக்கு வரும்படி ஏகப்பட்ட அழைப்புக்கள் வந்திருந்தன. டெலிபோனில் கூப்பிட்டவர்கள், நவநாகரிகமாக அழைப்பு அச்சடித்து அனுப்பியிருந்தவர்கள், நேரிலே வந்து மன்றாடியவர்கள்— இப்படிப் பல பேருக்குப் பதில் சொல்ல வேண்டியிருந்தது.

ஒரு வெள்ளிக்கிழமையன்று பகல் சத்யாவும் மீனலோசனியும் புறப்பட்டார்கள், ஒரே சுற்றில் எல்லாவற்றையும் முடித்துக் கொள்வதென்ற தீர்மானத்துடன். எஜமானர் ஊரில் இல்லை என்றதும் கார் டிரைவர் லீவு எடுத்துக் கொண்டுவிட்டான். ஆகவே, டாக்ஸி அமர்த்திக் கொண்டு சென்றார்கள்.

போலீஸ் அதிகாரிகளின் வீடுகளை முதலில் முடித்துக் கொண்டு, பிறகு மற்றவர்களின் இல்லங்களுக்கு விஜயம் செய்ததில், தாட்சண்ணியத்தினால் ஒவ்வோர் இடத்திலும் தாமதமாகிக்கொண்டே போயிற்று. இரவு ஒன்பது மணி சுமாருக்கு, தியாகராயநகரில் கவுன்சிலர் தேசிகராமனின் வீட்டில் குங்குமம் பெற்றுக் கொண்டிருந்த சமயம்—

''உங்களை யாரோ தேடிக்கொண்டு வந்திருக்கிறார்கள்,'' என்று வேலைக்காரன் வந்து சொன்னான்.

''எங்களையா?'' என்று மீனலோசனி கேட்கையில், ''நான்தான்,'' என்று கூறியபடி உள்ளே வந்தான் மணி. (அப்போதுதான் அவன் வேலையில் சேர்ந்த புதிது.)

அவன் கையில்—

மீனலோசனி, ''என்னப்பா அது?'' என்று திகைத்துக் கூவிவிட்டாள்.

தந்தி உறையைக் கொடுக்காமலே, ''வாருங்கள், போகலாம். சாயந்தரம் நாலு மணியிலிருந்து உங்களைத் தேடுகிறேன்'' என்று அழைத்தான் அவன்.



''விஷயம் என்ன? சொல்லுங்களேன்'' என்றாள் சத்யா. அப்பாவின் உத்தியோக சம்பந்தமாகத் தந்திகள் வருவது சகஜம்தான். ஆகவே அவளுக்குக் கலவரம் ஏற்படவில்லை.

கவுன்சிலர் வீட்டுப் பெண்கள் பீதியுடன் பின் தொடர, மீனலோசனி வாசலுக்கு வந்தாள்.

''டாக்ஸியில் ஏறுங்கள்'' என்றான் மணி, குரலில் ஒருவித உணர்ச்சியும் காட்டாமல். ''ஒன்றுமில்லை பயப்படாதீர்கள்.''

பயந்து நடுங்கிக்கொண்டே காரில் ஏறினாள் மீனலோசனி. மர்மமாக மணி செய்யச் செய்ய சத்யாவுக்குக் கோபம்தான் வந்தது.

டாக்ஸி இரண்டு வீட்டைத் தாண்டியானதும், ''மதுரையிலிருந்து தந்தி வந்திருக்கிறது'' என்று மணி கூறினான்.

சத்யா இப்போது பதறிப்போய், ''என்ன? மதுரையிலிருந்தா? எதற்கு?'' என்றாள்.

''அவர்... உங்கள் மாமா... மிஸ்டர் வானமாமலை... மாரடைப்பாம்...''

''அண்ணா!'' என்று மீனலோசனி கத்திய கத்தலில் டாக்ஸியே குலுங்கியது. மகளின் மடியில் விழுந்து துடித்தாள்.

சத்யா? என்றைக்கோ ஒருமுறை பார்த்த அந்தப் புருபுரு மீசையொன்றே அவள் நினைவில் நின்றது... கடினமான இதயத்தினுள்ளிருந்த மென்மையான அன்பு ஞாபகம் வந்தது...... அவர்— ராதா அத்தான்— எத்தனை துயரத்தில் மூழ்கிக் கிடக்கிறாரோ? பாவம், தேறுதல் சொல்லக்கூட யாரும் இருக்க மாட்டார்களே!

மணி, முதல் அதிர்ச்சிகள் தீருவதற்காகவே காத்திருந்தவன் போல் அடுத்த ஏற்பாடுகளை மளமளவென்று ஒப்பித்தான். ''டெல்லிக்கு டிரங்க்கால் போட்டுத்

தெரிவித்து விட்டேன். நாளைக்குப் பிளேனில் புறப்பட்டு வருகிறாராம். உங்களை முதலில் போகச் சொன்னார்.''

அம்மா இன்னும் தன் துயரத்திலே மூழ்கிக் கிடந்ததால் சத்யா தான் கேட்டாள்: ''ரயில் இருக்குமா இந்நேரத்துக்கு மேல்?''

''அப்போதே விசாரித்து விட்டேன். முதல் வகுப்பு டிக்கெட் எந்த வண்டிக்கும் கிடைக்கவில்லை. மற்ற வகுப்பில் பிரயாணம் செய்து உங்களுக்குப் பழக்கமில்லாத தால் ரொம்பச் சிரமப்படுவீர்கள்.''

''அப்புறம்?''

''காரில்தான் போகவேண்டும். சீக்கிரமாயும் போய் விடலாம்.''

''டிரைவர் லீவு போட்டிருக்கிறானே!''

''அவன் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. நானே கூட ஓட்டிக்கொண்டு வருவேன்... ஆனால் பாட்டரி சார்ஜ் பண்ணாமலே போய்விட்டான் மடையன். இனிமேல் அதற்கும் நேரமில்லை ஆகவே அஸிஸ்டெண்ட் கமிஷனர் சங்கரன் வீட்டுக்குப் போன் பண்ணி நிலைமையைச் சொன்னேன். அவர் இல்லை. மிஸஸ் சங்கரன் ரொம்ப அனுதாபத்துடன் தங்கள் காரை அனுப்புவதாகச் சொன்னார்கள். துணைக்கு நானும் வருகிறேன்.''

விடிகாலையில் கார் மதுரை நகரை அடைந்து, எட்டாவது மைலில் இருந்த வானமாமலையின் கிராமத்தில் நுழைந்தது.

கர்நாடகமான அந்தப் பெரும் மாளிகையின் வாசலில் எந்தவிதக் கூட்டத்தையும் காணவில்லையே?

வாசல் புறத்தில் தண்ணீர் விட்டுக் கழுவிக் கொண்டிருந்த வேலைக்காரர்கள் காரில் வந்திருப்பவர்கள் யாரென உடனே கண்டுகொண்டு விட்டார்கள்.

மரியாதையுடன் காரின் அருகில் வந்து, ''இந்நேரம் வரை காத்துக்கிட்டிருந்தாங்க உங்களுக்காக. இப்பத்தான் எடுத்துக்கிட்டுப் போறாங்க'' என்றான் ஒரு வேலைக்காரன்.



முன்புறக் கதவைத் திறந்தான் மணி: ''ஏறிக்கொள். எங்களுக்கு வழி தெரியாது.''

மயானத்தை நோக்கிக் கார் பறந்து கொண்டிருந்தது.

பருவமடைந்த யுவதியான பிறகு சத்யா ராதாவை முதன் முதலாகச் சந்தித்தது அந்த இடத்திலேதான்.

## ஆறு

சத்யாவின் பின்னால் யாரோ இரண்டு பேர் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''தானாடாவிட்டாலும் சதையாடும் என்பார்களே, அதுகூடத் தப்பாகி விட்டது! ராதாவைப் பார்த்தீர்களா? கண்ணிலே ஒரு சொட்டுத் தண்ணீர் காணோம் சார். கல் மனசு!''

''ஒருத்தொருத்தர் ஓரோர் விதம். சில பேர் வெளிப்படையாகத் துக்கத்தைக் காட்டிக் கொள்ள மாட்டார்கள். இவனும் அப்படியோ என்னவோ?''

''நீங்கள் ஒண்ணு! இவனைத் தெரியாதா? இருந்த காலம் பூரா ஒட்டுதல் கிடையாது அப்போவோட. இப்போது மட்டும் துக்கம் எப்படி வரும்?''

''ஆமாம், ஆமாம்.''

''சும்மா சொல்லவில்லை. நேற்றிலிருந்து கவனித்து விட்டுச் சொல்கிறேனாக்கும்! ஒரு சொட்டுக் கண்ணீர் விடணுமே! ஊஹூம். ஒரு விக்கல்? ஒரு விம்மல்? கிடையாது சார்.''

''அடக்கிக் கொண்டிருக்கிறானோ என்னவோ... ஆனால் பெற்ற தகப்பனாருக்குக் கொள்ளி வைக்கிற போதுகூட அழாத பிள்ளை என்ன பிள்ளை ஐயா!''

மயானக் கூட்டத்தின் நடுவே அம்மாவின் கையைப் பிடித்தவாறு நின்றிருந்த சத்யா மெல்ல அவர்கள் சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கும் திசையை நோக்கினாள். ராதா தான். அவனைப் பற்றித்தான் பேசுகிறார்கள்.

அவர்கள் பேசியது உண்மைதான். வந்தபோதே அதைக் கவனித்து விட்டாள் அவள். துக்கத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று பதைத்தோடி வந்தவளுக்கு, துக்கத்தையே காணா விட்டால்...? ஏமாற்றமும் அதிர்ச்சியும் கொண்டாள் சத்யா. அதை மற்றவர்களும் உணர்ந்திருக்கிறார்கள் என்று அறிந்ததும், ராதாவை நேரில் கண்டு புத்தி சொல்ல அவா ஏற்பட்டது.

புரோகிதர் எதற்காகவோ காத்துக் கொண்டிருந்த தால் மேடையை ஒட்டிய சிறு திண்ணையில் ராதா அலட்சியமாகச் சாய்ந்து உட்கார்ந்திருந்தான். ஒரு கரிக் கட்டியைக் கொண்டு தரையில் கிறுக்கிக் கொண்டிருந்தது அவன் கை.

காரியஸ்தர்போல் தோற்றமளித்த ஒருவர் குறுக்கும் நெடுக்கும் ஓடுவதும், நடுநடுவே சிதையின் பக்கம் நின்று விம்முவதுமாக இருந்தார். பெண் பிள்ளைகள் பலர், சிதைக்கு அருகே கும்பலாக உட்கார்ந்து ஓவென்று கூக்குரலிட்டுக் கொண்டிருந்தார்கள். இறந்தவரின் மாட்டுப் பண்ணையில் இருக்கிற பெண்கள் போலும்.

காரை விட்டிறங்கிய மீனலோசனி இத்தனையையும் கண்டு விக்கித்துப்போய், ராதாவைக் கட்டிக்கொண்டு குலுங்கக் குலுங்க அழுதாள்.

"பழம் பாக்கு மாற்றிக் கொள்ள இருந்தோமே அண்ணா! இப்படி வாய்க்கரிசி போடவா நான் வர வேண்டும்?" என்று அம்மா கதறியபோது சத்யாவுக்கும் அழுகை வெடித்துக் கொண்டு வந்தது.

எந்த நேரத்திலும், எந்தச் சூழ்நிலையிலும் மணியின் திறமை கை கொடுக்கும். இப்போது அவன், காரியஸ்



தருக்கு அருகில் சென்று சில்லறைகளை எண்ணுவதில் உதவி செய்யலானான்.

ராதாவின் பரந்த மார்பும் உயர்ந்த தோள்களும் ஈரம் உலராமல் பளபளத்துக் கொண்டிருந்தன. துவட்டப் பட்ட கேசம் சிலுப்பிக் கொண்டு நின்றது. பாதி காய்ந்தும் பாதி நனைந்துமிருந்த வேட்டியின் குறுக்கே, இடுப்பைச் சுற்றி ஒரு துண்டைக் கட்டி, வயிற்றின் நடுவே முடியிட்டிருந்தான். ஈர வேட்டியுடன் கரிமண்ணில் உட்கார்ந்ததால் திட்டுத் திட்டாகக் கறுப்புக் கறைகள் ஏற்பட்டிருந்தன. ஒரு கையிலே சிறிய பித்தளைச் செம்பும், மறு கையிலே டம்ளரையும் பிடித்தபடி நின்றிருந்தான் அவன்.

மாமாவின் முகத்தைத் தவிர்த்து மற்ற பகுதிகள் மூடப்பட்டுவிட்டன. நடு மார்பிலிருந்து தீ புகைந்து கொண்டிருந்தது. முகமெல்லாம் அரிசி சிந்திக் கிடந்தது. கீழே கால் வைக்குமிடமெல்லாம் ஈரத்தைத் தவிர வேறில்லை.

சத்யா, புடைவையின் தலைப்பினால் வாயைப் பொத்திக் கொண்டு நின்றாள். இந்த ஆஜானுபாகுவான மனிதர்... 'குட்டி, குட்டி' என்று முன்னொரு சமயம் அவளை விளித்த குரல்... கனமான நீண்ட கறுப்புச் சுருட்டு... புகை...

(மகாமகக் குளத்திலே ஸ்நானத்துக்குச் சென்றபோது அந்தச் சுருட்டு ஏந்திய கையைப் பிடித்துக் கொள்ளப் போனபோதும்... 'ஏ குட்டி! இந்தக் கையைப் பிடித்துக் கொள்' என்று சொல்லி மறு கையைக் காட்டி, சிரித்தாரே...... கூட்டத்தில் சுருட்டை எறிவதற்குக்கூட இடமில்லாமல் காலடியிலேயே அதைப் போட, தான் அதை மிதித்துவிட்டுத் துடிக்க, அந்தச் சின்னஞ்சிறு பாதத்தை அவரது முரட்டுக் கரத்தால் பிடித்து 'பூ......' என்று வாயால் ஊதினார்......)

''அப்படி, தலைமாட்டிலே உட்கார்ந்து மந்திரங்களைச் சொல்லப்பா,'' என்று புரோகிதர் குரல் கொடுத்தார்.

அப்போதுதான் யாரோ இரண்டு பேர் உரையாடிக் கொண்டிருப்பது— ராதா அழாமலேயிருப்பதைப் பற்றிய பேச்சு சத்யாவின் செவியில் விழுந்தது.

அவள் ராதாவை நோக்கி ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தபோது புரோகிதர் ''கிணற்றடியில் ஸ்நானம் செய்யப்பா. போ. அதோ இருக்கிறது கிணறு. யாராவது தண்ணீர் இழுத்து விடுங்கள்,'' என்று உரக்கக் கட்டளைகளிடுவதைக் கேட்டாள். தனியே ராதாவைச் சந்திக்க அதுவே சரியான சந்தர்ப்பமாகப் பட்டது.

கிணற்றடியை அவள் அடைந்தபோது ராதா மட்டுமே தனியாக நின்றிருந்தான்.

தாம்புக் கயிற்றில் குடத்தை மாட்டியவாறு என்ன பேசுவது, எப்படிப் பேசுவது என்று தெரியாமல் தயங்கினாள் சத்யா.

இரண்டு கைகளையும் சிரத்தின் மீது வைத்துக் கொண்டு குந்தினாற்போல் உட்கார்ந்தான் ராதா. ''கார் ரொம்பப் பழசாய் இருக்கிறதே! மக்கர் செய்யாமல் வந்ததா?'' என்றான்.

என்ன விநோதமான கேள்வி! அதுவும் எத்தனை பொருத்தமற்ற சந்தர்ப்பத்தில்!

''ஒன்றும் பண்ணவில்லை,'' என்று எப்படியோ சமாளித்துக் கொண்டு சத்யா பதிலளித்தாள். பின்னர் மெல்லக் கிணற்றிலிருந்து தண்ணீரை இழுத்து அவன் தலைமீது ஊற்றினாள்.

''ஸ்! மெதுவாய்! இவ்வளவு சில்லென்றிருக்கிறதே!''

குளிர்ந்த நீரில் வெடவெடக்கும் அவனுடைய சிவந்த மேனியையும், வெய்யில் பட்டு மினுமினுக்கும் நனைந்த தலையையும் கண்டபோது, சத்யாவின் மனத்தில் அவன்



மீது அளவற்ற இரக்கம் ஏற்பட்டது. நீர் படாத நிலம் பாறையாக ஆவதுமாதிரி, அன்பு காட்டப்படாததாலேயே அவனுள் முரட்டுத்தனம் ஏறியிருக்குமோ என்று எண்ணினாள். சற்றுமுன் கேட்ட பேச்சு நினைவில் சுழன்றது.

''சொல்கிறேன்னு கோபிக்க மாட்டீர்களே?''

அவன் வியப்புடன் நிமிர்ந்து அவளை நோக்கினான். ''என்ன சொல்லப் போகிறாய்?''

''உங்கள் அப்பா இறந்து போனதற்கு நீங்கள் அழவேயில்லையாமே? ரொம்பக் கல் மனசாம் உங்களுக்கு,'' என்றாள் மெதுவாக.

தலையைத் துவட்டிக் கொண்டிருந்தவன் நிமிர்ந்து அவளைப் பார்த்தான். அவன் உதட்டில்—

தூக்கிவாரிப் போட்டது சத்யாவுக்கு; அவன் உதட்டில் தெரிவது, சினமல்ல, வருத்தமல்ல, சிரிப்பு! ஆமாம். சிரிப்பு!

பயத்துடன் அண்டை அசலைக் கவனித்தாள். நல்ல வேளை யாரும் அவர்களைப் பார்க்கவில்லை.

''பெண் பிள்ளைதான் ஒப்பாரி வைப்பாள். நான் வேண்டுமானால் சிரிக்கிறேன். சிரிக்கட்டுமா?'' என்றான் ராதா.

சத்யா பயந்து போனாள்.

''ஐயையோ! வேண்டாம், வேண்டாம்! அந்த மாதிரி எதுவும் செய்து வைக்காதீர்கள்! தெரியாமல் சொல்லி விட்டேன்!'' என்று பதறியவள், நாணத்தால் முகம் சிவந்தாள். (தன்னை மறந்து அவன் கைகளையல்லவா பிடித்துக் கொண்டுவிட்டாள்!)

ஆனால் ராதாவின் இகழ்ச்சிப் புன்னகை அவ்வளவு விரைவில் மறையவில்லை. துவாலையினால் திரும்பவும் உடம்பைத் துடைத்துக் கொண்டான். நச்சென்று ஒரு தும்மல்.

''மகாமகக் குளத்திலேதான் கடைசியாய்ப் பச்சைத் தண்ணீரில் குளித்தேன்,'' என்றான் அவளையே உற்றுப் பார்த்தவண்ணம்.

சத்யாவின் உள்ளத்தில் நெகிழ்ச்சி பிறந்தது. ஆக, அந்த முதல் சந்திப்பை அவனும் மறக்கவில்லை வேண்டு மென்றேதான் அதை நினைவூட்டுகிறான்......

மீனலோசனி, புரோகிதருடன் அவர்களை நெருங்கி வந்தாள். ''என்னப்பா ராதா, ஜலிப்பா? அப்படியானால் அதிக நேரம் கிணற்றடியில் நிற்கவேண்டாம்,'' என்றவள் ''கொஞ்சம் சீக்கிரமாகவே முடிச்சிடுங்க,'' என்று புரோகி தரையும் வேண்டிக் கொண்டாள்.

அரை மணியில் எல்லாச் சடங்குகளும் முடிந்து விட்டன. கூட்டம் கலைந்தது.

சத்யா அம்மாவுடன் காரை நோக்கி விரைந்தாள். அவள் உள்ளத்தில் சிறிது ஏமாற்றம் தலைதூக்கியிருந்தது. மணி, காரியஸ்தர் ஆகியோருடன் ராதா வேறொரு காரில் போய்விட்டான். பின்னால் கட்டை வண்டிகளில் பண்ணையாட்கள் வந்து கொண்டிருந்தார்கள். வெட்டியானுக்கும் வேறு சில ஏழைகளுக்கும் ஒருவர் சில்லறைகள் வழங்கிக் கொண்டிருந்தார்.

சத்யாவின் கார், ஒரு சிறிய கடைத்தெரு வழியாகச் சென்று கொண்டிருந்தது.

''கொஞ்சம் நிறுத்தப்பா,'' என்று இறங்கிய சத்யா அருகிலிருந்த கடைக்குச் சென்று சில நிமிடங்களில் திரும்பி வந்தாள்.

வானமாமலையின் மாளிகையை அவள் திரும்ப அடைந்தபோது அங்கே ராதா இல்லை. பல்வேறு அறைகள் வழியாகவும் கூடங்கள் ஊடேயும் அவள் சஞ்சரித்தாள். யார் யாரோ கிராமத்து ஆட்கள் கண்ணில் பட்டார்களே தவிர ராதாவைக் காணவில்லை. தோட்டத் தில் சென்று தேடினாள். அங்கும் காணோம்.



''என்னம்மா பார்க்கிறீங்க?'' என்று தோட்டக்காரன் பணிவோடு கேட்டான்.

பயானத்தில் அவளைப் பார்த்தது நினைவிருந்ததால், ''சின்ன ஐயா, அப்பா ஜலதோஷத்திலே அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். அவருக்காக வாங்கி வந்தேன்,'' என்று கையிலிருந்த மாத்திரைகளைக் காட்டினாள்.

தோட்டக்காரன், ''சின்ன ஐயா ரூமுக்குப் போய் விட்டாருங்க,'' என்றான்.

''நான் எல்லா ரூமையும் பார்த்தேனே? எந்த அறை? கொஞ்சம் காட்டு,'' என்றாள் சத்யா.

தோட்டக்காரன் சொல்லுமுன் வேறொரு வேலைக்காரன் குரல் கேட்டது:

''அது இங்கே இல்லீங்க... வந்து...''

இரண்டு பணியாட்களும் அவளுக்குப் பதில் கூறாமலே போய்விட்டார்கள்.

சத்யா திகைப்படைந்தாள். இதிலே என்ன மர்மம்? ராதா எங்கேயிருக்கிறான் என்று சொல்வதிலே என்ன இத்தனை தயக்கம் இவர்களுக்கு?...

''ராதாவைத் தேடுகிறீர்களா?'' என்று கேட்டுக் கொண்டே மணி வந்தான்.

''ஆமாம்... அவரைக் காணவில்லையே!''

''உங்கள் குடும்ப விவகாரத்தில் நான் தலையிடக் கூடாது,'' என்று மணி ஆரம்பித்தான். ''நீங்கள் தேடினீர் களே என்பதால் சொல்கிறேன். மிஸ்டர் ராதா இந்த வீட்டில் தகப்பனாரோடு வசித்ததேயில்லையாம். மதுரை யிலே ஒரு தனி வீடு எடுத்துக்கொண்டு, சாப்பாடு, உறக்கம் எல்லாம் தனியே வைத்துக்கொண்டிருக்கிறாராம். காரியங்கள் முடிந்ததும் நேரே அங்கே போய்விட்டார். இரண்டாம் நாள் காரியங்களுக்காக நாளைக் காலை வருவதாகச் சொல்லி விட்டுத்தான் போனார்.''

அவளால் நம்ப முடியவில்லை. ஆனால் உண்மை!

மூடிய உள்ளங்கையின் வியர்வையில் ஜலதோஷ மாத்திரை கசகசத்தது. சலிப்புடன் அதைத் தூர எறிந்து விட்டு, சமையலறையில் இருந்த அம்மாவுடன் சேர்ந்து கொண்டாள் சத்யா.

"எங்கேயடி போய்விட்டாய் நீ பாட்டுக்கு?" மீனலோசனி பரபரவென்று தன் முந்தானையைப் பிரித்தாள். "இந்தா, இதை முதலில் வாங்கி வைத்துக் கொள்."

சத்யாவின் கண்கள் அகல விரிந்தன. அத்தனையும் ரூபாய் நோட்டுக் கற்றைகள்!

"என்னம்மா இது?"

"பத்து நாள் காரியங்கள் நடக்க வேண்டாம்? காரியஸ்தர், ராதாவிடம் இந்தப் பணத்தைக் கொடுத்தாராம். 'எனக்கொன்றும் தெரியாது. பட்டணத்தி லிருந்து சத்யா வந்திருக்கிறது. அதனிடம் கொடுங்கள். அது என்ன சொல்கிறதோ அதன்படி செலவு பண்ணுங்கள்' என்றானாம் அவன். காரியஸ்தர் உன்னைக் காணாமல் என்னண்டை கொடுத்துவிட்டுப் போய் விட்டார். பிடி, பிடி."

அந்தக் கரென்ஸி நோட்டுக்களை ஒவ்வொன்றாய்த் தன் புடைவைத் தலைப்பில் எடுத்துப் போட்டுக்கொண்ட போது சத்யாவின் நெஞ்சில் எதுவோ கரிக்கிறமாதிரி இருந்தது. இந்த வீட்டுப் படியை மிதித்து சில நிமிடங் களுக்குள்ளேயே, எஜமானியின் அந்தஸ்தைத் தந்து விட்டாரே ராதா!

காரியஸ்தருடன் வந்த மணி, "இரும்பு அலமாரியின் சாவியையும் கொடுங்கள். பணத்தை அவர்கள் எங்கே வைப்பார்கள்?" என்றான்.

காரியஸ்தர் சாவியை மணியிடம் தந்துவிட்டு, "அப்போ... அந்தப் புடைவை விஷயம்..." என்று இழுத்தார்.



"அதுதான் சொன்னேனே. வழக்கப்படியே செய்து விடுங்கள்," என்று மணி பதில் கூற, காரியஸ்தர் திரும்பினார்.

"கொஞ்சம் நில்லுங்கள். என்ன விஷயம்?" என்று அவரைத் தடுத்துக் கேட்டாள் சத்யா.

"ஒன்றுமில்லை...பத்தாம் நாள் காரியங்களின்போது பண்ணைப் பெண்டுகளுக்குப் புடைவை வாங்கித் தருவது வழக்கம்... அதைப் பற்றிக் கேட்டேன். செய்யலாம் என்று ஐயா உத்தரவு கொடுத்துவிட்டார்," என்றார் காரியஸ்தர்.

சத்யா விடவில்லை. "எவ்வளவு பேருக்கு வாங்கப் போகிறீர்கள்? எத்தனை ரூபாயில்?"

மணி குறுக்கிட்டான்: "மொத்தமாகவே ஆர்டர் கொடுத்தாகிவிட்டது."

"எவ்வளவு பணம் ஆயிற்று?"

"இருநூற்றைம்பது பேர் போல இருக்கிறார்கள். பதினைந்து ரூபாய்ப் புடைவையாவது வாங்கினால்தான் கௌரவமாயிருக்கும்" என்றான் மணி.

"அதாவது, சுமார் நாலாயிரம் ரூபாய்ச் செலவை அவ்வளவு சுலபமாய் நீங்களாகவே முடித்து விட்டீர்கள். அப்படித்தானே?" சத்யா காரியஸ்தர் பக்கம் திரும்பி னாள். "யாரிடமோ ஆர்டர் கொடுத்துவிட்டதாகச் சொல்கிறாரே? அதைப் போய் முதல் வேலையாகக் கான்ஸல் செய்துவிட்டு வாருங்கள்."

மீனலோசனி, "ஏண்டி பெண்ணே, வழக்கமென்கிற காரியத்தைத் தடுப்பானேன்?" என்றாள்.

"நீ சும்மா இரு அம்மா. மணியும் நாமும்தான் இங்கே எஜமானரா என்ன? அதிகாரமுள்ளவர் சொல்லட்டும், இவர்கள் செய்யட்டும். நாளைக்கு அத்தானை நானே கேட்டுச் சொல்கிறேன்," என்றாள் சத்யா.

"சரியம்மா," என்று காரியஸ்தர் திரும்பிப் போய் விட்டார். அடிபட்ட புலியின் ரோஷத்துடன் முகம்

ஜில்லென்று சிவந்து காண மணியும் அகன்று விட்டான். மேஜைமீது டங்கென்று அவன் வைத்துவிட்டுப் போன இரும்பு அலமாரியின் சாவியை எடுத்துக்கொண்டு மாடிப் படிகளில் ஏறினாள் சத்யா.

பழைய பாணியில் காணப்பட்ட நரை விரிப்புகள், விளக்குகள், சித்திரங்கள், கண்ணாடிச் சரங்கள் ஆகிய வற்றைப் பார்த்தவாறு நடந்தபோது அவள் மனத்தில் பல வகையான உணர்ச்சிகள் மோதிக் கொண்டிருந்தன. இத்தப் பரந்த மாளிகையைக் கட்டி வளர்த்துக் காப்பாற்றிய மனிதரை நினைக்கையில் அவளுக்கு மரியாதையும் பயபக்தியும் ஏற்பட்டன. இவையெல்லா வற்றையும் இனிமேல் நாமல்லவா போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்றெண்ணியதும் பொறுப்பின் கனத்தினால் அவள் நடை துவண்டது.

மறுநாள் பொழுது விடிந்தபோது, தன் தந்தை இன்னும் வந்து சேரவில்லை என்பதை அறிந்தாள் சத்யா. ஆனால் அதைவிடக் கவலை அளித்தது வேறொன்று.

''காரியத்துக்குப் போகணுமே! இன்னும் ராதாவைக் காணலியே!'' என்று சொன்னவாறு வாசலுக்கும் உள்ளுக்குமாய் நடந்து கொண்டிருந்தார் புரோகிதர்.

காரியஸ்தர் வந்து, ''புடைவைக்காரர் காத்துக் கொண்டிருக்கிறார். இன்று சொல்வதாகச் சொன்னீர் களே'' என்று நினைவூட்டினார்.

''டெல்லிக்குத் தந்தி கொடுத்தேன். பதில் வந்தது. பிளேன் கிடைக்கவில்லையாம். அனேகமாய் நாளைக்குத் தான் சார் வருவார்கள்,'' என்றான் மணி.

மீனலோசனி, ''என் சத்யா, யாரோ தூரத்து உறவுக் காரர்களாம். எனக்கு யாரென்றே தெரியவில்லையம்மா. வந்திருக்கிறார்கள். என்ன செய்வது அவர்களை?'' என்று யோசனை கேட்டாள்.



''புடைவைக்காரரைச் சாயந்தரமாக வரச்சொல்லுங் கள்'' என்று காரியஸ்தரிடம் கூறிவிட்டு, 'தூரத்து' உறவினர்களுக்கு ஜாகை வசதி செய்து தந்த பிறகு, மதுரைக்குப் போய் அப்பாவுக்கு டிரங்க்கால் போட்டு விசாரிக்குமாறு மணிக்கு உத்தரவிட்டாள். அதற்குள் புரோகிதர், ''நேரமாகிறது. ராதா வராவிட்டால் பரவா யில்லை. நானே போய்ச் செய்து விடுகிறேன்'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

அன்றைய பகல் பொழுது ஊர்ந்து, மாலை நெருங்கியது. அப்போதும் ராதாவைக் காணோம்.

தோட்டக்காரனைக் கூப்பிட்டு, ''சின்ன எஜமானரின் மதுரை விலாசம் நினைவு வந்ததா?'' என்று கேட்டாள்.

தோட்டக்காரனின் விழியிலே மிரட்சி தெரிந்தது. ''இல்லீங்க...... அப்பாலே விசாரிச்சேன். புதிசா வேறே இடத்துக்குப் போயிட்டாராம்'' என்றான்.

சத்யா பல்லைக் கடித்துக்கொண்டு ஒரு நிமிடம் யோசனை செய்தாள். பிறகு மனத்துக்குள் ஒரு முடிவுக்கு வந்தவளாக கையில் பர்சை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள்.

வாசலில் இரண்டு கார்கள் இருந்தன. ஆனால் தான் வெளியே செல்வதை யாருக்கும் தெரிவிக்க விருப்பமில்லாத தால், நடையிலேயே கிளம்பினாள்.

மதுரை.

ஒரு போக்குவரத்துக் கான்ஸ்டபிளை அணுகி, சத்யா விசாரித்தாள்.

''அமெரிக்கன் கல்லூரிக்கு எந்தப் பக்கம் போக வேண்டும்?''

''தல்லாகுளம் போகணும் அம்மா. அதோ அந்த பஸ்ஸைப் பிடியுங்கள்'' என்று வழி காட்டினார் கான்ஸ்டபிள்.

சத்யா பஸ் ஏறி, கண்டக்டரிடம் இடம் கேட்டு இறங்கிக் கொண்டாள்.

காரைக்குடி— தேவகோட்டை செல்லும் விஸ்தாரமான ரஸ்தா, மாலை வேளையின் நெருக்கடியில் கலகலத்துக்கொண்டிருந்தது. பிரமாண்டமான வகுப்பறைகளும், நீளநீளமான ஹால்களும் நிறைந்த குட்டையான நீளமான அமெரிக்கன் கல்லூரிக் கட்டடத்தைப் பார்த்து பிரமித்து நின்றிருந்தாள் சத்யா. உள்ளே நுழையத் தயக்கம் ஏற்பட்டது.

''என்னம்மா ராணி, இன்னும் எத்தனை நேரம் காத்திட்டு இருக்கப் போகிறே?''

''கொஞ்சம் பொறுங்க, மாமா! காலேஜ் விடுகிற நேரம்தான். இவ்வளவு தூரம் வந்துவிட்டு, நம்ம ராதாவைப் பார்க்காமல் போகலாமா?''

யார் அது? ராதாவின் பெயரை அவ்வளவு உரிமையுடன் சொல்கிறவள் யார்? சத்யா திரும்பிப் பார்த்தாள்

நல்ல உயரமும் உயரத்துக்கேற்ற பருமனும் கொண்ட பெண்ணொருத்தி, லிப்ஸ்டிக் பூசிய உதட்டினால் நாணமற்ற சிரிப்பை வெளிப்படுத்திக் கொண்டிருந்தாள். மை தீட்டிய புருவத்தின் நடுவே கலர்க் குங்குமம் பளிச்சிட்டது. மதறாஸ் நாகரிகங்கள் பிச்சை வாங்கும் ஒய்யாரக் கொண்டை போட்டிருந்த அவள், நைலானில் இத்தனை மெல்லியதும் இருக்கிறதா என்று வியக்கும் படியான புடைவையை அணிந்திருந்தாள். அவள் ஜாக்கெட்டை இறுகக் கட்டியிருந்த விதம் சத்யாவைக் கூசச் செய்தது.

அவளுக்குப் பக்கத்தில் வெற்றிலை குதப்பிய வாயுடன் சில்க் ஜிப்பாக்காரர் ஒருவர் காட்சியளித்தார்.

# ஏழு

ராணி!

அவளையும் அவள் அலங்காரத்தையும் இரண்டாம் தடவை ஏறிட்டு நோக்கக்கூட சத்யாவின் கண்கள் கூசின.

அவளும் ராதாவைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறாள்! தானும் தேடிக்கொண்டு வந்திருக்கிறோம். அவமானத்தினால் சத்யாவின் உடம்பு ஒரு சாணாகக் குறுகியது.

காதல் என்ற புதுமையான உணர்ச்சியை நுகரத் தொடங்கிய முதல் கட்டத்திலேயே இத்தனை பெரிய அடியா! அவளால் தாங்க முடியவில்லை. ராதா என்ற பெயரை மனத்தினால் நினைக்கும்போதுகூட, சினத்தினால் அவள் கண்கள் சிவந்தன.

''ரிக்ஷா வேணுமாம்மா?'' என்று ஒருவன் கூப்பிட்டான், சத்யா அமெரிக்கன் கல்லூரியை விட்டு வெளியேறும் வேகத்தைப் பார்த்து. சத்யாவின் காதில் அது விழவில்லை.

''ரிக்ஷாம்மா.''

இரண்டாம் முறை அவளை நெருங்கி வந்து கேட்டான். தலையைத் திருப்பி அவள் முறைத்த முறைப்பில், அந்த ஏழை ரிக்ஷாக்காரன் காளியின் ஆவேசத்தைக் கண்டானோ என்னவோ, தடாலென்று திருப்பிக்கொண்டு ஓடியே விட்டான்.

விஷயம் தெரியாத இன்னொரு வழிப்போக்கர், ''மணி என்னம்மா இருக்கும்?'' என்று கேட்டுவிட்டு, சத்யா பதில் சொல்லாமலே நடப்பதைக் கண்டதும் ''இந்தக் காலத்துப் பெண்களுக்கு என்ன கர்வமடாப்பா!'' என்று முணுமுணுத்தார்.

அந்த 'ராணியம்மா' தேடிக்கொண்டு வந்தது, வேறு ஏதாவதொரு ராதாவாக இருந்திருக்கலாமோ என்ற சந்தேகம் சத்யாவின் மனத்தின் ஒரு மூலையில் இருந்தது

உண்மையே. ஆனால் அது கடும் ஜுரத்திலே மடியும் கிருமியைப் போல அழிந்தொழிந்து விட்டது.

கல்லூரி விட்டாயிற்றென்பதும், மாணவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள் என்பதும் அவளைத் தாண்டிச் செல்லும் சைக்கிள்களிலிருந்தும் கடலோசை போல் கேட்கும் இரைச்சலிலிருந்தும் தெரிந்தது. எவ்வளவுக்கெவ்வளவு மாணவர் கூட்டம் அதிகமாக வந்து கொண்டிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு சத்யாவின் நடையில் விசை ஏறிற்று.

எந்த ராதாவைச் சந்திக்க வேண்டுமென்று ஆசையுடன் வந்தாளோ, அவனுடைய மூச்சுக்காற்றுக்கூடத் தன்மீது பட்டு விடக்கூடாது என்று இப்போது அவள் அஞ்சினாள். ஏதாவதொரு பயங்கரமான காட்சியைத் தன் கண்ணாலேயே காண நேரிட்டு விடும் என்று அவளுக்குத் தேகம் பதறியது. என்ன காட்சி? அவனை ராணி தொடுவாளா? கையைப் பிடித்துக் கொள்வாளா? 'இப்படிப் பாருங்களேன்' என்று கொஞ்சலாகச் சொல்லி அவன் கன்னத்தைத் தன் பக்கம் திருப்பிக் கொள்வாளா? அவன் தோள்மீது கைபோட்டு அணைத்து......

தூ, தூ!

உமிழ்ந்து, தைரியத்தையும் நிதானத்தையும் வரவழைத்துக் கொண்டாள் சத்யா.

ராதா என்பவன் யார்? எவனோ ஒருத்தன். நேற்றுக் காலை வரை வெறும் எண்ணத்திலே உலவி வந்த உருவம். அவன் எந்தக் காதலியோடு என்ன கொஞ்சினாலென்ன? அவனை என்னவோ தனக்கு உரியவன் என்று வரித்துக் கொண்டு வேதனைப்படுவானேன்? மற, மற, மற.

முகத்தில் பறந்து விழுந்து கொண்டிருந்த கேசச் சுருள்களை உள்ளங்கையால் அழுத்திப் படிய விட்டுக்கொண்டு சத்யா நின்றாள். புடைவையைச் சீர்செய்து கொண்டாள். தான் நிதானமடைந்த பிறகு, உலகமும் அமைதியாக ஒழுங்காக இயங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது. மதுரை நகரத்தின் மாலை நேரக் கோலாகலங்களில் சில நிமிடங்கள் மனத்தைப் பறி கொடுத்து நின்றாள். இருட்டிக் கொண்டிருந்தது. வெகு வெகு தூரத்தில், ஒரு கோபுர விளக்கு மினுமினுக்கத் தொடங்கியிருந்தது. திராட்சைக் கொத்து மாதிரி, முன்னும் பின்னும் மேலும் கீழும் இந்தண்டையும் அந்தண்டையாகக் கடைகளும் வீடுகளும் அடர்ந்து நெருங்கி உறவாடின.



குழப்பங்களையும் கவலைகளையும் ஒதுக்கி வைத்து விட்டு, எந்த பஸ்ஸில் எப்படி எங்கே ஏறினால் வானமாமலையின் கிராமத்தை அடையலாம் என்று யோசித்தவளாகச் சிறிது நின்றாள்.

எதை மறக்க நினைத்தாளோ அது மீண்டும் அவள் பார்வையில் மோதியது.

ஒரு சுவரொட்டி.

மிக அருகிலிருந்த ஒரு காம்பவுண்டுச் சுவரில், ஒரு நாடகத்தை அறிவித்துக் கொண்டிருந்தது அந்த வண்ணச் சுவரொட்டி.

நாடகத்தின் பெயரோ, தேதியோ, இடமோ, கட்டண விவரமோ சத்யாவின் கவனத்தை ஈர்க்கவில்லை. காகிதத்தின் நடுவே, மயக்கும் புன்னகையுடன் காட்சி தந்த ராணியின் முகம்...அந்த மதர்ப்பான வனர்த்தி...

அருவருப்புடன், வலுக்கட்டாயமாக மறுபுறம் திருப்பிக் கொண்டாள் சத்யா. ஆகூ... ஊகித்தது சரிதான். இவள் நடிகை... நாடக நடிகை...!

''டிராமா இன்றைக்கல்ல; நாளைக்குத்தான்,'' என்ற குரல் கேட்டது.

மணி.

''சும்மாதான் பார்த்தேன்...... நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?'' பாதுகாப்பு கிடைத்ததில் அவளுக்கு உள்ளூர மகிழ்ச்சி ஏற்பட்டது.

''டிரங்க்கால் கிடைப்பதற்காகத் தபாலாபீஸில் பழி கிடந்தேன். நாளை சாயந்தரத்துக்குள் எப்படியும் இங்கே வந்து சேர்ந்து விடுவார் அப்பா,'' என்றான் மணி.

''சமயத்துக்கு வந்தீர்கள் நல்ல வேளையாய்,'' என்றாள் சத்யா. ''கிராமத்துக்கு எப்படித் திரும்புவது என்று யோசனை பண்ணிக் கொண்டிருந்தேன்.''

''அதுதானே பார்த்தேன்...... நான் பஸ்ஸில்தான் போய்க் கொண்டிருந்தேன்... உங்களைக் கண்டதும் சட்டென்று நிறுத்தச் சொல்லி இறங்கிக் கொண்டேன்... அதுதான் கடைசி பஸ் என்று சொன்னானே...''

மணி சொல்லிக் கொண்டிருந்தபோதே, சத்யா, ''அதோ ஒரு டாக்ஸி வருகிறது. டாக்ஸி!'' என்று கையையும் தட்டினாள்.

''இல்லை, இல்லை. அதிலே ஆள் இருக்கிறது,'' என்றான் மணி.

ஆனால் அவர்களைத் தாண்டிச் சில கெஜ தூரத்தில் கிறீச்சிட்டு நின்றது டாக்ஸி.

கதவைத் திறந்து கொண்டு இறங்கியவனைக் கண்டதும் சத்யாவுக்கு நிதானத்துக்கு வந்திருந்த ரத்தம் கொதிக்கத் தொடங்கியது.

''சத்யா! எதற்காக இந்த நேரத்தில் இங்கே நின்று கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டவண்ணம், உதட்டில் தொத்திக் கொண்டிருக்கும் சிகரெட்டுடன் டாக்ஸியிலிருந்து இறங்கி வந்தவன் ராதா தான்.

சத்யா மறுபுறம் திரும்பிக் கொண்டு, ''மணி, வேறு டாக்ஸி பாருங்கள்,'' என்றாள்.

மணி அவசரமாக, ''அதோ அந்தத் தியேட்டரண்டை போனால் நிறையக் கிடைக்கும். இங்கே நின்றால் வராது,'' என்றான்.

''ஓ. போவோமே.''



ராதா, சத்யாவிடம் பேசவில்லை. ''மிஸ்டர் மணி, நீங்கள் போய்ச் சேருங்கள். சத்யாவைப் பார்த்துக்கொள்ள எனக்குத் தெரியும்,'' என்றான் கடுமையான குரலில்.

மணி, ''எனக்கு ஓர் ஆட்சேபணையும் இல்லை. ஆனால் நான் சத்யாவின் அப்பாவுக்கு பர்சனல் செகரட்டரி. ஆகவே சத்யாவே சொல்கிறவரையில் அவருக்குக் காவலிருக்கக் கடமைப்பட்டவன்,'' என்றான்.

''நடு ரோட்டில் எதற்கு வீண் பேச்சு? நாம் போவோம்,'' என்று அடியெடுத்து வைத்தாள் சத்யா.

சட்டென குறுக்கே நின்றான் ராதா. ''போய் விடுவாயா? என்னைப் பார்த்துச் சொல். போய் விடுவாயா?''

டாக்ஸியோட்டியும் இப்போது கதவைத் திறந்து கொண்டு, தங்களை நோக்கி வருவதைக் கண்டாள் சத்யா.

''கண்டவர்களுடன் நீ ஊர் சுற்றுவதை நான் அனுமதிக்கப் போவதில்லை,'' என்று மறுபடி அழுத்தமாகச் சொல்லி, ராதா அந்த இடத்திலேயே அசையாமல் நின்றான்.

இப்போதுதான் சத்யாவின் உள்ளம் சமாதானமடைந்தது. குறைந்தபட்சம் ராதாவுக்குப் பொறாமை இருக்கிறது. வேறொருவனுடன் தனியே செல்வதை ஆட்சேபக்கிற அளவுக்குப் பொறாமை இருக்கிறது. அக்கறையும், ஆசையும் உள்ளபோதுதான் பொறாமை இருக்கும்...

''சரி. நீங்கள் போங்கள்,'' என்று அவன் விடை கொடுத்தபோது மணியின் ஏமாற்றம் அவன் முகத்தில் முத்திரையடித்த மாதிரி தெரிந்தது.

''அம்மா கவலைப்படுவார்கள்......'' என்று இழுத்தான்.

''அதைப்பற்றி நீ கவலைப்பட வேண்டாம். நான் வந்து சொல்லிக் கொள்கிறேன்,'' என்று ராதா பதிலளித்தான்.

இருட்டு.

இருட்டைப்போல மென்மையான, மதுரமான போர்வை கிடையாது. அதனுள்ளே ஆயிரம் ரகசியங்களைப் பரிமாறிக் கொள்ளலாம். பத்தாயிரம் அந்தரங்கங்களைப் பகிர்ந்து கொள்ளலாம்.

டாக்ஸியின் உட்புறத்து இருட்டு, சத்யாவின் இதயத்தில் கிளுகிளுப்பை ஏற்படுத்தியது. அருகிலே அமர்ந்துள்ள ராதாவின் ஒவ்வொரு சிறு அசைவும் ஓசையும் அவளுடைய ஆவலைக் கிண்டிக் கொண்டிருந்த அதே சமயம், ''யார் அந்த ஒய்யாரி ராணி! அவளுக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்?'' என்று உடைத்துக் கேட்டுவிட வேண்டுமென்ற படபடப்பும் தணியாமலே இருந்தது.

''இந்தா.''

சத்யாவின் உள்ளங்கையில் இரண்டு சிறு உருண்டைகள்...... காகிதம்...... விரல்களை நெருடிப் பார்த்தாள். சாக்லேட்டு.

''எப்போதும் பையில் வைத்திருப்பேன், உன்னைப் போன்ற உலகம் தெரியாத பாப்பாக்களுக்காக,'' என்றான் ராதா. சத்யாவின் உள்ளம், கடிவாளம் தளர்த்தப்பட்ட குதிரைபோல நெகிழ்ந்தது. 'எனக்கும் அதே பழக்கம் உண்டு' என்று சொல்ல வேண்டும்போல் இருந்தது. இருந்தாலும் அவ்வளவு சீக்கிரம் விட்டுக் கொடுத்துவிடக் கூடாது என்று எண்ணிக் கொண்டாள்.

''தலையணைக்கடியில் வைத்திருந்தேனே, எடுத்துக் கொண்டாயா?''

தன்னையும் மீறி சத்யா சிரித்துவிட்டாள். ''ஏதோ நேற்று நடந்த விஷயம் மாதிரி பேசுகிறீர்களே! அடுத்த மகாமகம் வரப்போகிறது!''



''வீட்டுக்குப் போனதும் எனக்கு மறுபடி 'நேற்றந்தி நேரத்திலே' அபிநயம் பிடித்துக் காட்ட வேண்டும்,'' என்றான் ராதா கிண்டல் சிரிப்புடன்.

சத்யா கேட்டாள். ''வீட்டுக்குத்தான் போகிறோமா இப்போது?''

''ஆமாம், பின்னே வேறெங்கே என்று நினைத்தாய்?''

நினைத்ததைச் சொல்ல நாக்கு வரை வந்துவிட்டது. அடக்கிக்கொண்டு, ''அதென்னவோ, எனக்கென்ன தெரியும்?'' என்றாள்.

''ஏய்! என்ன, என்னவோ நானும் பார்க்கிறேன், பொடி வைத்துப் பொடி வைத்துப் பேசுகிறாயே!'' அவள் மணிக்கட்டை விளையாட்டாக அவன் அழுத்திப் பிடித்ததும், சத்யாவுக்கு மெய் சிலிர்த்தது. பார்வை சுழன்றது. புத்தி கிறுகிறுத்தது. தனக்கும், அவனுக்கும், சரீரத்தாலோ மனத்தாலோ அல்லாமல் வேறேதோவொன்றினால் பிணைப்பு ஏற்பட்டிருப்பதாக நினைத்தாள். அது இப்போது மட்டுமல்ல, பல பல பிறவிகளாகத் தொடர்ந்து வந்திருப்பது போல் உணர்ந்தாள். அந்தக் கணத்திலேயே பொட்டென உயிரை விட்டுவிட்டால் அதைக் காட்டிலும் ஆனந்தமான அனுபவம் இருக்க முடியாதென்று எண்ணினாள்.

அவள் காதருகே ராதா பேசினான்: ''எவனோ ஒருத்தனுடன் நீ நின்று கொண்டிருப்பதைக் கண்டதும் எனக்கு என்ன கோபம் வந்தது தெரியுமா? போயும் போயும் அந்த அரை மீசையை எங்கே ஜோடி பிடித்தாய்?''

''தூத்தேறி! பேச்சைப் பார்!'' என்று முறுவலித்தாள் சத்யா. ''நானொன்றும் அவரோடு புறப்பட்டு வரவில்லை. நீங்கள் இன்று காலையிலிருந்து வரக் காணோமேயென்று உங்களைத்தான் தேடிக்கொண்டு புறப்பட்டேனாக்கும்!''

''அந்தப் புகையிலே நம்மாலே உயிர்விட முடியாது. புரோகிதருக்கு, கூட ஐந்து ரூபாய் கொடுத்தால் என் மந்திரத்தையெல்லாம் தானே சொல்லி விடுவார். பத்து ரூபாய் கொடுப்பதாகச் சொல். அப்பாவுக்குப் பதில் தானே சாகக்கூட முன் வருவார்!''

சத்யாவுக்கு என்னவோ போலிருந்தது. ''அது ஒரு பக்கமிருக்க, உங்கள் பண்ணையிலிருக்கிற பெண்களுக்குப் புடைவை வாங்கித் தரவேண்டுமாம். நாலாயிரம் ரூபாய் வரையில் செலவாகும். அதை எப்படி உங்களைக் கேட்காமல் செய்வது?''

''முதல் வேலையாய் அதைச் செய்,'' என்று தயங்காமல் சொன்னான் ராதா. ''நாலாயிரம் ரூபாய் என்றா சொன்னான்? அவர்கள் ரத்தத்தைச் சுண்ட வைத்து, உன் மாமா சேர்த்தது நாற்பது லட்சம் இருக்குமே!''

''இன்னும் எத்தனை மைல் போக வேண்டும் உங்கள் வீட்டுக்கு,'' என்று சத்யா பேச்சை மாற்றினாள்.

''இதோ,'' என்றான் ராதா. ''ரைட்டிலே திரும்பி நேராய்ப் போப்பா.''

டாக்ஸிக்காரனுக்கு ராதா நோட்டை வீசிக்கொண்டிருக்கையில், சத்யா முன்னே நுழைந்தாள் வீட்டுக்குள்.

சிறிய இல்லம். நடையிலும், அதையொட்டிய ஹாலிலும் நீலக் குழாய் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. உள்ளே யாராவது இருக்கிறார்களா என்ன?

படபடக்கும் மனத்துடன் மெதுவே 'கேட்'டைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தாள் சத்யா. நடையில் ஏழெட்டு ஜோடி காலணிகள் கிடந்தன. எல்லாம் ஒருவருடையவைதான். ஆனால் வெவ்வேறு சந்தர்ப்பங்களுக்காக ஏற்பட்டவை.

ஹாலில், சிறிது கர்னாடகமான சோபாக்களும் நாற்காலிகளும் இருந்தன. வட்ட மேசை மீதிருந்த



பூங்கொத்து வாடாததாக, புதிதாக இருந்தது. மேஜை மீதும் அலமாரியிலும் புத்தகங்கள் சுத்தமாய் அடுக்கப்பட்டிருந்தன. ஆனால் சுவரில் மாட்டியுள்ள படங்கள் ரசிக்கும்படி இல்லை. ஓரமாக இருந்த ஸ்டாண்டில், ஒரு தேங்காய்ப்பூத் துவாலை அழகாக மடித்து வைக்கப்பட்டிருந்தது. கீழே தரையில் குப்பையோ தூசியோ தெரியவில்லை.

சத்யாவுக்கு ஒரே அதிசயம். கட்டைப் பிரம்மசாரி— அதிலும் ஒன்றிக்கட்டைப் பிரம்மசாரி— குடியிருக்கும் இடம் இத்தனை சுத்தமாயும் துப்புரவாயும் இருக்குமென அவள் கொஞ்சம்கூட நினைக்கவில்லை. இதற்குக் காரணம் நிச்சயமாய் ராதாவாக இருக்க முடியாது.

பின்னாலேயே வந்து நின்றான் ராதா. ''என்ன சத்யா, பிரமித்துப் போய் நின்றுவிட்டாய்?''

''ஒன்றுமில்லை...... இவ்வளவு சுச்சிதமாய் வைத்துக் கொண்டிருக்கிறீர்களே என்று பார்த்தேன்.''

''என் சாமர்த்தியமென்ன இதிலே? எல்லாம் விசாலத்தின் வேலை.''

தூக்கிவாரிப் போட்டது சத்யாவுக்கு. ''என்ன.........விசாலமா?''

''ஆமாம்,'' என்று தடுமாறாமல் சொன்னவன், உள்ளே நுழைந்து, ''விசாலம்!'' என்று அழைத்தான்.

அடுத்த நிமிடம்—

திரைச் சீலையை விலக்கிக்கொண்டு, கையில் சாப்பாட்டுத் தூக்குடன் வெளிப்பட்டாள் ஒரு வேலைக்காரி.

சத்யாவின் உருவமில்லாத வேதனை அதிகரித்தது.

சுத்தமாய் உடையுடுத்தி, பளிச்சென்ற முகத்துடன், பூவும் புன்சிரிப்புமாய்க் காணப்பட்ட அந்த இள வயது வேலைக்காரிதான் இந்த வீட்டை...... ராதாவை...... கவனித்துக் கொள்கிறவளா?......

''விசாலம், யார் தெரிகிறதா இவங்க? என் அத்தை மகள் ரத்தினம்,'' என்று ராதா அறிமுகப்படுத்தியதும் அவள் புன்னகையுடன் கும்பிட்டாள்.

''போ. சீக்கிரம் சாப்பாடு எடுத்து வா. நாங்கள் வெளியே போகணும்.''

அவள் புறப்பட்டுச் சென்றாள். ஸ்லாக் சட்டையைக் களைந்து ஸ்டாண்டை நோக்கித் தூக்கியெறிந்தான் ராதா. அது, நோயாளிக் குழந்தை மாதிரி துவண்டு, ஸ்டாண்டில் நிற்காமல் நழுவிக் கீழே விழுந்தது.

சத்யா அதையெடுத்துத் திரும்ப மாட்டுவதற்கு எழுந்தாள்.

''சும்மா கிடக்கட்டும் விடு. விசாலம் வந்து எடுத்து வைப்பாள்,'' என்று சொன்னபடி பனியனையும் கழற்றி யெறிந்தான் ராதா. ''என் ஐடியாவை நீ பாராட்டுகிறா யில்லை?''

''என்ன ஐடியா!''

''ஆண் வேலைக்காரனாயிருந்தால் என்னைவிடச் சோம்பேறியாயிருப்பானே! பெண்ணென்றால்? வீட்டைப் பார்! என்ன ஜம்மென்று வைத்திருக்கிறாள்!'' பெருமிதத்துடன் கைவீசினான் ராதா.

''மதராசிலே இந்த மாதிரி வீட்டுக்கு முந்நூறு ரூபாயாவது வாடகை இருக்கும்.''

''ஹோவென்று பூதம் மாதிரி எதற்காகப் பங்களா? இந்த மாதிரிக் கறுக்கென்று இருப்பதுதான் எனக்குப் பிடிக்கும். நாம், தாம்பரம் வண்டலூர்ப் பக்கம் சின்ன வீடாகவே பிடிப்போம். என்ன?''

அவன், அவள் அமர்ந்திருந்த நாற்காலியின் இரண்டு கை மீதும் கைவைத்துக் குனிந்து கேட்டான்: ''என்ன சத்யா, பதிலைக் காணோம்?''



அவள் குரல் தழுதழுத்தது. ''நான் இன்னும் அந்த அளவுக்குக் கோட்டை கட்டவில்லை.''

''கோட்டை யார் கட்டச் சொன்னது? வீட்டைக் கட்டுவது பற்றியல்லவா கேட்டேன்!'' என்று ராதா சிரித்தான்.

சிரித்தபடியே இடதுபுறமிருந்த இன்னொரு திரைச் சீலையை விலக்கிக் கொண்டு புகுந்தான். ஆனால் மறுபடியும் சீலை மூடாதபடி அதைச் சுருட்டி, கதவின் மீது செருகினான். 'வாஷ் பேஸி'னும், கண்ணாடியும், அலங்கார சாதனங்களும், அது அவன் உடை மாற்றிக் கொள்ளும் அறை என்று பறைசாற்றின.

குழாயைத் திருப்பிவிட்டு, அதன் சளசளப்புக்கு மேலாகக் குரலை உயர்த்திக் கொண்டான் ராதா.

''நான் ஒரு புரோக்ராம் சொல்கிறேன்,'' என்று ஆரம்பித்தவன், ''கொஞ்சம் இரு.'' என்று வெளியே வந்தான். தன் காலை ஒரு நாற்காலிமீது வைத்து, பூட்ஸைக் கழற்றிப் போட்டான்.

''அதோ அந்த மேஜை கீழ் டிராயரில் இருக்கிறது பாலிஷ். நான் டிரஸ் மாற்றிக் கொள்வதற்குள் போட்டுவை.''

சத்யா அயர்ந்து போனாள். ''என்ன போட்டு விடுவது?''

''இதோ இருக்கிற பூட்சுக்குத்தான். வரும்போதே நினைத்தேன். மறந்து விட்டது. உனக்குத் தெரியா தென்றால் வேண்டாம்.''

சிற்றம் சத்யாவின் முகத்தைச் சிவக்க வைத்தது. ''எனக்குத் தெரியாது,'' என்றாள் அழுத்தமாக. அதென்ன, எதையும் இந்த சத்யா செய்வாள் என்று இவர் தீர்மானிப்பது? அதற்கு நாம் இடம் கொடுப்பது?

''பரவாயில்லை, விசாலம் செய்வாள்.'' என்றான் ராதா.

சத்யா பதில் கூறவில்லை. மௌனமாகப் பூட்ஸையும், பிரஷையும் கையில் எடுத்தாள்.

ஒருபுறம் அவளுக்கு அவமானமும் ஆத்திரமும் பொங்கி வந்தாலும், மறுபுறத்தில் ஏதோ ஒருவித ஆனந்தமும் கிளு கிளுப்பும் பிறந்தன அவள் உள்ளத்தில். சட்டையோ பனியனோ இல்லாமல், ஆண்மையும் இளமையும் நிரம்பி வழியும் உடலைக் காட்டியபடி, உலகத்திலே எதுவும் லட்சியமில்லை என்பதுபோல் மடமடவென்று தன் போக்கில் பேசுகின்ற இந்த இளைஞனிடம், தன்னில் ஒரு பகுதி சென்று சரணடைந்து விட்டதாகத் தோன்றியது. வந்தவளின் கையைக் கருமையாக்கிவிட்டு, தன் முகத்தைச் சுத்தப்படுத்திக் கொண்டிருக்கும் ராதாவை ஆசை தீரத் தீரப் பார்த்துக் கொண்டிருக்க ஒரு விருப்பமும், அதைத் தடுத்துத் தலைகுனிய வைக்கும் நாணமும் அவள் இதயத்தில் மாறிமாறி எழுந்தன.

முகத்தின் ஓரங்களில் சோப்பு வரிகளுடன் திரும்பினான் ராதா. பூட்சுகளைக் குனிந்து ஆராய்ந்து, "போதாது. இன்னும் கொஞ்சம் போடு." என்று சொல்லி விட்டு, இரும்புப் பீரோவைத் திறந்தான்.

கும்மென்று இனிய மணங்கள் அறையெங்கும் பரவின. உடைகளுக்கு மட்டுமல்லாமல், வாசனைக் குப்பிகளுக்கும் அந்த பீரோதான் அடைக்கலம் போலும்.

''மதுரைக்கு இதுதானே உனக்கு முதல் விசிட்?'' என்று ராதா வினவினான்.

''ஆமாம்.''

''நாளைக் காலை உன்னை ஓர் இடம் விடாமல் அழைத்துப் போய்க் காட்டுகிறேன்.''

சத்யாவின் கோபம் சிறிது தணிந்திருந்தது. ''தாங்க்ஸ், முக்கியமாய்க் கோவிலைப் பார்க்க வேண்டும்.''

''சட்! நீ என்ன கிழவியா, நான் என்ன தாத்தாவா?'' என்று முகத்தைச் சுளித்தான் ராதா. ''நம்மைப் போன்ற



வர்களுக்கும் இந்த ஊரில் நிறைய இடமிருக்கிறது. கார் அங்கேதானே இருக்கிறது? காரியஸ்தன் எங்கேயும் அனுப்பி விடவில்லையே?''

''உங்கள் காரைச் சொல்கிறீர்களா?''

''என் காரா?'' ராதாவின் முகத்தில் கசப்பான புன்னகை உதித்தது. ''ஆமாம். இனிமேல் என் கார் தான், கிழவன் உயிரோடு இருந்த வரையில் ரொம்பக் கஞ்சத்தனமாய்ப் போராடிக் கொண்டிருந்தான்; கூடவே சிதையிலா வைத்தார்கள் அதை!''

அவனுடைய பேச்சு நிமிடத்துக்கு நிமிடம் அதிர்ச்சி அளித்த போதிலும் சத்யா அதற்குப் பழக்கப்படுத்திக் கொண்டுவிட்டாள். பிறரை அதிர்ச்சிக்குள்ளாக்குவதே அவனுக்கு மகிழ்ச்சி என்றும் புரிந்து கொண்டுவிட்டாளாகையால், இறந்துபோன தகப்பனாரைப்பற்றி அவன் பேசியதற்கு எதிர்த்து வாதாடவில்லை.

உடைகளை அணிந்துகொண்டே இருந்தவன் திடீரென அவளெதிரில் வந்து நின்று, கையிலிருந்த சிறு சீசாவை விரலில் தொட்டு, அவள் தோளில் விருட்டெனத் தேய்த்து விட்டான்.

''ஊஹூம்,'' என்று அவள் மறுத்து விலக்கு முன்னமே செண்ட் வாசனையை அவள் நாசி அனுபவித்தது.

''பட்டணத்தில் வளர்ந்தும் பட்டிக்காடாய்த்தான் இருக்கிறாய் நீ!'' என்று அவளைச் செல்லமாய்க் கடிந்தான் ராதா. பிறகு சற்று எட்டச் சென்று அவளைக் காலோடு தலை ஆராய்ந்தான். ''பார்வைக்குப் பூ மாதிரி இருந்தால் போதுமா? வாசனை போதாது என்றுதான் செண்ட் போட்டேன்!''

''எனக்குத் தலை வலிக்கும் இதெல்லாம்'' என்ற சத்யா உடனே, ''உங்கள் ஜலதோஷம் எப்படி இருக்கிறது? தேவலையா? நேற்று மாத்திரை வாங்கி வைத்துக்கொண்டு உங்களைத் தேடினேன்'' என்றாள்.

''ஏது! கொஞ்சம் விட்டால் என்னைத் தொட்டிலில் போட்டுத் தாலாட்டுப் பாடி விடுவாய் போலிருக்கிறதே!''

சத்யா உல்லாசமாய்த் தலையைப் பின்னுக்குச் சாய்த்துக் கொண்டு மனம் விட்டுச் சிரித்தாள்.

''ஆமாம், நீ ஒன்றும் முகத்துக்குப் பவுடர் கிவுடர் அடித்துக் கொள்ளப் போவதில்லையா? எழுந்திரேன். சாப்பிட்டதும் கிளம்பினால் ஷோ ஆரம்பிப்பதற்குள் போய் விடலாம்.''

''எங்கே கூப்பிடுகிறீர்கள்?'' என்று சத்யா திகைத்தாள்.

''அட கடவுளே! இது தெரியவில்லையா? சினிமாவுக்குத்தான் சொல்கிறேன்.''

அதிர்ச்சியினால் ஊமையாகி, சோபாவில் தொப்பென்று சாய்ந்தாள் சத்யா. தகப்பனார் இறந்த மறுநாளைக்கு சினிமா பார்க்கப் போகிறாரா!

''நான் வரவில்லை'' என்றாள் பயந்த குரலில். ''நீங்கள் போவதும் நன்றாயிராது.''

ராதாவின் கோபம் வெளிப்படையாய்த் தெரிந்தது.

''சே சே சே! நீயும் இந்தப் பாழாய்ப்போன கட்டுப் பெட்டிகள் கோஷ்டிதானா? சினிமா பார்க்கக்கூடாது, வெற்றிலை போடக்கூடாது என்ற 144 போடுகிற வர்க்கத்தில் நீயும் சேர்த்தியா?''

சத்யா குனிந்த தலை நிமிரவில்லை.

''ஊஹூம்! சரி.'' மாட்டியிருந்த சட்டையைக் கழற்றி யெறிந்தான் ராதா. அடுத்த அறைக்குச் சென்று திரும்பி வந்தான்.

''சரி, வா. சாப்பாடு வருகிற வரையில் ஆடுவோம்.''

கேரம் போர்டை அவளெதிரில் வைத்துவிட்டுத் தானும் உட்கார்ந்தான். காய்கள் மடமடவெனப் பலகை மீது உருண்டன.



சத்யா மெல்ல, சாப்பாடு வராவிட்டால்கூடப் பரவாயில்லை. நான் கிராமத்துக்குத் திரும்பி விட வேண்டும்'' என்றாள்.

''நான்சென்ஸ்!'' பலகையைக் காய்களோடு தூரத் தள்ளிவிட்டு எழுந்து கொண்டான் ராதா. ''வீட்டுக்குத் திரும்ப வேண்டுமா? இங்கே தங்கப் போவதில்லை?''

சத்யாவின் உடல் சில்லிட்டது. நரம்பிலே ரத்தம் உறைந்த மாதிரி ஆயிற்று.

அவளையே உற்றுப் பார்த்தபடி நின்றிருந்தான் ராதா. சில வினாடிகளில் அவன் சினம் மறைந்துவிட்டது.

''இவ்வளவு பயந்தாங்கொள்ளியாயும் சந்தேகப் பிராணியாயும் இருக்கிறவள் எப்படித்தான் காலேஜில் படிக்கிறாயோ!'' அவளருகில் வந்து கை குவித்தான் அவன் ''அம்மா தாயே, நாற்றுக்கிழவி! ஏ, பஞ்சாங்கம்! உன்னைத்தான்! சாப்பிட்டானதும், உன்னைப் பத்திரமாய் அழைத்துப் போய் உன் அம்மா இடுப்பிலே உட்கார்த்தி வைத்து விடுகிறேன், பயப்படாதே. சரிதானே? கொஞ்சம் சிரியுங்களேன்! சார்! கொஞ்சம் சிரியுங் கோன்னேன்!''

குபீரென்று சத்யா சிரிப்பதற்கும், வேலைக்காரி எடுப்புச் சாப்பாட்டுடன் உள்ளே நுழைவதற்கும் சரியாயிருந்தது.

''பங்கஜம்!'' என்று அவளை வரவேற்றான் ராதா. ''இரண்டு இலையையும் பிரித்துப் போடு. தண்ணீர் எடுத்து வை.''

வேலைக்காரி எடுத்து வைத்தாள். ராதா உட்கார்ந்ததும் சத்யாவும் இலையடியில் அமர்ந்தாள்.

சாதத்தை எடுத்து அவனுக்குப் பரிமாறிக் கொண்டிருந்தபோதுதான் ராதா கவனித்தான் போலும்— வாசல் படியருகிலேயே நிற்கும் வேலைக்காரியை.

''அடடே! உனக்கு இன்று இல்லாமல் போய் விட்டதா!'' இடது கையால் சட்டைப் பையிலிருந்து ஒற்றை ரூபாய்த் தாளொன்றை எடுத்து வீசினான். ''இந்தா; நீ வேறு சாப்பாடு வாங்கிக் கொண்டு வீட்டுக்குப் போ.''

விசாலம் பணிவோடு உள்ளே வந்து பணத்தை எடுத்துக் கொண்டு அகன்றாள்.

ராதா கனிவுடன் அவள் போவதையே பார்த்தவாறு, ''அவள் புருஷன் ஒரு தீராத வியாதியில் கிடக்கிறான். எனக்குப் போட்டு விட்டு, மிஞ்சுகிற சாப்பாட்டை அவனுக்கு எடுத்துக்கொண்டு போகிறாள் தினமும்,'' என்றான்.

சத்யாவுக்குத் தன்னைத்தானே சாட்டையால் அடித்துக் கொள்ள வேண்டும் போலிருந்தது. 'என்னவெல்லாம் நினைத்து விட்டோம்!' என்று மறுகிப் போனாள் மனத்துக்குள்.

''என்ன சத்யா, புழுக்கமாயிருக்கிறதா?'' என்று விசிறியைச் சுழல வைத்தான் ராதா. ''உன்னைப்பற்றி ஒன்றுமே சொல்லவில்லையே!'' என்றான்.

சுண்டு விரலையும் சுட்டு விரலையும் தூக்கிக் கொண்டு, மூன்று விரலால் அவன் சாதம் எடுத்துச் சாப்பிடுவதைக் கவனித்துக் கொண்டிருந்த சத்யா ''என்ன சொல்லவேண்டும்?'' என்று கேட்டாள்.

''படிப்பைப்பற்றி, எதிர்காலத்தைப்பற்றி, எவ்வளவு இல்லை? என்னைப் பொறுத்த மட்டில் இந்த மாட்டுத் தொழுவத்திலே தும்பை மாட்டிக் கொள்ளப் போவதில்லை. நீ?''

''இன்னும் தீர்மானம் பண்ணவில்லை.''

''நான் சொல்கிறேன், கேட்கிறாயா?''

''சொல்லுங்கள்.''



''டாக்டருக்குப் படி,'' என்றான் ராதா. (ஆமாம். இப்போது நினைத்துப் பார்த்தால்... டாக்டருக்குப் படிக்கும் எண்ணத்தை முதன் முதலில் ஏற்படுத்தியவர் அவர்தான்... ராதாதான்.)

''டாக்டர் படிப்பா!'' என்று சத்யா தயங்கினாள்.

''ஆமாம். இதோ போனாளே விசாலம், அவள் புருஷன் எத்தனை காலமாகப் படுக்கையில் கிடக்கிறான் தெரியுமா? அவள் இருக்கிற பேட்டைக்கும் ஆஸ்பத்திரிக்கும் நாலு மைல் தூரமிருக்கிறது. எப்படித் தினசரி அழைத்துப் போக முடியும்? அவள் இருக்கிற வட்டாரத்திலேயே ஒரு டாக்டரும் இருந்தால்...? சரி, அதை விடு. என் அம்மா எப்படி இறந்து போனாள் தெரியுமா?''

அவனுடைய திடீர் ஆவேசம் சத்யாவைக் கலக்கி விட்டது. ''எப்படி?'' என்று கேட்டாள்.

மாட்டுக்கு வைத்தியம் பார்க்கத் தெரிந்த என் அப்பாவுக்கு, மனித உயிரைக் காப்பாற்றத் தெரியவில்லை. பிரசவத்தைப் பட்டணத்திலே வைத்துக் கொள்ளாமல், குக்கிராமத்தில், ஒரு நாவிதன் பெண்டாட்டியிடம் என் அம்மாவை ஒப்படைத்தார். அவள் கத்திக்கு, நான் தப்பிப் பிழைத்து விட்டேன். ஆனால் என் அம்மா ஜன்னி கண்டு இறந்து போனாள். சத்யா! தயவு பண்ணி நீ டாக்டருக்கே படி! எனக்காக! என்ன?''

சத்யா சிரித்துக்கொண்டே, ''ரொம்ப சரி. ஆனால் நீங்கள் நினைக்கிற மாதிரி நான் உயிர்களைக் காப்பாற்றுவேன் என்பது என்ன நிச்சயம்? நேர் விரோதமாகச் செய்தால்?'' என்று கூறிவிட்டு, எழுந்திருக்க முயன்றாள்.

''அதற்குள்ளா சாப்பிட்டு முடித்துவிட்டாய்! இன்னும் கொஞ்சம் போட்டுக்கொள்,'' என்று ராதா சாதத்தை எடுக்க, ''வேண்டாம், வேண்டாம்!'' என்று அவன் கையை சத்யா விலக்கிக் கொண்டிருந்தபோது—

வாசலில்... ஹாரன் சப்தம் கேட்டது. யாரையோ கூப்பிடுகிற மாதிரி மூன்று முறை விட்டுவிட்டு அடித்தார்கள்.

''யாரது பூசை வேளையில்?'' என்று முணுமுணுத்தபடி ராதா எழுந்து சென்றான்.

சத்யா காத்திருந்தாள்.

இரண்டு நிமிடத்தில் பரபரப்போடு திரும்பி வந்தான் ராதா. குழாயில் கையையும் வாயையும் கழுவிக் கொண்டான்.

''ஒரு அவசர வேலை, நான் போகிறேன்,'' என்று தெரிவித்துவிட்டுத் திரும்ப ஓடினான் வாசலுக்கு.

சத்யாவின் திகைப்பு நீங்குவதற்குள் தெருவில் கார் கிளம்பிவிட்ட ஓசை கேட்டது.

சத்யா சரேலென எழுந்து போய்ப் பார்த்தாள்.

காரின் பின்புறத்துக் கண்ணாடி வழியே, ஓர் இளமங்கையின் கொண்டை மட்டுமே தெரிந்தது.

ராணி என்ற பெண்ணின் கொண்டை.

## எட்டு

தெரு அனாதையாய் நின்றது— சத்யாவைப் போலவே. இருட்டின் நெற்றியிலிட்ட குங்குமப் பொட்டாக, காரின் பின்புறத்துச் சிவப்பு விளக்கு ஒரு வினாடி மினுமினுத்து விட்டு மறைந்தது.

வானத்தில் துருப்பிடித்த நிலா. கறுப்பு ஷிபான் போல இருள் அடைத்துக் கொண்டிருந்தது வீதியை.

கண்ணீர் விடக்கூட சத்யாவிடம் திராணியில்லை. பயப்படுவதற்குக் கூடப் பயமாயிருந்தது அவளுக்கு.

அசைவுக்கு அசைவு, குணம் மாறுகிற ராதாவை நினைத்துப் பிரமித்துப் போய் நின்றாள். இரண்டு நிமிடம்



முன்பு கூட ஆசை ஆசையாய்ப் பேசியதென்ன, இப்போது திடீரென எவளோ ஒருத்தியுடன் ஓடுவதென்ன? அதுவும் ஒரு கூறுகெட்டவளுடனா!

இன்னும் இரண்டு வயது தாண்டி, இன்னும் வாழ்க்கையின் அடிகளை வாங்கியிருந்திருப்பாளே யானால், ஆண்பிள்ளையின் திமிரைக் கண்டு சத்யாவுக்கு அத்தனை அதிர்ச்சி ஏற்பட்டிருக்காதோ என்னவோ. ஆனால், பக்குவமடையாத புது உள்ளத்துடன், காதலை அப்போதுதான் நுகரத் தொடங்கியிருந்த சமயத்தில், ராதா செய்த பச்சையான துரோகம் அவளை அழ வைத்தது.

தெருவைப் பார்த்துக்கொண்டு சத்யா நின்றாள். வெராந்தாவை விட்டுத் தெருவில் இறங்க அச்சமாயிருந்தது. தனிமை கூடாரமடித்துள்ள உள்புறத்துக்குத் திரும்பவோ இன்னும் பயமாயிருந்தது. 'என்ன நினைத்துக் கொண்டு நம்மைத் தன்னந்தனியே விட்டுவிட்டுப் போனார்!' என்றெண்ணுகையில் சினத்தினால் அவள் முகம் சிவந்தது.

வருவது வரட்டும் என்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, வாசல்புறக் கதவுகளைச் சாத்தினாள். ('நான் ஒரு பைத்தியக்காரி! என்னை அத்தனை நிராதரவாக அவர் விட்டுவிட்டு ஓடிய சமயத்தில்கூட, அவரையும் அவரது உடைமைகளையும் பாதுகாக்க வேண்டும் என்று நினைத்தேனே!') தெருவில் எவ்வித நடமாட்டத்தையும் காணோமென்பது உண்மைதான். ஆனால் கொஞ்ச தூரம் நடந்தால் ஒரு டாக்ஸியோ குதிரை வண்டியோ கிடைக்காமல் போய்விடுமா, என்ன? நான் ஒன்றும் சின்னப் பாப்பா அல்ல. பூதம் பிசாசு விழுங்கிவிடாது என்னை. மதுரை என்ன, சகாராவா? ஜே ஜே என்றிருக்கிற நகரம். மதறாசுக்கு அடுத்தபடி ஜனத்தொகை என்று படித்திருக்கிறோமே...

இவ்வளவு தைரியம் சொல்லிக்கொண்டு அவள் தெருவில் இறங்கியிருக்கத் தேவையில்லை. ஏனெனில் காம்பவுண்டைத் தாண்டும்போதே—

''நான் சாத்திவிடுகிறேன். நீங்கள் வாருங்கள்,'' என்று ஒரு குரல் பரிவோடு பேசியது.

''மணி!''

ஆம். எதுவுமே நடவாததுபோல், மணி அவளைக் கடந்து உள்ளே சென்று கதவுகளையும் ஜன்னல்களையும் மூடி, வாசலைப் பூட்டி, 'கேட்'டையும் சாத்திக்கொண்டு கையில் சாவியுடன் திரும்பி வந்து, ''போவோம்,'' என்று கூறி முன்னே நடந்தான்.

சத்யா அவனைப் பின்தொடரவில்லை உடனேயே. வியப்பு அவள் காலைக் கட்டிப் போட்டிருந்ததென்றால், நன்றி அவள் நாவைக் கட்டியிருந்தது.

''நீங்கள்...... நீங்கள்,'' என்று திணறினாள்.

''தெருக்கோடியில்தான் காத்திருந்தேன்,'' என்றவாறு தெரு விளக்கின் வெளிச்சத்தில் கைக்கடியாரத்தைப் பார்த்தான் மணி. ''பதினொன்று ஆகிறது.''

அச்சம் என்ற சுமை விலகியதும் உடம்பு எத்தனை லேசாகிறது! சத்யாவுக்கு நடப்பது போலவே தோன்றவில்லை. மிதப்பதுபோல உணர்ந்தாள். தன்னம்பக்கையும் வலுவும் நிமிர்வும் உள்ள மனிதனாக, திறமையையும் சுறுசுறுப்பையும் கைப்பிடிக்குள் அடக்கி வைத்துக் கொண்டுள்ள லாகவத்துடன், அலட்சியமாக நடைபோடும் மணியைப் பார்க்கப் பார்க்க அவனிடம் சத்யாவுக்கு மதிப்பு அதிகரித்தது.

''அவர்...... ராதா அத்தான் சொன்னவுடனே நீங்கள் போயிருந்தால் என்......'' சத்யா சட்டென்று 'கதி என்னவாகியிருக்கும்?' என்ற வாக்கியத்தைச் சொல்லாமலே நிறுத்திக் கொண்டாள். ராதா போனதை இவர்

16888



பார்த்தாரோ பார்க்கவில்லையோ? நாமாக எதற்காக அதை உடைப்பது?

இல்லை.'' மணி எல்லாவற்றையும் தெரிந்துதான் வைத்திருந்தான். ''அவர் சொன்னதும் நான் போயிருந்தால் அப்புறம் உங்கள் தகப்பனாருக்குக் காரியதரிசி என்று பெத்த பெயர் எனக்கு ஏன்?'' அவன் மெல்லப் புன்னகை செய்தான் சத்யாவை நோக்கி. ''இந்த இரண்டு நாளில் ராதாவை நான் கொஞ்சம் அதிகமாகவே தெரிந்து வைத்திருந்தேன். எப்படியும் உங்களுக்குப் பாதுகாப்புத் தேவைப்படும் என்று தெரிந்துதான் பொறுமையாய்க் காத்திருந்தேன்.''

தெருக்கோடியில் பாதைக்குச் சிறிது தள்ளி ஒரு சிறு தோட்டமும் குடிசையும் தென்பட்டன.

மணி நின்றான்: ''இந்தாம்மா,'' என்று கூப்பிட்டான்.

குடிசையிலிருந்து வந்தாள் எவளோ ஒரு பெண்—எவளோ அல்ல. கிட்ட வந்ததும் சத்யாவுக்கு இரண்டாம் தரமாகத் தூக்கிவாரிப் போட்டது. வந்தவள், ராதாவின் வேலைக்காரி விசாலம்தான்.

''இந்தா,'' என்று சாவியை அவளிடம் கொடுத்தான் மணி. ''ஐயா வெளியே போயிருக்கிறார் வந்ததும் கொடுத்துவிடு.''

''சரிங்க,'' என்று வாங்கிக்கொண்டு திரும்பினாள் அவள். அந்த வேலைக்காரியின் முகத்தில் எவ்வித மாறுபாடும் தென்படவில்லை. அவளுடைய எஜமானின் வாழ்க்கையில் எதுவும் சகஜமோ என்னவோ.

பெரிய சாலையில் ஒரு டாக்ஸி அகப்படும் வரையில் சத்யாவும் மணியும் மௌனமாகவே நடந்தார்கள். சாலையின் இருபுறமும் மரங்கள் கைகோத்து நின்றன. டாக்ஸி பிடித்து, பின்புறத்தில் சத்யாவை அமர்த்திக் கதவைச் சாத்திவிட்டு, தான் முன்புறம் அமர்ந்துகொண்டு, போக

வேண்டிய இடத்தை டிரைவருக்குத் தெரிவித்தபிறகு அவள் பக்கம் திரும்பினான்.

"அந்த வேலைக்காரியின் குடிசை வாசலில்தான் காத்துக் கொண்டு நின்றிருந்தேன், நீங்கள் வருகிற வரையில். வேலைக்காரி மகா அழுத்தம். இருந்தாலும் அவள் வாயைக் கிண்டிக் கிளைடி நான் நிறையத் தெரிந்து கொண்டேன்."

மணி அதற்குமேல் எதுவும் சொல்லாமல் திரும்பிக் கொண்டு, சௌகரியமாகச் சாய்ந்து கொண்டான். "என்னென்ன தெரிந்து கொண்டீர்கள்?" என்று ஆவலுடன் கேட்க வைக்கத்தான் அவன் தந்திரம் செய்கிறானோ? சந்தேகத்துடன் அவனை நோக்கினாள் சத்யா. தூங்க முயலுகிற மாதிரி கண்ணை மூடியிருந்தான் மணி.

சத்யா கேட்கவில்லை.

ராதாவுக்கும் அந்த நாடகக் கம்பெனிக்கும் எப்படி, எப்போது தொடர்பேற்பட்டதென்று அப்போது அவளுக்குத் தெரியாது.

(பிற்பாடு, ரொம்ப ரொம்ப நாள் கழித்து, இதே ராணியினால் இல்லாத ரகளையெல்லாம் ஏற்பட்டு, காஷ்மீருக்குப் போகிறாற்போல் நேரிட்ட சமயத்தில், அத்தானேயல்லவா அந்தக் கதையையெல்லாம் விவரித்தார்! மீனம்பாக்கம் விமான நிலையத்தின் 'லௌஞ்'ஜில் மெத்தென்ற ஆசனத்தில் அவளுக்கருகே நெருக்கமாக உட்கார்ந்திருந்த நேரத்தில், ஏற்படப் போகும் பிரிவின் துயரத்தால் முகம் கூம்பியிருந்த போது மோவாயை நிமிர்த்தி, கடகடவென்று அதையெல்லாம் சொன்னார்... வெள்ள நிவாரணத்துக்காக ஒரு நாடகம் நடத்த ராணியின் நாடகக் குழு மதுரைக்கு வந்திருந்ததும்; மேலமாசி வீதி தியேட்டரில் டிக்கட்டுகளை ராணியே விற்கப் போகிறாளென்று அறிவித்ததும்; மாணவர் பட்டாளம் ஓடியதும்; அப்போது முதன் முதலாய் நேருக்கு நேராய் ராணியை சந்தித்ததும்; பத்து ரூபாய் டிக்கெட்டுக்காக ராதா பணத்தை நீட்டியதும்; ராணி அவன் கையை கப்பென்று பிடித்து, "நல்லா இருக்குதே வேலை? லட்சாதிபதிப் பண்ணையார் வானமாமலையோட ஒரே குமாரர் பத்து ரூபாய் டிக்கெட்டா வாங்குவது!" என்று அதட்டியதும்; 'எப்படி நம்மைத் தெரிந்து வைத்துக் கொண்டாள்!' என்று வியந்தபோதிலும் அவளுடைய தளுக்கிலே மயங்கி நூறு ரூபாய் டிக்கெட் வாங்கிக் கொண்டு, மாலை முதல் வரிசையில் அமர்ந்துகொண்டு நாடகம் பார்த்ததும்; பிறகு எப்போது அவள் மதுரை வந்தாலும் ராதா அவளைப் பார்ப்பதற்காக ஓடியதும்— எல்லா மானம் கெட்ட கதைகளையும் கூச்சநாச்சமில்லாமல் எப்படி விவரித்தார்! கேட்பவள், நாளை தன்னை மணக்கப்போகும் பெண்ணல்லவா என்கிற இரக்கம்கூட இல்லாமல் எவ்வளவு பச்சை பச்சையாய்ச் சொன்னார் அந்தச் சந்திப்புக்களைப் பற்றி! 'காரவல்' வந்து சேர்ந்ததோ அத்துடன் நிறுத்தினாரோ!)



டிரங்க் சாலையும் கிராமப் பாதையும் சந்திக்கும் முக்கில், லாந்தர் விளக்குகளும் தடிக் கம்புகளுமாய்ப் பண்ணையாட்கள் காத்துக் கொண்டிருந்தார்கள், அந்த நடுநிசி வேளையில். அவர்களுக்கு மத்தியில் தன் அன்னையும் நின்றிருப்பதைக் கண்டதும் சத்யாவுக்குத் திக்கென்றிருந்தது.

டாக்ஸியிலிருந்து அவள் இறங்குமுன்பே மீனலோசனி, "இப்படிச் சொல்லாமல் கொள்ளாமல் போகலாமாடி? நான் பட்ட கவலை அந்த மீனாட்சித் தாய்க்குத்தான் தெரியும்?" என்று மூக்கைச் சிந்தத் தொடங்கிவிட்டாள்.

மணிதான் குறுக்கிட்டு, "உங்கள் மருமகனைப் பார்த்தோம், அம்மா. தன் வீட்டுக்கு அழைத்துப் போயிருந்தார். சின்ன வீடு. ஆனால் நன்றாயிருக்கிறது பார்வைக்கு," என்றான். "நீங்கள் போங்கள்," என்று ஒருவனைத் தவிர மற்ற ஆட்களுக்கு விடை கொடுத்தனுப்பி விட்டு, டாக்ஸிக்கும் கூலியைத் தந்தான்.

சத்யா அவனைப் பார்த்த பார்வையில் வேண்டுகோள்— கெஞ்சல் இருந்தது.

'இல்லை, உங்கள் அத்தானைப்பற்றி எதையும் நான் வெளிப்படுத்த மாட்டேன்,' என்று பார்வையினாலேயே மணியும் உறுதி கொடுத்தான். அதன் பிறகு அவன் தன்னை ஒரு பெரிய நெருக்கடியிலிருந்து காப்பாற்றியது சத்யாவுக்கு மறந்து விட்டது. தனக்கு அந்தரங்கமான ஒரு ரகசியத்தை இவனுடன் பகிர்ந்துகொள்ள நேரிட்டதே என்று அவன்மீது கோபமும் வெறுப்பும்தான் ஏற்பட்டன.

அடுத்த நாள் விளக்கு வைக்கிற நேரம் வரையில் ராதா வரவேயில்லை. பழைய பீரோவொன்றிலிருந்த வடுவூர் துரைசாமி ஐயங்கார் நாவலை சத்யா புரட்டிக்கொண்டிருந்த போது வெளியே கார் வந்து நிற்கும் ஓசை கேட்டது.

ஒருவிதத்தில் ஏமாற்றம். ஒருவிதத்தில் அப்பாடி என்ற நிம்மதி.

சாரங்கபாணி வந்துவிட்டார். காருக்குப் பாட்டரி மாற்றியாகி விட்டதுபோலும், அவருடைய காரை அவருடைய டிரைவரே ஓட்டி வந்திருந்தான்.

''ராதா எங்கே?'' என்றுதான் உள்ளே வந்ததுமே சாரங்கபாணி கேட்டார்.

சரியான பதிலைச் சொல்ல யாரும் முன்வரவில்லை. காரியஸ்தர் தயங்கித் தயங்கி, இரண்டாம் நாள் மூன்றாம் நாள் சடங்குகளுக்குக்கூட அவனைக் காணோம் என்று தெரிவித்தபோது மீனலோசனியைத்தான் கோபமாகப் பார்த்தார். ''ஹூம்! செல்லம் கொடுத்துக் குட்டிச் சுவராக்கி விட்டார்,'' என்று முணுமுணுப்பதைத் தவிர, இறந்தவரைப் பகிரங்கமாகத் திட்ட முடியுமா என்ன?

அப்பா வந்ததுமே வீட்டின் சூழ்நிலை மாறிவிட்டது. போலீஸ் இலாகாவின் சுறுசுறுப்போடு அவருடைய



தலைமையிலும், மணியின் மேற்பார்வையிலும் மளமள வென்று காரியங்கள் நிகழ்ந்தன.

ஆனால் ராதாவைத்தான் காணோம். ''காலேஜில் விசாரி. உனக்குத்தான் அவன் வீடு தெரியுமென்றாயே, போய்க் கூப்பிடு,'' என்றெல்லாம் மணியை விரட்டிக் கொண்டிருந்தார் சாரங்கபாணி. அவன் போய்த் திரும்பி வந்து, ''இதோ இப்போதுதான் போனார், இங்கேதான் இருந்தார் என்றெல்லாம் சொல்கிறார்களே தவிர, ராதாவைக் கண்ணால் பார்க்க முடியவில்லை,'' என்று சொல்லிக் கொண்டிருந்தான். (''நாடகக் குழு இன்னும் மதுரையிலே தான் தங்கியிருக்கிறது. அது புறப்பட்டுப் போன பிறகுதான் ராதாவைப் பிடிக்க முடியும்'' என்று சத்யாவிடம் மட்டும் தெரிவித்தான் ரகசியமாக.)

விடிந்தால் பத்தாம் நாள் காரியங்களை, காலமானவரின் கௌரவத்துக்குத் தக்கபடி சிறப்பாகச் செய்வதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தபோது ஒரு மோட்டார் பைக்கில் வந்து சேர்ந்தான் ராதா.

''வக்கீல் சொன்னவுடனே உனக்கு அக்கறை ஏற்பட்டு விட்டதாக்கும்?'' என்ற இகழ்ச்சியான கேள்வியுடன் அவனை வரவேற்றார் சாரங்கபாணி.

''வக்கீலா!'' என்று ராதா ஆச்சரியம் தெரிவித்தான். மீனலோசனிக்கும் சத்யாவுக்கும்கூடத்தான் அந்தத் தகவல் வியப்பளித்தது. வானமாமலை தன் சொத்து பத்துகளுக்கு ஓர் ஏற்பாடு செய்து வைத்திருப்பதும், அதை வக்கீலும், காரியஸ்தரும், சாரங்கபாணியும் மட்டுமே அறிவார்கள் என்பதும் அதுவரை அவர்களுக்குத் தெரியாது.

''வக்கீல் சொல்லியனுப்பவில்லை உனக்கு?'' என்று சாரங்கபாணி கேட்டார்.

''அவரை நான் எங்கே பார்த்தேன்? என் சிகரெட் லைட்டரைக் காணோம். அது இல்லாமல் சிகரெட் பிடித்த மா திரியே இல்லை. அதைத் தேடிக்கொண்டு வந்தேன்,''

என்ற ராதா, சத்யாவின் பக்கம் திரும்பி, ''நீ எங்காவது பார்த்தாயா?'' என்று கேட்டான்.

''ஆமாம். ரேடியோவுக்கருகே இருந்தது,'' என்று சொல்லி, சத்யா அந்தத் தங்கநிற லைட்டரை எடுத்துவந்து அவனிடம் கொடுத்தாள்.

ஒரு 'தாங்ஸ்' இல்லை, அன்பான ஒரு பார்வை இல்லை. எப்படி வீட்டுக்கு வந்து சேர்ந்தாய் என்ற வியப்பு இல்லை, 'இரக்கமில்லாமல் விட்டுவிட்டுப் போனதற்கு மன்னித்து விடு' என்று ஒரு ஜாடையான கோரிக்கை இல்லை. எதுவுமே காணோம். லைட்டரைப் பொருத்தி, அங்கேயே ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டு, மோட்டார் பைக்கைத் திரும்ப நெருங்கினான்.

''ராதா,'' என்று முன்னே ஓரடி எடுத்து வைத்த மீனலோசனியை, ''நீ இரு,'' என்று தடுத்து நிறுத்தினார் சாரங்கபாணி. பிறகு, நிதானமாக எழுந்து சென்று, அவனுடைய மோட்டார் பைக்கை வழிமறித்தாற்போல் குறுக்கே நின்று, ''கொஞ்சம் பெரியவர்கள் பேச்சைக் கேட்டுவிட்டுப் போ,'' என்றார் அழுத்தமாக.

அந்த வாக்கியத்திலே இருந்த கண்டிப்போ, சத்யாவின் பார்வையில் தெரிந்த ஏக்கமோ, அத்தையின் முகத்தில் தென்பட்ட பரிதாபமோ ஏதோவொன்று ராதாவின் மனத்தை மாற்றியது.

''என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்?'' என்று சலிப்போடு வினவிய வண்ணம் திரும்பி வந்து, ஹாலில் இருந்த பழங்கால சோபாவில் பொத்தென்று விழுந்தான்.

''இதோ வக்கீலும் வந்து விட்டார்,'' என்றார் சாரங்கபாணி.

ஜட்கா வண்டியிலிருந்து இறங்கினார், தலைப்பாகை அணிந்திருந்த ஒரு கிழவர். 'கோட்டான்' என்று ராதா கீழ்க்குரலில் திட்டியது, நல்லவேளை சத்யாவின் காதில் மட்டும்தான் விழுந்தது.



பார்வைக்கு தோஞ்சான் போலவும் பயந்த சுபாவக்காரராகவும் தோன்றினாரேயொழிய, வக்கீலின் நடவடிக்கைகளில் மிடுக்குக்குக் குறைச்சல் இருக்கவில்லை. கையிலிருந்த தஸ்தாவேஜுக் கட்டைப் பிரித்துக் கொண்டே, ''குடும்பத்துக்குச் சம்பந்தமில்லாதவர்கள் அந்தண்டை போகலாம்,'' என்று அதட்டலாக அவர் அறிவித்த தோரணையில், வேலையாட்களும், மணியும் வெளியேறியதுகூடப் பெரிதில்லை. ராதாவே சிறிது அக்கறையுடன் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

கண்ணை மூடி ஒரு வினாடி தியானம் செய்த பிறகு வக்கீல், மூக்குக் கண்ணாடியை மாட்டிக் கொண்டு உயிலை வாசித்துக் காட்டி, விளக்கமும் சொல்ல ஆரம்பித்தார்.

முதற் பகுதியில், வானமாமலை தமது மாட்டுப் பண்ணைக்கு ஓர் ஏற்பாடு செய்திருந்தார். பிள்ளையோ மற்றவர்களோ அதைப் பரிபாலிப்பார்களென்ற நைப்பாசை அவருக்குக் கடுகத்தனையும் இருக்கவில்லை. ஆகவே, அதை அரசாங்கக் கால்நடை இலாகாவுக்கு நன்கொடையாய்த் தருவதாகக் கூறியிருந்தார்.

''அம்மாடி! விட்டது மாட்டுத் தொழுவம்!'' என்று வாய்விட்டுச் சொன்ன ராதா, கழுத்தைத் தடவி விட்டுக் கொண்டான். சாரங்கபாணியின் கடுமையான பார்வைக்கு அவன் கலங்கவில்லை.

''அடுத்தாற்போல் அவருடைய ரொக்கம், நகை நட்டு...'' வக்கீல் தொண்டையைச் செருமிக் கொண்டார். ''இதோ தனியே அதற்கெல்லாம் கணக்கு இருக்கிறது. மொத்தம், உத்தேசமாக ஏழரை லட்ச ரூபாய்க்கு வரும்.'' அவர் ராதாவைப் பார்த்தார். சத்யாவும் பார்த்தாள்.

அவன் பார்வை, வளையம் வளையமாக மேல் எழும்பிச் செல்லும் புகையில் ஒன்றியிருந்தது.

வக்கீலின் பேச்சு மெதுவாக இருந்தது இப்போது.

''தப்பாய்ச் சொல்லக்கூடாது. ஆனால் வானமாமலை மகா பிடிவாதக்காரர். அவர் ரொம்பக் கண்டிப்பாய்ச் சொன்னதாலேதான் நானும் ஒப்புக்கொண்டு அவர் இஷ்டப்படியே எழுதினேன்.''

சத்யாவுக்கு இதயம் படபடத்தது. பெஞ்சியில் தன்னருகே அமர்ந்திருந்த தாயின் மடியில், கையை அழுந்த ஊன்றிக் கொண்டு கேட்டாள்:

''சுருக்கமாய்ச் சொல்கிறேனே...'' என்றார் வக்கீல். ''மொத்த சொத்தும் சாரங்கபாணியின் வசம்தான் இருக்கவேண்டும் என்பது வானமாமலையின் கண்டிப்பு.''

சாரங்கபாணி திடுக்கிட்டார்: ''என் வசமா?''

''ஆமாம். ஏழரை லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள மொத்த சொத்தையும் நீங்கள்தான் வைத்துக்கொள்ள வேண்டும். அவர் மகன் ராதா யோக்கியனாய், பொறுப்புள்ளவனாய், நல்லவனாய் நடந்து கொள்வதாக உங்களுக்குத் தோன்றினால் அவனிடம் சொத்தை நீங்கள் ஒப்படைக்கலாம். அப்படித் தோன்றவில்லையானால் அவனுக்குத் தரவே வேண்டாம். நீங்களே ஆண்டு அனுபவிக்கலாம்.''

வக்கீல் முடித்தார்.

சொல்லி வைத்த மாதிரி அத்தனை பேர் பார்வையும் ராதாமீது பாய்ந்தது.

ஒரு நிமிடம்— பூ விழுந்தால் கேட்கக்கூடிய நிசப்தம்.

அடுத்த நிமிடம் ராதா கடகடவென்று சிரித்தான்.

ஹாலிலிருந்த பெரிய கடிகாரத்தின் நிமிட முள் நகர்ந்து கொண்டேயிருந்தது.

ராதா தனது சிரிப்பை நிறுத்தவே இல்லை.

## ஒன்பது

துணிக்கடையில் பிரித்துப் போடப்படுகிற பட்டாடையைப் போல மடமடவென்று விரிந்து அந்த அறையை நிறைத்தது ராதாவின் சிரிப்பு.

சாரங்கபாணியின் முகத்தில் முத்து முத்தாக வியர்த்தது. வக்கீலோ, தலைப்பாகையைக் கழற்றி மேஜை மீது வைத்துவிட்டுக் கண்ணை இடுக்கிக் கொண்டு அவனைப் பார்த்தார்.

தாயின் தோள் மீதிருந்த சத்யாவின் கரம் உறைந்து போனாற்போல நகராமல் நின்றது. மீனலோசனி மலங்க மலங்க விழித்தாள்.

யாருடைய பார்வையையும் பொருட்படுத்தாத ராதா, இருக்கையினின்றும் எழுந்து கொண்டான். பாண்ட்டின் இரு பைகளிலும் கைகளை நுழைத்துக்கொண்டு லாயரின் முன்னே குனிந்தான்.

''ஏன் வக்கீல் சார், உயில் எழுதியவருடைய மனதிலே என்ன எண்ணம்?''

சாரங்கபாணி அவனுடைய அலட்சியத்தினால் ஆத்திரம் கொண்டவராய், ''உன் அப்பாவுக்குத்தானே? வேறு என்ன எண்ணம்? நீ உருப்பட வேண்டும், நல்ல பிள்ளையென்று பெயரெடுக்க வேண்டும் என்றுதான் எண்ணம்,'' என்றார்.

ராதாவின் சிரிப்பு மறைந்து, முகத்தில் இகழ்ச்சி பரவியது; ''இந்த ராதா பணம் காசு கையில் இருந்தால் கெட்டுப் போகிறவனுமில்லை, இல்லாவிட்டால் உருப்பட்டு வருகிறவனுமில்லை. இந்த இருபத்திரண்டு வருஷ காலத்தில் உங்கள் மைத்துனர் என்னை அறிந்து கொண்டது அவ்வளவுதானா! ப்பூ!'' என்றான்.

''என் வேலை முடிந்தது மற்றக் காரியங்களை அப்புறம் கவனித்துக் கொள்ளலாம்,'' என்று கூறிய

வக்கீல், மேஜை மீதிருந்த தலைப்பாகையை எடுத்து அணிந்து கொண்டார். கூடு, படக்கென்ற ஓசையுடன் மூக்குக் கண்ணாடியை அணைத்துக் கொண்டது.

மீனலோசனியின் முகத்தில் கலவரம் குடிகொண்டது. விஷயம், வேப்பிலைக் கசப்பானதாக மாறிவிட்டதென்பதைப் புரிந்துகொண்டு மெதுவாய் ராதாவை அணுகி, "ஏதோ ஒரு பேச்சுக்கு— கண்டிப்புக் காட்டுவதாய் நினைத்துக் கொண்டு— அண்ணா எழுதியிருக்கிறார் இப்படியெல்லாம். உடைமைக்காரன் நீதான். எங்களுக்கு எதற்கு இத்தனை வயசுக்குமேல் சொத்தும் ஐசுவரியமும்!" என்றாள்.

ஏதோ சொல்ல வந்த சாரங்கபாணியை முந்திக் கொண்டான் ராதா. "ஏன் அத்தை, செத்துப்போன தமையனார்மீது நீ வைத்திருந்த மதிப்பு இவ்வளவுதானா! சரிதான் போ!"

"என்னப்பா சொல்றே?"

"மனுஷன் செத்துப் போய், சாம்பல்கூட முழுக்கக் கரைந்தபாடில்லை. அதற்குள்ளேயே அவர் வார்த்தையை— அதுவும் எழுதி வைத்திருக்கிற வார்த்தையை— கடாசி வாசலில் எறிகிறேன் என்கிறீர்களே, அதைத்தான் சொல்கிறேன்."

சாரங்கபாணிக்குக் கோபம் வந்தது மனைவிமீது. "ஏய் மீனா, உனக்கு வேறே வேலை கிடையாது? போ உள்ளே. இவனைப் பாம்பென்று தாண்டவும் முடியாது, பழுதையென்று மிதிக்கவும் முடியாது. விட்டுத்தள்ளு, ரோதனை!"

"ஆமாம் அத்தான்! ஏழரை லட்சம் ரூபாய் என்றால் பெரிய ரோதனைதான்!" என்று ராதா வெடுக்கென்று சொன்னதும் சத்யா பதறிப் போய் அவன் முகத்தைப் பார்த்தாள். ஆனால் ராதாவிடம் கடுமை தென்படவில்லை. புன்னகை செய்து கொண்டிருந்தான்.



"வக்கீல் சார், கொஞ்சம் இருங்கள்," என்று கூறி எழுந்து கொண்டிருந்தவருடைய தோள்பட்டையை அழுத்தி உட்கார்த்தி வைத்தான் ராதா. உங்களைச் சாட்சியாக வைத்துக் கொண்டே சொல்லி விடுகிறேன். அதாவது, இந்த மாதிரி எக்கச்சக்கமாய் ரூபாயைக் கையில் வைத்துக் கொண்டு எனக்கும் பழக்கமில்லை. அதற்கெல்லாம் கணக்கு வழக்கு வேறே வைத்துக் கொள்ள வேண்டும். அத்தான் சொல்கிற மாதிரி பெரிய ரோதனை. அதனால் அத்தானே எல்லாவற்றையும் சர்வ சுதந்திரமாய் அனுபவித்து வரட்டும்."

நான்கு ஜோடிக் கண்கள் வியப்புடன் தன்மீது தாவிய பிறகு ராதா வாக்கியத்தை முடித்தான்: "தேவைப்படுகிறபோது எழுதுகிறேன், அனுப்பி வந்தால் போதும்."

வக்கீல் வாய்விட்டுச் சிரித்துவிட்டார். "பலே, பலே மிஸ்டர் சாரங்கபாணியை உனக்குக் காஷியராக இருக்கச் சொல்கிறாய்? அதுதானே?"

சாரங்கபாணி, "ஆளுக்கொன்று பேசினால் எப்படி? கொஞ்சம் பொறுமையாயிருங்கள் சார்," என்று நிதானமான குரலில் பேசினார். பல லட்சங்களுக்கு அதிபதியாகியிருக்கிறோம் என்ற உண்மை இப்போதுதான் அவருக்குச் செரிமானமாகியிருந்தது. ஆகவே, பேச்சில் கண்டிப்புடன் பெரும்போக்கும் தானாகவே கலந்தது.

"ராதா, நீ சின்னப் பையன். படபடவென்று பேசாமல் சற்று உட்கார்," என்று கூறி அவனைத் தமக்கருகில் இருத்திக் கொண்டார். "மைத்துனரின் சொத்தை மட்டும் எடுத்துக்கொண்டு, மைத்துனரின் பிள்ளையை நடுத்தெருவில் விட்டு விட்டான் என்று நாலுபேர் என்னை மட்டும் பேசமாட்டார்களா? நிதானமாய்க் கேள். சட்டப்படி என்னுடையதாகவே இருக்கட்டும். ஆனால், உன்னைக் கட்டி மேய்க்கக்கூடிய சரியான பேர்வழி......" சாரங்கபாணி மகளின் பக்கம் திரும்பினார். "சத்யா தான்!"

சத்யாவுக்கு ஒரு புறத்தில் நாணமாயிருந்தாலும், மறுபுறம் தன்னை அப்பா எதிலே சம்பந்தப்படுத்திப் பேசுகிறார் என்றறிய ஆவலும் ஏற்பட்டது. தலை குனிந்தவாறு செவிமடுத்தாள்.

சாரங்கபாணி கேட்டார்: ''எப்படி இருந்தாலும் இவனை நாளைக்குக் கட்டிக் கொள்ளப் போகிறவன் நீதானே? என்ன?... இல்லை, அதிலேயும் தகராறா?''

சத்யா போராடினாள், இமையை உயர்த்தாதிருக்க. அது கட்டுப்பட மறுத்து, உயர்ந்து படபடத்தது, அவள் உள்ளத்தைப் போலவே.

''ஐயோ! இவனையா!'' என்ற ராதாவின் கேள்வி அவளை அதிர்ச்சியடைய வைத்தது. ஆனால் அடுத்த தொடியிலே அவன் உதட்டில் விளையாடிய குறும்புச் சிரிப்பையும் கண்டு விட்டாள். கள்ளுண்டாற்போல ஆனந்த போதையில் அவள் இதயம் கிறுகிறுத்தது. மகிழ்ச்சிப் பெருக்கினால் அவள் கண்களில் நீர் துளித்தது.

''ஏன், கசக்கிறதா?'' என்றார் கிழ வக்கீல், சத்யாவைப் பார்த்தவாறு.

''என்ன நீங்கள், குழந்தைகள் எதிரில் இப்படியெல்லாம் பேசிக்கொண்டு,'' என்று மீனலோசனி கணவரைக் கண்டித்தாள்.

''யார், இவனா குழந்தை?'' என்றார் சாரங்கபாணி. பிறகு ராதாவிடம், ''விளையாட்டில்லையப்பா, நிஜமாகத்தான் பேசுகிறேன். உன்னுடைய பணமோ காசோ சத்யாவின் பொறுப்புத்தான் இனிமேல். பெயருக்குத்தான் நான். என்ன வேண்டுமானாலும் இவளைக் கேட்டுக் கொள். எப்படி வேண்டுமானலும் குஷாலாய்ச் செலவு செய்து கொள்'' என்றார்.

''அட கடவுளே! போயும் போயும் பெண்களிடமெல்லாம் கையேந்தி நிற்கும்படி பண்ணிவிட்டாயே என்னை!''



என்று வேடிக்கையாக நொந்தவாறே சத்யாவைப் பார்த்தான் ராதா.

உதட்டைக் கடித்துக்கொண்டு சத்யா ''இரு, இரு,'' என்று ஜாடை காட்டினாள், ரகசியமாக. ஆனால், அவனை இனி நாம் ஆட்கொள்ளப் போகிறோம் என்ற பெருமை அவளைத் திக்குமுக்காடச் செய்து கொண்டிருந்தது.

இவ்வளவு தூரம் எல்லாம் சுமுகமாய் முடிந்து விடவே, கடைசி நாள் காரியங்களுக்கு ராதா தங்குவான் என்றுதான் எல்லோரும் எதிர்பார்த்தார்கள். ஆனால் அவன் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமலே மோட்டார் பைக்கில் திரும்பி விட்டான்.

மதுரைச் சாலையில் அவனைத் தற்செயலாகச் சந்தித்த புரோகிதர் மட்டும் வந்து சொன்னார்: ''அந்தப் பயல், 'ஓய்! உம்முடைய தன்மைக்காகத்தானையா நான் வராமலிருக்கிறேன். டபிள் ரேட் வசூல் பண்ணிப் பிழைத்துப் போங்கள்' என்று சொல்லிவிட்டுப் போகிறான்! என்ன திமிர் பாருங்களேன்!''

சத்யா வாயைப் பொத்திக்கொண்டு சிரித்தாள் அதைக் கேட்டு.

அதற்கடுத்த இரண்டு நாளில் அவள் உற்சாகம் மறுபடியும் கொஞ்சம் கொஞ்சமாய் வாடத் தொடங்கியது வெய்யிலில் கிடந்த மலர்போல. ராதாவிடமிருந்து எவ்விதத் தகவலையும் காணோம். வீட்டின் புதிய எஜமானர் என்ற முறையில் சாரங்கபாணி ஒய்வு ஒழிச்சல் இல்லாதிருந்தார். உயில் விஷயங்கள் அவர் மூலமாய் மணிக்கும் தெரிந்திருக்க வேண்டும். சத்யாவை நெருங்கிப் பேசப் பிடிக்காதவன் போல் அவனும் ஒதுங்கியிருந்தான். ஆக ராதாவைப்பற்றி அவனிடமிருந்தும் செய்தியறிய முடியாது போயிற்று.

பதின்மூன்றாம் நாள் முடிந்ததும்—

''எனக்கு இன்னும் ஒரு வாரம் ஆகும், எல்லாவற்றை யும் முடித்துக்கொண்டு புறப்பட. நீங்கள் இரண்டு பேரும் முன்னால் போங்கள்,'' என்று சாரங்கபாணி திருநெல்வேலி எக்ஸ்பிரசுக்கு இரண்டு முதல் வகுப்பு டிக்கெட்டுகளைக் கொணர்ந்து தந்தார்.

'அவர், அத்தான் எங்கே? அவரிடம் சொல்லாமல், அவரைப் பார்க்காமலா போவது?' என்று கேட்க முடியாமல் சத்யாவின் நெஞ்சம் ஊமையாய் அலறிற்று.

நல்ல வேளை. மீனலோசனி, ''இந்தப் பிள்ளை கண்ணிலேயே படவில்லையே?'' என்றாள்.

''எல்லாம் சாயந்தரம் ஸ்டேஷனுக்கு வருவான். காலேஜுக்குச் சொல்லி அனுப்பியிருக்கிறேன்,'' என்று சாரங்கபாணி சொன்னபிறகுதான் சத்யாவுக்கு உயிர் வந்தது.

பதினைந்து நாள் பழக்கத்தில் தனக்கு இரண்டாவது தாயகம் மாதிரி ஆகிவிட்ட அந்த வீட்டையும் மனிதர்களை யும் சூழ்நிலையையும் பிரிந்து சத்யா தாயுடன் கிளம்பிய போது, இனம் தெரியாத ஏக்கமும் சுமையும் அவள் மனத்தில் நிரம்பியிருந்தன. அதை நீக்கும் விதத்தில் ராதா வந்திருந்தால் எத்தனையோ ஆறுதலடைந்திருப்பாள்.

காணோம் அவனை.

திருநெல்வேலி எக்ஸ்பிரசுக்காக மதுரை நிலையத்தில் நின்றிருந்த நேரத்தில், ராதாவை எதிர்பார்த்துப் பார்த்து அவள் கண்கள் பூத்துப் போயின. நின்று நின்று காலும், திரும்பித் திரும்பிக் கழுத்தும் நோவெடுத்தன. பச்சை விளக்குகள் ஆட்டப்படும்போதெல்லாம் அவளுடைய உணர்வுகள் ஆடின. மணி அடிக்கப்பட்டபோதெல்லாம் அவள் இருதயத்தில் வலித்தது. போர்ட்டர்கள் ஓடும் போது, பிரயாணிகள் சேரும்போது, பெட்டி படுக்கைகள் நகரும் போது, சில்லறைகள் ஓசையிடும்போது தாள



முடியாத வேதனையால் தவித்துத் தவித்துப் போனாள் அவள்.

வரக்கூடாது, அதற்குள் வண்டி வரக்கூடாது என்று வேண்டிக்கொண்ட தெய்வங்களெல்லாம் அவளை மோசம் செய்தன. எமன்போல வந்து நின்றது எக்ஸ்பிரஸ். ''ஹூம்!'' என்று ஒரே பெருமூச்சில் அம்மா தனது ஏமாற்றத்தை வெளிப்படுத்திக்கொண்டபோது, அவளைக் கட்டிக்கொண்டு ஓவென்று கதற வேண்டும்போலிருந்தது சத்யாவுக்கு.

ஆனால் இருபத்தைந்து நிமிடங்களுக்குப் பிறகு வண்டி சோழவந்தானில் நின்றபோது—

கனவா? பிரமையா? அழுது புலம்பிய நெஞ்சு தானாகவே ஏற்படுத்திக்கொண்ட அற்பக் கற்பனையா?

''சத்யா! ஏய் சத்யா!'' என்று கூப்பிட்டவாறே பிளாட்பாரத்தில் இரைக்க இரைக்க வந்து நின்றான் ராதா.

''நல்ல பிள்ளையடா நீ!'' என்று மீனலோசனி அவனைக் கடிந்தபோது, 'ஹஹ்ஹூம்...' என்று அவன் சிரத்தைப் பிடித்து உலுக்கி, பொலபொலவென்று சிறுங்க வேண்டும் போலிருந்ததை எப்படித்தான் சத்யா கட்டுப் படுத்திக் கொண்டாளோ! கண்ணீருக்குத்தான் நாணமில்லை 'நானும் பார்க்கிறேன் அத்தானை' என்று சொல்லிக்கொண்ட மாதிரி வெட்கமில்லாமல் முத்து முத்தாக உருண்டு உருண்டு வெளிவந்துவிட்டது.

''மதுரையில் வண்டியை மிஸ் பண்ணிவிட்டேன், அத்தை! டாக்ஸி பிடித்துக்கொண்டு இங்கே வந்து மடக்கினேனாக்கும்!'' என்றான் ராதா.

''அந்த மட்டும் நல்ல புத்தி வந்ததே உனக்கு!'' என்றாள் மீனலோசனி.

"தேவை ஏற்பட்டால் புத்தி தன்னாலே வரும் அத்தை!" என்ற ராதா, "எஜமானியம்மா! உங்களைத் தான்," என்று அழைத்தான்.

உதட்டைச் சுழித்துப் பொய்க் கோபம் காட்டினாள் சத்யா.

"எதற்காக வந்தேன் என்று கேட்கவில்லையே தாங்கள்? முதல் இன்ஸ்டால்மெண்டுக்கு அப்ளிகேஷன் போடத்தான்!" என்றான்.

"என்னது!" சத்யா திடுக்கிட்டாள்.

"கையிலே பைசா இல்லை. ஊருக்குப் போனதும் ஐந்நூறு ரூபாய் அனுப்பு. அதைச் சொல்லத்தான் ஓட்டமாய் ஓடிவந்தேன். தெரிகிறதா?"

"அட பாவிப் பிள்ளை, கெடுத்தாயே!" என்று அயர்ந்து போனாள் மீனலோசனி.

சத்யா? மயக்கம் அவள் மூச்சை நிறுத்தியிருந்தது.

அந்தச் சோழவந்தான் சந்திப்புக்குப் பிறகு, அவனிட மிருந்து கடிதங்களுக்குக் குறைச்சலிருக்கவில்லை.

அனேகமாய் மாதம் எழுநூறு எண்ணூறுக்குக் குறைவில்லாமல் அனுப்புவது வழக்கமாகிவிட்டது.

சத்யா எம். பி. பி. எஸ். மூன்றாவது வருடம் படித்துக் கொண்டிருந்தபோது, அங்கே பி. ஏ. யில் மூன்றாம் முறையாக ராதா கோட்டை அடித்துவிட்டான் என்று தெரிய வந்தது.

விளையாட்டாகவோ வேடிக்கையாகவோ சாரங்க பாணி ஒரு வார்த்தை சொல்லிவிட்டார் சத்யாவின் காதில் படும்படியாக, "படிப்பு என்று வைத்துப் பார்த் தால் சத்யாவுக்கு வேறு மாப்பிள்ளை தேட வேண்டியது தான்" என்று.

அந்த வேதனையோடு கல்லூரிக்குப் போனால் எல்வனவோ பதவிசாகப் பேசுகிறவள் என்று பெயர்



பெற்ற சுலோசனாகூட, "ஏன் சத்யா, பி.ஏ. ரிஸல்ட்கள் வந்திருக்கிறதே? உன் ஆசை அத்தான் என்ன ஆனார்?" என்று கேட்டு விட்டாள்.

அதையும் பொறுத்துக் கொண்டபோது சாயந்தரத் தபாலில் ஒரு கடிதம் வந்தது மதுரையிலிருந்து.

தோல்வியைப்பற்றி ஒரு வார்த்தை இருக்க வேண்டுமே அதில்? ஊஹூம். இன்லண்டு உறையைப் பிரித்தால்— ஒரே வரி:

"அவசரத் தேவை: ரூ. ஐந்நூறு."

'சீ! இப்படிக்கூட ரோஷம் கெட்ட மனிதர் இருப் பாரா?' என்று சத்யாவுக்கு வந்த கோபத்தில், கடிதம் சுக்கல் சுக்கலாகிப் பறந்தது.

வழக்கமாய், கடிதம் வந்த மறு தினமே பணத்தை அனுப்பி வைக்கிறவள் அந்த முறை கம்மென்றிருந்தாள். 'வெற்றிக் கொடி நாட்டியதற்காக விழாக் கொண்டாடு வது பாழாகி விடுமாக்கும்?' என்று தனக்குள் உறுதி சொல்லிக்கொண்டு பேசாமலே இருந்தாள்.

மூன்றாம் நாள் தந்தி வந்தது. அதற்கும் அசைய வில்லை. சாரங்கபாணிகூட, "என்ன அவசரமோ என்னவோ, அனுப்பித் தொலையேன்," என்று சிபாரிசு செய்தார்.

"பண சமாசாரத்தை என் இஷ்டத்துக்கு விட்டது உண்மைதானே? பிறகென்ன, பேசாமலிருங்கள்," என்று தந்தையையே அடக்கிவிட்டாள்.

ஐந்து நாள் ஓடிவிட்டது. மாதக் கடைசி. 'எப்படியும் அடுத்த மாத முதல் வாரத்தில் பணம் அனுப்பவேண்டி யிருக்கும். சேர்த்து அனுப்பிவிடலாம்,' என்று சத்யா நினைத்திருந்தாள்.

இந்த எண்ணங்களில் உழன்று கொண்டிருந்த காரணத்தால், பேராசிரியர் ஜார்ஜ் 'எமர்ஜன்ஸி சர்ஜரி'

பற்றி வகுப்பு நடத்திக் கொண்டிருந்தபோது அவன் செவியில் வார்த்தை விழுந்ததே தவிர மனத்தில் பதிய வில்லை. வகுப்பு முடிந்த பிறகு அவரைச் சந்தேகம் கேட்டாள். ''லைப்ரரியில், டபிள்யூ. எச். வி. ரோமானி எழுதிய புத்தகம் இருக்கும், 'எமர்ஜன்ஸி சர்ஜரி இன் பிராக்டிஸ்' என்று. போய்ப் பார்த்துக்கொள்,'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

நூல் நிலையத்தில் அந்தப் புத்தகத்துக்காகக் குடைந்து கொண்டிருந்த சமயம்...

''நமஸ்காரம் எஜமானியம்மா'' என்றவாறு அவள் முன் சிரித்துக்கொண்டு நின்றான் ராதா. அவன் கையில் ஒரு பெரிய பலகையோ அட்டையோ, காகிதம் சுற்றி இருந்தது.

என்ன பேச முடியும்? அதுவும் கல்லூரி லைப்ரரி நடுவே? இந்த நேரத்தில்?

''வெளியே போகலாம் வாருங்கள்,'' என்று அடி யெடுத்து வைத்தாள் சத்யா.

''இரு. இரு. எனக்குப் பணம் தரப் போகிறாயா இல்லையா என்று இங்கேயே தெரிந்துகொண்டு பிறகு அந்தண்டை போகலாம்,'' என்றான் ராதா.

சத்யா பீதியுடன் சுற்றுமுற்றும் பார்த்துக்கொண் டாள். மூலைக்கொருவராக உட்கார்ந்திருந்த போதிலும், மாணவர்களின் கண்கள் புத்தகத்தில் இல்லை.

''எதுவானாலும் வெளியே போய்ப் பேசலாம்,'' என்றாள் கீழ்க் குரலில்.

''எதுவானாலும் இங்கேயே பேசிவிடலாம். பணம் தரப் போகிறாயா, இல்லையா?''

சத்யாவின் முகம் சிவந்தது. ''தரமாட்டேனென்று வைத்துக் கொள்ளுங்கள். அப்புறம்?''



''அப்புறம் இது...'' என்ற ராதா, கையிலிருந்த பொருளைப் பிரித்தான். இரண்டடி நீளம், இரண்டடி அகலமுள்ள அட்டை அது. ''நீயே வாசித்துப் பார்,'' என்று சொல்லி, அவளுக்கு மட்டுமே தெரிகிற மாதிரி காட்டினான்.

சத்யாவின் முகம் வெளிறியது.

''அநீதி— சத்யாவின் கொடுமை— உயிர் போகும் வரை உண்ணாவிரதம்,'' என்ற எழுத்துக்களை விட்டு நகர மறுத்தன அவள் கண்கள்.

''நான் முன் ஜென்மத்தில் க்ளைவ்.'' ராதா அட்டை யைத் திரும்பச் சுற்றினான் காகிதத்தில். அவன் முகத்தில் கேலிச் சிரிப்போ நமாஷோ இல்லை. ''க்ளைவ் சாக்கடையின் குறுக்கே படுத்தானாமே, அதே மாதிரி செய்வேன். உண்ணாவிரத 'ட்ரிக்'குகள் ஏராளமாய்த் தெரியும் எனக்கு. இங்கேயே, மெடிகல் காலேஜ் வாசலி லேயே உட்காருகிற நோக்கத்தோடுதான் புறப்பட்டு வந்திருக்கிறேன், இந்த அட்டையோடு.''

சத்யாவின் உதடு துடித்தது. ''முதலில் வெளியே போகலாம் வாருங்கள்.''

மீனலோசனி அப்போது பூஜையறையில் இருந்தாள். ராதா வந்ததும் தெரியாது; பல்லைக் கடித்துக்கொண்டு, ஜிவுஜிவுவென்று சிவந்த முகத்தோடு உள்ளே வந்த மகளை யும் அவள் பார்க்கவில்லை. பீரோவைத் திறந்து பணத்தை எடுத்துத் தந்ததும் அவள் அறியாள். பணத்தைப் பெற்றுக் கொண்டவன், 'இப்படியல்லவா இருக்க வேண்டும், தங்கம்!' என்று சத்யாவின் கன்னத்தில் தட்டியதையோ, தட்டிய கையை ஆங்காரத்துடன் சத்யா தள்ளியதையோ அவள் காணவில்லை. அவன் வாசலில் இறங்கும்போது தான் கையில் பூஜைத் தட்டுடன் வந்தவள், ''யாரு, ராதாவா? எப்போதடா வந்தாய்? எங்கே போகிறாய்?'' என்றாள்.

''என்ன அத்தை அது? விபூதியா? சத்யாவுக்குக் கொஞ்சம் ஊது எனக்கு ரயிலுக்கு நேரமாகிறது,'' என்று சொல்லிவிட்டுப் போய் விட்டான்.

ஆனால் அவன் ரயிலுக்குப் போகவில்லை என்பது இரண்டு நாள் கழித்து மணி மூலமாகத் தெரிந்தது. ''ராதா ஊரிலேதான் இருக்கிறார். நேற்று ஒற்றைவாடைத் தியேட்டரில் பார்த்தேன். ராணியோட நாடகம்,'' என்றான் அவன்.

## பத்து

அந்த நாடகக்காரியின் வீட்டிலேதான் ராதா தங்கியிருக்கிறானாம்.

மணி எளிதாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

சத்யா வாயைத் திறக்கவில்லை. மிதிபட்ட நாகமாக, தனக்குள்ளேயே சீறி விஷம் கக்கிக் கொண்டிருந்தாள். தன் மீதே வெறுப்பு ஏற்பட்டது அவளுக்கு 'இத்தனை அலட்சியப்படுத்துகிறவரிடம் திரும்பத் திரும்ப இந்தப் பேதை நெஞ்சு ஏன் அடிமைப்படுகிறது? தங்கத்திலே செய்த விலங்கென்பதால் கழற்ற மனம் வரவில்லையா!' என்று தன்னையே நொந்து கொண்டாள்.

ஆனால், அதற்கப்புறம் பண விஷயத்தில் ராதாவுடன் எவ்விதத் தகராறும் வைத்துக் கொள்ளவில்லை. கடிதம் வந்த இருபத்து நாலு மணி நேரத்துக்குள், ரூபாயுடன் தபாலாபீசில் தானேகூடப் போய் நிற்பாள், வேறு ஆள் கிடைக்காவிட்டால். லைப்ரரி நிகழ்ச்சி, நினைத்தாலே நடுங்க வைத்தது அவளை.

சாரங்கபாணி கேலி செய்தார்: ''ஏது, பரிபூரண சரணாகதி போலிருக்கிறதே! அவனை எதிர்த்துக் கேட்பதில்லையென்று விட்டுவிட்டாயா?''



சத்யா கோபமாக, ''இதோ பாருங்கள். அவருக்குப் பணம் அனுப்பக்கூடாது, அல்லது முடியாது என்று நீங்கள் தீர்மானித்துவிடுங்கள். அதற்கு நானும் கட்டுப்படுகிறேன். உங்கள் உரிமையை உபயோகிக்க நீங்கள் பயப்படுகிற போது, நான் மட்டும் அவரிடம் கெட்ட பெயர் வாங்கிக் கொள்ள வேண்டுமா?'' என்றாள்.

''சரி, சரி. எனக்கென்ன? உன் பாடு அவன் பாடு,'' என்று சாரங்கபாணியும் விட்டுவிட்டார்.

சத்யா எம். பி. பி. எஸ். பாஸ் பண்ணி, ஹவுஸ் சர்ஜனாகப் பயிற்சி பெறத் தொடங்கிய காலம் வரையில் ராதாவின் உறவு இப்படியே இருந்து வந்தது.

கடைசியாக, மூன்று மாதத்துக்கு முன்பு, மதுரையிலிருந்து வந்தான் ராதா.

''சத்யா, பத்தாயிரம் ரூபாய் வேண்டும்,'' என்றான்.

திடுக்கிட்டாள் சத்யா. சிறுகச் சிறுக எவ்வளவு தரம் வேண்டுமானாலும் பணம் வாங்கியிருக்கிறானே தவிர, ஒரு சமயத்தில் இவ்வளவு பெரிய தொகை கேட்டது கிடையாது.

''அப்பாவைக் கேட்டுக்கொண்டு சொல்கிறேன்,'' என்று பதிலளித்தாள்.

''ரைட்டோ,'' என்று கூறிவிட்டு, ராதா உற்சாகமாகக் குளித்தான்; சாப்பிட்டான்; டிரான்ஸிஸ்டரில் பாட்டுக் கேட்டான்; அத்தையைச் சீண்டி வம்புக்கு இழுத்தான்; மணியைக்கூட இழுத்து வைத்துக்கொண்டு கேரம் ஆடினான்.

காலையில் வெளியே புறப்பட்டுப் போயிருந்த சாரங்கபாணி, இரவு தான் வர நேரமாகும் என்று டெலிபோன் பண்ணித் தெரிவித்தார். ''நானும் கொஞ்சம் வெளியே சுற்றிவிட்டு வருகிறேன்,'' என்று ராதா கிளம்பினான்.

மணி கேரம் காய்களை எண்ணி அடுக்கி வைத்தான். பலகையை எடுத்துச் சுவரோரமாகச் சாய்த்துவிட்டு, வாசல் வரை சென்று ராதா போய்விட்டானா என்பதை ஊர்ஜிதம் செய்துகொண்டு திரும்பி வந்தான். ''நான் ஒரு விஷயம் கேட்டால் கோபிக்க மாட்டீர்களே சத்யா?'' என்றான் பணிவோடு.

''என்ன விஷயம்?'' என்று கேட்கும்போதே ராதாவைப் பற்றிய விஷயம்தான் என்று சத்யா ஊகித்துவிட்டாள்.

''ராதா பத்தாயிரம் ரூபாய் கேட்டாரா?''

''ஆமாம்.''

''யாருக்காக அதைக் கேட்கிறார் என்று எனக்குத் தெரியும்,'' என்றான் மணி.

விளக்கை விட்டு அந்தண்டை நகர மனமில்லாத பூச்சி போல, மணியிடமிருந்து வெட்டிக்கொள்ள இயலாமல் தடுமாறிய சத்யா, ''யாருக்காக?'' என்று கடைசியில் கேட்டுவிட்டாள்.

''ராணிக்காகத்தான்,'' என்று மணி பதிலளித்தான்.

நினைத்ததுதான்.

மணி தொடர்ந்தான்: ''ராணியின் மாமன் ஒருவர் இருக்கிறார். அவர்தான் சொன்னார். ஏதோ சினிமாப் படம் எடுக்கப் போகிறார்களாம். ஐம்பது பேரிடம் ஆளுக்குப் பத்தாயிரம் வாங்கி, கூட்டுக் கம்பெனி ஏற்படுத்தப் போகிறார்களாம்.''

சத்யா எழுந்து கொண்டாள். ''என்னவோ செய்யட்டும்.''

அக்கறையில்லாத மாதிரி பேசினாளே தவிர, ராதா வந்ததும் இந்த விஷயத்தைத் துருவிவிட வேண்டுமென்று உறுதி கொண்டாள். முடியுமானால், அந்தச் சாக்கடையில் அவன் விழாதபடி கடைசிவரை எதிர்த்துப் போராடுவது என்றும் தீர்மானித்திருந்தாள்.



இரவு எட்டு மணி வரையில் சாரங்கபாணி வரவில்லை. ஒன்பது மணி சுமாருக்கு உல்லாசமாய்ச் சீட்டியடித்தவாறு ராதா நுழைந்தான். வெராந்தாவில் படுத்திருந்த சமையற்காரரைக் கையில் இருந்த சிறு பிரம்பினால் ஒரு தட்டுத் தட்டி, ''எழுந்திருந்து சாப்பாடு போடும் ஓய்!'' என்றான்.

வீட்டிலிருந்த எல்லாரும் தூங்கியாயிற்று என்று எண்ணியிருந்தான் போலும். ஆகவே, உடைகளைக் களைந்து கொண்டிருந்தபோது சத்யா வந்து நின்றதும் ஆச்சரியத்துடன், ''ஓ! நீ இன்னும் விழித்துக்கொண்டுதான் இருக்கிறாயா?'' என்றான்.

''பத்தாயிரம் கேட்டீர்களே, எதற்காக?'' என்றாள் சத்யா, வேறெதுவும் பேசாமல்.

''ஏன்? ராணிக்காகத்தான் கேட்டேன். அவள் ஒரு சினிமா எடுப்பதற்காக மூலதனம் சேர்க்கிறேன் என்று, என் பங்காகப் பத்தாயிரம் கேட்டாள்,'' என்றான் சிறிதும் தயங்காமல்.

ஒரு நிமிடம் சத்யாவின் கோபம்கூடத் தணிந்து விட்டது. குறைந்தபட்சம், தன்னிடம் எதையும் ஒளிப்பதில்லையென்று ராதா வைத்துக் கொண்டிருக்கிறான் என்பதைக் கண்டபோது, அவனிடம் மீண்டும் கனிவு பிறந்தது.

''ஆனால் அந்தத் தொகை இனிமேல் வேண்டாம். அப்பாவைக் கேட்காதே,'' என்றான் ராதா.

காதில் விழுந்ததை நம்ப இயலாமல் அவன் முகத்தைப் பார்த்தாள் சத்யா. ''வேண்டாமா? ஏன்?''

ராதா பதில் சொல்லாமலே சமையல்கட்டுக்குச் சென்று மணையைப் போட்டுக்கொண்டு அமர்ந்தான். சமையற்காரர் தூங்கி வழிந்து கொண்டிருந்தார். சத்யா தண்ணீர் எடுத்து வைத்துவிட்டு ராதாவின் முகத்தை நோக்கினாள். அதிலே குடியிருந்தது கசப்பா, வெறுப்பா? அவளுக்குப் பிடிபடவில்லை.

''என்ன நடந்தது?'' என்று கேட்டுப் பார்த்தாள்.

''உஸ்!'' என்று உதட்டில் விரலை வைத்து, சமையற்காரர் இருப்பதைக் கண் ஜாடையினால் காட்டினான் ராதா.

சத்யாவின் நிம்மதி நீங்கி, கவலை தலைதூக்கியது. ராதா சாப்பிட்டு முடிக்கிறவரையில் காத்திருந்தாள்.

அவள் எவ்வளவுக்கெவ்வளவு சங்கடப்பட்டாளோ அவ்வளவுக்கவ்வளவு ராதா சாவதானமாக இருந்தான். ''எலுமிச்சம் ஊறுகாய் பிரமாதமாய் இருக்கிறது. ஓய்! இன்னும் கொஞ்சம் சாதம் போட்டு மோர் ஊற்றும். இரண்டாவது டோஸ் அடிக்கிறேன்,'' என்று நொட்டை விட்டுக்கொண்டு சாப்பிட்டான்.

தட்டிலேயே கையை கழுவிக்கொண்டு அவன் எழுந்த போது, மாடியில் அப்பாவின் அறையில் கடியாரம் பதினொன்று அடிப்பது சத்யாவின் காதில் விழுந்தது. அப்பாவின் கட்டில் லேசாய்க் கிறீச்சிடுவதிலிருந்து அவரும் உறக்கத்தில் இருக்கிறார் என்று கண்டு கொண்டாள்.

ராதா செருப்பை மாட்டிக் கொண்டான்.

சத்யா நிம்மதி இழந்தாள். ''எங்கே கிளம்புகிறீர்கள்? தயவு செய்து சொல்லிவிட்டுப் போங்கள்,'' என்று கெஞ்சினாள்.

சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான் ராதா.

''சத்யா! இதோ பார்,'' என்று அவள் மோவாயைத் தொட்டுத் திருப்பினான். ''கண்ணியமான குடும்பப் பெண்களின் காதிலே படக்கூடிய சமாசாரமாக இருந்தால் நானே சொல்ல மாட்டேனா?''

ராதா போய்விட்டான், இருளோடு இருளாக மறைந்து.

மறுநாள். பகல் பன்னிரண்டு மணி சுமாருக்கு, சாரங்கபாணியின் கார் வெகு வேகமாகப் பங்களாவுக்குள்



நுழைந்தது. காலையிலேயே ஏதோ அவசர அழைப்பு என்று வெளியே சென்றவர் அப்போதுதான் திரும்பியிருந்தார்.

சாரங்கபாணி காரிலிருந்தவாறே, ''சத்யா! அம்மாவைக் கூப்பிடு. நீயும் வந்து ஏறிக்கொள்,'' என்று அவசரமாக அழைத்தார்.

''அம்மா!'' என்று உள்பக்கம் நோக்கிக் கூவிவிட்டு, ஓடிச் சென்று காரில் பதற்றத்துடன் ஏறிக்கொண்டு, ''என்ன அப்பா? என்ன நடந்தது?'' என்று படபடத்தாள் சத்யா.

அவளுக்குப் பதில் கூறவில்லை சாரங்கபாணி. ''வாயேன் சீக்கிரமாய்!'' என்று உள்ளிருந்து வந்துகொண்டிருந்த மனைவியை அதட்டினார்.

''என்னங்க...... என்ன சமாசாரம்?'' என்று மீனலோசனியும் கலவரத்துடன் கேட்டவாறே காரில் அமர்ந்தாள்

எங்கே போக வேண்டும் என்பது டிரைவருக்குத் தெரியும் போலும். எதுவும் கேட்காமலே செலுத்தினான் காரை.

சாரங்கபாணி, தனக்குத் தானே பேசிக்கொள்கிற மாதிரி, ''நம் குடும்பத்துக்குத் திரும்பத் திரும்ப ஒரே ஒரு சமாசாரம்தான் உண்டு— ராதா சமாசாரம்,'' என்றார்.

சத்யாவின் குழப்பமும், பயமும் வரம்பு மீறி அதிகரித்தன. ''அத்தானுக்கு என்னப்பா? எங்கே இருக்கிறார் அவர்?''

''ஆஸ்பத்திரியில்,''

சத்யாவும் அவள் அம்மாவும், ''என்ன?'' என்று ஒரே சமயத்தில் திடுக்கிட்டபோது, கார் தனது ஆஸ்பத்திரியிலேயே நுழைவதைக் கண்டாள் சத்யா.

மணி, கேட்டருகிலேயே நின்றிருந்தவன் ஓடிவந்து, கதவைத் திறந்து, ''இப்போது பரவாயில்லை. நல்ல

நினைவோடு பேசிக்கொண்டிருக்கிறார்,'' என்று தெரிவித்தான்.

மீனலோசனி பதற்றம் பொறுக்க மாட்டாமல், ''எனக்கு ஒரே பயமாய் இருக்குதுங்க. என்ன நடந்தது என்று ஒரு வார்த்தை சொல்லாமல் அழைத்துக்கொண்டு போகிறீர்களே!'' என்று கணவரின் கையைப் பற்றிக் கொண்டு மன்றாடினாள்.

''ஸ்... இது ஆஸ்பத்திரி. பேசாமல் வா. உன் மருமகன் சமாசாரம் அவனுக்கும் ஆண்டவனுக்கும்தானே புரியும்,'' என்று கூறிவிட்டு, போலீஸ் மிடுக்கை வரவழைத்துக் கொண்டு, ஆனால் ஓசையின்றி, நடந்தார்.

மருமகன் சமாசாரம்? சத்யாவின் வேதனை பின்னும் அதிகரித்தது.

பழக்கமான முகங்கள் பல எதிர்ப்பட்டன சத்யாவுக்கு, டாக்டர் சம்பத், ''இன்று வரவேண்டாமென்று சொல்லியிருந்தேனே,'' என்று கேட்ட பிறகே சாரங்கபாணியையும் சத்யாவின் அம்மாவையும் கவனித்தார். ஏதோ குடும்ப விஷயம் என்று உணர்ந்து, ''அப்புறம் பார்க்கிறேன்,'' என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார்.

ஸ்பெஷல் வார்டின் கோடியை அடைந்ததும் மணி, ''இங்கேதான்,'' என்று ஜாடை காட்டினான்.

ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக ரணகளையும் துன்பத்தையும் காயத்தையும் கட்டையும் பார்த்து மனம் கெட்டிப்பட்டிருந்தாலும், கடந்த பதினைந்து நிமிடங்களாக சத்யாவின் உள்ளம் தூண்டில் புழுவாகத் துடித்துக் கொண்டிருந்தது. 'ராதாவின் உடம்பில் எந்த இடத்தில் எப்படிப்பட்ட கட்டுப் போடப்பட்டிருக்குமோ, என்ன நிலையில் அவர் கிடப்பாரோ' என்றெல்லாம் பயங்கரக் கற்பனைகள் செய்தபடி தந்தையைப் பின்தொடர்ந்து உள்ளே நுழைந்தாள்.



ராதா, சாதாரணமாகத்தான் படுத்திருந்தான். காயமோ கட்டோ இல்லை. ஆனால் களைப்பும் அசதியும் தெரிந்தன.

உள்ளே நுழைந்தவர்களைக் கண்டதும், ''ஸ்.....'' என்று ஆயாசமாகப் பெருமூச்சுவிட்டு, சற்று எழுந்தாற் போல் உட்கார முயன்றான்.

''வேண்டாமடா ராதா, அப்படியே படுத்திரு,'' என்று பதறிப்போய் அவனைத் தாங்கிக்கொண்டாள் மீனலோசனி.

சத்யா சிறிது நிம்மதியுடன் எட்ட நின்றாள். தனது வைத்திய ஞானத்தைக் கொண்டு அவனுக்கு என்னவாயிருக்கும் என்று ஊகிக்க முயன்றாள்.

''உட்காருங்கள் அத்தான்'' என்று மெலிந்த குரலில் பேசினான் ராதா, சாரங்கபாணியைப் பார்த்து. அவர் வேண்டா வெறுப்பாக அருகில் வந்து நின்றதும், ''முன்னாலேயே நான் உங்களிடமெல்லாம் சொல்லாமற் போனது தப்புதான். மூன்று நாலு வருஷமாகவே இந்தக் கம்ப்ளெயிண்ட் இருக்கிறது'' என்றான்.

''கம்ப்ளெயிண்ட்டா!'' என்று மீனலோசனி திடுக்கிட்டாள்.

''மதுரையில் ஒரு டாக்டர்கிட்டே காட்டி, போன வருஷம் மருந்து சாப்பிட்டேன்,'' என்று அவளைக் கவனியாமலே ராதா தொடர்ந்தான். ''ஊசிகூடப் போட்டுக் கொண்டேன். இந்த வருஷமும் தொடர்ந்து ட்ரீட்மெண்ட் பண்ணிக் கொண்டிருந்தால் சரியாயிருந்திருக்கும். நிறுத்தியதுதான் தப்பாகிவிட்டது.''

சத்யாவுக்குக் குழப்பம்தான் அதிகப்பட்டது. தொண்டையைச் செருமிக்கொண்டு அறைக்கு வெளியே வந்தாள். மணியும் குறிப்புப் புரிந்துகொண்டு வந்து நின்றான்.

''என்ன இதெல்லாம்?'' என்று கேட்டாள் சத்யா.

''ராதா சமாசாரம்தானே?'' என்று சொல்லிவிட்டு அவன் சிரித்த விதம் சத்யாவுக்குப் பிடிக்கவில்லை. பொறுத்துக்கொண்டு மேலே கேட்டாள்.

மணி சொன்னான்: ''நேற்று ராத்திரி இவர் அந்த ராணி வீட்டுக்குள் நுழைந்து என்னவோ சண்டை போட்டிருக்கிறார். சினிமா எடுக்கப் போவதாய்ப் பத்தாயிரம் கேட்டானே, அது ஏதோ பித்தலாட்டம் போலிருக்கிறது. பணத்தோடு அவன் சிங்கப்பூருக்கோ ஜப்பானுக்கோ கம்பி நீட்டத் திட்டம் போட்டிருப்பதாய் எனக்கும்கூடக் காதில் விழுந்தது.''

சத்யா பொறுமை இழந்து, ''அது இருக்கட்டும். இவர் இங்கே வந்து படுக்கிற அளவுக்கு என்ன நேர்ந்தது?'' என்று விசாரித்தாள்.

''அதென்னவோ ராதாவுக்குத்தான் தெரியும். ராதா நடுராத்திரியில் தன் வீட்டுக்கு வந்து கலாட்டா பண்ணுவதாக ராணி போலீசுக்குப் போன் பண்ணினாளாம். போலீஸ் போனபோது, இவர் மயக்கமாய் விழுந்து கிடந்தாராம். உங்கள் உறவுக்காரர் என்று தெரிந்து, சாருக்கு ராத்திரியே போன் பண்ணி விஷயத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

'மயக்கமாய்க் கிடந்தார்' என்று காதில் விழுந்த பிறகு வெளியே நிலைகொள்ளவில்லை சத்யாவுக்கு. திரும்ப ராதா படுத்திருந்த அறைக்கு ஓடினாள்.

''இப்படி எத்தனை நாளாக இருக்கிறது?'' என்று சாரங்கபாணி கவலையுடன் விசாரித்துக் கொண்டிருந்தார். ஆதங்கத்தோடு அவன் தலையை வருடிக் கொண்டிருந்தாள் மீனலோசனி.

''முன்பெல்லாம் இரண்டு மூன்று மாதத்துக்கொரு முறை வந்துவிடும்,'' என்று பலவீனமான குரலில்



சொல்லிக் கொண்டிருந்தான் ராதா. ''நான் பாட்டுக்கு நடுராத்திரியில் தூக்கத்தில் எழுந்து, நாலு மைல் ஐந்து மைல் நடந்தே போய்விடுவேனாம். எங்கேயாவது மயக்கம் போட்டு விழுந்து கிடப்பேனாம். இப்போது பரவாயில்லை. வருஷத்துக்கு ஒரு தரம் இரண்டு தரம் தான் வருகிறது......''

''ஏண்டா ராதா, உனக்கில்லாத பணமா, காசா? உன் அந்தஸ்துக்கு, சீமைக்கே போய் வைத்தியம் பண்ணிக் கொள்ளலாமேடா? இப்படியா அலட்சியமாய் விட்டு வைத்திருப்பாய்?'' என்று அத்தை அவன் முகத்தைத் தடவிக்கொண்டே பேச, சாரங்கபாணி, ''அப்படியானால் நீ உனக்கே தெரியாமல் தூக்கத்தில் நடந்தா அவ்வளவு தூரம் போனாய்?'' என்று வியப்புடன் வினவ, ராதா, ''ஆமாம்...... என் சினேகிதன் ஒருவன் வீட்டுக்குப் போய்ப் படுத்திருந்தேன்...... அவனுக்கும் தெரியாமல் புறப்பட்டிருக்கிறேன் போலிருக்கிறது,'' என்று பதில் கூற—

சத்யா கிட்ட நெருங்கிக் கவனித்தாள். தூக்கத்தில் நடப்பதென்றால்— ஸோம்னாம்புலிஸம்— பார்த்ததும் டயாக்னஸ் செய்கிற மாதிரி வெளி ஸிம்ப்டம் ஒன்றும் இருக்காதென்று படித்திருந்தது சரிதான்... இருந்தாலும், உள்ளூர ஒரு சோர்வும் சோகையும் தென்படுகின்றன. நரம்புத் தளர்ச்சி...... டாக்டர் சம்பத்தைக் கேட்டால் ஸ்பெஷலிஸ்ட் யாரென்று சொல்வார்...... இதை இப்படியே விடக்கூடாது......

ராதாவிடம், ''இரண்டு நாள் ஓய்வு எடுத்துக் கொண்டால் சரியாகிவிடும் என்று டாக்டர் சொல்லியிருக்கிறார். கவலைப்படாதே,'' என்று ஆறுதல் கூறினார் சாரங்கபாணி.

''என்னங்க, இது பணம் கட்டின வார்டுதானே? நான் வீட்டுக்குப் போய், ராதாவுக்கு வேண்டிய பழமோ துணி மணியோ எடுத்துக்கொண்டு வந்து விடுகிறேன். இவனை இங்கே ஆஸ்பத்திரியிலே விட்டுவிட்டு எனக்கு அங்கே

இருப்புக் கொள்ளாது,'' என்றவாறு மீனலோசனி எழுந்தாள்.

சாரங்கபாணியும், ''ஆமாம். நீ இங்கே துணை இருக்க வேண்டியதுதான்,'' என்று ஆமோதித்தார்.

சத்யா என்ன பேசுவதென்று தெரியாமல் தவித்து நிற்கையில், ராதாவே, ''அத்தை வருகிற வரையில் சத்யா இங்கே இருக்கட்டுமே?'' என்றான்.

''ஆமாம் அப்பா, நான் என் சீஃப்பையும் மற்ற டாக்டர்களையும் கன்ஸல்ட் பண்ணிவிட்டு வீட்டுக்கு வருகிறேன்,'' என்று சத்யா கூறவே, அவளைத் தவிர மற்றவர்கள் கிளம்பினார்கள். சாரங்கபாணி அறை வாயிலில் நின்றிருந்த வேறொரு போலீஸ் அதிகாரியிடம் தாழ்ந்த குரலில் ஏதோ கூறிக்கொண்டே சென்றார்.

அவர்கள் தலை மறைகிற வரையில்தான் காத்திருந்தாள் சத்யா. மறைந்ததும் மண்டியிட்டு ராதாவின் தலைமாட்டில் உட்கார்ந்து, ''இப்படி ஒரு கம்ப்ளெயிண்ட் இருப்பதை என்னிடம் சொல்லாமலே மறைத்தீர்களே அத்தான்?'' என்று துயரமும் வேதனையும் கலந்த குரலில் விம்மினாள்.

ராதா பதிலளித்தான்: ''சத்யா! நான் எந்த நிமிஷத்திலும் செத்து விடுவேன். என் ஏழரை லட்ச ரூபாய்ச் சொத்தையும் நீயே வைத்துக்கொள். நிறைய நைலக்ஸ் புடைவைகள் வாங்கிக் கட்டிக்கொள். மிஞ்சுவதைக் கொண்டு ஏகாதசி உபவாசம் இருப்பவர்களின் நிவாரணத்துக்காக ஒரு நிதி ஏற்படுத்து... நான் பிராணனை விட்டதும் நேரே வைகுண்டம் போகணும். என்ன?''

சரேலென நிமிர்ந்து அவன் முகத்தை நோக்கினாள் சத்யா.

அங்கே விளையாடிய குறும்புச் சிரிப்பு!

''அத்தான்!'' என்று அவன் மார்பின்மீது தலை புதைத்துக்கொண்டு, ஆனந்தத்தால் விசித்தாள்



மறுவினாடி. அவனுடைய கிராப்புச் சுருளை இரண்டு கையாலும் பிடித்து உலுக்கிக் கலைக்க வேண்டும் போன்ற ஒரு மகிழ்ச்சி வெறி பிறந்தது அவளுக்குள்.

''உஸ், உஸ்! இதென்ன ஆஸ்பத்திரியா, மெரினாவா? நகர், நகர்!'' என்று கொஞ்சலாக அதட்டினான் ராதா. ''சத்யா! ஏய் சத்! இப்படி நிமிர்ந்து பார்! என் தூக்க வியாதியை நீ கூடவா நிஜமென்று நம்பி விட்டாய்? ஊம்?''

''போங்கள்!'' என்று கண்ணீரைச் சுண்டினாள் சத்யா. ''பத்து நிமிஷத்துக்குள் நான் பத்துத் தடவை செத்துப் பிழைத்தேனாக்கும்! இப்படித்தான் என்னை அழவைப்பதா?''

''சத்தம்!'' என்று அவள் உதட்டின்மீது விரலை வைத்தான் ராதா. எனக்கு வேறே வழியில்லை. அந்தச் சிறுக்கியிடம் நான் கொடுத்திருந்த பணம், நகை நட்டு எல்லாவற்றையும் திருப்பிக் கேட்கலாமென்றுதான் போனேன். அவள் எதற்கும் துணிந்தவள். போலீசுக்குக் கம்ப்ளெயிண்ட் கொடுத்து விட்டாள். இப்படியொரு நாடகம் நடத்தா விட்டால் என் கதி என்ன ஆகிறது?''

''ஏன், என் கதி மட்டும்?'' என்று திருப்பிக் கேட்டாள் சத்யா.

அதற்கடுத்த வாரம் அவன் புறப்பட்டான் காஷ்மீருக்கு, உடம்பைத் தேற்றிக்கொள்ள. என்னதான் ஒழுங்காக சட்டத்துக்கு உட்பட்டுக் காரியம் செய்திருந்தபோதிலும் ராணி வீட்டு நிகழ்ச்சியினால் கொஞ்சம் சமூக கிளம்பியிருப்பதைச் சாரங்கபாணி உணர்ந்திருந்தார். ஆகவே, சிறிது நாளைக்கு ராதா வேறெங்காவது போய் இருப்பது நல்லதுதான் என்று நினைத்தார்.

''தாராளமாய்ப் போ. ஆனால் ஒரு நிபந்தனை,'' என்றார் அவர்.

''என்ன?''

''திரும்பி வந்ததும் நீ முதல் வேலையாக சத்யா கழுத்தில் தாலி கட்டிவிட்டு, உருப்படுகிற வழியைப் பார்க்க வேண்டும்,'' என்றார் சாரங்கபாணி. அப்படிச் சொல்லிவிட்டு மனைவியைப் பார்த்துக் கொண்டார். யோசனை அவரிடமிருந்து வந்ததுதான் என்பதை மறைக்கவில்லை.

நாணத்துடன் தலை கவிழ்ந்து நிற்கும் சத்யாவைப் பார்த்தபடியே, ''இவளையா! ஹூம்! வேறு வழியில்லை, சரி பண்ணிக்கொள்ளுகிறேன்,'' என்று விளையாட்டாகக் கூறி ஒப்புக் கொண்டான், ராதா.

கல்யாணத்துக்கு முகூர்த்தத் தேதிகூட நிச்சயம் செய்தாகி விட்டது, அவன் புறப்பட்டபோது.

மீனம்பாக்கம் விமான நிலையத்தில், 'காரவ' லுக்காகக் காத்திருந்தபோது அவன் சொன்ன கதைகள், ஆசைப் பேச்சுக்கள், விளையாட்டுக் கிண்டல்கள், வெட்கவைத்த சீண்டல்கள்— எல்லாம் நேற்றுதான் நடந்த மாதிரி சத்யாவுக்கு நினைவிருந்தன.

டாணென்று திரும்பிவிடுவதாகச் சொல்லிப் போனான் ராதா.

குறித்த நாளில், குறித்த நேரத்தில், குறித்த இடத்துக்குச் சொன்னபடி திரும்பி வந்தான்— ஆனால் புதிய கோலத்துடன்; மொட்டைச் சாமியார் வேடத்துடன்.

அவனைத் தெரிந்த அத்தனை பேரும் இடிந்து போயிருந்தாலும் சத்யா இடியத் தயாராயில்லை. கையிலிருந்து நழுவி நழுவிச் சென்று திரும்பத் திரும்பக் கிடைத்திருக்கும் திரவியம் அவளுடைய ராதா.

அவனை இனி ஒரு நாளும் திருப்ப முடியாது என்று உலகமே நம்பிக்கை இழந்தாலும், சத்யா இழக்க மாட்டாள். அதனால்தான் பவானி மடத்திலிருந்து இல்லத்துக்குத் திரும்பியபோது அவள் தனக்குள் சிரித்துக் கொண்டாள்.



'எத்தனையோ காரணங்களுக்காக, வேஷம் போட்டுக்கொண்டு, என்னென்னவோ லாம் ஆடினவர் அவர். இந்தச் சாமியார் அப்படித்தான் இருக்கும்,' என்று அவள் நி வியப்பென்ன?

## பதினொன்று

பள்ளிக்கூடம் விட்டமாதிரி, வெகு தூரத்தில் கடலின் ஆரவாரம் கேட்டது.

பாயில் எழுந்து உட்கார்ந்தார் ராதானந்தர். ரேடியம் பூசிய அலாரம், இருட்டில் மினுமினுத்து, மணி நான்காகிறது என்று தெரிவித்தது. மார்பை நிமிர்த்தி, நெஞ்சுக்கு நேராகக் கரம் குவித்து, ஒரு வினாடி தியானத்தில் ஆழ்ந்த போது அவரது இதயத்தில் மகிழ்ச்சி நிரம்பியிருந்தது. எத்தனை மணிக்குத் துயிலெழ நினைக்கிறாரோ அத்தனை மணிக்கு ஒரு நிமிடம் தாமதிக்காமல் எழுந்திருக்க முடிந்ததுதான் அந்த மகிழ்ச்சிக்குக் காரணம்.

ராதானந்தர் எழுந்து கொண்டார், அந்த மகிழ்ச்சியை உதறிவிட்டு. 'என்னால் முடிந்தது' என்ற அகங்காரம் ஆபத்தானது.

பவானி மடத்தின் கட்டடம் பளிங்கினாலும், வழவழப்பான காரையினாலும் ஆனதென்றாலும், மிகப் பழசாகி விட்டது. (இன்னும் ஏழெட்டு ஆண்டுகளில் நூற்றாண்டு விழாக் கொண்டாடவேண்டுமென்று பேச்சு உண்டு.) சுவர்களில் ஒருவித மங்கலும், சில இடங்களில் வெடிப்புக்களும் தெரிந்தன. பிரார்த்தனை ஹால் மட்டும், அடிக்கடி புழக்கத்திலிருந்ததால், நேற்றுத்தான் கட்டப்பட்ட மாதிரி புதிதாயிருக்கும். திருச்சூரிலிருந்து ஒரு தனவந்தர் அனுப்பியிருந்த பிரம்மாண்டமான இரண்டு வெண்கலக் குத்துவிளக்குகள் இரவு பகல் எந்நேரமும் சுடர் விட்டுக் கொண்டிருக்குமாறு ஏற்பாடாகியிருந்தது. வாசல்

...ாட்டம்கூட ஓரளவு சீராயிருந்தது. பூஜைக்கு ...ூச்செடிகள் நிரம்பியிருந்த இடமாகையால் ...ரித்துக்கொள்ள ஆட்கள் இருந்தனர்.

...இடங்கள்?

...ாயுற்றிருக்கும் குழந்தைகளைக் கவலையுடனும் ...றையுடனும் நோக்குகின்ற தாய் மாதிரி, ராதானந்தர் ...த்தின் பலவீனமான பகுதிகளைப் பார்வையிட்டவாறே ...வெளியே வந்தார்.

வந்த புதிதில் அவரை வரவேற்பதற்காகவும், இருத்திப் பழக்கப்படுத்துவதற்காகவும் பெங்களூரிலிருந்து வந்திருந்த இரண்டு துறவிகளும் இப்போது திரும்பிவிட்டார்கள். சமையலறையைக் கவனித்துக் கொள்ளும் மலையாள நாயர் ஒருவர், 'பையா' என்று அழைக்கப்படும் அவருடைய உதவியாளர். ஒவ்வொரு நாளும் மாலையில் இரண்டு மணி நேரம் வந்திருந்து (இலவசமாக) கணக்கு வழக்குகளைப் பார்த்துக் கொடுக்கும் போஸ்டல் ஆடிட் குமாஸ்தாவான கிழவரொருவர், கூட்டிப் பெருக்கிச் சுத்தம் செய்தல்— தோட்டம்— பியூன் இவைகளுக்கெல்லாமாகச் சேர்த்து முருகேசன் என்ற ஆள்— இவ்வளவு பேரும் அவருடைய குழந்தைகள்தான்.

அதாவது—

பூஜை ஹாலுக்கு வெளியே இருந்த மரப் பெஞ்சியில், திறந்த மார்பை வெறும் கைகளால் மடித்து மூடிக் கொண்டு துயிலும் சின்ன சுவாமிஜியைக் கனிவோடு பார்த்தவாறு சில நிமிடங்கள் நின்றார் ராதானந்தர். தோட்டத்திலிருந்து விஸ்ஸென்று வரும் வைகறைக் குளிர் காற்றில் அவருடைய மேனி சிலிர்ப்பது தெரிந்தது. தமது அங்கவஸ்திரத்தை எடுத்துப் போர்த்துவிட்டு, வீதிக்கு வந்தார்.

அரைத் தூக்கத்தில் தெரியும் கனவுபோல, அலை கடலின் நீர்ப்பரப்பு தெளிவற்றுப் புலப்பட்டது. அதை



நோக்கி நடக்க நடக்க, சமுத்திரத்தின் ஆர்ப்பாட்டம் அதிகரித்துக் கொண்டே போயிற்று.

காவி வேட்டியை இறுக்கமாய்க் கட்டிக் கொண்டு அலைகளைக் கையால் அணைத்தவாறே இறங்கினார் ராதானந்தர். மார்பின்மீது ஏறிய சில்லென்ற நீர், முகத்தையும், தலையையும் கடந்து வழிந்தபோது, நாற்புறமும் சூழ்ந்திருந்த ஜலப் பிரவாகத்தின் ஆழத்தில் முங்கி முங்கி நீராடியபோது, ராதானந்தரின் எண்ணங்கள் தண்ணீர்த் துளிகளைப் போலவே தெறித்து உருண்டு சிதறின

சின்னச் சாமியார்— அவருடைய சொந்தப் பெயர் அல்லது தீட்சைப் பெயர் யாருக்கும் தெரியாது என்கிறார்கள்— உடம்பை வற்றலாக்கிக் கொள்பவரே உண்மையான துறவி என்பதில் நம்பிக்கை இல்லாதவர். உபவாச நாட்களில் அவரைவிடக் கடுமையாக உபவாசம் இருப்பவரைக் காணமுடியாது. சாப்பிடக்கூடிய நாட்களில் அவரைக் காட்டிலும் நிறைவோடு சாப்பிடுகிறவர்களும் இருக்க முடியாது. எந்தக் காலம் முதல் அவர் சின்னச் சாமியாராக இருந்து வருகிறாரோ? 'பெரிய' சாமியாராக ஆக வேண்டுமென்ற ஆர்வம் அவர் உள்ளத்தில் உதித்தேயிருக்காதா— என்னதான் துறவியென்றாலும்?

ராதானந்தர் கரையேறி, வேட்டியைப் பிழிந்து உடம்பைத் துவட்டிக் கொண்டார்.

"சுவாமிஜி அழைத்திருந்தால் துணைக்கு வந்திருப்பேனே?"

ராதானந்தர் திரும்பினார்.

சின்னச் சாமியார்தான். அவருடைய வாட்டசாட்டமான சரீரம் கடற்கரையையே அடைத்தமாதிரி இருந்தது.

"அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தீர்கள், எழுப்ப மனம் வரவில்லை" என்றார் ராதானந்தர்.

"பெரியவர் என்னை விட்டுவிட்டுத் தனியே போனது கிடையாது."

பெரியவர் என்று சின்னச் சாமியார்— ஏன், மடத்துடன் சம்பந்தமுள்ள அனைவருமே— அடிக்கடி குறிப்பிடுவது யாரை என்று ராதானந்தர் அறிந்திருந்தார். சென்ற வருடம் வரையில் சென்னை மடத்தின் தலைவராக இருந்து கடைசி மூச்சை மடத்திலேயே சுவாசித்த சாந்தானந்தாவைப் பற்றி இவர் மட்டுமல்ல, எல்லோருமே ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் ஏதாவது ஒரு வார்த்தை சொல்லிக்கொண்டுதான் இருந்தார்கள். சென்ற பதினைந்து வருடமாக, அவருடைய கை படாத இடமோ, கருத்துப் படாத விஷயமோ பவானி மடத்தில் நடந்தது கிடையாது. அவருடைய முத்திரை எந்த விஷயத்தில் விழவில்லை என்று சொல்வது கடினம்.

பொறுப்பேற்ற முதல் சில தினங்களுக்குள்ளேயே ராதானந்தர் உணர்ந்துவிட்டார்— ஒரு பெரிய நிழலின் கீழேதான் தனது பணி பிரகாசிக்க வேண்டியிருக்குமென்பதை.

ஈர வேட்டியைச் சுற்றிக் கொண்டு புறப்பட்ட ராதானந்தர், "சமுத்திரத்தில் இந்த இடம் ரொம்ப ஆழமானதோ?" என்று கேட்ட வண்ணம் ஓரக் கண்ணால் சின்னச் சாமியாரைப் பார்த்தார்.

சின்னச் சாமியார், எதிர்பார்த்த அளவுக்குக் கூரிய புத்தி உள்ளவர்தான். "பெரியவர் ஆழத்துக்குப் பயப்படுகிறவரல்ல" என்றார்.

"வயதில் நான் சின்னவன் தானே?"

சின்னச் சாமியார் தனக்குத்தானே பேசிக் கொள்வது போல மெல்லிய குரலில் சொன்னவாறே பின்தொடர்ந்து வந்தார். "பெரியவர் அடிக்கடி ஒன்று சொல்லுவதுண்டு. உடம்பைப் பார்த்துக் கொள்வது சுயநலத்துக்காக இல்லை, மடத்துக்காக. மடத்துக்காகத்தான் வாழ்கிறோம்.



மடத்தின் சொத்துக்களைப் பாதுகாக்கிற மாதிரி இந்த உடம்பையும் கவனித்துக் கொள்ள வேண்டும்' என்பார்."

ராதானந்தருக்குப் பதில் கூறத் தெரியவில்லை. காலம் சென்ற பெரியவரைப் பற்றி எவ்வித முடிவும் செய்யத் தோன்றாமல், மடத்துக்குத் திரும்பி, பூஜை அறையில் ஒரு மணி நேரம் இருந்தார். அப்போதும்கூட, நேரம் தவறாமல், ஒழுங்கு முறைகள் பிசகாமல் வழிபாட்டுக்கான உதவிகளைச் செய்யும் சின்னச் சாமியாரின்மீது அவருடைய பார்வை பாய்ந்துகொண்டேயிருந்தது. 'இறைவனே! அலைபாயாத ஒன்றிய மனத்தோடு கடமையைச் செய்யும் இவருடைய உள்ளத்தை எனக்கும் கொடு." என்று வேண்டிய வண்ணம் பூஜையை முடித்துக் கொண்டார் ராதானந்தர். கண்ணை மூடி ஓரமாக அவர் அமர்ந்ததும், இறைவனின் படங்களுக்குச் செம்பருத்திப் பூவினால், கலையுணர்வுடன், மணியடித்தவாறே அர்ச்சனை செய்து, வெண்சாமரம் வீசலானார் சின்னச் சாமியார். வழக்கமாக வருகின்ற இருபது பேர் இன்றும் இருந்தார்கள். புடைவை கட்டிய ஒரு வெள்ளைக்காரி இன்று வந்திருந்தாள். சில்க் சட்டை அணிந்த ஒரு வயோதிகர் மெல்ல ஆர்மோனியம் வாசித்தார்; கீர்த்தனைகள் பாடினார்.

நாயர் கொணர்ந்து தந்த பாலையும், பழத்தையும் கொண்டு காலையுணவைப் பூர்த்தி செய்துகொண்டு சுமார் ஆயிரம் புத்தகங்கள் கொண்ட நூல் நிலையத்தினுள் ராதானந்தர் நுழைந்தபோது, அந்த அறையின் வாயிலில் இருந்த பழைய கடியாரம் மணி பத்து அடித்தது.

முந்தைய தலைவர்கள் தத்தம் கைப்பட அவ்வப்போது எழுதிச் சேர்த்த வரலாறுதான் ராதானந்தரைக் கொஞ்ச நாளாகக் கவர்ந்திருந்தது. பகவான் ராமகிருஷ்ணரின் மார்க்கத்தைப் பரப்புவதற்காக சுவாமி விவேகானந்தர் முயற்சி மேற்கொண்டபோது, அவருடன் கருத்து வேற்றுமை கொண்டு பவானி மடத்தை ஸ்தாபித்தார் சுவாமி வஜ்ரானந்தர் என்பதும்; பாரத தேசத்தின் ஐந்து

கிளைகளில் இந்தச் சென்னைக் கிளையும் ஒன்றென்பதும் ராதானந்தருக்குத் தெரிந்திருந்தது. அந்தக் கையெழுத்துப் புத்தகத்தின் வாயிலாக. இனி வரும் வரலாற்றைத் தாம் எழுத வேண்டியிருக்கும் என்பதை எண்ணியபோது ராதானந்தருக்கு ஒரே சமயத்தில் மெய்ச் சிலிர்ப்பாயும் குழப்பமாயும் இருந்தது. 'நாம் என்ன எழுதப் போகிறோம்? எழுதி வைக்கும்படியான காரியம் என்ன செய்யப் போகிறோம்? என்ன புதிய தத்துவத்தை, அல்லது பழைய தத்துவத்தின் விளக்கத்தை எதிர்காலத்துக்கு வழங்கப்போகிறோம்?' என்று சிந்தனை செய்தார்.

அதற்கு விடை கிடைக்காத காரணத்தாலோ என்னவோ, நூல் நிலையத்தின் அடுத்த அலமாரியை நோக்கி அவரது கால்கள் விரைந்தன.

புத்தம் புதிய பைண்டுடன், பளபளக்கும் சிவப்புக் காலிகோ அட்டை போட்ட இருபது வால்யூம்கள் அவரது கவனத்தை ஈர்த்தது அங்கே.

எடுத்துப் பிரித்தார்.

சங்கரரின் போதனைகளுக்கு விளக்கம் அவை. கம்பீரமான ஆங்கில நடையில் எண்ணற்ற மேற்கோள்களுடன்—

''பெரியவர் எழுதியவை,'' என்று அருகில் வந்து நின்ற சின்னச் சாமியார் தெரிவித்தார்.

அப்புறம்தான் ராதானந்தர், புத்தகத்தின் முகப்பைக் கவனித்தார்.

''இருபது வால்யூம்களும் ஸ்வாமிஜி எழுதியவையா? எத்தனை காலம் உழைத்திருக்கிறார்?'' என்று வியக்காதிருக்க முடியவில்லை.

சின்னச் சாமியார் அந்தப் புத்தகங்களை மீண்டும் நேராக அடுக்கியவாறு, ''அதிக காலம் இல்லை. இரண்டு வருடம், கடைசி இரண்டு வருடங்கள்தான்'' என்றார்.

''இரண்டே வருடமா? எப்படி முடிந்தது?''



அலமாரியைச் சாத்தினார் சின்னச் சாமியார். ''இரவெல்லாம் தூங்குவது கிடையாது. ஆஸ்துமா நோயினால். அந்த நோத்தை லீணடிக்காமல், சரீர உபாதையில் புத்தி செல்லாதிருப்பதற்காக, மூச்சு இரைக்க இரைக்கச் சொல்லுவார் இதையெல்லாம். நான் அருகில் இருந்து எழுதிக் கொள்வேன்.''

பிரமிப்பு ராதானந்தரைச் சிலையாக்கியது. 'அப்படிப்பட்ட அதிமனிதரின் வாரிசாக வந்திருக்கிறீர்களே, உங்கள் சாமர்த்தியத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம்,' என்று சின்னச் சாமியார் சவால் விடுகிறாரா?

அதே சமயத்தில், பெரியவரைப்பற்றித் துடுக்காக, 'ஆழமான கடலில் இறங்கப் பயப்படுகிறவர்' என்று பொருள்படக் கேவலமாகப் பேசியதை எண்ணி வெட்கித் தலை குனிந்தார்.

அவருடைய மன நிலையைப் புரிந்து கொண்டார் சின்னச் சாமியார். அதிலே தமக்கு வெற்றியா இல்லையா என்பதைக் காட்டாத குரலில், ''கடிதங்கள் தயாராயிருக்கின்றன. படித்துக் கையெழுத்திட்டு விட்டால் தபாலில் சேர்ப்பித்து விடலாம்,'' என்றார்.

ராதானந்தர் அலுவலறைக்கு வந்து, சாய்மானமுள்ள பிரம்பு நாற்காலியில் அமர்ந்தார். நாற்காலியின் நீண்ட கைகளுக்குக் குறுக்காக மெல்லிய பலகை வைத்துக் கொண்டு கடிதங்களைப் படித்துக் கையெழுத்திடலானார்.

மாமூல் கடிதங்கள்தான் பெரும்பாலும். சில பிரசுரங்கள் கைவசமில்லை என்று ஒரு புத்தகக் கம்பெனிக்குப் பதில்; பெரியவர் காலமானதுபற்றி பிஜித் தீவிலிருந்து அனுதாபம் தெரிவித்திருந்த ஒருவருக்கு நன்றி; ஆதிசங்கரரின் வருடாந்தர விழாவை நடத்த இடமும் அனுமதியும் கோரி நகரசபைக்கு ஒன்று; ஆஸ்பத்திரியை அரசாங்கமே எடுத்து......

ராதானந்தர் திகைப்புடன் நிமிர்ந்து ''என்ன இது?'' என்று கேட்டார்.

பக்கத்தில் வந்து குனிந்து நோக்கினார் சின்னச் சாமியார். ''இது ஒன்றுமில்லை. மயிலாப்பூரிலுள்ள ஆயுர்வேத ஆஸ்பத்திரியை அரசாங்கத்துக்குக் கொடுத்து விடுகிறோமில்லையா? அதை...''

ராதானந்தரின் திகைப்பு பெருகியது. மயிலாப்பூரில் ஓர் ஆஸ்பத்திரி நடத்துகிறோமென்பதே எனக்குத் தெரியாது. ஏன்? ஜனங்கள் வருவது கிடையாதா? மருந்துகள் பிரயோசனமில்லையா?''

''நேர் எதிரிடை,'' என்று விடையிறுத்தார் சின்னச் சாமியார். ''எக்கச்சக்கமான கூட்டம். மருந்துகளுக்கு அருமையான பலன் உண்டு.''

''பின்னே?''

''தரும ஆஸ்பத்திரி. எல்லாம் இலவசம். மடத்திலோ நிதி கிடையாது. அதனால் சர்க்காரிடம் ஒப்படைத்து விடலாம் என்று பெரியவர் தீர்மானித்து விட்டார்.''

''டெல்லி பெரிய மடத்துக்கு எழுதிக் கேட்டாயிற்றா?''

''நிதி விஷயங்களில் அவர்கள் தலையிடுவதில்லை. வருமானமோ செலவோ அந்தந்தக் கிளை மடங்கள்தான் பார்த்துக் கொள்ளவேண்டும்.''

ராதானந்தர் யோசனை செய்தார், சில நிமிடங்கள். பிறகு, ''கடிதம் சொல்கிறேன். எழுதிக் கொள்கிறீர்களா?'' என்றார்.

பேனாவைத் திறந்து கொண்டபோது சின்னச் சாமியாரின் முகத்தில் சந்தேகம் பரவியிருந்தது.

ராதானந்தர் சொல்லத் தொடங்கினார்: ''பிரதம காரியதரிசி, தமிழ்நாடு அரசாங்கம், சென்னை. ஐயா, சென்னை மயிலாப்பூரில் நாங்கள் நடத்திவரும் ஆயுர்வேத



ஆஸ்பத்திரியை அரசாங்கத்திடம் ஒப்படைப்பது பற்றி விரிவாக யோசனை செய்தோம். அதை அரசாங்கத்திடம் ஒப்படைக்காமல், மடமே தொடர்ந்து நடத்துவதுதான் நல்லமென்று தோன்றுகிறது...''

கண்ணிமைக்கும் நேரத்துக்கு, சின்னச் சாமியாரின் பேனா நகராமல் நின்றது. ஆனால் வாய் திறந்து எதுவும் பேசாமலே மற்ற வாசகங்களையும் எழுதிக்கொண்டார்.

ராதானந்தர் அவர் முகத்தை ஏறிட்டு நோக்கினார்: ''உங்களுக்கு நம்பிக்கை இல்லை, நாம் நடத்த முடியும் என்று? அப்படித்தானே?''

''பெரியவர் நம்பவில்லை.''

ராதானந்தர், ''விழாக்கள் நடத்துகிறோம், கூட்டங்கள் போடுகிறோம், இங்கே நாம் நாலைந்து பேர் தங்கியிருந்து சாப்பிடுகிறோம், வடநாட்டு, வெளிநாட்டு விருந்தாளிகளை உபசரிக்கிறோம்— இதற்கெல்லாம் பணம் எப்படிக் கிடைக்கிறது?'' என்று கேட்டார்.

''நகரத்தில் ஒரு முப்பது நாற்பது தனவந்தர்கள் இருக்கிறார்கள். வருடத்துக்கு இத்தனை ரூபாய் என்று அவர்கள் நன்கொடை தருகிறார்கள்.''

''அவர்களுடைய பெயரும் விலாசமும் ஒரு காகிதத்தில் குறித்துக் கொடுங்கள்,'' என்று சொல்லிவிட்டு ராதானந்தர் எழுந்து கொண்டார்.

**பி**ற்பகல் நான்கு மணி சுமாருக்கு, சின்னச் சாமியார் பட்டியலைக் கொண்டு வந்து தந்து, ''கார் தயாராயிருக்கிறது,'' என்றார்.

''காரா? ஏது கார்?''

''சௌகார்பேட்டையில் ஒரு சேட் அனுப்புவது வழக்கம். வேறு பண உதவி செய்ய மாட்டார். ஆனால் மடத்து வேலையாக எப்போது தேவைப்பட்டாலும்

காரை அனுப்பி விடுவார்,'' என்று சின்னச் சாமியார் தெரிவித்தார்.

ராதானந்தர் பட்டியலைப் படித்தபடியே புறப்பட ஆயத்தமானார். ''மடத்துக்கு டெலிபோன் இருப்பது நல்லது. வருவதாகச் சொல்லிவிட்டுப் புறப்படலாம். நாளைக்கு ஞாபகப்படுத்துங்கள். டெலிபோனுக்கு மனு எழுதிப் போடலாம்.''

''டெலிபோன் வைத்துக் கொள்ளும் அளவுக்கு நாகரிகம் எதற்கு என்று பெரியவர் சொல்வது வழக்கம்.''

கண்ணைச் சுருக்கி அவரைப் பார்த்தார் ராதானந்தர். ''கூட்டங்களின்போது மைக் வைப்பது உண்டா, கிடையாதா?''

''கிடையாது. அவருடைய வெறும் குரலே ஐயாயிரம் பேர் கொண்ட கூட்டத்துக்குக் கேட்கும்,'' என்று சின்னச் சாமியார் அயராமல் பதிலளித்தார். ''அதாவது, ஆஸ்துமா முற்றுகிற வரையில் சொல்கிறேன்.''

ராதானந்தர் வெளியே வந்ததும் சேட்டினுடைய கார் டிரைவர் அவர் காலடியில் விழுந்து வணங்கி யெழுந்தபின் கதவைத் திறந்து விட்டான்.

''காலத்துக்குத் தகுந்தபடி காரியங்கள் செய்ய ஆரம்பிப்போம்,'' என்று சின்னச் சாமியாரிடம் கூறிய வாறு ஏறிக் கொண்டார் ராதானந்தர்.

நெற்றியில் சந்தனமும் காதிடுக்கில் துளசியுமாயிருந்த அந்த டிரைவரிடம் ராதானந்தருக்கு ஈடுபாடு ஏற்பட்டது.

''உன் பெயர் என்னப்பா?'' என்று கேட்டார்.

''விஷ்ணுராம், சுவாமிஜி'' என்று பரவசத்துடன் பதில் சொன்னான் அந்த வாலிப டிரைவர். தன்னை ஒரு பொருட்டாக மதித்து சுவாமிஜி பேசியதே அவனுக்குப் பெருமை அளித்தது போலும்.

''பெரியவரை நீ அழைத்துப் போனது உண்டா?''



''பல தரம் மகராஜ். பல தரம்.'' டிரைவரின் குரல் தழுதழுத்தது. ''வீட்டில் துளசித் தீர்த்தம் தெளித்து விட்டுத்தான் உட்காருவார்கள். இரண்டு நிமிஷம் அவகாசம் கிடைத்தாலும் காரில் தூங்கி எழுந்து விடு வார்கள். அவர்கள் சுபாவமே தனி.''

''ஊம்'' என்று முறுவலித்தார் ராதானந்தர்.

''சின்னச் சாமியார்தான் அவருக்கு நிழல் மாதிரி. பெரியவர் காலமானபோது சின்னச் சாமியார் அன்னம் தண்ணீரைப் பார்க்காமல் பத்து நாள் இருந்தார் என்று சொன்னார்கள்.''

''ஓ.''

டிரைவருக்குப் பேச்சில் சுவை பிறந்தது. ''பெரிய வருக்குப் பிறகு சின்னச் சாமியார்தான் மடத்துக்குத் தலைவராக வருவார் என்று எல்லோரும் நம்பிக்கொண் டிருந்தார்கள். அவரும் அப்படித்தான் சொல்லிக்கொண் டிருந்தார். ஆனால் என்னமோ மேலிடத்திலிருந்து ரொம்ப நாள் வரை நியமனம் வரவில்லை. அப்புறம்தான் சுவாமிஜி வந்து விட்டாற் போலிருக்கிறதே.''

ராதானந்தர் கண்களை மூடிக்கொண்டிருந்தார். ஆனால் சிந்தனை திறந்திருந்தது. ஆக... சின்னச் சாமியாருக்கு அது ஓர் ஏமாற்றம்... சகலத்தையும் துறந்த வர்கள் கூடப் பதவிக்காக... அது பதவிதானா? பணியாற்ற வாய்ப்பு வேண்டும் என்ற ஆர்வமாயும் இருக்கலாம்... தூண்டி விடுவதற்கு, எங்கேயும் எப்போதும் இரண்டு பேர் இருப்பார்கள்...

''நுங்கம்பாக்கம் ஹைரோடுதானே? 'லக்ஷ்மி' என்ற பெயருள்ள பங்களா எது, பார்,'' என்றார்.

கார் ஒரு காம்பவுண்டுக்குள் நுழைந்தது.

ராதானந்தர், தம் மனத்தில் ஏதோ ஒன்று உறுத்து வதை உணர்ந்தார்.

ராதானந்தராக ஆன பின்னர் முதல் முறையாகப் பணத்துக்காகப் பிறரிடம் கையேந்துகிறோம் என்ற எண்ணமாயிருக்குமோ?

## பன்னிரண்டு

காம்பவுண்டுக்குள் நுழைந்து விட்டபோதிலும், காரைச் சிறிது நிறுத்தினான் டிரைவர்.

''சுவாமிஜி, வேறே இடங்களுக்குப் போய்விட்டு, நாளைக் காலையிலே இங்கே வரக்கூடாதா?'' என்று பணிவோடு வினவினான் ராதானந்தரிடம்.

''ஏனப்பா? இப்போது என்ன?''

டிரைவர் தயங்கித் தயங்கி, ''இல்லை.........வந்து...... பெரியவர்கூட அடிக்கடி இங்கே வருவது உண்டு...... ஆனால் காலை வேளைகளில்தான் இங்கே வருவார்...''

''இவர் சாயந்தர வேளைகளில் வீட்டில் இருக்க மாட்டாரராக்கும்? பரவாயில்லை. நான் வந்ததை மட்டும் யாரிடமாவது தெரிவித்துவிட்டுத் திரும்பிவிடலாம்,'' என்று ராதானந்தர் பதிலளித்தார்.

''வீட்டில் இருப்பார்... ஆனால்...'' என்று அப்புறம் கூட ஏதோ இழுத்தானென்றாலும், சுவாமிஜியுடன் வாதாடுவது தவறென்று அவன் உணர்ந்திருந்தான் போலும். போர்ட்டிகோவில் காரை நிறுத்தி, அவருக்காகக் கதவைத் திறந்து விட்டான்.

ஹாலை ஒட்டிய அறையில் டப்டப்பென்று டைப்ரைட்டரின் ஒலி கேட்டது. கேசத்தைப் பாப் செய்து கொண்டிருந்த ஒரு பெண் டைப்பிஸ்டு, ராதானந்தரின் பாதக் குறடு செய்த ஓசையினால் 'திரும்பினாள். ஆனால் இருப்பிடத்தை விட்டு எழுந்திராமலே ''இன்னா வோணும்?'' என்று கேட்டாள். கொச்சைத் தமிழ், வாயில் அடக்கியிருந்த சூயிங் கம்மினால் மேலும் சிதைந்தது.



ராதானந்தர், கையிலிருந்த பட்டியலை ஒரு முறை பார்த்துவிட்டு, ''பவானி மடத்திலிருந்து வந்திருக்கிறேன். மிஸ்டர் பிரம்மம் இருக்கிறாரா?'' என்று விசாரித்தார்.

''யாரையும் இப்ப பார்க்க மாட்டாரு,'' என்றாள் டைப்பிஸ்டு.

''நான் வந்திருக்கிறேன் என்று சொல்லியனுப்புங்களேன்,'' என்றார் ராதானந்தர் புன்னகையுடன்.

அந்த பெண் அலுப்புடன் டைப்ரைட்டரை நகர்த்தி விட்டு எழுந்து வந்தாள் அறைக்கு வெளியே.

''சொல்றேனுங்க. சொல்றேன். ஆனா அது அவர் காதிலே பூந்து, மண்டையிலே ஏறவோணாம்? ஏறாது,'' என்றாள்.

ராதானந்தரை அழைத்து வந்த டிரைவர் மெல்ல அவரிடம் நெருங்கி, ''சுவாமிஜி, அப்புறம் வரலாம்,'' என்றான். பின், டைப்பிஸ்டிடம், ''ஐயாவைத் தெரியாது உங்களுக்கு? மடத்துலே பெரிய சாமியார்,'' என்றான் சிறிது காரமாக.

''அப்பமின்னா லட்டுப்புட்டுன்னு அழைச்சிட்டுப் போப்பா. எங்க ஐயா வந்தாருன்னா...''

வந்தே விட்டார் அந்த ஐயா, உள்புறக் கதவைத் திறந்து கொண்டு. இரண்டு பக்கமும் இரண்டு நபர்கள் கை கோத்த மாதிரி நாசூக்காக அவரைத் தாங்கி நிற்க, அப்படியும் தள்ளாடிய நடையுடன் வந்தவர், செக்கச் சிவந்த கண்களால் ராதானந்தரை ஏறிட்டு நோக்கினார். அடுத்த வினாடி, ''அடாடாடா! சாமி! நீங்களா சாமி!'' என்று தனது பெரிய சரீரம் அந்த மொசைக் தரையின் ரத்தினக் கம்பளத்தின் மீது பொத்தென்று மோதி ஒலியெப்பும்படி, தடாலென்று ராதானந்தரின் காலில் விழுந்தார்.

''எழுந்திருங்கள் பிரம்மம்,'' என்று அவரைத் தொட்டு எழுப்பக் குனிந்தபோது, குப்பென்று வீசிய நெடி

ராதானந்தரின் கொஞ்ச நஞ்ச சந்தேகத்தையும் போக்கி விட்டது.

பிரம்மத்தின் 'நண்பர்கள்' இருவரும், ''என்னவோ நடுக்கிவிட்டது போலிருக்கிறதே சார்? எழுந்திருங்கள்!'' என்று சொல்லியபடி அவரை எழுப்ப முனைந்தார்கள்.

டைப்பிஸ்டு பெண், எதும் நடவாததுபோல் தன் அறைக்குத் திரும்பி விட்டாள். டைப்ரைட்டரின் டப்டப் பழையபடி ஒலிக்கத் தொடங்கியது.

பிரம்மம் எழுந்திருக்கிற வழியாயில்லாததால், அவருடைய நண்பர்கள் இருவரும், ஹாலில் ஆளுக்கொரு சோபாவில் போய்ச் சாய்ந்து கொண்டார்கள். ஒருவர் எழுந்து வந்து, பிரம்மத்தின் பாண்ட் பையிலிருந்து சிகரெட் கேஸையும் தீப்பெட்டியையும் எடுத்துக்கொண்டு திரும்பிப்போய் உட்கார்ந்தார்.

''நீங்கள் புதிதாக்கும்?'' என்றார் மற்றவர், ராதானந்தரைப் பார்த்து.

''ஆமாம்'' என்றார் ராதானந்தர், கீழே அனாதையாய்க் கிடக்கும் லட்சாதிபதியை அனுதாபத்துடன் நோக்கியவாறு.

சிகரெட் புகைத்தவன் சொன்னான்: ''அதனால்தான் இந்த வேளையில் வந்திருக்கிறீர்கள். அவரைத் தெரிந்தவர்கள், காலையில்தான் வருவது வழக்கம்.''

ராதானந்தர் பின்கை கட்டியபடி மௌனமாகக் காரில் ஏறியமர்ந்தார்.

''இனிமேல் நீ சொல்கிறபடி நடக்கிறேனப்பா, ஓட்டு'' என்றார்.

டிரைவர் வாயைப் பொத்திக் கொண்டே சிரித்தான். ''அப்படிச் சொல்லாதீங்க, சுவாமிஜி. ஏதோ முன்னெல்லாம் பெரியவரை அழைச்சிட்டுப் போனதிலே கொஞ்சம் கொஞ்சம் தெரிஞ்சு வைத்திருந்ததாலே...''



''சரி, இப்போது சொல்லு,'' என்று ராதானந்தர், பட்டியலைப் பிரித்து படித்தார். ''ஜி. லக்ஷ்மிநாராயணன், உஸ்மான் ரோடு, தியாகராயநகர். இவர் எப்படி? ராத்திரி பன்னிரண்டு மணிக்கு மேல்தான் பார்க்கலாமோ?''

''லக்ஷ்மிநாராயணனா?'' டிரைவரின் நெற்றிப் புருவம் வளைந்து ஏறியது. ''ஆ! ஸ்டாக் புரோக்கர். ஐயோ, தங்கமான சுங்களே அவர்? மடத்திலே ஒரு உதவி கேட்டு இல்லைன்னு கை விரிச்சது கிடையாதுங்க,'' என்றான் உற்சாகமாக.

''போ, பார்க்கலாம்.''

வெய்யில் முற்றிலும் இறங்கி, விளக்குகள் மினுமினுக்கத் தொடங்கிவிட்டதால், சாலையில் கூட்டமும், சந்தடியும் அதிகமாயிருந்தன. உஸ்மான் ரோடில் அவர்கள் நுழைந்தது, பெரிய இரண்டு மாடிக் கட்டடம். வாசலில் நின்றிருந்த கூர்க்கா, காருக்குள் எட்டிப் பார்த்துவிட்டு, இரு கையையும் தூக்கிக் கும்பிட்டு, வழிகாட்டினான் காருக்கு.

தோட்டத்தின் ஓரத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு காருக்கருகே மூன்று நான்கு பேர் பேசிக் கொண்டிருந்தார்கள். லக்ஷ்மிநாராயணன் என்பவர் யாராயிருக்கும் என்று யோசனை செய்தவாறு ராதானந்தர் காரிலிருந்து இறங்கு முன்—

''சுவாமிஜி!'' என்று மகிழ்ச்சியுடன் கூறியவாறு, மிக ஒல்லியான, சிவந்த மனிதரொருவர் ஓடிவந்து, குனிந்து, பாதத்தைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டார். ''சொல்லியனுப்பினால் நான் ஓடி வந்திருக்க மாட்டேனா? பெரியவர் காலத்துக்குப் பிறகு நான் மடத்துப் பக்கமே எட்டிப் பார்க்காதிருந்து விட்டேன். சுவாமிஜியிடம் ஆசீர்வாதம் பெற, தனியாய் ஒருநாள் வர நினைத்திருந்தேன்,'' என்றார் படபடவென்று. மற்ற மூன்று பேரும் தூரத்தில் நின்றபடியே இந்தக் காட்சியை ஓரக்கண்ணால் பார்த்தவாறு தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

லக்ஷ்மிநாராயணனின் தோளைக் கனிவோடு தட்டிய ராதானந்தர், ''பரவாயில்லை. அதனாலென்ன? உங்களுக்குப் பசிக்கிறபோது மடத்துக்கு வாருங்கள். இப்போது மடத்துக்குப் பசி; உங்களிடம் வந்திருக்கிறது,'' என்றார்.

கதவை அகலத் திறந்து வைத்துவிட்டு டிரைவர் வாசல் புறம் சென்று விட்டான்.

''சுவாமிஜி உள்ளே வந்து அமரலாம். என் கையால் ஏதேனும் பால் பழம்......''

''ஸ்டாக் புரோக்கர்களே செட்டிக்காரர்கள்தான்—குறைந்த பட்சம் பேச்சில்,'' என்று ராதானந்தர் முறுவலித்தார், காரிலிருந்தபடியே.

''ஏன் சுவாமிஜி?''

''மடத்துக்குப் பசி என்று ஆரம்பித்தவுடனேயே பேச்சைத் திருப்புகிறீர்களே!'' என்று ராதானந்தர், கையிலிருந்த பட்டியலைக் காட்டினார் அவரிடம். ''மடத்தின் ஆதரவில் நடக்கிற ஆஸ்பத்திரியை, கவர்மெண்ட்க்குக் கொடுத்துவிடலாம் என்று ஒரு உத்தேசம் இருக்கிறதாம். அதைத் தடுக்கலாமென்று பார்க்கிறேன்.''

காரின் கதவு ஓரமாகக் கையைக் கட்டிக்கொண்டு நின்றிருந்த லக்ஷ்மிநாராயணன், ''சே, சே! நம்மால் நடத்த முடியவில்லை என்று நாமே ஒப்புக்கொள்வதா?'' என்றார்.

ராதானந்தர் நிமிர்ந்து அவரது கண்களை நோக்கினார். ''உங்கள் நன்கொடையாக எவ்வளவு போடட்டும்?''

''மன்னிக்க வேண்டும்,'' என்றார் லக்ஷ்மிநாராயணன். ராதானந்தரின் ஏமாற்றம் ஒரு வினாடிதான் நீடித்தது. லக்ஷ்மிநாராயணன் மன்னிப்புக் கேட்டது, ராதானந்தருக்குச் சமமாகக் காரில் உட்காருவதற்காகவே.

முன் ஸீட்டில் அமர்ந்த லக்ஷ்மிநாராயணன், சட்டைப் பையிலே இருந்த செக் புத்தகத்தை எடுத்து, பேனாவைப் பிரித்து அமைதியாக எழுதினார். தாளைக் கிழித்து, இரண்டு கையாலும் பணிவோடு நீட்டினார்

ரூபாய் குறிக்கப்பட வேண்டிய இடத்தில், 5000 என்று கண்டதும் ராதானந்தரின் பிரமிப்பு அவரது நாவை மடக்கி விட்டது.

''வேறு, எப்போது என்ன தேவைப்பட்டாலும் சுவாமிஜி தயங்காமல் தெரிவிக்க வேண்டும்,'' என்று கேட்டுக் கொண்ட பின்னர், காரிலிருந்து இறங்கிக் கொண்ட லக்ஷ்மிநாராயணன், கை தட்டி டிரைவரை கூப்பிட்டார். கூர்க்காவுடன் பேசிக் கொண்டிருந்த டிரைவர் ஓடி வந்தான்.

கும்பிட்டுக் கதவைச் சாத்தினார் லக்ஷ்மிநாராயணன். ''தயவு பண்ணி அந்தப் பட்டியலில் என் விலாசத்தை மாற்றிக் கொள்ளுங்கள் சுவாமிஜி. அடுத்த வாரம், புது ஜாகைக்குப் போகிறேன்,'' என்று கூறி, வேறொரு விலாசத்தையும் கொடுத்தார்.

கார் பங்களாவைத் தாண்டியது. ''டிரைவர், உனக்கு எத்தனை குழந்தைகள்?'' என்று ராதானந்தர் விசாரித்தார்.

''மூன்று, சுவாமி.''

''அப்படியானால் இந்தா,'' என்று தமது தோல் பையைத் திறந்த ராதானந்தர், ஒரு பிடி சாக்லேட்டுகளை எடுத்து அவனிடம் தந்தார். ''மடத்துக்கு ஐயாயிரம் ரூபாய் நன்கொடை வாங்கித் தந்ததற்காக, உனக்கு இனாம் கொடுப்பதுதான் தப்பு. உன் குழந்தைகளுக்குக் கொடுக்கலாமில்லையா?''

டிரைவர் அந்தச் சாக்லேட்டுகளைப் பெற்றுக் கொள்ளாமலே, ''ஐயாயிரம் ரூபாயா கொடுத்தாங்க?'' என்று கண்களை அகல விரித்தான்.

''ஏன், இவ்வளவு பெரிய தொகை அவர் கொடுத்தது கிடையாதா?''

''உண்டு, சுவாமி. இதைக் காட்டிலும் அதிகமாய்க் கொடுத்தவர்தான். ஆனால்...'' டிரைவரின் குரல் தழுதழுத்தது. ''ஆனால் இந்த மாதிரி நிலைமையில் இருந்த போது கொடுத்திருக்கார், பாருங்களேன்!''

ராதானந்தர் திடுக்கிட்டார். ''என்ன நிலைமை அவருக்கு, டிரைவர்?''

''எனக்குத் தெரியாது, சுவாமி. அந்தக் கூர்க்கா தான் சொன்னான்... அவர் ரொம்ப நஷ்டப்பட்டு நொடிச்சுப் போயிட்டாராம். பேசிக்கிட்டிருந்தாங்களே இரண்டு மூணு பேர், அவங்களுக்குப் பங்களாவை வித்திட றதா முடிவு பண்ணி, இன்னைக்குத்தான் ரெஜிஸ்டிரேஷனாம். வேறே சின்ன வீட்டுக்கு ஜாகை போகிறாராம்... சுவாமி கிட்டே அவர் ஒண்ணும் சொல்லலீங்களா?''

அவனுக்குப் பதில் தரக்கூடத் தெம்பில்லாமல், கண்ணை மூடிக் கொண்டு, ஸீட்டில் சாய்ந்தார் ராதானந்தர். டிரைவர் மேற்கொண்டு பேச்சுக் கொடுக்காமல், சாலையில் கவனத்தைச் செலுத்தினான். உள்ளங்கையில் சாக்லேட்டுகள் கசகசத்த பின்னர்தான் உணர்வு ஏற்பட்டது. டிரைவர் வாங்கிக்கொள்ள மறுத்து விட்ட அவற்றைத் திரும்பப் பையில் போட்டுக்கொண்டு, மீண்டும் இமைகளை மூடினார்.

பிரம்மம்போல் ஒரு பிறவி இருந்தால், லக்ஷ்மி நாராயணன் போலவும் ஒருவர் உண்டு... தோல் பைக்குள் செக்கை மடித்து வைத்துக்கொண்டார். இதை ஏற்றுக் கொள்வது நியாயமா? பாவமாகாதா?...

''அடுத்த இடம், சுவாமி?''

ராதானந்தர், காகிதத்தைப் பார்த்து, ''மிஸஸ் ஜகந்நாதன், பாந்தியன் ரோடு, எழும்பூர்,'' என்றார்.

''அந்த அம்மாள் இப்போ பாட்னாவுக்குப் போயிட்டாங்க சுவாமி. அவங்க புருஷன் ஹைகோர்ட் ஜட்ஜா யிருந்தாங்களே...''



''ஓகோ, சரிதான். அடுத்த இடம் பார்ப்போமா?'' என்றவர், சாலையில் ஓர் ஓட்டல் தென்பட்டதும் நினைவு வந்தவராக, ''நீ எதுவும் சாப்பிடாமலே சுற்றிக் கொண்டிருக்கிறாயே அப்பா?'' என்றார்.

''பரவாயில்லை, சுவாமி. நான் விளக்கு வைச்சப்புறம் எதுவும் சாப்பிடறதில்லீங்க,'' என்றான் டிரைவர்.

ராதானந்தர் அடுத்தபடியாக அறிவித்த பெயர், ஒரு பாராளுமன்ற உறுப்பினருடையது. புதுப்பேட்டையில் வசித்துவந்த அவரிடம், நேரமும் அதிகமாகச் செலவழிந்து விடவில்லை; பணமும் அதிகமாகக் கிடைத்துவிடவில்லை. 'சாது சமாஜ்' பற்றி ஏதாவது செய்யவேண்டும் என்று ராதானந்தரைக் கேட்டுக் கொண்டுவிட்டு, நூறு ரூபாய் ரொக்கத்துடன் விடைகொடுத்து விட்டார்.

வரதராஜுலு, அடுத்தவர். தேனாம்பேட்டையில், இரண்டு மூன்று பிரபல திரை நட்சத்திரங்களின் பங்களாக்களுக்கு மத்தியில் அவருடைய வாசஸ்தலம் அமைந்திருந்தது. பிரம்மசாரியாகவே காலம் கடத்திவிட்ட கிழவரான அவர், மேலே ஒரு பனியன்கூடப் போடுவது கிடையாது. கரிய மேனியில் வெண்ணீறு பளபளக்க, ''உட்காருங்கள்'' என்று பிரம்பு நாற்காலியைக் காட்டினார் ராதானந்தருக்கு. அனாவசியமான உபசாரம் எதுவும் செய்கிறவரல்ல என்று தெரிந்தது. வந்திருப்பவரும் தானும் சம அந்தஸ்தில் இருப்பவர்கள்தான் என்று நினைப்பவர் போலிருந்தது அவருடைய தோரணை.

தங்கப் பல் தெரியுமாறு வரதராஜுலு பேசினார்: ''நீங்கள் மடத்துக்குப் புதிதாகையால், அனுபவமில்லாமல் இந்தக் காரியத்தில் இறங்கிவிட்டீர்கள். உங்களுக்குத் தெரியாது. பெரியவர் இருந்தாரே, அதாவது உங்களுக்கு முன்பு இருந்தவர், அவரிடம் இந்த ஆஸ்பத்திரியை நாம் நடத்த வேண்டாம், கவர்மெண்ட்கிட்டே கொடுத்து விடுவோம் என்று யோசனை சொன்னவனே நான்தான்.''

''அப்படியா?'' என்று ராதானந்தர் வியப்புத் தெரிவித்தார்.

''ஆமாம். ஏன் அப்படிச் சொன்னேன் என்று கேட்கிறீர்களா?''

''சொல்லுங்கள்.''

''உங்களுக்குத் தெரியாதது எதையோ அதிகப் பிரசங்கித்தனமாகச் சொல்லப் போவதில்லை நான்,'' என்ற போலி அடக்கத்துடன், வரதராஜுலு தொடர்ந்தார்: ''ராமகிருஷ்ணபரமஹம்சருக்கு, சம்புநாத் மல்லிக் என்று ஒரு சீடர் கல்கத்தாவில் இருந்தார், தெரியுமில்லையா? பெரிய பணக்காரர். ஏகப்பட்ட ஆஸ்பத்திரிகளும் மருத்துவ விடுதிகளும் நடத்தி வந்தவர் அந்த சம்புநாத் மல்லிக்.''

ராதானந்தர் புன்னகையுடன் தலையசைத்தார்.

''அந்த சம்புநாத் மல்லிக், ஆஸ்பத்திரிகளை நிறையக் கட்ட வேண்டும், அதற்கு நிறையப் பணம் வேண்டும் என்றெல்லாம் கவலைப்பட்டபோது ராமகிருஷ்ணர் என்ன சொன்னாரென்று உங்களுக்குத் தெரிந்திருக்கும்.''

''இல்லை, தெரியாது. சொல்லுங்கள்,'' என்று ராதானந்தர் முக மாறுபாடில்லாமல் கேட்டார்.

''தெரியாமலிருக்குமா? மறந்திருக்கலாம்,'' என்று கூறிவிட்டுச் சொன்னார் வரதராஜுலு. ''மனிதப் பிறவியின் லட்சியம் ஆஸ்பத்திரி கட்டுவதல்ல, ஜீவன் முக்தி அடைவதுதான் என்றாராம் ராமகிருஷ்ணர். 'ஆண்டவன் உன் முன்னால் தோன்றினால் முக்தியை வேண்டுவாயா, ஆஸ்பத்திரிகள் வேண்டுவாயா?' என்று கேட்டாராம். நான் எதற்குச் சொல்கிறேனென்றால்...''

''புரிகிறது,'' என்று எழுந்து கொண்டார் ராதானந்தர். ''சம்புநாத் மல்லிக்குக் கிடைத்தமாதிரி எனக்கும் ஒரு குருநாதர் கிடைத்து, அப்படி உபதேசம் செய்தால் தான் கட்டாயம் ஏற்றுக்கொள்கிறேன்.''

16822
3289649



பா... தறது ஒசைப்படுத்தி விதம் அவருடைய அடக்கப்பட்ட சிறைத்தைக் காட்டியது.

ட்ரைவர் காரை ஸ்டார்ட் செய்துகொண்டே, ''பார்-அட்-லா மேனனின் வீடு இங்கே பக்கம்தான், சுவாமி. லிஸ்டில் இருக்குமே?'' என்று கேட்டான்.

காகிதத்தைப் பார்த்த ராதானந்தர், ''ஆமாம். இருக்கிறது. போ'' என்றார். அந்த இடத்தை அடைந்தபோது—

ராதானந்தருக்கு ஏற்பட்ட ஆச்சரியம்: ஒரு மடாலயத்தின் ஆதரவாளர் என்று எப்படி இவர் இடம் பெற்றார்?

அப்படியொரு சுருட்டுக் குழாயும், தொப்பி சூட்டுமாக இருந்தார் மேனன்.

காரிலிருந்து ராதானந்தர் இறங்கியதுமே, தமது கூலிங் கண்ணாடியை மேலே தூக்கி விட்டுக்கொண்டு, ''நீங்கதான் புதுச் சாமியாரா?'' என்றவர், ''மதுரைப் பக்கம் மாட்டுப் பண்ணை வைத்திருந்தாரே, அந்த வானமாமலையின் பிள்ளைதானே நீங்கள்? ஹா ஹா, ஐ நோ யூ! அப்போ நீங்க சின்னப் பையன்,'' என்றார்.

ராதானந்தர் தமது சங்கடத்தை மறைத்துக்கொண்டு, வந்த காரியத்தைச் சுருக்கமாய்த் தெரிவித்தார்.

மேனன் ஓர் அட்டகாசச் சிரிப்புடன், ''என்ன சுவாமி வேடிக்கை! நீங்கள் சாமியாராகிவிட்டதால், ஒரு மடத்தின் தலைவராக ஆகிவிட்டதால், லட்சக்கணக்கான சொத்து ஓடிப்போய்விடுமா? உங்கள் பணம் உங்களுடையது தானே? எதற்காகக் கண்டவனிடம் பிச்சை எடுப்பது? ரன் த ஹாஸ்பிடல் வித் யுவர் ஓன் மனி!'' என்றார்.

அந்தச் சொத்தில் தனக்கு வெகு காலமாகவே உரிமை கிடையாதென்பதை லேசாக ராதானந்தர் குறிப்பிட்ட மேனனின் முகம் சிவந்தது.

''நான்சென்ஸ்! க்ளெய்ம் இட்!'' என்று வாக்கிங் ஸ்டிக்கினால் தரையைத் தட்டி உறுமினார்: ''என்னிடம்

விடுங்கள். கோர்ட் மூலமாய், அந்தச் சாரங்கபாணியின் கன்னத்தில் அறைந்து வாங்கித் தருகிறேன்!''

ராதானந்தர் எழுந்துகொண்டு, ''உங்கள் மிகல் யோசனைகளுக்கு நன்றி. அந்த உத்தேசம் ஏற்படும்போது வருகிறேன்,'' என்று கூறிவிட்டு விடை பெற்றார்.

கார் சென்று கொண்டிருந்தது. ராதானந்தரின் உள்ளம் எங்கெங்கோ ஓடிக்கொண்டிருந்தது. விதவிதமான மனிதர்களை ஒரே பந்தத்துக்கள் கட்டுப்படுத்தக் கூடிய கயிறு ஒன்று இல்லாமலா இருக்கும்? நமக்குத் தெரியவில்லை. அந்த மந்திரக் கயிறு, அவரிடம்— பெரியவர் சாந்தானந்தரிடம்— இருந்திருக்க வேண்டும். அது என்ன? எப்படி, எப்போது, யார் மூலமாக எனக்கு அந்தத் திறன் கைவரப் பெறும்?

கார் ஒரு குலுக்கலுடன் நின்றது. ஏகப்பட்ட சந்தடியும் கூச்சலும் கேட்டன.

''என்ன?'' என்று ராதானந்தர் வினவினார், கண்ணைத் திறவாமலே.

''ஒன்றுமில்லை சுவாமி. ஏதோ நாடகம்... ஆரம்ப விழாக் கூட்டம். நடிக்கிற பெண்பிள்ளைங்க வர்றாங்க போலிருக்குது...''

''ஊம்'' என்று நன்கு சாய்ந்து கொண்டார், ராதானந்தர்.

''சுவாமிஜி! சுவாமிஜி!'' என்று ஒரு குரல் அவரை அழைத்தது, காருக்கு வெளியே.

கண்ணைத் திறந்து பார்த்தார்.

''சௌக்கியமா? உன் நாடகம்தான் ஆரம்ப விழா நடக்கிறதா? அதுதான் இத்தனை அமளி,'' என்று அமைதியாகப் பேசினார்.

''உள்ளே வாருங்கள். பதினைந்து நிமிடம் இருந்து, நாடகத்தைப் பார்த்து எங்களுக்கெல்லாம் ஆசி கூறி



விட்டுப் போகலாம்,'' என்று காரின் கதவைத் திறந்தாள் ராணி.

ராதானந்தர் எழுந்திருக்கவில்லை. ''ஆகட்டும். இன்னொரு நாள் வருகிறேன்.''

''ஏன், இப்போது என்ன?''

''இப்போது நான் மடத்துக்காக நன்கொடை வசூலுக்குப் போய்க் கொண்டிருக்கிறேன்.''

ராணியின் உதட்டில் ஒரு கோமளப் புன்னகை தவழ்ந்தது.

''அப்படியானால் தாங்கள் கட்டாயம் இறங்கி வர வேண்டியதுதான். இன்றைய வசூல் மொத்தத்தையும் தங்கள் மடத்துக்கு நன்கொடையாகத் தருகிறேன். வாருங்கள் இறங்கி,'' என்று அழைத்தாள் அவள்.

## பதின்மூன்று

வாத்தியக் கோஷ்டிக்கு நேர்பின்னே, முதல் வரிசையின் நட்ட நடு சோபாவில் அமர்ந்திருந்தார் ராதானந்தர்.

ராணியின் அழைப்பை உதற முடியவில்லை. 'மடத்துக்கு வரக்கூடிய வருமானத்தை மறுப்பதற்கு நமக்கேது உரிமை?' என்று தமக்குள் சொல்லிக் கொண்டார் அவர்.

துறவி உடையில் ஒருவர் மரியாதை உபசாரங்களுடன் அழைத்து வரப்பட்டதும், மேல் வகுப்புக்களிலிருந்த பலர் ஆச்சரியத்துடன் நோக்கினார்கள். உறுதியான நடையுடன் அவர் நெருங்கி வந்தபோது, இளம் வயதும் முகத்தின் பொலிவும் அவர்களில் பலரை எழுந்து நிற்க வைத்தன. சற்றே கையை உயர்த்தி அவர்களுடைய வணக்கங்களை ஏற்றுக் கொண்டவாறு அமர்ந்த பின்னரும், பல விழிகள் தம்மை மொய்த்துக் கொண்டிருக்கின்றன என்பதை ராதானந்தர் உணர்ந்தார்.

சில நிமிடங்களுக்கெல்லாம் நாடகம் ஆரம்பமாயிற்று. உலகின் ஒவ்வோர் அசைவிலும், உயிரின் ஒவ்வோர் தோற்றத்திலும் ஆனந்தத்தைக் காண வேண்டுமென்ற மனப் பக்குவத்தைப் பெற்றிருந்ததாலோ என்னவோ, ராதானந்தர், இனியதொரு புன்னகையுடன் சோபாவில் நன்றாகச் சாய்ந்து கொண்டு மேடையைக் கவனிக்கலானார்.

முதல் காட்சி முடிந்து திரை இறங்கியபோது, ராணியின் மாமா ஓடிவந்து, "கடைசி வரையில் இருக்கவேண்டும் என்று ராணி சொல்லச் சொன்னாள்," என்றார்.

"பார்க்கலாம்," என்று ராதானந்தர் பதிலளித்ததும், மேற்கொண்டு வற்புறுத்தாமல் அவர் திரும்பி விட்டார். ராதானந்தர் மனத்துக்குள் சிரித்துக் கொண்டார்—தம்மை உபசரிக்கப் பிடிக்கவில்லை என்பதை வெளிப்படையாகக் காட்டிக்கொண்டிருக்கிற அந்த மனிதரை எண்ணி.

இரண்டாம் காட்சி ஆரம்பமாகிற சமயம்—

"நமஸ்காரம் சுவாமிஜி," என்று இடப்புறத்திலிருந்து ஒரு குரல் கேட்டது.

ராதானந்தர் திரும்பிப் பார்த்தார். நாடகம் ஆரம்பித்த பிறகு பல பேர் வந்திருக்க வேண்டும். முன்பு காலியாயிருந்த பல நாற்காலிகள் இப்போது நிரம்பியிருந்தன.

இடது கைப்பக்கத்தில் இருந்தவருக்கு ஐம்பது வயதிருக்கும். அரை வட்டத்துக்குத் தலையில் வழுக்கை விழுந்திருந்தாலும், புருபுருவென்று மீசை இருந்தது. அவரை எங்கே பார்த்திருக்கிறோம் என்று யோசித்தவாறே ராதானந்தர் புன்னகை செய்து தலையசைத்தார்.

"நினைவில்லை?" என்றார் அவர்.

"ஆமாம்..."

"சாரங்கபாணியின் வீட்டுக்கு அடிக்கடி வருகிறவன் தான் நான்."



"ஓகோ."

"அவருடைய காலீக்— நானும் ஓர் அஸிஸ்டெண்ட் கமிஷனர் தான்."

ராதானந்தர் ஒரு புன்முறுவலுடன் மௌனமாகி, பழைய உறவுகள் பற்றிப் பேசுவதில் தனக்கு விருப்பமில்லை என்பதை நாசுக்குடன் வெளிப்படுத்தினார்.

அந்தப் போலீஸ் அதிகாரியும் அவரைத் தொந்தரவு படுத்த நினைக்கவில்லை. சுருக்கமாக, "மிஸ்டர் சாரங்கபாணிகூட வரப்போவதாகச் சொல்லிக் கொண்டிருந்தார். வந்தாலும் வருவார்— மகனோடு" என்றார்.

அப்படித் தெரிவித்துவிட்டு ராதானந்தரின் முகத்தை மிகத் துருவி ஆராய்ந்தார். அதிலே சலனத்தைக் காணாமல் ஏமாற்றமடைந்தவராக மேடைக்குப் பார்வையைத் திருப்பினார்.

அடுத்த காட்சி ஆரம்பமாவதற்காக விளக்குகள் அணைந்தபோது, ராதானந்தரின் விழிகள் எச்சரிக்கையுடன் நாலுபுறமும் சுழன்றன. தெரிந்த முகம் எதுவும் தென்படாததால் திருப்தியும் அமைதியும் நிலவின அவர் முகத்தில்.

சில வினாடிகள்தான்.

தொடக்க முதல் காலியாக இருந்து வந்த வலதுபுற ஆசனத்தில் யாரோ தயக்கத்துடன் அமருவதை உணர்ந்தார். உட்கார்ந்தவர் கனமான சரீரம் உடையவர் என்பதை அந்த நாற்காலியின் கிறீச்சிட்ட ஒலியும், மெல்ல வெளிப்பட்ட பெருமூச்சும் காட்டின. ராதானந்தரின் கண்களில் மிக லேசாக ஒரு சங்கடம் பரவி மறைந்தது. பார்வையையோ தலையையோ திருப்பக்கூடாது என்ற உறுதி செய்து கொண்டவர்போல் அவருடைய உடம்பில் ஒரு விறைப்புக் கண்டது.

ஆனால் வந்தவர், ராதானந்தரை விடுவதாயில்லை போலும்.

''என்னை வரச் சொன்னதாகத் தெரிந்து'' என்றார், ராதானந்தரின் பக்கமாகச் சாய்ந்து.

திகைப்பும் வியப்பும் மேலிடச் சடேரென ராதானந்தர் திரும்பினார்.

''உங்களையா!''

சின்னச் சாமியார்தான் வந்திருந்தவர். அவருடைய முகத்தில் முதல் தடவையாகக் கசப்பையும் எதிர்ப்பையும் கண்டார் ராதானந்தர்.

சின்னச் சாமியார் தாழ்ந்த குரலில் பேசினாலும் அழுத்தமாகத் தெரிவித்தார்: ''இந்தக் காவி வஸ்திரம் உடம்பில் ஏறி இருபத்தெட்டு வருஷமாகிறது. இந்த மாதிரி இடங்களுக்கு வரும்படி நேர்ந்தது கிடையாது...''

''நான்... நான்...''

''சுவாமிஜியின் உத்தரவுக்குக் கட்டுப்படக் கடமைப் பட்டவன்தான் நான். இருந்தாலும் என் வயதையும் நிலைமையையும் மதித்து அதற்குத் தகுந்த வேலைகளாகக் கொடுத்தால் எதுவானாலும் செய்கிறேன். இப்போது என்னை வரவழைத்தது எதற்கென்று தெரிந்தால்......''

ராதானந்தரின் முகம் சற்றுச் சிவந்தது. ''நீங்கள் ஏதோ தப்பாக நினைத்திருக்கிறீர்கள்... உங்களை வரச் சொன்னதாக யார் சொன்னது? நான்...''

பேச்சை நிறுத்திக் கொண்டார் அவர். அக்கம் பக்கத்து ஸீட்டுக்களில் பலருடைய பார்வை அவர்கள்மீது விழுந்ததே காரணம். மேடையில் மிக நீளமான ஒரு நாட்டியம் நடைபெற்றுக் கொண்டிருந்ததால் அலுப் படைந்திருந்தவர்களுக்கு, இரண்டு துறவிகள் கிசுகிசு வென்று— ஆனால் உஷ்ணமாக— உரையாடுவது சுவையான காட்சியாக இருந்தது போலும்.

மறு காட்சிக்காக இடைவேளை விடட்டும் என்பது போல் சின்னச் சாமியார் காத்திருந்தார். அந்தச் சந்தர்ப்பம் பல யுகங்களுக்கப்புறம்தான் வந்தது.



விளக்குக்காகப் போட்ட விசை நமக்கும் போடப் பட்ட மாதிரி உடனே சொன்னார் சின்னச் சாமியார்: ''டிரைவர் வந்து சொன்னானே, என்னை அழைத்து வரச் சொன்னதாக?''

''நான் சொன்னேனென்றா சொன்னான்?''

சின்னச் சாமியார் சிறிது தயக்கத்துடன் யோசித்து விட்டு, ''வந்து அப்படிச் சொல்லவில்லை. ஆனால், தங்களை அழைத்துப்போன நாடகக்காரி என்னிடமும் சொல்லி வரச் சொன்னதாகத் தெரிவித்தான். தாங்கள் தான் அந்தப் பெண்மூலம் சொல்லியனுப்பினீர்கள் என்று நினைத்தேன்'' என்றார்.

ராதானந்தர் தரையை நோக்கியவாறு ஒரு வினாடி சிந்தனையில் ஆழ்ந்தார். ராணி, தன்னை உள்ளே அனுப்பிய பிறகு சிறிது பின்தங்கியது நினைவு வந்தது. அவள் திட்டம் என்ன? தன் வெற்றியை உலகத்துக்குப் பறைசாற்ற வேண்டும் என்பதா? இல்லாவிட்டால் எதற்காக மடத்திலிருந்து மற்றவர்களையும் அழைத்து வரச் சொல்லியிருக்க வேண்டும்?

சின்னச் சாமியார் இருக்கையை விட்டு எழுந்து கொண்டு, ''தாங்கள் கூப்பிடவில்லையென்றால் நான் போகிறேன்... இங்கே இருக்க எனக்குக் கூசுகிறது.'' என்றார்.

''மடத்துக்கு நன்கொடை தருவதாக வாக்களித்ததன் பேரில்தான் நானும் வந்தேன்,'' என்று ராதானந்தர் கூறிய போதிலும், அவர் சமாதானத்தில் பலவீனமே வெளிப் பட்டது.

''நன்கொடை வசூலிப்பதே நமக்கு உகந்ததல்ல என்று எனக்குப் படுகிறது. ஆனால் சுவாமிஜிக்குப் புத்திமதி சொல்ல நான் யார்?''

சின்னச் சாமியார் நல்ல வேளையாக வேகமாக வெளியேறாததால், பாதக் குறடுகளின் ஓசை எவர்

கவனத்தையும் இழுக்கவில்லை. மேடையிலும் ஏதோ நகைச்சுவைக் காட்சி நடைபெற்றுக் கொண்டிருந்ததால், அவையில் சிரிப்பும் கைதட்டலும் நிரம்பியிருந்தன.

ராதானந்தரின் மன அமைதி விடைபெற்றுச் சென்று விட்டதை இப்போது பார்த்திருந்தால் அந்தப் போலீஸ் அதிகாரி கண்டிருப்பார். ஆனால் நாடகத்தில் ஈடுபட்டிருந்தார் அவரும்.

எண்ணங்களைக் கட்டுப்படுத்தி, இழந்த நிதானத்தை திரும்பப் பெறப் பெரும் பிரயத்தனம் செய்ய வேண்டியதாயிற்று. அதற்காக, மேடையைக் கூர்ந்து கவனிக்கலானார்; இந்தண்டைப் புறமிருந்த போலீஸ் அதிகாரியிடம், "மணி என்ன ஆகிறது?" என்று வலிய விசாரித்தார். தமது தோல் பையைத் திறந்து சில பழைய கடிதங்களைப் பிரித்துப் பார்த்துவிட்டு ஒழுங்காகச் சேர்த்து மடித்து வைத்தார். சத்தப்படுத்தாமல் விரல்களைச் சொடுக்கு எடுத்துக்கொண்டு மேடையில் பார்வையைச் செலுத்தியபோது, ராணி படபடவென்று வசனம் பேசி, ரசிகர்களின் கரகோஷத்தைப் பெற்றுக் கொண்டிருந்தாள்.

போலீஸ் அதிகாரி பணிவுடன் ராதானந்தரின் பக்கம் குனிந்து, "நன்றாய்த்தான் நடிக்கிறாள். சுவாமிஜி எப்படி அபிப்பிராயப் படுகிறாப்போலேயோ?" என்றார்.

"ஆமாம். காதல் கட்டங்கள் இயற்கையாக வருகிறது" என்ற ராதானந்தர், போலீஸ் அதிகாரியின் முகத்தில் பளீரென்று முத்திரையடித்த திகைப்பைக் கவனித்து, தனக்குள் சிரித்துக்கொண்டார்.

சிறிது பளு குறைந்த மாதிரி இருந்தது அவர் உள்ளத்தில். பழைய உற்சாக இயல்பைக் கைப்பற்றி விட்டோம் என்று அவர் எண்ணியிருந்த சமயம்—

இன்னோர் இடைவேளை வந்தது. விளக்குகள் எரிந்தன.



ஆனால் திரை விழவில்லை.

ராணி, மேடையின் நடுமத்திக்கு வந்து நின்றாள். ஓர் ஆள் பக்கவாட்டுப் படிகள் வழியாக வேகமாய் மேடைக்கு ஏறி வந்து, 'மைக்' தண்டை அவள் எதிரில் நிறுத்தி விட்டுத் திரும்பிச் சென்றான். ராணியின் மாமா, கையில் ஒரு பெரிய ரோஜா மாலையுடன் அவள் அருகில் வந்து நின்று கொண்டார்.

ஒயிலாகக் கைகுவித்து வணக்கம் தெரிவித்த ராணி, "பெரியோர்களே, தாய்மார்களே! இன்றைய தினத்தை என் வாழ்நாளில் மறக்க முடியாத ஒன்றாகக் கருதுகிறேன்," என்று இனிமையான குரலில் தெளிவாகப் பேசலானாள்.

ராதானந்தர் அவள் பேச்சை ரசிக்கிற மாதிரி தலையை உயர்த்தி அவளைப் பார்த்தவாறு இருந்தார்.

"புதிய நாடகத்தின் ஆரம்ப விழா என்பதால் மட்டுமில்லை. சுவாமி ராதானந்தர் அவர்கள் இங்கே வருகை தந்திருப்பதைத்தான் நான் பெரும் பாக்கியமாக நினைக்கிறேன். அதை நீங்களும் ஒப்புக் கொள்வீர்கள்."

தியேட்டரின் மறுகோடியில் சிலபேர் கை தட்டினார்கள்.

ராணி தொடர்ந்தாள்: "சுவாமிஜியின் தலைமையில் ஒப்பற்ற பணியாற்றி வருகிற பவானி மடத்துக்கு இன்றைய வசூலை நன்கொடையாக அளிக்க விரும்புகிறோம். அன்பு கூர்ந்து அதை ஏற்றுக் கொண்டு, எங்களுக்கு ஆசி கூறிச் சில வார்த்தைகள் பேச வேண்டுமென்று உங்கள் சார்பாக சுவாமிஜி அவர்களைத் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன்."

மைக்கிலிருந்து நகர்ந்து ஓரமாக நின்று கொண்ட ராணி ராதானந்தரைப் பார்த்து, மெல்லத் தலையசைத்தாள்.

ராதானந்தர் தயங்கினாரா? சங்கடப்பட்டாரா? கண்ணிமைக்கும் நேரத்துக்குள் அவர் தமது உணர்ச்சிகளை மறைத்துக் கொண்டு விட்டாரென்பதை, மிக அருகிலிருந்த போலீஸ் அதிகாரிகூடக் கண்டு கொள்ளவில்லை.

நிமிர்ந்த பார்வையுடன் ராதானந்தர் மேடையில் ஏறினார். மைக்கை ஒரு கையால் பற்றிக்கொண்டு கூட்டத்தின்மீது கம்பீரமாகப் பார்வையை வீசி முடிப்பதற்கு முன்னே, ராணி சட்டென ரோஜா மாலையை அவர் கழுத்தில் சூட்டி, கை குவித்து வணங்கிவிட்டு ஒதுங்கி விட்டாள்.

இரண்டாம் முறை ஏற்பட்ட அதிர்ச்சியையும் ராதானந்தர் காட்டிக் கொள்ளவில்லை. மாலையைக் கண்ணில் ஒற்றிக் கொண்டபின், கழற்றிக் கையில் வைத்துக் கொண்டார். "குமாரி ராணி அவர்களுக்கு எங்கள் மடத்தின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட தர்ம காரியங்களுக்கு அவருடைய நடிப்புத் திறமை மேலும் மேலும் பயன்பட வேண்டும் வணக்கம்," என்று இரண்டே வாக்கியம் சொல்லிவிட்டுத் திரும்பினார்.

ராணி, கையில் பளபளக்கும் ஒரு சிறிய பட்டுப் பையை அவரிடம் பணிவோடு நீட்டினாள்.

"சுவாமிஜி வித்தியாசமாக நினைத்துவிடக் கூடாது. இன்றைக்கு ஆரம்ப விழாவாகையால், அழைப்பின் பேரில் வந்திருக்கிற பெரியோர்கள்தான் ஏராளமாயிருக்கிறார்கள். ஆகவே டிக்கெட் விற்று வந்த வசூல் இன்றைக்கு ரொம்பக் கொஞ்சம்தான்... இன்னொரு நாள், நன்றாய் விளம்பரப்படுத்தி, நிறைய வசூல் செய்து சுவாமிஜியிடம் கொடுக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்..."

ராதானந்தர் அந்தச் சிறிய பையைப் பெற்றுக்கொண்டிருக்கும்போதே, முன் வரிசையில் விசிறி மடிப்பும்



ஜரிகைத் தலைப்பாகையுமாக அமர்ந்திருந்த ஒரு கிழவர் எழுந்து நின்றார்.

"கொஞ்சம் என்றால் எவ்வளவு? அதைச் சொல்லுங்களேன்" என்றார்.

அதைக் கேட்டு மிகவும் திடுக்கிட்ட மாதிரி ராணி நிமிர்ந்தாள். பிறகு ஒரு தளுக்குச் சிரிப்புடன், சொல்லக் கூட வெட்கமாயிருப்பதால்தான் சொல்லவில்லை..." என்று இழுத்தாள்.

"சும்மா சொல்லு கண்ணு!" என்று கொட்டகையின் மறு மூலையிலிருந்து ஒரு குரல் கூவ, அதைத் தொடர்ந்து பெரும் சிரிப்பு எழுந்தது "சொல்லுங்களேன்! அதனாலென்ன?" என்று முன் வரிசையிலிருந்த வேறு சிலரும் தூண்டினார்கள்.

ராணி மறுபடியும் நாணத்துடன் சிரித்துவிட்டு, "இருபத்தெட்டு ரூபாய் பதினாலு பைசா" என்றாள்.

கிட்டத்தட்ட அந்தப் பையை நழுவ விட்டுவிட்டார், ராதானந்தர்.

படபடவெனக் கைதட்டலும் சீழ்க்கையும் சிரிப்பும் அலை அலையாகப் புரண்டு கொட்டகையின் சுவர்களிலும் கூரையிலும் மோதி மோதித் திரும்பின.

நிதானத்தைக் கைவிட்டு விடாமல், "நன்றி," என்று இளநகையுடன் மீண்டும் சொல்லிவிட்டு, படிவழியே இறங்கி, தமது இருக்கையில் வந்தமர்ந்தார் ராதானந்தர்.

போலீஸ் அதிகாரி அனுதாபத்துடன் அவர் பக்கம் திரும்பி, "ரொம்ப மோசம், சுவாமிஜி. இந்த அற்பத் தொகைக்குப் போய் எதற்காக அவ்வளவு ஆர்ப்பாட்டம் பண்ணினார்களாம்?" என்றார்.

ராதானந்தர், "அவர்கள்மேல் தப்பில்லை. ஏதோ திடீரென்று தோன்றிச் செய்ததுதானே..." என்றார் குரலைச் சீராகச் செய்துகொண்டு.

"திடீராவது ஒன்றாவது சுவாமிஜி! இந்த ராணியே தான் ஆகட்டும், இஷ்டப்பட்டால், ஒரு ஐந்நூறு ரூபாய் சேர்த்துப் போட்டுத் தந்திருக்கக் கூடாது? வேறே சந்தர்ப்பமாயிருந்தால், வேண்டுமென்றே அவமானப் படுத்துவதற்காகப் பண்ணினாள் என்றுகூடச் சொல்லி விடுவேன்," என்றார் போலீஸ் அதிகாரி ஆத்திரத்துடன்.

ராதானந்தர் அவருடன் வாதாடிக் கொண்டிருக்க விரும்பவில்லை. தம்மை அறியாமலே ரோஜா மாலையின் இதழ்களை ஒவ்வொன்றாகப் பிய்த்துப் போட்டபடி சிறிது நேரம் அமர்ந்திருந்தார். போலீஸ் அதிகாரி சொன்னது எவ்வளவு உண்மை! அவமானப்படுத்து வதற்காக...

ராணியின் மாமா வந்து, "தாகத்துக்கு ஏதாவது..." என்று கேட்டார்.

ராதானந்தர் உடனே எழுந்து கொண்டார். "மன்னிக்க வேண்டும். மடத்துக்குத் திரும்ப நேரமாகி விட்டது. உங்களிடம் சொல்லிக்கொண்டு போவதற்குத் தான் காத்திருந்தேன்."

ராணியின் மாமா ஆட்சேபம் கூறவில்லை.

"பார்த்து வாருங்கள்," என்று டார்ச் அடித்து வழி காட்டியபடி முன்னே நடந்தார்.

அரைத் தூக்கத்துடன் காரில் சாய்ந்திருந்த டிரைவரை யாரோ எழுப்பினார்கள். ராதானந்தர் விடை பெற்றுக் கதவைச் சாத்திக் கொண்டதும் கார் புறப் பட்டது.

"டிரைவர்! உன்னை யாரும் உள்ளே வந்து நாடகம் பார்க்கும்படி கூப்பிடவில்லையா?" என்று ராதானந்தர் வினவினார்.



"கூப்பிட்டாங்க சாமி" என்றான் டிரைவர். "நான் தான் வேண்டாமென்று வண்டியிலேயே இருந்து விட்டேன்."

"ஏனப்பா?"

"சுவாமி மாதிரி மனசில் பக்குவமும் பரிசுத்தமும் இருந்தால் எந்த இடத்துக்கும் போகலாம், இருக்கலாம். இல்லாமப் போனால், போகக் கூடாதுன்னு இருந்து விட்டேன்."

ராதானந்தருக்கு இருதயத்தில் அடி விழுந்த மாதிரி வேதனை ஏற்பட்டது.

வாய்விட்டுச் சொல்லவில்லை. உள்ளுக்குள் நினைத்துக் கொண்டார்.

'பரிசுத்தமான மனத்துடன்தான் நான் போனேன் என்பது என்ன நிச்சயம்? அப்படிப் போயிருந்தால் ஏன் அதற்கு நல்ல பலன் கிடைக்காமல் அவமானம் ஏற்படு கிறது?'

தெருப்புறமிருந்த ஒரே ஒரு நீலக் குழாய் விளக்கைத் தவிர, பவானி மடத்தின் மற்ற இடங்கள் இருளில் தோய்ந் திருந்தன.

கடற்கரையிலிருந்து மிக நேரம் கழித்துத் திரும்பிக் கொண்டிருந்தது ஒரு குடும்பம். நாணயங்களை வாரி யிறைத்துக் கொண்டு சென்ற மாதிரி, அந்தக் காருக்குள் ளிருந்து குழந்தைகளின் கும்மாளச் சிரிப்பு ராதானந்தரை மோதிவிட்டு மறைந்தது.

தோட்டப் பாதை வழியே நடந்தவர், சற்று நின்று, "முருகேசா! சின்னச் சாமியார் படுத்து விட்டாரா?" என்று குரல் கொடுத்தார்.

தோட்டக்காரன் குடிசைக்குள்ளிருந்து ஓடிவந்து, "இப்பத்தான் பூஜை அறைக்குள் போனாருங்க," என்றான்.

இந்த வேளையில் பூஜை அறையில் என்ன வேலை? ராதானந்தர் யோசனையுடன் மெல்ல நடந்து பூஜை ஹாலை அடைந்தார்.

கதவு வெறுமே சாத்தியிருந்தது. சற்றுத் திறந்து உள்புறம் பார்த்தார்.

குத்துவிளக்கின் நோஞ்சான் வெளிச்சத்தைச் சின்னச் சாமியாரின் பரந்த உடல் மறைத்துக் கொண்டிருந்தது. குனிந்து, தரையில் ஒரு காகிதத்தின்மீது அவர் ஏதோ எழுதிக் கொண்டிருந்தார்.

''உங்களைப் பார்க்கத்தான் நேராக வந்தேன்,'' என்றார் உள்ளே நுழைந்த ராதானந்தர்.

சின்னச் சாமியாரின் புருவங்கள் உயர்ந்தன.

அந்தச் சிறிய பட்டுப் பையை அவரிடம் நீட்டினார் ராதானந்தர். ''நாடகத்தில் கிடைத்த நன்கொடை.''

''நான் பார்க்கவேண்டுமா? நிறைய ஆகிவிட்டதென்று தங்கள் மனச்சாட்சிக்குத் திருப்தி கிட்டலாம். எனக்கு ஆகாது.''

''திறந்து பாருங்களேன்,'' என்று ராதானந்தர் புன்சிரிப்புடன் வற்புறுத்தினார்.

இருபத்தெட்டு ரூபாய் பதினாலு பைசாவா! நம்ப இயலாதவர்போல் சின்னச் சாமியார் இரண்டு மூன்று தரம் எண்ணிப் பார்த்தார்.

ராதானந்தர் வாய்விட்டே சிரித்து ''எவ்வளவு தடவை எண்ணினாலும் தொகை அவ்வளவுதான். இந்தத் தொகைக்காகவா தங்களுடைய மன வருத்தத்தைச் சம்பாதித்துக் கொண்டேன் என்று நினைக்க அவமானமாயிருக்கிறது. என்னை மன்னியுங்கள்'' என்றார்.

சின்னச் சாமியாரின் தேகத்தில் சிலிர்ப்பு ஓடி மறைந்தது. ஒரு நிமிடம் பேசாதிருந்தவர், தான் எழுதி வைத்திருந்த காகிதத்தை ராதானந்தரிடம் தந்தார்.



''என்ன இது?''

சின்னச் சாமியார் அமைதியாக, ''தாங்கள் என்னிடம் ஒளிவு மறைவு இல்லாமல் நடந்து கொண்ட மாதிரி நானும் இருக்க வேண்டுமல்லவா? இதைத் தபாலில் சேர்ப்பிக்கப் போகிறேன். அதற்கு முன் பார்த்து விடுங்கள்'' என்றார்.

காகிதத்தைப் பிரித்தார் ராதானந்தர்.

டெல்லியிலிருந்த தலைமை அலுவலகத்துக்கு எழுதப் பட்டிருந்தது கடிதம்.

''மடத்தின் ஆஸ்பத்திரியை நடத்துவதற்காக நன்கொடை கேட்டு நாமாக வீடு வீடாய்ப் போகலாமா? பணம் தருகிறார்கள் என்பதற்காக ஒழுக்கம் கெட்டவர்கள் நடத்தும் நாடகங்களுக்குப் போகலாமா? சுவாமி ராதானந்தரின் இந்த நடவடிக்கைகளைப் பற்றித் தாங்கள் அபிப்பிராயம் தெரிவித்தால், நான் குழப்பங்கள் நீங்கி, தெளிவோடும் அந்தரங்க சுத்தமாயும் மடத்தில் தொண்டு செய்யப் பேருதவியாக இருக்கும்...''

ராதானந்தர் கடிதத்தை மடித்துத் திருப்பிக் கொடுத்தார்.

''தாங்கள், தங்கள் கட்சியை எடுத்துச் சொல்ல வேண்டுமென்று நினைத்தால், எழுதிக் கொடுங்கள். இத்துடனேயே சேர்த்து அனுப்பி விடுகிறேன்'' என்றார் சின்னச் சாமியார்.

''அவசியமில்லை.''

ராதானந்தர் தமது அறையை நோக்கித் திரும்பினார்.

ஏழு நாட்களில் டெல்லியிலிருந்து பதில் வந்தது.

ராதானந்தர் அதைப் படித்துவிட்டு, ''பாருங்கள்,'' என்று சின்னச் சாமியாரிடம் கொடுத்தார்.

''ராதானந்தரின் நடவடிக்கைகளை நாம் அங்கீகரிக்கவில்லை. தாங்கள் குறிப்பிட்டுள்ளது போன்ற வழிகளில் நிதி வசூலிப்பது நம்முடைய தன்மைக்கும், கொள்கைக்கும் விரோதமானது என்று திடமாகக் கருதுகிறோம்,'' என்று அதில் கண்டிருந்தது.

சின்னச் சாமியார் அதைப் பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில், ராதானந்தர், அடுத்த கடிதத்தைப் படிப்பதில் முனைந்திருந்தார்.

பார்-அட்-லா மேனன் எழுதியிருந்தார் அதை:

''நான் சொன்ன விஷயத்தை யோசித்தீர்களா? தங்களுடைய திரண்ட சொத்து எதற்காகச் சாரங்கபாணியிடம் இருக்க வேண்டும்? தாங்கள் சம்மதம் தெரிவித்தால், உடனே நடவடிக்கை எடுக்கிறேன்.''

## பதினான்கு

சின்னச் சாமியார், மேலிடத்திலிருந்து வந்த கடிதத்தைத் திருப்பித் தந்தார்.

''தாங்கள் எப்படி நினைக்கிறீர்களோ, என்னைப் பொறுத்த வரையில், ஆஸ்பத்திரிக்காக நிதி வசூல் செய்வதை அங்கீகரிக்க மாட்டார்கள் என்றுதான் நினைத்தேன். அப்படியே நடந்திருக்கிறது'' என்றார்.

பார்-அட்-லா மேனன் எழுதியிருந்த மற்றக் கடிதத்தை மடித்தவாறே சின்னச் சாமியாரின் முகத்தைக் கவனித்தார் ராதானந்தர். அதிலே வெற்றியின் அகம்பாவம் துளியும் காணப்படவில்லை. தமக்கு மேலேயுள்ளவர்மீது இதைக் காட்டிலும் அழுத்தமான ஒரு வெற்றியை யாரும் என்றைக்கும் பெற்றிருக்க முடியாது. அப்படியிருந்தும் எப்படி இந்தச் சின்னச் சாமியாரால் இவ்வளவு உணர்ச்சியற்று— பற்று நீங்கி— இருக்க முடிகிறது?



''சுவாமிஜியின் திட்டங்களுக்கு என்னால் இடைஞ்சல்தான். மன்னிக்க வேண்டும்,'' என்றார் சின்னச் சாமியார்.

ராதானந்தர் சிரித்துக்கொண்டே இருக்கையைவிட்டு எழுந்தார். ''இல்லை, இல்லை. மடத்தின் கொள்கைகளைப் புரிந்து கொள்ளாமல் காரியம் செய்தேனே என்று எனக்குத்தான் வருத்தமாயிருக்கிறது,'' என்று கூறியவர் ஒரு நிமிடம் தலை குனிந்து மௌனமாயிருந்தார்.

காலை ஒன்பது மணி வேளையாதலால், மடத்துக்கு வெளியே, சாலையில் வெய்யிலும் காற்றும் இதம் தந்து கொண்டிருந்தன. கையைப் பின்புறம் கட்டியபடி நின்று சிறிது நேரம் யோசனை செய்த ராதானந்தர், தமது உதவியாளரிடம் திரும்பி, ''பணம் வைத்திருக்கிறீர்களா?'' என்று கேட்டார்.

சின்னச் சாமியாருக்குத் திகைப்புத்தான். ''ஆமாம்... அன்றாடச் செலவுக்காக வைத்திருக்கிறேன்...எதற்குத் தேவை என்று தெரிவித்தால்...''

''ஒன்றுமில்லை, கொஞ்சம் வெளியே போய்விட்டு வரலாமென்று பார்க்கிறேன்,'' என்று ஆரம்பித்த ராதானந்தர் சின்னச் சாமியாரின் முகம் காட்டும் குறிப்பை உடனே புரிந்துகொண்டார். ''சேட்ஜியின் கார் வருமே என்கிறீர்களா? வேண்டாம், வேண்டாம். அதுவும் ஒரு வகை நன்கொடைதானே. நான் நடந்து போய்விட்டே வந்து விடுகிறேன். ஒருகால் ஏதாவது அவசியம் நேர்ந்தால் டாக்ஸி வைத்துக்கொள்கிறேன்'' என்றார்.

சின்னச் சாமியார் பக்கத்து அறைக்குச் சென்று ஒரு பழங்காலத்துத் தோல் பர்சைக் கொணர்ந்தார். அதன் பெரிய வாய்கள் திறந்து கொண்டபோது, சில்லறையாகப் பல நாணயங்கள் வெளிப்பட்டன. உள்ளங்கையில் கொட்டிக்கொண்டு எண்ணி, ''ஐந்து ரூபாய் போதுமா?'' என்று கேட்டார்.

பணத்தை "ங்கி, காவி ஜிப்பாவின் நீண்ட அங்கியில் அவர் போட்டுக்கொண்டபோது, ''தப்பாய் நினைக்கக் கூடாது. பெரியவர் அதிகமாய்த் தனியே போவது கிடையாது. என்னைத் துணைக்கழைத்துச் செல்வார்,'' என்றார் சின்னச் சாமியார்.

''குறிப்பிட்ட வேலை என்று எங்கேயும் புறப்பட வில்லை,'' என்று பதிலளித்தார் ராதானந்தர். ''காலாறக் கொஞ்ச தூரம் நடக்கலாம் என்று...நம்முடைய மடத்து ஆஸ்பத்திரி எங்கே இருக்கிறது?''

''அது...'' தயங்கினார் சின்னச் சாமியார். ''கோவிந் தாச்சார் என்று ஒரு டாக்டர் இருக்கிறார். அவருக்கு முன்னதாகத் தகவல் தெரிவித்தால் தங்களைத் தகுந்தபடி வரவேற்று ஆஸ்பத்திரியைச் சுற்றிக் காட்டுவர்...''

''திடீரென்று போவதால் அவருக்கு ஒன்றும் கஷ்ட மில்லையே?''

அந்த அப்பட்டமான கேள்வியினால் திடுக்கிட்டுப் போனார் சின்னச் சாமியார். என்ன முயன்றும் அந்தத் திகைப்பைப் பூரணமாக மறைத்துக்கொள்ள இயலாமல், ''அதற்காகச் சொல்லவில்லை... சுவாமிஜியை யாரோ என்று நினைத்துவிடக் கூடாதல்லவா...'' என்றார்.

''ஆஸ்பத்திரி எங்கே இருப்பதாகச் சொன்னீர்கள்?''

''அவென்யூ ரோடில்தான்... போலீஸ் ஸ்டேஷனுக்கு எதிர்க் கட்டிடம்,'' என்று சின்னச் சாமியார் தெரிவித்துக் கொண்டிருந்தபோது, ராதானந்தர் பாதக் குறடுகளை அணிந்துகொண்டு புறப்பட்டுவிட்டார்.

அவென்யூ ரோடை அடைகிற வரையில் இரண் டொருவர் கும்பிடு போட்டார்கள். தானே கார் ஓட்டி வந்து கொண்டிருந்த ஒரு பெண்மணி, காரை அவர் பக்க மாக நிறுத்தி, இறங்கி வந்து, ''சுவாமிஜி எங்கே போக வேண்டும்? நான் கொண்டு போய் விடுகிறேனே? எதற்காகச் சிரமப்பட வேண்டும்?'' எ று பணிவுடன் உதவ முன் வந்தாள்.



''ரொம்ப நன்றி. வேண்டுமென்றேதான் நடந்து போய்க் கொண்டிருக்கிறேன்,'' என்று சொல்லி அந்தப் பெண்மணியை அனுப்பிவிட்டு, போலீஸ் ஸ்டேஷனை அடைந்தார். எதிர்ச்சாரியைப் பார்த்ததும் அவருக்கு நினைவு வந்தது.

பக்கத்திலேதான் ஒரு தியேட்டர்கூட இருக்கிறது. அந்த நாளில் இதே சாலை வழியே, இதே பழைய செங்காவிக் கட்டிடத்தைத் தாண்டிப் பலமுறை சென்றதுண்டு. நின்று கவனித்ததில்லை.

பவானி மடம் ஆஸ்பத்திரி...

காம்பவுண்டு சுவர் பல இடங்களில் இடிந்திருந்ததால் 'கேட்' என்றும் வாசலென்றும் தனியே தேவையில்லை. உண்மையில், பல வழிகளில்தான் ஜனங்கள் வந்து கொண்டும் போய்க்கொண்டும் இருந்தார்கள். சின்னக் கட்டடம், முன்புற வெராந்தாவின் ரெயில் ஓடு போட்ட கூரை, குற்றுயிரும் குலையுயிருமாக இருந்தது. வெராந்தா விலிருந்த கர்னாடக மரப் பெஞ்சுகளில் சில ஏழைச் சிறுவர்கள் ஏறிக் குதித்து விளையாடிக் கொண்டிருந் தார்கள். ஆஸ்பத்திரியின் குழந்தைகளான இருமல்கள், சாலையைக் கடந்து இந்தக் கோடிக்கும் வந்தன. மருந்து கொடுக்கும் ஜன்னல் போலிருந்த இடத்தில் கூட்டம் இருந்தது. உள்ளே ஒரு ஹாலில் கும்பலாகச் சிலர் நின்றிருந்ததால், அங்கே எங்கேயோதான் டாக்டர்— என்ன பெயர் சொன்னார்? என்னமோ ஒரு சார்...... ஆமாம், டாக்டர் கோவிந்தாச்சார்— அறை இருக்க வேண்டும்.

எவ்வளவு மட்டமான மருத்துவ விடுதியின் வாசலிலும் இரண்டு ரிக்ஷாவது இருக்கும். பவானி மடத்து ஆஸ்பத்திரியின் வாசலில் அதைக்கூடக் காணோம்.

ராதானந்தரின் உள்ளத்துக்குள், வெறுப்புக் கொப்புளித்தது. இப்படிப்பட்ட சேவல்மான ஒரு மருத்துவ விடுதியையா நீடித்து நடத்த நிதி திரட்டினோம்? இது நீடிப்பதால், இந்தக் சேவல நிலையில் தொடர்ந்து நடப்பதால், ஒரு நாளும் நோயாளிகளுக்கு நன்மை விளையப் போவதில்லை...... ஆபத்துதான் அதிகரிக்கும்... பெரியவரும் சரி, சின்னச் சாமியாரும் சரி, விவேகிகள். உலகம் அறிந்தவர்கள். பிரத்தியட்சவாதிகள். சர்க்காரிடம் இதை ஒப்படைத்துவிட்டு, ஏற்படக்கூடிய சகலவிதமான பாவங்களையும் அரசாங்கத்தின் தலையில் கட்டிவிட நினைத்தது எத்தனை தீர்க்கதரிசனம்! அதை மாற்ற நினைத்தது எத்தனை மடத்தனம்!......

சட்டென்று ராதானந்தரின் நினைவுகள் நின்றன. அவருடைய விழியும் செவியும் எதிரிலிருந்த கட்டிடத்தை, அங்கே ஏற்பட்ட ஏதோவொரு திடீர்ப் பரபரப்பை நோக்கித் தாவின.

''விலகுங்க! ஒத்துங்கப்பா!'' என்று சில பேர் கூச்சலிட, உள் ஹாலில் கூடியிருந்த சிறு கும்பல் தாறுமாறாய்க் கலைய, அடர்ந்த நரைத் தாடியும், பட்டை நாமமும், பழைய கறுப்புக் கோட்டுமாக இருந்த ஒரு கிழவரை மூன்று நான்கு பேர் கைத்தாங்கலாகத் தூக்கி வெளியே கொணர்ந்து, வெராந்தாவிலிருந்த பெஞ்சில் உட்கார்த்தி வைத்தார்கள். உள்ளேயிருந்து ஒரு நரைத்த தலையர்— கம்பவுண்டரோ?— கையில் மருந்துப் புட்டியும் அவுன்ஸ் கிளாசும் வைத்தவாறே ஓடி வந்தார். புட்டிகளைக் கீழே வைத்துவிட்டு, கூட்டத்தில் யாரோ ஒருத்தர் வைத்திருந்த தினசரியைப் பறித்து அவருக்கு விசிறலானார்.

''காத்து விடுங்க! நகருங்க!'' என்று அவர் எல்லோரையும் விரட்டிக் கொண்டிருந்தது ராதானந்தரின் காதுக்குக் கேட்டது. இவ்வளவு கலவரப்படுத்துகிற அளவுக்குப் பெரிய மனிதரான அவர் யார், என்ன



நடந்தது அவருக்கு என்று தெரியாமல் குழம்பிக் கொண்டிருந்த சமயம்—

''டாக்டருக்கு மறுபடியும் உடம்புக்கு வந்திட்டுது போலிருக்கே?'' என்று அவருக்குப் பின்னாலிருந்து குரல் கேட்டது.

ராதானந்தர் திரும்பிப் பார்த்தார். போலீஸ் ஸ்டேஷனுக்குள்ளேயிருந்து வந்து கொண்டிருந்த இரண்டு கான்ஸ்டபிள்கள்தான் பேசிக் கொண்டிருந்தார்கள். ஆஸ்பத்திரிக்கோ, அங்கேயுள்ள பரபரப்புக்கோ, கான்ஸ்டபிள்களுக்கோ எவ்வித சம்பந்தமும் இல்லாதவர்போல ராதானந்தர், வேறு யாரையோ எதிர்பார்க்கிற மாதிரி மறுபுறம் திரும்பி நின்று கொண்டார். இருந்தாலும், உடம்பு சரியில்லாதிருப்பவர் அந்த மருத்துவமனையின் டாக்டர்தான் என்பதையும், அவருக்கு அடிக்கடி இந்த மாதிரி நேரும் என்பதையும் தெரிந்துகொண்ட பிறகு, முகத்தில் ஒரு மாற்றமும் காட்டாமல் வைத்திருப்பது அவருக்குப் பெரும் பிரயத்தனமாகவே இருந்தது.

மேல் அங்கவஸ்திரத்தைத் தலைக்கு மூடிப் போர்த்துக் கொண்டிருந்ததால், சாதாரணப் பண்டாரம் போலவே அவர் காட்சியளித்திருக்க வேண்டும். கான்ஸ்டபிள்கள் அவரைக் கண்டு தயங்காமல், தொடர்ந்து பேசிக் கொண்டு நின்றார்கள் ஸ்டேஷன் வாசலில்.

''என்னவோ கவர்மெண்ட் எடுத்து நடத்தப் போகுதுன்னு சொல்லிகிட்டிருக்காங்களே தவிர, ஒண்ணும் நடக்கக் காணோம். கவர்மெண்ட் ஆஸ்பத்திரியாக ஆகி, இந்த டாக்டரை முதல்லே வூட்டுக்கு அனுப்பணும் ஐயா!'' என்றார் ஒரு கான்ஸ்டபிள்.

மற்ற தாணாக்காரரின் குரலில் கோபம் தெறித்தது. ''நீ என்னய்யா அறிவில்லாம பேசறே? எத்தினி கெட்டிக்காரர் தெரியுமா இவர்? என் சம்சாரத்துக்குப் போன வருஷம், தலைக்குள்ளாற என்னமோ கட்டி, ஆபரேஷன்

பண்ணனும்னு எல்லா இங்கிலீஷ் டாக்டருங்களும் சொல்லிட்டாங்க. இந்தக் கிழவனார்தான், வெறும் லேகியத்தைக் கொடுத்தே கட்டியைக் கரைச்சிட்டாரு! என்னா பீஸ் வாங்கிட்டாரு தெரியுமா?''

''என்ன, ஒரு நூறு ரூவா கொடுத்திருப்பியா?''

''உன் பித்லாத் நூறு ரூபாயைக் குப்பையிலே போடய்யா! 'ஒண்ணும் வேணாம் தம்பி! என்னைக்காவது நான் ராவிலே திரும்பறப்போ ரொம்ப நேரமாயிட்டால் ஒரு குரல் கொடுக்கிறேன். என் வூடு வரைக்கும் எனக்குத் துணையாக வா, போதும்'னு சொல்லிட்டாருய்யா! அவரு வூட்டிலே எத்தினி புள்ளை குட்டிங்க தெரியுமா? வேறொருத்தனானால் பாட்டிலும் டின்னுமா வியாபாரம் பண்ணி, லட்சம் லட்சமாய்ச் சுருட்டி வைச்சிருப்பான்!''

முதல் கான்ஸ்டபிள், ''என்னமோ இரக்கத்தினாலே சொன்னேன் சாமி! மைத்தபடி எனக்கென்ன? சர்க்காருலே எடுத்திக்கிட்டாங்கன்னா இந்தக் கிழவருக்கும் நல்லது தானே?'' என்றார்.

''அன்னித் தினத்திலேயே கிழவனாரு உசிரை விட்டுரு வார்! ஏன்னா, இவர் பட்டம் வாங்கின 'க்வாலிஃபைட்' டாக்டர் இல்லை. அதனாலே வூட்டுக்கு அனுப்பிச்சுடு வாங்க! 'செத்தாலும் இந்த ஆஸ்பத்திரியிலேதான் சாகப் போறேன்'னு தெனம் என்னண்டை சொல்லிட்டிருக் காரு!''

ராதானந்தர் எதையும் கவனியாதவர் போல அங்கிருந்து நகர்ந்து ஆஸ்பத்திரி காம்பவுண்டின் ஓரமாகப் போய் நின்று கவனித்தார்.

இப்போது அந்தத் தாடிக்கார ஆயுர்வேத டாக்டர் எழுந்து நின்றுகொண்டிருந்தார். ''எனக்கு ஒன்றுமில்லை யப்பா. வழியை விடுங்கள்,'' என்று சொல்லிக் கொண் டிருந்தார் கூட்டத்திடம்.



கம்பவுண்டர், ''ரிக்ஷா கூப்பிடுகிறேன். வீட்டுக்குப் போய்ப் படுத்துக் கொள்ளுங்கள்,'' என்றார் பயத்துடன்.

கிழவர் சிறியது நாலு மைலுக்குக் கேட்டிருக்கும். ''எப்பா, இத்தனை ஆயிரம் பேருக்கு வைத்தியம் பண்ணு கிறேனே, என் உடம்பு எனக்குத் தெரியாது? கொஞ்சம் தலை சுற்றுகிற மாதிரி இருந்தது. இங்கே வந்து உட்கார்ந்து ரெஸ்ட் எடுத்துக்கொண்டு விட்டேன். வீட்டுக்குப் போய் விட்டால், இங்கே வந்திருக்கிற பேஷண்ட்டுகளை என் மாமனாரா வந்து பார்த்து மருந்து கொடுப்பார்?''

தடுமாறுகிற நடையைச் சமாளித்துக் கொண்டு தன்னம்பிக்கையே உருவாக உள்ளே திரும்பும் அந்த வயோதிக வைத்தியரைக் கண்கொட்டாமல் பார்த்தவாறு சாலையில் நின்றிருந்தார் ராதானந்தர். வேறெதற்காக இல்லாவிட்டாலும் இந்த ஒரு கிழவரின் உறுதியையும் விசுவாசத்தையும் காப்பாற்றுவதற்காகவாவது மருத்துவ மனையைத் தொடர்ந்து நடத்த வேண்டியதுதான் என்ற எண்ணம் கொஞ்சம் கொஞ்சமாக ராதானந் தருக்குள் கிளைத்துப் படர்ந்து வியாபித்துக் கொண்டது. தெரு முனையில் பிச்சை எடுத்துக் கூட இதற்காக நிதி திரட்டலாம் என்ற ஆவேசம் எழுந்தது. துறவு வாழ்வின் அடிப்படைகளான கட்டுப்பாட்டையும் நிதானத் தையும் அடக்கத்தையும் இழந்து விடுவோமோ என்று அவர் அச்சப்பட்டுக் கொண்டிருந்த சமயம்—

வெள்ளை வெளேரென்ற ஒரு 'வான்' அவருக்கு வெகு அருகே வந்து நின்றது. கலகலவென்ற சிரிப்பும் டக்டக் என்ற பூட்ஸ்களின் சப்தமும் கலந்தொலிக்கப் பலபேர் இறங்கினார்கள். ராதானந்தர், அவசரமாக வேறு திசையில் திரும்பும் முன்னர்—

''டீ சத்யா! உன்—''

யாரோ ஒரு பெண் சற்று இரைந்தே சொல்லி விட்டாள். ஆணையிடப்பட்ட மாதிரி பல நடமாட்டங்

களும் சிரிப்புக்களும் திடீரென நின்றன. விநாடி நேரம் உலகமே தம்பித்து விட்டாற்போல நிசப்தம் நிலவியது.

ராதானந்தர் தமது நிதானத்தைத் திரும்பப் பெற்றவராக, ஓர் இளம் புன்னகையுடன் நிமிர்ந்து பார்த்தார்.

மெடிகல் கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர்கள் இரண்டு பேரும், மாணவ மாணவிகள் சிலரும் ஆஸ்பத்திரிக் கட்டிடத்துக்குள் சென்று கொண்டிருந்தார்கள். பின் கடைசியில் சென்று கொண்டிருந்த சில மாணவிகள் மட்டும், ராதானந்தரைப் பார்த்தவாறு நின்று விட்டார்கள். சில பேரின் கிசுகிசுப்பு, அந்தச் சந்தர்ப்பத்தில், பயங்கரமான இரைச்சலாகச் செவியில் மோதியது.

கழுத்தைச் சுற்றி மடித்துப் போட்டிருந்த ஸ்டெதாஸ்கோப்புடன், உடம்பை முறுக்கிய மாதிரி அரைவட்டமாகத் திரும்பி நிற்கும் சத்யாவையும், வியப்பும் சோகமும் ஒருங்கே பளபளக்கும் அவளுடைய விழிகளையும், நூறாயிரம் பேச்சுக்களைச் சொல்ல எண்ணி, வாக்கியங்கள் தளும்பித் துடிக்கும் உதடுகளையும் ராதானந்தர் கவனிக்கவே செய்தார். அதற்குள், கிசுகிசுத்துக் கொண்டிருந்த மற்ற மாணவிகள் ஒவ்வொருவராக நழுவி விட்டார்கள். அவளுடைய அந்தரங்கத்தைக் கெடுக்கக் கூடாது என்ற உபகார எண்ணத்துடன்தான் அப்படிச் செய்தார்கள் என்பதை, கட்டிடத்துக்குள் மறைந்தபோது அவர்கள் வெளிப்படுத்திய கடகடவென்ற சிரிப்புக் காட்டிக் கொடுத்தது.

சத்யா இரண்டே எட்டில் அவரை நோக்கி வேகமாக வந்து, ''அட! உங்களுக்குக்கூட ஆஸ்பத்திரிக்கு வர வேண்டிய அவசியம் நேரிட்டதா என்ன?'' என்றாள்.

ராதானந்தர் அவளைக் கனிவோடு நோக்கிய வண்ணம், ''ஏன்? நான் வரக்கூடாதா இங்கே?'' என்று கேட்டார்.



''பிறருக்குக் காயம் ஏற்படுத்தத்தான் உங்களுக்குத் தெரியுமே ஒழிய உங்களுக்கு எதுவும் நேருவது வழக்கமில்லையே!''

ராதானந்தர் புன்னகையுடன், ''சத்யா! உனக்குச் சந்தோஷமாயிருக்குமென்றால், எனக்கு நானே ஏதாவது ஏற்படுத்திக் கொள்கிறேன்,'' என்று பதிலளித்ததும், தனது வட்டக் கரிய விழிகளால் அவரை உற்றுப் பார்த்துவிட்டு விடுவிடுவெனப் போய் விட்டாள் சத்யா.

ராதானந்தர் சிரித்தபடியே திரும்பவிருந்த போது, 'வான்' டிரைவர் கீழே இறங்கி, புகைத்துக் கொண்டிருந்த பீடியை எறிந்துவிட்டு, ''கும்பிடறேன் சாமி'' என்று குனிந்து வணங்கினான். பிறகு சத்யா சென்ற திசையையே பார்த்து, ''சிவகாசி பட்பட்டாவுக்குத் தடை போட்டாங்க, இந்தப் படபடாவுக்குப் போட முடியலை பாருங்க! ஹூம் சும்மாவா! போலீஸ் அதிகாரி பொண்ணுல்ல?'' என்றான். சத்யாவின் பேச்சைக் கவனியாமல் வெறும் சத்தத்தை மட்டும்தான் அவன் கேட்டிருப்பான் என்று தெரிந்தது.

ராதானந்தர் அவன் பேச்சை ரசித்தபடி, ''இங்கே எங்கப்பா வந்தார்கள் எல்லாரும்? இது நாட்டு வைத்திய இடமல்லவா?'' என்றார்.

''மொதல்லே போனாங்களே பெரிய டாக்டர், சாமி அவரைப் பார்க்கலீங்களா?'' என்றான் 'வான்' டிரைவர். ''இங்கிலீஷ் வைத்தியத்திலே கில்லாடிங்க அந்த ஆளு ஆனாலும், இந்த ஆயுர்வேதம், மூலிகை, நாட்டுச்சரக்கு இதிலேயும் ரொம்ப ஒரு இது. இங்கே ஒரு தாடிக் கிழவனாரு இருக்கிறாரில்லே, அவருகிட்ட அடிக்கடி தன்னோட ஸ்டூடண்டுங்க, டாக்டருங்க, ஹவுஸ் சர்ஜனுங்க எல்லாரையும் அழைச்சிட்டு வந்திடுவாரு. தாடிக்காரரு மூலிகைகளைப் பத்தி ஏதோ சொல்லுவாரு, இவங்க கேட்டுட்டுப் போவாங்க போலயிருக்கு!

அதென்னவோ நான் உள்ளாரப் போய்ப் பார்த்ததில்லீங்க!''

ராதானந்தர் தலையசைத்தபடி அவன் சொல்வதைக் கேட்டுக்கொண்டு நின்றார்.

''அதுவும் இந்தப் போலீஸ் பொண்ணு இருக்குதுங்களே, சும்மா சொல்லக்கூடாதுங்க. படிப்பிலே ரொம்பத் துடி. தொணதொணன்னு பெரிய டாக்டரை எதனாச்சும் கேட்டு நச்சரிச்சுக்கிட்டே இருக்கும். இப்பதான் கொஞ்ச நாளா அடங்கியிருக்குது. ஒரு கல்யாணமாயிட்டால், அதுக்கப்புறம் எப்படி இருக்குமோ?''

ராதானந்தரின் கண்கள் அவனைப் பார்த்துவிட்டுத் தாழ்ந்தன.

ஆஸ்பத்திரிக் கட்டிடத்துக்குள் இங்குமங்குமாக நின்றுகொண்டிருந்த மாணவர்களைப் பார்த்தவாறு சில நிமிடங்கள் நின்று விட்டுத் திரும்பி நடந்தார் அவர்.

மடத்தை விட்டுப் புறப்பட்டபோது இருந்த மன அமைதி இப்போது இருந்ததாகத் தெரியவில்லை. உள்ளே கிடைக்காத சாந்தியை வெளியே தேட நினைத்தது தவறு என்று தோன்றியது. நடந்தவாறே, 'ஏன் என் அமைதி கெட்டது?' என்று சிந்தித்து பார்த்தார். உயிர் போனாலும் கடமையை நிறுத்தத் தயாரில்லாத அந்தக் கிழ டாக்டரைப் பார்த்ததாலா? அல்லது தோல்வியினாலும் ஏமாற்றத்தினாலும் கனன்று கொண்டிருந்த சத்யாவைச் சந்தித்ததாலா?

அவருக்குத் தெரியவில்லை. ஆனால் தம்மை அறியாமலே தமது கால்கள் ஏதோ ஒரு வழக்கமான இடத்தில் நின்று விட்டதை மட்டும் உணர்ந்தார். தலை தூக்கிப் பார்த்தவர் திடுக்கிட்டுப் போனார்.

சாரங்கபாணியின் பங்களா அது.



பல வருடங்கள் இந்த இடத்துக்கு வந்து போய்ப் பழக்கப்பட்ட கால்கள், எத்தனை எளிதாக அவரை ஏமாற்றி விட்டன! சின்னச் சாமியாரின் கண்டிப்புக்களில் மறைந்திருக்கும் உண்மை இப்போதல்லவா தெரிகிறது! மனத்தைக் கட்டுப்படுத்திவிட்டதாக நினைப்பதெல்லாம் பைத்தியக்காரத்தனம்! சத்யாவைப் பற்றிய எண்ணம், அவளது கல்யாணத்தைப் பற்றிய பேச்சு... ஏதோ ஒன்று இழுத்து வந்து விட்டதா இங்கே...?

அருகே நிழலாடியது.

''வரவேணும், வரவேணும்,'' என்று வாய் நிறைய அவரை வரவேற்றவன் மணிதான். ''நானே தங்களை வந்து பார்க்க நினைத்திருந்தேன். உள்ளே வாருங்கள்.''

''இல்லையப்பா... நான் இங்கே வருவதாகப் புறப்படவில்லை...'' என்று ராதானந்தர் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே, மணி, ''அம்மா! இங்கே யார் வந்திருக்கிறார் பாருங்கள்... டேய் குப்பா, ஓடு! ஹாலில் சோபாவைத் தட்டி விசிறியைப் போடு. நான் போய் அம்மாவை அழைத்து வருகிறேன்... ஆபீசில்தான் இருக்கிறார் உங்கள் அத்தான்— மிஸ்டர் சாரங்கபாணி. நான் ஒரு ஃபைலை மறந்துவிட்டதால் எடுத்துப் போக வந்தேன்...'' என்று சொல்லிக் கொண்டே பங்களாவுக்குள் விரைந்து விட்டான்.

ராதானந்தர் புருவங்களை விரித்துக் கொண்டார். வெகு வெகு நாட்களுக்குப் பிறகு, சினத்தின் சுவையை அவர் உள்ளம் அனுபவித்தது. காலை முதல் ஏற்பட்டு வருகின்ற அனுபவங்கள் அவருடைய இயல்பையே மாற்ற முயல்கின்றாற் போல் இருந்தது.

சத்யாவையும் சாரங்கபாணியையும் பற்றி அவருடைய மனம் குழம்பியதாகக் கூறமுடியாது. சத்யாவின் சந்திப்பினால் மனம் துவண்டதாகச் சொல்வதற்கில்லை. வேறெந்தத் துடிப்பும் அவரைத் தூண்டிவிட்டதாகக் குற்றம் சாட்ட ஆதாரம் கிடையாது.

ஆயுர்வேத ஆஸ்பத்திரியில் பார்த்த கிழவரின் தன்னம்பிக்கை, சரிந்து விழுந்து கொண்டிருக்கும் கட்டிடம், மேலிடத்திலிருந்து வந்த கண்டனக் கடிதம், ஏதும் செய்ய இயலாதிருக்கும் கையாலாகாத்தனம் இவை யெல்லாம்தான் அவரைக் கொந்தளிக்குமாறு பண்ணிக் கொண்டிருந்தன. செல்வச் செருக்குடன் இறுமாந்து நிற்கும் சாரங்கபாணியின் புத்தம் புது மாடல் பங்களா, அவருடைய குமுறலுக்கு நெய் வார்த்தது. அதன் புதுக் கருக்கழியாத பளபளப்பு, வளர்ந்த நெருப்பை விசிறி விட்டது.

பங்களாவுக்குள் நுழைந்த ராதானந்தரைப் பார்த்திருப்பவர்கள், எதையும் கண்டு கொண்டிருக்க முடியாது என்பது உண்மையே. உணர்ச்சிகள் வெளியே தெரியா வண்ணம் அவருடைய நடையில் அமைதி நிரம்பியிருந்தது.

ஹாலில் எத்தனையோ முறை பார்த்த சோபாக்களையும் விளக்குகளையும் விரிப்புகளையும் இன்று கண்ணுற்ற போது ராதானந்தரின் நெஞ்சில் ஒரு கடும் கசப்புத் தோன்றியது.

டெலிபோன் அடித்தது, அவர் நின்று கொண்டிருந்த போதே. ஆனால் உள்ளே இருந்து யாரும் வரக் காணோம், அதை எடுத்துக் கேட்க.

தொடர்ந்து அடிக்கவே, ராதானந்தரே அதை எடுத்து, ''ஹலோ'' என்று குரல் கொடுத்தார்.

கூப்பிட்டவருக்கு இந்தக் குரல் திகைப்பைத் தந்திருக்க வேண்டும்.

''யாரது? டெலிபோனை எடுத்திருப்பது யார்?'' என்ற அதட்டலைக் கேட்டவுடனே, கூப்பிட்டவர் சாரங்கபாணிதான் என்று புரிந்து கொண்டார் ராதானந்தர்.

''நான்தான்... ராதானந்தர்.''



''ரா... ராதானந்தா... ராதாவா!'' சாரங்கபாணியின் குரலில் திடீரெனச் சினம் ஏறியது. ''ராதாவா! யார் உன்னை உள்ளே விட்டது? யாரைக் கேட்டுக் கொண்டு நுழைந்தாய்? எவர் உத்தரவில் டெலிபோனைத் தொட்டாய்? கெட் அவுட்! ஐ ஸே கெட் அவுட்!''

டெலிபோனைக் கையிலேயே பிடித்துக் கொண்டு நின்றுவிட்டார் ராதானந்தர்.

## பதினைந்து

''கெட் அவுட்!'' சாரங்கபாணியின் கடுமையான அதட்டல் செவியைத் தாக்கிய போதும் ராதானந்தரின் முகத்தில் சஞ்சலம் பிறக்கவில்லை. பாலில் தேன் துளி விழுந்தாற்போல, ஒரு சிறு புன்னகைதான் மெல்லப் பிறந்தது.

''நீங்கள் கேள்விப்பட்டதில்லைபோல் இருக்கிறது,'' என்றார் அமைதியுடன். ''அரசன், குழந்தை, சன்னியாசி ஆகிய மூவருக்கும் எந்த இடத்திலும் நுழைவதற்கு உரிமை உண்டு என்று சொல்வார்கள்.''

''நான் உன்னைச் சன்னியாசி என்று ஒத்துக் கொள்ளத் தயாராயில்லை. ரோசமுள்ளவனாக இருந்தால் அங்கே நிற்காதே,'' என்று கண்டிப்புடன் கூறிவிட்டுச் சாரங்கபாணி டெலிபோனை வைத்துவிட்டார்.

உள்ளேயிருந்து திரும்பிய மணி, ''டெலிபோனில் யாராவது கூப்பிட்டாங்களா?'' என்று விசாரித்தான்.

''ஆமாம், ஒரு குழந்தை,'' என்று பதிலளித்த ராதானந்தர், ரிஸீவரை அதன் இருக்கையில் கிடத்தினார்.

''ராங் நம்பர்கள் இப்போது அதிகமாகிவிட்டது,'' என்றவாறு மணி மின்சார விசிறியைச் சுழலவிட்டு, பிரம்பு நாற்காலியைக் கைக்குட்டையால் தட்டி,

"உட்காருங்கள் சுவாமிஜி," என்று பணிவோடு அவர் பக்கம் நகர்த்தினான்.

"உள்ளே கூப்பிடப் போனாயே, அங்கே யாருமில்லை?" என்று ராதானந்தர் கேட்டார்.

"அம்மா கோவிலுக்குப் போயிருக்கிறார்களாம்... உட்காருங்கள் சுவாமிஜி," என்று மணி மறுபடியும் உபசரித்தான்.

சாய்ந்து, கால்மேல் கால் போட்டுக் கொண்டவாறு உட்கார்ந்த ராதானந்தர், கண்ணை உயர்த்தி, சில வினாடிகள் அவனை உற்றுக் கவனித்தார். "நீ ரொம்பத்தான் மாறியிருக்கிறாய்."

மரியாதை நிறைந்த சிரிப்பு மணியிடமிருந்து வெளிப்பட்டது. "சுவாமிஜி பழைய மனிதராக இருந்தால், நானும் பழைய மணியாகத்தான் இருந்திருப்பேன். வாழ்க்கையில் எப்போதாவது ஒருதரம்தானே நல்ல புத்தி வருகிறது?"

ராதானந்தர் சிரித்தார்.

மணி தொடர்ந்து, "மூன்று நாள் முன்பு மடத்துக்கு வந்திருந்தேன்," என்றான்.

"எதற்காக?"

"என்னாலே செய்யக்கூடியது ஏதாவது இருந்தால் செய்யலாமே என்றுதான்," என்றான் மணி. "சுவாமிஜி ஆஸ்பத்திரிக்காக நிதி வசூலுக்குப் போயிருப்பதாகச் சின்னச்சாமியார் சொன்னார்கள்."

"அடடா, அந்த நேரத்தில் வந்திருந்தாயா?"

"ஆமாம்," என்று மணி, தன் பாண்ட் பையிலிருந்து மணிபர்சை எடுத்தான். நான்கு நூறு ரூபாய் நோட்டுக்களும் கொஞ்சம் சில்லறையும் எடுத்து, ராதானந்தரின் முன்னே இருந்த டீப்பாயின்மீது வைத்தான்.



திடுக்கிட்ட ராதானந்தர், "என்ன, உன் நன்கொடையா இவ்வளவும்?" என்று கேட்டார்.

"சுவாமிஜியின் ஆசீர்வாதத்தில் நான் இவ்வளவு நன்கொடை கொடுக்கக்கூடிய பணக்காரனாக ஆனேனானால் சரிதான்," என்று சிரித்தான் மணி. "எங்கள் போலீஸ் இலாகாவில் வசூலித்தேன். எல்லாம் ஐந்து பத்தாகச் சேர்த்ததுதான். இதோ பட்டியல்," என்று ஒரு காகிதத்தையும் அவரிடம் நீட்டினான்.

சில நிமிடங்களுக்கு முன்பு டெலிபோனில் கேட்ட பேச்சு ராதானந்தரின் நினைவிலேயே நின்றிருந்ததால், "சாரங்கபாணி எவ்வளவு போட்டிருக்கிறார்?" என்று விசாரித்தார்.

"அவரிடம் மட்டும் போகவில்லை," என்றான் மணி. "இன்னொரு உதவியும் என்னால் செய்ய முடிந்தது..."

"என்ன?"

"மடத்துக்கு டெலிபோன் நம்பர் என்ன என்று அன்றைக்கு விசாரித்தேன். 'மனுப் போட்டிருக்கிறோம். இன்னும் வரவில்லை,' என்று சின்னச் சாமியார் தெரிவித்தார். டெலிபோன் இலாகாவில் எனக்குத் தெரிந்தவர்கள் சில பேர் இருக்கிறார்கள். கொஞ்சம் சீக்கிரமாகக் கவனிக்கும்படி சொல்லி வைத்திருக்கிறேன். அனேகமாய் இந்த மாதத்துக்குள் கிடைத்துவிடும்."

ராதானந்தர், "என்னிடம் எவ்விதக் கைம்மாறும் எதிர்பார்க்காமலே இவ்வளவு தூரம் செய்திருக்கிறாயே," என்று பாராட்டினார். அப்படிச் சொன்னபோது அவருடைய கூர்மையான பார்வை தன்னைத் துளைப்பதைத் தாளமாட்டாமல் தலைகுனிந்தான் மணி. ஆனால் அவனுடைய சங்கடத்தை விரைவிலேயே நீக்க உதவியாக, சமையற்காரர் பால் எடுத்து வந்தார். மணி முன் சென்று டம்ளர்களை வாங்கி, பாலை ஆற்றிவிட்டு ராதானந்தரிடம் வைத்தான்.

மறுப்புச் சொல்லாமல் பாலை ஏற்றுக்கொண்ட ராதானந்தர், ''பணத்தை எடுத்து வைத்துக் கொள். இப்போது தேவைப்படவில்லை,'' என்றார்.

''ஏன் சுவாமிஜி?'' என்று மணி திகைத்தான்.

''மேலிடத்தில் ஒப்பவில்லை. பணத்தை அவரவர்களிடம் திருப்பிக் கொடுத்து விடு.''

மணியின் ஏமாற்றம் ஒளிவு மறைவின்றி முகத்தில் பிரதிபலித்தது. தயங்கித் தயங்கிப் பணத்தை எடுத்துக் கொண்டவன், ''டெலிபோன் வந்தால் அதையும் வேண்டாமென்று சுவாமிஜி மறுத்துவிடக் கூடாது,'' என்றான் பரிதாபமான குரலில்.

வாய்விட்டுச் சிரித்துவிட்டார் ராதானந்தர்.

''ஒரு விண்ணப்பம்,'' என்றான் மணி. ராதானந்தரின் புருவங்கள் உயர்ந்தன.

''கல்கத்தாவிலிருந்து போன வருஷம் ஒரு சாமியார் வந்திருந்து பிரமாதமாய் லெக்சர்களெல்லாம் பண்ணி, சென்னைப் பட்டணத்தையே மயக்கி விட்டார். இப்போது பத்து நாளாய், காசியிலிருந்து ஒரு சாது வந்து, டவுனில் உபன்யாசங்கள் நடத்தித் தருவது சுவாமிஜிக்கே தெரிந்திருக்கும்...''

ராதானந்தர் குறுக்கிட்டு, ''சரி. அதனால்?'' என்று கேட்டார்.

''தாங்களும் மனது வைத்தால் எவ்வளவோ அருமையான சொற்பொழிவுகள் நடத்தலாம். மவுண்ட்ரோடில் நானே ஏற்பாடு பண்ணித் தருகிறேன். அருமையான மைதானம். இரண்டே நாளில் சுவாமிஜியின் மகிமை பட்டணமெங்கும் பரவி விடாதா? ஆயிரக்கணக்கில்... இல்லை, லட்சக் கணக்கில் ஜனங்கள்...''

ராதானந்தர் மறுபடியும் அவனுடைய பேச்சில் குறுக்கிட்டு, ''இப்போது அரைச் சன்னியாசியாகத்தானே இருக்



கிறீர்கள், முழுச் சன்னியாசியாக ஆக வேண்டாமா என்கிறாய்?'' என்றார்.

பளீரென்று ஒரு பிரமிப்பு மணியின் முகத்தில் மின்னலடித்துவிட்டு மறைந்தது. ''இல்லை... இல்லை... ஆமாம்... வந்து...'' என்று தடுமாறினான்.

அவனால் அதற்குமேல் பேச முடியவில்லையோ, அல்லது போர்ட்டிகோவில் கார் வந்து நிற்கும் ஒலி அவனுக்குக் கேட்டதோ, ''இதோ வருகிறேன்,'' என்று கூறிவிட்டு, வாசற்புறத்துக்கு வேகமாகச் சென்று விட்டான்.

ராதானந்தரின் இதழ்க்கடையில் ஒரு குறும்பு நகை விளையாடிக் கொண்டிருந்த நேரத்தில், வெளியே ஒரு குரல் கேட்டது:

''ரொம்பத் தாங்ஸ், டாக்டர்.''

கார் புறப்பட்டுச் செல்லும் ஓசை அதைத் தொடர்ந்தது.

உள்ளே வந்தவள் சத்யாதான்.

பலவகை உணர்ச்சிகள் முகத்தில் கூத்தாட அவள் அசையாது நின்றாள். தூங்கினாற்போல் கட்டிய கொண்டையிலிருந்து இரண்டொரு கேசச் சுருள்கள் பிரிந்து வாசலிலிருந்து வரும் காற்றோடு கொஞ்சித் தவழ்ந்தாடின. சடக்கென்று தலையைத் தூக்கிக்கொண்டு அவள் நின்றபோது இரண்டு செவிகளிலும் அணிந்திருந்த வைரம் கோத்த வளையங்கள் இரண்டு ஆட்டம் ஆடிவிட்டு, திகைப்பு மேலிட்டாற்போலச் சட்டென நின்றன.

கழுத்தின் குறுக்காக மாட்டிக் கொண்டிருந்த ஸ்டெதாஸ்கோப்பை நிதானமாகக் கழற்றியவள், ''மணி!'' என்று கூப்பிட்டாள்.

''இதோ,'' என்று அவன் ஓடிவந்ததும், ''டாக்டர் சம்பத்தினுடைய ஸ்டெதாஸ்கோப்பைத் தவறுதலாய் எடுத்து

வந்துவிட்டேன். நம் கார் இருந்தால் எடுத்துக் கொண்டு போய், அவர் வீட்டில் இதைக் கொடுத்து விடுங்கள் இல்லாவிட்டால் ஒரு டாக்ஸி வைத்துக் கொண்டாவது போங்கள்,'' என்றாள்.

''சரியம்மா,'' என்றவாறே விரைவாக ஒரு பார்வையை ராதானந்தரின்மீது வீசிவிட்டு வெளியேறினான் மணி. 'என்னை வேண்டுமென்றே வெளியேற்றுகிறாய் என்பதைப் புரிந்துகொண்டு தானிருக்கிறேன்,' என்று அந்தப் பார்வை சத்யாவுக்கும் சொல்லிவிட்டது; ராதானந்தருக்கும் தெரிவித்துவிட்டது.

ராதானந்தருக்கு முதுகையும், தெருவுக்கு முகத்தையும் காட்டியபடி நின்றிருந்தாள் சத்யா. காரில் மணி புறப்பட்டுவிட்ட பிறகும்கூட அவள் திரும்பவில்லை.

''உள்ளே வர உனக்குப் பயமாயிருந்தால் நான் இதோ புறப்பட்டு விட்டேன்,'' என்று எழுந்து கொண்டார் ராதானந்தர்.

அடுத்த கணம், பறிக்கப்பட்ட கொடிபோல வெடுக்கென்த் திரும்பியபோது சத்யாவின் கண்கள் பனித்திருந்தன. உதடுகள், கைக்கடிகாரத்தின் ஹேர் ஸ்ப்ரிங்கைப்போல வெகு வேகமாகவும் வெகு சூட்சுமமாயும் துடித்துக் கொண்டிருந்தன.

பாதி எழுந்துகொண்டிருந்த ராதானந்தர், புன்சிரிப்புடன் திரும்பச் சாய்ந்து கொணடார். ''பயப்படாமல் உள்ளே வா,'' என்றார் மறுபடியும்.

சத்யா அவர் முன்னே வந்து நின்றாள். ''வேறொன்றுக்கும் பதில் சொல்ல வேண்டாம். ஒரே ஒரு கேள்வி. எதற்காக என் பின்னால் வந்துகொண்டேயிருக்கிறீர்கள்?''

ராதானந்தர் கடகடவென்று சிரித்து விட்டார். ''சத்யா நான்தான் உன்னைக் கேட்க வேண்டுமென்று நினைத்தேன். கொஞ்சம் முன்னாடி ஆயுர்வேத ஆஸ்பத்திரியின் வாசலில்! இப்போது இங்கே! இப்படி நான் போகிற



இடங்களுக்கு நீயல்லவா பின்னாலேயே வந்துகொண்டிருக்கிறாய்!'' என்றவர், ஒரு நாற்காலியை அவள் பக்கமாய்த் தள்ளினார். ''உட்கார், உட்கார். உன்னைப் போல நான் கோபித்துக் கொள்ளமாட்டேன், எத்தனை தரம் நீ எதிரில் எதிரில் வந்து நின்றாலும்!''

''எனக்கு உங்களுடன் பேசிக்கொண்டிருக்க நேரம் இல்லை. ஒரே ஒரு விஷயம் மட்டும் சொல்லிவிட்டுப் போய்விடுகிறேன்,'' என்றாள் சத்யா.

''ஓ, தாராளமாய்ச் சொல்லு. ஆனால் உட்கார்ந்து கொள்.''

சத்யா உட்காரவில்லை. ''அணிந்திருக்கிறீர்களே, இந்த உடை உண்மையானதானால் இந்த வீட்டுப் பக்கம் அடியெடுத்து வைக்காதீர்கள். இது பொய்யானதானால், இதைப் போட்டுக்கொண்டு வராதீர்கள்,'' என்றாள்.

''உனக்கு எப்படித் தோன்றுகிறது இது? மெய்யென்றா, பொய்யென்றா?''

''உனக்கேன் இவனோடு வீண் பேச்சு? உள்ளே போய் வேலையைப் பார்!'' என்ற குரல் வந்த பிறகுதான் இருவரும் உணர்ந்தார்கள், கொஞ்ச நேரமாய்ச் சாரங்கபாணி தங்களைக் கவனித்துக் கொண்டுதான் நின்றிருக்கிறாரென்பதை.

கையிலிருந்த சிறு பிரம்பையும் தலையில் அணிந்திருந்த தொப்பியையும் டவாலியிடம் தந்துவிட்டு, சாரங்கபாணி மகளுக்கும் ராதானந்தருக்கும் நடுவே வந்து நின்றார்.

காலை அகட்டி, கைகளை இடுப்பில் வைத்துக் கொண்டு ராதானந்தரின் முன் நின்று கொண்டு, ''டெலிபோனில் சொன்னது காதில் விழவில்லை உனக்கு?'' என்று கேட்டார்.

''நான் பதில் சொன்னபோது டெலிபோனில் ஏதோ கோளாறு ஏற்பட்டிருக்க வேண்டும்'' என்றார் ராதா

னந்தர். "உங்களைப் பார்த்துவிட்டுப் போக வேண்டுமென்றுதானே காத்துக் கொண்டிருக்கிறேன்?"

"ஏன், எனக்குச் செய்ய வேண்டிய அவமானம் இன்னும் ஏதாவது பாக்கி இருக்கிறதா?"

"நீங்கள்தான் எனக்குப் பாக்கி," என்று நிதானமாக விடையிறுத்தார் ராதானந்தர். "பணம் ஏராளமாய் எனக்குத் தேவைப்படுகிறது. இத்தனை காலமும் வேண்டா வெறுப்பாக நீங்கள் வைத்துக் கொண்டிருக்கிற பொறுப்பை இனி நான் ஏற்றுக்கொள்ளலாமென்று பார்க்கிறேன்."

"ஓ! பெரிய திட்டமாய்த்தான் போட்டிருக்கிறாய்!" என்றார் சாரங்கபாணி கடும் சினத்துடன். "ராதா! அந்தப் பணம் உனக்குக் கிடைக்காது என்று நான் சொன்னால்?"

"சன்னியாசி என்பதால் வேறு வழிகளை நான் கையாளமாட்டேன் என்று தயவு பண்ணி நம்பி விடாதீர்கள்."

வெப்பத்தினால் அந்தப் பரந்து விரிந்த ஹாலே உருமாறிக் கொண்டிருந்தபோது மீனலோசனி அம்மாள் உள்ளே வந்ததை யாருமே கவனிக்கவில்லை.

"நீ...... நீங்களா?"

புஷ்பமும் தேங்காயும் குங்குமமும் நிறைந்த வெள்ளிக் குடலையுடன் ஒரு நிமிடம் பிரமித்தாற்போல நின்றுவிட்ட மீனலோசனி, அடுத்த நிமிடமே ராதானந்தரின் காலடியில் நான்கு நமஸ்காரங்களைச் செய்துவிட்டாள்.

"அம்மா! அம்மா!" என்று ஓடி வந்த சத்யா குழப்பத்துடன் தடுத்ததையோ, "மீனா! உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா?" என்று சாரங்கபாணி கத்தியதையோ அவள் புலன்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை.



ராதானந்தர் ஒருவர்தான் அயர்வோ சஞ்சலமோ ஏற்படாதவராக, புன்சிரிப்புடன் நின்றிருந்தார். ஒரு பதற்றமும் இல்லாமல் அவளுடைய நமஸ்காரங்களை ஏற்றுக் கொண்டபின், தோளைத் தொட்டு எழுப்பி, "போதும், போதும்," என்று சொல்லி, குடலையில் இருந்த புஷ்பங்களிலிருந்து ஒரு கை அள்ளி எடுத்துத் தந்தார்.

மீனலோசனியம்மாள் அதைப் பெற்றுக்கொண்டு கண்ணில் ஒற்றிவிட்டு எடுத்தபோது, உள்ளங்கையில் இருந்த அந்தப் பூக்களில் அவளுடைய கண்ணீரின் ஈரமும் கலந்திருந்தது.

முகம் ஜிவ்வென்று சிவந்திருக்க, மனைவியை முரட்டுத்தனமாகத் தன் பக்கம் இழுத்துக் கொண்டார் சாரங்கபாணி. தான் கண்டதை நம்ப இயலாதவள் போல் சிலையாகி நின்றாள் சத்யா. அவளுடைய விழிகள் மட்டும், அந்தக் காவியுடை உடுத்திய சன்னியாசிமீதும் பட்டுப் புடவை கட்டிய தாயின்மீதும் மாறி மாறித் தாவின.

பின்னர் விருட்டென மாடிக்குப் போய்விட்டாள்.

ஓரமாக விட்டிருந்த பாதக் குறடுகளைக் காலில் மாட்டிக் கொண்டு புறப்பட ஆயத்தமானார் ராதானந்தர். சில நிமிடங்களுக்குள் நடந்துவிட்ட நிகழ்ச்சியினால் அவரும் பாதிக்கப்பட்டிருந்தாரா? அது முகத்தில் தெரியவில்லை.

"இங்கே வந்தது வீண்போகவில்லை," என்றார் அவர். "குறைந்தபட்சம் இந்த வீட்டில் ஒரு சிஷ்யையாவது கிடைத்தாள். மற்றவைகளைப் பெற வேறு சமயம் பார்த்துக் கொள்கிறேன். வருகிறேனம்மா, வருகிறேன் சாரங்கபாணி, சத்யா, வரட்டுமா?" சப்தம் வெராந்தாப் படிகளில் ஒலித்து ஓய்ந்தது, உலர்ந்த பாறையில் ஈரத்துளிகள் மறைவதுபோல.

சாரங்கபாணி மனைவிமீது வீசிய நெருப்புப் பார்வை, எத்தனை வருஷத்துக் கேடியையும் கதிகலங்கச் செய்திருக்கும். அதைத் தொடர்ந்து அவர், "நீ..." என்று ஏதோ உரத்த குரலில் திட்டுவதற்கும் வாய்திறந்தார். ஆனால் மீனலோசனியின் கண்களில் தெரிந்த கெஞ்சலும், அவளுடைய மென்மையான இயல்பினால் சற்றுக் குறுமை பெற்றுவிட்ட சூழ்நிலையும் அவருடைய ஆத்திரத்தைக் குறைத்துவிட்டன.

"செய்வதையும் செய்துவிட்டு என்னை என்ன பார்க்கிறாய்?" என்று கடித்துத் துப்பினாற்போல் பதிலளித்தார். ஆனால் அதிலே கோபத்தைக் காட்டிலும் வெறுப்பே அதிகமிருந்தது. "நம் குடும்பத்துக்குத் தீராத தலைக்குனிவு ஏற்படுத்திவிட்டு, சாமியார், காஷாயம் என்று வேஷம் போடுகிறான் அந்தப் பயல். நீ என்னவோ பெரிய சங்கராச்சாரியார் எழுந்தருளிவிட்ட மாதிரி அவன் காலில் விழுகிறாயே! இந்த வீட்டிலே அத்தையின் சலுகை மட்டும் தட்டாமல் கிடைக்கும் என்று அவன் மேலும் ஆட்டம் போடுவான். அதற்குப் பச்சைக்கொடி காட்டின மாதிரிதானே ஆகிவிட்டது இப்போது?"

மீனலோசனி புடவை நுனியினால் கண்ணின் ஓரத்தைத் துடைத்துக் கொண்டுவிட்டு, "பழைய ராதா என்றே நீங்கள் அவரை நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்," என்றாள்.

"அவராம் அவர்!" என்று குத்தலாகத் திருப்பிச் சொன்ன சாரங்கபாணி, "புது மாடல் ராதாவை நீ கண்டுவிட்டாயாக்கும்?" என்றார்.

"ஆமாம். ஒரு வாரமாக நான் பார்த்துக் கொண்டிருக்கிறேனே......!"

"ஒரு......?"

"ஏழு நாளாகத் தினசரி சாயந்தரம் பூஜை வேளையில் அவருடைய மடத்துக்குத்தான் போய்க் கொண்டிருக்கிறேன். கூட்டத்தில் ஓரமாய் உட்கார்ந்துவிட்டு வந்துவிடுவேன். அதனால் அவருக்கே தெரியாது," என்று அமைதியாகத் தெரிவித்தாள் மீனலோசனி.



மனைவியின் குரல் தழுதழுத்ததுமே சாரங்கபாணியின் கோபம் விலகிவிட்டது. "போய், வைகுண்டத்துக்கும் கைலாசத்துக்கும் வழி கேட்டுக்கொண்டு வருகிறாயாக்கும்?" என்று கேலி செய்தார்.

"வழி கேட்பானேன்? அவர் பூஜை நடத்துகிற இடத்தில் போய் உட்கார்ந்திருந்தாலே வைகுண்டத்திலும் கைலாசத்திலும் உட்கார்ந்திருக்கிற மாதிரிதான் இருக்கிறது," என்று கள்ளமற்ற உள்ளத்துடன் மீனலோசனி சொன்னாள். "அவர் முகத்திலே இருக்கிற தேஜஸ், காரியங்களிலே இருக்கிற உறுதி, பேச்சிலே இருக்கிற அடக்கம்— என் அண்ணா பையன் என்று நினைக்கக்கூடப் பயமாயிருக்கிறது."

"ரொம்ப நல்லது. நினைக்காமலே இரு," என்றார் சாரங்கபாணி. "அவ்வளவு சிரத்தையாய்த் தினசரி போகிறவள் என்னையும் கூப்பிடுவதுதானே?"

"உங்களையா!" தாடையில் இடித்துக்கொண்டு சிரித்துவிட்டாள் மீனலோசனி. "நல்லவர்களுக்கும் கெட்டவர்களுக்கும் வேற்றுமை தெரிகிறவராயிருந்தால் அழைத்துப் போகலாம். நீங்களா! இந்தக் காக்கி உடுப்பின் கணக்கில், உலக மொத்தமும் அயோக்கியக் கும்பலாயிற்றே!"

"ஒரு வாரச் சாமியார் பூஜையில் நன்றாகப் பேச வந்திருக்கிறது," என்று மனைவியைப் பாராட்டிய வண்ணம் எழுந்து கொண்டார் சாரங்கபாணி. "ஆகக்கூடி, உன் பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ளாமல் ஏமாற்றி விட்டானே என்ற ரோசம்கூட உனக்கு இல்லை?"

''சத்யாவைக் கல்யாணம் செய்துகொண்டு, திருந்தி ஒழுங்காய் இருக்க வேண்டுமென்று முன்னே ஆசைப் பட்டேன். இப்போது, அவனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளாமலே அவர் திருந்தி ஒழுங்காயிருந்தால் எனக்கேன் கசக்கிறது?'' என்று மீனலோசனி மடக்கியதும், சாரங்கபாணி மோவாயைத் தடவிக்கொண்டு யோசித் தார்.

''அதெல்லாம் போகட்டும், உன் சாமியார் மருமகன் இங்கே வந்த நோக்கம் என்னவென்று தெரியுமோ?''

''எதற்காக வந்திருந்தாலும் நல்லதுதான்,'' என்றாள் மீனலோசனி.

''குதர்க்கம் பேசாமல் கேள். உலகத்தையே துறந்த சாமியாருக்கு, பிதுரார்ஜித சொத்து அப்படியே வேண்டுமாம். காஷாயம் கட்டிய பிறகு காசுமேலே ஆசை அதிகமாகி விட்டது!'' என்றார் சாரங்கபாணி.

மீனலோசனி அதை எதிர்பார்க்கவில்லை என்பதை அவள் முகம் காட்டிவிட்டது. ஆனால், தனக்குள் சமாதானம் சொல்லிக் கொண்டவள்போல், ''இருக் கட்டுமே! காசைக் கையால் தொடுவதில்லை என்று உங்களிடம் சத்தியம் பண்ணிக் கொடுத்திருந்தாரா என்ன? கன்னாபின்னாவென்று செலவழித்த பணத்தை இனிமேல் நல்ல காரியங்களுக்கு உபயோகிக்கலாமே என்று தோன்றி யிருக்கும்'' என்றவள், ''என்ன பதில் சொன்னீர்கள்?'' என்று விசாரித்தாள்.

''சாவியைத் தூக்கிக் கையில் கொடுத்து விட்டேன்!''

''என்னதான சொன்னீர்கள்?''

''அதெல்லாம் நடக்காது என்று சொல்லியனுப்பி விட்டேன்.''

மீனலோசனியின் முகம் தொய்ந்தது. ''உங்களுக்கு இப்படிப் பணத்தாசை பிடிக்கும் என்று நான் நினைக்க



வில்லை,'' என்றாள் வருத்தத்துடன். ''கை நிறையச் சம்பளம் வாங்குகிறீர்கள். பங்களா, நிலபுலன், நகை நட்டு என்று மனசு நிறையச் சேர்த்தாகிவிட்டது. ஒரே ஒரு பெண்ணைத் தவிர சுகம் கிடையாது. பிறருடைய சொத்து வந்து நமக்கென்ன ஆகவேண்டும்? ஏன் அதற்கெல்லாம் ஆசைப்படுகிறீர்கள்?''

''தூ! அவனுடைய காசு எனக்கேன்!'' என்று வெறுப்போடு சொல்லித் தலையை வெடுக்கென்று திருப்பினார் அவள் கணவர்.

''பின்னே?''

''அந்தப் பணம் ஒரு தூண்டில். அதை அவன் மூஞ்சி யில் விட்டெறிவதற்கு முன்னால், அதை வைத்துக் கொண்டே வேறொரு காரியத்தை நடத்திவிட எண்ணி யிருக்கிறேன். அவ்வளவுதான்.''

''எனக்குப் புரியவில்லை.''

''அத்தனைக்கத்தனை பிழைத்தேன்!'' என்று பேச்சை முடித்துவிட்டார் சாரங்கபாணி. ''போலீஸ் அதிகாரிகள் தங்களுடைய ரகசியத் திட்டங்களை மூன்றாம் நபரிடம் வெளியிடக்கூடாது— தர்மபத்தினியாகவே இருந்தாலும் சரி.''

## பதினாறு

''சபாஷ்!'' என்றார் சாரங்கபாணி.

இடுப்பு ஒடிகிற வேலை என்று சாரங்கபாணி கேள்விப் பட்டதுண்டு. ஆனால் அனுபவித்ததில்லை. 'ராவும் பகலுமாய்' வேலை செய்கிறவர்களைப் பார்த்ததுண்டு. அனுதாபம் ஏற்பட்டதில்லை.

ஒரு வார காலமாக அது அவருக்குப் புரிந்துவிட்டது. அப்படிப்பட்ட இடுப்பொடிக்கும் வேலை முடிவடைகிற போது ஏற்படக்கூடிய ஆனந்தத்தையும் மனநிறைவையும் கூட அவர் இப்போதுதான் உணர்ந்தார்.

எக்ஸிபிஷனில், போலீஸ் இலாகா ஸ்டாலை நிர்மாணிக்கும் பொறுப்புப் பூரா அவர்மீது விழுந்திருந்தது சென்ற மாதத்தில். என்னதான் அதற்காக அரை டஜன் சப்-இன்ஸ்பெக்டர்களையும் ஒரு பட்டாளம் கான்ஸ்டபிள்களையும் அமர்த்திக் கொண்டிருந்த போதிலும், ஸ்டால் வாசலில் பூந்தொட்டியை நிறுத்துவதா போலீஸ்காரரை நிறுத்துவதா என்பது போன்ற சின்னச் சின்ன விஷயங்களில் அவருடைய கட்டளைகள் எதிர்பார்க்கப்பட்ட போது, எரிச்சல், அவர் தலைக்குமேல் சாண், முழம் என்று ஏறிக்கொண்டே போயிற்று. (''கெட் அவுட்!'' என்று டெலிபோனில் அன்றைக்கு ராதானந்தர் மீது சீறியபோது, அவர் கிட்டத்தட்ட வெடித்து விடும் மன நிலையில் இருந்தார். ஒரு பக்கம் வீட்டிலிருந்து காப்பி பலகாரம் வரவேண்டிய வேளை தவறி விட்டது. மறுபக்கம், பிரம்மாண்டமாக மாட்ட வேண்டுமென்று எண்ணியிருந்த சில புகைப்படங்கள்— யாரோ தப்பான அளவு கொடுத்து விட்டதால்— கையகல சைஸுக்குத் தயாராகி வந்திருந்தன.)

பழக்கமில்லாத விஷயத்தில் ஏன் தலை கொடுத்தோம் என்று போன வாரம் அவர் வருத்தப்பட்டதுகூட உண்டு. போதாக்குறைக்கு, ஐ. ஜி. ஒருநாள், ''என்ன சாரங்கபாணி, குறித்த நாளில் முடிந்துவிடுமா?'' என்று கேட்ட போது, அவர் கண்ணைச் சிமிட்டின மாதிரி சாரங்கபாணிக்குத் தோன்றிவிட்டது. அழைப்பிதழ் உள்பட அச்சிட்டான பிற்பாடு மகளின் கல்யாணத்தை நிறுத்தும் படி ஆயிற்றே! அதைப்பற்றித் தமது காதில் விழாதபடி பலபேர் பலவிதமாய்ப் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று சாரங்கபாணி தமக்குள் எண்ணி மனம் நொந்த



துண்டு, இப்போது ஸ்டால் வேலை 'குறித்த நாளில்' முடிந்துவிடுமா என்று ஐ. ஜி. கேட்டதுகூட ஏதோ உள்ளர்த்தத்துடன்தானோ என்று தோன்றியது அவருக்கு.

சவாலாக ஏற்றுக்கொண்டு, ஜரூராகச் செய்த வேலை இன்றுதான் முடிந்தது. பொழுது விடிந்தால் முதன் மந்திரி திறந்து வைக்கவிருக்கும் கண்காட்சியில், தம்முடைய ஸ்டால் தயாராகிவிட்டதைக் கண்ட பிறகு தான் சாரங்கபாணிக்கு ஒழுங்காக மூச்சு வந்தது. வண்ணக் காகிதங்களும் வண்ண விளக்குகளும் கலந்தளித்த ஒளி விருந்தில், குற்றால வீழ்ச்சியில் குளிக்கிற மாதிரி திளைத் தார் அவர்.

''சபாஷ்!'' என்று அவர் மனநிறைவோடு பாராட்டியது, அடக்கவொடுக்கமாகத் தம் பின்னே வந்து கொண்டிருந்த உதவி உத்தியோகஸ்தர்களுக்கு மட்டுமல்ல, தமக்குத் தாமேயும் ஒரு சபாஷ் போட்டுக் கொண்டு புன்முறுவல் பூத்தார்.

விபத்துக்கள், முதலுதவிகள் சம்பந்தப்பட்ட புகைப் படங்களை அவர் பார்வையிட்டுக் கொண்டிருந்தபோது, மணி முன்வந்து, ''நம்ம டாக்டர் ரொம்ப ஒத்தாசை பண்ணினார் சார் இதற்கு,'' என்று தெரிவித்தான்.

சிறிது திகைப்புடன், ''டாக்டரா? எந்த டாக்டர்?'' என்று சாரங்கபாணி கேட்டார்.

''டாக்டர் சம்பத், சார்,'' என்று மணி தெரிவித்த போது, அவனை ஒரு வினாடி கண்ணசையாமல் பார்த் தார் சாரங்கபாணி. பிறகு ''அவரைப் பார்த்து ரொம்ப நாளாகிறது. வீட்டுக்குத் திரும்பும்போது ஞாபகப் படுத்து,'' என்று சொல்லிவிட்டு மேலே நடந்தார். ஆனால், மற்றப் புகைப்படங்களின்மீதோ அலங்காரங் களின்மீதோ அவருடைய பார்வைதான் விழுந்து கொண் டிருந்ததே தவிர, கருத்துப் பதியவில்லை. மிச்சப் பகுதி

களை வெறுமே ஒப்புக்காக இப்படியும் அப்படியும் பார்வையிட்டுக் கொண்டிருந்தார்.

அன்றைக்கொரு நாள் ராதா திடுதிப்பென்று வீட்டுக்கு வந்து நின்றது, தான் ஆத்திரத்துடன் கத்தியது, பிறகு மனைவியிடம், 'ஒரு திட்டம் வைத்திருக்கிறேன்' என்று பீற்றிக் கொண்டது— எல்லாம் அவருக்கு நினைவு வந்தன. ஆனால், அந்தத் திட்டம் காலில் மிதிபட்ட கோலத்தைப் போலத் தாறுமாறாய் இருந்ததே தவிர, உருப்படியான உருவம் பெற்றிருக்கவில்லை. அதற்கென்று சிறிது நேரத்தை ஒதுக்கி வைத்து, தீர்மானமாகத் தயாரித்துக் கொள்ள வேண்டும் என்று சாரங்கபாணி இப்போது நினைத்துக் கொண்டார்.

இரவு எட்டு மணி சுமாருக்கு, அவர் புறப்படவிருந்த நேரம் பார்த்து ஐ. ஜி. வந்துவிட்டார். முன்னொரு நாள் அவர் சொன்ன வார்த்தைக்காகவாவது, தனது வெற்றியை முழங்கிக் கொள்ள வேண்டுமென்று ஆசைப்பட்டார் சாரங்கபாணி. ஆகவே, அவருடன் மறுபடியும் ஒரு மணி நேரம் எல்லா இடங்களையும் சுற்ற நேரிட்டது. ஐ ஜி. சில நல்ல திருத்தங்களையும் சொன்னார்.

கடைசியில், ''வெல் டன் சாரங்கபாணி!'' என்று அவரையும் அவரது உதவியாளர்களையும் கை குலுக்கிப் பாராட்டிவிட்டுச் சென்றபோது, சாரங்கபாணி இந்த உலகத்திலேயே இருக்கவில்லை. ஒரு நாளுமில்லாத வழக்கமாய், ஐஸ் போட்ட கிரஷ்கள் வரவழைத்து எல்லா எஸ். ஐ.களுக்கும் தம் கைப்பட வினியோகம் செய்தார். உதவியாளர்களில் ஒருவர் தமது சிகரெட் பாக்கெட்டை நீட்டியபோது, ''தாங்க்ஸ்'' என்று பெற்றுக்கொண்டு, புகைத்துவிட்டு இரண்டு நிமிடம் இரும்பும் அளவுக்கு அவருக்கு மனதில் சந்தோஷம் நிரம்பியிருந்தது.

ஆகவே, வீட்டுக்குத் திரும்பியபோது முன் ஸீட்டில் டிரைவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த மணி,



''டாக்டர் சம்பத் இந்தத் தெருவிலேதான் சார் இருக்கிறார். நிறுத்தச் சொல்லவா?'' என்று கேட்டதும் அவருக்கு தூக்கி வாரிப் போட்டது.

''இந்தத் தெருவிலா?'' என்று வியப்புடன் சொன்னவாறு வெளியே நோக்கினார். காரை நிறுத்தச் சொல்லிக் கையால் சாடை காட்டிவிட்டு, இரண்டாம் முறையும் பார்த்தார்.

நடுத்தரத்துக்கும் சற்றுக் கீழான வகுப்பார் வசிக்கும் பேட்டை அது. தெரு விளக்குகள், இரண்டுக்கு ஒன்று என்ற விகிதத்தில் எரிந்து கொண்டிருந்தன. வீட்டுக்கு வீடு குப்பையும் சொறி நாயும் தவறாமல் காட்சியளிக்க, விநோதமான நெடியொன்று நாசியைத் துன்புறுத்தியது.

கார் நின்ற இடம், நல்ல வேளையாக, கொஞ்சத்துக்குக் கொஞ்சம் பரவாயில்லை. வாசலில் மூன்று நான்கு கார்கள் நிறுத்தப்பட்டிருந்தன.

மணி இறங்கிச் சென்று, ''டாக்டர் இருக்கிறார்,'' என்று தெரிவித்தான். சாரங்கபாணி இறங்கு முன்னே டாக்டர் சம்பத்தும் உள்ளிருந்து வந்து, ''வாருங்கள்,'' என்று வரவேற்றார்.

வெராந்தாவில் தென்பட்ட சிற்சில பேஷண்டுகளைப் பார்த்தபோது, நல்ல அந்தஸ்தில் உள்ளவர்களாகவே தோன்றியது. 'பின்னே ஏன் இந்த இடம்?' என்று யோசித்தபடியே, ''இந்தப் பக்கமாய்ப் போனோம். மணி சொன்னான், உங்கள் டிஸ்பென்ஸரி இங்கேதானென்று...'' என்றார்.

''டிஸ்பென்ஸரி இல்லை. வெறும் கன்ஸல்ட்டேஷன் மட்டும்தான்,'' என்று திருத்தினார் டாக்டர் சம்பத்.

''ஏன்... பிராக்டீஸ் எப்படி?''

பிளைவுட் தடுப்புக்கு அப்பாலிருந்த பகுதிக்கு அவரை அழைத்துச் சென்று உட்கார்த்தி வைத்தார் சம்பத். ''தங்கள் ஆசீர்வாதத்தில், 'கர்ஜிக்கும் பிராக்டீஸ்' என்பார்களே, அப்படித்தான். இப்போது, மந்திரி சபையில் பாதி என் மருந்தைத்தான் குடிக்கிறது,'' என்று சிரித்தார்.

''அப்படிச் சொல்லுங்கள்,'' என்று கூறி, சுவரில் மாட்டியிருந்த படங்களைப் பார்த்தவாறே, ''இந்த இடம் சும்மா தர்ம வைத்தியத்துக்காக வைத்துக் கொண்டிருக்கிறீர்களாக்கும்?'' என்று கேட்டார் சாரங்கபாணி.

''தர்மம், அதர்மம் எல்லாம் இவ்விடத்திலேதான்,'' என்று விளையாட்டாகப் பதிலளித்த டாக்டர், சாரங்கபாணியின் முகத்தில் திகைப்புக்குறிகள் தோன்றுவதைக் கவனித்ததும், ''நல்ல பிராக்டிஸ்தான். முதன் முதல் போர்டு மாட்டிய இடம் என்பதால் இங்கே இருக்கிறேன். மற்றபடி டிஸ்பென்ஸரியோடு, ஒரு நர்ஸிங் ஹோமும் வைக்கலாமென்று ஆசையும் உண்டு. நல்ல லொகாலிடி தேடிக் கொண்டிருக்கிறேன்,'' என்றார்.

சாரங்கபாணி உடனே, ''அபிவிருத்தி ஆகிக்கொண்டிருக்கிற 'அரிஸ்டக்ராடிக் காலனி' சென்னைப் பட்டணத்திலேயே ஒன்றே ஒன்றுதான்,'' என்றார்.

''தாங்கள் இருக்கிற பகுதிதானே?''

''உடனே சொல்லிவிட்டீர்களே!'' என்று பாராட்டினார் சாரங்கபாணி. ''உங்களைப் போலப் பெரிய, புதிய, இளம் டாக்டர்களுக்குச் சரியான லொகாலிடி அது. தெரிந்து கொண்டிருந்துமா பேசாமலிருக்கிறீர்கள்?''

டாக்டர் சம்பத் தமது ஆண்மை மிக்க புஜங்களை மார்பின் குறுக்காகக் கட்டிக்கொண்டு தலையையும் குரலையும் தாழ்த்திக் கொண்டார். ''உங்கள் பேட்டையில் ஓரங்குலம் கூடக் காலி மனை கிடைக்கவில்லையே! நானும் மினிஸ்டர் வரையில் போய்ப் பார்த்துவிட்டேன்.''



சாரங்கபாணியின் முகம் மலர்ந்தது. ''இவ்வளவு பழகியவர் நீங்கள். என் பெண்ணுக்கு சீனியர். கூச்சத்தை விட்டு என்னை ஒரு வார்த்தை கேட்டிருக்கக் கூடாது?''

''ஏன்... நீங்கள்?''

''புறப்படுங்கள் என்னோடு முதலில்,'' என்று சாரங்கபாணி எழுந்து கொண்டார்.

சம்பத் குழம்பினார். ''இல்லை... நான் வேண்டுமானால் அப்புறமாய்...''

''நான் காரில் காத்திருக்கிறேன். பேஷண்டுகளை அனுப்பிவிட்டு வாருங்கள். அப்புறம் சொல்கிறேன்,'' என்று கூறிவிட்டு வெளியேறிய சாரங்கபாணி உற்சாகமாய்க் காருக்குத் திரும்பினார்.

இறங்கி நின்றிருந்த மணி அவர் ஏறிக் கொண்டதும் கதவைச் சாத்தப் போனான். ''இரு, டாக்டரும் வருகிறார்,'' என்று சாரங்கபாணி சொன்னதும், ''டாக்டர் வருகிறாரா?'' என்று திருப்பிக் கேட்டான்.

சாரங்கபாணி மட்டும் யோசனையில் மூழ்கியிராமல் இருந்திருந்தால் அவன் குரலில் தென்பட்ட எதிர்ப்பைக் கவனித்திருப்பார்.

சாரங்கபாணியின் இல்லம் நெருங்கிக் கொண்டிருந்தது.

''முன்பே என்னை அழைத்தீர்கள். நான்தான் வர முடியவில்லை,'' என்றார் டாக்டர் சம்பத், மன்னிப்புக் கோரும் குரலில். ''வீட்டிலேயே ஒரு பெரிய டாக்டரை வைத்துக் கொண்டு நீங்கள் வெளியாரைக் கூப்பிடலாமா?''

சாரங்கபாணி புன்னகையுடன், ''வயிற்றுவலி அப்புறம் அதிகமாய் வரவில்லை. உங்களைக் கூப்பிட்டது

தெரிந்ததுமே சரியாகிவிட்டது போலிருக்கிறது!... எங்கள் வீட்டு டாக்டர் எப்படி?'' என்றார்.

''சத்யா தானே? அடேயப்பா! எங்கள் யூனிட்டுக்கே அவன்தான் உயிர். சீஃபைக் கேட்டுப் பாருங்கள், சொல்வார்,'' என்றார் சம்பத்.

அவரை ஓரக்கண்ணால் நோக்கினார் சாரங்கபாணி. ''சத்யாவோ, நீங்கள்தான் யூனிட்டுக்கே உயிர் என்கிறாள்.''

''நான் டயக்னோஸ் பண்ணினால்கூடச் சில சமயம் என் சீஃப் ஒப்புக்கொள்ள மாட்டார். ஆனால் சத்யா சொல்லி விட்டால் வேத வாக்குத்தான்.''

சாரங்கபாணி முன்புறம் சற்றுக் குனிந்து, ''டிரைவர், வீட்டில் ஒரு நிமிஷம் நிறுத்திவிட்டு, பிறகு நாலாம் கிராஸ் தெருவுக்கு விடு...மணி, நீ வீட்டுக்குப் போவதானால் போகலாம்,'' என்றார்.

''இல்லை சார், எனக்கு நேரமானால் பரவாயில்லை,'' என்று மணி மறுத்ததைச் சாரங்கபாணி புரிந்து கொண்டாரோ? ''வேண்டாம், வேண்டாம். ஓட்டலில் அப்புறம் சாப்பாடு கிடைக்காது. நீ இறங்கிக்கொள்,'' என்று அழுத்தமாகச் சொல்லி அவனை இறக்கிவிட்டார்.

ஆனால் இறங்கிக்கொண்ட மணி, நாலாம் கிராஸ் தெருவை நோக்கித்தான் நடை போடுகிறான் என்பதைக் கவனிக்கத் தவறிவிட்டார்.

''ஸ்காட்லந்து யார்டில் இருக்க வேண்டியவர் நீங்கள். மேலும் மேலும் மர்மமாகவே செய்கிறீர்களே!'' என்றார் டாக்டர் சம்பத் சிரித்துக்கொண்டே.

கார் போர்டிகோவில் நிற்க, தோட்டக்காரன் ஓடி வந்தான் கதவைத் திறக்க. ஆனால் சாரங்கபாணி இறங்கிக் கொள்ளாமலே, ''சத்யாவை வரச் சொல்லு,'' என்றார்.

16668
328969



சில நிமிடங்களில் மீனலோசனியின் குரல் கேட்டது. ''சத்யா இன்னும் வரவில்லையே! நீங்கள் உள்ளே...'' என்று சொல்லிக்கொண்டே வந்தவள், காரினுள் வேறோர் ஆடவன் இருப்பதைக் கண்டதும் பேச்சை நிறுத்திக் கொண்டு, புடவைத் தலைப்பைப் போர்த்துக் கொண்டாள்.

டாக்டர் சம்பத் வெளியே இறங்கி, ''வணக்கம் அம்மா!'' என்றார்.

சாரங்கபாணி, ''அடையாளம் தெரிகிறதா? சம்பத். டாக்டர் சம்பத். நன்றாய்ப் பார்த்துக்கொள்'' என்றார்.

''நான் முன்பே பார்த்திருக்கிறேனே!'' என்றாள் மீனலோசனி.

''எதற்கும் இப்போது இன்னொரு தரம் பார்த்துக் கொள்'' என்ற சாரங்கபாணி, ''வாருங்கள் டாக்டர், நேரமாகிறது,'' என்று அழைத்தார்.

''சத்யா வந்தால் எங்கே வரச் சொல்லட்டும்?'' என்றாள் மீனலோசனி.

''வேண்டாம். இருந்தால்கூட அழைத்துப் போகலாம் என்று பார்த்தேன்,'' என்றார் சாரங்கபாணி.

அவர் தலையசைத்ததும் வண்டி புறப்பட்டுவிட்டது. விளையாட்டு மைதானத்தையும் பொழுதுபோக்குக் 'கிளப்' பையும், புது மணம் வீசும் பங்களாக்களையும் கடந்து, சில நிமிடங்களுக்கெல்லாம் நாலாவது கிராஸ் தெருவை அடைந்தது.

''இறங்கிப் பாருங்கள்,'' என்றார் சாரங்கபாணி.

டாக்டர் சம்பத் இறங்கிப் பார்த்தார். சுற்றுமுற்றும் பார்த்தார். வரிசையாக இருந்த பங்களாக்களும், நடுவே தரிசான ஒரு வெறும் காலி இடத்தையும் தவிர, வேறு

விசேடமாக எதுவும் புலப்படாததால், திரும்பச் சாரங்க பாணியை நோக்கினார்.

''இங்கே நர்ஸிங் ஹோம் கட்டினால் எப்படி இருக்கும் என்று நினைக்கிறீர்கள்?''

உணர்ச்சிகளை அடக்கத் தெரியாத வேறொருவ ரானால், ''சார்'' என்று கூவியிருப்பார். டாக்டர் சம்பத், ''உங்களுக்குச் சொந்தமான மனையா?'' என்று லேசான வியப்புடன் விசாரித்தார்.

''ஆமாம், அந்த நாளில் வாங்கிப்போட்டது. வேறு சில பேரும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். உங்களுக்குப் பிடித்திருக்கிறதா என்று சொல்லுங்கள். அப்புறம் மற்றதைப் பேசலாம்,'' என்றார் சாரங்கபாணி.

''இடத்துக்கென்ன, அருமையாயிருக்கிறது. எட்டு கிரவுண்ட் இருக்கும் போலிருக்கிறதே!''

''ஒன்பதே முக்கால்,'' என்றார் சாரங்கபாணி ''ரொம்ப ரகசியமாய் வைத்திருந்தேன். எப்படியோ வெளியே தெரிந்து போய்விட்டது. நச்சரிப்புத் தாள வில்லை.''

டாக்டர் சம்பத்தின் குரலில் ஏக்கம் தொனித்தது ''மற்றவர்களுடன் போட்டி போட்டுக்கொண்டு விலை கொடுக்க என்னால் முடியாது. ஆனால்...''

''ஆனால்?'' அவரைக் கூர்ந்து பார்த்தார் சாரங்க பாணி.

''நான் நன்றியுள்ளவனாயிருப்பேன்.''

''அதுதான் எனக்கும் வேண்டியது,'' என்று சொல்லி விட்டு, காரை நோக்கித் திரும்ப நடந்தார் சாரங்கபாணி

நாலைந்து நாள் கழித்து ஒருநாள் காலை சாரங்க பாணி தன் அலுவலகத்துக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த போது மீனலோசனி பிடித்துக் கொண்டாள்.



''என்னதான் போலீஸ் அதிகாரி என்றாலும் இத்தனை மர்மமாகக் காரியங்கள் பண்ண வேண்டாம்,'' என்றாள் அவள்.

கையிலிருந்த பிரம்பினால் அவள் தலையில் ஒரு தட்டுத் தட்டி, ''என்னதான் போலீஸ் அதிகாரியின் மனைவி என்றாலும் நீ இத்தனை பூடகமாகப் பேச வேண்டாம். சொல்வதைத் தெளிவாய்ச் சொல்,'' என்றார் சாரங்கபாணி.

வெராந்தாவின் வெளி ஓரங்களில், மேலிருந்து கயி கட்டினாற்போலச் சின்னச் சின்னப் பூத்தொட்டிகள் தொங்கிக்கொண்டிருந்தன. சிறிய பூவாளியினால் அதற்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்த மீனலோசனி, ''மனசில் என்னதான் திட்டம் பண்ணியிருக்கிறீர்கள், சொல்லுங்களேன். என்னவோ உங்களுக்குள்ளேயே பேசிக்கொள்வதும் உங்களுக்குள்ளேயே சிரித்துக்கொள் வதும்!'' என்றாள்.

''யார் கண்டது? உன் புருஷனுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதோ என்னவோ!'' என்றார் சாரங்கபாணி.

''ஐய! எல்லாம் கிடக்கு உங்களுக்கு ஏன் பைத்தியம் பிடிக்கணும்?''

''அதென்னவோ, அதோ உன் பெண் வருகிறாள். அவளையே கேள்,'' என்று சாரங்கபாணி சொன்னார்.

ஸ்டெதாஸ்கோப்பை நான்காகச் சுருட்டிக் கையில் வைத்துக்கொண்டு குனிந்த தலை நிமிராமல் வீட்டுக்குள் ளிருந்து வந்துகொண்டிருந்த சத்யாவைப் பார்த்துவிட்டுப் பெருமூச்சு விட்டாள் மீனலோசனி. ''உங்கள் பெண் உங்களுக்கு மேலே பைத்தியமாகி ரொம்பக் காலமாகிறது. அவள் முகத்திலே ஒரு சிரிப்பைக் கண்டு ஜன்மாந்தர மாகிறது. பெற்ற தாயாரோடு ஒரு நிமிஷம் நின்று பேசக் கூட அவளுக்கு வெறுப்பாயிருக்கிறது!''

''உன் அம்மாவோட கம்ப்ளெயிண்ட் கேட்டதா, சத்யா?'' என்று சாரங்கபாணி கூப்பிட்டதும், படியில் இறங்கியவள் நின்று திரும்பினாள்.

யந்திரம் பேசினாற்கூட இன்னும் கொஞ்சம் உயிர் தென்பட்டிருக்கும் என்று நினைக்க வைக்கிறபடி, ''ஏன், நானென்ன தப்பாய்ப் பண்ணிவிட்டேன்?'' என்றாள் சத்யா.

''உன் மனசையே கேட்டுப் பார்,'' என்றார் சாரங்கபாணி. ''உன் அப்பா எவ்வளவு பெரிய மனிதர்! எத்தனை கௌரவமாக இருந்து வருகிறவர்! அவருக்கு எப்படிப்பட்ட தலைக்குனிவு ஏற்பட்டுவிட்டது என்பதை நினைத்து ஒரு நாளாவது வருத்தப்பட்டாயா?''

மீனலோசனி இருவருக்கும் குறுக்கே வந்து நின்று, ''போதும் உங்கள் போலீஸ் விசாரணையெல்லாம். குழந்தை, அவள் இருதயம் எத்தனை புண்ணாகியிருக்கும் என்பதைக் கொஞ்சம் நினைவு வைத்துக்கொண்டு பேசுங்கள்,'' என்றாள்.

''பரவாயில்லை அம்மா,'' என்று அவளைச் சமாதானப்படுத்தினாள் சத்யா. பிறகு, தந்தையிடம், ''நானாக வேண்டுமென்று உங்களுக்கு எந்த வேதனையும் தரவில்லையே அப்பா?'' என்றாள்.

''தரவில்லை. வாஸ்தவம்,'' என்று சாரங்கபாணி ஒப்புக்கொண்டார். ''ஆனால் ஏற்பட்ட வேதனையைப் போக்குவதாவது உன் கையில் இருக்கிறதா இல்லையா?''

சோகம் ததும்பும் விழிகளை உயர்த்தினாள் சத்யா. ''என்ன செய்ய வேண்டும் என்கிறீர்கள்?''

''பூராப் பூராப் பரதேசிப் பயல்களால் உலகம் நிரம்பியிருக்கவில்லை. நல்லவர்கள், யோக்கியர்கள், வேஷம் போடத் தெரியாதவர்கள், திறமைசாலிகள் நிறைய



இருக்கிறார்கள். அதிலே, உனக்கேற்ற ஒரு வாலிபன் நிச்சயமாய்க் கிடைப்பான். என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டார் சாரங்கபாணி.

மீனலோசனி மகளின் தோளை ஆர்வத்துடன் அணைத்து, அவள் மோவாயை நிமிர்த்தி, என்ன பதில் வரப் போகிறது என்று துடிப்புடன் காத்திருந்தாள்.

## பதினேழு

காத்துக் கொண்டிருந்தார் சாரங்கபாணி, மகளின் பதிலுக்காக.

ஜனித்ததுமே கிடுகிடுவென வளருகின்ற அரக்கப் பிறவிபோல, நிசப்தம் மடமடவென்று பெரிதாகி அந்த வெராந்தா மொத்தத்தையும் அடைத்துக்கொண்ட மாதிரி ஆயிற்று.

சத்யா, தந்தைமீது வைத்த விழியெடுக்காமல் அவர் முகத்தையே பார்த்தாள். மறுபுறம், தாயின் பார்வை தன்மீது நிலைகுத்தி நின்றிருப்பதையும் உணர்ந்தாள்.

சாரங்கபாணி அவளருகில் வந்து, தோளை மெல்லத் தட்டி, ''ஒன்றும் அவசரமில்லை, சத்யா. உன் பதிலை மெதுவாக யோசித்து, சாவதானமாய்ச் சொல்லு. போதும். இந்த விஷயத்தைப் பற்றியும் நீ கொஞ்சம் யோசனை பண்ணவேண்டும் என்பதுதான் என் கவலை. வேறொன்றுமில்லை'' என்றார்.

மீனலோசனி முன்வந்து, ''அவளுக்கு ஆஸ்பத்திரிக்கு நேரமாகியிருக்காதோ? ஆர அமரப் பேச வேண்டிய சமாசாரத்தையெல்லாம் நீங்கள் பட்டாஸ் மாதிரி வெடித்து விடுகிறீர்கள்,'' என்று கணவரைக் கண்டித்து விட்டு, ''நீ புறப்படடி அம்மா'' என்றாள்.

சத்யா அடி எடுத்து வைத்தாலும், கெஞ்சல் நிரம்பிய விழிகளால் தந்தையைப் பார்த்துப் பார்த்து, ''இத்தனை வருஷங்களில், என்னை எந்த விஷயத்திலும் நீங்கள் கட்டாயப்படுத்தியதில்லை, அப்பா!'' என்றாள்.

சாரங்கபாணி அவசரமாகப் பதிலளித்தார். ''அடடா! அதுதான் சொன்னேனே, நிதானமாய் யோசனை பண்ணு என்று?''

''கல்யாண விஷயத்திலும் எனக்கு எப்படி இஷ்டமோ அப்படி நடந்துகொள்ள விட்டுவிடுங்கள்'' என்று முடித்து விட்டு, சத்யா வேகமாகப் படியிறங்கித் தெருவில் மறைந்து விட்டாள்.

''ஆனாலும் உங்களுக்குப் பொறுமை கிடையாது,'' என்று சாரங்கபாணியின்மீது குற்றப் பத்திரிகை படித்தாள் மீனலோசனி.

சத்யா இருந்தவரையில் நிலவிய சாந்தமும் அமைதியும் இப்போது சாரங்கபாணியிடம் விடைபெற்றுக் கொண்டு விட்டன. ''ஆமாமாம்! எனக்கு உபதேசம் பண்ணுகிறாயாக்கும்! காரியம் கெடுவதெல்லாம் உன்னால் தான்!''

''என்னாலா?''

''சாட்சாத் உன்னால்தான்!'' என்று உறுமினார் சாரங்கபாணி. ''அந்தப் பரதேசிப் பயலுக்குப் போய்ப் பாத பூஜை பண்ணிவிட்டு வருகிறாய் நாள் தவறாமல்! அவன், நேற்றைக்கு அத்தை, இன்றைக்குச் சித்தை என்று உரிமை பாராட்டிக்கொண்டு உள்ளே நுழைகிறான்! ஏன் மாட்டான்?''

''நான்... அவரைக் கூப்பிடவேயில்லையே!'' என்று திகைத்தாள் மீனலோசனி.

சாரங்கபாணியின் கண்ணில் கனல் தெறித்தது. ''கூப்பிட்டால் என்ன, கூப்பிடாவிட்டால் என்ன, நீ இடம்



கொடுப்பதால்தான் அவன் வருகிறான். அவன் மட்டும் கொஞ்ச நாளைக்கு இங்கே கால் வைக்காமலிருக்கட்டும். சத்யா அவனை மறந்து தலைமுழுகி விடுகிறாளா இல்லையா பார்!''

மீனலோசனி அவருடைய முகம் சிவந்துவிட்டதைக் கண்டு மிரண்டவளாக, ''சத்யா நல்லபடி இருக்கவேண்டு மென்று எனக்கு மட்டும் இருக்காதா? நீங்கள் என்ன செய்யச் சொல்கிறீர்களோ அப்படிச் செய்கிறேன்,'' என்றாள்.

''ஒன்றும் செய்ய வேண்டாம் நீ! அந்தச் சாமியார் இன்னொரு தரம் இங்கே வந்தானானால், மருமகனோடு குடித்தனம் இரு என்று உன்னையும் மடத்துக்கே அனுப்பி விடப் போகிறேன். அவ்வளவுதான்,'' என்று பேச்சை முடித்துக்கொண்டு பொலீஸ் நடையில் சாரங்கபாணி வெளியேறி விட்டார்.

சின்னஞ்சிறு பூந்தொட்டியில் இருந்துகொண்டு பச்சைக் குழந்தை மாதிரி அசைந்தாடும் பசுந் தளிர்களை வெறிக்கப் பார்த்தவாறு சில வினாடிகள் நின்றிருந்தாள் மீனலோசனி. ''என்கிட்டே இப்படிக் கோபிக்கிறாரே! நான் என்னடியம்மா பண்ணினேன்?'' என்று அவை களிடம் புலம்பினாள். அவள் விழி முனைகளில் கண்ணீர் தளும்பிக் கொண்டிருந்தது.

நல்ல வேளையாய் ஆட்டோ ரிக்ஷாவொன்று அகப்பட்டது சத்யாவுக்கு.

இரைச்சலுடன், ஆஸ்பத்திரியை நோக்கி வண்டி ஓடிக் கொண்டிருந்தபோது, மத்தினிடம் அகப்பட்ட தயிர்போல் அவள் உள்ளத்தில் எண்ணற்ற எண்ணங்கள் அலைமோதிச் சிதறிக் கொண்டிருந்தன. ஆஸ்பத்திரியை அடைந்து இறங்கிய பிறகும்கூட அவளுக்கு அமைதி கிட்டவில்லை. பழக்கப்பட்ட கண்ணும் கையும் வழக்கமாக ஆகக்கூடிய கட்டணமான இரண்டு ருபாய்த் தாளை எடுத்துத் தந்தன

''ஒரு ரூபாய்க்குள்தான் அம்மா ஆகியிருக்கிறது,'' என்று தெரிவித்து ஆட்டோ டிரைவர் ஒற்றை ரூபாய் நோட்டைத் தந்த பின்னரே, வீட்டிலிருந்து வெகுதூரம் நடந்துவிட்டுப் பிறகு ஆட்டோவில் ஏறினோம் என்பது சத்யாவுக்கு நினைவு வந்தது.

பணத்தைக் கைப் பையில் போட்டு மூடிக்கொண்டு, நிமிராத தலையுடனேயே நீண்ட வெள்ளைத் தாழ்வாரத் தில் நடந்தாள் அவள்.

''அக்கா!'' என்ற சன்னமான சின்னக் குரலொன்று அவள் நடைக்குத் தடையிட்டது.

திரும்பிப் பார்த்தவள், ''அப்துல்!'' என்று திடுக்கிட்ட வளாகக் கூறி, அழுது அழுது முகம் வீங்கியிருந்த சிறுவனைத் தூக்கியெடுத்துக் கொண்டாள்.

''தாத்தா... செத்து... செத்துப் போயிடுச்சு...'' என்று அவள் கழுத்தைக் கட்டிக்கொண்டு ஓவென்று அழுது விட்டான் சிறுவன் அப்துல்.

முகத்தில் அறையப்பட்டவன் மாதிரி சத்யா ஒரு வினாடி தன் வசமிழந்தவளாகி விட்டாள். அந்தக் குழந்தையின் அனாதையான நிலைக்குத் தானே பொறுப்பாளி என்று தன்மீதே வெறுப்புக்கூட ஏற்பட்டது.

''எப்போது அப்துல்? யார் சொன்னது?'' என்று கேட்டாளாயினும், தஸ்தகிர் சாயபு அதிக நாள் இருக்க மாட்டாரென்று அன்றைக்கொரு நாள் டாக்டர் சம்பத் திடம் கேள்விப்பட்ட பிறகு, அதைக் குறித்துத் தான் கவலைப்படாமலே இருந்துவிட்டோம் என்ற குற்ற உணர்வு அவள் இதயத்தில் குறுகுறுக்கவே செய்தது. நடுவில் ஒரே ஒருதரம் பெரிய டாக்டரின் பின்னே வார்டு களில் ரவுண்ட் சென்றபோது கிழவரைக் கண்டாள். ஆறுதலாக, இரண்டு வார்த்தை சொன்னாள் அப்போது. சிறுவன் அப்துலை ஓர் ஆயாவிடம் ஒப்படைத்து,



செலவுக்குப் பணமும் கொடுத்திருந்தாளாகையால் அவனைப் பற்றி அலட்டிக் கொள்ள வேண்டாம் என்றுப் கிழவரிடம் தெரிவித்தாள். அதற்கப்புறம் அவரையோ அவருடைய பேரனையோ பார்க்காமலே இருந்துவிட்டது எத்தனை தவறு! தன்னுடைய சொந்தக் கவலைகளையும் பிரசினைகளையுமே பெரிதாக நினைத்துக்கொண்டு உலகத்தை மறக்கிறவளுக்கு, டாக்டர் தொழிலிலே பயிற்சி பெற என்ன தகுதி இருக்கிறது?

அப்துல் அவளுடைய தோளில் தன் கண்ணையும் மூக்கையும் தேய்த்துக்கொண்டு, ''தாத்தா ஐம்முனு நல்லா ஆகி வந்துடும்னு சொன்னீங்களே அக்கா?'' என்று அன்றைக்குக் கூறிய ஆறுதல் வார்த்தைகளை எழுத்துக் கெழுத்து ஞாபகமாய் எடுத்துக் காட்டி, சத்யாவின் வேதனையை இன்னும் அதிகப்படுத்தினான்.

''அழாதே, அப்துல், நீ பெரிய பையனாச்சே! இப்படி அழலாமா? தாத்தா இல்லாட்டி என்ன? இந்த அக்கா இல்லையா? சமர்த்தில்ல, இதோ பார்,'' என்று அந்தக் குழந்தையின் ஊட்டமில்லாத மெலிந்த முதுகை வருடிக் கொடுத்தவாறு, தஸ்தகீர் கிழவன் சேர்க்கப்பட்டிருந்த வார்டை நோக்கிச் சென்றாள்.

அவளுக்காகவே காத்திருந்த மாதிரி, அப்துலைக் கவனித்துக் கொண்டிருந்த ஆயா ஓடி வந்தாள்.

''கெடங்குக்கு எடுத்துக்கிட்டுப் போயிட்டாங்க அம்மா. உங்க பேரிலேதான் அட்மிட் ஆகியிருக்கிற தாலே, நீங்கதான் வந்து வாங்கிக்கணும் என்கிறாங்க,'' என்று தெரிவித்தாள்.

சத்யாவுக்கு இது இரண்டாவது அதிர்ச்சி. இறந்த பிறகும் தஸ்தகிருக்கு அவளா பொறுப்பு? அவளுக்குத் தெரிந்த வரையில், யாரோ ஒருவருடைய வீட்டுத் திண்ணையில் தையல் மெஷினுடன் உட்கார்ந்திருந்த அந்தக் கிழவருக்கு எந்த உறவினரும் கிடையாது.

''ஏன் அப்துல், உனக்குச் சித்தப்பா, அண்ணன், மாமா யாரும் கிடையாதா?'' என்று கேட்டு, அந்தச் சிறுவனின் பரிதாபமான முகத்தை ஆவலுடன் நோக்கினாள்.

''அக்காதான் இருக்கிறது,'' என்றான் அப்துல்.

''அக்கா இருக்கிறாங்களா? யார்? எங்கே இருக்கிறாள்? விலாசம் தெரியுமா?'' என்று சத்யா கேள்விகளை அடுக்கு முன்பு, ''நீங்கதான் அந்த அக்கா,'' என்றான் கபட மறியாத அந்தக் குழந்தை.

கண்ணீருக்கிடையே சிரிப்பும் வந்தது சத்யாவுக்கு. ''சரி கவலைப்படாதே. நானே உனக்கு எல்லாமாக இருக்கிறேன்,'' என்று உறுதி கூறிவிட்டுச் சிறிது நேரம் யோசனை செய்தாள் உதட்டைக் கடித்துக்கொண்டு.

பிறகு, ''டாக்டர் சம்பத் இருக்கிறாரா பார்,'' என்றாள் ஆயாவிடம்.

''இல்லைங்க,'' என்று உடனே பதில் தந்தாள் அந்த ஆயா. ''கொஞ்சம் முந்திதான் ஒரு அம்மாள் வந்து காரிலே அழைச்சிக்கிட்டுப் போனாங்க. ஏதோ அவசரக் கேசு போலிருக்குது.''

இறந்தவர் ஓர் ஹிந்துவாக இருந்திருந்தால் அவ்வளவு கவலைப்பட்டிருக்க மாட்டாள் அவள். தன் வீட்டுக்கு வருகிற புரோகிதரிடம் சென்று யோசனை கேட்டுக் கொள்ளலாம். முஸ்லிமான தஸ்தகீர் சாயபுவை எப்படிக் கௌரவமாக அடக்கம் செய்வது? யாருமற்ற அனாதை என்று சொல்லி ஆஸ்பத்திரியிடமோ போலீசாரிடமோ ஒப்படைக்கவும் அவள் மனம் ஒப்பவில்லை.

போலீசில்...

சட்டென ஓர் எண்ணம் தோன்றியவுடன், வெகு நேரமாக வாடியிருந்த முகம் சிறிது மலர்ச்சி பெற்றது.



தோளில் அணைத்திருந்த சிறுவனைக் கீழே இறக்கிக் கையைப் பிடித்துக் கொண்டு ''வா என்னோடு,'' என்று சொல்லி விடுவிடுவென்று நடந்தாள்.

இரண்டு நிமிடத் தொலைவில் டெலிபோன் உள்ள அறையொன்று தென்பட்டது. அங்கிருந்த பெண் குமாஸ்தாவிடம் அனுமதி பெற்றுக் கொண்டு நம்பரைச் சுழற்றினாள்.

''போலீஸ் கமிஷனர் ஆபீஸ்,'' என்று மறுமொழி வந்தது.

சாரங்கபாணியின் அலுவலக அறைக்குப் போடச் சொல்லி, ''மிஸ்டர் மணி இருக்கிறாரா?'' என்று கேட்டாள்.

''இருங்கள். ஸீட்டில் காணோம். பார்க்கிறேன்,'' என்ற தகவல் கிடைத்தது. சில வினாடிகள்தான் என்றாலும் அந்தத் தாமதத்தைப் பொறுக்க மனத்தில் சகிப்பு இருக்கவில்லை.

''மணி பேசுகிறேன்,'' என்று பதில் வந்த பிறகுதான் அவளுக்கு உயிர் வந்தது.

''நான்தான் சத்யா,'' என்று அவள் குரல் கொடுத்ததுமே அவனுடைய குரலில் ஆர்வமும் பணிவும் தென்பட்டன. ''என்ன... என்ன வேண்டும்?'' என்றான்.

''ஒரு அவசர வேலை, உங்கள் உதவி வேண்டும்,'' என்றாள்.

''என்ன உதவி?'' என்று அவன் கேட்டுக் கொண்டிருக்கவில்லை. ''செய்கிறேன்,'' என்று உடனேயே வாக்களித்தான்.

''ஆஸ்பத்திரி வாசலிலேயே காத்திருக்கிறேன். ஒரு டாக்ஸி பிடித்துக்கொண்டு உடனே புறப்பட்டு வாருங்கள். நேரில் சொல்கிறேன்,'' என்றவள், ஒரு வினாடி தயங்கி,

''அப்பாவிடம்கூட அப்புறம் சொல்லிக் கொள்ளலாம்'' என்றாள்.

''இதோ,'' என்ற பதிலும், டெலிபோன் வைக்கப்படும் சப்தமும் சேர்ந்தாற்போலவே கேட்டன.

நிம்மதியுடன் அப்துலை அழைத்துக் கொண்டு வாசலுக்கு விரைந்தாள் சத்யா. அப்துலின் அழுகை இப்போது பெரும்பாலும் அடங்கிவிட்டது. ''தாத்தாவை என்ன பண்ணப் போறீங்க அக்கா?'' என்று குழந்தைகளுக்கே உரிய ஆவலுடன் கேள்விகள் கேட்கத் தொடங்கினான்.

''தாத்தாவைச் சாமிகிட்டே... வந்து... அல்லாகிட்டே அனுப்ப வேண்டாம்? நீயும் கூடவே இரு.'' நிறுத்தியிருந்த ஐஸ் ப்ருட் வண்டியை அருகே அழைத்தாள்.

''எனக்கு வேணாம் அக்கா, தாத்தா திட்டும்,'' என்று அப்துல் சொன்னபோது அவள் பரிதாபம் அதிகரித்தது. ''பரவாயில்லை, சாப்பிடு.'' என்று வாங்கிக் கொடுத்து விட்டு, பிற்பகலின் நெருக்கடிகள் அதிகரித்துவிட்ட சாலையில், வருகிற டாக்ஸிகளையெல்லாம் ஊன்றிக் கவனிக்கலானாள்.

பதினைந்து நிமிடத்துக்கு மேலாயிற்று. மணி, அனுமதிக்காக அப்பாவிடம் கேட்கப் போய், அவர் ஏதாவது தடுத்திருப்பாரோ? அல்லது கலவரப்பட்டிருப்பாரோ? இருக்காது. மணி எதிலும் கச்சிதம். நம்பலாம்...

''என்ன விஷயம்?'' என்று கேட்டுக் கொண்டே வேகமாக டாக்ஸியிலிருந்து இறங்கினான் மணி.

விஷயத்தைச் சுருக்கமாய்ச் சொன்ன சத்யா, ''உங்களுக்குத் தெரிந்த முஸ்லீம் பெரியவர்கள் யாரையாவது அழைத்து வாருங்கள். தஸ்தகீரை முறைப்படி அடக்கம் செய்யவேண்டும்'' என்றாள்.



யாரோ ஒரு கதியற்ற கிழவனுக்காக இவ்வளவு அலட்டிக்கொள்ள வேண்டுமா என்ற சந்தேகம் மணியின் முகத்தில் தோன்றி உடனே மறைந்தது.

''நான் கவனித்துக் கொள்கிறேன். நீங்கள் பிரேதத்தை வாங்கி என்னிடம் ஒப்படைத்துவிட்டு வீட்டுக்குப் போங்கள்,'' என்றான்.

''இல்லை, இல்லை. நானும் கடைசி வரையில் கூடவே இருக்கிறேன். என்னைப் பேத்தி மாதிரி நினைத்திருந்தார் அந்தக் கிழவர். அதைப் பொய்ப்பிப்பானேன்?'' என்று சொல்லி மணியை அழைத்துக் கொண்டு 'மார்ச்சுவரி'க்குப் புறப்பட்டாள் சத்யா.

'ஐஸ்ப்ருட்'டைச் சுவைத்துக் கொண்டிருந்த சிறுவனின் மீது மணியின் பார்வை விழுந்தது.

''சின்னப் பையன்... ஏதாவது பயப்படுவானோ என்னவோ,'' என்று அவன் கூறியது சத்யாவுக்கு நியாயமாகவே பட்டது. ஆயாவை மறுபடி தேடிப்பிடித்து, ''நம்ம வீட்டிலே கொண்டுபோய் விட்டு வை இவனை. என் அம்மாவிடம் வேறொன்றும் சொல்ல வேண்டாம். ராத்திரி நானே நேரில் சொல்லிக் கொள்கிறேன்,'' என்று கூறி, அப்துலை அவளிடம் ஒப்படைத்தாள். அப்துலின் சிணுங்கல் மறுபடியும் தொடங்குமுன் அவளிடம் இருவரும் விடைபெற்றுக் கொண்டு விட்டார்கள்.

சவக் கிடங்கில் சாதாரணமாக இன்னும்கூட நேரம் பிடித்திருக்கும். ஆனால் வந்திருந்த இருவர்களில் ஒருவர் ஹவுஸ் சர்ஜனாகவும் மற்றவர் போலீஸ் இலாகாவைச் சேர்ந்தவராகவும் இருக்கவே, சீக்கிரமே காரியங்கள் முடிந்துவிட்டன.

''வந்து பெற்றுக் கொள்கிறேன்,'' என்று அங்கே சொல்லிவிட்டு, சத்யாவுடன் வெளியே வந்தான் மணி.

''இனிமேல் நீங்கள் வீட்டுக்குப் போகலாமே? நான் பார்த்துக் கொள்கிறேன் மற்றதை,'' என்றான் சத்யாவிடம்.

''பரவாயில்லை. ஒரு பொறுப்பை உங்களுக்குக் கொடுத்து, சுமையிலும் பங்கு பெறாமல் நழுவுவது நியாயமில்லை. தஸ்தகீர் சாயபுவுக்காக இல்லாவிட்டாலும் உங்களுக்காகவாவது இருக்கிறேன்,'' என்று சொல்லி அவன் யோசனையை மறுத்து விட்டாள் சத்யா. மணியின் சுறுசுறுப்பையும் நெருக்கடி சமயத்தில் சட்டெனக் கை கொடுக்கும் சாமர்த்தியத்தையும் நினைக்க நினைக்க அவள் நெஞ்சில் நன்றி சுரந்தது. திறமைக்கு ஒரு மணி என்று எப்போதுமே அவள் நினைத்ததுண்டு. இப்போது, நம்பிக்கைக்கும் உகந்தவனாக அவன் திகழ்ந்ததும், அவளுடைய மதிப்பில் மணி உயர்ந்துகொண்டே போனான்.

''அப்படியானால் ஒன்று செய்வோம்,'' என்ற மணி கையைத் தட்டி ஒரு டாக்ஸியை அழைத்தான். அதில் அவளை ஏற்றித் தானும் முன்புறம் அமர்ந்து கொண்டு, கல்லறைக்குப் போகச் சொன்னான்.

கால் மணி நேரத்தில் அந்த இடத்தை அடைந்ததும், ஒரு வெற்றிலை பாக்குக் கடையின் வாசலில் அவளை இறக்கி, அங்கேயே இருக்கும்படி கூறினான்.

''நீங்கள்...'' என்றாள் சத்யா சிறிது குழப்பத்துடன்.

''நான் போய் மற்ற ஏற்பாடுகளைச் செய்து, லப்பை ஒருவரை அழைத்து வருகிறேன். மார்ச்சுவரியிலிருந்து ஒரு ஜட்கா வைத்துத்தான் எடுத்து வரவேண்டும். கூடவே ஆள் இருக்கவேண்டும் என்பான் வண்டிக்காரன். அந்தக் கண்ணைராவி ஊர்வலத்தில் நீங்கள் எதற்காக இடம்பெற வேண்டும்? இங்கேயே இருங்கள்,'' என்று சமாதானம் சொன்னதும் சத்யாவுக்கு வேறு வழி தோன்றவில்லை.



மணி தன் பொருட்டு அதிகப்படி பொறுப்புக்களைத் தலையில் போட்டுக் கொள்கிறானே என்ற அனுதாபத்துடன் பேசாமல் எல்லாவற்றையும் அவனிடமே விட்டு விட்டு வீட்டுக்குத் திரும்பிவிடலாமா என்றும் எண்ணம் உதித்தது. ஆனால் அவன் சொன்ன போதெல்லாம் மறுத்துவிட்டு, கடைசியில் பின்வாங்குவது வெட்கக்கேடு என்று பேசாதிருந்தாள்.

மணி புறப்பட்டுப்போன ஐந்தாவது நிமிடத்திலிருந்தே தன் கைக் கடிகாரத்தைப் பார்த்துக் கொள்ளத் தொடங்கினாள் சத்யா. பொழுது சாய்ந்து இருள் கப்பிக் கொண்டது. அவள் நின்றிருந்த இடம், அவ்வளவு விரும்பத்தக்க சூழ்நிலையாக இல்லை. எதிரிலிருந்த கல்லறை மைதானத்திலும் அதற்கப்பாலும் இங்கொன்று அங்கொன்றாகச் சிமினி விளக்குகள் மினுமினுக்கத் தொடங்கின. வெற்றிலை பாக்குக் கடைக்கு வந்து போய்க் கொண்டிருந்த வாடிக்கைக்காரர்கள் கௌரவமான வர்க்கத்தைச் சார்ந்தவர்களல்ல. இரண்டொருவர் அவளை அணுகி, வேண்டுமென்றே போலி வினயத்துடன், ''யாருக்காக மேடம் காத்திட்டிருக்கீங்க?'' என்று விசாரித்தார்கள். ''தாகத்துக்கு ஏதாவது சாப்பிடறீங்களா அம்மா?'' என்று கடைக்காரனே அடிக்கடி நச்சரித்துக் கொண்டிருந்தது இன்னொரு வகைத் தலைவேதனையாக இருந்தது.

தானொரு டெபுடி போலீஸ் கமிஷனரின் மகள் என்பதோ, கல்லூரிகளிலும் மருத்துவ விடுதிகளிலும் பயின்று தேறிய புதுமைப்பெண் என்பதோ சத்யாவின் நினைவில் நிற்கவில்லை.

இனி ஒரு நிமிடமும் இங்கே நிற்கக்கூடாது என்று எந்த நிமிடம் அவள் தீர்மானித்தாளோ அதே நிமிடம் ஒரு ஜட்கா வண்டியின் ஓசை கேட்டது. வண்டியின் முன் புறத்திலிருந்து குதித்த மணியையும், வேறொரு முஸ்லிம் கிழவரையும் கண்டபோது தெய்வத்தைப் பார்த்தாற்

போன்ற மகிழ்ச்சி பிறந்தது சத்யாவின் இதயத்தில். ஜட்காவின் பின்புறம், சவப்பெட்டி நீட்டிக் கொண்டிருந்த காட்சிகூட அவளுக்கு அருவருப்பையோ அச்சத்தையோ ஏற்படுத்தவில்லை.

முஸ்லிம் பெரியவர் சலாமிட்டு அவளுக்கு வணக்கம் தெரிவித்தார்.

"ரொம்ப நேரம் உங்களைக் காக்க வைத்துவிட்டேன். ஜட்கா சட்டென்று கிடைக்காததுதான் காரணம்," என்று சுருக்கமாய் மணி அவளுக்குத் தெரிவித்துவிட்டு, "மடமட வென்று காரியத்தைக் கவனியுங்கள். வீட்டுக்குத் திரும்ப வேண்டும்," என்று தான் அழைத்து வந்திருந்த பெரிய வருக்குக் கட்டளை பிறப்பித்தான்.

"கால் மணி நேரத்துக்குமேல் ஆகாது," என்று கூறிய அந்தப் பெரியவர், இடுகாட்டுக்குள் நுழைந்து உதவிக்குச் சில ஆட்களையும் கூப்பிட்டு தஸ்தகீர் சாயபுவின் அடக்கத் துக்கான ஏற்பாடுகளை மளமளவென்று செய்யலானார்.

சத்யா கண்கொட்டாது கவனித்துக்கொண்டிருந்தாள்,

மசூதியிலிருந்து சவப்பெட்டி வாங்கி, அதிலேயே தஸ்தகீரின் உடலைக் கொண்டு வந்திருந்தார்கள். வெள்ளைத் துணி எடுத்து வந்திருந்தார் லப்பை. இரண்டு முறை குளிப்பாட்டிய பிறகு, மந்திரம் ஓதினார். வெள்ளைத்துணியில் சூடமும் சந்தனமும் வைத்து அத்துடன் சடலத்தை வைத்துத் தைத்த பின்னர் குழியிலிறக்கி, முகத்தின்மீது மட்டும் துணியைக் கிழித்துத் திறந்துவிட்டு, மற்றக் கடைசிக் காரியங்களையும் செய்து முடித்தார்.

சவப்பெட்டியைத் திருப்பி எடுத்துக் கொண்டு அவர் புறப்பட்டபோது, செலவுத் தொகைகூட மணியே கொடுத்தான்.

"இனிமேல் போகலாமல்லவா?" என்றான் சத்யா விடம்.



"உங்களுக்கு எப்படி நன்றி தெரிவிப்பதென்றே தெரிய வில்லை," என்று மனமாரச் சொல்லிய சத்யா, கடைசி முறையாக அந்தக் கிழவரின் சமாதியைப் பார்த்துவிட்டு வெளியே வந்தாள். பின்னேயே வந்தான் மணி. என்ன தான் தைரியசாலியான பெண்ணானாலும் ஓர் ஆண் துணை இருக்கும்போது எத்தனை தெம்பு ஏற்படுகிறது! மணியைப் பெருமையுடன் பார்த்தவாறு, "டாக்ஸி கிடைக்குமா இங்கே?" என்று கேட்டாள்.

"பதினொன்றாகிறது," என்று மணி கைக்கடிகாரத் தைப் பார்த்துவிட்டுச் சொன்னபோது, "இங்கே பக்கத்தி லேயே டாக்ஸி இருக்குதுங்க," என்று யாரோ அவர்களை அழைப்பது கேட்டது.

"எங்கே?" என்றான் மணி.

"இதோ பக்கத்து ஷெட்டிலேங்க," என்று அவர் களைக் கூப்பிட்ட ஆள் சொன்னான்.

நடமாட்டமே இல்லாத அந்தத் தெருவில், இருளைத் தவிர வேறெதுவும் புலப்படாத ஒரு காடிகானாவுக்குள் அவர்கள் காலை வைத்ததும் படாரென்று ஒரு கதவு சாத்திக்கொண்டது.

காரின் கதவு அல்ல, அந்த ஷெட்டின் கதவு.

"டேய்!" என்று ஒரே பாய்ச்சலாகத் தாவி, கதவை படார் படாரென்று குத்தினான் மணி.

"என்ன இது?" என்று ஏதும் புரியாதவளாகப் பதறினாள் சத்யா.

"டாய்! ஏண்டா அனாவசியமா, கையை ஒடிச்சிக்கிறே கண்ணு!" என்று வெளியேயிருந்து எவனோ அட்டகாச மாகச் சிரித்தான்.

"ஆபீசரு மகளோடு ஜாலியா கிளம்பினியா, மாப்பிளே? டேய்! என்னைப் பிடிச்சி ஜெயில்லே

போட்டார்டா அந்தச் சாரங்கபாணி! என்ன ஆச்சுது? அவன் மவளும் செக்ரேடரியும் ராவு பூரா காடிகானாவிலே சேர்ந்து கிடந்தாங்கன்னு நாளைக்குப் பேப்பரிலே வரும் பாருடா! அப்ப தெரியும் கமிசனரோட கவுரவமெல்லாம்!''

குரல் மங்கிக்கொண்டே போய் மறைந்து விட்டது.

## பதினெட்டு

கதவு வெளிப்புறம் தாழிடப்பட்ட ஓசை கேட்டுச் சில வினாடிகள் கழித்து மணிக்கும் சத்யாவுக்கும் அதிர்ச்சி நீங்கிற்று.

''நல்ல வேளை, வேறே எந்தவித ஆபத்துமில்லை,'' என்று வாய்விட்டுப் பேசிய மணி, ''பயந்து விட்டீர்களா?'' என்று சத்யாவைக் கேட்டான்.

சத்யாவுக்கு அப்போதுதான் பிரமிப்பும் அதிர்ச்சியும் நீங்கி, உணர்வு பிறந்து கொண்டிருந்தது. ''இல்லை... உங்களுக்கு ஒன்றுமில்லையே?'' என்றாள்.

''நான் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்கத் தவறி விட்டேன். என் முட்டாள்தனம்,'' என்றவன், கதவை நெம்புவதும் இடிப்பதுமாக அடுத்த வேலையில் ஈடுபட்டான்.

''நீங்கள் பாட்டுக்கு ஆபீசில் சௌகரியமாயிருந்தீர்கள். நான்தான் கூப்பிட்டு இத்தனை தொல்லையும் ஏற்படுத்தி விட்டேன்,'' என்றாள் சத்யா. ''யார் இப்படிப் பண்ணினார்களென்று தெரிகிறதோ?''

''உங்கள் தகப்பனார் டெபுடி கமிஷனர். நூற்றுக் கணக்கான பேர் அவருக்கு விரோதிகள் இருப்பார்கள்,'' என்று சொல்லிக் கொண்டே கதவை மீண்டும் மோதினான் மணி.



''நம்மை அடித்துப் போடப்போகிறார்கள் என்று நினைத்தேன்.''

''இல்லை, நம்மை அவமானப்படுத்துவதுதான் அவனுடைய நோக்கம். இரவு முழுவதும் இங்கே இருந்தோமென்ற கெட்ட பெயர்...'' மணி தயங்கினான்.

சத்யாவின் பதிலில் சுறுசுறுப்பு இருந்தது. ''அப்படியானால் பேசாமல் இருங்கள். நம்மை மீறி நமக்கு ஒருத்தன் அவமானம் ஏற்படுத்திவிட முடியாது. பொழுது விடியட்டும், அவனாகவே வந்து கதவைத் திறக்கட்டும்!''

அவள் பேச்சை நம்ப இயலாதவன்போல் மணி தனது முயற்சியைச் சிறிது நிறுத்திக் கொண்டான். ஆனால் அதிக நேரம் அப்படி இருக்கவில்லை.

ஒரு தீர்மானத்துடன் அவன் எழுந்து கொள்வதைக் கண்டாள் சத்யா.

தகரக் கூரையின் சிறு இடுக்குகள் வழியாக, பௌர்ணமி நிலவின் ஒளி அந்தக் காடிகானாவுக்குள் ஒழுகிக் கொண்டிருந்தது. கொஞ்சம் கொஞ்சம் கண்ணின் சக்தியைப் பயன்படுத்திக்கொள்ள முடிந்தது. அதன் உதவியில்தான். நடு ராத்திரி தாண்டியிருக்குமென்று சத்யா ஊகித்தாள். எங்கேயோ தொலைதூரத்தில் எதைக் கண்டோ ஆத்திரத்துடன் குரைத்துக்கொண்டிருந்த ஒரு நாய்கூடக் களைத்து ஓய்ந்து அரைமணிக்கு மேலிருக்கும். என்ன கஷ்டப்பட்டும் கைக்கடிகாரத்தில் நேரத்தைக் கண்டறிய முடியவில்லை.

ஒற்றைச் சக்கரத்தை இழந்திருந்த கைவண்டியொன்று அந்தக் காடிகானாவின் மூலையில் கிடந்தது. சற்று முன் மணிதான் அதை இழுத்து நடுவில் போட்டு, கூளங்களைக் காலினால் ஒதுக்கி, வண்டியிலிருந்து சிறிது வைக்கோலை எடுத்துப் பரப்பி, ''நீங்கள் கொஞ்சம்

இளைப்பாறுங்கள். நான் கதவருகில் காவலிருக்கிறேன்,'' என்றான்.

அந்தத் தனித்த அறைக்குள்ளே, தனக்காக அவன் தருகின்ற பாதுகாப்புகளைக் கவனிக்கையில் சத்யாவுக்குச் சிரிப்பு ஒருபுறமும் அவன்பால் மதிப்பு மறுபுறமும் எழுந்தன. கைவண்டியின் மறுபக்கத்திலே சென்று அவள் படுத்துக்கொண்டாள். ஆனால் தூங்கிவிடவில்லை. வாசல் கதவு ஓரத்தில், கதவின்மீது சாய்ந்தபடியே உட்கார்ந்திருந்த மணி, ஒரு நிழல்போல அவள் பார்வையில் மங்கலாகத் தெரிந்து கொண்டேயிருந்தான். முரடன், பண்பு போதாதவன், காரியவாதி என்றெல்லாம் கணித்து வைத்திருந்த மணியை, இப்போது முற்றிலும் வேறு கோணத்தில் கண்டபோது அவளுக்கே விந்தையாயிருந்தது. அவன்மீது பரிதாபமும் ஏற்பட்டது.

''நீங்களும் கொஞ்ச நேரம் படுத்துக் கொள்ளுங்கள். உங்களுக்குத்தான் அலைச்சல். விடியட்டும், பார்த்துக் கொள்ளலாம்'' என்று சொல்லிவிட்டு, ஒருவிதத்தில் உறுத்தலாயும் ஒருவிதத்தில் நன்றென்றும் இருந்த வைக்கோல் படுக்கையில் தலை சாய்த்தாள் சத்யா. தன்னையுமறியாமல் சிறிது கண்ணயர்ந்த வேளையில்தான் அந்த ஓசை கேட்டு விழித்துக் கொண்டாள். உட்கார்ந்திருந்த மணி மறுபடி எழுந்து கொண்டதும் அவளுக்கு ஏனோ திகில் மூண்டது.

மறுவினாடியே அவளுக்கு வெட்கம் ஏற்பட்டது. 'எவ்வளவு சட்சட்டென்று தவறாக எடை போட்டு விடுகிறேன்!' என்று தன்னைத்தானே திட்டிக் கொண்டாள்.

ஏனெனில், மணி எழுந்துகொண்டது, மூலையில் கிடந்த எதையோ எடுப்பதற்காகவே. உற்றுக் கவனித்தாள். அது ஒரு நீண்ட கம்பு.



''என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று கேட்காதிருக்க முடியவில்லை.

''நீங்கள் தூங்கவில்லை?'' என்று வியப்புடன் திரும்பி விசாரித்தான் மணி. ''எனக்கென்னவோ இருப்புக் கொள்ளவில்லை... எப்படியும் திறந்துகொண்டு வெளியே போய்விட வேண்டுமென்று பார்க்கிறேன்.''

''பொழுது விடியட்டும் என்றேனே?''

''இல்லை, எனக்கு அது சரியென்று படவில்லை.'' மறுத்தான் மணி. ''நம்மை மீறி ஒருத்தர் நம்மை அவமானப்படுத்திவிட முடியாதென்பது சரிதான். ஆனால், உங்களுடைய அந்தஸ்தைப் பார்த்தால்...''

''பார்த்தால்?''

மணி தயங்கித் தயங்கிப் பேசினான்: ''நாலுபேர் பேசுகிறமாதிரி நாமாகவே இடமேற்படுத்திக் கொடுப்பானேன்? எனக்குப் பரவாயில்லை. ஆண்பிள்ளை. தனிக்கட்டை. சாதாரண ஆள். எது வந்தாலும் தாங்கிக் கொள்ளலாம். டெபுடி போலீஸ் கமிஷனரின் பெண்ணான நீங்கள் அப்படியெல்லாம் எதிர்காலத்தைப் பாழாக்கிக் கொள்ளலாமா?''

''பாட்டி மாதிரி பேசுகிறீர்களே!'' என்று சிரித்துவிட்டாள் சத்யா. ''என் எதிர்காலத்தைக் காப்பாற்ற இப்போது என்ன செய்வதாக உத்தேசம்?''

''கதவை வெளிப் பக்கம் தாழிட்டானே தவிர, பூட்டினதாகத் தெரியவில்லை. இங்கே கொஞ்சம் சந்து தெரிகிறது. தாழ்ப்பாளை நெம்பினால் திறந்து கொள்கிறதா பார்க்கிறேன்'' என்ற மணி, கையில் எடுத்திருந்த கழியைக் கதவுக்கு வெளிப்புறம் தள்ளி டக்டக்கென்று தட்டினான்.

''அனாவசிய முயற்சி,'' என்று சத்யா சொல்லி வாய் மூடவில்லை. டங்கென்று தாழ்ப்பாள் கழன்று கொள்ளும் சத்தம் கேட்டது.

''திறந்து விட்டது!'' என்று உற்சாகமாகக் கூவிக் கொண்டு, கதவையும் வெட்டிச் சாய்த்தாற்போலத் திறந்து விட்டான் மணி. அந்த உற்சாகம் சத்யாவையும் தொற்றிக் கொள்ளவே, ''அட! நிஜமாகவே நீங்கள் சூரர்தான்!'' என்று பாராட்டியவண்ணம், உடனேயே எழுந்து கொண்டு புடைவையிலும் கேசத்திலும் ஒட்டியிருந்த வைக்கோல் துண்டுகளைத் தட்டிவிட்டாள்.

வாசலுக்கு வந்து பார்த்தபோது, உள்ளே இருப்பதே பாதுகாப்போ என்று தோன்றியது அந்த அளவுக்கு மயானம் போலிருந்தது அந்த இடம். உண்மையிலேயே மயானம் அதிக தூரத்தில் இருக்கவில்லை என்ற நினைவும் சேர்ந்துகொண்டது சத்யாவுக்கு.

ஆனால் மணியின் குரலில் அச்சமோ தயக்கமோ தென்படவில்லை.

''நல்ல வேளை, வெளியே காவலுக்கு ஆள் நிறுத்தாமலே போயிருக்கிறான். வாருங்கள் சீக்கிரமாய்!'' என்று கூறிவிட்டு விடுவிடுவென முன்னேறினான் மணி. அவன் நீட்டிய கையைப் பிடித்துக் கொள்ளாவிட்டாலும், கிட்டத்தட்ட அவனுடன் ஒட்டிக் கொண்டவாறே வேகமாய்ப் பின்தொடர்ந்தாள் சத்யா.

காடிகானா இருந்த இடம் சிறு சந்து. அங்கிருந்து சற்று அகலமான தெருவை அடைந்தபோது ஒன்றிரண்டு குடிசைகள் தென்பட்டன. அதையும் தாண்டி, பெரிய வீதிக்கு வந்தார்கள். இரண்டாம் காட்சி சினிமா விட்டு, சிறு சிறு கும்பல்கள் சென்று கொண்டிருந்தன. கைக் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டாள் சத்யா. மணி இரண்டடிக்க பத்து நிமிடம் இருந்தது.



சைக்கிள் ரிக்ஷாவொன்றை நிறுத்தி அவளை ஏற்றி விட்டான் மணி. சத்யாவின் வீட்டு விலாசத்தைக் கூறி, ''மெல்லவே போப்பா,'' என்று அவன் சொன்னது சத்யாவுக்குத் திகைப்பை விளைவித்தது முதலில். ஆனால் தனக்குப் பாதுகாப்பாக வீடு வரையில் பின்தொடர்ந்து நடந்தே வருவதற்காகத்தான் அப்படிச் சொன்னான் என்பதைப் புரிந்து கொண்டாள்.

இனிமேல் பயமில்லை, நீங்கள் போங்கள்,'' என்று பலமுறை கூறியும் மணி கேட்கவில்லை. பங்களா வாசல் வரையில் வந்தான். தானே சைக்கிள் ரிக்ஷாக்காரனுக்குச் சில்லறையும் கொடுத்தனுப்பிய பிறகு, ''ஒரு சின்ன விஷயம்'' என்றான்.

''என்ன?''

''எந்தப் போக்கிரி இப்படிச் செய்தான் என்பதை நான் ரகசியமாக விசாரிக்கிறேன். நீங்கள் யாரிடமும் சொல்ல வேண்டாம்.''

''அப்பாவிடம் கூடவா?''

''ஆமாம். உங்களை— என்னைக்கூட இல்லை. உங்களைத்தான் முக்கியமாக— அவமானப்படுத்த வேண்டுமென்று இப்படிப் பண்ணியிருக்கிறான் எவனோ. அவன் எதிர்பார்க்கிற விளம்பரத்தை நாமாகக் கொடுப்பானேன்? நான் ரகசியமாகவே தண்டனையும் கொடுத்து விடுகிறேன்.''

''சரி,'' என்றாள் சத்யா.

''ரொம்ப வருந்தத்தக்க விஷயம் நடந்துவிட்டது. நீங்கள் எதுவும் மனசில் வைத்துக் கொள்ளாதீர்கள்,'' என்று கூறிவிட்டு, குனிந்த தலையுடன் வேகமாகப் புறப்பட்டுச் சென்றான் மணி.

சத்யா உடனேயே பங்களாவுக்குள் நுழைந்து விடவில்லை. ரொம்ப இக்கட்டான, நெருக்கடியான சந்தர்ப்

பத்தில், மிக அதிகமாகக் கண்ணியத்தை வெளிப்படுத்திக் கொண்டு விட்ட மணியின் பின்னாலேயே அவள் சிந்தனை சென்று கொண்டிருந்தது. சில நிமிட நேரம் நின்று, தூரத்து இருளில் அவன் உருவம் மறைகிற வரையில் பார்த்துக் கொண்டிருந்த பிறகே உள்ளே நுழைந்தாள்.

வெராந்தாவில் சிறுவன் அப்துல் சுருட்டி மடங்கி உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு சிறிது மகிழ்ச்சி ஏற்பட்டது.

மறுநாள் காலை—

டிரஸ் பண்ணிக் கொண்டிருந்தபோது, கீழே ஹாலில் அப்பா, "முட்டாள்! மணி ஒன்பதாகப் போகிறது! இன்னமும் காணோம்!" என்று இட்டிக் கொண்டிருப்பது காதில் விழுந்தது.

"யார், மணியையா அப்பா தேடிக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று விசாரித்தாள் கீழே வந்ததும்.

"ஏன், வந்தவனை நீ எங்கேயாவது அனுப்பித் தொலைத்தாயா என்ன?" என்று சாரங்கபாணி சீறினார்.

"இப்போது அனுப்பவில்லை, நேற்று அனுப்பியிருந்தேன். இங்கே ஒரு முஸ்லிம் பையன் வந்திருக்கிறானே, நீங்கள் பார்க்கவில்லை?"

"விஷயத்தைச் சொல்லு."

"அந்தப் பையனின் தாத்தா, தையல்காரத் தஸ்தகீர் சாயபு, இறந்து விட்டாரப்பா. அவரை அடக்கம் செய்வதற்கு மணிதான் ரொம்ப உதவி செய்தார். ராத்திரி ரொம்ப நேரம் கழித்துத்தான் வீடு திரும்பினார். அதனால் இப்போது நேரமாகிறதோ என்னவோ, நீங்கள் போங்கள். மணி வந்ததும் அனுப்பி வைக்கிறேன்."



"அழகுதான்," என்று முணுமுணுத்தபடி காரில் ஏறிக் கொண்டார் சாரங்கபாணி. "உனக்கும் உன் அம்மாவுக்கும் அவன் எடுபிடி வேலைகள் செய்ய ஆரம்பித்தால் என் வேலை உருப்பட்டாற் போலத்தான்."

"தினம் எத்தனை பங்சுவலா வந்து விடுகிறார்! என்றைக்கோ ஒருநாள் கொஞ்சம் நேரமானால்..."

"என்ன அது?" என்று சாரங்கபாணி அதட்டினாற் போலக் கேட்டார்.

சத்யா பார்த்தாள். தந்தை கேட்டது அவளையல்ல. உறையொன்று நீட்டிக் கொண்டிருந்த தபால்காரரை.

சாரங்கபாணி காரில் இருந்தவாறே அந்த ரெஜிஸ்டர் தபாலைப் பெற்றுக்கொண்டு, ரசீதில் கையெழுத்திட்டுத் தந்தார்.

"பார்-அட்-லா மேனனா? யாரது?" என்று தமக்குள் பேசியவாறே உறையைக் கிழித்து, கடிதத்தை வெளியிலெடுத்தார்.

இரண்டு வினாடிகளில் அவர் முகம் சிவந்தது. காரிலிருந்து இறங்கினார்.

"சத்யா! உன் அம்மாவைக் கூப்பிடு!" என்று பல்லைக் கடித்தார்.

"என்னப்பா விஷயம்?"

"கூப்பிடு சொல்கிறேன்!"

சத்யா பதறிப்போய், உள்ளேயிருந்து அம்மாவை அழைத்து வந்தாள்.

கையிலிருந்த கடிதத்தை அவள் முகத்தில் வீசியடித்தார் சாரங்கபாணி.

"பார்த்துக் கொள் நீயே! உன் சாமியார் மருமகன் இருக்கிறாரே, எனக்கு லாயர் நோட்டீஸ் விட்டிருக்கிறார்!

அவர் சொத்து ஏழரை லட்சத்தையும் ஒப்படைப்பதற்குப் பெரிய மனது பண்ணிப் பதினைந்து நாள் அவகாசம் தந்திருக்கிறார்களாம்! போதுமா?''

சாரங்கபாணி காரிலமர்ந்து 'ஹம்' என்று ஓர் உறுமலை வெளிப்படுத்தினார். கார் நகர்ந்து விட்டது.

போர்டிகோவிலிருந்து பறந்து, ரோஜாச் செடியருகே தத்திக் கொண்டிருக்கும் காகிதங்களைப் பொறுக்கி எடுக்கலானாள் சத்யா.

''என்னென்னவோ சொல்லிவிட்டுப் போகிறாரே! ஏண்டி சத்யா, அதைப் படித்துப் பார்த்துச் சொல்லேன். நிஜம் தானா அதெல்லாம்?'' என்று அவள் பின்னாலேயே வந்து கையைப் பிசைந்து கொண்டு நின்றாள் மீனலோசனி.

தெளிவில்லாமல் மிதந்து மிதந்து செல்லும் எழுத்துக்களைச் சிரமப்பட்டு நிறுத்திக்கொண்டு, அந்த டைப் செய்த காகிதத்தின்மீது கண்ணை ஓட்டினாள் சத்யா. ஆமாம். மனம் நம்ப மறுத்ததைக் கண் நம்பத்தான் வேண்டியிருந்தது.

''நிஜம்தான் அம்மா.''

''இப்படியெல்லாம் செய்யக்கூடியவரா அவர்?'' என்று தடுமாறிப் போனாள் மீனலோசனி. ''நம் குடும்பத்தின் கௌரவம் பறக்கிற மாதிரி, மானம் போகிற மாதிரி அடுத்தடுத்து நடக்கிறது பார்த்தாயா?''

சத்யாவின் எண்ணம் வேறெங்கேயோ நீந்திக் கொண்டிருந்தது. அம்மாவை நினைத்து மனத்துக்குள் சிரித்துக் கொண்டாள் அவள். 'குடும்பத்தின் மானம் போகிற மாதிரி இன்னொன்றுகூட நடந்திருக்கும் அம்மா! நல்ல வேளை, அது யாருக்கும் தெரியாமலே அமுங்கி விட்டது.'

என்று எண்ணிக் கொண்டபோது, ம...
தைப்பற்றி நன்றியுடன் ஞாபகம் ஏற்பட...

கிட்டத்தட்ட அதே நேரத்தில், மணி, ...
நோட்டுக்களை எடுத்து வழங்கிக் கொண்டி...
எதிரே நின்றிருந்த ஒரு ரௌடியிடம்.

பெற்றுக்கொண்ட கேடி, ''எஜமானுக்கு ராத்த...
ஜாலியா பொழுது போச்சுங்களா?'' என்று இளித்தான்.

''ஹம், ஹம்,'' என்று தலையாட்டி அவனை அனுப்பிய பிறகு மணி சிரித்துக் கொண்டான்.

'போடா மட்டி! நீ நினைக்கிற 'ஜாலி' தன்னாலே வரட்டும். அவளுடைய மதிப்பிலே உயர்ந்தேனே, அந்த ஒரு லாபம் போதும் இப்போதைக்கு!' என்று அவன் உள்ளம் எக்காளமிட்டது.

## பத்தொன்பது

''எனக்காக ஓர் உதவி செய்வாயா சத்யா?'' என்று டாக்டர் சம்பத் கேட்டார்.

ஐ. என். டி. வார்டிலிருந்து தப்பி அப்போதுதான் அவள் வெளியே வந்து கொண்டிருந்தாள். 'ஸ்கின்' பகுதி என்றால்தான் எல்லோரும் முணுமுணுப்பது வழக்கம். 'என்ன கண்றாவியை யெல்லாமோ தேய்த்துக் கழுவ வேண்டியிருக்கிறது!' என்று அடிவயிற்றைப் பிடித்துக் கொண்டு முகம் சுளிப்பார்கள் சத்யாவின் சிநேகிதிகள். ஆனால் சத்யாவுக்கு, இந்தக் 'காது மூக்கு தொண்டை' களைக் குடைவதுதான் பெரிய பயங்கரமாய்த் தோன்றும். இந்த வாரம் பூரா, மனத்துக்குப் பிடித்துச் சாப்பிட்டாள் என்பதில்லை; உடலுக்கு இதமாகத் தூங்கினாள் என்பது

...ருந்து விடுபட்டதும், விலங்கு அகற்றப் ...திரி அவள் சுதந்திர உல்லாசத்துடன் வந்து ...போதுதான் டாக்டர் சம்பத் கூப்பிட்டார்.

...ன சொல்லுங்கள், செய்கிறேன்,'' என்றாள் ...பூர்வமாக. டாக்டரின் கையிலே கட்டுக் கட்டாய்க் ...கிதங்கள் சில இருந்தன. ஏதாவது புதுப் பரீட்சைக்குப் படிக்கிறாரா என்ன?

டாக்டர் சம்பத் அவள் முகத்தை ஒரு வினாடி கூர்ந்து பார்த்துவிட்டு, ஒரு குறும்புச் சிரிப்புடன், ''கொண்டை போட்டுக் கொள்வதில் நீ ஸ்பெஷலிஸ்டாகத்தான் ஆகிவருகிறாய்,'' ...று பாராட்டினார். ''இந்தக் காம்பவுண்டுக்குள் உன் மாதிரி கொண்டை அலங்காரம் செய்து கொள்கிற ஆள் கிடையாது.''

''நன்றி டாக்டர்,'' என்று கேலிப் பணிவுடன் பதிலளித்தாள் சத்யா. ''ஆனால் இதே போலக் கொண்டை போட்டுக் கொள்கிற இன்னொரு பெண்மணியும் இந்தக் காம்பவுண்டுக்குள் இருக்கிறாள்.''

''ஓ! யார் அது?''

''ஈ வார்டிலே, எட்டாம் நம்பர் 'பெட்'டைப் போய்ப் பாருங்கள். அல்ஸர் பேஷண்ட்டாகப் படுத்திருக்கிறாளே ஒரு அம்மாள், இரண்டு மாதமாய். அவள் இப்படித்தான் தினம் தலையை முடிந்துகொள்கிறாள். வாரிப் பின்னி அலங்காரம் பண்ணிவிட ஆள் இல்லாமல், அவசரத்துக்கு அவள் அள்ளிச் செருகிக் கொள்வதைப் பார்த்து நானும் கற்றுக் கொண்டேன்!''

''அதிகப் பிரசங்கி!'' என்று சிரித்த டாக்டர், ''என்னோடு வா,'' என்று ஹவுஸ் சர்ஜன்களின் குவார்ட்டர்ஸுக்காக மாடிப் படியில் ஏறினார். மரப் படிகளில் தக் தக் என்று காலணி ஓசையிட அவரைப் பின்தொடர்ந்த



போது, டாக்டரின் காரியம் என்னவாயிருக்கும் என்று சத்யா ஊகிக்க முயன்றாள். பிடிபடவில்லை.

ஆஸ்பத்திரியின் மற்றப் பகுதிகளும், வெளித் தோற்றங்களும் எத்தனை மாறி என்ன? இங்கே மட்டும் இந்தப் பழைய பெஞ்சுகளுக்கும் கர்னாடகமான வட்ட வட்ட மேஜைகளுக்கும் விடுதலை கிடையாது. நைந்த கயிறுபோல மேலே தொங்கிய பழைய ஒயர்களில் புழுதியும் தூசியும் படிந்த கறுப்புப் பல்புகள் விழியை நோவதுபோல ஊமையாய்க் கிடந்தன.

'நல்லவேளை, தென்றல் ஒன்றாவது புதிதான பொருளாகக் கிடைக்கிறதே' என்று சத்யா எண்ணிக் கொண்டிருக்கையில், ''உட்கார்,'' என்று கூறி ஒரு நாற்காலியை அவளுக்கு இழுத்துப் போட்டு, கையிலிருந்த காகிதங்களை மேஜைமீது வைத்துப் பிரித்தார் டாக்டர் சம்பத்.

''மாகஸின் கட்டுரைகள்,'' என்று அவர் தெரிவித்த பிறகுதான், விதவிதமான கையெழுத்திலும் தட்டெழுத்திலுமிருந்த பிரதிகளைக் கண்டு ஏற்பட்டிருந்த குழப்பம் நீங்கியது.

''மாகஸின் கமிட்டியில் இரு என்றபோதுதான் மறுத்துவிட்டாய். இப்போது எனக்குத் தனிப்பட்ட முறையிலாவது உதவி செய்,'' என்றார் டாக்டர்.

கட்டுரைகளைப் புரட்டிய அவரை ஏறிட்டு நோக்கினாள் சத்யா. ''என்ன செய்ய வேண்டும்?''

''ஒன்றுமில்லை. எல்லாவற்றையும் மேலோடு பார்த்து, எதெது சுவாரஸ்யமாக இருக்கிறதோ அவைகளையெல்லாம் தனியாய் எடுத்து வை. நிச்சயமாய் நன்றாயிருக்கிறதென்பதை அச்சாபீசுக்கு அனுப்பிவிடு. பிரஸ் தெரியுமில்லையா? அட்டெண்டர் சண்முகத்திடம் கொடுத்தால் அவனே சேர்ப்பித்து விடுவான்.''

''அது சரி டாக்டர்...'' என்று திகைப்புடன் குறுக்கிட்டாள் சத்யா. ''பெரிய பெரிய பேராசிரியர்களும் டாக்டர்களும் எழுதிய கட்டுரைகளைப் பரிசீலனை செய்ய எனக்கென்ன தகுதி இருக்கிறது?''

''தகுதி தாராளமாய் இருக்கிறது. பயப்படாதே. ஆனால் பெரிய டாக்டர்களின் கட்டுரைகளை முன்பே நான் அனுப்பிவிட்டேன். இதில் இருப்பதெல்லாம் சுற்றுக்குட்டிகளின் படைப்புத்தான்.''

''அதாவது, என்னைப் போன்ற பேர்வழிகளுடையது?'' என்று சொல்லியவண்ணம் அந்தக் காகிதக் கட்டை ஒழுங்காக அடுக்கிக் கொள்ளலானாள் சத்யா. ''சரி, பார்த்துக் கொள்கிறேன், டாக்டர். நீங்கள் எங்கேயோ அவசரமாகப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள் போலிருக்கிறதே?''

''ஆமாம், ஒரு எஞ்ஜினியரைப் பார்க்க வேண்டும்,'' என்று தெரிவித்தபோது மர்மமான புன்னகையொன்று அவர் உதட்டில் அரும்புவதைக் கண்டாள் சத்யா.

அவள் முகம் மலர்ந்தது. ''எஞ்ஜினியர்?... ஓ, கங்கிராசுலேஷன்ஸ் டாக்டர்! நர்சிங் ஹோமுக்கு இடம் கிடைத்துவிட்டதென்று சொல்லுங்கள்?''

''கெட்டிக்காரிதான் நீ.''

''எங்கே டாக்டர்? நல்ல லொகாலிடியா?''

''அதெல்லாம் சர்ப்ரைஸாக வைத்திருக்கிறேன். தெரிகிறபோது, பாரேன்! ஸ்மெல்லிங் ஸால்ட் கைவசம் வைத்திரு!''

உற்சாகம் பொங்கும் நடையில் டாக்டர் சம்பத் இறங்கிப்போய் விட்டார். மாடியில் தான் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்தே பார்த்தபோது, மார்ச்சுவரியின் மறுபக்கமாக அவருடைய கார் செல்லுவதையும் சத்யா கண்டாள்.



இன்னதென்று கூறமுடியாத ஒரு மெல்லிய சங்கடம், ரவிக்கைக்குள் ஊர்ந்து கொண்டிருக்கும் எறும்புபோல, சில நிமிடங்களுக்கு அவள் உள்ளத்தில் அசைந்துகொண்டிருந்துவிட்டு மறைந்தது.

கட்டுரைகளை ஒவ்வொன்றாகப் படித்துக்கொண்டிருந்தபோது, பல ஹவுஸ் சர்ஜன்களும் மாணவர்களும் வருவதும் போவதுமாயிருந்தார்கள். அவளுக்குத் தெரிந்தவர்களும் சிலர் வந்து, ''அட! இங்கே ஏன் உட்கார்ந்திருக்கிறாய்?'' என்று விசாரித்துவிட்டுப் போனார்கள். விமலிகூட ஒருதரம் அவள் தோளுக்கு மேலாக எட்டிப் பார்த்துவிட்டு ''ஓ! கடைசியில் எம். எஸ். இதை உன் தலையிலே கட்டிவிட்டாரா? ரொம்ப நானாய் மாப்பிள்ளை தேடிக்கொண்டிருந்தார்! நீ அகப்பட்டாயாக்கும்?'' என்று பரிகாசம் பண்ணிவிட்டுச் சென்றாள்.

பிடித்தமான கட்டுரைகளை ஒரு புறமும், பிடிக்காதவற்றை (அல்லது, புரியாதவற்றை) மறுபுறமும் அடுக்கி வைத்துவிட்டு, கையை நெட்டி எடுத்தவாறு தலையை உயர்த்திச் சோம்பல் முறித்தபோது, ஆஸ்பத்திரியெங்கும் விளக்குகள் மின்னத் தொடங்கின.

உஷ்ணமான மூச்சுக்காற்று தன்மேல் படவே திடுக்கிட்டுத் திரும்பினாள் சத்யா.

அவள் தோழி ரேவதிதான்.

''இங்கேதான் அடைந்து கிடக்கிறாயா தினம் தினம்? நான் வேறென்னவோ நினைத்தேன்,'' என்றாள் அவள்.

''தினம் இல்லை. இன்றைக்கு எம். எஸ். ஒரு வேலை கொடுத்தார். தட்ட முடியவில்லை,'' என்றாள் சத்யா. ''அதிருக்கட்டும். வேறென்னவோ நினைத்தேன் என்றாயே. என்ன அது?''

ரேவதி போலியாய்ப் பிகு பண்ணிக் கொண்டாள். ''ஐயையோ! நீ ஏதாவது தப்பாய் அர்த்தம் பண்ணிக் கொண்டு சண்டைக்கு வருவாய்!''

''தப்பாய் அர்த்தம் பண்ணத்தான் போகிறேன். சண்டைக்கு வரத்தான் போகிறேன். ஆனால் நீ சொல்லித் தான் ஆகணும்.''

ரேவதி அவளருகே உட்கார்ந்தாள். ''... உன் அத்தான்... சாமியாராகிவிட்டாரே, அவரைத்தான் சொல்கிறேன்... அவருடைய மடத்துக்கு நிதி வசூல் பண்ணுவதற்காக வீடு வீடாய்ப் போகிறாராமே? அவருக்கு ஒத்தாசையாக நீயும் இன்னொரு திசையில் புறப்பட்டு விட்டாயோ என்று நினைத்தேன்!''

கேலியை விட்டுவிட்டு, தோழி சொன்ன தகவலில் ஆழ்ந்தாள் சத்யா. ''ரேவதி! யார் சொன்னார்கள் அவர் வீடு வீடாக வருவதாக?''

''ஏன்? என் பெரியப்பா ஒருத்தர் நுங்கம்பாக்கத்தில் இருக்கிறாரே, அவருடைய செகரட்டரி சொன்னாள்... ஏன் சத்யா, உன் அத்தான் பெரிய லட்சாதிபதிதானே? தன் சொத்தையே ஏன் உபயோகிக்கக்கூடாது அவர்? நாலுபேர் பரிகாசம் பண்ணுகிறமாதிரி பிச்சை எடுப்பானேன்? பார்த்தாயா? கோபம்தானே? இதற்குத்தான் நான் சொல்லமாட்டேன் என்றேன்!''

''கோபமில்லை... வீட்டுக்குப் போக வேண்டும்,'' என்ற சத்யா சிறிது நேரம் மௌனமாக நின்றாள்.

பிறகு, கட்டுரைக் கட்டுகளை அங்கேயே ஒரு மேஜைக்குள் போட்டு மூடிவிட்டு, வெளியே வந்தாள். போக்குவரத்துகளின் நெருக்கடியில் மூச்சுத் திணறிக் கொண்டிருந்த சாலையிலிருந்து வந்த வெப்பமான புழுதிக் காற்றுக்கூட அப்போதைய மனப்புழுக்கத்துக்குச் சந்தனம் பூசிக்கொண்ட மாதிரி உடம்புக்கு இதமளித்தது. எண்ணங்கள் ஒரு நிதானத்துக்கு வந்தன.



தன் நினைவில்லாமலே அவள் வெளியே வந்து, காரை எடுத்துக்கொண்டு புறப்பட்டாள்.

அவள் யூனிட்டைச் சேர்ந்த இன்னொரு ஹவுஸ் சர்ஜன் அவளைக் கேட்டுக்கருகே பார்த்து, ''நைட் ட்யூட்டி இருக்கிறதே? நினைவில்லை?'' என்று ஞாபகப் படுத்தினார்.

''இதோ வந்துவிடுகிறேன். என் அப்பாவைக் கொஞ்சம் அவசரமாகப் பார்க்க வேண்டியிருக்கிறது,'' என்று பதிலளித்துவிட்டு, பாடிகார்டு சாலை வழியாக மவுண்ட்ரோடை அடைந்து, அங்கிருந்து எழும்பூர் செல்லக் குறுக்குப் பாதையொன்றில் காரைச் செலுத்தினாள். இப்போதெல்லாம் அப்பா, வீடு திரும்ப நேரமாகிறது. முதலில் அங்கே பார்த்து விட்டு, இல்லையானால் வீட்டுக்குப் போய்க் கொள்ளலாம் என்று தீர்மானித்திருந்தாள்.

ரேவதியின் பேச்சைக் கேட்டதிலிருந்து அவளுக்குத் தாளவில்லை. ராதா அத்தான் எவர் வீட்டுப் படியெல்லாமோ மிதித்து, எதற்காகக் கையேந்தி நிற்பது?

தர்ம நியாயப்படி அவர் லட்சாதிபதியாக இருக்க வேண்டியவர். வானமாமலை மாமா ஏதோ கோபத்தில் உயில் எழுதினாரென்றால் அதை எழுத்துக்கெழுத்துக் கடைப்பிடிக்க வேண்டுமென்பது சாத்தியமா? அப்படியே கடைபிடிக்கட்டும். அத்தான் இப்போது என்ன கெட்டு விட்டார், அவரிடம் கொடுக்க மறுப்பதற்கு? வக்கீலையும் டாக்டரையும் போல, மடத்துத் தலைவர் என்பதும் ஒரு தொழில்; ஒரு வாழ்க்கை முறை. விவேகானந்த சுவாமிகளைப் போல அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் போய்ப் பிரசாரம் செய்ய அத்தான் ஆசைப்பட்டிருக்கலாம். அதற்குப் பணத்துக்கு எங்கே போவார், பாவம்!

பவானி மடத்துக்கு ஒரு சொத்தும் கிடையாதென்றுதானே எல்லாரும் சொல்லுகிறார்கள்?

அந்த மடத்தில் அவருக்கு ஏதோ கடமை இருக்கிறது. அதைப் பூர்த்தி செய்யத்தான் அத்தான் இப்படித் துடிக்கிறார்... தேவையான பணம் கிடைத்துவிட்டால், ஒரு வருட கெடுவுக்கு முன்னதாய்க்கூட மடத்தை விட்டு வெளிவந்து விடுவாரோ என்னவோ...

டி. வி. யின் அறையைத் தவிர வேறெங்கும் விளக்கு எரியவில்லை. மேலே பங்கா சுற்றிக் கொண்டிருப்பதை, புகைக் கண்ணாடியின் வெளிப்புறத்துச் சலனம் எடுத்துக் காட்டியது.

ஏதோவொரு உணர்ச்சி வேகத்தினால் இங்கே ஒரே மூச்சில் வந்தாயிற்று. இனி என்னவென்று அப்பாவிடம் வாதாடுவது?

யோசித்துக் கொண்டே வெராந்தாவில் அவள் நிற்கையில், கதவைத் திறந்துகொண்டு சாரங்கபாணியே வெளியே வந்துவிட்டார்.

''சத்யா! எப்போது வந்தாய் நீ? எதற்காக இங்கே நிற்கிறாய்?'' என்று வியப்புடன் கேட்டுக்கொண்டே, வெராந்தா ஓரத்துக்கு வந்து நின்று வெளியே இரு கைகளையும் நீட்டினார். டவாலியொருவன் உள்ளிருந்து ஒரு சிறு மண் கூஜாவை எடுத்து வந்து தண்ணீரை ஊற்ற, அவர் கைகளைக் கழுவிக் கொண்டார்.

''உங்களுக்குச் சாப்பாட்டு நேரமா அப்பா?'' என்றாள் சத்யா, பேச்சைத் தொடங்க ஒரு விஷயம் கிடைத்ததே என்ற மகிழ்ச்சியுடன். ''நான் ஒரு சினேகிதியைக் கொண்டு விடுவதற்காக எழும்பூர் வரை வந்தேன். அப்படியே உங்களையும் பார்க்கலாமென்று நுழைந்தேன். ஆஸ்பத்திரிக்குத் திரும்பவேண்டும்.''



''திரும்பலாம், திரும்பலாம். முதலில் உள்ளே வந்து, என்னோடு நாலு பூரி சாப்பிட்டுவிட்டுப் போ,'' என்றார் சாரங்கபாணி. ''உன் அம்மா பண்ணியிருக்கிற கிழங்கின் வாசனை இந்தக் கட்டிடத்தையே தூக்கி அடிக்கிறது.''

''நீங்கள் சாப்பிடுங்கள், அப்பா. நான் மெல்லப் பார்த்துக் கொள்கிறேன்,'' என்று சொல்லி அவரைப் பின்தொடர்ந்து அறைக்குள் சென்றாள் சத்யா. டவாலி வெளியிலேயே தங்கி விட்டான்.

சாரங்கபாணியின் மேஜைமீது எவர்சில்வர் பாத்திரங்கள் திறந்து வைக்கப்பட்டிருந்தன. தண்ணீரும் வைக்கப் பட்டிருந்தது.

''இரண்டே இரண்டு எடுத்துக்கொள். அந்த மெஸ் கோரத்தை எப்படித்தான் உள்ளே தள்ளுகிறீர்களோ நீங்களெல்லாம்! ஒருநாள் இல்லாவிட்டால் ஒரு நாள் நானே நேரில் வந்து அந்த மெஸ் சமையற்காரனை அரெஸ்ட் பண்ணப் போகிறேன்— பொதுஜன அமைதிக்குக் குந்தகம் விளைவித்ததாக!'' சாரங்கபாணி இன்று குஷியில் இருப்பது வெளிப்படையாகத் தெரிந்தது, அவருடைய ஹா ஹா சிரிப்பினால்.

பூரியில் கொஞ்சத்தை விண்டு வாயில் போட்டுக் கொண்டு இருக்கை கொள்ளாமல் தவித்தாள் சத்யா. எவ்வளவுக்கெவ்வளவு உல்லாசமாக இருக்கிறாரோ அவ்வளவு திடீர் ஆவேசமும் அப்பாவிடம் உதிப்பதுண்டு. என்ன தப்பான வார்த்தையை எப்போது சொன்னோம் என்று ஞாபகப்படுத்திக் கொள்ளுமுன்பே ஒரு பூகம்பம் நிகழ்ந்துவிடும்.

பார்வையை அறையைச் சுற்றிச் சுழற்றியபோது ஒரு நாற்காலி மீதிருந்த தினசரிப் பத்திரிகை கண்ணில் பட்டது. அதைப் புரட்டலானாள்.

''என்ன யோசனை?'' என்று சாரங்கபாணி கேட்டு விட்டார், அவள் முகத்திலே எழுதி ஒட்டியிருந்த குழப்பங்களைக் கவனித்து.

நாற்காலியை அவருக்கருகே சிறிது இழுத்து நகர்த்திக் கொண்டு சத்யா, தலையைத் தாழ்த்தியபடி, ''வந்து...... அத்தான் சமாசாரம்தான் அப்பா... அவர் உங்களுக்கு ஏதோ வக்கீல் நோட்டீஸ் விட்டிருப்பதாகச் சொன்னீர்களே... அவருடைய சொத்தை நாம் வைத்திருப்பானேன்?... நமக்கு அதிலே லாபமும் இல்லை, சந்தோஷமும் இல்லை. என்னவோ பண்ணிக்கொள்ளட்டும் என்று அவர் காசை அவர் முகத்தில் விட்டெறிந்து விடாலமென்றுதான் எனக்குத் தோன்றுகிறது. நான் சொன்னது தப்பானால் மன்னியுங்கள்,'' என்றாள்.

''ஹூம்!'' என்று சாரங்கபாணி பெருமூச்செறிந்தார்.

''நீயும் உன் அம்மாவும் அந்தப் பரதேசிக்குத்தான் பரிந்து பேசுவீர்கள்— நம்மை அவன் காலின் கீழே போட்டு மிதித்தால்கூட. ஆண்டியானாலும் அத்தான் என்று உறவு கொண்டாடுகிறாய் நீ! அந்தப் பாவிப்பயல்தான் எல்லாவற்றையும் மறந்து விட்டான்! அவன் எப்படியோ நாசமாகட்டும். இனிமேல் நீ ஒருத்தியாவது நன்றாயிருக்க வேண்டுமென்பதுதான் என் ஆசை. இனிமேல் எனக்கு அது ஒன்றுதான் லட்சியம்.''

தர்ம சங்கடத்துடன் சிரித்தாள் சத்யா. ''நான் என்னப்பா இப்போது நன்றாயில்லாமல் போய் விட்டேன்?''

''இதோ பார்,'' என்று மேஜையின் செருகு அறையை வெளியிழுத்து எதையோ எடுத்து மேஜைமீது போட்டார் சாரங்கபாணி.

பாங்க்கின் பாஸ் புத்தகமும், செக் புத்தகமும்தான் அவை.



சத்யா ஏதும் புரியாமல் தந்தையைப் பார்த்தாள்.

''உன் அத்தானின் மொத்த சொத்தும் இதிலே இருக்கிறது! வட்டி, முதல், பங்கு மார்க்கெட் லாபங்கள் எல்லாமாகச் சேர்ந்து, கிட்டத்தட்ட எட்டரை லட்ச ரூபாய் ரொக்கத்தை அப்படியே பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன்! காலணா இதிலே என் சொந்த உபயோகத்துக்கு எடுத்துக் கொண்டதில்லை. அந்தப் பரதேசியின் பணம்!''

சத்யாவின் கண்களில் உறுத்தல் ஏற்பட்டது. அப்பாவின் நேர்மையைப் பற்றித் தெரிந்து கொண்டதால் இமையோரங்களில் ஈரம் கசிந்து கொண்டிருந்தது.

''பின்னே கொடுத்து விடுங்களேன் அப்பா!'' என்றாள ஆர்வத்தோடு.

சாரங்கபாணி உடனே பதில் தரவில்லை. வெளியே போய்க் கையைக் கழுவிக் கொண்டு திரும்பினார். கைக் குட்டையால் வாயைத் துடைத்துக்கொண்டு, நாற்காலியில் நன்கு சாய்ந்து அமர்ந்து கொண்டார்.

''கொடுத்து விடலாம். ஆனால் எனக்கு ஓர் உத்தரவாதம் வேண்டும்,'' என்றார்.

சத்யா திகைத்தாள். ''என்ன உத்தரவாதம்?''

''உன் எதிர்காலத்தைப் பற்றிய உத்தரவாதம்தான். வேறென்ன?'' என்றார் சாரங்கபாணி. ''நீ நல்ல இடத்தில் கல்யாணம் செய்துகொண்டு நல்லபடியாய்க் குடித்தனம் செய்து, வாழ்க்கையை ஒழுங்காகவும் உறுதியாயும் அமைத்துக் கொள்ள வேண்டும்...''

''அதற்கும் இதற்கும்...''

''பொறுமையாய்க் கேள். நான் உனக்கு ஏற்றவன் என்று ஒரு வரனைப் பார்த்து வைத்திருப்பேன். அது உனக்குப் பிடிக்காமல் போகலாம். வேறே ஓர் இடத்தில்

உன் மனம் ஈடுபடலாம். அதை முடித்து வைப்பதில் எத்தனை கஷ்டம் இருக்குமோ என்னவோ! இந்தப் போலீஸ் உத்தியோகத்தில் நான் என்ன பிரமாதமாய்ச் சேர்த்திருக்கிறேன்? ஒரு மண்ணுமில்லை. இந்த எட்டரை லட்சம்தான் எனக்கு இருக்கிற ஒரே பலம். உனக்கு எதிர்காலம் பாதுகாப்பாய் அமைந்து விட்டது என்ற திருப்தி ஏற்படுகிறவரையில் இந்தப் பலத்தை நான் இழக்க முடியுமா? சொல் சத்யா?''

வளைத்து வளைத்து அவர் பேசிய வாக்கியங்களுக்கிடையிலிருந்து, அதில் மறைந்திருந்த நாசூக்கான மிரட்டலைக் கண்டுகொண்டு விட்டாள் சத்யா.

''புரிகிறது அப்பா,'' என்று சொன்ன வண்ணமே இருக்கையிலிருந்து எழுந்து கொண்டாள். ''அதாவது, நீங்கள் பார்த்து ஏற்பாடு செய்கிற நபரை நான் கல்யாணம் செய்து கொள்ள ஒப்புக் கொண்டால், நான் சிபாரிசு பண்ணுகிறபடி அத்தானுக்கு அவருடைய பணத்தை கொடுப்பேன் என்கிறீர்கள்? அவ்வளவுதானே?''

சாரங்கபாணி அயர்ந்துவிடவில்லை. புன்னகையுடன், ''நான் மென்மையாக எடுத்துச் சொன்னதை நீ முரட்டுத்தனமாக வியாக்கியானம் செய்கிறாய். மற்றபடி வித்தியாசம் எதுவுமில்லை,'' என்றார்.

அன்று இரவு ஆஸ்பத்திரியில் அவள் 'ட்யூட்டி' பார்த்தும் ஒன்றுதான், பார்க்காமலும் ஒன்றுதான். ஒவ்வொரு வேலையை ஒவ்வொருவரிடம் ஒப்படைத்துவிட்டு, சில வேலைகளைச் செய்யாமலே தட்டிக் கழித்துவிட்டு, கைகளில் சிரத்தைத் தாங்கிக்கொண்டு தனது மேஜையடியிலேயே உட்கார்ந்திருந்தாள் நெடுநேரம்.

வழக்கமாகத் தூக்கத்துக்குச் செலவழியும் இரண்டு மணி நேரத்தைக்கூட விழித்தபடியே வீணடித்துவிட்டு,



காலையில் வீட்டுக்குத் திரும்பியபோது அவள் கண்கள் கோவைப் பழமாய்ச் சிவந்திருந்தன.

பங்களாவுக்குள் கால் வைத்திருக்க மாட்டாள்.

''இல்லீங்க! இனிமே ஒழுங்காச் செய்றேனுங்க!'' என்று அப்துல் கதறுவது அவள் செவியில் மோதியது!

சாரங்கபாணியின் கார் டிரைவர், தோட்டத்தின் ஓரமாக நிறுத்தி வைத்திருந்த காருக்குத் தண்ணீர் ஊற்றிச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்தான். தண்ணீர் நிரம்பிய வாளியை ஒரு கையிலும், நனைந்த டஸ்டர் துணியை மறு கையிலும் வைத்துக்கொண்டு அவனுக்கு உதவி செய்து கொண்டிருந்த அப்துல்தான், ஏதோ தவறு செய்து விட்டு டிரைவரிடம் அடி வாங்கிக் கொண்டிருந்தான்.

''டிரைவர்!'' என்ற அதட்டலுடன் பாய்ந்து சென்ற சத்யா, சிறுவன் அப்துலைத் தன்பக்கம் இழுத்து அணைத்துக் கொண்டாள். ''நீ என்ன மனுஷனா, மாடா? இந்தக் குழந்தையை உனக்கு உதவிக்கு வைத்திருக்கிறேனென்று எண்ணமா? இவன்மீது இன்னொரு தரம் கை வைத்தாய் உன் வேலைக்கே சீட்டுக் கிழித்துவிடுவேன், ஜாக்கிரதை!''

அப்துலின் கையிலிருந்த அழுக்குத் துணியைப் பறித்து டிரைவரின் முகத்தில் வீசியடித்துவிட்டு, சிறுவனுடன் பங்களாவுக்குள் சென்றாள் சத்யா. ''ஏன் அப்துல், நீ பாட்டுக்குச் சாப்பிட்டுவிட்டு விளையாடுவதற்கென்ன? இவனுக்கெல்லாம் ஏன் வேலை செய்கிறாய்?'' என்றாள் பரிவோடு.

''செய்யலேன்னா திட்டறாங்க, அக்கா!'' என்றான் அப்துல் பரிதாபமாக. ''எல்லோரும்தான் எதினாச்சும் வேலை கொடுத்துக்கினே இருக்கிறாங்க. 'சும்மா தானே துன்றே? வேலை செய்யேன்'கறாங்க. பெரியம்மா ஒருத்தங்கதான் அக்கா என்னை வேலை வாங்கறதில்லை.

மைத்த எல்லோரும்...'' அப்துலின் குரல் வர வரத் தழுதழுத்துக் கொண்டே சென்று விம்மலில் முடிந்தது. அவனை அணைத்தபடி சிறிது நின்றாள் சத்யா.

இந்த குழந்தைக்கு ஏற்ற இடம் இதுவல்ல... வேறெங்கேயோ இவன் இருக்கலாம்...... இருக்க வேண்டும்... எங்கே இவனை விடலாம்? எங்கே?...

அவள் முகத்தில் ஒரு பிரகாசம் ஏற்பட்டது.

## இருபது

பெரும் ஜனக்கூட்டம் இரைச்சலிட்டுக் கொண்டு வருகிற மாதிரி, தொலை தூரத்திலிருந்து சப்தம் வரத் தொடங்கியது.

தினம் அந்த ஓசையைக் கேட்டுக் கண் விழிப்பது போலவே இன்றும் ராதானந்தர் துயில் நீங்கினார். கரங்களைக் குவித்து ஒரு நிமிடம் தியானம் செய்த பின்னர் கயிற்றுக் கட்டிலினின்றும் எழுந்து கொண்டார்.

அலைகளின் ஆரவாரத்தைத் தவிர, வேறொன்றும் இப்போது கேட்டது. விடிகாலை நாலு மணியின் புலர்ந்து புலராப் பொழுதில், அந்தத் தொப் தொப்பென்ற சப்தம் விசித்திரமாயும் புதிராயும் இருந்தது.

சற்று நிதானித்த பிறகு புரிந்தது. துணி துவைக்கும் சப்தம் அது. மடத்தின் பின்புறமிருந்த கிணற்றடியிலிருந்து வந்துகொண்டிருந்தது.

துறவிகளைப் போலவே மடத்தின் வேலையாட்களும் விடிகாலையில் எழுந்து கொள்வது வழக்கம்தான் என்றாலும், அவ்வளவு சுறுசுறுப்பாகத் துணிமணிகளைச் சுத்தம் செய்து கொண்டிருந்ததை அவர் கண்டதில்லை. அப்படியானால் ஒரே ஒருவர்தான்—



பிரார்த்தனை மண்டபத்தையும் சமையலறையையும் தாண்டிக் கொண்டு, பின்புறக் கதவைத் திறந்து எட்டிப் பார்த்தார் ராதானந்தர்.

இறங்கிக் கொண்டிருந்த நிலவின் ஒளியில், அவர் எதிர்பார்த்த மாதிரியே, சின்னச் சாமியார் தமது காவித் துணிகளை அலசிக் கொண்டிருப்பது தெரிந்தது.

ராதானந்தரைக் கண்டதும் துவைப்பதை நிறுத்திக் கொண்ட சின்னச் சாமியார், ''தங்களுக்கு ஏதாவது செய்ய வேண்டுமா?'' என்று கேட்டார்.

''வேண்டாம்,'' என்று பணிவோடு மறுத்தார் ராதானந்தர். ''துணி துவைக்கும் சத்தம் கேட்டுத்தான் எழுந்து வந்தேன்.''

சின்னச் சாமியாரின் முகம் கூம்பியது. ''கதவுகளையெல்லாம் சாத்தி வைத்திருந்தேனே? அப்படியும் தங்கள் நித்திரையைக் கெடுத்துவிட்டேன் போலிருக்கிறது. மன்னிக்க வேண்டும்.

''அதற்குச் சொல்லவில்லை,'' என்று இடைமறித்தார் ராதானந்தர். ''இவ்வளவு காலைப் பொழுதில் என் சிரமப்படுத்திக் கொள்கிறீர்கள் எனபதற்காகத்தான் கேட்டேன்.''

''இது உலர்ந்துதானே கட்டிக்கொள்ள வேண்டும்,'' என்று அவர் கூறியபிறகே, அவர் இடையில் இருப்பதும் ஈரத் துணிதான் என்பதை ராதானந்தர் கவனித்தார். ''இன்னொரு ஜோடி வாங்கி வைத்துக் கொள்ளலாமே?'' என்றார் வியப்புடன்.

சின்னச் சாமியார் மெல்லப் புன்னகை செய்த வண்ணம், ''என் தாய்வழிப் பெரிய பாட்டனார் ஒருவர் சன்னியாசியாக இருந்தார். எல்லாவற்றையும் வெறுத்து விட்ட துறவி. அவர் ஒருநாள் தன் கண்ணைத் தானே குத்திக் கொண்டுவிட்டார் என்று சொல்வார்கள்'' என்றார்.

''ஏன்?''

''உலகத்திலே பார்க்க வேண்டியவைகளையெல்லாம் பார்த்தாயிற்று, இனிமேல் கண் தேவையில்லை என்று அவர் சொன்னாராம். அவர் வழியில் வந்த நான், தேவைக்கு மேலே ஆடைகள் வைத்திருக்கலாமா?'' என்று கூறிவிட்டு, சின்னச் சாமியார், வாளியைக் கிணற்றின் தாம்புக் கயிற்றில் முடியலானார், தண்ணீர் சேந்துவதற்காக.

சற்று யோசித்தபடி நின்ற ராதானந்தர் அவரை அணுகி, ''வேலைக்காரர்கள் யாரிடமாவது இதை விடக் கூடாதா என்று கேட்டால், அதற்கும், 'அவர்கள் மடத்து வேலை செய்வதற்காக இருக்கிறார்கள், எனக்குப் பணிவிடை செய்வதற்காக இல்லை' என்று பதிலளிப்பீர்கள்'' என்றார்.

''சரியாய்ச் சொல்லிவிட்டீர்கள்.''

''தங்களைப்போல் என்னால் இருக்க முடியாது. ஒரு உபகாரம் வேண்டித்தான் நான் தங்களைத் தேடி வந்ததே.''

வாளியைத் தரையில் வைத்துவிட்டு, ''என்ன செய்ய வேண்டும்?'' என்று ஆர்வத்துடன் கேட்டார் சின்னச் சாமியார்.

''இரவு முதல் வயிற்று வலி. எங்கேயாவது ஒரு சோடா வாங்கி வந்தீர்களானால் தேவலை,'' என்று அவர்



கூறியதும் சின்னச் சாமியார் தயங்கினார். ''இப்போது ஐந்து மணிகூட ஆகவில்லையே! எந்தக் கடையும் திறந்திருக்காது என்று தோன்றுகிறது...... நான் வேண்டுமானால் சுடுதண்ணீர் வைத்துக் கஷாயம் போட்டுத் தருகிறேன்......''

ராதானந்தர் சிரித்தவண்ணம், ''உங்கள் வைத்தியத் திறமையில் எனக்கு நம்பிக்கை கிடையாது. சோடாவே போதும். லஸ் பக்கம் போய்ப் பாருங்கள். ஏதாவது கடை திறந்திருக்கும்,'' என்றார்.

''பார்க்கிறேன்,'' என்று சொல்லி, சின்னச் சாமியார் போன பிறகு சில நிமிடங்களுக்கு ராதானந்தர் அந்தக் கிணற்றடியிலேயே காத்திருந்தார். அவர் வெளியே போயாயிற்று என்று நிச்சயமாகத் தெரிந்த பின்னர், சரசரவென்று வாளியைக் கிணற்றில் இறக்கி, தண்ணீர் இழுத்தார்.

துவைக்கும் கல்லினருகே வைத்துக்கொண்டு, சின்னச் சாமியார் பாதியில் விட்டுச் சென்றிருந்த காவியுடைகளைத் தானே துவைக்கத் தொடங்கினார். பத்து நிமிடத்தில் அந்த வேலை முடிந்ததும், நன்றாய் அலசிப் பிழிந்து உதறினார். கிணற்றினருகேயிருந்த கயிற்றில் பிரித்து உலர்த்திய பின்பு சமையல்கட்டுக்குச் சென்றார்.

சமையல்காரன் எழுந்து வந்திருக்கவில்லை. அடுப்பைப் பற்ற வைத்து, தண்ணீர் வைத்தார். அது கொதிக்கும் நேரத்துக்குள், திரும்பக் கிணற்றடிக்குச் சென்று குளியலையும் காலைப் பிரார்த்தனைகளையும் முடித்துக் கொண்டு சமையலறைக்குத் திரும்பி, என்னென்ன கறிகாய்கள் இருக்கின்றன என்பதை ஆராய்ந்து கொண்டிருந்தபோது, சின்னச் சாமியார் மடத்துக்கு வந்து, பின் பக்கம் செல்வது தெரிந்தது.

குறும்புப் புன்னகையுடன் அவர் காத்திருந்தபோது சின்னச் சாமியார் தடதடவென்று ஓடிவந்தார்.

"இப்படியெல்லாம் எனக்குப் பாவம் சேரும்படி தாங்கள் செய்வது நியாயமா?" என்று பரிதாபமாகப் பதறினார்.

ராதானந்தரின் புன்சிரிப்புப் பெரியதாயிற்று. "எனக்குத் தாங்களோ, தங்களுக்கு நானோ அன்னியமில்லை; நமக்குத்தான் மற்றவர்கள் அன்னியம். அவர்கள் கையை எதிர்பார்க்கக் கூடாது என்பது நியாயம்தான். நீங்கள் வெளியே போயிருந்தபோது யோசனை செய்தேன். இந்த மடத்தின் அலுவல்களைக் கவனிக்க நாம் இருவருமே போதும் என்று தோன்றுகிறது."

"அதாவது?"

"தோட்டக்காரன், சமையற்காரன் என்றெல்லாம் தேவையில்லை. கணக்கு வழக்குகள் கடிதங்கள் முதலிய வேலைகள் வேண்டுமானால் நமக்குத் தெரியாது. ஆள் வேண்டும். மற்றபடி உடம்பால் செய்யக்கூடிய வேலைகளை நாமே செய்து கொள்ளலாமில்லையா? என்ன நினைக்கிறீர்கள்?"

"ஓ, செய்யலாமே!" என்று சின்னச் சாமியார் ஆமோதித்துவிட்டு, கறிகாய்களை நறுக்கலானார்.

"செலவுக்குச் செலவும் மிச்சம்," என்று ராதானந்தர் தொடர்ந்தார்: "கேவலம், ஒரு இத்தனையூண்டு ஆஸ்பத்திரியை நடத்த நம்மிடம் நிதி வசதியில்லாத போது, எடுபிடி வேலைகளுக்கு எதற்காக ஆள்?"

"ஆமாம்."

வெளிப்பக்கம் ஓசை கேட்டது. சமையல்காரன்தான் இரண்டு சாமியார்களும் சமையல் நடத்தும் காட்சியைக்



கண்டு பிரமித்துப் போனவனாக நிலைப்படியிலேயே சிலையாய் நின்றிருந்தான்.

சின்னச் சாமியார் ராதானந்தரை நோக்கினார்—உத்தரவு அவரிடமிருந்துதான் வரவேண்டும் என்பது போல்.

"தோட்டக்காரனையும், இன்னொரு வேலைக்காரன் இருக்கிறானே, அவன் பெயர் என்ன?— சாமியா— அவனையும் அழைத்துக் கொண்டு வா," என்றார் ராதானந்தர் ஒரு தீர்மானத்துடன்.

அவர் எப்படி விவகாரத்தை முடிக்கப் போகிறாரென்பதை அறிந்து கொள்ள ஆவல் இல்லாதவர்போல, சின்னச் சாமியார், நறுக்கிய காய்களைக் கழுவுவதும் சமையல் பாத்திரங்களைத் துலக்குவதுமாக இருந்தார்.

மூன்று ஊழியர்களும் அறை வாசலில் வந்து நின்றதும் ராதானந்தர் தொண்டையைச் செருமிக் கொண்டு, "மடத்தில் இனிமேல் உங்களுக்கு வேலை இல்லையப்பா. வேறே எங்கே வேண்டுமானாலும் போய்ச் சேர்ந்து கொள்ளலாம்," என்றார்.

மூன்று பேரும் ஒருவரையொருவர் பார்த்துத் திருதிருவென்று விழித்தார்கள்.

ராதானந்தர், "வேறிடத்தில் வேலை கிடைப்பது சிரமமென்று தோன்றினால் சொல்லுங்கள். தெரிந்த பெரிய மனிதர்களுக்குச் சிபாரிசுக் கடிதம் தருகிறேன்," என்றார்.

கிழவனான தோட்டக்காரன் முன் வந்து, "இல்லீங்க சாமி தோட்ட வேலைக்கும் சமையல் வேலைக்கும் எங்கேயும், எப்பவும் கிராக்கி இருக்குமுங்க. சாமிங்களை விட்டுட்டுப் போறமேன்னுதான்... மனசுக்குக் கஷ்டமாயிருக்குது," என்றான்.

நிம்மதி நிறைந்த சிரிப்புடன் ராதானந்தர், ''அதனாலென்ன? அடிக்கடி இங்கே வந்து போய்க் கொண்டிருங்கள்,'' என்று விடை கொடுத்தனுப்பிவிட்டு, சமையல் வேலையில் ஈடுபட்டார்.

ஆனால் சின்னச் சாமியார் தன் காரியங்களை நிறுத்திக் கொண்டு, அவர்கள் பின்னால் செல்வதைக் கண்டதும் ஆச்சரியம் ஏற்பட்டது. அவர்களொன்றும் கலங்கியதாகத் தெரியவில்லையே! இவர் ஏன் ஆறுதல் சொல்வதற்காகக் கூடவே போகிறார்?

ஆவலை அடக்கமாட்டாதவராக ராதானந்தர் எழுந்து சென்று, அறை வாசலில் நின்றவாறு கவனித்தார்.

தோட்டத்தினருகில் அந்த மூன்று வேலைக்காரர்களையும் நிற்கச் சொல்லியிருந்த சின்னச் சாமியார், மடத்தில் தமது அறைக்குச் சென்றுவிட்டுத் திரும்பினார். அவர் கையில் இப்போது பல நோட்டுக்கள் இருந்தன. அவற்றைப் பிரித்து ஒவ்வொருவரிடமும் வழங்கினார் அவர். அவர்கள் வேண்டாமென்று மரியாதையுடன் மறுப்பதையும், இவர் வற்புறுத்திக் கொடுப்பதையும் பார்த்துவிட்டு, ஒன்றும் புரிந்து கொள்ள முடியாதவராகத் திரும்பினார் ராதானந்தர்.

சற்றைக்கெல்லாம் சின்னச் சாமியாரும் வந்து அலுவல்களில் கலந்து கொண்டாரெனினும், வேலையாட்களுக்குப் பணம் கொடுத்ததுபற்றி எதுவுமே பேசவுமில்லை, தெரிவிக்கவுமில்லை.

ராதானந்தரின் திகைப்பு வளர்ந்ததைப் போலவே நேரமும் ஓடிக் கொண்டிருந்தது. அன்றைய வழக்கமான அலுவல்களைச் சின்னச் சாமியாருடன் சேர்ந்தேதான் செய்யவேண்டியிருந்தது. பணம் கொடுத்ததைப்பற்றிச் சின்னச் சாமியார் வாயே திறக்கவில்லை.

ராதானந்தருக்கு லேசான கோபம்கூட ஏற்பட்டது. எப்போதுமே ரொக்கம் சின்னச் சாமியாரின் கையிலே



தான் இருப்பது வழக்கமென்றாலும், கணக்குக்கூடத் தெரிவிக்க வேண்டியதில்லை என்று அவர் நினைப்பதை எப்படி மன்னிப்பது? மாலை நெருங்க நெருங்க, ராதானந்தரின் உரையாடல்கள் குறைந்து கொண்டே வந்தன. சின்னச் சாமியாருடன் பேசுவதைக் குறைத்துக் கொள்வதே தமது சினத்தை வெளிக்காட்ட வழி என்று தீர்மானித்துக் கொண்டார் போலும்.

மாலைப் பிரார்த்தனைக்கு அன்று அதிகக் கூட்டம் இருந்தது. வெள்ளிக்கிழமையும் ஏதோவொரு பண்டிகையும் சேர்ந்து கொண்டதே காரணம். பெண்கள் பகுதியின் முன் வரிசையில் மீனலோசனியம்மாள் அமர்ந்திருப்பதை ராதானந்தர் கண்டார். அவர்கள் இருவருக்கு மட்டுமே புரியக்கூடிய மென்மையான முறுவலொன்று பிறப்பதை அந்த மண்டபத்தில் யாரும் அறியவில்லை. பிரார்த்தனை முடிந்தபோது சுவாமி ராதானந்தரிடம் புஷ்பம் பெற்றுக் கொள்ள எல்லோரும் வந்தபோதுகூட, மீனலோசனி தன் முறை வரட்டுமெனக் காத்திருந்து பெற்றுக்கொண்டு சென்றாள். 'பூர்வாசிரமத்தில் அவர் சுவாமிகளின் அத்தை' என்று எவராவது கிசுகிசுப்பது காதில் விழும் போதுகூட, தனக்குச் சம்பந்தமில்லாததுபோல் செல்வதற்கு அவள் பழக்கப்பட்டிருந்தாள்.

பார்-அட்-லா மேனன் வந்திருந்தார். சாரங்கபாணி மீது வழக்கு தொடருவதைத் தவிர வேறு வழியில்லை என்று தெரிவித்துவிட்டு, பெருமையுடன் புன்னகை செய்தார்.

''இந்த வழக்கு, சென்னை நகரத்தையே உலுக்கப் போகிறது, பாருங்கள். அவரும் பெரிய போலீஸ் அதிகாரி. நீங்களும் ஒரு பெரிய மடத்தின் தலைவரான இளம் துறவி. மடத்துக்கு நல்ல பப்ளிஸிடி,'' என்று அவர் சொன்னபோது ராதானந்தரின் முகம் கறுத்தது.

சின்னச் சாமியாருக்கு விஷயம் லேசுபாசாகத் தெரியும். அவர் என்ன நினைக்கிறாரோ என்று தெரிந்து

கொள்வதற்காகத் திரும்பினார். அருகில் அவர் இருக்கவில்லை என்று தெரிந்தது. மேனனிடம் விடை பெற்றுக் கொண்டு அவசரமாக மடத்தின் உட்புறத்துக்கு விரைந்தார் ராதானந்தர்.

இரவுச் சமையலைத் தயாரிக்க வேண்டிய நேரம். தான் ஒன்றியாகவே செய்யலாம் என்று அவர் போயிருப்பாரோ என்பதுதான் ராதானந்தரின் கவலை. நல்ல வேளையாக அப்படி இல்லை. சின்னச் சாமியார், மடத்தின் அலுவலக அறையிலிருந்து வந்து கொண்டிருந்தவர், "இரவுச் சாப்பாடு எனக்கு வேண்டாம்," என்று தெரிவித்தார்.

"ஏன்?" என்று ராதானந்தர் திகைத்தார். "உடல் நலமில்லையா?"

"இன்று முதல் ஒரு வருட காலத்துக்கு இரவுச் சாப்பாடு வேண்டாமென்று திட்டம்," என்றார் சின்னச் சாமியார். "மடத்தின் பணத்தில் நூற்றைம்பது ரூபாய் போல எடுத்து உபயோகித்து விட்டேன். அதற்காக."

கேட்டதை நம்ப முடியாமல் அவரையே பார்த்துக் கொண்டு நின்றார் ராதானந்தர். கொஞ்சம் கொஞ்சமாக அவருக்குப் புரியவும் தொடங்கியது. "நூற்றைம்பது ரூபாயா?... தோட்டக்காரர்களுக்குத் தந்ததுதானே?"

"சுவாமிஜிக்குத் தெரியுமா?"

"பார்த்துக் கொண்டுதான் இருந்தேன்."

சின்னச் சாமியார் தலையைத் தாழ்த்திக்கொண்டார். ஆனால் அவர் முகத்தில் அவமானக் குறியோ குற்றம் செய்த குறுகுறுப்போ தென்படவில்லை. "இந்தக் காலத்திய சமாசாரங்கள் சிலது சுவாமிஜிக்குத் தெரிவதில்லை. அதனால் நானே செய்ய வேண்டியிருக்கிறது," என்று மெதுவாகக் கூறினார். "எந்த ஸ்தாபனத்திலும், எவரையும் வேலையை விட்டுத் திடீரென நிறுத்தினால்,



கையில் பணம் கொடுத்து நீக்குகிறார்கள். நம்முடைய ஆட்கள் கேட்கவில்லை என்பதற்காகக் கொடுக்காமலிருப்பதும் சரியென்று தோன்றவில்லை. அவர்களே கேட்காதவாறு மடத்துப் பணத்தை எடுத்து வழங்குவது எனக்கும் சரியில்லை...... ஆகவே அதை என் சொந்தச் செலவாகக் கணக்கிட்டுக் கொள்கிறேன். ஒரு வேளைச் சாப்பாடு, குறைந்தபட்சம் அரை ரூபாய் ஆகாதா? ஒரு வருஷம் விரதம் இருந்து நூற்றைம்பது ரூபாய் மிச்சப்படுத்தி விடுவேன்."

கடகடவென்று நகைக்காதிருக்க முடியவில்லை ராதானந்தரினால். "பரவாயில்லை. அந்தத் தொகையை மடத்தின் கணக்காகவே வைத்துக் கொள்ளலாம். தாங்கள் பட்டினி இருக்க வேண்டாம்," என்றார்.

சின்னச் சாமியாரின் பார்வையில் உறுதியும் கடுமையும் புலப்பட்டன. "எனக்கு நானே விதித்துக் கொள்ளும் விரதங்களில் சுவாமிஜி தயவு பண்ணிக் குறுக்கிடக் கூடாது," என்றார். அதை அவர் சொன்ன முறை, வேறு ஒரு பேச்சு மறுத்துக் கூறக்கூட முடியாமல் ராதானந்தரின் நாவைக் கட்டுப்படுத்தி விட்டது.

சின்னச் சாமியார் வெளியேறிவிடவில்லை. சமையலில் தன்னாலான உதவிகளனைத்தையும் செய்து முடித்து, தம் கையாலேயே ராதானந்தருக்கும் பரிமாறி, பிறகு பாத்திரங்களைக் கழுவி வைக்கும் வரையில் கூடவே இருந்துவிட்டுத்தான் நித்திரைக்குச் சென்றார்.

ஒரு டம்ளர் தண்ணீர் மட்டும் குடித்துவிட்டு அவர் கட்டாந்தரையில் படுத்துக்கொண்டபோது, முன்பு பல முறை ஏற்பட்டது போலவே இப்போதும் ராதானந்தரின் உள்ளத்தில் பொறாமை முளைத்தது. தன்னைத் தானே வருத்திக்கொள்வதிலும், பிறருக்கு உதவி செய்வதிலும், அவருக்கு உள்ள பற்றற்ற ஆர்வம் தனக்கு எப்போது

வரும். வந்தால் எத்தனை நாளைக்கு நிலைத்திருக்கும் என்று எங்கிய வண்ணமே துயிலில் ஆழ்ந்தார்.

அந்தச் சந்தர்ப்பம் பொழுது விடிந்ததுமே அவருக்குக் கிட்டியது.

சரியாகச் சொல்வதானால், ஒன்றல்ல, இரண்டு சந்தர்ப்பங்கள்.

மடத்தின் பின்புறத் தோட்டத்தில், காலைப் பூஜைக்காக அவர் மலர்கள் பறித்துக் கொண்டிருந்தார்.

உள்ளே திருவிளக்குகளை ஏற்றிக் கொண்டிருக்கிறார் என்று அவர் நினைத்திருந்த சின்னச் சாமியார் அருகில் வந்து நின்றதும், ''என்ன?'' என்று விசாரித்தார்.

''சுவாமிகளைத் தேடிக்கொண்டு ஒரு பெண் வந்து காத்திருக்கிறாள் வாசலில்.''

''பெண்ணா?''

''ஆமாம். முன்பொருமுறை சுவாமிகளின் பழைய உறவு என்று சொல்லிக்கொண்டு சில பேர் வந்திருந்தார்களே, அப்போதுகூட இந்தப் பெண்ணைப் பார்த்ததாக ஞாபகம்.''

''சத்யா!'' என்று உடனேயே சொல்லிவிட்டார் ராதானந்தர். பிறகுதான் அந்தப் பெயரை அத்தனை உரக்க வாய்விட்டு உச்சரித்திருக்க வேண்டாம் என்ற உணர்வு ஏற்பட்டது. ''கூட யாரேனும் வந்திருக்கிறார்களா?'' என்று கேட்டார், தனது பதற்றத்தைக் குறைத்துக் காட்ட விரும்பியவராக.

''ஒரு சின்னப்பையன் வந்திருக்கிறான்,'' என்று சின்னச் சாமியார் தெரிவித்தபோது ராதானந்தரின் முகத்தில் பலவித ஐயங்கள் தோன்றி மறைந்தன. சின்னப் பையன் யார் இருக்கிறார்கள் சாரங்கபாணியின் வீட்டில்? வேலைக்காரப் பையனோ? சத்யா என்ன காரியமாக வந்திருப்பாள்?



''பூஜை முடிந்ததும் பார்ப்பதாகச் சொல்லி ஹாலிலேயே உட்கார்த்தி வையுங்கள்,'' என்று முதலில் சொன்னவர், ''பூஜையில் கலந்து கொள்வதானாலும் கலந்து கொள்ளட்டும். உள்ளே வந்து இருக்கச் சொல்லுங்கள்,'' என்றார்.

ஆனால் மலர்களைப் பறித்துக்கொண்டு பூஜை மண்டபத்தினுள் அவர் பிரவேசித்தபோது சத்யாவைக் காணவில்லை. வாசல் பக்கத்து ஹாலில் அவளது முதுகுப்புறம் தெரிந்தது. கூட இருந்த சிறுவன் யாரென அப்போதும் தெரியவில்லை.

பூஜை, உரிய நேரத்துக்கு முன்னதாக முடிந்துவிடவில்லை என்றாலும், மன ஒருமையுடனோ நிறைவுடனோ செய்து முடித்த திருப்தி ராதானந்தருக்குக் கிட்டவில்லை.

ஹாலை நோக்கிப் புறப்பட்டவர், ''நீங்களும் வாருங்கள்,'' என்று சின்னச் சாமியாரைத் தம்முடன் அழைத்துக் கொண்டார்.

சத்யா எழுந்துகொண்டு, கை குவித்து வணக்கம் தெரிவித்தாள். ஆனால் அவள் முகத்தில் சொல்லற்கரிய வேதனையைத்தான் காண முடிந்ததே தவிர, இந்தச் சந்தர்ப்பத்தில் எவ்வித மகிழ்ச்சியும் தோன்றவில்லை.

''ஏது இத்தனை தூரம்?'' என்று வினவியவண்ணம் அவள் எதிரில் கால் மீது கால் போட்டுக்கொண்டு அமர்ந்த ராதானந்தர் கூர்ந்து அவளை நோக்கினார்.

''ஓர் உதவிக்காக வந்திருக்கிறேன்,'' என்றாள் சத்யா. பிறகு, அந்தச் சிறுவனை அவர் முன் நிறுத்தி, ''இவனை இந்த மடத்தில் சேர்த்துக்கொண்டு காப்பாற்ற வேண்டும்,'' என்றாள்.

ராதானந்தர் திடுக்கிட்டவராகச் சின்னச் சாமியாரின் முகத்தைப் பார்த்தார்.

சத்யாவுக்கு அவர் பதில் தருமுன்பே, அவள், ''இந்தப் பையன் ஒரு முஸ்லிம். அப்துல் என்று பெயர்,'' என்று தெரிவித்தாள்.

சின்னச் சாமியார் லேசாகத் தலையை அசைத்து, 'இது உங்கள் பிரச்சினை' என்று பார்வையினாலேயே பதிலளித்தார் ராதானந்தருக்கு.

KOLATHUR, CHENNAI 99 MADRAS 16888 3289699

## இருபத்தொன்று

ராதானந்தரை, அந்த ஒரு சில வினாடி யோசிக்கத் திணறாடே, முழுக்க முழுக்கவாக நோக்கினாள் சத்யா.

அப்பாவியான அம்மாளை வேண்டுமானால் இந்தத் துறவுக் கோலம் ஏமாற்றியிருக்கக்கூடுமே தவிர, தன்னை ஒரு நாளும் மயக்க முடியாது என்று நம்பியவளாக, அச்சமோ தயக்கமோ அரைகுறை மனமோ இல்லாமல், பூரணமான பார்வையோடு இமை கொட்டாது பார்த்தாள்.

மழையையும் வானவில்லையும் ஒரே சமயத்தில் கண்ட ஆகாயத்தைப்போல, அவள் உள்ளத்தை அளவற்ற விம்மிதமும், சொல்லற்கரிய சோகமும் ஒரே சமயத்தில் சூழ்ந்து கொண்டன.

எந்த இளமை ததும்பும் முகத்திலே முன்பு குறும்பு கூத்தாடுமோ அதிலே இன்று ஆழமான அமைதியைக் கண்டாள். சிற்பியின் விரலைப் போலச் செயலுக்குத் துடிக்கும் கரங்கள் இப்போது வாழ்வின் ரகசியத்தைப் பிடித்து விட்ட திருப்தியுடன் செயலற்றுக் கிடந்தன. புதுமைக்கும் புதுமையான நவீன உடைகளைத் தழுவியிருந்த மேனி, பழமைக்கும் பழமையான காவிக்குள் முடங்கிவிட்டது.



'எட்ட முடியாத சிகரத்துக்கு ஏறிவிட்டார் என் ராதா' என்று பூரிப்படைந்த கணத்திலேயே, இறங்க முடியாத பள்ளத்திலெல்லாம் இறங்கிக்கொண்டிருந்த தனது பழைய அத்தானைக் காணத் தவித்தது அவளுடைய பேதை நெஞ்சு. பிரளயமே நிகழ்ந்தாலும் பாதகமில்லை, இவரைக் குலுக்கி உலுக்கிக் கசக்கி, 'ராதா! யாருக்காக இந்தத் தண்டனை? எவரைச் சித்திரவதை செய்வதற்காக இந்தக் கோலம்?' என்று இருதயம் வெடிக்கக் கூவிவிட வேண்டும் போல ஆங்காரம் உதித்தது அவளுக்குள்ளே. மீனம்பாக்கத்தில் ஏற்பட்ட அந்தக் கோர நிகழ்ச்சிக்குப் பிறகு இரண்டொரு முறை சந்திப்பு நிகழ்ந்ததுண்டு என்றாலும், இந்த அண்மையிலும் நெருக்கத்திலும், முன்னெப்போதும் பெற்றிராத ஆதங்கத்தையும் துடிப்பையும் பெற்றாள். மன உறுதி படைத்த சத்யா என்ற பெண்ணாயிருந்த தன்மை நீங்கி, வேதனையின் கொடுமையைத் துடிக்கத் துடிக்க அனுபவிக்கும் தாண்டிற் புழுவானாள் அவள். ஆடைகளைக் களைகின்ற மாதிரி ஆசைகளை மறந்துவிடலாம் என்று நம்பியிருந்தது எத்தனை பேதைமை! கர்ணனின் கவசத்தைப் போல இந்தக் காதல் தன் உடம்போடும் உயிரோடும் ஒட்டிக் கொண்டல்லவா இருக்கிறது!

கோடி எண்ணங்கள் அவள் இதயத்தைக் குடைந்து கொண்டிருந்தபோது அவற்றை விரட்டுகிறமாதிரி ராதானந்தரின் குரல் கேட்டது.

''இது சன்னியாசிகள் வசிக்கிற மடம், சத்யா. அனாதை விடுதி என்று உனக்கு யார் சொன்னது?''

தான் வந்த காரியத்தை மனத்தில் நிலைநிறுத்தி மற்றச் சலனங்களை விரட்டியடித்தாள் சத்யா. ''யாரும் சொல்லவில்லை. நானாக நினைத்துக் கொண்டேன்'' என்று சத்யா பதிலளித்தாள்.

''என்னவென்று?''

''சோற்றுப் பசியினால் வாடுகிற வயிறுகளுக்கு உணவு அளித்துவிட்டு, பிறகுதான் ஞானப் பசியினால் தொய்கிற உள்ளங்களுக்குச் சோறிடுவீர்கள் என்று நினைத்தேன்.''

மனம் நிறையச் சிரித்த ராதானந்தர், சின்னச் சாமியாரின் பக்கம் திரும்பினார். ''பூர்வா— முன்னொரு காலத்திலே என் அத்தை மகனாயிருந்தவள். வைத்தியக் கல்லூரியில், மகா மேதைகளான டாக்டர்களைக்கூட அயர வைக்கிற பொருள் ஒன்று உண்டு. இவளுடைய நாக்கு.''

சிரிப்பது பாவம் என்ற கருத்துக்கொண்ட சின்னச்சாமியாருக்குக்கூட, முகத்திலே புன்னகையின் கீற்றுப் பிறந்தது.

ராதானந்தர் இருக்கையினின்று எழுந்துகொண்டார். சத்யாவின் கையைப் பற்றிக்கொண்டு, விவரம் தெரியாத உலகத்திடம் பீதியுற்றவன்போல, சுற்றி நிற்கும் மூன்று பெரியவர்களையும் மாறி மாறிப் பார்த்தவாறிருக்கும் சிறுவன்மீது அவரது நோக்கு விழுந்தது.

''நல்ல பையனாய்த்தான் தோன்றுகிறான், சந்தோஷமாய் வைத்துக் கொள்வேன். என்ன கஷ்டமென்றால்...''

''இது இந்து மடம். இவன் முஸ்லிம் பையன்,'' என்று குறுக்கிட்டாள் சத்யா.

''அதில்லை......''

''எதுவானாலும் நாமே வைத்துக்கொள்வோம்,'' என்று எவரும் எதிர்பாராத வகையில் சின்னச் சாமியார் முன்வந்து அப்துலைத் தன் பக்கம் அழைத்துக்கொண்டார்.

ராதானந்தரின் கேள்வியில் கேலியைக் காட்டிலும் கவலை அதிகமிருந்தது. ''ஏன், இன்னொரு வேளையும் சாப்பாட்டைத் துறந்துவிடுகிறேன் என்கிறீர்களா?''

''அப்படியெல்லாம் செய்யமாட்டேன், பயப்படாதீர்கள்,'' என்றார் சின்னச் சாமியார். ''அடையாறிலே ஒரு வங்காளி பாபு முன்பே சொல்லியிருக்கிறார். பன்னிரண்டு வயதுக்குட்பட்ட குழந்தையாயிருந்தால் அதன் செலவைத் தான் கொடுப்பதாக. ஏதோ நான் பார்த்துக் கொள்கிறேன். இந்தப் பையனிடம் எனக்குப் ப்ரியம் ஏற்பட்டு விட்டது. அப்புறம் என்ன?''

''பிரியமா? ஆபத்தான விஷயம். ஜாக்கிரதையாயிருங்கள்,'' என்று பரிகசித்த ராதானந்தர், விளங்கிக் கொள்ள முடியாதிருக்கும் சத்யாவிடம், ''வேறொன்றுமில்லை. மடத்தில் சிக்கனம் செய்யவேண்டுமென்று நேற்றுத்தான் சில வேலைக்காரர்களை நிறுத்தினோம். அவர்களுக்குப் பணம் கொடுத்தனுப்பிவிட்டு, இவர் ஒரு வேளை பட்டினி கிடக்கிறார்,'' என்றார்.

சத்யாவின் புருவங்கள் நெரிந்தன. ''அத்தனை சிரமமாயிருக்குமானால் நானே தருகிறேன் இவனுக்காக. நல்ல சூழ்நிலையில், சுதந்திரமாக இவன் வளரவேண்டும் என்பதற்காகத்தான் இங்கே அழைத்து வந்தேன்.''

''ஹரி! அக்காவுக்கு வணக்கம் சொல்லிவிட்டு என்னோடு வா,'' என்று சாமியார் சொன்னாரோ இல்லையோ ராதானந்தருக்கு திகைப்பும் சிரிப்பும் ஒருங்கே எழுந்தன.

''சரிதான்! மத மாற்றம் இவ்வளவு சீக்கிரத்திலேயே ஏற்பட்டுவிட்டதா!'' என்றார்.

''எனக்குக் கூப்பிடுவதற்குச் சௌகரியமாயிருக்குமென்று பெயர் மாற்றம் செய்தேன், வேறெதுவும் செய்து விடமாட்டேன்,'' என்று தைரியம் கூறிய சின்னச் சாமியார், ''வா ஹரி,'' என்று அழைத்தார். அப்துல், சத்யாவின் கழுத்தை இழுத்து வளைத்து முத்தமிட்டுவிட்டு, பணிவோடு அவர் பின்னால் சென்றான். தானொரு அனாதை என்ற உணர்வு உறைத்ததுமே குழந்தைகள் எத்தனை பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்கின்றன என்று நினைத்து வியந்தவளாக நின்றிருந்தாள் சத்யா.

"கொஞ்சநேரம் உள்ளே வாயேன்," என்று ராதானந்தர் கூறினார். "உன் அம்மா இங்கே வந்தால் லேசில் போவதில்லை. நீ, போனால் லேசில் வருவது இல்லை."

'வாய்ப்பு! விடாதே.' என்று உள்ளிருந்து வரும் குரலொன்றை, 'பைத்தியம்!' என்று ஒதுக்கித் தள்ளிய சத்யா, ராதானந்தரின் கண்களைப் படிக்க முயன்றாள். அதிலே கனிவு தெரிந்தது ஆனால் பூண்டிருந்த கோலத்துக்கு விரோதமான விகாரத்தைக் காணக் கூடவில்லை. அந்தத் தூய்மையொன்றே அவளை அதிக சக்தியுடன் ஈர்க்கும் கயிறாயிற்று.

"மடத்தைப் பார்த்ததில்லையே நீ?" என்று மீண்டும் ராதானந்தர் வினவினார்.

கைக்கடிகாரத்தைப் பார்த்து, "ஆஸ்பத்திரிக்கு நேரமாகிறது." என்று சொல்லியவண்ணமே அவரைப் பின் தொடர்ந்தாள் சத்யா. 'ஏன் சத்யா இந்த வறட்டுப் பொய்? இன்று ட்யூட்டி கிடையாது உனக்கு. விழு இந்தப் பொற்றாமரைத் திருவடிகளில். சகலத்தையும் உங்களுக்கு அர்ப்பணித்து விட்டேன் என்று புரண்டு கதறு. கல்லாக இறுகியிருக்கும் தாபங்களையெல்லாம் கரையவிட்டு இந்தப் புனித மண்ணிலே வெள்ளம் பாய்ச்சு. மனிதப் பிறவி துய்க்கின்ற காதலோ அல்லது தேவர்கள் துய்க்கின்ற ஆனந்தமோ ஏதோ ஒன்று இன்றே இங்கே இப்போதே உனக்குக் கிட்டும்!' என்று திரும்பத் திரும்ப வற்புறுத்தியது அந்த மாயக் குரல்

ஆயினும், எந்தச் சலனத்துக்கும் நெகிழ்ந்துவிடாமல், எந்தச் சபலத்துக்கும் அடிமையாகிவிடாமல், சம்பந்தமற்ற வெளியார் எவரோ அந்த மடத்தைப் பார்வையிட வந்தாற் போல, ராதானந்தர் சுட்டிக் காட்டுகின்ற இடங்களை நோக்கியவாறு, அவர் தருகின்ற விளக்கங்களைக் கேட்டவாறு நடந்து சென்றாள் அவள்.

"இது என் அறை."



சத்யா பார்த்தாள்.

சாதாரணமான, ஆனால் சுத்தமான கோரைப் பாயொன்று மூலையில் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. திறந்த அலமாரியில் இரண்டொரு புத்தகங்கள், ஒரு ஜபமாலை, திருநீற்றுச் சம்புடம் ஆகியன இருந்தன.

சொல்லாதிருக்க முடியவில்லை. சொல்லிவிட்டாள்: "காஷ்மீருக்கு நீங்கள் புறப்பட்டபோது மூன்று ஸூட் கேஸ்களும் ஒரு பெரிய ஹோல்டாலும் போதவில்லை."

மென்மையாகப் புன்னகை புரிந்தார் ராதானந்தர். "ஆனால், திரும்பியபோது அதோ அது போதுமானதாகி விட்டது."

அவர் சுட்டிக் காட்டியது, அறையின் மற்றோர் ஓரத்தில், ஒரு முக்காலியின்மீது வைக்கப்பட்டிருந்த ஒரு சிறு பிரம்புப் பெட்டியை. பூட்டு, பிடி முதலியவற்றுடன் ஓரங்களில் இளஞ் சிவப்புவண்ணம் தீட்டிய அந்த மாதிரிப் பெட்டிகளைக் காஷ்மீர் எம்போரியத்தில் சத்யா பார்த்திருக்கிறாள்.

"அதற்குள்ளே?" என்ற சத்யாவின் கேள்விக்கு விடை கிடைக்கவில்லை.

வேறோர் உலகத்தில், வேறோர் உடலுடன் சஞ்சரிக்கிறவர்போல ராதானந்தரின் தோற்றத்திலே ஒரு பரவசம் உண்டுருவுவதை அவள் பார்த்தாள். விழப்போகிற மாதிரி அவர் சரீரம் மெல்லத் தொய்வுறுவதைக் கவனித்தாள். சக்தி வாய்ந்த மந்திரங்களை உச்சரிப்பது போல அவருடைய உதடுகள் துடிப்பதைக் கண்ணுற்றாள்.

இமைக்கும் நேரம்தான். "வா, போகலாம்" என்று உறுதியுடன் கூறி வெளியேறி விட்டார் ராதானந்தர். நினைத்ததும் பார்த்ததும் பிரமைகளோ என்று சத்யா தன்னையே சந்தேகிக்கும் அளவுக்கு ராதானந்தர் தம்மை விரைவாக மாற்றிக் கொண்டு விட்டார்.

அந்தக் காஷ்மீரத்துப் பெட்டியைத் திகிலுடன் மீண்டு மொருமுறை பார்த்துவிட்டு அவளும் வெளிப்புறம் வந்தாள்.

சில வினாடிகளுக்கு முன்பு வரையில் இருந்த இளக்கம் இப்போது மாறி, தனக்கும் அவருக்குமிடையே மீண்டும் காவித் திரை விழுந்து விட்டதை அவளால் சூக்குமமாய் உணர முடிந்தது. தன்னை மறந்து படபடவெனத் தொடுக்கவிருந்த வினாக்களை அவள் நா மடித்து அமுக்கியது.

விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டுவிட அவசரப் பட்டவளாக, ''எல்லாவற்றையும் காட்டி விட்டீர்கள் என்று நினைக்கிறேன்.'' என்றாள்.

''ஆமாம். உன்னைப்போல ஒரு பணக்காரி கிடைக்கும் போது, எளிதாக விட்டுவிட மனம் வரவில்லை,'' என்று சொல்லி ராதானந்தர் நகைத்தார். ''எல்லாவற்றையும் துறந்த பிறகும் ஒன்றை மட்டும் விடமுடியவில்லை. பணத்தாசை.''

''ஆமாம். அப்பாவுக்கு வக்கில் நோட்டீஸ் விட்ட திலிருந்தே தெரிந்து கொண்டேன்.''

''ஏன் கூடாது?'' என்று அவர் சரேலென எதிர்த்து நின்றபோது, பூர்வாசிரமத்தில் அவரைக் காலோடு தலை ஆட்கொண்டிருந்த முரட்டுத்தனம் சிலிர்த்தெழுந்த மாதிரி தோன்றியது ''ஏன் கூடாது என்கிறேன், சத்யா. நீயே சொன்னாயல்லவா, வயிற்றுப் பசியைத் தீர்க்கக் கூடாதா முதலில் என்று? அந்த ஆசை எனக்கு உண்டு. நூறாயிரம் நோய்களில் உழலுகிறவர்களுக்குப் பிணி தீர்க்கும் பணியைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று என்னுள் மாளாத வெறியுண்டு. கீதையைப் பாராயணம் செய்யும்போதும், ஜெபமாலையை உருட்டுகிறபோதும் கண் முன்னே பிரத்தியட்சமாய்த் தெரிகின்ற எத்தனையோ சாபக்கேடுகளைத் தொலைத்து விரட்ட வேண்டுமென்று



நான் பொங்கிப் பொங்கி எழுந்து, அடங்கி அடங்கிச் சாவது உனக்கு எப்படித் தெரியும்? நான் நினைப்ப வற்றைச் சாதிக்க நிதி வேண்டும். பணம் வேண்டும். காசு வேண்டும். என்னுடையது என்று அகங்காரம் கொண்டாலும் பரவாயில்லை. இழந்திருக்கிற தனத்தை யெல்லாம் மீட்கத் தவிக்கிறேன். ஏன் கூடாது? நீயே சொல்லு.''

சத்யா நிலைகுலைந்து போனாள். இந்த ஆவேசத்தை அவளுடைய பழைய அத்தானிடம் கூடக் கண்டது கிடையாது. சர்ப்பத்தைச் சீண்டிவிட்டவன் பதறுகிற மாதிரி அவளும் பதறிப் போய், ''ஆமாம், ஆமாம். நீங்கள் கேட்டதில் தப்பில்லை,'' என்றாள் அவசரமாக.

ராதானந்தரின் முகத்தில் சாந்தம் தவழ்ந்தது. ''ரொம்ப நன்றி. நீ ஒருத்தியாவது என் கட்சியில் இருப்பதை அறிந்து ஆறுதலாயிருக்கிறது.''

''ஆனால்...''

''ஆனால்?''

சத்யா தயங்கித் தயங்கிச் சொன்னாள். பணத்துக் காகப் போராடுகிற அதே சமயம் உங்களுடைய கௌரவம் பாழாகாமலும் பார்த்துக் கொள்ள வேண்டாமா? யாரிடம் வேண்டுமானாலும் யாசகம் கேட்கப் புறப்படு கிறீர்கள், எவருடன் வேண்டுமானாலும் வழக்காடி நிற்கிறீர்கள் என்று தெரிகிறபோது, மற்றவர்களுக்குச் சிரிப்பாயிருக்கும். எனக்கு வேதனையாயிருக்கிறது.''

''வேறே வழி?''

''துணை இருப்பதை நம்பி, தைரியமாயும் பொறுமை யாயும் இருங்கள்.''

''அதாவது?'' அவளை உற்றுப்பார்த்தார் ராதா னந்தர். ''உன் அப்பாவுடன் போராடி நீயே வாங்கித் தருகிறேன் என்கிறாய்?''

"ஆமாம்," என்று உறுதி கொடுத்த மாத்திரத்திலேயே, இடிஇடியென்று விதி தன்னைப் பார்த்துச் சிரிக்கும் ஓசை அவள் செவிகளில் மோதியது. 'அடி பைத்தியக்காரி! இந்தக் காவித் துணியை மேலும் ஒரு சுற்றல்லவா சுற்றுகிறாய்? உன் கழுத்துக்கு இன்னொரு சுருக்கல்லவா போட்டுக் கொள்கிறாய்? ஆண்டிப்பண்டார வாழ்க்கையில் இவர் ஆழ அமிழ்வதற்கு, உனக்கும் இவருக்குமிடையேயுள்ள பள்ளத்தில் இன்னும் ஓரடி கூட அல்லவா தோண்டுகிறாய்?'

அந்த எச்சரிக்கைகளைத் தூர ஒதுக்கிய சத்யா, "நீங்கள் எந்த விதத்திலும் உங்கள் மதிப்பைக் குறைத்துக் கொள்ளாதீர்கள். நானாயிற்று உங்கள் பணம் உங்களிடம் சேரும்படி செய்வதற்கு!" என்று ஆணித்தரமாகச் சொல்லிவிட்டு, ஏறிட்டு அவரைப் பார்க்கும் துணிவுகூட அற்றவளாக வெகு வேகமாய் மடத்திலிருந்து புறப்பட்டாள்.

சாலையில் அவள் நடை விரைந்தபோது எதிரெதிராய் முட்டிக்கொண்டு எழுகின்ற எண்ணங்களை 'அப்புறம், அப்புறம்' என்று கூறி விரட்டினாள். 'இப்போதைக்கு அவருடைய வெறியையும் வேதனையையும் நீக்கலாம். நீக்கி, இந்த சத்யா என்றைக்கும் அவருடைய நன்மையை நாடுகிறவள்தான் என்று நிரூபிக்கலாம்...'

'நிரூபித்து?'

அவளால் பதில் காண முடியவில்லை.

'அப்புறம்?'

அவளுக்குத் தெரியவில்லை.

"இதோ வந்தேன் அப்பா!" என்று உள்பக்கம் நோக்கிக் குரல் கொடுத்தார் டாக்டர் சம்பத்.

அவருடன் பேசிக் கொண்டிருந்த எஞ்ஜினியர், "உங்கள் அப்பா உள்ளேயா இருக்கிறார்?" என்று



வியப்புடன் விசாரித்தார். இரட்டிப்பு வியப்பு அவருக்கு. முதலாவது, மாடியறையில் ஓய்வாகப் படுத்திருக்க வேண்டிய கிழவர், உள்ளே எங்கேயோ சமையற்கட்டிலிருந்து குரல் கொடுக்கிறாரே என்பது. இரண்டாவது, சென்னைப் பட்டணத்தின் அரை டஜன் பெரிய டாக்டர்களில் ஒருவரான டாக்டர் சம்பத், தகப்பனாரின் அழைப்புக்கு இவ்வளவு பணிவாயும் அவசரமாயும் எழுந்தோடுகிறாரே என்பது.

"மன்னியுங்கள். ஒரு நிமிடம்," என்று கூறி டாக்டர் சம்பத் உள்ளே விரைந்ததில் அவருக்குச் சிறிது வருத்தம்கூட ஏற்பட்டது. கிட்டத்தட்ட ஒரு லகாரம் செலவழித்துக் கட்டப்படவிருக்கும் நர்ஸிங் ஹோமைப் பற்றி திட்டங்களைக் காட்டிலும், தந்தையின் அழைப்பை அதிகம் பொருட்படுத்திவிட்டாரே இந்த டாக்டர் என்பது.

சமையலறையில் நுழைந்த டாக்டர் சம்பத், "என்னப்பா இது, இப்படிப் புகை? உங்களுக்கு உடம்புக்கு ஆகுமா? எத்தனை தரம் சொன்னாலும் கேட்கமாட்டேன் என்கிறீர்களே!" என்று அன்புடன் கடிந்துவிட்டு, கண்ணைக் கசக்கி, புகையைக் கையால் விலக்கிக்கொண்டு பார்த்தார்.

குமுட்டி அடுப்பினருகில் குந்தி உட்கார்ந்திருந்த மணவாளன், "இப்படிப் புகைகிறதென்றுதான் உன்னைக் கூப்பிட்டேன். அந்த விசிறி எங்கே இருக்கிறது பார்," என்றார்.

பனை விசிறியை எடுத்துக் கொடுத்த டாக்டர் சம்பத், "அழகுதான் போங்கள். ஸ்விட்சைத் தட்டினால் ஐந்து நிமிஷத்தில் சாப்பாடு. அதைக்கூட, செய்வதற்குத் தயாராய்க் கைகட்டி நிற்கிறான் சமையற்காரன். எதற்காகத்தான் இப்படி அவஸ்தைப்பட்டுக்கொண்டு ஒரு

ஆசாரமோ எனக்குப் புரியவில்லை,'' என்றார் படபட வென்று.

அடுப்பை விசிறிக்கொண்டே மணவாளன், ''சமையற் காரனையும் எலக்ட்ரிக் அடுப்பையும் சொல்கிறாயே தவிர, 'மருமகள் வந்துவிடுவாள் அப்பா' என்று உன் வாயில் வரமாட்டேன் என்கிறதே! அவள் வரட்டும். அதற்கப்புறம் நான் அடுப்படியில் உட்கார்ந்தால் கேள்,'' என்று சொன்னார்.

டாக்டர் சம்பத் காலால் தரையைக் கீறியவண்ணம் ''உங்கள் ஆசை சீக்கிரமே நிறைவேறும் அப்பா. கவலைப் படாதீர்கள்!'' என்றார்.

''அட!'' என்று ஆச்சரியத்துடன் மணவாளன் எம்பிக் குதிக்கவில்லை. ''ஹூம்!'' என்று ஒரு பெருமூச்சு விடுத்து உதட்டைப் பிதுக்கினார். ''அதெங்கே! நீதான் அந்தப் போலீஸ் கொம்பனின் பெண் கிடைக்காமற் போனதி லிருந்து, உலகத்திலே வேறு பெண்ணே கிடையாது என்கிற மாதிரி உதறிக்கொண்டிருக்கிறாயே!''

நாணம் கலந்த புன்சிரிப்புடன், ''அந்தப் போலீஸ் கொம்பனே மறுபடி இறங்கி வந்துகொண்டிருக்கிறார். அப்பா! அனேகமாய் அந்த இடத்திலேயே முடிந்துவிடும் பாருங்கள்,'' என்றார் டாக்டர் சம்பத்.

மணவாளனின் கண்களில் அவநம்பிக்கை அகல வில்லை.

மனைக்கட்டில் எஞ்ஜினியர் அளவு எடுத்துக் கொண்டிருந்தார்.

''மொத்த மனையையும் நர்ஸிங் ஹோமுக்கே அடைத்து விடாதீர்கள் ஓரமாகக் கொஞ்சம் காலி மனை இருப்பது நல்லது. நாளை, வீடும் கட்டிக் கொள்ளலாம்,'' என்றார் டாக்டர்.



''அடேயங்கப்பா!'' என்று மூக்கின்மேல் விரலை வைத்தார் எஞ்ஜினியர். ''எக்கச்சக்கமாய்த்தான் எதிர் காலத் திட்டம் வைத்திருக்கிறீர்கள். பெண் யார், டாக்டர்?''

சம்பத் பதிலளிப்பதற்குள், அவரது பார்வை சாலை யில் பாய்வதையும், மகிழ்ச்சி மிகுதியினால் கண்கள் மின்னுவதையும், அடுத்த கணம், ''சத்யா!'' என்று ஆர்வத்துடன் அழைத்தவாறு, விரைந்து செல்வதையும் கவனித்தார் எஞ்ஜினியர்.

'சரி, சரி. பெண் யாரென்று சொல்ல வேண்டாம்' என்று தமக்குள் எண்ணிக்கொண்டு புறப்பட்டார் அவர்.

சாலையின் குறுக்கே ஒரு இளநீர்க் கைவண்டி மெல்ல ஊர்ந்து, சிறிது தள்ளி நின்றது.

''எங்கே இந்த வெய்யில் வேளையில் புறப்பட்டாய்? ரொம்ப நேரமாய் அலைந்து கொண்டிருக்கிறாயா என்ன? இப்படித் துவண்டுவிட்டாயே?'' என்று சத்யாவின் படபடத்தார் சம்பத்.

''நானா? நோ நோ,'' என்று மறுத்தாள் சத்யா. ''எனக்கு, வீட்டுக்குப் பக்கம்தான் இந்த இடம். நீங்கள் தான் ரொம்பத் தூரம் வந்திருக்கிறீர்கள். இந்தக் காலனி யில் உறவுக்காரர்கள் யாராவது இருக்கிறார்களா?''

''இப்போதைக்கு இல்லை. கூடிய சீக்கிரத்தில் ஏற்பட லாம்...... இங்கேதான் நர்ஸிங் ஹோம் கட்டப் போகிறேன். ஆனால் யார் எனக்கு மனை விற்கப் போகிறார்களென்று உனக்குத் தெரியாதில்லையா?''

''தெரியாதே.''

''உன் அப்பாதான்.''

''அப்பாவா!...... இந்த இடத்தை......''

''ஆமாம், குண்டூசி குத்துகிற இடம்கூட இங்கே கிடைக்காது. உன் அப்பாதான் பெரிய மனதுடன் எனக்குத் தரச் சம்மதித்திருக்கிறார்.''

சத்யா பதிலளிக்கவில்லை.

''இந்தா!'' என்று கைதட்டி இளநீர் வண்டிக்காரனை அருகில் அழைத்தார் டாக்டர். ''இரண்டு இளநீர் வெட்டிக் கொடு.''

''எனக்கு வேண்டாம், டாக்டர்.''

''சும்மா வாங்கிக் கொள்,'' என்று தானே வண்டிக்காரனிடமிருந்து பெற்று அவளிடம் தந்தார் டாக்டர். ''நர்ஸிங் ஹோம் ஆரம்ப விழா பானம் என்று வைத்துக் கொள்ளக் கூடாதா?''

''அ...... ஆமாம்.'' இரண்டு கையிலுமாக அந்தப் பச்சைக்காயை ஏந்தியபடி இருந்தாளே தவிர, சத்யா குடிக்கவில்லை.

''டாக்டர், அப்பா...... வந்து...... அவர் என்ன நோக்கத்தோடு இந்த உதவியை உங்களுக்குச் செய்திருக்கிறார் என்று தெரியவில்லை.''

''ஏன் தெரியாமல்?'' என்று உடனே சொன்னார் சம்பத்.

''டாக்டர்......'' சத்யாவின் குரல் தழுதழுத்தது. ''உங்களிடம் ஒரு வேண்டுகோள் கேட்கலாமா?''

# இருபத்திரண்டு

இளநீர் வண்டிக்காரன் போய்விட்டான்.

அவன் இரண்டாக வெட்டித் தந்த தேங்காயை உள்ளங்கையில் ஏந்திக்கொண்டு யோசனையுடன் நின்றாள் சத்யா. வெட்டப்பட்ட இளநீரைப் போலவே தன்



உள்ளமும் இருகூறாய்ப் பிளவுண்டு கிடப்பதுபோல் அவளுக்குத் தோன்றியது. சில நிமிடங்களுக்கு முன்பு டாக்டரைக் கண்டபோது ஏற்பட்ட தெம்பும் ஆறுதலும் இப்போது சொல்லாமல் கொள்ளாமல் விடைபெற்றுக் கொண்டுவிட்ட மாதிரி ஆயிற்று. இன்னொரு நாள், வேறோர் நாள், அப்புறமொரு நாள் என்று ஒத்திப் போட்டுக் கொண்டே வந்த பிரச்சினை இன்று விசுவரூபமெடுத்து, கொட்டக் கொட்ட விழித்து, 'எனக்கொரு வழி சொல்,' என்று அச்சுறுத்தியது.

''என்ன யோசனை, சத்யா?'' என்று அவளை நெருங்கினாற்போல் நின்று கேட்டார் சம்பத்.

அவருடைய ஸ்லாக் சட்டையின் மடிப்புக் கலையாத முனைகள் காற்றில் மெல்லப் படபடத்து, 'பதில் சொல்லேன்' என்று தாங்களும் வாதுக்கழைத்தன.

''ஒன்றுமில்லை......'' என்று சத்யா தயங்கினாள்.

''ஏதோ வேண்டுகோள் என்று சொன்னாயே?........ ஓ, இதுவா?''

''எது?'' சத்யா திகைப்புடன் நிமிர்ந்து நோக்கினாள்.

அவள் கரத்திலிருந்த தேங்காயை எடுத்துக் கொண்டார் டாக்டர். ''தேங்காயைச் சுரண்டி எடுக்கத் தெரியவில்லை? அவ்வளவுதானே?''

சத்யாவின் இதழ்களில் நைந்த புன்னகையொன்று பிரிந்தது.

''ப்ரெயின் ஆபரேஷனில் மட்டுமில்லை. சுரண்டலில் கூட நான் எக்ஸ்பர்ட்டாக்கும். இதோ பார்.''

இளநீர் மூடியிலிருந்து ஒரு சில் பெயர்த்தெடுத்து, தேங்காயை வழிக்கலானார் டாக்டர். தான் சொல்ல நினைப்பதை அவர் எப்படி மேலும் மேலும் கடினமாக்குகிறார் என்று உணர உணர சத்யாவின் வேதனை

அதிகரித்தது. வழக்கமாக டாக்டரிடம் ஓர் அடக்கம், பெரும்போக்கான நிதானம், பேச்சிலே சிக்கனம் இவை தான் காணப்படும். இன்று அவையெல்லாம் ஒளிய, என்றைக்குமில்லாத உல்லாசமும் விளையாட்டும் கேலியும் கூத்தாடுகின்றன என்றால், தானும் இவரும் தனித்திருக்கும் இந்தச் சூழ்நிலைதான் காரணம் என்று அப்பட்டமாகத் தெரிகிறதே. 'உங்களுக்கும் எனக்கும் எவ்விதமான உறவும் இருக்கவில்லை. இனி இருக்கப்போவதும் இல்லை,' என்று சொல்லிவிட அவள் நா துடித்தபோதெல்லாம், ஏதோ ஒரு சக்தி— டாக்டரின் அன்பா, பண்பாடா, நம்பிக்கையுடன் காத்திருக்கும் பொறுமையா?— அவளைத் தடுத்தே வந்திருக்கிறது. 'என் வாழ்க்கையில் எதற்காகக் குறுக்கிட்டுக்கொண்டு நிற்கிறீர்கள்?' என்று அவர்மீது கோபமும் வந்தது. இன்னொரு சமயம், 'ராதா என்றொரு அத்தான் உனக்குப் பிறந்திராவிட்டால்— சத்யா, நிஜத்தைச் சொல்லு— இந்த டாக்டரைத்தானே நீ வரித்திருப்பாய்?' என்று அவள் மனமே அவளைக் குறுக்கு விசாரணை செய்தது.

''இப்போது சாப்பிடு,'' என்று டாக்டர் நீட்டிய தேங்காய், சத்யாவின் சிந்தனையைக் கலைத்தது. டாக்டரின் தூய்மையான அன்பைப்போல வெள்ளை வெளேரென்றும், தனது பலவீனமான உள்ளத்தைப் போலத் தளர்ந்து தளும்புவதாயுமிருந்த தேங்காயை உற்றுப் பார்த்தவாறு சில வினாடிகள் இருந்தாள்.

''சர்க்கரை சேர்த்துக்கொண்டால் பிரமாதமாயிருக்கும். நான் வேணுமானால் எங்காவது போய் வாங்கி வரட்டுமா, சத்யா?''

''நோ, நோ, வேண்டாம் டாக்டர்,'' என்று தடுத்தாள் சத்யா.

''மாகஸினுக்கு நீ தேர்ந்தெடுத்துக் கொடுத்த கட்டுரைகளையெல்லாம் இன்றைக்குத்தான் படித்தேன். நீ



மட்டும் எம்.பி.பி.எஸ்.ஸுக்குப் படிக்கவில்லையென்றால், ஏதாவது பெரிய பத்திரிக்கைக்கு ஆசிரியையாகப் போகலாம் என்பேன்,'' என்றார் டாக்டர்.

தன்னை மீறி சத்யா கேட்டுவிட்டாள்: ''ஏது, பேச்சிலே ரேஷன் வைத்துக் கொள்வதில்லை என்று இன்றைக்கு விரதம் எடுத்துக்கொண்டு விட்டீர்கள் போலிருக்கிறதே?''

''உண்மையாகப் பாராட்டினேன்,'' என்றார் டாக்டர் சிறிது மனத்தாங்கலுடன். ''அடுத்த வருஷம் உன்னைப் போல யார் எனக்கு உதவி செய்யப்போகிறார்கள்?''

''சத்யாவோடு மெடிகல் காலேஜ் அஸ்தமனமாகி விடாது, டாக்டர்.''

''காலேஜுக்கு அஸ்தமனமோ இல்லையோ, எனக்கு நிச்சயமாய் மூட்டம் போட்டுவிடும்,'' என்றார் டாக்டர் சம்பத். ''இன்னும் ஒரு மாதம்தானே இருக்கிறது, சத்யா? நீ என்ன திட்டமிட்டிருக்கிறாய்?''

சத்யா திடுக்கிட்டாள். ''எதற்கு, டாக்டர்?''

''எதிர்காலத்தைப் பற்றித்தான் கேட்கிறேன். அனேகமாய் அடுத்த மாதம் உன் ஹவுஸ் சர்ஜன் கோர்ஸ் முடிந்துவிடும். அப்புறம் என்ன பண்ணப்போகிறாய்?''

இளநீரைத் தூர எறிந்துவிட்டு, டம்பப் பையிலிருந்த கைக்குட்டையால் வாயை ஒற்றிக் கொண்டாள் சத்யா. ''இன்னும் முடிவு பண்ணவில்லை, டாக்டர்.''

''பண்ணாமலிருக்கலாமா?''

சத்யா பேசாதிருந்தாள்.

''நம்ம காலேஜிலும் ஹாஸ்பிடலிலும் தொடர்ந்து இருக்க ஆசையுண்டானால் சொல்லு. இப்போது பிடித்தே ஏற்பாடு பண்ணிப் பார்க்கிறேன். இல்லை, வேறு ஆஸ்பத்திரியில் சேர இஷ்டமுண்டானாலும் சொல்லு

சுதந்திரமாகப் பிராக்டிஸ் பண்ணுவதுதான் மேல் என்று உனக்குத் தோன்றுகிறதோ ஒரு வேளை?''

''இல்லை டாக்டர். எனக்கு எந்தவிதமான அபிப்பிராயமும் ஏற்படவில்லை,'' என்று சத்யா குறுக்கிட்டாள்.

''பேஷ்! அப்படியானால் என் மனுவைப் போட்டு விடுகிறேன். இதுதான் சந்தர்ப்பம்,'' என்றார் டாக்டர் சம்பத் உற்சாகத்துடன்.

அவரைக் குழப்பத்துடன் நோக்கினாள் சத்யா. ''உங்கள் மனுவா? எதற்கு டாக்டர்?''

''இந்த ஆறு வருஷப் படிப்பில் நீ எவ்வளவோ நர்ஸிங் ஹோம்களைப் பார்த்திருப்பாயே? எது மிகவும் வெற்றிகரமாக நடக்கிறது சொல், பார்க்கலாம்.''— இடுப்பில் கை வைத்துக்கொண்டு கழுத்தைச் சாய்த்து அவளைப் பார்த்தவாறு கேட்டார், டாக்டர்.

நிலத்தைக் கீறிக்கொண்டு நின்றிருந்தாள் சத்யா. சிறிய இடத்தில் ஒரு வெடிப்பு ஏற்பட்டு, சரேலென அதற்குள் தான் மறைந்து போய்விட்டால், ஆன்மாவையே குடைந்தெடுக்கும் இந்த வேதனைக்கும் ஒரு முடிவு ஏற்பட்டுவிடும்......

''தெரியவில்லை?''

''தெரியவில்லை, டாக்டர்.''

''நான் சொல்லட்டுமா?''

''சொல்லுங்கள்.''

''ஓர் ஆண் டாக்டரும் ஒரு பெண் டாக்டரும் தலைமைப் பொறுப்பு ஏற்றுக் கொண்டு நடத்துகிறார்கள் பார். அப்படிப்பட்ட நர்ஸிங் ஹோம், பிறக்கும்போதே சிரஞ்சீவி வரம் வாங்கிக்கொண்டு பிறக்கிறது என்பேன்.''



சத்யாவின் விழிமுனைகளில் நீர் ததும்பிக்கொண்டிருந்தது. அவளது ரோஜா அதரங்கள் மெல்லத் துடிக்கத் தொடங்கின.

''நீ ஒப்புக்கொள்ளவில்லை?''

''ஒப்புக்கொள்கிறேன் டாக்டர். மனமார ஒப்புக் கொள்கிறேன்,'' என்று சொல்லிவிட்டு, நாணமில்லாமல் அவர் எதிரிலேயே கண்களைத் துடைத்துக் கொண்டாள் சத்யா.

சம்பத்தின் முகத்தில் இருள் கவிந்தது. ''ஸாரி, சத்யா. வெரி ஸாரி. வா, போகலாம். நான் சந்தர்ப்பம் தெரியாமல் பேசிவிட்டேன்,'' என்றார் பதற்றமான குரலில்.

''இல்லை, இல்லை. இது சரியான சந்தர்ப்பம்தான். நானும் பேச வேண்டுமென்றுதான் நினைத்திருந்தேன்,'' என்று வேகமாகக் கூறினாள் சத்யா. ''அப்பாவிடம் இந்த மனையை வாங்கியிருப்பதாக நீங்கள் சொன்னபோதே, தீர்மானமாக ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்று நான் எண்ணிக் கொண்டேன். நீங்கள் அவருக்கு இப்போது கடமைப்பட்டுவிட்டதால்......''

''சத்யா!'' என்று ரோசத்துடன் இடைமறித்தார் டாக்டர். ''தயவு பண்ணி என் மனத்தைப் புண்படுத்துகிற மாதிரி எதுவும் பேசாதே. நான் அவருக்கு எந்த வகையிலும் கடமைப்பட்டிருக்கவில்லை. இந்த மனையை இன்னும் வாங்கவுமில்லை. இனிமேல்தான் ரெஜிஸ்டிரேஷன் நடைபெறவிருக்கிறது. உனக்கு இது பிடிக்கவில்லையென்றால், இந்த நிமிஷமே இந்த இடத்தைக் கை கழுவிவிட்டு வேறிடம் பார்த்துக் கொள்கிறேன்.''

''அவ்வளவு தூரம் செல்ல வேண்டாம்,'' என்றாள் சத்யா. ''அதற்கும் குறைவான உதவியைத்தான் உங்களிடம் எதிர்பார்க்கிறேன்.''

''சொல்,'' என்றார் டாக்டர்.

சத்யாவின் கண்கள் உயிரற்றவையாக டாக்டரை ஊடுருவிச் சென்றன.

''டாக்டர், ராதா அத்தானைப்பற்றி உங்களுக்கு எல்லாம் தெரிந்திருக்கும்,'' என்றாள் மெதுவாக.

''நன்றாய்த் தெரியும்,'' என்றார் டாக்டர் சம்பத். ''எனக்கு ஒரு போட்டி இருக்கிறாரென்றுதான் நான் ஒதுங்கியே இருந்தேன் இத்தனை நாளும். அந்தப் போட்டி விலகி விட்டது என்று தெரிந்ததால்தான் மறுபடி நான்... நான்... என் கனவுகளைப் புதுப்பித்துக் கொண்டேன்.''

பெருமூச்சு விட்டாள் சத்யா. ''போட்டி விலகி விட்டது என்று எல்லோரும் நினைக்கிறார்கள், நம்புகிறார்கள். நான் அப்படி நினைக்க முடியாததுதான் என் கஷ்டங்களுக்கெல்லாம் காரணம்.''

தாழ்ந்த கிளையொன்றைப் படக்கென்று முறித்துக் கொண்டிருந்தார் டாக்டர்.

சத்யா சொன்னாள்: ''ராதா அத்தான் இன்னும் முழுச் சன்னியாசியாகி விடவில்லை. ஒரு வருட காலம் அவர் வைராக்கியமாக இருந்த பிறகுதான் தீட்சை கொடுப்பார்கள். அந்த ஒரு வருடத்தில் இரண்டு மாதம் ஓடிவிட்டது. பாலத்தினடியில் ஓடுகிற தண்ணீரைப் பார்த்துக் கொண்டிருக்கும் குழந்தை மாதிரி, நானும், காலம் நழுவுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்து விட்டேன் இத்தனை நாளாக. மிச்சமுள்ள பத்து மாதத்தை அப்படி விடக்கூடாது என்று இப்போது தீர்மானமாயிருக்கிறேன்.''

''இரு சத்யா, இரு. நான் அதுவரை காத்திருப்பதில் உனக்கு ஆட்சேபமில்லையே?''

''என்னைப் போலவே தாங்களும் வாழ்க்கையை வீணடித்துக் கொள்ளவில்லை என்று தோன்றினால் சரி,'' என்றாள் சத்யா.



''சத்யா,'' என்று உணர்ச்சியை அடக்கிய குரலில் மதுரமாக அழைத்தார் டாக்டர். ''மனத்துக்கினியவளுக்காகக் காத்திருக்கிற ஆனந்தம் எத்தனை அற்புதமானது என்று எனக்குத் தெரியும்.''

''டாக்டர்! மனத்துக்கினியவரைத் திரும்பப் பெறுவதற்காகப் போராடுகிற இன்பமும் அதேபோல் மகத்தானது என்று எனக்குத் தோன்றுகிறது.''

''செய், சத்யா.''

''என் போராட்டத்துக்கு உங்களையே துணைக்கு அழைத்தால்?''

''அழை.''

நெகிழ்ச்சியும் துயரமும் போட்டியிட்டுக்கொண்டு கலந்தன சத்யாவின் பேச்சில்.

''என்ன உரிமையுடன் உங்களை இவ்வளவு தூரம் துன்புறுத்துகிறேன் என்று எனக்கே தெரியவில்லை. ஆனால் உடனடியாக ராதா அத்தானுக்கு உதவி செய்வது உங்கள் கையில்தான் இருக்கிறது டாக்டர்.''

''என் கையிலா? நான் என்ன செய்யவேண்டும் என்கிறாய்?''

''அவருக்குச் சேர வேண்டிய பணம் என் அப்பாவிடம் சிக்கியிருக்கிறது. அந்தப் பணம் மட்டும் கிடைத்து விட்டால் அத்தான் பல சிக்கலிலிருந்து விடுபட்டு விடுவார் என்று நான் நம்பிக் கொண்டிருக்கிறேன்......''

''உன் அப்பா கொடுக்க மறுக்கிறாரா அதை?''

சத்யாவின் குரல் தாழ்ந்தது. ''மறுக்கவில்லை...... ஆனால் என்னிடம் நிபந்தனை போடுகிறார்...... அத்தானை மறந்து விடும்படி...... அப்பாவுக்குப் பிடித்தமான......''

''புரிகிறது,'' என்று அவளுடைய சங்கடத்தைக் குறைத்தார் டாக்டர் சம்பத். ''அவர் இஷ்டப்படி

என்னை மணந்தாயானால் உன் அத்தானுக்கு அவருடைய சொத்து கிடைத்துவிடும். அப்படித்தானே?''

''ஆமாம் டாக்டர்,'' என்றாள் சத்யா நிம்மதியுடன். ஆனால் அடுத்த கோரிக்கையை எழுப்புமுன் மீண்டும் தயக்கம் அவள் நெஞ்சை அடைத்தது. ''எப்படியாவது அதை அத்தானுக்கு வாங்கித் தந்துவிட வேண்டுமென்று இருக்கிறேன்...... அதுவரையில்......?''

''அதுவரையில்......?''

''நான்...... நான்......''

''என்னைக் கல்யாணம் செய்து கொள்ள இறங்கி வருகிற மாதிரி அப்பாவிடம் நடிக்கப் போகிறாய்?''

''ஆமாம் டாக்டர்.''

''என்னையும் அதே பாசாங்கைச் செய்து வரும்படி சொல்கிறாய்?''

''ஆமாம் டாக்டர்,'' என்று ஆமோதிக்க சத்யாவினால் முடியவில்லை. நேர்மையையும் வாய்மையையும் பெரிதாக மதிப்பவரான டாக்டருக்கு, தன் கோரிக்கை எவ்வளவு பெரிய சோதனையைத் தரும் என்று அவளால் உணர முடிந்தது.

''செய்கிறேன் சத்யா,'' என்று அவராகவே வாக்குத் தந்தபோது, உணர்ச்சி மிகுதியினால் சத்யாவின் உடல் தள்ளாடியது. உள்ளம் அனல் பட்ட மெழுகுபோல் உருகிற்று. செல்வத்தையும் சுகத்தையும் அன்புக்குரியவர்களையும் தியாகம் செய்வதைக் காட்டிலும், டாக்டர் சம்பத்தைப் போன்றவர்களுக்கு ஒரு கொள்கையைத் தியாகம் செய்வது எவ்வளவு பெரிது என்று அவளுக்குத் தெரியும்.

''டாக்டர்......'' என்று ஏதோ பேச முற்பட்டவளை சம்பத் நிறுத்தினார். சத்யா, ஒன்றே ஒன்று மட்டும் கேட்கிறேன். விருப்பமுண்டானால் பதில் சொல்.''



''என்ன டாக்டர்?''

''இன்னும் ஒரு வருஷ காலம் பொறுக்கிறேன். உன் அத்தானை நீ அடைவதற்கு என்னால் செய்யக்கூடிய உதவிகளைத் தட்டாமல் செய்கிறேன். ஆனால் அதற்கப்புறம்......''

''அப்புறம்?''

''உனக்கு வெற்றி கிடைக்கவில்லை என்று வைத்துக்கொள். அத்தானைத் திருப்ப முடியாமலே போய்விட்டது என்று......''

''கற்பனை செய்யவும் பயமாயிருக்கிறது, டாக்டர்.''

''பிரத்தியட்சமாயும் தெளிவாயும் நீ இருக்கவேண்டுமென்பதற்காகக் கேட்கிறேன். அதற்கப்புறமாவது நான் ஒருவன் இருப்பதை நினைவில் கொள்வாயா?''

கண்ணீர் பார்வையை மறைக்க அவரை எறிட்டு நோக்கினாள் சத்யா. நான் கேட்காமலே நீங்கள் வாக்களித்தீர்கள். நீங்கள் வாய்விட்டுக் கேட்பதற்குக் கூட பதில் சொல்லத் தெரியாதவளாக நான் இருக்கிறேன், டாக்டர். எனக்கு ஒரே குழப்பமாயிருக்கிறது நீண்ட ரஸ்தாவின் ஒரு கோடியிலே நிற்பவளைப்போல நான் இருக்கிறேன். பாதையின் மறுகோடிதான் இப்போதைக்கு எனக்குப் புலப்படுகிறது. நடக்க நடக்கத்தான் அதன் வளைவுகளைப் புரிந்து கொள்வேன். கோடியை அடைந்த பிறகுதான், மறு திருப்பத்தில் என்ன இருக்கிறதென்பதை என்னால் காணமுடியும்...... டாக்டர், நான் எப்படி, என்னவென்று உங்களுக்கு மறுமொழி கொடுப்பேன்......?''

பெருந்தன்மையுடன் டாக்டர் சம்பத் சிரித்தார். ''பரவாயில்லை, சத்யா. சாலை எவ்வளவு நீளமாயிருந்தாலும் உன் பின்னாலேயேதான் நான் வந்துகொண்டிருப்பேன்...... அந்தத் திருப்பத்தில் உனக்கு என்ன

துன்பம் காத்திருந்தாலும் உதவிக்கு வரவும், என்ன இன்பம் காத்திருந்தாலும் வாழ்த்துக் கூறவும் இந்த சம்பத் காத்திருப்பான் என்பதை நம்பி இரு. போதும்.''

பாண்ட் பையில் கைகளை நுழைத்துக்கொண்டு வேகமாக நடந்தார் சம்பத்.

சில நிமிடங்கள்வரை அங்கேயே நின்றிருந்தாள் சத்யா. கொஞ்ச நேரத்துக்கு முன்பு பெருஞ் சுமையை ஏற்றிக் கொண்ட மாதிரி கனத்துக்கொண்டிருந்த இதயம், இப்போது அடைசலும் கனமும் குறைவது எதனால்? பாதிச் சுமையை வாங்கிக்கொண்டு அதோ செல்கிறாரே, அவராலா?

வீட்டுக்கு அவள் திரும்பியபோது பகலும் இரவும் முதற் சந்திப்பின் கிறக்கத்தில் இருந்தன.

கைப் பையை சோபாமீது எறிகிற சப்தம் கேட்ட உடனேயே சமையற்காரர் வந்து, ''ஓவல் கொண்டு வரட்டுமா?'' என்று கேட்பது வழக்கம். இன்று எங்கே காணோம் அவரை?

யோசனையுடன் சமையல்கட்டில் நுழைந்தவள் திகைப்புடன் நின்றாள்.

சமையல்காரக் கிழவரைக் காணாதது மட்டுமல்ல; அவள் அம்மாவே ஒரு நாளுமில்லாத திருநாளாய் ஸ்டவ்வைப் பற்றவைக்க முயன்று கொண்டிருந்தாள். பிறகுதான் யாருக்கோ கல்யாணம் என்று வெளியூர் போகப் போவதாய்ச் சமையல் கிழவர் சொல்லிக்கொண்டிருந்தது சத்யாவுக்கு நினைவு வந்தது.

''ஐயையோ! இன்று உன் சமையலா அம்மா?'' என்றாள் வேண்டுமென்றே கிண்டலாக.

மீனலோசனி வெடுக்கென்று திரும்பி நோக்கினாள் மகளை. பிறகு கழுத்தை வெட்டிக்கொண்டு மறுபடி தன் வேலையில் ஈடுபட்டாள். அட! அம்மாவுக்கு என்ன கோபம்?



புஸ் புஸ்ஸென்று சீறிவிட்டு ஸ்டவ் மறுபடி மறுபடி உயிரை விட்டுக்கொண்டிருந்தது.

''பெரிய மனுஷர் வீடாய் லட்சணமாய், ஒரு எலக்ட்ரிக் குக்கரோ அல்லது காஸ் அவனோ வாங்கி வைத்தால் கௌரவத்துக்கு கௌரவம், சௌகரியத்துக்கு சௌகரியம் 'எலக்ட்ரிக்' என்றாலே உனக்கு நடுக்கம். பத்தாம் பசலிக் கர்னாடகமாய் மண்ணெண்ணெய் ஸ்டவ் வைத்துக்கொண்டால் இந்த அவஸ்தைதான்! நன்றாய்ப் படு!'' என்றாள் சத்யா.

மறுபடியும் தலையை அசைத்துக் கொண்டாள் மீனலோசனி. 'உன்னோடு நான் பேசத் தயாராயில்லை,' என்பது அதன் அர்த்தம்.

ஸ்டவ், எட்டாவது தடவையாக எரிந்துவிட்டு எட்டாவது தடவையாக அணைந்து.

சத்யாவுக்குப் பொறுக்கவில்லை. ''இப்படிக் கொடு அந்தப் பின்னை. நீ நகர்ந்து கொள்,'' என்று ஸ்டவ்வைப் பறித்தாள் தாயிடமிருந்து.

''நீ ஒன்றும் என்னோடு பேசவும் வேண்டாம். ஒத்தாசை பண்ணவும் வேண்டாம்,'' என்றாள் மீனலோசனி கடுகடுப்புடன்.

சத்யாவுக்குச் சிரிப்புத்தான் வந்தது, நன்றாய்க் கோபிக்கவே தெரியாத தாயைக் கண்டு. உதட்டை மடித்துச் சிரிப்பை அடக்கிக்கொண்டு ஸ்டவ்வைச் சரிசெய்து கொடுத்தாள்.

விஸ்ஸென்ற ஓசையுடன் ஸ்டவ் வேகமாய் எரியத் தொடங்கியது. ''இந்தா! உன் சமையல் கொலையை ஆரம்பி! அப்படியே, என்மீது என்ன கோபம் என்பதையும் சொல்லு!'' என்றாள் சத்யா.

மீனலோசனி முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

சத்யா விடவில்லை. அவள் மோவாயை இழுத்து, ''என் செல்ல அம்மா, பட்டு அம்மா, கண்ணு அம்மா இல்லையா? சொல்லுவாயாம்,'' என்றாள்.

வெடித்துக் கொண்டு வந்தது மீனலோசனிக்கு. ''பின்னே என்ன? ஒரு எட்டு வயதுக் குழந்தைக்குச் சோறு போட்டுக் காப்பாற்ற என்னால் முடியாது? என்னவோ நான் கையாலாகாதவள் மாதிரி, அந்தப் பையனை வெளியே எங்கேயோ கொண்டு போய் விட்டு வந்திருக்கிறாயே, நியாயமா?''

''அடப் பூ!'' என்று சத்யா சிரித்தாள். ''அதுதானா விஷயம்? அப்துலை எந்தப் பாலைவனத்துக்கும் துரத்தி விடவில்லை அம்மா! நீ தினசரி அவனைப் பார்க்கலாம். உன் அருமை மருமானின் மடத்திலேதான் இருக்கிறான்!''

''மடத்துக்கா போயிருந்தாய்?'' என்று வியப்புடன் மீனலோசனி விசாரித்தாள். அவளுடைய கோபம் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவிட்டது. ''சத்யா, அவரைப் பார்த்தாயா?''

''ஏனம்மா, நான் ஒரு சமாசாரம் கேட்கிறேன். கோபிக்காமல் பதில் சொல்வாயா?''

''என்ன?''

''அவர் இவர், சாமியார், சுவாமிஜி என்றெல்லாம் பேசுகிறாயே, நிஜமாகவே ராதா அத்தான் மகான் என்றா நினைக்கிறாய்? சும்மா வேஷம் போடுகிற மாதிரி உனக்குத் தோன்றவில்லை?''

''சீசீ! வாயைக் கழுவு! உனக்கும் உன் அப்பாவுக்கும் அஞ்ஞானம் கண்ணை மறைத்திருக்கிறதால்தான் இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்!''

''அம்மா! இதே அத்தானை நான் மடக்கி, கிரகஸ்தாசிரமத்துக்குத் திருப்பி, மாப்பிள்ளைக் கோலத்துடன் உன் காலில் விழுந்து நமஸ்காரம் பண்ண வைக்கிறேன், பார்க்கிறாயா?''



''பாவி!'' என்று அவள் வாயைப் பொத்தினாள் மீனலோசனி. ''இப்படியெல்லாம் நினைக்கிறது தப்பு. பேசுவது அதைவிடத் தப்பு. அந்த மாதிரி பண்ண வேண்டும் என்று நினைத்தாலும் சரி, திட்டம் போட்டாலும் சரி, காரியம் பண்ணினாலும் சரி, மகா பாவம் சத்யா, மகா பாவம். தெய்வம் ஒரு நாளும் உன்னை மன்னிக்காது.''

மீனலோசனி எத்தனைக்கெத்தனை உறுதியாயும் பயபக்தியுடனும் பேசினாளோ அத்தனைக்கத்தனை கேலியாகச் சிரித்தாள் சத்யா.

கடகடவென்று ஓயாது அவள் வெளியிட்ட சிரிப்பில், சவால் இருந்தது.

## இருபத்து மூன்று

''இந்த மண்ணில் ஒரு சாம்ராஜ்யம் வேண்டுமென்று நான் ஆசைப்படவில்லை. மறு உலகத்தில் ஓர் இடம் கேட்டும் நான் ஏங்கவில்லை. ஏன், முக்திகூட வேண்டாம் எனக்கு. இறைவா! நான் விரும்புவது இதுவே: துன்புற்றோரின் துயரங்களெல்லாம் அகலட்டும். போதும்.''

சுலோகத்தைச் சொல்லி முடித்துவிட்டு இரண்டு நிமிட நேரம் இருக்கையிலேயே அமர்ந்து தியானித்தார் ராதானந்தர். புலன்களை ஒருமுனைப்படுத்தி, ஒளிமயமான இறைவனிடத்திலே சித்தத்தை நலை நிறுத்த முயன்றார். இருளைத் தவிர வேறில்லாத அடர்ந்த வனத்தினுள் உலவுவது போன்ற திகிலும், ஆழங்காண முடியாத கடலில் அமிழ்ந்து அமிழ்ந்து இறங்கினாற் போன்ற மூச்சுத் திணறலும் ஒரே சமயத்தில் ஏற்பட்டன அவருக்கு.

மூடிய விழிகள் தாரை தாரையாக நீரைப் பெருக்கின. இந்த வாழ்க்கையை ஏற்றுக்கொண்ட நாள் தொட்டு அனுபவித்து வருகின்ற மரண வேதனை இது. எப்போது இதற்கு முற்றுப்புள்ளி? தியானம் என்பது சுவாசத்தைத் திணற வைக்கும் கொடுமையாக இல்லாமல், படகில் மிதக்கும் ஆனந்த அமைதியாக எப்போது மாறும்? அல்லது அது கைவரப் பெறாமலே இந்த வாழ்க்கை முடிந்து விடுமா?

கண்டபடி மனத்தை அலைய விட்டுக்கொண்டு தியானம் என்று பேர் பண்ணுவதைக் காட்டிலும் எழுந்து விடுவது மேல் என்று ராதானந்தர் எண்ணினார். கண் விழித்த போது ஒரு சிறு ஆச்சரியம் காத்திருந்தது.

அருகிலேயே அமர்ந்திருந்த சின்னச் சாமியாரைக் காணவில்லை. தியானம் என்பதோ, பிரார்த்தனை என்பதோ, சிந்தனை என்பதோ அவருக்குத் துயர அனுபவங்களல்ல. எந்த வினாடியும் கண்ணை மூடி வேறு உலகத்தில், எந்த வினாடியும் கண்ணைத் திறந்து பிரத்தியட்ச உலகத்தில் கலந்து கொள்ளக்கூடிய சின்னச் சாமியாரின் மனப்பக்குவத்தைப் பார்த்துப் பல நாட்கள் பொருமி, பொறாமைப்பட்டாகி விட்டது. ஆகவே, தன்னுடன் தியானத்துக்கு அமர்ந்திருந்தவர் தனக்கு முன்னதாக எழுந்து போனது குறித்து ராதானந்தருக்கு வியப்பு ஏற்படவில்லை. ஆனால், அறை வாசலில் தனக்காகக் காத்துக்கொண்டு நிற்பாரே வழக்கமாய்? அப்படி நிற்காமல் வெளியே செல்லும்படி என்ன அவசர காரியம் வந்திருக்கும்?

வெளியே வந்து, பின்புறத்தை அடைந்தார்.

மொட்டை மாடியிலிருந்து சிறிய ஏணி வழியே கீழே இறங்கிக் கொண்டிருந்த சின்னச் சாமியாரைக் கண்டதும் சிரிப்பு வந்தது. சிரிப்பது பண்பாடல்ல என்று மறைத்துக் கொண்டு, ''மெல்ல, மெல்ல,'' என்று சொன்னவண்ணம்



ஏணியின் கால்களைப் பிடித்துக்கொண்டார் சரிந்து விடாமல். மடத்தைக் கட்டியவர்களுக்கு, மாடி வைக்கும் உத்தேசம் இருந்திருக்கவில்லை. ஆகவே மொட்டை மாடி போன்ற தளத்தை மட்டும் ஏற்படுத்திவிட்டு, படிக்கட்டு எதுவும் கட்டாமலே விட்டு விட்டார்கள். ஆனால் மடத்தின் வேலைக்காரர்கள் அல்லது விருந்தாளிகள், பகல் வேளைகளில் துணிமணிகளை உலர்த்தவும், மாலை வேளைகளில் கடற்காற்றைத் துய்க்கவும் அந்தத் தளத்தைப் பயன்படுத்துவது வழக்கமாயிற்று. அவர்கள் ஏறி இறங்குவதற்கென்றே ஓர் ஏணி மடத்தின் பின்புறச் சுவரில் சாத்தி வைக்கப்படுவதும் வழக்கமாயிற்று.

தரையில் கால் வைத்தபோது சின்னச் சாமியாரின் முகத்தில் லேசாகக் கலவரம் படிந்திருப்பதைக் கவனித்தார் ராதானந்தர்.

''ஹரியைப் பார்த்தீர்களா எங்காவது? அவனைத் தான் தேடிக் கொண்டிருக்கிறேன்,'' என்றார் சின்னச் சாமியார்.

''அப்துலா?'' என்று வேண்டுமென்றே ராதானந்தர் திருப்பிக் கேட்டார்— அந்தப் பெயர் மாற்றத்தைத் தான் அங்கீகரிக்கவில்லையென்று காட்டுவதற்காக. ''எங்காவது விளையாடிக் கொண்டிருப்பான்......''

''மொட்டை மாடியில் எங்காவது ஓடித் திரியப் போகிறானே என்று கவலைப்பட்டுத்தான் போய்ப் பார்த்தேன். காணோம்.''

ராதானந்தர் அவரது முகத்தைக் கேலியாக நோக்கிய படி, ''சுவாமிகள் குடும்ப பந்தங்களை விலக்கி முப்பது வருடங்கள் இருக்குமா?'' என்று கேட்டார்.

''நாற்பது இருக்கும். ஏன்?''

''நாற்பது வருடங்களுக்குப் பிறகு, அதே கட்டுகளில் மறுபடி சிக்கிக் கொள்கிறீர்களே என்பதால் கேட்டேன்.''

சின்னச் சாமியாரினால் அந்தக் நாக்குதலை ஏற்கவும் முடியவில்லை, மறுக்கவும் இயலவில்லை. "நம் பாதுகாப்பில் ஏற்றுக்கொண்ட பிறகு, கவலைப்படா திருக்க முடியவில்லையே......" என்றார்.

"உண்மை, உண்மை." என்று பரிகாசமாகவே தலை யாட்டிவிட்டு, "வாசல்புறம் எங்காவது நின்றிருப்பான். வாருங்கள், போய்ப் பார்க்கலாம்," என்றார் ராதானந்தர்.

பின்னாலோ அல்லது கூடவோ வராமல், முன்னதாக விரைந்து செல்லும் சின்னச் சாமியாரைப் பார்க்கும்போது ராதானந்தருக்கு வேடிக்கையாக இருந்தது. குடும்ப பந்தம் என்று அவரைக் கிண்டல் செய்தது ஒருவிதத்தில் உண்மை தான். காலையில் எழுந்தது முதல் இரவில் படுப்பதுவரை, அப்துலின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் சின்னச்சாமியார் அக்கறை காட்டினார். அந்தச் சிறுவனுக்கென்ப் பதினைந்து பைசாவில் ஒரு மலிவான பிளாஸ்டிக் சோப்புப் பெட்டி (அதற்குள் சிறு சோப்புக் கட்டியுடன்) வாங்கிவந்து கொடுத்தார். சுத்தமாயிருப்பதன் அவசியத்தை அவனுக்குக் கற்பிப்பதாகச் சமாதானமும் சொன்னார். தனக்கு இரண்டே வேட்டி போதுமென்று சொன்னவர், யாரோ ஒரு வங்காளி பாபுவிடம் யாசகம் வாங்கி வந்து விட்டார் ஐந்தாறு சட்டைகளும் அரை டிராயர்களும். பகலில் ஒரு மணி நேரமும் மாலையில் ஒரு மணி நேரமும் அவனுக்குத் தாமே 'ட்யூஷன்' சொல்லிக் கொடுத்தார். அவனுடைய புதுப் புத்தகங்களுக்கு 'அட்டை'கள் போட்டுத் தந்தார். ஆனால் 'ஹரி' என்று கூப்பிட்டதைத் தவிர வேறு வகை களில் அவனுடைய மதத்தை மாற்றி அமைக்கவில்லை. ஆகவே, அந்தச் சிறுவனிடம் அவர் உண்மையான அன்பு கொண்டிருக்கிறார் என்பது வெளிப்படை.

மனிதனிடம் அன்பு வைப்பதன் மூலமாகவே ஆண்டவ னின் அன்பையும் பெறலாமென்று முன்னோர்கள் சொன்ன தெல்லாம் உண்மைதானா?...ராதானந்தர் தம்மைப்பற்றி நினைத்துக்கொண்டார். 'சதையும் ரத்தமும் நிறைந்த



எந்தப் பிறவியிடம் நான் அன்பு செலுத்துகிறேன்? மொட் டைச் செடியில் மலர் பறிக்க விரும்புகிற மாதிரி, அன்பு பிர வகிக்கும் இருதயமில்லாமல் நான் என்ன இறை வழிபாடு செய்து கொண்டிருக்கிறேன்!...'

"உஸ்!" என்று அவரைப் பின்தள்ளி நிறுத்திவைத்தார் சின்னச் சாமியார்.

தோட்டத்தில், மரத்தின் நிழலில் அவர் காட்டிய காட்சி ராதானந்தரையும் நிற்க வைத்தது.

அக்கம்பக்கத்துக் குடிசைச் சிறுவர்கள் நாலைந்து பேர் அப்துலைச் சுற்றி அமர்ந்திருந்தார்கள். மணலில் கையால் கிறுக்கியவண்ணம் 'இது ஆவன்னா' என்று சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தான் அப்துல். அவன் தோழர் கள் அவனைப் போலவே மணலில் எழுத முயன்று கொண் டிருந்தார்கள்.

ஆனால் ஒரு நிமிடத்துக்குமேல் அந்தக் காட்சியை ரசிக்க முடியவில்லை. "சாமிடா!" என்று ஒரு சிறுவன் கூவ, மற்றவர்களும் உடனே ராதானந்தரையும் சின்னச் சாமியாரையும் கவனித்துவிட்டு, சிரித்துக்கொண்டே ஓடி விட்டார்கள் தெருவுக்கு.

"அடடா! உன் வகுப்பைக் கலைத்துவிட்டேனா ஹரி?" என்று வருத்தம் தோய்ந்த குரலில் கேட்டவாறு அப்துலை அணைத்துக் கொண்டார் சின்னச் சாமியார்.

கட்டை குட்டையான சின்னச் சாமியாரின் உருவத் தையும், ஆலமரத்தின் வேரில் முளைவிட்ட அருகுபோல் அவரிடம் ஒண்டி நிற்கும் அப்துலையும் பார்த்துப் புன்னகை செய்துகொண்டே மடத்தினுள் திரும்பினார் ராதானந்தர்.

அவருடைய சிந்தனை முழுக்க முழுக்க, சற்றுமுன் கண்ட காட்சியிலேயே லயித்திருந்தது.

நாலைந்து சிறுவர்கள் சேர்ந்து உட்கார்ந்து படிக்கும் காட்சி! அதைக் காட்டிலும் மனத்துக்கு இன்பமும் புத்துணர்ச்சியும் தரக்கூடியது என்ன இருக்க முடியும்! குழந்தைகளின் கலகலப்பான சிரிப்பிலும் ஓடியாடும் ஓசையிலும் தெய்வத்தின் அழகையல்லவா காண முடிகிறது?

ராதானந்தரின் உள்ளம் பரபரத்தது. அவருடைய மனக்கண்ணில் கிடுகிடுவென வளர்ந்தன கற்பனைகள். சின்னப் பள்ளிக்கூடம். பத்துப் பையன்களின் மத்தியில் உட்கார்ந்திருக்கும் ஆசிரியர். பிறகு சில பிள்ளைகள், சில ஆசிரியர்கள். அதன் பின்னே ஆயிரக்கணக்கில் மாணவர்களைக் கொண்ட ஓங்கிய கட்டிடம். கூட்டம் கூட்டமாக ஆசிரியர்கள். தேனீக் கூடுபோல ஓயாத சுறுசுறுப்பு.

எதற்கும் பணம், எதற்கும் பணம். ஓ! லட்சக்கணக்கான சொத்து இருந்தென்ன, போயென்ன?

அவருடைய எண்ணங்களுக்கு வடிவம் கொடுத்த மாதிரி அறைக்கு வெளியே நின்று, "வரலாமா சுவாமிஜி?" என்று கேட்டார் பார்-அட்-லா மேனன்.

"வாருங்கள், வாருங்கள். உங்களைத்தான் எதிர்பார்த்திருந்தேன்," என்று ஆர்வத்துடன் வரவேற்றார் ராதானந்தர்.

"பரவாயில்லையே!" என்று மேனன் சந்தோஷப்பட்டார். "சுவாமிஜி அரைமனதாயிருந்தது ஒன்றுதான் எனக்குப் பயமாயிருந்தது. இனிமேல் வெற்றியில் சந்தேகமில்லை."

"ஆமாம், ஆமாம். முன்னே ஆஸ்பத்திரிக்காக மட்டும்தான் பணம் தேவையென்று நினைத்தேன். இப்போது வேறு பலவிதமான திட்டங்கள் தோன்றுகின்றன. எனக்கும் பணம் வேண்டும், மேனன். உடனடியாக வேண்டும்," என்றார் ராதானந்தர்.



"இரைந்து சொல்லாதீர்கள் சுவாமிஜி. சன்னியாசிக்கு ஏற்பட்டிருக்கிற பணத்தாசையைக் கேட்டுச் சிரிப்பார்கள்," என்று தமக்கே உரிய தோரணையில் பரிகாசமாய்ப் பேசினார் மேனன். "தங்களுக்கு இத்தனை உற்சாகம் வரவேண்டும் என்றுதான் நானும் காத்திருந்தேன். ஸூட் ஃபைல் பண்ணிவிடுகிறேன்."

"செய்யுங்கள்," என்றபோது வெளியே நிழலாடுவதைக் கவனித்தார் ராதானந்தர். "யாரது?" என்று கூப்பிட்டார்.

தயங்கித் தயங்கி உள்ளே வந்து, மரியாதையுடன் எட்டத்தில் நின்றவன் சிறுவன் அப்துல்தான்.

"என்ன அப்துல்?" என்று ராதானந்தர் விசாரித்தார். அவருடைய அறைக்குள் வருகிற வழக்கம் கிடையாது அவனிடம்.

"வந்து...... அக்காவைப் பார்க்கணும்னு சின்னச் சாமியண்டை சொன்னேன்... உங்களண்டை பெர்மிஷன் வாங்கச் சொன்னாங்க......"

"சத்யாவைப் பார்ப்பதற்குத்தானே? போய் வாயேன்" என்று அவனை அனுப்பினார் ராதானந்தர். ஆனால் அந்த நிமிடமே அவருடைய முகத்திலும் பாவத்திலும் மாறுதல்கள் தென்பட்டன. சத்யா என்ற பெயரை நா உச்சரித்ததும் அவனுடன் அண்மையில் ஏற்பட்ட சந்திப்பு, அவனுடைய கோரிக்கை அனைத்தும் நினைவுக்கு வந்தன.

"என்ன, நான் போகவா?" என்று புறப்பட்டார் பாரிஸ்டர்.

"இருங்கள் மேனன்," என்று அவரை நிறுத்தினார் ராதானந்தர். அவருடைய குரல் மாறியிருந்தது. "கேஸ் போட வேண்டாம். இன்னும் ஒரு மாதம் பார்ப்போம்."

விழிகள் தெறித்துவிடும்போல அவரைப் பார்த்தார் மேனன். ''சுவாமிஜி, நீங்கள் மறுபடி...''

''இல்லை, தயவுபண்ணி என் முடிவை மாற்றாதீர்கள். நான் ஒருத்தருக்கு வாக்குக் கொடுத்திருக்கிறேன்,'' என்று சொல்லிவிட்டு மேஜைமீது கிடந்த அன்றைய தினசரியைப் பிரித்துப் படிக்கலானார் ராதானந்தர்.

பாரிஸ்டர் சிறிது நேரம் நின்று பார்த்தார். பிறகு பொறுமை இழந்தவராக, 'இந்தக் காவி வேட்டிக்காரர்கள் சமாசாரமே இப்படித்தான்' என்று மனதுக்குள் நொந்து கொண்டு, தமது ஆட்சேபத்தைக் காட்டுவதற்காக, 'போய் வருகிறேன்' என்றுகூடச் சொல்லிக்கொள்ளாமல் வெளியேறினார்.

ராதானந்தர் திடீரென நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்தார். கையிலிருந்த பத்திரிகையில் அவரது பார்வை ஆழப் பதிந்தது. அதிர்ச்சியும் சோகமும் அவர் வதனத்தில் படிந்தன. பார்ப்பதை நம்ப முடியாதவர் போல மறுபடியும் இந்தச் செய்தியை முதலிலிருந்து வாசிக்கத் தொடங்கினார்.

''ராயவேலூர் சிறையில் பஞ்சம்— கொள்ளை நோய்கள் பரவுகின்றன'' என்று கொட்டை எழுத்துக்களில் தாப் பட்டிருந்தது செய்தி.

''தம்பி அப்துல்! சின்னச் சாமியாரைக் கொஞ்சம் கூப்பிடு,'' என்று சொல்லிவிட்டு, அந்தச் செய்தியின் விவரங்களை ஆழ்ந்து படிக்கலானார் அவர்.

**''ஸாரி.** மன்னியுங்கள்,'' என்று புன்னகையுடன் மறுத்தான் சத்யா.

''என்ன என்ன! எதற்கு ஸாரி?'' என்று அவளைச் சூழ்ந்து நின்ற தோழிகளும் நண்பர்களும் ஆச்சரியப் பட்டார்கள்.



குன்றுசியுடன் அவர்கள் கொடுத்த பாட்ஜை அவர் களிடமே திருப்பித் தந்தாள் சத்யா. ''நான் இதிலே சேரு வதற்கில்லை. அதற்குத்தான் மன்னிக்கச் சொன்னேன்.''

''சத்யா, சுயநினைவோடுதான் பேசுகிறாயா, இல்லை, ஏதாவது டெலீரியமா?'' என்று ரேவதி கோபத்துடன் கண்டித்ததுகூட அவளுடைய உறுதியை மாற்றவில்லை.

இளைஞர்களில் ஒருவன் முன்வந்து, ''ஹவுஸ் சர்ஜன் களின் அலவன்சும் குவார்ட்டர்சும் மகாமட்டமாயிருப்பது உங்களுக்குத் தெரியாதா, சத்யா? அதற்காக ஒரு நாள் ஸ்டிரைக் செய்ய வேண்டுமென்று கவுன்ஸிலில் தீர்மானம் பண்ணியதைத்தானே இப்போது நடத்துகிறோம்'' என்றான்.

''இருக்கலாம். ஆனால் நான் ஒரு பெரிய போலீஸ் அதிகாரியின் மகள். ஆகவே கலந்து கொள்வது நியாய மில்லை,'' என்றாள் சத்யா.

''ஓகோகோ!'' என்று ஒரு கிண்டல் குரல் எழுந்தது.

அதை லட்சியம் பண்ணாமல், ''இன்னொன்று. தொழிலாளர்களைப்போல டாக்டர்களும் ஹவுஸ் சர்ஜன் களும் வேலை நிறுத்தம் செய்யலாம் என்று எனக்குத் தோன்றவில்லை. மனச்சாட்சிக்கு விரோதமாய் என்னைக் கட்டாயப்படுத்தாதீர்கள்,'' என்று தெரிவித்து விட்டுக் கூட்டத்தை விலக்கிக்கொண்டு வேகமாய் நடந்தாள் சத்யா.

சினம் நிறைந்த பல குரல்கள் அவள் பின்னாலிருந்து எழுந்தன.

''பணக்காரி! இந்தப் பிச்சைக்கார அலவன்ஸிலே இரண்டு ரூபாய் உயர்ந்து என்ன ஆகவேண்டும்?'' என்று ஓர் ஆண் குரல் கேட்டது.

''டாக்டர் சம்பத் கொடுக்கிற இடம்!'' என்று கழுத்தை நொடித்தாள் சத்யாவின் சிநேகிதிகளில் ஒருத்தி.

எவர் பேச்சையும் பொருட்படுத்தாமல், தனது குவார்ட்டர்ஸுக்கு சென்று, பதிவுப் புத்தகத்தில் கையெழுத்திட்டபின், ஹெட் நர்ஸிடம் தேவையான தகவல்களைத் தெரிந்து கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டாள் சத்யா.

அவள் திரும்பிய இடங்களிலெல்லாம் பல ஆச்சரியமான, கோபமான, கசப்பான பார்வைகளையே சந்திக்க வேண்டியிருந்தது. 'கோரிக்கைகள் வாரம்' என்று அச்சிட்ட பாட்ஜுகளை மற்ற ஹவுஸ் சர்ஜன்கள் குத்திக்கொண்டிருந்தார்கள், சில பேர் எந்த அலுவலையும் கவனிக்கச் செல்லாமல் வேண்டுமென்றே கையைக் கட்டிக்கொண்டு வெராந்தா பெஞ்சுகளில் உட்கார்ந்திருந்தார்கள். ஆர்வமுள்ள வேறு சிலர், வைத்தியத்துக்கு வந்திருந்த நோயாளிகளிடம் தங்கள் குறைகளை விளக்கிக்கொண்டிருக்கும் காட்சியும் கண்ணில் பட்டது.

எதிலும் கலந்து கொள்ளாமல், வழக்கமான வேலைகளைக் கவனித்துக்கொண்டே சென்ற சத்யா பலருடைய எதிர்ப்புக்கு ஆளானதில் வியப்பில்லை.

பகல் இரண்டு மணி குமாருக்கு அவளுடைய டியூட்டி முடிந்தது. யாருடனும் பேசிக்கொண்டு நிற்காமல் காரில் ஏறிக்கொண்டு ஸ்டார்ட் செய்தாள்.

ஓட்டமாய் ஓடி வந்தார் கம்பவுண்டர் சீமைச்சாமி.

''டாக்டர் உங்களைக் கையோடு அழைத்து வரச் சொன்னாருங்க,'' என்று தெரிவித்தார், காரினருகில் வந்ததும்.

டாக்டர் என்று அவர் குறிப்பிட்டது டாக்டர் சம்பத்தைத்தான்.

எஞ்சினை ஆஃப் செய்து விட்டு ஒரு வினாடி தயங்கினாள் சத்யா. ''எங்கே இருக்கிறார்?''

''மீட்டிங் ஹாலில்.''



சத்யா திடுக்கிட்டாள். ''மீட்டிங் ஹாலிலா?''

''ஆமாம், ஹவுஸ் சர்ஜன்கள் கூடியிருக்கிறார்கள். உங்களைத்தான் தேடிக் கொண்டிருக்கிறார் டாக்டர்.''

மறுமொழி கூறாமல் காரை மீண்டும் ஸ்டார்ட் செய்தாள். ''அவசரமாய்ப் போக வேண்டியிருக்கிறது. அப்புறம் பார்க்கிறேன் என்று சொல்லுங்கள்.''

ஆஸ்பத்திரிக்கு வெளியே வந்து, இரண்டு பர்லாங்கு தூரம் சாலையில் சென்ற பிறகுதான் அவளுடைய மடிந்த உதடுகள் பிரிந்தன. ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது.

'ஹும். டாக்டர் சம்பத் ஒருவருக்காவது உறுதி இருக்குமென்று நினைத்தேனே! கடைசியில், உணர்ச்சிக்கு அடிமையாகிற சாதாரண மனிதர்தானா அவரும்!' என்று சலிப்புடன் தனக்குள் எண்ணிக் கொண்டாள் அவள்.

'ஒதுங்கியிருப்பது தப்பு, நீயும் கலந்துகொள்' என்று அத்தனை பேருக்கு நடுவே அவர் வற்புறுத்தியிருப்பார். எப்படி மறுப்பது? மனச்சாட்சிக்கு விரோதமாக எப்படி ஒப்புவது? அவரைப் பார்க்காமல் வந்ததே புத்திசாலித்தனம்......

மவுண்ட் ரோட்டில் பச்சை விளக்குக்காகக் காத்து நின்றபோது—

''இப்போதுதான் வீட்டுக்குத் திரும்புகிறாயா சத்யா?'' என்று அப்பாவின் குரல் கேட்டது.

சட்டெனப் பக்கவாட்டில் பார்த்தாள். அடுத்த 'பாதை'யில் அவள் காரின் இடுப்பை ஒட்டிக்கொண்டு சாரங்கபாணியின் அலுவலக 'வான்' நின்றிருந்தது. பின் ஸீட்டிலிருந்து குரல் கொடுத்தார் சாரங்கபாணி.

அன்று டாக்டர் சம்பத்தைப் பார்த்துவிட்டு வந்த பிறகு இன்றுதான் அப்பாவைச் சந்திக்கிறாள் சத்யா. இருவருடைய நேரமும் அவ்வளவு ஒட்டுறவு அற்றிருந்ததே காரணம்

''உன்னால் எனக்கு எத்தனை பட்டம் கிடைத்திருக்கிறது தெரியுமா?'' என்றார் சாரங்கபாணி.

'நீங்கள் இந்தக் காருக்கு வந்துவிடுங்கள். நான் அழைத்துப் போகிறேன்,'' என்று அழைத்தாள் சத்யா. தந்தையின் பேச்சு அவள் காதிலேயே விழவில்லை. சாரங்கபாணி தமது வானுக்கு வெளியே தலைநீட்டிப் பார்த்தார். பச்சை விளக்கின் அனுமதி இப்போதைக்குக் கிடைக்காதென்பது புலப்பட்டதும், சட்டென்று கதவைத் திறந்துகொண்டு வெளிப்பட்டு, சத்யாவின் அருகே அமர்ந்து, ''நீ ஆபீசுக்குப் போ,'' என்று டிரைவருக்கு உத்தரவிட்டார்.

போக்குவரத்து நெருக்கடிகளைக் கடந்தான பின்னர் சத்யா கேட்டாள்: ''பட்டம் என்று என்னவோ சொன்னீர்களே, என்ன அப்பா?''

''ஹவுஸ் சர்ஜன்களின் ஸ்டிரைக்கில் நீ கலந்து கொள்ளவில்லையா?''

''ஆமாம். அதனால்?''

''என்னை டெலிபோனில் கூப்பிட்டுப் பாராட்டினார்கள் உன் சினேகிதர்கள் பலர். ஸ்பெஷல் விருதுகள் வழங்கினார்கள். பெயர்களைச் சொல்லியிருந்தால் நன்றி தெரிவித்து ஒரு கார்டு போட்டிருப்பேன். அனாமதேயமாயல்லவா கூப்பிட்டார்கள்?''

சத்யா அவமானத்துடன் தலைகுனிந்து கொண்டாள்.

அவள் தோளை மெல்லத் தட்டிய சாரங்கபாணி, ''நீ வருத்தப்படாதே. துணிச்சலாயிருக்கிற குணம், மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நடந்து கொள்ளுகிற தன்மை, எல்லோருக்கும் வந்துவிடாது. நான் பெருமைப் படுகிறேன் சத்யா'' என்றார்.

சத்யா மெதுவாய்ச் சிரித்தாள். ''அப்படியொன்றும் கொள்கைக்காக உயிரைத் தரும் வீராங்கனையில்லை



நான். எதற்காகக் கலாட்டா என்றுதான் ஒதுங்கிக் கொண்டேன். இப்போது கூட உள்ளூர உதறல்தான், எங்கே எல்லாரும் என்னை மடக்கிவிடப் போகிறார்களோ என்று.''

''இனிமேல் என்ன? ஸ்ட்ரைக்தான் வாபஸாகி விட்டதே!''

''என்ன? என்னப்பா?''

''உனக்குத் தெரியாதா? கொஞ்சம் முந்திதான் எனக்குச் செய்தி வந்தது. டாக்டர் சம்பத் ரொம்ப தாராளமாக, ஹவுஸ் சர்ஜன்கள் மனசை மாற்றி விட்டாராம். டாக்டர்களும் மாணவர்களும் இன்று ராத்திரி ராயலசீமைக்குப் போகிறார்கள்'' என்றார் சாரங்கபாணி.

பேசச் சக்தியற்றவளாக அதிர்ந்து உட்கார்ந்திருந்தாள். டாக்டர் சம்பத்தைப் பற்றித் தவறாக எண்ணி விட்டோமே என்ற வருத்தத்தின் அடிச்சுவட்டில், ராயலசீமைக்கு ஏன் போகிறார்கள் என்ற ஐயமும் எழுந்தது. தந்தையைக் கேட்டாள்.

''பேப்பர் பார்க்கவில்லை போலிருக்கிறது'' என்றார் சாரங்கபாணி. ''பஞ்சமும் கொள்ளை நோயும் பரவியிருக்கிறதாமே? வைத்திய உதவிக்காக ஒரு குழு புறப்படுகிறதாம்.''

தெருவின் ஓரமாகக் காரை நிறுத்தினாள் சத்யா. ''நீங்கள் ஓட்டிக் கொண்டு வீட்டுக்குப் போங்கள். நான் ஆஸ்பத்திரிக்குப் போய்விட்டு வருகிறேன்,'' என்று அவசர அவசரமாகத் தெரிவித்து விட்டுத் திரும்பி நடந்தாள் வெகு வேகமாக.

வேலை நிறுத்தத்திலிருந்து ஒதுங்கிக் கொண்டது இழிவோ இல்லையோ, இப்போது வைத்தியக் குழுவில் சேராமல் ஒதுங்கியதுதான் பெரிய அவமானம். டாக்டர்

சம்பத் அதற்காகத்தான், அவளைக் கூப்பிட்டிருக்கிறார்... என்ன மதியீனம்!......

தன்னை மறந்து நடந்தாள் சந்யா, புயல் வேகத்தில்.

## இருபத்து நான்கு

ஆஸ்பத்திரியை அடைகிற வரையில் கூடப் பொறுக்கவில்லை சந்யாவுக்கு. வழியில் தெரிந்த ஒரு பொது டெலிபோன் கூண்டினுள் நுழைந்து அவசர அவசரமாக டயல் செய்தாள்.

"ஹலோ," என்று பதில் கிடைத்த பிறகே, கைப்பையில் பதினைந்து பைசா சில்லறையாக வைத்திருக்கவில்லை என்பது தெரிந்தது. போனைக் கொக்கியில் மாட்டிவிட்டு, பக்கத்திலிருந்த கடையில் ரூபாய் நோட்டைத் தந்து சில்லறை பெற்றுக் கொண்டு திரும்ப விரைந்து வருவதற்குள் டெலிபோன் கூண்டை வேறொருவர் பிடித்துக் கொண்டு விட்டார். சில்லறை கேட்ட கடையிலேயே போனைப் பார்த்தது நினைவு வந்தது. மறுபடி அங்கே சென்று, "கொஞ்சம் போன் பண்ணணும்," என விண்ணப்பித்தாள். "இருபது பைசா அம்மா..." என்றான் கடைக்காரன் "பரவாயில்லை," என்று பணத்தைத் தந்து விட்டு, டயல் செய்தாள்.

அவளுடைய அவசரத்துக்குத் தகுந்த பதில் கிடைக்கவில்லை. "டாக்டர் சம்பத்தா? இருங்க, பார்த்துச் சொல்கிறேன். அவங்களும் மத்தவங்களும் எங்கேயோ வெளியூர் கிளம்பிக்கிட்டிருந்தாங்க..."

"அதனால்தான் சொல்கிறேன். தயவு பண்ணிப் பார்த்துச் சொல்லுங்கள்," என்று சந்யா கெஞ்சினாள்.

காத்திருந்த இரண்டு நிமிடமும், தணல்மீது நிற்கிற மாதிரி இருந்தது.



"இல்லைங்க, அவங்களைக் காணோம்," என்று பதில் வந்தது கடைசியில்.

அவள் உள்ளம் நொறுங்கிவிட்டது. கல்லூரியில் இந்த ஐந்தாண்டுக் காலமாய் அவள் எந்தச் சமூக சேவைக்கும் பின்தங்கியது கிடையாது. எப்படிப்பட்ட அபாய இடத்துக்கும் பயணம் செய்யத் தயங்கியதில்லை. இருந்தாலும் அதையெல்லாம் யார் நினைவில் வைத்திருக்கப் போகிறார்கள்? 'பஞ்ச நிவாரண கோஷ்டி கிளம்பிய போது டாக்டர் சம்பத் எவ்வளவு கெஞ்சினார் தெரியுமா? இருக்கிற இடமே தெரியாமல் எங்கேயோ ஒளிந்து கொண்டுவிட்டாள் சந்யா!' என்று நாளைக்கு நாளை இப்போதே பல கிசுகிசுப்புக் குரல்கள் கேட்பது போலிருந்தது.

'என்ன முட்டாள்தனம்!' என்று நொந்துகொண்டே ஆஸ்பத்திரிக்குச் செல்லும் பஸ்ஸில் ஏறிக்கொண்டாள் சந்யா. டாக்டர் சம்பத்தின் கோஷ்டியுடன் இனிமேல் சேரமுடியும் என்ற நம்பிக்கை அவளுக்கு இருக்கவில்லை. ஆனால், குறைந்த பட்சம், கடைசி நிமிடத்தில் ஓடோடி வந்தோம் என்பதற்கு இரண்டு சாட்சிகளையாவது ஏற்படுத்திக்கொள்ளலாம்.

தினசரிப் பத்திரிகையைப் படிக்காவிட்டால் மண்டை வெடித்துவிடும் என்ற ரகத்தில் சேர்ந்தவளல்ல சந்யா. ஆனால், தினம் தவறாமல் முக்கியச் செய்திகளையாவது நோட்டம் விட்டுவிடுவது உண்டு. அதுபோல இந்த ராயலசீமைப் பஞ்சத்தைப்பற்றிப் பல நாட்களாகவே கண்ணில் பட்டு வந்ததும் நினைவு வந்தது. இரண்டு வாரமாக, உணவுப் பஞ்சத்துக்கு உடன்பிறந்த சகோதரன் போல, காலராவும் வைசூரியும் பரவியிருப்பதாகவும் படித்திருந்தாள். ஆனால் ஆஸ்பத்திரியில் கொஞ்ச நாளாக, ஹவுஸ் சர்ஜன்கள் ஊதிய உயர்வு கேட்டுக் கிளர்ச்சிபண்ணி வருவதொன்றுதான் காதில் விழுந்து

கொண்டிருந்தது. உலகத்தில் வேறு பிரசினையே இல்லையென்று பண்ணிக்கொண்டிருந்தார்கள் அவர்கள்.

'டாக்டர் சம்பத் எவ்வளவு கெட்டிக்காரர்!' என்று எண்ணி வியந்தாள் சத்யா. ஹவுஸ் சர்ஜன்களின் மனதையும் லட்சியத்தையும் ஆக்கவழி லட்சியமாகத் திருப்பி விடுவதற்காகவே டாக்டர் சம்பத் இந்த நிவாரண கோஷ்டியை ஆரம்பித்திருப்பார். நிச்சயமாய்க் கெட்டிக்காரர்தான். அவருடன் சேர்ந்து வேலை செய்ய ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. நழுவிவிட்டது...

பஸ், மவுண்ட்ரோடு ரவுண்ட்தானா அருகில் நிற்பதை சத்யா கவனிக்கவில்லை. ஆனால், ''நீங்கள் போங்க சார்,'' என்று பஸ் டிரைவர் யாருக்கோ வழிசெய்து கொடுப்பதை அவள் செவி கேட்டது. அவளை வெடுக்கெனத் தலைநிமிர வைத்தது, டிரைவரின் அடுத்த பேச்சு: ''என்ன அவசரமோ என்னவோ, இத்தனை டாக்டருங்க சேர்ந்து போறாங்களே, பாவம்.''

ஜன்னல் வழியே வெளியே பார்த்தாள் சத்யா, மிகுந்த பரபரப்புடன்.

பஸ்ஸை 'ஓவர்டேக்' செய்துகொண்டு போயிற்று ஒரு லாரி. யுத்த காலத்து 'மிலிடரி டிரக்' மாதிரி, கித்தான் போட்ட கூரை. உள்ளே டாக்டர்கள் பலர் இடம் போதாமல் நின்று கொண்டிருந்தார்கள். பெட்டிகளும் படுக்கைகளும் கம்புகளும் கயிறுகளும் டின்களும் டிரம்களும் அவர்களை அமுக்கிக் கொண்டிருந்தன.

ரவுண்ட்தானாவில் திரும்பி, வாலாஜா சாலையோரமாக இருந்த ஒரு பெரிய இங்கிலீஷ் மருந்துக் கடையின் வாசலில் அந்த லாரி நின்றது.

அதற்கு முன்பே சத்யா எழுந்து கொண்டு, ''ஹோல்டான்! ஹோல்டான்!'' என்று தேவைக்கு அதிகமாகவே சொல்லிக் கொண்டிருந்தாள்.



''இங்கே ஸ்டாப் கிடையாதம்மா. பொறுங்க,'' என்று சொன்ன டிரைவர், கிட்டத்தட்ட மறுகோடியை அடைந்த பின்னர்தான் பஸ்ஸை நிறுத்தினார்.

சத்யா ஓட்டமும் நடையுமாகத் திரும்புகையில், நல்ல வேளையாக அந்த லாரி புறப்பட்டு விடவில்லை. சிலர் இறங்கி நின்றிருந்தார்கள். சிலர் லாரிக்குள் சாமான்களை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தார்கள். இன்னும் சிலர் மருந்துக் கடையின் வாசலில் நின்று கொண்டிருந்தார்கள். மூன்று பேரைத் தவிர மற்றவர்கள் ஆண்கள்தான் ஹவுஸ் சர்ஜன்களில் ஆறு பேரை சத்யா கண்டாள். மாணவர்கள் அரை டஜன் இருக்கும். மற்றவர்கள் டாக்டர்கள்.

''ஹலோ! ஸெண்ட் ஆஃப் கொடுக்க வந்தாயா?'' என்று ஒரு தோழி கிண்டல் செய்தாள் சத்யாவை.

''ஸாரி! ஸாரி! எத்தனை தோப்புக்கரணம் போடச் சொன்னாலும் இதோ போடுகிறேன். எனக்கு விஷயமே தெரியாது,'' என்று மன்னிப்புக் கேட்ட சத்யா, ''டாக்டர் சம்பத் எங்கே?'' என்று வினவினாள்.

''இதோ,'' என்று அவள் பின்னாலிருந்தே பதில் கொடுத்தார் டாக்டர் சம்பத். அவரது இரண்டு கை நிறைய பாண்டேஜ் துணிகள் கொண்ட பாக்கெட்டுகள் இருப்பதைக் கண்டாள் சத்யா.

''என்னைத் தப்பாய் நினைக்காதீர்கள், டாக்டர். ஸ்டிரைக் சமாசாரமாய்த்தான் கூப்பிடுகிறீர்களாக்கும் என்று போய் விட்டேன்,'' என்றாள் அவள்.

சம்பத்தின் முகம் மலர்ந்தது. ''அப்படியானால் இப்போது......''

''வருகிறேன் என்கிறேன்.'' லாரியிலிருந்த இரண்டொரு பெண்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்வதை அவளால் காண முடிந்தது. 'டாக்டர் சம்பத்

வருவதால் இவளும் வருகிறாள்' என்று நினைத்துக் கொள்கிறார்கள். நினைத்துக் கொள்ளட்டும்......

சம்பத்தின் குரலில் உற்சாகம் குறைந்து கவலை தொனிக்கத் தொடங்கியது: ''சத்யா...... வந்து...... உன் அப்பாவோ அம்மாவோ.....''

''ஒன்றும் சொல்லமாட்டார்கள்,'' என்று உடனேயே பதில் தந்தாள் சத்யா.

''வெறும் பஞ்ச நிவாரணம் மட்டுமில்லை...... தொற்று நோயும் எக்கச்சக்கமாகப் பரவியிருக்கிறதாம்...... அதுதான் முக்கியமான......''

சத்யா சிரித்தாள். ''ஒரு டாக்டர் இன்னொரு டாக்டரிடம் பேசுகிற பேச்சா இதெல்லாம்?''

''ரைட்டோ!'' என்று தலையாட்டினார் சம்பத். உடனேயே, ''நீ வீட்டில் போய் ரெடியாயிரு. ரொம்பக் குறைந்தபட்ச உடைகள்தான் எடுத்துக் கொள்ளலாம்.''

''நீங்கள்?''

''நாலைந்து மெடிகல் ஷாப்புகளில் நன்கொடைகள் வசூலிக்க வேண்டியிருக்கிறது. ஸலைனும் க்ளூக்கோசும் தான் அதிகம் தேவை. எல்லாவற்றையும் வசூல் செய்து கொண்டு ஸிடியிலிருந்து புறப்பட இன்னும் ஒரு மணி நேரம் ஆகும். போகிற வழியில் உன்னைக் கூப்பிட்டுக் கொள்கிறோம்,'' என்ற சம்பத், வெகு நேரமாக மற்றவர்கள் தங்கள் சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டு சும்மா நிற்பதைக் கவனித்தார். அவர்கள் ஏதாவது நினைத்துக் கொள்ளப் போகிறார்களே என்று, ''இல்லையா? அதுதானே சரி?'' என்று அவர்களைக் கேட்டார்.

''ஆமாம், ஆமாம். பின்னே?'' என்று பெண்கள் உள்படப் பதிலளித்ததும் மனத்துக்குள் சிரித்தபடியே மருந்துக் கடைக்குள் புகுந்து விட்டார். சத்யா மட்டும்



லாரிக்குள் எட்டிப் பார்த்து, பெண்கள் என்னென்ன பொருள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கவனித்துக்கொண்டு விட்டுப் புறப்பட்டாள்.

வீட்டை அடைந்தபோது, மீனலோசனி பூக் குடலையுடன் வெளியே கிளம்பிக் கொண்டிருந்தாள். மடத்துக்குக் கிளம்புகிற நேரம்.

''மெடிகல் டீமில் சேர்ந்து நான் வெளியூர் போகிறேனம்மா. திரும்பி வரப் பத்துப் பதினைந்து நாள் ஆகும்,'' என்று மகள் தெரிவித்தபோது அவள் புருவங்கள் உயர்ந்தன. பந்தம், குடும்பம், பாசம் முதலியவைகளை அவ்வளவு முற்ற முழுக்க அவள் களைந்து விடவில்லை.

''ஜாக்கிரதையாகப் போய் வருவாயா?'' என்று கவலை வெளிப்படக் கேட்டாள்.

''பயப்படாதீங்க மடத்தம்மா,'' என்று அம்மாவின் தலையில் ஒரு குட்டுப் போட்டுவிட்டு உள்ளே வந்த சத்யா, தோட்டக்காரனுக்குக் கட்டளைகள் இட்டுக் கொண்டிருக்கும் அப்பாவையும் சந்தித்தாள்.

''தலை போயிற்றா, போகவில்லையா?'' என்று கேட்டார் சாரங்கபாணி.

''எந்தத் தலை, அப்பா?''

''எனக்கெப்படித் தெரியும்? ஏதோ தலைபோகிற காரியத்துக்காகத்தானே அப்படிக் காரிலிருந்து இறங்கி, அவசர அவசரமாய் ஓடினாய்?''

ராயலசீமைக்குச் செல்கிற வைத்தியக் குழுவில் தானும் சேர்ந்திருப்பதைத் தெரிவித்தாள் சத்யா.

''கோஷ்டிக்குத் தலைவர் யார்?'' என்று சாரங்கபாணி விசாரித்தார்.

டாக்டர் சம்பத் என்று அறிந்தபோது அவருடைய முகத்தில் திருப்தி மலர்ந்தது.

''வெரிகுட், வெரிகுட்,'' என்றார் அவர். ''இந்த மாதிரி புதிய பழக்கமும், புதிய நாட்டமும் உனக்கு ஏற்பட வேண்டுமென்பதுதான் ஆசை. டாக்டர் சம்பத் ரொம்ப நல்ல பையன்.''

''ஆமாமப்பா,'' என்று ஆமோதித்தாள் சத்யா. அப்பாவுக்காக வேண்டுமென்றே நடிக்கிறோமோ, அல்லது உண்மையில் தன் உள்ளத்திலேயே அப்படித்தான் இருக்கிறதா என்பதை நிச்சயிக்க முடியாமல், ''அவர் இல்லாமல் வேறு யாராவது மெடிகல் டீம் தலைவராக வந்திருந்தால் நான் போயிருக்க மாட்டேன்,'' என்றாள்.

''கரெக்ட்,'' என்று பாராட்டினார் சாரங்கபாணி.

தோட்டக்காரன் கொட்டிக் குவித்திருந்த ஈர மண்ணைக் காலினால் கிளறிக் கொண்டு நின்றாள் சத்யா.

''போயேன். டிரஸ்களை எடுத்து வைத்துக்கொள்ள வேண்டாமா?''

சத்யா இன்னும் அங்கேயே நின்றாள்.

''என்னம்மா?''

சத்யா தயங்கியபடியே, ''நான் மனம் மாறினால்...... வஷயத்தைக் கவனிப்பதாகச் சொன்னீர்களே அப்பா?'' என்றாள்.

சாரங்கபாணி, தோட்டக்காரனின் பக்கம் திரும்பிக் கொண்டு, ''இதோ, இங்கே இன்னும் கொஞ்சம் கொத்து,'' என்றார் மகளை நிமிர்ந்து பாராமலே. ''ஆகட்டும், ஆகட்டும்... இப்போதுதானே எனக்குக் கவலை கொஞ்சமாவது குறைகிற மாதிரி பேச ஆரம்பித்திருக்கிறாய்... பார்க்கலாம்,'' என்றார் பிறகு.

ஒரு வழியாய்த் துணிச்சலை வரவழைத்துக் கொண்டாள் சத்யா. ''அதில்லை அப்பா... மடம் நடத்தி வருகிற அந்த ஆயுர்வேத ஆஸ்பத்திரியை விட்டு விடக் கூடாதென்பதுதான் அத்தானுக்கு...''



''ராதானந்த சுவாமிகளுக்கு,'' என்று திருத்தினார் சாரங்கபாணி.

''...ஒரே கவலை. அதற்குப் பணம் தேவையென்று தான் ரொம்ப மெனகெடுகிறார். அதற்குத் தேவையான தொகையை மட்டுமாவது முதலில் கொடுத்து விடுங்கள். அப்புறம் வேண்டுமானால் மிச்சத்தைத் தரலாம்.''

''பார்க்கலாம்,'' என்றுதான் சாரங்கபாணி மறுபடியும் சொன்னார்.

சத்யாவின் துணிச்சல் வளர்ந்தது. ''அதெல்லாம் எனக்குத் தெரியாது. நான் திரும்பி வருகிறபோது, நீங்கள் நான் கேட்டதைச் செய்து முடித்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் நான் பழைய சத்யாவாகிவிடுவேன்,'' என்று கூறிவிட்டு, விடுவிடுவெனப் பங்களாவுக்குள் போய்விட்டாள்.

டாக்டர் சம்பத், சொன்ன பிரகாரம் வந்துவிட்டார்.

குனிந்து நீட்டிய தோழியின் கையைப் பற்றிக்கொண்டு லாரியினுள் குதித்த பிறகுதான் சத்யா கவனித்தாள் உள்ளே ஒரு விவாதம் நடப்பதை.

''நோ, நோ டாக்டர்! அதெல்லாம் சுத்தத் தப்பு. நாங்கள் ஒரு நாளும் அனுமதிக்க மாட்டோம்,'' என்று வற்புறுத்திக் கொண்டிருந்தார் சம்பத்தின் சகா ஒருவர்.

டாக்டர் சம்பத் பலமாக மறுத்தார். ''உங்களுக்குத் தெரியாது. நான் தலையையும் காட்டி, விஷயத்தையும் சொன்னேனோ, லாரியின் குறுக்கே படுத்துக்கொண்டு தடுப்பார்.''

சத்யா ஓரளவு புரிந்துகொண்டாள். ''உங்கள் அப்பாவிடம் சொல்லிக் கொள்ளாமல் புறப்படுகிறீர்கள்? இல்லையா டாக்டர்?''

''பின்னே?'' என்று டாக்டர் சம்பத் அவளிடம் முறையிட்டார். ''அவர் மனதார அனுமதி கொடுப்பாரா, நீயே சொல்லு.''

''எதுவானால் என்ன. இதோ உங்கள் வீட்டு வாசலில் நிறுத்திவிட்டேன்,'' என்று முன்புறம் டிரைவரின் ஆசனத்திலிருந்த மாணவன் தகவல் தந்தான்.

லாரி நின்றுவிட்டது.

சம்பத் ''போச்சு! அவ்வளவுதான்! என் பெட்டியை எடுங்கள்!'' என்று முணுமுணுத்தார்.

சம்பத்தின் அப்பா மணவாளன் வாசலிலேயே நின்றிருந்தார். முன்புறம் இருந்தவர்களில் ஒருவர் கீழே குதித்து, அவரிடம் சென்று தகவலைத் தெரிவித்தார்.

கையில் தன் சிறிய ஸூட்கேசுடன் கிழிறங்கத் தயாரானார் சம்பத்.

ஒரு நிமிடம், இரண்டு நிமிடமாயிற்று. ஒரு சப்தத்தையும் காணோம். அப்பா என்னதான் செய்கிறாரென்ற வியப்புடன் சம்பத் வெளியே தலை நீட்டினார்.

''இப்படிக் குனியடா சொல்கிறேன்,'' என்று அதட்டினார் மணவாளன். அவருடைய மெலிந்த சிறிய உருவம் லாரியின் பாதி உயரத்துக்குக்கூட வரவில்லை.

''இல்லையப்பா... வந்து...''

சம்பத் பிரமிப்பினால் பேச்சற்றுப் போனார்.

குனிந்த அவர் முகத்தில், நெற்றி நடுவில், மணவாளனின் எலும்பு விரல்கள் திருநீற்றுப் பொட்டு வைத்தன.

''எல்லாம் ஆண்டவன் பார்த்துக்கொள்வான். போய் வா,'' என்று அவர் கையை வீசிச் சொன்னபோது, நம்ப மறுத்த செவிகளைக் காட்டிலும் நீர் தளும்பிய விழிகளே அதிகம்.



''கொஞ்சம் இரு,'' என்று மணவாளன் வீட்டுக்குள் சென்றார். சில நிமிடங்களில் தமது பழைய சைக்கிளை வெளியே தள்ளிக் கொண்டுவந்து, ''இதை எடுத்துப் போ. இப்போது தெரியாது இதன் அருமை. போகிற இடத்தில் ரொம்ப ஒத்தாசையாயிருக்கும் பார்,'' என்றார்.

சத்யாவும் டாக்டருமாக அந்தச் சைக்கிளை உள்ளே ஏற்றிக் கொண்டபோது, ''உங்கள் நன்கொடைதான் சார் பிரமாதம்!'' என்று மற்றவர்கள் கைதட்டிப் பாராட்டினார்கள்.

மரணம் உலாவுகிற இடம் சத்யாவுக்குப் புதிதல்ல. அதன் நிழலிலேயே அவளும் உலாவிய முறைகள் பலபல.

ஆனால், இது சாவு உலவிய இடமல்ல. மரணத்துக்கே மரணம் ஏற்பட்டுவிட்ட மாதிரி, உயிர்ப்பின் கடைசி அணுவைக்கூடக் காணமுடியாத பேய்நிலமாக இருந்தது அந்த ஆந்திர கிராமம்.

இரவு பன்னிரண்டு மணி சுமாருக்கு டாக்டர் சம்பத்தின் குழு டிரங்க் சாலையிலிருந்து பிரிந்த போது, வங்காளத்திலிருந்து வந்திருந்த வைத்திய மாணவர்களின் குழுவொன்றைக் கண்டார்கள்.

''இங்கிருந்து இடதுபுறம் பதினைந்து மைல் ஏரியா எங்களுடையது. வலதுபுறம் பதினைந்து மைல் பரப்பு உங்களுக்கு ஒதுக்கியிருக்கிறார்கள்,'' என்று வழிகாட்டி அனுப்பி வைத்தார்கள் அந்த மாணவர்கள்.

நட்சத்திரங்களின் வெளிச்சம் மட்டுமே தெரிந்த அந்த இரவுப் பொழுதில், விஷ் விஷ் என்று வேகத்துடன் வட்டமிட்டோடும் வல்லூறுகளையும் கழுகுகளையும் பார்த்த போது பயம் உதிக்காதவர்களுக்கு, அருவருப்பு ஏற்பட்டிருப்பது நிச்சயம். ஒரு கழுகு, அவர்களுடைய லாரியின் கூரையிலேயே வந்து உட்கார்ந்தது.

''இறந்தவர்களை அப்புறப்படுத்தக்கூட ஆளில்லை என்று கேள்விப்பட்டேன்,'' என்றார் டாக்டர் சம்பத்.

லாரி சிறிது நின்றது. டிரைவிங் செய்த மாணவன் இறங்கிச் சென்று பார்த்துவிட்டுத் திரும்பினான். ''போலிஸ் ஸ்டேஷன்! கேள்வி முறையில்லாமல் திறந்து கிடக்கிறது!'' என்றான்.

எந்தக் குடிசைக் கதவும் திறந்திருக்கவில்லை.

லாரியிலிருந்து, பிசாசின் நிழல்களைப் போல, மௌனமாக ஒவ்வொருவரும் இறங்கினார்கள். மருந்து கேஸ்களும் பெட்டிகளும் சைக்கிளும், ஓசையின்றித் தரையில் பாந்த சமயம்—

ஒரு சிறிய ஜீப் அவர்கள் வந்த பாதையிலேயே வேகமாக வந்து நின்றது.

சற்றுமுன் சந்தித்த வங்காளி வாலிபர்களில் ஒருவர் இறங்கிவந்து, ''உங்களிடம் ஒரு விஷயம் சொல்வதற்காகக் கூப்பிட்டோம். அதற்குள் புறப்பட்டு விட்டீர்கள்,'' என்றார்.

''என்ன?'' என்று எல்லோரும் சூழ்ந்து கொண்டார்கள்.

''நானும் நிவாரணத்துக்காகத்தான் வந்திருக்கிறேன் என்று ஓர் ஆள் எங்கள் ஏரியாவில் அடம் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறான்.''

''ஏன், அதிலே என்ன?''

''அது சரி. ஆனால் இந்த ஆள் நம்மைப்போல் டாக்டரில்லை. அம்மை குத்திக் கொண்டிருக்கிறீர்களா என்று கேட்டால், அவசியமில்லை என்கிறான். உங்கள் பக்கத்துப் பேர்வழி மாதிரி தெரிகிறது. நீங்கள் வந்து சொல்லுங்கள்.''

டாக்டர் சம்பத், சத்யாவைப் பார்த்தார். ''நீதான் இதிலெல்லாம் எக்ஸ்பர்ட். போய்ப் பார்.''



''நான் ஒன்றியாகவா?'' என்று தயங்கிய சத்யா, ''ஆள் பைத்தியமா?'' என்று வந்தவனிடம் விசாரித்தாள்.

''அதெல்லாமில்லை. பார்ப்பதற்குச் சாமியார் மாதிரி காவி வேட்டியும் மொட்டைத் தலையுமாக இருக்கிறான். ஏதோ ஓர் ஆனந்தா என்றுதான் பெயர் சொல்கிறான்.''

MADRAS DISTRICT BRANCH LIBRARY
16888
3289699
KODAMBAKKAM... CHENNAI...

## இருபத்தைந்து

கொள்ளை நோய்களினால் இற்றுப்போயிருந்த அந்தக் கிராமத்தின் நிசப்தத்தை இதுவரை குலைத்துக் கொண்டிருந்த பேச்சுக்கள் சட்டென்று நின்றன.

டாக்டரும் அவருடைய சகாக்களும் மற்ற மாணவர்களும் மாணவிகளும் சொல்லி வைத்தாற்போல் சத்யாவின் முகத்தையே பார்த்தார்கள் உடனே.

என்னவோ ஓர் ஆனந்தா என்று பெயர் சொல்கிறார்...... காவி வேட்டி கட்டிய சாமியார்...

வங்காளி வாலிபன் கூறிய தகவல், சத்யாவைத் தெரிந்த அனைவருக்கும் நினைவுபடுத்தியது ராதானந்தர் ஒருவரைத்தான்.

வங்காளி வாலிபனுக்கு மட்டுமே அது தெரியாது. ஆகவே சத்யாவை ஏன் எல்லோரும் அப்படிப் பார்க்கிறார்கள் என்பது புரியாதவனாக, ''என்ன, நீங்கள் யாரேனும் வருகிறீர்களா?'' என்று மீண்டும் கேட்டான்.

''போய்ப் பார்த்துவிட்டுத்தான் வாயேன்,'' என்று சத்யாவிடம் சொன்னார் டாக்டர் சம்பத்.

''அவராக இருக்குமோ என்று...''

''அப்படி இருந்தால் நீதான் கட்டாயம் போக வேண்டும். உனக்குத்தானே கட்டுப்படுவார்?''

சத்யாவின் சிநேகிதி அவள் தோளை மெல்லத் தொட்டு, "ஊருக்குப் பத்துச் சாமியார்கள் இந்தக் காலத்தில். காவி வேட்டி கட்டினவர்களுக்கெல்லாம் ஆனந்தர் என்றுதான் பெயர். சுவாமி ராதானந்தராகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை," என்றாள்.

சம்பத்தின் அருகில் நின்றிருந்த இன்னொரு டாக்டர், "அப்படி அவராக இருந்தால், கோபப்படாமல் விஷயத்தை எடுத்துச் சொல்லுங்கள். அவரென்ன பாப்பாவா, பிடிவாதம் பிடிக்க?" என்றார்.

"ஏன் சார், ராமகிருஷ்ணா மடத்தைச் சேர்ந்தவரோ என்னவோ? கேட்டீர்களோ?" என்றார் டாக்டர் சம்பத் திடீரென.

"அவர்களும் வந்திருக்கிறார்கள். ஆனால் வேறே ஏரியா. கேட்டுவிட்டேன். அவர்கள் குழுவில் எந்தச் சாமியாரும் மிஸ்ஸிங் இல்லையாம்."

"சரி, நானே போகிறேன்," என்றாள் சத்யா. நிமிடத்துக்கு நிமிடம் அதிகரித்து வரும் தவிப்பினால், அவளுக்கு இருக்கை கொள்ளவில்லை.

"நானே திரும்பக் கொண்டு வந்து விடுகிறேன். கவலை வேண்டாம்," என்றான் அந்த வங்காளி வாலிபன்.

ஜீப் புறப்பட்டபோது, "நானும் வேண்டுமானால் வரட்டுமா?" என்றாள் ரத்னா.

அரைமனதாகத்தான் கேட்கிறாள் என்று ஊகித்துக் கொண்ட சத்யா, "வேண்டாம், வேண்டாம். எதற்கு அனாவசியமாய்?" என்றாள். தானும் அத்தானும்— அதாவது அத்தானாக இருந்தால்— சந்திக்கும்போது இடைஞ்சலாக இருக்க மற்றவர்கள் விரும்பவில்லை என்பது நன்றாய்த் தெரிந்தது.

டாக்டர் சம்பத், "பதற்றப்படாமல் போய்விட்டு வா. இப்போதைக்கு 'காம்ப்' கட்டவே பொழுது சரியா



யிருக்கும். விடிந்த பிறகுதான் வைத்தியப் பணிகளை ஆரம்பிக்க வேண்டும்," என்று கூறி அவளை வழியனுப்பினார்.

ஜீப் வளைந்து வளைந்து சென்று கொண்டேயிருந்தது.

ஆந்திர நாட்டின் இந்தப் பகுதிக்கே உரிய செம்மண் புழுதி, வறண்ட பூமியின் நெடி, இங்கொரு கொத்து அங்கொரு கொத்து என்று எப்போதோ ஒருமுறை தென்படும் காட்டுச் செடிகள், இவற்றை நுகர்ந்தும் நுகராமலுமாக அரைக்கண் மூடிய நிலையில் போய்க் கொண்டிருந்தாள் சத்யா. நொடிகளில் ஜீப் தடக்தடக்கென்று விழுந்தெழும் போது, மரத்துப்போன உணர்வுகளுக்குச் சிறிது உயிர் வரும். பிறகு மறுபடி அலை மௌனமாகும்.

வந்திருப்பவர் அத்தான்தான் என்று அவளுக்கு மிக நிச்சயமாய்த் தெரிந்துவிட்டது. காலனின் கொடுங்கோலாட்சி தலைவிரித்தாடுகிற இந்த இடத்துக்கு ஏன் அவர் வந்தார்? வந்தவரைப் பிடிவாதமாக வெளியேற்றுவது முடிகிற காரியமா? 'எனக்கு ஆபத்தென்றால் உனக்கும்தான் ஆபத்து. நீயும் வாயேன்,' என்று சொன்னாரானால் என்ன செய்ய முடியும்?

சிந்தனை செய்யச் செய்யக் குழப்பங்கள் பெருகியதுதான் மிச்சம். 'கடவுளே, வந்திருப்பவர் வேறு ஒரு சாமியாராக இருக்கவேண்டும்' என்று அவள் வேண்டத் தொடங்கினாள். ஆனால் அத்தனைக்கத்தனை பலமாக 'அவர்தான், அவரேதான்' என்று உள்ளிருந்து ஒரு குரல் பிடிவாதமாக ஒலிக்கத் தொடங்கியது.

"உங்களுக்கு ஆட்சேபமில்லையே?" என்ற குரல் அவள் காதில் விழவில்லை. சிகரெட் புகையின் மணம் உறைத்த போதுதான், ஜீப்பை ஓட்டிக் கொண்டிருக்கும்

இளைஞன் மரியாதைக்காக அப்படிக் கேட்டிருக்கிறான் என்பது தெரிந்தது.

நீண்ட நேரத்துக்குப் பிறகு மனிதக் குரலைக் கேட்டதால் சற்றுத் தெம்பு வந்தது. இருளைத் தவிர வேறெதுவும் புலப்படாத நேரத்தில், வெறுமையைத் தவிர வேறெதுவும் தென்படாத சூழ்நிலையில், அவருடனாவது பேச்சுக் கொடுக்கலாமென அவள் எண்ணினாள்.

ஆனால், ''அவர்... அந்தச் சாமியார் எங்கே தங்கியிருக்கிறார்?'' என்பதற்கு மேல் உரையாடச் சந்தர்ப்பம் இருக்கவில்லை.

''ஏதோ ஒரு கோவிலில் தங்கியிருந்தார் முதலில். ஜனங்களுக்குச் சொல்ல வேண்டுமா? மொட்டைத் தலை, ருத்திராட்சமாலை இருந்தால் போதுமே! காலில் விழ ஆரம்பித்து விடமாட்டார்களா? ஒரு பள்ளிக்கூடத்திலே ஒரு அறை ஒழித்துத் தந்திருக்கிறார்கள்...... இதோ, அந்த இடமும் வந்துவிட்டது,'' என்று சொல்லி வண்டியையும் நிறுத்தினார் அந்த வங்காளி வாலிபர்.

ரயில் ஓடு போட்ட சிறு கட்டிடம் தூக்கத்தில் அமுங்கிக் கிடந்தது. அதன் ஒரு பகுதியில் ஜீப் விளக்கின் ஒளி மோதியபோது வாசல்புறத்து வராந்தாவில் யாருமில்லை என்பதைக் கண்டாள் சத்யா. ஆனால் கதவுகள் திறந்திருந்தன.

சத்யாவை அழைத்து வந்த வங்காளி வாலிபன் ஜீப்பிலிருந்து இறங்கி, டார்ச் அடித்துப் பார்த்து, ''யாரங்கே உள்ளே?'' என்று கூப்பிட்டான்.

கட்டிடத்துக்குள்ளிருந்து பதிலைக் காணோம்.

ஆனால், ''சரத், வீ ஆர் ஆல்ரெடி ஹியர். வெயிட்டிங் ஃபர் தட் மேன் டு கம்,'' என்று இன்னொரு குரல் கேட்டது.



டார்ச்சைத் திசை திருப்பிய பிறகே, கட்டிடத்தின் மறு ஓரத்தில், இன்னொரு ஜீப்பும் நின்றுகொண்டிருப்பது தெரிந்தது. அதன் பின் பகுதியில் இரண்டொரு மூட்டை முடிச்சுக்கள் காணப்பட்டன.

வந்திருப்பவர் ராதானந்தராக இருக்காது என்று சத்யாவுக்கு எள்ளத்தனை நம்பிக்கை இருந்திருக்குமேயானால், அது அந்த ஜீப்பைக் கண்ட வினாடியே சிதறிவிட்டது.

மூட்டைகளின் நடுவே, அன்றொரு நாள் பவானி மடத்தில் கண்ட அதே காஷ்மீரப் பிரம்புப் பெட்டியை அவள் கண்டாள்.

சத்யாவை அழைத்து வந்த வாலிபன், மற்றவர்களை நெருங்கிச் சென்று, ''நீங்கள் எதற்காக இங்கே வந்தீர்கள்?'' என்று வியப்புடன் விசாரித்தான்.

''இந்த ஆளைக் குண்டுக்கட்டாய்த் தூக்கிச் சென்று அப்புறப்படுத்தி விடுவது என்று தீர்மானம் பண்ணி விட்டோம். வேறு எந்த வழியும் பிரயோசனப்படாது,'' என்றான் மற்றவன்.

சத்யா கவலையுடன், ''அவர் எங்கே?'' என்று கேட்டாள்.

''யார் கண்டது? ஊர் சுற்றிக் கொண்டிருக்கிறானோ என்னவோ? முதலில் அவன் சாமான்களை ஏற்றி வைத்து விட்டோம் ஜீப்பில்.''

அது சரியில்லை என்பதைச் சத்யா தன் தலையசைப்பின் மூலம் தெரிவித்தாள். ''என் அத்தான்தான் அவர்,'' என்று அவள் சொல்லுமுன், ''அவரைப் பார்க்காமலே எப்படிச் சொல்கிறீர்கள்?'' என்று குறுக்கிட்டான் முதல் ஜீப் இளைஞன்.

''எனக்குத் தெரியும். இந்த மாதிரி திடீர்த் துணிச்சல்கள் வேறெந்தச் சாமியார்களுக்கும் கிடையாது,'' என்று

சத்யா பதிலளித்துவிட்டு, "நான் அவரைப் பார்த்துப் பேசி, சரிசெய்கிறேன். முரட்டுத்தனமாக எதுவும் செய்ய வேண்டாம்," என்று கேட்டுக்கொண்டாள்.

"நாங்கள் சொல்லிப் பார்க்காததா?"

"நான் வேறு வழியில் சொல்வேன்."

சத்யாவை அழைத்துவந்த சரத் என்ற இளைஞனுக்குத் தூக்கம் கண்களைச் சுழற்றிக்கொண்டு வந்ததாகையால் சத்யாவும் மற்றவர்களும் செய்த விவாதத்தை ரசிக்கவில்லை. "சரி, எனக்கு ஏகப்பட்ட வேலை காத்திருக்கிறது. அந்த ஆள் வந்ததும் எப்படியாவது ஓர் ஏற்பாடு பண்ணிவிட்டு வாருங்கள்," என்றான்.

"நான்?" என்றாள் சத்யா திகைப்புடன்.

"பயப்பட வேண்டாம். அந்த ஜீப்பில் இவன் கொண்டு போய் விட்டுவிடுவான் உங்களை," என்று தெரிவித்ததோடு, சரத் மற்றவர்களுடன் திரும்பிச் சென்று விட்டான்.

"சாமியாரின் சாமான்களை முதலில் இறக்கி உள்ளே கொண்டுபோய் வையுங்கள்," என்று உறுதியான குரலில் கட்டளையிட்டாள் சத்யா.

நெற்றியையும் காதையும் மறைத்தாற் போன்ற அடர்த்தியான கிராப்பும், குண்டான கறுப்புப் பிரேம் போட்ட மூக்குக் கண்ணாடியும் அணிந்திருந்த அந்த வாலிபன், ஒரு பெண் தனக்குக் கட்டளையிடுவதை வெறுத்தான்.

"அவர் வரட்டும்," என்றான் சிறிதும் சளைக்காதவனாக.

"யார் வரட்டும்? நானா?" என்று கேட்டுக்கொண்டே பின்னால் வந்து நின்ற உருவம், "சத்யா! நீயா! எதற்காக இங்கே வந்தாய் நீ?" என்றது.



ராதானந்தர் அப்படித் திடுதிப்பென வந்துவிட்டதால் திகைத்துப்போன சத்யா, தான் கேட்க நினைத்திருந்ததை அவர் கேட்கவே, தடுமாறியும் போனாள். இருந்தாலும் சமாளித்துக்கொண்டு, "வைத்தியர்களையும் அரசாங்க ஊழியர்களையும் தவிர வேறே யாராவது இங்கே இருந்தால்தான் ஆச்சரியப்பட வேண்டும்," என்றாள்.

"ஊழியர்களை அரசாங்க ஊழியர், சாதாரண ஊழியர் என்று பிரிக்காதே," என்றார் ராதானந்தர் புன்னகையுடன்.

சற்றுப் பின்னால், கைத்தடியும் கறுப்புக் கம்பளியும் புகை கக்கும் லாந்தரும் பிரம்மாண்ட மீசையுமாக வந்து கொண்டிருந்த ஆந்திர விவசாயி ஒருவன், "நான் போய் வரோணுங்க, சாமி. படுத்துத் தூங்குங்க," என்று தெலுங்கு மொழியில் தெரிவித்துவிட்டுப் போய் விட்டான்.

ஜீப்பில் தனது உடைமைகள் ஏற்றி வைக்கப்பட்டிருப்பதை அப்போதுதான் கண்டார் ராதானந்தர். அவருடைய புன்னகை இன்னும் விரிந்தது.

"ஓ! பலாத்காரத்தில் இறங்கத் தீர்மானமா?" என்றார் வாலிபனிடம்.

"கடைசி ஆயுதம்," என்றான் அவன்.

"நீங்கள் எவ்வளவு பேர் இருக்கிறீர்கள்?"

"பதினைந்து."

ராதானந்தர் மெல்ல நகைத்தார். "இதோ இப்போது என்னைக் கொண்டு விட்டுப் போகிறானே, அந்தக் கிராமத்தானைப் போலச் சுமார் இருநூறு பேராவது எனக்கு இருக்கிறார்கள்."

"மிரட்டுகிறீர்களா?"

"எச்சரித்தேன்," என்று அமைதி குறையாமல் பதிலளித்தார் ராதானந்தர். "நான் போகிறேன் என்று

சொன்னால்கூட இவர்கள் விடமாட்டார்கள் என்பதால் எச்சரிக்கிறேன். அப்புறம் உங்கள் இஷ்டம்.''

சத்யா பொறுமை யிழந்தவளாக மாணவனிடம், ''நீங்கள் தயவு பண்ணி ஐந்து நிமிடம் அமைதியாயிருங்கள். அவருடைய பெட்டி படுக்கைகளையும் தயவு செய்து உள்ளே கொண்டுபோய் வையுங்கள்,'' என்றாள்.

அவன் முணுமுணுத்துக் கொண்டே சத்யாவின் உத்தரவுகளை நிறைவேற்றினான். ''நான் அதிக நேரம் காத்திருக்க முடியாது. சீக்கிரம் வாருங்கள்,'' என்று விறைப்பாகச் சொல்லி விட்டு ஜீப்பில் சென்று அமர்ந்து கொண்டான்.

''உள்ளே வாயேன்,'' என்று அழைத்தார் ராதானந்தர்.

மறுக்காமல் பின்தொடர்ந்தாள் சத்யா. இருட்டில் துழாவியபடி ஒரு முட்டை விளக்கை ஏற்றி வைத்தார்.

சத்யா தனது சினத்தை மறைக்காமல், ''என்னதான் உலகத்தை நீங்கள் துறந்துவிட்டதாகச் சொன்னாலும் உங்களை மற்றவர்கள் அடியோடு துறந்துவிடவில்லை. உங்களுடைய நலனிலும் பாதுகாப்பிலும் மற்றவர்களுக்கும் அக்கறை உண்டு,'' என்றாள்.

''நன்றி, சத்யா ''

''ஆபத்தான இந்த இடத்துக்கு உங்களை யார் அழைத்தார்கள்?''

''அழைப்பு என்ற அழகான வார்த்தையை உபயோகித்து விட்டாய். அது எப்போதும் இங்கிருந்துதான் வரும்.'' ராதானந்தர் தன் இருதயத்தில் கை வைத்துக் காட்டினார்.

''புண்ணியமுண்டு. உங்கள் வேதாந்தங்களைச் சிறிது மூட்டை கட்டி வையுங்கள்.''



''வேறெப்படிப் பதில் சொல்லச் சொல்கிறாய்? சன்னியாசி என்றால் மரம், பாறை என்று நீ நினைத்திருக்கிறாய். நான் அவனைத் தொண்டன், ஊழியன், துன்பப்பட்ட இடங்களில் துணை நிற்பவன் என்று நினைக்கிறேன். அதுதான் வித்தியாசம்.'' ராதானந்தர் தலையைச் சிறிது உயர்த்திக் கண்களை மூடிக்கொண்டார். அவருடைய முகத்தில் ஒரு தெய்விகமான சாந்தமும் பொலிவும் தோன்றின. தன்னை அடிமைப்படுத்தும் ஒரு தூய நினைவில் அவர் உள்ளம் சஞ்சரிப்பதையும், அந்த நினைவின் வடிவங்களாக மெல்லப் பேசுவதையும் சத்யா கவனித்தாள். ''பஞ்சம், கொள்ளை நோய், ஜனங்களின் கஷ்டம்... இவைகளைப் பற்றிக் கேட்கும்போதும் படிக்கும் போதும் எனக்கு மனம் நிலைகொள்ளமாட்டேனென்கிறதே, என்ன செய்யட்டும்? ஆயிரம் உயிர்களை காப்பாற்றுகிற தொண்டில் ஒரே ஓர் உயிர் போனாலென்ன என்று சிரித்துக்கொண்டே பலியாகிறவர்களை நாம் பார்த்திருக்கிறோம்...''

சத்யா ஆவலுடன் கவனித்தாள். அவள் இதயம் படபடத்தது, ராதானந்தர் பேசப் பேச காஷ்மீருக்குப் போனவர் காவியுடையுடன் திரும்பிய மர்மத்தை உடைக்கப்போகும் ரகசியமொன்று, இதோ, இதோ வெளிப்பட இருக்கிறது......

இல்லை. ராதானந்தர் அவள் நம்பிக்கைக்கு நீரூற்றவில்லை. கனவிலிருந்து திடுமென்று விழித்தவர்போல, ''சரி, சத்யா. போ, போ, உனக்கு நேரமாகிறது,'' என்றார்.

''நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதைத் தெரிந்துகொண்ட பிறகுதான் அடியெடுத்து வைப்பேன்,'' என்றாள் சத்யா கடுமையான பிடிவாதத்துடன்.

''நீ என்ன செய்கிறாயோ அதையே நானும் செய்வதாக வைத்துக் கொள்ளேன்.''

''நீங்கள் டாக்டரல்லவே? வைத்தியத்துக்கு ஒருநாளும் படித்ததில்லையே?''

''நான் மனிதன் என்பதையாவது ஒப்புக்கொள்கிறாயா? கல்லூரி மாணவனாக இருந்தவன் என்பதையாவது ஏற்றுக் கொள்கிறாயா?''

''அதனால்?''

''ரொம்ப அவசரமான சமயத்தில் முதலுதவி செய்கிறேன். முடிந்த சமயங்களில், அருகிலுள்ள ஆஸ்பத்திரிக்கோ டாக்டரிடமோ நோயாளிகளைத் தூக்கிச் செல்கிறேன். பிறகு......''

''பிறகு?''

''வைத்தியர்களும் அரசாங்க அதிகாரிகளும் எங்கே மனிதனை விட்டு விடுகிறார்களோ அங்கேயும் என் தொண்டைச் செய்கிறேன்.''

''புரியவில்லையே!''

ராதானந்தர் முதன் முறையாக உணர்ச்சிவசப்பட்டவராகப் பேசினார்.

''வரும் வழியெல்லாம் பார்த்துக் கொண்டுதானே வந்தாய்? மனிதனாகப் பிறந்தவன், நாயைப் போலவும் எலியைப் போலவும் பன்றியைப் போலவும் செத்துக் கிடக்கிறானே, உன் கண்ணில் பட்டதல்லவா?''

''அதற்கு?''

''நாசியில் சுவாசம் நின்றதும் நீங்கள் கைவிட்டுவிட்டு ஓடுகிறீர்கள். அவனது இருதயத்தின் அந்தரங்கத்துக்குள் அந்தரங்கமானது எதுவோ அதைப்பற்றி உங்களுக்குக் கவலையில்லை. நான் அப்படியல்ல. நீங்கள் விட்ட இடத்திலும் எனக்கு வேலை இருக்கிறது.''

''நான்...... எனக்கு......''



''ஆமாம், ஆமாம். புரியாதுதான்,'' என்று வேகத்துடன் பதிலளித்தார் ராதானந்தர். ''இறந்த மனிதனின் கடைசிச் சடங்குகளுக்கு ஒரு அவசியமும் கிடையாது என்று நீங்கள் குழியில் அவனைத் தள்ளி, காலால் மண்ணைப் போட்டு மூடிவிட்டுப் போகிறீர்கள். அவனுக்கு அதற்குப் பின்னும் வேறொரு வாழ்வு உண்டு என்ற நம்பிக்கையுள்ள நான்— என்னைப் போலப் பலபேர், பல இடங்களில்— அவரவர் மதத்துக்கேற்றபடி அதற்கு அடக்கங்கள் செய்கிறோம். குறைந்தபட்சம் அதற்காகவாவது நான் இங்கே தங்குவதற்கு நீயும், உன் படிப்பறிவுள்ள தோழர்களும் அனுமதி கொடுப்பீர்களல்லவா?''

சத்யாவின் கண்முனைகளில் நீர் துளித்துக்கொண்டிருந்தது. ''என்னை மன்னியுங்கள்'' என்றாள் தழுதழுத்த குரலில். ''நீங்கள் பாதுகாப்புடன் இருக்கவேண்டுமென்பதற்காகத்தான் நாங்கள் வற்புறுத்தினோமே தவிர, உங்களுடைய கடமைகளைத் தடுப்பதற்காக அல்ல...... அதுவும், நீங்கள் 'அம்மைப் பால் வைத்துக்கொள்ள மாட்டேன். தடுப்பு ஊசி போட்டுக் கொள்ள மாட்டேன்' என்று பிடிவாதம் பிடித்ததால்......''

''உங்களுடைய வைத்திய முறைகளுக்கு நான் கட்டுப்பட விரும்பாததுதான் காரணம்.''

சத்யாவின் குரல் இன்னும் பணிவுள்ளதாயிற்று. ''கொஞ்சம் விட்டுக் கொடுங்கள். இறந்தவர்களுக்கு உதவி செய்கிற உற்சாகத்தில், இருப்பவர்களும் இறந்தவர்களாகி விடக் கூடாதல்லவா?''

ராதானந்தரின் உதட்டில் புன்னகை மலருவதைக் கண்டதும் சத்யா துணிச்சல் பெற்றாள். வெளியே சென்று ''வாக்ஸினேஷன் கருவிகள் ஜீப்பில் வைத்திருக்கிறீர்களல்லவா? கொஞ்சம் எடுத்து வாருங்கள்,'' என்று குரல் கொடுத்தாள்.

அவன் வேண்டா வெறுப்பாக ஸ்பிரிட் விளக்கையும் மற்ற உபகரணங்களையும் கொண்டுவந்து ஒரு மேஜை மீது வைத்துவிட்டு, "இன்னும் ஐந்து நிமிடம்தான் காத்திருப்பேன்," என்று சொல்லிக்கொண்டே திரும்பிப் போய் விட்டான்.

சத்யா துரிதமாக விளக்கேற்றி, கருவிகளைச் சுத்தப் படுத்தினாள். "ஊம், கையை நீட்டுங்கள்," என்று உரிமையான அதட்டலுடன் அவரது கரத்தைப் பற்றிய போது அவள் உடலில் ஒரு சிலிர்ப்புப் பிறந்தது.

மூன்று நிமிடங்களில் அவள் வேலை முடிந்தது. "காய்ச்சல் வந்தாலும் வரும், பார்த்துக்கொள்ளுங்கள்," என்று கூறிவிட்டு ஜீப்பை நோக்கி நடந்தாள்.

"மறுபடி எப்போது வருவாய்?" என்று ராதானந்தர் கேட்பாரென எதிர்பார்த்தாளோ?

அவர் கேட்கவில்லை. கூம்பிய உள்ளத்தையும் சோர்வுற்ற தேகத்தையும் சுமந்துகொண்டு அவள் திரும்பிய போது, அவளுடைய ஜீப் தோழன் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. கோபம் தணியாமலிருக்கிறான் என்று ஊகித்துக் கொண்டாள்.

அவனுடைய ஏரியாவைத் தாண்டி, சத்யாவின் ஏரியாவுக்குத் திரும்பும் வழியில் அவன் ஜீப்பை நிறுத்தினான்.

"எனக்கு ஜுரம் வரும் போலிருக்கிறது. ஆகவே இனிமேல் ஓட்ட முடியாது," என்றான்.

"நான்......" என்று சத்யா திகைத்தாள்.

"எங்கள் முகாமிலேயே தங்கலாம்," என்று அலட்சிய மாகப் பதிலளித்தான் அவன். "அல்லது தைரியமிருந்தால் நீங்களே ஓட்டிக்கொண்டு போங்கள். நாளைக்கு யாரை யேனும் அனுப்பி ஜீப்பை எடுத்துக் கொள்கிறோம்."



வேண்டுமென்றே சவால் விடுகிறான்! சத்யாவுக்கு ஐயமில்லாமல் புரிந்தது.

"சரி. நானே ஓட்டிக்கொண்டு போகிறேன்," என்றாள்.

விடிகாலை மூன்று மணி சுமாரான கும்மிருட்டில், முன் பின் பழக்கமில்லாத பாதையில் அவளுடைய ஜீப் ஓடத் தொடங்கியது.

சுமார் இரண்டு மைல் சென்ற பிறகு, பின்பக்கம் கடகடவென்று ஓசைப்படுவது காதில் விழுந்தது.

ஜீப்பைச் சற்று நிறுத்தி என்னவென்று பார்த்தாள்.

வங்காள வாலிபன் ராதானந்தரின் உடைமைகளைத் திரும்பக் கொண்டுபோய் வைத்தபோது அதை மறந்து விட்டான். அல்லது வேண்டுமென்றே விட்டுவிட்டான்.

ராதானந்தரின் காஷ்மீரப் பெட்டிதான்!

## இருபத்தாறு

ஜீப்பை ஒரு நிமிடம் நிறுத்தி விட்டு யோசித்தாள் சத்யா.

சட்டென நிறுத்தப்பட்டதால் ஏற்பட்ட குலுங்கலால், அந்தக் காஷ்மீரப் பெட்டி மெல்ல ஆடிக்கொண்டே அவளை நோக்கியது. அரையிருட்டில் தென்பட்ட சர்ப்பத் தைப் போல, அந்த விடிகாலை வேளையின் மங்கிய ஒளியில் ஜீப்பின் உட்புறமிருந்த அந்தப் பெட்டி அவளைத் திகைக்கச் செய்வதாயும் அச்சுறுத்துவதாயும் இருந்தது.

எவனோ பைத்தியக்காரன் அவிழ்த்தெறிந்துவிட்டு ஓடிய ஆடையைப்போல, செம்மண் சாலை கோணலும் மாணலுமாக நீண்டு கிடந்தது. இரவு கடைசி மூச்சை

விட்டுக் கொண்டிருந்த அந்த நேரத்தில்கூட, இதமான குளிர் காற்று வீசாமல், வெப்பமான காற்றே வந்து கொண்டிருந்தது. தன் உள்ளத்தினுள் பொதிந்துள்ள ஆதங்கம்தான் அப்படி உஷ்ணமாக வெளிப்படுகிறதோ என்று சத்யா எண்ணினாள். அத்தானின் கரம் பற்றிய நிமிட முதல் இருந்துவந்த நிறைவு உணர்ச்சி மறைய, அங்கே திகில் இடம் பிடித்தது.

உணர்ச்சி மிகுதியினால் ஏற்பட்ட பதற்றம் அவள் கரங்களை மெல்ல நடுங்கச் செய்து கொண்டிருந்தது. வெளிர் மஞ்சள் நிறத்தில், தாழ்ப்பாள், பிடி, இணைப்பு எல்லாமே பிரம்பால் செய்யப்பட்டிருந்த அந்த அழகிய பெட்டி, சத்யாவைச் சவாலுக்கும் அழைத்தது, மயக்கியும் இழுத்தது.

நடுங்கும் கைகளை அதன்மீது வைத்தாள்.

தீண்டத் தகாததைத் தீண்டிவிட்ட மாதிரி கையில் எரிச்சல் ஏற்பட்டது. 'இதென்ன ஈனத்தனமான திருட்டுத் தனம் சத்யா?' என்று உள்ளுக்குள்ளிருந்து அதட்டுகின்ற குரலை அவளால் புறக்கணிக்க முடியவில்லை. யாரோ மறைந்திருந்து தன்னைக் கவனிப்பதுபோல அவள் உள்ளம் படபடவென்று துடித்தது. படுசூனியமான பாதையில், பேயும் உறங்கும் வேளையில் நிற்கிறோம் என்பதைப் பல முறை அவள் தனக்குத்தானே சொல்லிக்கொண்ட பின்னரும் தைரியம் வரவில்லை.

ஜீப்பை மறுபடி கிளப்பி, ஸ்டியரிங்கைத் திருப்பினாள். ஏக்கத்துடன் அவள் பார்வை பின்னேயிருந்த பெட்டியின் மீது தங்கியது.

ராதா அத்தானுக்குக் காஷ்மீரில் ஏற்பட்ட அதிர்ச்சியை இந்தப் பெட்டி விளக்கக்கூடும். அங்கே என்ன நடந்தது? உல்லாசம் ததும்பிய வாலிபனை உலகம் வெறுத்த துறவி யாக மாற்றியது எது? எவரும் இதுவரை விடுவிக்காத பல புதிர்களுக்கு, இந்தப் பெட்டியை ஒரே ஒருமுறை திறந்து



பார்த்து விடை கண்டுகொள்ள முடியும். அந்த விடை அவளுடைய தீராத சிக்கலுக்கு ஒரு வழிகாட்டுமோ என்னவோ? பறிகொடுத்துவிட்ட உயிரைத் திரும்பப் பெற அவள் நடத்துகிற போராட்டத்தில் எப்படிப்பட்ட ஆயுத மாகக் கை கொடுக்குமோ?...

வேண்டாம்.

தீர்மானமாக முகத்தைத் திருப்பிக்கொண்டு வாகனத் தைச் செலுத்தினாள் சத்யா. அவள் அறிவோடும் உணர்வோடும் கலந்து வளர்ந்திருந்த நேர்மையுணர்வு, மனச்சாட்சி தடுக்கின்ற எந்தச் செயலையும் செய்ய அனுமதிக்கவில்லை. அத்தானை மறுபடி சந்திக்க— தனியே சந்திக்க— இன்னொரு சந்தர்ப்பம் கிட்டியதில் உள்ளூர மகிழ்ந்தாள் அவள்.

கையோடு திருப்பிக்கொண்டுபோய்ச் சேர்ப்பித்துவிட வேண்டும் என்று ஏற்பட்ட வேகத்தை மட்டும் அப்போதைக்குக் கட்டுப்படுத்திக் கொண்டாள். நேரம் கடக்கக் கடக்க, வைத்தியக் குழுவின் தலைவர் என்ற முறையிலும், தன்மீது அன்பு செலுத்துபவர் என்ற வகை யிலும் டாக்டர் சம்பத்தின் வேதனை அதிகரிக்கும். தூங்காமலே காத்துக்கொண்டிருப்பார் அவர் என்ற நினைவு வந்தது சத்யாவுக்கு. முடிந்தால் பகலில் மீண்டும் ஒருமுறை திரும்பி வரலாம்...

முகாமிட்டிருந்த இடத்தை அவள் திரும்ப அடைந்த போது, பொழுது மட்டும் விடிந்திருக்கவில்லை. உயிர்க் களையே வந்திருந்தது. முந்தின இரவு சுடுகாடாகக் காட்சியளித்த அந்தக் கிராமத்தில், அந்தச் சுறுசுறுப்பை யும், வேகமான நடவடிக்கைகளையும் கண்டவுடனேயே சத்யாவுக்கு உறுத்தல் ஏற்பட்டது. இந்தப் புனித வேள்வி யில் துணை நிற்க வேண்டியவள், தன்னுடைய சொந்தச் சுயநலப் பிரச்சினையிலே இத்தனை நேரம் உழன்று கொண்டிருந்தோமே என்ற வேதனையுடன் ஜீப்பைத்

தொலைவிலேயே நிறுத்திவிட்டு ஓட்ட ஓட்டமாக ஓடிவந்து டாக்டர் சம்பத்தின் குழுவில் கலந்து கொண்டான்.

''வந்தாயா, நல்லது,'' என்றதற்குமேல் அவனுடைய கவலைகளைப்பற்றி உசாவிக் கொண்டிருக்கவில்லை டாக்டர் சம்பத். அவருடைய முகம் இறுகியிருந்தது. ஆண்மை மிகுந்த புஜங்களில் வியர்வையையும், நெற்றியிலே சிந்தனைகளையும், கண்களிலே கட்டளைகளையும் கண்டான் அவன். கடினமான ஆபரேஷனைச் செய்யவிருக்கும்போது, நுண்மையிலும் நுண்மையான நரம்புகளைப் பிரித்தும் முடித்தும் கைகளை இயக்கிக் கொண்டிருக்கும்போது அவரிடம் காணப்படும் தெய்வீகமான— எனவே பயபக்தி ஏற்படுத்தும்— களையை இன்றும் இங்கேயும் கண்டான் சத்யா. பேறுகளிலெல்லாம் பெரும்பேறு இப்படிப்பட்டவர்களின் அருகே நின்று, அவருடைய விருப்பங்களையும் உத்தரவுகளையும் சிரத்தாலேற்றுச் செய்வதல்லவா என்ற பெருமிதமான நினைப்புடன் ''நான் என்ன செய்யவேண்டும் டாக்டர்?'' என்று பணிந்தடங்கிய குரலில் கேட்டான்.

''இரு'' வைசூரி நோயாளி ஒருவனை எடுத்துவந்து கொண்டிருந்த சம்பத், அவனை மெல்ல ஒரு மரத்தினடியில் கிடத்தினார். பிறகுதான் சத்யா கவனித்தான். காலரா நோயாளிகள் ஒருபுறமும் வைசூரி நோயாளிகள் இன்னொரு புறமுமாக வெவ்வேறு மரங்களின்கீழ்க் கிடத்தப்பட்டிருந்தார்கள். காலரா நோயாளிகளுக்கான ஸலைன் ட்யூப்கள் மரக்கிளைகளில் கட்டித் தொங்கவிடப்பட்டு, மருந்துகள் நோயாளிகளின் ரத்தக் குழாயில் இணைக்கப்பட்டிருந்தன. கிட்டத்தட்டச் சவம்போல் வெளுத்துக் கிடப்பவர்களையும், கிட்ட நெருங்கினாலே அனலடிக்கும் காய்ச்சல்காரர்களையும் பல மரங்களின் கீழே சத்யா கண்டான்.



டாக்டர் சம்பத், சற்றுத் தள்ளி நின்றிருந்த இரண்டு சிறுவர்களைக் கைதட்டி, அருகில் அழைத்தார். பிறகு சத்யாவிடம், ''இவர்களுடன் போ. கதவைத் திறந்து கொண்டு வெளியே வரக்கூட முடியாது என்று பிடிவாதம் பிடிக்கிறார்கள் பலபேர். பாவம், கதவைத் திறந்தால் நோய் பிடித்துக் கொள்ளும் என்று பயம். இந்தப் பிள்ளைகள்தான் அவர்களுக்குத் தைரியம் சொல்லிக் கதவைத் திறக்க வைத்தவர்கள். அப்படியும் சில வீடு பாக்கி இருக்கிறது,'' என்றார்.

''இதோ போய் அவர்களையும் அழைத்து வருகிறேன் டாக்டர்,'' என்று சொல்லிவிட்டு, அந்தப் பையன்களுடன் புறப்பட்டான் சத்யா.

முதலில் அவனுக்கு டாக்டரின் தகவல் மிகைப்பட்டதாகவே தோன்றியது. படிப்பும் நாகரிகமும் இவ்வளவு முன்னேறியுள்ள நாளில் கொள்ளைநோய் பிடித்துக் கொள்ளும் என்பதற்காக வெளியே வரக்கூட மறுக்கும் மக்கள் இருப்பார்களா என்று அவனுக்குச் சந்தேகமாய்த்தான் இருந்தது. எப்படிப்பட்ட குக்கிராமமானாலும், ஒரு பஞ்சாயத்து, நாலு தலைவர்கள், ஏதோ ஓர் அரசியல் கட்சி என்றெல்லாம் இருக்காதோ? அவர்கள் முன்வந்து ஜனங்களுக்கு எடுத்துரைத்திருக்க மாட்டார்களா?... சத்யாவுக்குத் தெரியாது, வழிகாட்ட வேண்டியவர்களே பீதி வசப்பட்டு, வீட்டோடு அடைபட்டுக் கிடக்கிறார்கள் என்பதும், துணிச்சலுடன் வெளியில் இறங்கி வேலை செய்த இரண்டொருவர் நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டதால், மற்றவர்களின் பயம் பத்து மடங்காக அதிகரித்து விட்டது என்பதையும் அவன் அறியவில்லை.

நல்ல வேளையாக, அவனை அழைத்துச் சென்ற சிறுவர்கள், பள்ளிக்கூடத்தைப் பார்த்தவர்கள். சுகாதாரத்தைப் பற்றிய பாடங்களை நெட்டுருப் போட்டவர்கள். ஒவ்வொரு வீட்டுக் கதவையும் தட்டுவதும், தாங்கள்

மட்டும் முதலில் உள்ளே சென்று பெரியவர்களுடன் பேசுவதும், சில இடங்களில் ஜன்னல்கள் வழியாகக் கெஞ்சுக்கொஞ்சி மன்றாடுவதுமாக, பல இளகாத நெஞ்சங்களை இளக வைத்து விட்டார்கள்.

அந்தப் பையன்கள் வழி செய்து கொடுத்த பின்னர் சத்யாவும் வெகுநேரம் வாதாடி, அந்தந்த வீடுகளிலுள்ள நோயாளிகளை வெளியே அழைத்து வந்தாள். சற்றுத் திடகாத்திரமாயிருந்த வாலிபர்களின் துணையுடன் அவர்களைத் தங்கள் முகாமுக்கு அனுப்பி வைத்தாள்.

இனி எந்த வீட்டிலும் நோயாளி இல்லை என்று நிச்சயம் செய்துகொண்டு அவள் திரும்பியபோது, சர்க்காரின் ஆம்புலன்ஸ் வண்டியும் நடமாடும் ஆஸ்பத்திரியும் வந்திருந்தன. ஸீரியஸ் கேஸ்களை அவற்றில் ஏற்றி அனுப்பிக் கொண்டிருந்தார் டாக்டர் சம்பத்.

''நாளைய தினம் அடுத்த கிராமம்,'' என்று கையில் விரித்து வைத்திருந்த வரைபடத்தை நோட்டம் விட்டவாறு தெரிவித்துக் கொண்டிருந்தார் அவர். சத்யாவைக் கண்டதும், ''நீ ஸ்டவ்வை மூட்டி, சுடுதண்ணீர் தயார் செய்,'' என்றார்.

லாரியிலிருந்து பல குவியல்களாக இறக்கப்பட்டிருந்த பொருள்களிலிருந்து ஸ்டவ்வையும் மற்ற உபகரணங்களையும் தேடி எடுத்தாள் சத்யா. ரத்னாவும் டாக்டர் காந்தாவும் அவளுக்கு உதவியாக வந்து சேர்ந்து கொண்டார்கள். ரத்னாவுக்கு, ஆஸ்பத்திரியிலும் சரி, கல்லூரியிலும் சரி, 'மிஸ் ஜி. எச்.' என்று பட்டம் உண்டு. அப்படி, இருபத்து நாலு மணி நேரமும் அலுங்காமல், நலுங்காமல் அலங்காரத்துடன் விளங்குகிறவள். இப்போது கையெல்லாம் அழுக்கும் முகமெல்லாம் வியர்வையுமாகக் காட்சி தந்தாள். ஆனால் உற்சாகம் குன்றாமல், ''இதோ பார், சத்யா. பாதாம் அல்வா, வெங்காய ரவா தோசை.



இதற்குமேல் நமக்காக டிபன் எதுவும் செய்யாதே!'' என்று சிரித்துக்கொண்டே ஸ்டவ்வின் பக்கம் உட்கார்ந்தாள்.

''சே! இவ்வளவு மூடத்தனமான ஜனங்களை நான் பார்த்ததேயில்லை!'' என்று திட்டியவண்ணம் டாக்டர் காந்தா, மாவு டின்களின் வாயைக் கத்தியினால் கிழிக்கலானாள்.

''காலைச் சிற்றுண்டி, பகல் உணவு, மாலை டிபன், இரவு விருந்து— எல்லாவற்றுக்கும் இந்தச் சர்வ உபயோக சமரச டின்தான்!'' என்றாள் ரத்னா. ''அமெரிக்க நன்கொடை. வெந்நீர் ஊற்றி, சத்து மாவு மாதிரி பிசைந்து நாம் உள்ளே தள்ள வேண்டும். ஆளுக்கு இரண்டு உருண்டை என்று ரேஷன் உத்தரவாகியிருக்கிறது.''

ஸ்டவ்வுக்குக் காற்று அடித்துவிட்டு விரலை நெட்டி எடுத்துக் கொண்டார் டாக்டர் காந்தா. ''இங்கேயிருந்து உன்னை அழைத்துக் கொண்டுபோன பிள்ளையாண்டானுக்கு உன்னைத் திரும்பக் கொண்டுவந்து விடுவதற்கு முடியவில்லையாமா?''

சத்யா சில விநாடிகளுக்குப் பிறகுதான் உணர்ந்தாள், கேள்வி தனக்குத்தான் என்பதை. ''யார்... அந்த பெங்காலி ஸ்டூடண்டா? பாவம், களைத்துப் போயிருந்தார்... நீங்கள்...''

''நீ தனியாய் ஜீப் ஓட்டி வந்ததைப் பார்த்தேன். ஏதோ நடந்து போ என்று சொல்லாமல், ஜீப்பாவது கொடுத்து அனுப்பினானே,'' என்றார் டாக்டர் காந்தா. ''கடைசியில் உன்... அந்த ஆள் யார்?''

''என் அத்தான்தான்,'' என்று சத்யா ஒப்புக் கொண்டாள். ''பிடிவாதமாயிருக்கிறார். நாம் எப்படித் தடுப்பது? கட்டாயப்படுத்தி, வாக்ஸினேஷன் மட்டும் செய்துவிட்டு வந்தேன்.''

டாக்டரின் பார்வை சரேலென அவளை நோக்கி ஒரு முறை உயர்ந்து, உடனேயே தாழ்ந்தது.

வெய்யில் உச்சிக்கு ஏறி, சாப்பாட்டு நேரம் எப்போதோ தாண்டிவிட்டதால், குழுவைச் சேர்ந்த எல்லாரும் கபகபவென்று அவர்களைச் சுற்றிக் குழுமி விட்டார்கள் டாக்டர் காந்தாவும் ரத்னாவும் பேச்சை மாற்றி விட்டார்களாயினும், சத்யாவுக்கு, மறந்து போயிருந்த எண்ணங்கள் கிளைத்தன.

அந்தப் பெட்டி... மறந்தே போய் விட்டோமே...

மற்றவர்கள் மாவைப் பிசைந்து உருண்டைகளாக்கி ஏதோ ஒருவிதத்தில் சமாளித்துக்கொண்டிருந்த சமயம் மெதுவாக வெளியே நழுவினாள்.

கூடாரங்களைத் தாண்டி மறுபுறம் வந்தபோது திக்கென்றது.

காலையில் ஓட்டி வந்து நிறுத்திய ஜீப் எங்கே? இட்டத்தட்டப் பொட்டல் காடு போலிருந்த அந்தத் திறந்த வெளியில் மறைவாக எங்கேயோ இருக்கவும் வாய்ப்பில்லை. எதற்கும் பார்ப்போமென்று அண்மையில் தெரிந்த இரண்டொரு சந்துகளுக்குள் சுற்றிப் பார்த்து விட்டு ஏமாற்றத்துடன் திரும்பினாள்.

''ஸாரி சத்யா... உன்னிடம் சொல்ல மறந்து விட்டேன்,'' என்றார் டாக்டர் சம்பத் அவளைக் கண்டதும்.

''என்ன டாக்டர்?''

''காலையில் நீ கிராமத்துக்குள் போயிருந்தபோது அந்த வங்காள மாணவன் வந்து ஜீப்பை எடுத்துப் போய் விட்டான்,'' என்றார் சம்பத்.

''ஓகோ,'' என்று தலையாட்டினாள் சத்யா. அதற்குள்ளே அத்தானின் பெட்டி இருந்ததே, அது என்ன



ஆயிற்று என்று அவரைக் கேட்கத் துடித்தது மனம். ஆனால் எப்படிக் கேட்பது? அற்பமான தனது சொந்தப் பிரச்சினைகளை இவர் மீது— அதிலும் இப்படிப்பட்ட சூழ்நிலையில்— திணிப்பது தவறு என்று வாளாவிருந் தாள்.

மறுபடி அந்த வங்காளி மாணவர்களின் குழுவுக்குச் சென்று, பெட்டியைப் பெற்றுக்கொண்டு, அத்தானிடம் போகவேண்டும்... இந்தக் கவலையில் அவள் மூழ்கி யிருக்கையில், வெய்யில் தகித்து, இறங்கி, நிலம் சூடு குறைந்து இருளில் முழுக ஆரம்பித்தது. இந்த இடத்தில் வேலையில்லை என்று ஆகிவிட்டதால், அடுத்த முகாமுக்குப் புறப்பட எல்லோரும் ஆயத்தமானார்கள்.

சத்யாவுக்கு ஆச்சரியம் காத்திருந்தது.

''இது உங்கள் பெட்டியா?'' என்று கேட்டவாறு டாக்டர் சம்பத்தின் உதவியாளர்களில் ஒருவர் அவளிடம் வந்தார்.

''ஆமாம், ஆமாம்,'' என்று இரண்டு கையையும் நீட்டி ஆர்வத்துடன் பெற்று, ஆறுதலுடன் அணைத்துக் கொண்டாள் சத்யா. அந்தக் காஷ்மீரப் பெட்டி அப்படி யொன்றும் கனமாக இருக்கவில்லை என்பதையும் அப்போதுதான் முதல் தடவையாக உணர்ந்தாள்.

''ஜீப்பை எடுத்துக்கொண்டு போன மாணவன், சுத்த மானர்லஸ் முட்டாள். போகிற போக்கில் இதை எனது டெண்ட்டுக்குள் எறிந்து போனான். உங்களுடைய தாகத்தான் இருக்கும் என்று எடுத்து வைத்தேன்,'' என்றார் அவர்.

''ரொம்ப நன்றி,'' என்று அவருக்கு விடை கொடுத் தனுப்பிய பிறகு, ஒரு நிமிஷம் உதட்டைக் கடித்துக் கொண்டு நின்றாள்.

இதை எப்படி மறுபடி கொண்டுபோய்ச் சேர்ப்பிப்பது? எல்லோரும் அடுத்த முகாமுக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில்...

சட்டென்று சத்யாவின் முகம் மலர்ந்தது.

கூடாரக் கம்புகளைக் கயிற்றால் கட்டிக் கொண்டிருந்த டாக்டர் சம்பத்திடம் விரைந்தாள்.

''என்ன, இங்கும் அங்குமாய் உலாத்திக் கொண்டிருக்கிறாய்?'' என்று டாக்டர் வினவியதும் சத்யாவுக்குத் தர்ம சங்கடமாகிவிட்டது.

''இதை...'' என்று கையிலிருந்த பிரம்புப் பெட்டியைக் காட்டினாள். ''தவறாக எடுத்து வந்து விட்டோம்... அத்தானிடம் திரும்பச் சேர்க்க வேண்டும்.''

''அவசரமா?''

''அப்படியில்லை... ஆனால் இதைக் காணாமல் அவர் ரொம்பக் கவலைப்படக் கூடும்...''

''என்ன செய்யலாம் என்கிறாய்?'' என்று அவளையே திருப்பிக் கேட்டார் சம்பத்.

''நான்... நான் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு வந்துவிடுகிறேன்...''

''இந்த வேளையில் நீ தனியாக உன் அத்தானைச் சந்திக்கச் செல்வது சரியில்லை, ஒழுங்கில்லை.'' டாக்டர் சம்பத் அகன்றுவிட்டார்.

திகைத்து நின்றாள் சத்யா. டாக்டர் தடுத்துச் சொன்ன பிறகு அவளுடைய குறுகுறுப்பும் ஆர்வமும் இரு மடங்காகின.

அப்போது அந்தச் சைக்கிள் அவள் கண்ணில் பட்டது. டாக்டர் சம்பத்தின் அப்பா கொடுத்த சைக்கிள்.



சின்னஞ்சிறு குத்து விளக்கின் தீபச்சுடர், கைதேர்ந்த நடனக்காரியைப்போல வளைந்தும் நெளிந்தும் அசைந்து கொண்டிருந்தது. அதனிடமிருந்து வெளிப்பட்ட ஒளி, இரண்டடி சுற்றுப்புறத்தைக்கூடத் தெளிவாக்கவில்லை.

வாசலிலே சைக்கிளை நிறுத்தி விட்டு நிலைப்படியருகிலேயே நின்று, கண்ணை உறுத்திக்கொண்டு நோக்கினாள் சத்யா. கொஞ்சம் கொஞ்சமாக விளக்கின்முன் படுத்திருந்த உருவம் புலப்பட்டது.

சட்டையோ மேல் துண்டோ மறைக்காத திண்மையான தோளும், பரந்த முதுகும் சத்யாவின் பார்வையில் புலனாயிற்று.

டாக்டர் சம்பத் தடுத்தபோதே அவள் உள்ளத்திலுள் ஏற்பட்டிருந்த குறுகுறுப்பு, இப்போது தானும் அத்தானும் தனியாயிருந்த நேரத்தில் மடமடவென்று வளர்ந்தது.

இதோ இங்கே விளக்கினடியில் படுத்திருப்பவரைச் சன்னியாசியாக, உலகை வெறுத்த துறவியாக அவள் என்றைக்குமே நினைத்ததில்லை. அப்படி எப்போதாவது ஒரு வினாடி எள்ளத்தனை நினைத்திருந்தாலும் அந்த நினைப்பு பறந்துவிட்டது இப்போது. ஸ்டெதஸ்கோப் மாட்டிக்கொண்ட மாத்திரத்தில் டாக்டராக ஆகிவிட முடியுமா? அதே போல், வெறும் காவித் துணியே ஒருவரைச் சாமியாராக ஆக்கிவிடாது என்று அவள் நம்பினாள்.

உடம்போ உணர்ச்சிகளோ ஆசைகளோ தாபங்களோ இல்லாத மரக்கட்டையான இவரல்ல உண்மையான ராதா; 'சத்யாக்கழுதை' என்று டில்லியிலிருந்து வேடிக்கைக் கடிதம் எழுதியனுப்பிய குறும்புக்கார அத்தான்; சத்யாவின் தலையணைக்கடியில் சாக்லேட்டுகளை வைத்து விட்டுப்போன தீராத விளையாட்டுப் பிள்ளை; பண்ணை ஆட்களின் உடைகளுக்காக ரூபாய் நாலாயிரத்தைக்

கூசாமல் தூக்கியெறிந்த தாராளக்காரன்; நாடகக்காரி ராணியின் வீட்டில் நாளெல்லாம் பழிகிடந்த உல்லாசி— அந்த ராதாதான் நிஜமான, அசல் ராதா. மற்றதெல்லாம் போலி; பொய்.

படபடக்கும் இருதயத்துடன் சத்யா நின்றிருந்த அதே சமயம் ராதானந்தர் புரண்டார்.

தூக்கி வாரிப்போட்டது சத்யாவுக்கு.

அவர் தூங்கிக்கொண்டோ, ஓய்வெடுத்தவாறோ படுத்திருக்கவில்லை. அனல் பறக்கும் காய்ச்சலில் அவதிப் படுகிறார் என்பதை அவருடைய முனகலும், முகத்தின் வாட்டமும் தெளிவாய்க் காட்டின.

"அத்தான்!" என்று பதறிப் போனவளாக அவரருகே ஓடி, நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள். குறைந்த பட்சம் நூற்றொன்று இருக்குமெனத் தோன்றியது. 'அம்மைப் பால்' வைத்ததன் எதிரொலி.

"அத்தான்! இன்றைக்கு அதிகமாக அலைந்தீர்களா? எப்போது பிடித்துக் காய்ச்சல்? யாராவது உதவிக்கு இருக்கிறார்களா?" என்று அடுக்கடுக்காய்க் கேட்டாள் சத்யா.

மெதுவாய்க் கண்களைத் திறந்த ராதானந்தர், "எனக்கு ஒன்றுமில்லை. நீ எதற்காக வந்தாய்? போ!" என்றார் பரபரப்புடன்.

"நான் போவதுதான் இருக்கவே இருக்கிறதே, உங்கள் உடம்பைப் பற்றிச் சொல்லுங்கள் முதலில்."

"சொன்னேனே, ஒன்றுமில்லையென்று. நீ இங்கே இருப்பது சரியில்லை. தயவு செய்து உடனே போய்விடு."

ராதாவை ராதானந்தராகக் கண்ட தினத்துக்கப்புறம் இன்றுதான் சத்யாவின் உள்ளம் குதூகலத்தால் துள்ளியது. 'சத்யா! நீ தோற்கப்போவதில்லை' என்று தனக்குத் தானே



சொல்லிக் கொண்டாள். பலானி மடம் என்கிற நான்கு இரும்புச் சுவர்களுக்குள் அடைபட்டிருக்கும்போது வேண்டு மானால் இவரும் இரும்பு மனிதராக இருக்கலாம். அதற்கு வெளியே, யாருமில்லாத தனிமையில் இருக்கும் போது இவர் சாதாரண மனிதர்; பலவீனமுள்ள, பயந்த மனிதர்; பெண்ணிடம் எதை இழந்து விடுவோமோ என்று அச்சப்படும் இயல்பினர். அது மட்டுமல்ல இந்த சத்யா விடம் கவர்ச்சியோ, காதலுணர்வோ செத்துவிடவில்லை. அதை உணர்கிற காரணத்தால்தான், இவர் துடிக்கிறார்.

"நான் போகமாட்டேன் அத்தான்!" என்றாள் சத்யா வெற்றுச் சிரிப்புடன். "எதற்கு வந்தேன் என்பதை முதலில் சொல்லிவிட்டு, பிறகு விடியும் வரையில் இங்கேயே தங்குகிறேன்."

விருவிருவென வாசலுக்குச் சென்றவள், சைக்கிளி லிருந்து அந்தப் பிரம்புப் பெட்டியை உள்ளே எடுத்து வந்தாள்.

"இதோ இதற்காக—"

அவள் பேச்சு திடுப்பென்று தடைப்பட்டது. சரியாகப் பிடித்திராததால், அந்தப் பெட்டியின் மூனை திறந்து கொள்ள, உள்ளேயிருந்த பொருள்கள் வெளியே விழுந்தன.

தெறித்து விடுவதுபோன்ற விழிகளால் சத்யா அந்தப் பொருள்களையும் ராதானந்தரையும் மாறி மாறிப் பார்த்தாள்.

விழுந்தவை, வெறும் துணிகள்தான். காவித் துணிகள் தான். ஆனால் அவை—

ஒரு காவிப் புடைவை, ஒரு காவி ரவிக்கை, ஒரு காவி உள்பாவாடை.

சத்யாவுக்குத் தலை சுற்றியது.

# இருபத்தேழு

காஷ்மீரப் பெட்டியில் ஒரு பெண்ணின் துணிகளைக் கண்டாளே, அதற்கு மறுநாள்.

நொடிக்கொருதரம் கைக் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள் சத்யா. அந்நாளை மீண்டும் போய்ப் பார்த்துவிட்டு வருவதே அவள் திட்டம்.

நல்லவேளை, அந்தச் சைக்கிளை உபயோகிப்பவர்கள் அவளைத் தவிர வேறு யாரும் இருக்கவில்லை. தொலைவும் அதிக பட்சம் ஒன்பது மைலுக்குள்ளாகவே இருக்கிறதென்று கணக்கிட்டிருந்தாள். ஆகவே சாயந்திரம் நாலு மணி சுமாருக்குப் புறப்பட்டுவிட்டால் இரவு வெகு நேரம் ஆகுமுன்பு திரும்பிவிடலாம் என்பது அவள் திட்டம். ரஸ்தாக்களில் பயம் இருக்கவில்லை.

வெய்யில் காயத் தொடங்கிய வினாடி முதலே அவள் பரபரத்துக் கொண்டிருந்தாள், விடை பெற்றுக்கொண்டு ஓட்டம் பிடிக்க. ஆனால் அப்போது பார்த்து டாக்டர் சம்பத், கிராமத்தின் எல்லையோரத்தில், டிரங்கு சாலையின் முகப்பில் அவளை நிற்குமாறு கட்டளையிட்டுவிட்டார். சென்னையிலிருந்து வைத்திய சப்ளைகள் வருமாம். அந்த டிரக்குக்கு வழிகாட்டி அழைத்து வர வேண்டுமென்று உத்தரவாயிற்று. சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் அவள் குறிப்பிட்ட இடத்தில் போய் நின்று கொண்டபோது மணி மூன்றாகியிருந்தது. இடுகாட்டின் மறு பதிப்பாக விளங்கிய சாலையில் அவள் சிந்தனைக்கோ பார்வைக்கோ தீனி தரக்கூடிய காட்சிகளும் இருக்கவில்லை. ஓர் ஆறுதல்; முன்னவ்வளவு கழுகுகளைக் காணோம்.

பாதி சிதைந்துவிட்ட மதகுச் சுவரொன்று சத்யாவுக்கு ஆசனமாக உதவிற்று. நேற்றைக்கு இருந்த அதிர்ச்சியும் கோபமும் அகன்று, இப்போது பதைப்பும் கவலையும் ஏற்பட்டிருந்தன. வாட்சைக் கவனித்தாள். மூன்றேகால் ஆகியிருந்தது.

அப்பாடா! வைத்திய சப்ளைகள் கொண்ட லாரிதான். ஓட்டி வந்தவர் அவளை இன்னாரென்று ஊகித்துக் கொண்டு தானாகவே நிறுத்தினார். அவர் விசாரிக்கு முன்பு சத்யாவே, ''இந்த வழிதான். வாருங்கள்,'' என்று கூறியதோடு தானும் ஏறிக்கொண்டாள்.

முகாமை அடைய ஐந்து நிமிடம்தான் பிடித்தது.

''உங்கள் லாரி, டாக்டர். ஒப்படைத்து விட்டேன்,'' என்று நறுக்குத் தெறித்தாற்போலத் தெரிவிக்கும் சத்யாவைக் கண்டு ஆச்சரியப்பட்டார் டாக்டர் சம்பத்.

''எதற்காக இப்படிப் பதறுகிறாய் சத்யா?'' என்று கண்டித்தவர், ''சீக்கிரம் பார்சல்களை இறக்கி, பாக்கெட்டுகளையும் பிரித்து வை. ஆறு மணிக்கெல்லாம் நாம் புறப்பட வேண்டும்,'' என்றார்.

''எ... எங்கே டாக்டர்?'' என்று கையைப் பிசைந்தாள் சத்யா. அவளுக்கு அழுகையே வந்துவிட்டது.

''எங்கே என்று கேட்கிறாய்?'' என்று அதிசயித்தார் சம்பத். பிறகு, ''ஓ! நீ காம்ப்பில் அதிகம் தங்கியிருந்தாலல்லவா தெரிந்திருக்கும்!'' என்று மெதுவாக ஒரு குத்தலையும் வெளிப்படுத்தினார்.

சத்யாவின் தலை தாழ்ந்தது. ''என்னை மன்னியுங்கள் டாக்டர்... எதையெல்லாம் மறக்கலாமென்று நான் இங்கே வந்தேனோ, அதெல்லாம் எனக்கு முன்னாலேயே இங்கே வந்து காத்துக்கொண்டிருக்கின்றன. என்னால் உங்களுக்கு உதவியைக் காட்டிலும் இடைஞ்சல்தான் அதிகம்...''

''பரவாயில்லை, பரவாயில்லை,'' என்று சமாதானம் கூறினார் டாக்டர் சம்பத். மதுராப்பள்ளியிலிருந்து பி. ஆ. ரெட்டி என்கிற ஜமீந்தார் வந்து அழைத்துவிட்டுப்

போனார் நேற்றுக் காலை. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இரவு அவர் மாளிகைக்கு நாம் வந்துவிட வேண்டுமாம். 'வாரம் பூரா மாவைப் பிசைந்துகொண்டு விழுங்குகிறீர்கள். ஒருவேளையாவது நல்ல சாப்பாடு சாப்பிட்டால்தான் மேற்கொண்டு வேலை செய்ய உற்சாகமிருக்கும். ஆகவே கட்டாயம் வாருங்கள்,' என்று சொல்லிவிட்டுப் போயிருக்கிறார். நானும் ஒப்புக் கொண்டிருக்கிறேன்...''

''இன்றைக்கு...''

''ஞாயிற்றுக்கிழமை. இரவு இதோ வந்து கொண்டேயிருக்கிறது. நீயும் இதோ கிளம்பிக்கொண்டிருக்கிறாய். அப்புறம் என்ன? ரைட்டோ!''

''டாக்டர்!'' என்று தவித்துப் பதறினாள் சத்யா. ''இன்று... நான்...''

''என்னது? அத்தானைப் பார்க்கப் போகிறேன் என்கிறாயா?'' என்று வாய்விட்டே கேட்டுவிட்டார் டாக்டர் சம்பத் கோபமாக. ''நோ சத்யா. நோ, நோ. நான் அனுமதி கொடுக்கமாட்டேன்.''

''இல்லை டாக்டர். இதுதான் கடைசித் தரம்... என் அத்தானை...''

''உன் அத்தானுக்காகவா இங்கே வந்தாய் நீ?'' என்று கடுமையாகக் கேட்டார் டாக்டர் சம்பத். ''நேற்று நீ திரும்பியபோது ராத்திரி மணி என்ன தெரியுமா? நான் போனால் போகிறதென்று பேசாதிருந்தேன்...''

''டாக்டர்! நான் சொல்வதை...''

''காது கொடுத்துக் கேட்க நான் தயாராயில்லை. ஏற்கெனவே அதிக இடமும் சலுகையும் கொடுக்கிறேனென்று எத்தனை பேரிடம் நான் கெட்ட பெயர் வாங்கிக் கொண்டிருக்கிறேன் தெரியுமா? இங்கே நாம் வந்திருப்பது, ஒவ்வொருவருடைய சொந்தப் பிரசினைகளையும் தீர்த்துக்



கொள்வதற்காக அல்ல. கடைசி மூச்சை விட்டுக்கொண்டிருக்கிறார்களே, இந்தக் கிராமத்தார்களைக் காப்பாற்றுவதற்காக. என்னைப்பற்றிச் சொல்லிவிடுகிறேன், கேள். இதே நிமிடத்தில் என் அப்பாவுக்கு ஏதோ நேர்ந்தது என்று தந்தி வருகிறது என்று வைத்துக்கொள். மருந்துப் பொட்டலம் கட்ட அந்தக் காகிதத்தை எடுத்து வைத்துக் கொள்வேன். அவ்வளவுதான். அதே மன உறுதியுடன் நான் நீயும் வந்திருக்கிறாய் என்று நினைத்தேன்...''

''அதில் தப்பில்லை டாக்டர். என் அத்தான் இங்கே வந்த பிறகு...''

''எதுவானாலும் சரி, சத்யா. நான் அனுமதி தர முடியாது. நீ என்ன வேண்டுமானாலும் நினைத்துக்கொள். நான் வேண்டுமென்றே தடை போடுவதாக எண்ணிக் கொண்டாலும் நான் மறுக்கப் போவதில்லை.''

கையைப் பட்டென்று உதறிக்கொண்டு டாக்டர் சம்பத் அகன்றுவிட்டார். அங்கொருவர் இங்கொருவரென்று சிலர் தங்கள் பேச்சைக் கவனித்துக் கொண்டிருப்பது தெரிந்தது சத்யாவுக்கு.

இனி, சாண் போனாலும் ஒன்றுதான், முழம் போனாலும் ஒன்றுதான்.

கூடாரத்தின் மறுபுறத்தில் மறைவாக நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள் அவளை மீண்டும் அழைத்தது.

ஒரு பெருமூச்சுடன் சத்யா சுற்று முற்றும் நோக்கினாள். யாரும் தன்னைக் கவனிப்பதாய்த் தெரியவில்லை.

கொஞ்சம் கோபிப்பார். சிறிது நேரம் பேசாமலிருந்தாலும் இருப்பார். பாதகமில்லை. டாக்டர் சம்பத்தைச் சமாளிப்பது பெரிய காரியமல்ல.

அத்தானைப்பற்றிய ஒரே கவலையுடன் சைக்கிளின் பெடலை அழுத்தமாக மிதித்து உந்தினாள் சத்யா.

**வெ**றும் இருட்டுத்தான் அவளை வரவேற்றது.

''அத்தான்!'' என்று நெஞ்சம் வெடிக்கக் கூவிக் குரல் கொடுத்தாள் சத்யா.

தாயைச் சுற்றிவந்து கண்ணாமூச்சி காட்டுகிற குழந்தை போல, அவள் குரலே அவளை எதிரொலித்தது அந்தச் சிறிய கூடத்திலிருந்து.

அத்தான் எங்கேயாவது சென்றிருப்பார், இதோ வந்து விடுவார் என்று ஆறுதல் கொள்ள இடமேற்படுத்தவில்லை அந்த வெறுமையான சூழ்நிலை.

கயிற்றுக் கொடியில் தொங்கிக் கொண்டிருந்த காவி அங்கவஸ்திரத்தையோ சுவர் மூலையிலிருந்த மண் கூஜாவையோ காணோம் என்பது மட்டுமல்ல, அந்தப் பிரம்புப் பெட்டியையும் காணோம்.

''அத்தான்!'' என்று இரண்டாம் முறை அவள் கூப்பிட்டபோது, ''யாரம்மா அது?'' என்று ஒரு முரட்டுக் குரல் பதில் கொடுத்தது.

இருமல் முதலிலும், லாந்தர் வெளிச்சம் இரண்டாவதாயும், சுருட்டுப் புகை மூன்றாவதாயும் வர, கடைசியில் வந்தான் அந்தக் கிழவன்.

அந்தத் தனிமையில் அவனைச் சந்திக்க நேரிட்டதே என்ற அச்சம், அவனுடைய சாவதானமான குரலைக் கேட்டதும் மறைந்தது.

''யாரு, சாமியா? அவங்க போயிட்டாங்களேம்மா?'' என்றான் கிழவன்.

''எங்கே போய்விட்டார்? எப்போது?'' என்று சத்யா படபடத்தாள்.

இரண்டுதரம் இருமிய பிறகு அந்தக் கிழவன், ''எனக்கெப்படியம்மா தெரியும்? இன்னைக்கு ஒரு கிராமம், நாளைக்கு ஒரு கிராமம் என்று சுத்தறவங்கதானுங்களே அவங்கள்ளாம்?'' என்றான்.



சைக்கிளில் ஏறிச் செல்லும் நினைவுகூட அற்றவளாக சத்யா தள்ளாடி நடந்தாள்— அதைத் தள்ளிக்கொண்டே. ஐயோ! அவள் அஞ்சியபடியே நடந்துவிட்டதா என்ன?

முந்தின தினம் நடைபெற்ற நிகழ்ச்சிகள் அடுக்கடுக்காக அவள் உள்ளத்தில் அலைமோதின...

ஒரு பெண்ணின் ஆடைகளை— காவி உடைகளை— கண்டதும் தலைசுற்றி, அதிர்ச்சியுடன் மயங்கி விழுந்தவள், கண்ணைத் திறந்தபோது, ராதானந்தர் தன்னை மெல்லத் தாங்கிக்கொண்டு விசிறியினால் விசிறிக்கொண்டிருப்பதைக் கண்டாள்.

அவரை நிமிர்ந்து பார்க்கவே அவளுக்கு அருவருப்பாயிருந்தது. செய்யத் தகாததைச் செய்துவிட்டு வந்திருக்கிறாரா இந்தப் பண்டார வேடதாரி? குற்றம் தாளாமல் குறுகுறுத்த நெஞ்சுடன் இருந்தவரைத் தூயவர் என்று மதிப்பிட்டது எத்தனை தவறு! இவர் பழைய ராதாவைக் காட்டிலும் பன்மடங்கு கேவலமான மோசடிக்காரர்...

ஆடைகளைச் சரிசெய்துகொண்டு சரேலென அவள் எழுந்தாள்.

''இரு சத்யா... இன்னும் கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொண்டு போகலாம்...'' என்றார் ராதானந்தர்.

''இந்த இடத்தில் நிற்பது நெருப்பின்மீது நிற்பது போலிருக்கிறது,'' என்றவாறு வெளியேறினாள் சத்யா.

''கொஞ்சம் நின்று கேள். உன்னிடம் பேசுவதற்கு இன்னொரு சந்தர்ப்பம் வராமலே போகலாம்,'' என்றார் ராதானந்தர்.

அப்போதிருந்த கோபத்தில், ''வராமல் போகட்டும். பரவாயில்லை,'' என்று சொல்லிவிட்டு, சைக்கிளில் வெகு வேகமாகத் திரும்பி, தனது முகாமை அடைந்துவிட்டாள்.

நட்ட நடுநிசியில், தூக்கம் வராமல் கூடாரத்துக்குள் படுத்திருந்தபோதுதான், 'இன்னொரு சந்தர்ப்பம் வராமலே போய்விடும்' என்று அவர் சொன்னது அவளை உறுத்தியது... அதற்கு என்ன அர்த்தம்?... அத்தான் ஏதாவது விபரீதமாகச் செய்துகொண்டு விடுவாரோ என்ற திகில் அவளை ஆட்டிப் படைக்கத் தொடங்கியது. அதன் விளைவாகத்தான் இன்றைக்கு மறுபடி அவரைச் சந்திக்க நினைத்து, டாக்டரை மீறிக்கொண்டு வந்தும் விட்டாள்.

ஆனால், 'இன்னொரு சந்தர்ப்பம்' தராமலே ராதா அத்தான் எங்கேயோ சென்றுவிட்டாரே...

"என்ன, நீங்கள் மதறாஸ் கோஷ்டியைச் சேர்ந்தவர் இல்லையா? ஜமீந்தாரின் பார்ட்டிக்குப் போகவில்லை?"

சத்யா தன்னை நிதானப்படுத்திக் கொண்டு விஷயத்தை ஊகித்தாள். ஜீப்பில் இருந்த மூன்று பேரும் வங்காளக் குழுவைச் சேர்ந்தவர்கள். ஆனால் அவளை நடுச்சாலையில் நடு ராத்திரியில் இறக்கிவிட்டுப்போன வம்புக்காரனோ அவன் சகாவோ யாரும் இல்லை.

''போகத்தான்... கிளம்பினேன்... நடுவே இங்கே ஒரு சிறு காரியம் இருந்தது...'' என்றாள்.

''எங்களுக்கும் அழைப்பு வந்திருக்கிறது. அங்கேதான் போய்க் கொண்டிருக்கிறோம்,'' என்று ஒருவன் சொல்லிக் கொண்டிருக்கையில் இன்னொருவன் இறங்கி வந்து, சத்யாவின் கையிலிருந்து சைக்கிளை வாங்கிக்கொண்டான். அவள் தடுத்து நிறுத்துமுன் அதைத் தூக்கி ஜீப்புக்குள் போட்டும் விட்டான்.

''வாருங்கள், நாங்கள் அங்கேதானே போகிறோம்!'' என்று அழைத்தான் ஸ்டியரிங்கைப் பிடித்திருந்தவன்.



கண்ணிமைக்கும் நேரம்தான் தயங்கினாள் சத்யா. ''நன்றி,'' என்று சொல்லி மறுவினாடி ஏறிக் கொண்டாள் ஜீப்பில்.

தூரத்தில் பிரகாசமான ஒளிகள் தெரிந்தன. வர்ணத் தோரணமான விளக்கு வரிசைகள், ஆகாயத்தில் நட்சத்திரக் கொடி படர்ந்தாற்போல் மின்னின.

ஜமீந்தாரின் பங்களாவும் வந்துவிட்டது விரைவில். ஜீப்பை வெளியே நிறுத்திவிட்டு இறங்கி நுழைந்தார்கள் அவர்கள். கர்னாடகமான இரும்புக் கேட்டினருகே ஸில்க் ஜிப்பாவும் முரட்டு மீசையுமாக நின்றிருந்த நபர்தான் ஜமீந்தார் என்று புரிந்துகொண்ட சத்யா கைகுவித்து வணக்கம் தெரிவித்துவிட்டு உள்ளே சென்றாள்.

ஜமீந்தார், பக்கத்தில் நின்றிருந்த யாரோ ஒருவரிடம், ''அந்தச் சாமியாரையும் கூப்பிடச் சொல்லியிருந்தேனே? சொன்னார்களா, தெரியுமா?'' என்று கேட்பது காதில் விழுந்தது. சத்யாவின் நடை சட்டென நின்றது.

''போயிருந்தார்கள். ஆனால், அவர் வெளியூர் போய் விட்டாராம். ஏதோ வடக்கே போகிற ரயிலில் ஏறினார் என்று பார்த்த ஆள் சொன்னான்,'' என்று தெரிவித்தார் மற்றவர்.

அதிகரித்த கலக்கத்துடன் அவள் அதிக தூரம் செல்லவில்லை.

''சத்யா!'' மிடுக்கான குரல் கேட்டது.

சத்யா நின்றாள். டாக்டரை ஏறிட்டு நோக்கத் திராணியின்றி, அசையாது நின்றாள்.

''இந்தா!''

தன் கையில் விழுந்த அட்டைத் துண்டைத் திகைப்புடன் நோக்கினாள் அவள்.

''மதராஸுக்கு டிக்கட். உனக்காக வாங்கி வந்து விட்டேன்...''

''டாக்டர்... என்... நிலைமை...''

''பரவாயில்லை. தனிப்பட்ட முறையில் உன்மீது எனக்கு இன்னும் அன்போ அனுதாபமோ குறைந்துவிட வில்லை. ஆனால் வைத்தியக் குழுவின் தலைவன் நான். கண்டிப்போடு நடந்து கொள்ளத் தெரியும் என்று காட்ட வேண்டியவன். எப்போது ஒழுங்கையும் கட்டுப்பாட்டை யும் தலைவனையும் நீ மீறிவிட்டாயோ, அப்புறம் இங்கே உனக்கு இடமில்லை. இடம் கொடுத்தால் என்னைப் பார்த்துச் சிரிப்பார்கள் எல்லோரும்.''

முகத்தை மறுபுறம் திருப்பிக்கொண்டு அவர் பேசிய விதம் சத்யாவுக்குப் பயத்தை ஏற்படுத்தியது.

''இரவு பன்னிரண்டு மணிக்கு வண்டி இருக்கிறது. பக்கத்தில்தான் ரயில்வே ஸ்டேஷன். துணையுடன் அனுப்புகிறேன்.''

அவரது ஜாடைக்காகக் காத்திருந்த மாதிரி ஒரு ஜீப் விருட்டென்று வந்து நின்றது. அதனுள் தனது பெட்டி யும் கைப்பையும் இருப்பதைக் கண்டாள் சத்யா. டாக்டர் எத்தனை முன்னேற்பாட்டுடன், எவ்வளவு தீர்மானமாக முடிவு பண்ணி வைத்திருக்கிறார்! அவளுக்கு மூச்சு நின்று விடும் போலிருந்தது.

''ரைட்டோ!'' என்று விடை கொடுத்துவிட்டுப் போய் விட்டார் சம்பத்.

வாசலை ஜீப் தாண்டியபோது, ''விருந்து ஆரம்பிக்கிற நேரத்துக்கு எங்கே புறப்படுகிறீர்கள்?'' என்று வியப்புடன் கேட்டார் ஜமீந்தார். ஆனால் அவருடைய கேள்வியின் ஒரு பாதி காற்றிலே கரைய, ஜீப் பறந்து விட்டது.

கூடூருக்கும் நெல்லூருக்கும் இடைப்பட்ட ஏதோவொரு ஸ்டேஷனில் அது நின்றது, வெகு நேரம் கழித்து.



''தாங்க்ஸ். நீங்கள் போங்கள்,'' என்று பெட்டியுடன் இறங்கிக் கொண்டாள் சத்யா.

கையிலிருந்த டிக்கெட்டைப் பார்த்தாள். வெறுப்புத் தான் மூண்டது.

எதையும், யாரையும் எதிர்த்துப் போராட வேண்டிய முச்சந்தியிலே தான் நிற்பதாக உணர்ந்தாள் அவள். சுசப்பினாலும் தோல்வியினாலும் அடிபட அடிபட, இரும்புக்கு இறுகும் தன்மை கிட்டுவது போல அவள் இதயத்திலும் வலுப்பிறந்தது. 'வடக்கே ரயிலேறிய' அத்தானின் பின்னால் அவள் மனம் பறந்தது. காஷ்மீருக்குத்தான் அவர் ஓடியிருப்பாரோ? அந்தப் பெட்டி, அந்தத் துணிகள், அந்த நினைவுகள்— அவரை அங்கே இழுத்திருக்குமோ?... அல்லது அங்கே எதையோ மறைப்பதற்காக அவசரமாக ஓடியிருக்கலாமோ?...

பக்பக்கென்று ஓலமிடும் இதயத்தை அவளால் ஓய வைக்க முடியவில்லை.

டம்பப் பையைத் திறந்து பார்த்தாள். ஐம்பது ரூபாய்க்கு மேலாகவே இருந்தது.

புக்கிங் ஜன்னலண்டை மேஜைமீது தலைசாய்த்துத் தூங்கிக் கொண்டிருந்த குமாஸ்தா, ''ஸார்,'' என்ற பெண்ணின் குரல் கேட்டு, ஒருதரம் தலைநிமிர்ந்து பார்த்தபின், ஏதோ ஒரு கனவு என்றெண்ணியவர்போல் மீண்டும் தலை சாய்க்கப் போனார்.

சத்யா சிறிது உரத்த குரலில், ''இந்தச் சென்னை டிக்கெட்டை, 'ரிஃபண்ட்' செய்யவேண்டும். டெல்லி எக்ஸ்பிரசுக்கு ஒரு டிக்கெட் கொடுங்கள், அதிகப்படி தொகை எத்தனை?'' என்றாள்.

டிக்கெட் குமாஸ்தா முகத்தைக் கழுவிக்கொண்டு திரும்ப வந்து உட்கார்ந்தார் தமது ஆசனத்தில். உறக்கத்தை விரட்டிவிட்டு, சத்யாவின் தேவையை நன்கு

ஜீரணித்துக் கொண்டபின், நீண்ட நேரம் கணக்கிட்டு விட்டு "மூன்றாம் வகுப்புதானே? மேலே இருபத்திரண்டு ரூபாய் இருபது பைசா கொடுங்கள்," என்றார்.

சத்யா பணத்தைக் கொடுத்து டிக்கெட்டைப் பெற்றுக் கொண்டபோது, "விடிகாலை மூன்றரை மணிக்கு வண்டி, தூங்காமல் விழித்திருங்கள்," என்று அறிவுரையும் அருளினார்.

ஒரு தேநீர் வியாபாரியையும் சொறி நாயையும் தவிர வேறு உயிர் இல்லாத பிளாட்பாரத்தில் குறுக்கும் நெடுக்குமாய் உலாவினாள் சத்யா.

பிளாட்பாரத்தின் வலது கோடியிலிருந்த தபால் பெட்டியைப் பார்த்தபடி சற்று யோசித்தாள்.

அழகுப் பைக்குள்ளிருந்து ஓர் இன்லண்டு உறையை வெளியிலெடுத்தாள். பிளாட்பாரத்துப் பெஞ்சொன்றில் அமர்ந்து பரபரவென்று எழுதலானாள்.

அன்புள்ள மணிக்கு,

நேரே டெல்லிக்குப் போகிறேன். அங்கிருந்து காஷ்மீருக்குப் போக நேரலாம். ஆயிரம் ரூபாய் பணம் அனுப்பிவையுங்கள். டெல்லியில் மேலூர் வீட்டில் தான் குமாரி ஜெகாவுடன் தங்கியிருப்பேன். அப்பா விடம் இப்போது சொல்ல வேண்டாம்.

சத்யா

கடிதத்தின்மீது மணியின் வீட்டு முகவரியை எழுதி, பெட்டிக்குள் சேர்ப்பித்தாள்.

# இருபத்தெட்டு

இரண்டே நிமிடங்கள்தான் வண்டி நிற்குமாம். "லக்கேஜ் எதுவும் இல்லையா அம்மா?" என்று போர்ட்டர் கேட்டான்.



"இல்லையப்பா," என்று சத்யா பதிலளித்துவிட்டு, முதுகில்லாத சிமெட்டிப் பெஞ்சொன்றில் களைப்புடன் உட்கார்ந்தாள். 'எனக்கு நானே தான் சுமை' என்று அவள் உள்ளம் சொல்லிக்கொண்டது.

கறுப்பு ஷிபான்போல இரவு பிரிந்து பரந்துகொண்டிருந்தது. இன்னும் பட்டுப் போகாமல் மிஞ்சியுள்ள இரண்டொரு மரங்களிலிருந்து மெல்லிய சளசளப்பு வந்து கொண்டிருந்தது. இலைகளெல்லாம் மாநாடு தொடங்க விருப்பது போல.

உள்ளம் களைத்துப்போயிருந்தாலும், தீர்மானமும் திட்டமும் இருந்தன சத்யாவிடம்

டெல்லியில் போய் இறங்க வேண்டியது. ஜெகாவிடம் தன் பிரசினையைச் சொல்லவேண்டியது. அவள் உதவி யுடன் காஷ்மீருக்குப் போக வேண்டியது. ஓட்டல்களிலும் படகு வீடுகளிலும் விசாரித்தால், கண்டுபிடிக்க முடியாமலா போய்விடும் அத்தானின் இருப்பிடத்தை......

"அம்மா, அம்மா!" என்று போர்ட்டர் கூவினான். தடதடவென்று மெயில் ஓசை செவியைப் பிளந்தது. வாரிச் சுருட்டிக்கொண்டு சத்யா எழுந்தாள். கொள்ளி வாய்ப் பிசாசுபோல் தீ கக்கி அனல் மூச்சுவிட்டுக் கொண்டிருந்தது டெல்லிக்குச் செல்லும் வண்டி. பெண்கள் பெட்டி எது என்று தேடவோ ஏறவோ அவகாசம் இருக்க வில்லை. அகப்பட்ட பெட்டியில் தன்னைத் திணித்துக் கொண்டாள்.

அந்த வினாடி தொடங்கி, கிட்டத்தட்ட நாற்பத்தெட்டு மணி நேரத்தை சத்யா நரகத்திலேதான் கழித்தாள். அப்பாவுடன் சௌகரியமாகக் காரிலே சென்ற பிரயாணங்களையும், கல்லூரித் தோழிகளுடன் தனிப் பெட்டிகளில் சென்ற உல்லாசப் பயணங்களையும் தவிர, இப்படி ஒன்றியாக, 'பெரிய' ரயிலில், மூன்றாம் வகுப்பில் அவள் சிக்கியது கிடையாது. மதுரையிலிருந்து வந்து கொண்டி

ஒரு பழுத்த சுமங்கலி நாகபுரி வரையில் கொஞ்சம் கொஞ்சம் உதவி செய்தாள். அவளுடைய தயவில் பசி தாகத்தைச் சிறிது சிறிது தணித்துக்கொள்ள முடிந்தது. ஆனால் நித்திரை என்பது யாருடைய தயவிலும் நடக்காத காரியமாகிவிட்டது.

தூங்க வசதியிருந்தாலும் அவள் தூங்கியிருப்பாளா?

சிறகு பிய்த்தெறியப்பட்ட பறவையாக அவள் இதயம் துடித்துக்கொண்டிருந்ததை யார் அறிவார்? நெருங்கி வந்துகொண்டிருந்த அத்தானை விரட்டித் துரத்திவிட்ட தனது சிறுமைப் புத்தியை எண்ணி எண்ணி அவள் பதைத்தது எவருக்குத் தெரியும்?

'அத்தான்! நீங்கள் போற்றிப் பாதுகாத்து வந்தது ஒரு பெண்ணின் உடைகளை என்று தெரிந்ததும் உங்களைக் கேவலமாக வெறுத்து ஒதுக்கிவிட்டு வந்தேனே யொழிய, அவை காவி உடைகளாயிற்றே என்று ஒரு வினாடிகூட நினைக்காமல் போனேனே!' என்று சத்யாவின் நெஞ்சு அரற்றிற்று.

'நாடகக்காரியுடன் அவர் கொட்டமடித்த நாட்களி லெல்லாம் வாயை மூடிக் கொண்டிருந்தவள் இப்போது எதற்காகத் துள்ளிக் குதித்தேன்!' என்று தன்னைத்தானே அவள் நொந்து கொண்டாள்.

முன்னைப்போல இல்லை அவர்— எந்தக் குற்றச் சாட்டையும் சிரித்துத் துடைத்து விட்டுப்போக. 'இனி ஒரு சந்தர்ப்பம் வராமலே போகலாம்' என்று சொன்னவர் ரோஷத்தில் என்ன செய்துகொண்டிருப்பாரோ என்ற எண்ணம் எழுந்தபோது சத்யா மெய் விதிர்த்தாள். 'அத்தான்! காஷ்மீரிலே எங்கேயோ பத்திரமாயிருங்கள். ஓடி வந்து உங்கள் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்' என்று மானசிகமாகப் பிரார்த்தனை செய்து கொண்டாள்.

இரண்டு நாள் ரயில் பிரயாணத்தை முடிப்பதற்குள் அவள் இறந்து இறந்து பிழைத்தாள்.



புதுடெல்லி ரெயில் நிலையத்தில் அவள் இறங்கிய போது, பாகிஸ்தானிலிருந்து வந்த அகதியாகத்தான் சத்யா காட்சியளித்தாளே தவிர, தமிழ் நாட்டிலிருந்து வந்த எம்.பி.பி.எஸ். பட்டதாரியாக விளங்கவில்லை.

கொஞ்சத்துக்குக் கொஞ்சம் நாகரிகமானவளாகத் தன்னைக் காட்டிக்கொள்ளத்தான் வேண்டும். அரை மனத்துடன் வெயிட்டிங் அறையில் சில நிமிடங்களைச் செலவிட்டாள். பிறகு ஸ்டேஷனிலிருந்தே மேலூர் பண்ணை வீட்டுக்கு டெலிபோன் செய்து, ''ஜெகா இருக்கிறாளா?'' என்று விசாரித்தாள்.

''எஸ், ஜெகா ஸ்பீகிங்.''— பல்லில் நாக்குப் படாத, வேண்டுமென்றே நீட்டி உச்சரிக்கும் குரல் கேட்டது.

சத்யாவின் முகத்தில் களை பிறந்தது. ''டீ ஜெகா, நான் சத்யா வந்திருக்கிறேன்.''

''ஹூ?'' அரை நிமிடம் மௌனம் பிறகு, ''சத்யா! வாட் எ சர்ப்ரைஸ்! அங்கேயே இரம்மா— வருகிறேன்.''

''அம்மா போடுகிறாயா எனக்கு!'' சத்யாவின் உள்ளம் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் சிறிது லேசாயிற்று. ஜகதாம்பாள் என்கிற கர்னாடகப் பெயர் உள்ள இந்த ஒன்றுவிட்ட சகோதரி— இன்று 'ஜெகா'வாகியிருப்பவள்— கிட்டதட்டச் சம வயதுக்காரி. சத்யா உதகமண்டலம் கான்வென்ட் ஒன்றில் கொஞ்சகாலம் படித்தபோது கூடப் படித்தவள். அவள் தந்தை ஐ. ஏ. எஃப். ஆபீசர். விமானப் படையினருக்குப் பெரிய 'ஹீரோ.' அவர்களது வீடுகளிலும் சரி, கிளப்புகளிலும் சரி சட்டம் மாட்டிய போட்டோக்களாக இடம் பெற்றிருந்தார்.

வைத்தியக் கல்லூரியில் முதலாண்டு விடுமுறையின் போது சத்யா ஜெகதாம்பாளுடன் டெல்லியில் தங்கியிருந்தது உண்டு. (அப்போதே அவள் பெயர் 'மிஸ் ஜெகா' என்றாகிவிட்டது.) கட்டுப் பெட்டியிலும் கட்டுப்

பெட்டியான அவள் அம்மா தஞ்சாவூருக்குப் பக்கத்தில் ஒரு கிராமத்தில் முடங்கியிருக்க, முன்னேற்றமான அப்பா பிரிட்டிஷ் ஹைகமிஷனில் ராணுவ ஆலோசகராகக் கொலு நடத்த, குமாரி ஜெகா, தனி ஜாகையில், புதுடெல்லியின் புகழ் பெற்ற பந்தயக் குதிரையாகத் திகழ்ந்தாள். ஏதோ வொரு சர்வதேசக் கழகத்தில் அவள் பத்திரிகைக்காரியாகப் பயிற்சி பெற்று வந்தாளாம்.

இந்த இடைப்பட்ட ஐந்து வருடங்களில் அவளுடைய வளர்ச்சியைப் பற்றி சத்யாவுக்கு அதிகம் தெரியாவிட்டாலும், பிரபலமான ஆங்கில தினசரியொன்றில் 'சொஸைடி பத்தி' எழுதும் உதவி ஆசிரியையாகத் திகழ்கிறாள் என்பது மட்டும் அறிவாள்.

"ஸாத்யா!'' என்று முழங்கிக் கொண்டே உள்ளே வந்து தன் தோளை ஓர் உலுக்கு உலுக்கிய பெண்ணைக் கண்டதும் சத்யாவுக்கு ஏற்பட்ட முதல் எண்ணம், 'அடிப்பாவி' என்பதே. ஏனெனில், மலையாளத்துப் பெண்ணைப் போல் கருமையும் அடர்த்தியும் நீளமும் கொண்ட கூந்தலுடன், எவருக்கும் பொறாமை தரும்படி இருந்த ஜெகா இன்று அழகாகப் 'பாப்' செய்துகொண்டிருந்தாள். கறுப்புக் கண்ணாடி, பிரேம் இல்லாமலே மூக்கில் தொத்தியிருந்தது. வெற்றிலைக் காவி மாதிரி லிப்ஸ்டிக் சாயம் உலர்ந்தும் உதிர்ந்துமிருந்தது. எப்போதுமே உயரமானவள், இப்போது இன்னும் இரண்டங்குலம் வளர்ந்திருந்தாள்.

''குட் ஹெவன்ஸ்! என்னா வேஷம் ஸத்யா இதெல்லாம்? எங்கேயாவது ரிஷிகேசம் பத்ரிநாத் போகிறாயா?'' என்று கொட்டக் கொட்ட விழித்தாள் ஜெகா, சத்யாவின் பரட்டைக் கோலத்தை ஆராய்ந்துகொண்டே.

''ரிஷிகேசம், பத்ரிநாத் பக்கம் போயிருப்பவரைத் தேடத்தான் வந்தேன்,'' என்று பதிலளித்தாள் சத்யா.

ஜெகாவின் முகத்தில் திகைப்புத் தோன்றியது.



''ஒரு ஆபத்துமில்லை; பயப்படாதே,'' என்றாள் சத்யா. ''ஜட்கா, ஒற்றைமாட்டு வண்டி ஏதாவது கொண்டு வந்திருக்கிறாயோ இல்லையோ?''

''இந்த ஒரு பாக்ஸ்தானே? என் வண்டியிலேயே போய்விடலாம் வா.''

அவள் வண்டி என்று குறிப்பிட்டது ஸ்கூட்டரைத்தான். சத்யாவுக்கு மெல்ல மெல்ல மன உளைச்சல்கள் மாறத் தொடங்கின, அந்த வினாடி முதல்.

காலை நேரப் போக்குவரத்துக்களின் நடுவே ஜெகா தலைதெறிக்க 'வண்டி'யை ஓட்டிச் சென்ற வேகத்தை அவளும் ரசிக்கலானாள். ''இருக்கிறாயாடி பின்னாடி?'' என்று ஜெகா ஒரு கையைப் பின்புறம் நீட்டித் துழாவுவாள். அதே சமயத்தில் மற்றொரு கையை உயர்த்தி, எதிர்ப்பட்ட எந்த நபருக்கோ வணக்கமும் தெரிவிப்பாள்.

தெற்கு அவென்யூவுக்குச் சமீபத்தில், ஒரு மூன்று மாடிக் கட்டிடத்தின் இரண்டாவது மாடியில், வலது புறத்தில் இருந்தது ஜெகாவின் கன்னிகா போர்ஷன். அங்கிருந்து வெளியே தலைநீட்டிப் பார்த்தால் காற்று தலையைப் பிய்த்துக்கொண்டு போனதோடு, ராஷ்டிரபதி பவனின் கம்பீரமான கட்டிடத்தின் ஒரு பகுதியும் தெரிந்தது.

ஜெகா பேசிக்கொண்டு வந்த வேகமும் ஓட்டிக் கொண்டு வந்த வேகமும் ஓரளவு சத்யாவைத் தொற்றிக் கொண்டிருந்தன. ''உன்னைப் பார்த்தால் எனக்குப் பொறாமையாயிருக்கிறது, ஜெகா,'' என்றாள்.

''சாயந்தரம் சொல்லு அந்தப் பொறாமை எப்படி இருக்கிறதென்று!'' என்றாள் ஜெகா. அப்படிச் சொல்லி விட்டு அமெரிக்கப் பாணியில் தோளைக் குலுக்கிக் கொண்டு உதட்டைப் பிதுக்கினாள். சத்யாவுக்குச் சிரிப்பு வந்தது.

''அண்ட் தென்?'' என்று கேட்டவாறே ஜெகா எழுந்துகொண்டாள். ''மத்து!'' என்று அவள் கையைத் தட்டியதும் ஒரு வேலைக்காரப் பையன் எங்கிருந்தோ ஓடி வந்தான். ''மதறாஸ் ஓட்டலிலிருந்து இந்த அம்மாளுக்குக் காப்பி சாப்பாடெல்லாம் வாங்கிவந்து கொடுத்துக் கவனித்துக் கொள்,'' என்று அவனுக்கு உத்தரவிட்டாள். சத்யாவிடம், ''ட்ரிங்க் வேண்டுமானால் நீயே எதுவும் தயாரித்துக் கொள்ளலாம், சத்யா. கிச்சனில் எல்லாம் இருக்கிறது. ஆனால் டின் சமாசாரம்தான். வயிறு ஜாக்கிரதை!'' என்று எச்சரித்தாள்.

''உன் சாப்பாடு?''

''போகிற இடங்களில் பார்த்துக் கொள்வேன். அனேகமாய், தினசரி ஒரு பார்ட்டி. வெஜிடேரியன், நான் வெஜிடேரியன், மதறாஸ், பம்பாய், பிரிட்டிஷ், அமெரிக்கா எந்த வகையானாலும் என் நாக்குக்கு ஆட்சேபணை இருப்பதில்லை!''

''சாயந்தரம்தான் வருவாயா நீ?''

''ஆமாம்— அதாவது சாயந்தரம் ஒன்பது மணிக்கு மேலே. அதுவும், பிரிட்டிஷ் எம்பஸியில் டான்ஸ் புரோகிராம் எதுவும் போட்டு வைக்காமலிருந்தால்!''

பத்து நிமிடத்துக்குள் உடை மாற்றிக்கொண்டு, கண்ணாடிக்கு முகத்தைக் காட்டிவிட்டு வெட்டுக்கிளி போலப், பறந்துவிட்டாள் ஜெகா.

'என்ன பெண்!' என்று சத்யா மனத்துக்குள் பாராட்டி முடிக்கவில்லை— டெலிபோன் கிணுகிணுக்கத் தொடங்கியது.

எந்த வேளையில் அந்தப் போனைத் தொட்டாளோ! சாயந்தரம் வரையில் ஐந்து நிமிடங்களுக்கொரு முறை அது அடித்துக் கொண்டே இருந்தது. சேரி ஒழிப்பு வாரம் அன்று துவங்குகிறது என்பது முதல், பிரதம மந்திரி அன்றைக்குப் பத்திரிகையாளர் மாநாடொன்று கூட்டியிருக்கிறார் என்பது வரையில், அந்த அறைக்கு வெளியே கால் வைக்காமலே புதுடெல்லியின் பொது நிகழ்ச்சிகளைத் தெரிந்துகொண்டாள் சத்யா. பஞ்சாபி, கன்னடம், தமிழ் முதலிய பல மொழிக் குரல்களைக் கேட்டாள். 'ஜெகி டியர்' என்று கூப்பிடுகிறவர் முதல், ''மேடம் ஜெகா அவர்கள் இருக்கிறார்களா என்று தயவு பண்ணித் தெரிவிக்கிறீர்களா?'' என்று பணிவுடன் நீட்டி முழக்கி வினவுகிறவர்கள் வரை பல ரகப்பட்டோரிடம் ஜெகாவுக்கு நட்பு உண்டு என்பதையும் அறிந்து கொண்டாள். இவ்வளவுக்கும் நடுவிலேயே குளியல், சாப்பாடு ஆகியவற்றையும் முடித்துக்கொண்டு, 'மத்து' எனப்பட்டவன் பையனல்ல, நாற்பத்து மூன்று வயதான குள்ளன் என்பதையும் தெரிந்து ஆச்சரியப்பட நேரமிருந்தது. எப்படியோ மாலை தாண்டி, இரவுச் சாப்பாடும் முடிந்து, விரித்த புத்தகம் கையிலிருக்கத் தூங்கியும் போனாள் சத்யா.



''நாட்டுப்புறம்! அதற்குள்ளேயா தூக்கம்? எழுந்திரு!'' என்று ஜெகா அவளை உசுப்பி எழுப்பியபோது இரவு மணி பன்னிரண்டு.

''இவ்வளவு விடிகாலையில் எழுந்து எனக்குப் பழக்கமில்லை, ஜெகா!'' என்று படுக்கையில் உட்கார்ந்து முழங்காலைக் கட்டிக் கொண்டாள் சத்யா.

இரண்டு மூன்று வாடிய 'பொக்கே'க்களைத் தூக்கி மூலையில் எறிந்துவிட்டு, ''ஸ், சம்மர் இப்பவே கொல்லுகிறது. டேராடூனுக்கு மூட்டை கட்ட வேண்டியதுதான்,'' என்றாள் ஜெகா.

சத்யாவுக்கு சட்டென ஓர் எண்ணம் உதித்தது. ''ஏன் டேராடூன்? காஷ்மீர் போகக் கூடாதா?''

''ம். குட் ஐடியா. நாளைக்கு பிஜ்ஜுவை விசாரிக்கிறேன்.''

''பிஜ்ஜுவா? யார் அது?''

''எங்கள் பத்திரிகையின் ஸ்ரீநகர் ரெப்ரஸன்டேடிவ். எனக்கு ரொம்ப தோஸ்த். கிழவர்தான், பயப்படாதே. சீசனுக்குக் கூப்பிட்டார்.''

''இப்போது போகலாம். உன்னோடு நானும் வரு கிறேன்,'' என்ற சத்யா துடிப்புடன் அவள் கையையும் பிடித்துக் கொண்டாள்.

''ஐ ஸே!'' என்று கையை மெல்ல விடுவித்துவிட்டு, சத்யாவின் முகத்தை ஊடுருவி நோக்கினாள் ஜெகா. ''ஏன்டி, உனக்கு என்ன வந்துவிட்டது திடீரென்று? சொல்லாமல் கொள்ளாமல் திடுதிப்பென்று மதராஸி லிருந்து டெல்லிக்கு வந்து நிற்கிறாய். அடி எங்கேயடி இங்கே வந்தாய் என்று நான் கேட்பதற்குள் காஷ்மீர் போகலாமா, ஹாலிடே அனுபவிக்கலாமா என்கிறாய்? மூஞ்சியைப் பார்த்தாலோ, ஹாலிடே அனுபவிக்கிற களையையும் காணோம்!''

''உட்கார்,'' என்று சொல்லிவிட்டுப் பெருமூச்செறிந் தாள் சத்யா. ''எனக்கு ஓர் அத்தான் இருக்கிறாரே, ராதா என்று, தெரியுமல்லவா உனக்கு? ஒரு வகையிலே உனக்கும் கூட அத்தான் ஆக வேண்டியவர்தான்...''

''அட தெரியும், டியர். கோ ஆன். உனக்கும் அவனுக் கும் கல்யாணம் நிச்சயமாகியிருக்கிறதாய் என் அம்மாகூட ஒரு லட்டரிலே எழுதியிருந்தாள்.''

''அவரேதான். அவர் திடீரென்று சாமியாராகிவிட் டார். ராதானந்தர் என்று அவருக்கு இப்போது பெயர்.''

'ஷ்' என்று நீண்டதொரு சீட்டி மூலம் தனது திகைப்பை வெளிப்படுத்தினாள் ஜெகா. ''அந்த ஆள் இந்த வேஷமும் போட்டுவிட்டானா கடைசியில்?'' என்று அவள் தனக்குத்தானே சொல்லிக்கொண்டது சத்யாவின் காதில் விழாமலில்லை.



''அவரைத் தேடிக் கொண்டுதான் வந்தேன்,'' என்ற சத்யா, தனது குழப்பம், ஊகம், அச்சம் எல்லாவற்றையும் சொல்லி முடித்தபோது கடியாரம் இரண்டு அடித்தது.

பின்கை கட்டிய வண்ணம் அறையின் குறுக்கும் நெடுக்குமாக உலர்த்திக் கொண்டிருந்த ஜெகா நின்றாள்.

''ஐ ஸே சத்யா, நீ ஏன் இந்தப் பரதேசிப் பண்டாரத்தை மறந்து தலை முழுகித் தொலைக்கக் கூடாது?''

''ஜெகா!''

சத்யாவின் கண் முனையில் நீர் துளித்திருப்பதைக் கண்டாள் ஜெகா. ''ஸாரி, மை டியர். காதல் வேதனை எனக்கும் கொஞ்சம் தெரியும்,'' என்று சத்யாவின் கண்ணைத் துடைத்துவிட்டுச் சில நிமிடங்கள் மௌனமா யிருந்தாள். பிறகு, ''ஐ கொயட் ரிமெம்பர் த ஃபெலோ. அதனால்தான் சொன்னேன்,'' என்றாள்.

சத்யாவின் விழிகள் விரிந்தன. ''நீ அவரைப் பார்த்திருக்கிறாயா ஜெகா? எப்போது?''

''நாலைந்து வருஷங்களுக்கு முன்பு தோழர்களுடன் ஆக்ராவுக்கு வந்திருந்தானே? டெல்லிக்கும் அப்படியே வந்திருந்தான். 'ஊர் சுற்றிப் பார்க்க வேண்டும். உங்கள் ஆபீஸில் கார் வாங்கிக்கொடு,' என்றான் என்னிடம். முடியாது என்றேன். ஏதோபோல் பிஹேவ் பண்ணினான். ஐ டோல்டு ஹிம் டு கெட் அவுட். ஸாரி ஸத்யா, உன் இவரைப்பற்றி நான் பச்சையாய்ச் சொல்கிறேனே என்று நீ நினைக்கலாம். ஆனால் வாட் ஐ ஸே இஸ் ட்ருத் அண்ட் நதிங் பட் ட்ருத்.''

''வாஸ்தவம்தான்,'' என்று மெதுவாய்த் தலையசைத் தாள் சத்யா. ''உன்னிடம் நடந்து கொண்டதாகச் சொல்கிறாயே, அதெல்லாம் உறைபோடக் காணாது— அப்படிப் பல காரியம் பண்ணினவர்தான். ஆனால் அதெல்லாம்...''

''மாறிப்போய், இப்போது பகவான் ராமகிருஷ்ணரின் அவதாரமாகிவிட்டார் என்கிறாயாக்கும்?'' என்றாள் ஜெகா எளனக் குரலில். ''நீ ஒரு கிறுக்கு. காவித் துணி இருக்கிறதே, அது மோஸ்ட் கம்ஃபர்டபிள் டிரஸ் டு சன்ஸில் எனி க்ரைம்.''

''ஜெகா, தயவு பண்ணி அவரைப்பற்றி அப்படியெல்லாம் சொல்லாதே. நீ நினைக்கிற மாதிரி இல்லை,'' என்று பரிந்து பேசினாள் சத்யா. அதன் பிறகு கொஞ்ச நேரம் அவள் பேசவேயில்லை.

''சியர் அப்!'' என்று அவள் முதுகிலே தட்டினாள் ஜெகா. ''யாரையும் சட்டென்று நம்பி விடாதே என்பதற்காகச் சொன்னேன். ஸ்ரீநகருக்குப் போய்ச் சும்மா கையைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்க முடியுமா என்று யோசித்தேன். நீ சரியான வேலை வைத்திருக்கிறாய். தாங்க் யூ! நீ படுத்துத் தூங்கு. நான் டிரங்க் கால் புக் பண்ணி பிஜ்ஜுவைக் கேட்கிறேன்.''

சத்யா போர்வையை மேலே இழுத்துவிட்டுக்கொண்டபோது, ஜெகா டெலிபோனருகே உட்கார்ந்திருந்தாள். ''ஆமாம். இந்த ஆசாமி காஷ்மீருக்குத்தான் போயிருப்பான் என்று என்ன நிச்சயம்? சென்னைக்கே திரும்பியிருந்தால்?'' என்று கேட்டாள்.

''எனக்கு அப்படித் தோன்றவில்லை.''

குழம்பிய மனத்துடன் படுத்தாலும், அசதி மிகுதியால் உடனேயே தூங்கிவிட்டாள் சத்யா.

காலையில் எழுந்தபோது, பளீரெனப் பகல் விடிந்திருந்த மாதிரியே அவள் உள்ளமும் தெளிவுற்றிருந்தது. ஜெகாவும் உற்சாகமாக, ''நாளைக் காலையில் புறப்பட்டு விடலாம். ஒன்பதே காலுக்குப் பிளேன். ஒரு வாரம் ஸ்டே,'' என்றாள். ''என்னிடம் உலன் டிரஸ்கள் எதுவும் இல்லையே, ஜெகா?'' என்று சத்யா கவலைப்பட்டதும், ஜெகா கடகடவென்று சிரித்து, ''அங்கே சரியான வெய்யில் இப்போது. மானத்தை மறைக்கத் துணி போட்டுக் கொள்வதே பெரிய காரியம்!'' என்றாள்.



''ஆனால், பார்த்தாயா, மறந்து விட்டேன்!'' என்று சொன்னவாறு இரண்டு நிமிடத்தில் திரும்பி வந்தாள் அவள். ''ராத்திரி நீ தூங்கிப்போன பிறகு நினைவு வந்தது. உன் அத்தான் என்ன மடத்தில் சேர்ந்திருக்கிறார்?''

''பவானி மடம் என்று...''

''அச்சா,'' என்று ஜெகா நெற்றியைச் சுளித்துக் கொண்டாள். ''நினைத்தேன்.''

சத்யா ஆவலுடன், ''என்ன நினைத்தாய்?'' என்றாள்.

ஆனால் ஜெகா அவளுக்குப் பதில் கூறாமல், ''சரி, அதைப்பற்றி இப்போது என்ன? நீ ரெஸ்ட் எடுத்துக் கொள். அனேகமாய் இன்றைக்கு ஐ ஹோப் டு ரிடர்ன் எர்லி,'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

பவானி மடத்தைப்பற்றி ஜெகா என்ன சொல்ல வந்தாள்? குழம்பிய எண்ணங்களுடன் மெதுவாகவே சத்யா தனது குளியலையும் காலைச் சிற்றுண்டியையும் முடித்துக் கொண்டாள். சிறிது வெளியே சுற்றிவிட்டு வரலாமென்று தோன்றியது. கதவைப் பூட்டிக்கொண்டு புறப்பட்டாள்.

அவள் படிகளில் இறங்கிக் கொண்டிருந்தபோது ஒரு காக்கியுடை வாலிபன் மேலே ஏறி வந்து கொண்டிருந்தான்.

''மிஸ் சத்யா என்று இங்கே யார் இருக்கிறார்கள்?'' என்று கேட்டான்.

''ஏன்... நான்தான்...'' என்றாள் சத்யா திகைப்புடன்.

''ஒரு தந்தி.''

கையெழுத்து பெற்றுக்கொண்டு அவன் போய் விட்டான்.

பதற்றத்துடன் பிரித்தாள் சத்யா.

"காஷ்மீருக்குப் போகிறாய் என்று தெரிந்தது. வேண்டாம்."

ராதானந்தர்.

தந்தி. சென்னையிலிருந்து கொடுக்கப்பட்டிருந்தது.

# இருபத்தொன்பது

தந்தியைக் கண்டதும் ஒரு நிமிடம் கண்ணை மூடி இறைவனுக்கு நன்றி தெரிவித்தாள் சத்யா.

கையிலும் காலிலும் போட்டிருந்த கட்டுக்களை அவிழ்த்தெறிந்து, வாயில் அடைத்திருந்த துணியையும் அகற்றினால் எவ்வளவு சுதந்திர உணர்ச்சியும் தாராள ரத்த ஓட்டமும் ஏற்படுமோ அவ்வளவும் ஏற்பட்டன சத்யாவுக்கு. அதே சமயம் புதுடில்லியில், அதுவும் இந்த மேலூர் விலாசத்தில், தான் தங்கியிருப்பது அத்தானுக்கு எப்படித் தெரிந்தது என்ற வியப்பும் உதிக்காமலில்லை.

ஆனால் அவளுடைய ஆறுதலும் வியப்பும் விரைவிலேயே மறைந்து— ஆத்திர உணர்ச்சியும் சந்தேக எண்ணமும் தலை தூக்கின.

தான் சென்னையில் பத்திரமாக இருப்பதாகத் தெரிவிக்கட்டும். நன்றி. சந்தோஷம். எதற்காகக் காஷ்மீருக்குப் போக வேண்டாம் என்று கட்டளையிடுவது? போகக் கூடாது என்று தடுப்பது ஏன்?

சற்று முன்பு வரையில், அவர் எங்கே போனாரோ தெரியவில்லையே என்று அச்சமும் கவலையும் பட்டுக் கொண்டிருந்த சத்யா, இப்போது அவநம்பிக்கையும்



சந்தேகமும் கொள்ளலானாள். ராதானந்தரின் மர்மமான நடைமைகளும், திடீர் சன்னியாசக் கோலமும் அவளுள் எழுப்பியிருந்த ஐயங்களுக்கு, இந்தத் தந்தி மீண்டும் நெய் வார்த்தது.

எப்போது தடுக்கிறாரோ, அப்போது போயே ஆக வேண்டும் என்று உறுதி கொண்டாள்.

தந்தியை மடித்து ஜாக்கெட்டினுள் செருகிக்கொண்டு கீழே தெருவுக்கு வந்தாள் சத்யா. காலை வெய்யில் இதமாயிருக்கவே, நடக்கலானாள். பாதையோரங்களில் இருந்த சின்னச் சின்ன சிற்றுண்டிக் கடைகளில் வியாபாரம் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. சென்னை நகரத்து மெக்கடைகளைக் காட்டிலும் அசுத்தமாகவும் இரைச்சலாகவும் இருந்த அந்தக் கடைகளின் வாசலில், பளபளக்கும் உடையணிந்த கனவான்களும் சீமாட்டிகளும் தின்பண்டம் வாங்கி உண்டபின், பக்கத்திலேயே நிறுத்தி வைத்துள்ள கார்களில் ஏறிச் செல்வதைக் கண்டாள் சத்யா.

'டாக் கர்' என்ற சிவப்புப் பலகையையும் கட்டிடத்தையும் கண்டதும் அவள் நடை சிறிது தயங்கியது. அம்மா பாவம், இல்லாத கவலையெல்லாம் பட்டுக்கொண்டிருப்பாள்... ஆனால் அவளுக்கு எப்படியும் தெரிந்திருக்கும்... மணி அவளிடம் சொல்லி, அவள்தான் அத்தானுக்கே தெரிவித்திருப்பாள்... இருந்தாலும் ஒரு வரி 'கவலைப்படாதே அம்மா' என்று எழுதிப் போடலாம்... கொஞ்சம் ஆறுதலடைவாள்...

உள்ளே நுழையும்போது அவளுக்கு நினைவில்லை. ஆறு பைசா கொடுத்துக் கார்டு வாங்கும்போது நினைவில்லை. பெஞ்சுமீது உட்கார்ந்து எழுதத் தொடங்கிய போதுதான் நினைவு வந்தது— பேனா கொண்டுவரவில்லை என்பது. ஏமாற்றத்துடன் திரும்ப எண்ணியவள், தபால் தலைகள் தரப்படும் இடத்தில், பியூன்போலத் தோற்ற

மனித்த ஒரு நடுத்தர வயதுக்காரர் சும்மா நின்றிருப்பதைக் கண்டாள். தலைகள் ஒட்டப்படுவதற்காகப் பல சிறிய காகிதக் கட்டுகள் அவர் அருகே இருப்பதும் கண்ணில் பட்டது.

''ப்ளீஸ்... கொஞ்சம் பேனா வேண்டும். ஒரே நிமிடம்,'' என்று கேட்டாள்.

''ஓ, தாராளமாய் அம்மா,'' என்று இனிய சுபாவத்துடன் அவர் தனது பேனாவைக் கொடுக்க, அவருக்கு அருகிலேயே நின்றவாறு கார்டில் எழுதப்போன சத்யா—

திகைப்புக்காளானாள்.

அந்த நபர் வைத்திருந்தவை, 'புக்போஸ்டு' கட்டுக்கள். அச்சடித்த துண்டுப் பிரசுரம் போலத் தோன்றின அவை. சத்யா அதிலொன்றும் வியப்படையவில்லை. ஆனால், அந்தப் பிரசுரங்களின் மீது சுற்றியிருந்த காக்கி நிறக் காகிதக் கூடுகளில், அனுப்புவோரின் முகவரி ஆங்கிலத்தில் பளீரென அச்சடிக்கப்பட்டிருந்தது.

'பவானி மடம், புதுடெல்லி' என்ற வரிகளைக் கண்டதும் சத்யாவுக்கு ஒரு நிமிடம் மூச்சே நின்றுவிட்டது.

திறந்த பேனா திறந்தபடி இருக்க, வாங்கிய கார்டு வாங்கியபடி இருக்க, வைத்த கண்ணை எடுக்காமல் அந்த உறைகளையே நோக்கினாள் அவள். பவானி மடத்தின் பிரசுரங்களை வெவ்வேறு முகவரிகளுக்கு அனுப்புவதற்காக வந்துள்ள அந்த மனிதரையும் அவருடைய தபால்களையும் மாறி மாறிப் பார்க்கலானாள்.

''என்னம்மா வேணும்? பேனாவிலே இங்க் இல்லையா?'' என்று அவர் பணிவுடன் கேட்டார்.

''இல்லை... வந்து... நீங்கள் பவானி மடத்திலா இருக்கிறீர்கள்?'' என்று சத்யா கேட்டுவிட்டாள்.

''எப்படி...'' என்று ஆரம்பித்தவர், அவள் துப்பறிந்த விதத்தை உடனே ஊகித்துக்கொண்டு, ''அங்கே தங்கியிருக்கவில்லை... வேலையில் இருக்கிறேன். பார்ட் டைம் வேலைதான்,'' என்றார்.



16888 ATHUR CHENNAI

சத்யா மௌனமாயிருந்தாள் சில விநாடிகள்.

''அங்கே யாராவது தெரிந்தவர்கள் இருக்கிறார்களா உங்களுக்கு?'' என்று அவரே தொடர்ந்து கேட்டார்.

''வந்து... அந்த மடத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன்... யார் வேண்டுமானாலும் வந்து பார்க்கலாமோ? நான் பார்த்ததில்லை......'' என்றாள் சத்யா.

நீண்ட முகத்தைக் கொண்டிருந்த அந்த நபர், தன் நீண்ட மோவாயை வருடியவாறு சிறிது யோசனை செய்துவிட்டு, ''யார் வேண்டுமானாலும் பார்க்கலாம் என்று சொல்ல முடியுமா? அவ்வளவு சகஜமாய் அனுமதிக்கிற இடம் இல்லை...... ஆனால் உங்களுக்காக நான் வேண்டுமானால் சிபாரிசு செய்கிறேன்,'' என்றார்.

''ரொம்ப நன்றி, இப்போது போகலாமா?'' என்று திறந்த பேனாவை மூடினாள் சத்யா.

பிறகே தனது அவசரத்தை அப்படிக் காட்டிக்கொண்டிருக்கக் கூடாது என்று தோன்றியது. ஏனெனில் அந்த மனிதர் ஏதோ உஷாரடைந்து விட்டவர்போலச் சட்டெனப் பின்வாங்கி, ''அவ்வளவு சட்டுப்புட்டென்று நடக்காது. நீங்கள் விலாசத்தைக் கொடுங்கள். நான் சுவாமிஜியைக் கேட்டுக்கொண்டு வந்து சொல்கிறேன். இரண்டு மூன்று நாளுக்குள் பேட்டி கொடுப்பார்கள்,'' என்றார்.

சத்யாவின் முகத்தில் ஏமாற்றம் முத்திரையடித்தது. ''இரண்டு மூன்று நாளாகுமா? நான் நாளைக் காலை காஷ்மீருக்குப் புறப்படுகிறேன். திரும்பி வரும்போது டெல்லியில் தங்க நேரம் இருக்குமோ என்னவோ. அதனால் இன்றைக்குள் பார்க்கிற மாதிரி வசதி பண்ணிக் கொடுத்தால் நன்றாயிருக்கும். முடியாவிட்டால் பரவா

யில்லை. சிரமப்பட வேண்டாம்,'' என்று கூறிவிட்டு, படபடக்கும் உள்ளத்தை வெளிப்படுத்திக் கொள்ளாமல் நிதானமாகவும் மெதுவாகவும் கார்டில் எழுதலானாள் கடிதத்தை.

அந்த நபர் சிறிது அவளைக் கவனித்தவாறு இருந்து விட்டு, ''சரி, கடிதத்தை முடித்துக்கொண்டு என்னோடு வாருங்கள். சுவாமிஜியிடம் அறிமுகப்படுத்துகிறேன். உங்கள் பெயர்?'' என்று கேட்டார்.

''சத்யா.''

''மதறாசிலிருந்து வந்திருக்கிறீர்கள், இல்லையா?''

''ஆமாம்.''

சத்யா அதற்குமேல் கடிதத்தை நிதானமாக எழுதிக் கொண்டு உட்கார்ந்திருக்கவில்லை. அவள் எழுத நினைத்திருந்த விஷயங்கள் கோவையாகப் பேனாவுக்கு வரவு மில்லை. 'என்னைப் பற்றிக் கவலைப்படாதே. சீக்கிரம் திரும்பிவிடுகிறேன்' என்று இரண்டு வரி மட்டும் எழுதி, விலாசத்தைப் பூர்த்தி செய்து தபால் பெட்டியில் போட்டு விட்டு, ''போகலாமா?'' என்றாள்.

வரவேற்பு ஹாலின் பளிங்குத் தரையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்துகொண்டிருந்த சத்யா, எதிர்பார்த்ததைக் காட்டிலும் விரைவாகவே ''வாருங்கள்,'' என்ற அழைப்பைக் கேட்டாள்.

நீண்ட கூடத்தைக் கடந்து சென்ற பின், மிக எளிமையான பர்னிச்சர்களும் ஊதுவத்தியின் மணமும் நிறைந்திருந்த பெரிய அறையொன்றை அடைந்தாள் அவள்.

சோபாவொன்றில், கால் மீது கால் போட்டபடி அமர்ந்திருந்த மனிதர்தான் மடத்தின் தலைவரா என்று சத்யாவுக்குத் தெரியவில்லை. சந்தேகத்தைத் தெளிவு படுத்திக் கொள்ளத் திரும்பியபோது, அவளை அழைத்து



வந்தவர் திரும்பிச் சென்றுவிட்டார். ஆனால், இந்த அறையில் வேறு யாருமில்லாததால், ''நமஸ்காரம் சுவாமிஜி'' என்று கைகுவித்தாள்.

''ராதானந்தரைப்பற்றி ஏதோ பேச வந்திருப்பதாகச் சீட்டு அனுப்பியது நீதானே?'' என்றார் அவர். ஐம்பதைத் தாண்டிய வயதினராக இருந்தும், குரல் வாலிபருடையதைப் போல இருந்தது. தலையை மழித்திருக்கவில்லை. கழுத்து வரையில் அலை அலையாகப் படிந்திருந்த நரைத் தலையை நடுவில் வகிடு எடுத்துச் சுத்தமாக வாரியிருந்தார். வெள்ளை வெளேரென்ற ஜிப்பாவும், வங்காளிகளின் கச்சம்போல மெல்லிய வேட்டியும் கட்டியிருந்தார். நெற்றியில் அகலமான குங்குமம் மட்டுமே இருந்தது. ஜிப்பாவின் கழுத்துவெட்டு அகன்றிருந்த போதிலும் ருத்திராட்ச மாலை எதையும் சத்யா காணவில்லை. அவரது பார்வை ஆழமாக இருந்தது.

''உம், என்ன பேசவந்தாய்?'' என்று அவர் தூண்டினார், வீணையைப் போன்ற குரலில், சரளமான ஆங்கிலத்தில்.

பல நாற்காலிகளும், சோபாக்களும் இருந்த போதிலும் தன்னை அவர் உட்காரும்படி சொல்லவில்லை என்பதை உணர்ந்தாள் சத்யா. ஆகவே இந்தப் பேட்டியை அதிக நேரம் நீடிக்க அவர் விரும்பவில்லை என்பதையும் அறிந்து கொண்டாள். அத்துடன், சகஜமாக முதலில் இரண்டு வார்த்தைகள் பேசுவதற்கு இடம் தராமல், எடுத்தவுடனேயே என்ன விஷயம், சொல்லு என்று அவர் கேட்டது அவளுக்குக் குழப்பத்தை ஏற்படுத்தியது.

''ஏனம்மா, எதற்காக வந்திருக்கிறோமென்றுகூடத் தெரிந்துகொள்ளாமலா மதறாஸிலிருந்து இவ்வளவு தூரம் வந்தாய்?''

மிகக் குத்தலான கேள்வியை அவர் புன்னகை மாறாமலே கேட்டது சத்யாவின் பதற்றத்தை அதிகரித்

தது. ''ராதானந்தர்... என் அத்தான்...'' என்றாள் வேறெதுவும் சொல்லத் தெரியாமல்.

''துறவிகளும் மனிதர்கள்தான். ஏதோ ஒரு குடும்பத்திலே பிறந்து வளர்ந்தவர்கள்தான் என்று எனக்குத் தெரியாதாம்மா? இதைச் சொல்லவா நீ வந்திருப்பாய்? வேறு என்னவோ இருக்கும். இல்லையா?''

சத்யா துணிச்சலையெல்லாம் வரவழைத்துக் கொண்டாள். ''என் அத்தான் திடீரென்று ஒருநாள் துறவிக் கோலத்தில் அங்கே வந்துவிட்டார். அவரை நான்தான் கல்யாணம் செய்துகொள்வதாக இருந்தேன். இன்றும் இருக்கிறேன். அவருக்கு ஏன் இப்படித் திடீரென்று... திடீரென்று...''

''புத்தி கெட்டது என்று கேட்கப் போவதில்லையே?'' அவர் மெல்லச் சிரித்துவிட்டுக் கேட்டார்: ''நீ புத்திசாலிப் பெண்ணாக இருக்கிறாய். ஆகவே, ராதானந்தர் ஏன் ராதானந்தராக ஆனார் என்பதை அறிய ஏதோ காரணம் இருக்கும். இல்லையா?''

சத்யாவின் சங்கடம் பெருகிற்றே தவிரக் குறையவில்லை. காலால் தரையைக் கீறிக்கொண்டு மௌனமாகவே நின்றாள்.

''துறவியாகிவிட்ட அவரை மறுபடி நீ கிரகஸ்தாசிரமத்துக்கு இழுக்க முயலுகிறாய் என்று நான் நம்பத் தயாராயில்லை. உன்னைப் பார்த்தாலோ மனதறிந்து எந்தப் பாவத்தையும் செய்கிறவளாகத் தெரியவில்லை...''

''அவருடைய உறவுக்காரர்கள் என்ற முறையில் அவருடைய வாழ்க்கையைப் பற்றி...'' என்று ஏதோ கூற முயன்றாள் சத்யா.

''ஒரு துறவிக்கு உறவுக்காரர்கள் இருக்கமுடியும் என்றா நீ சொல்கிறாய்?'' என்று மீண்டும் கேட்டார் அவர். ''மறுபடி இல்லறத்தில் அவரைத் திருப்புவதற்காக



நீ கேட்கிறாயென்றால், நான் சொல்வது, நீ செய்கிற பாவத்தில் என்னையும் கூட்டாளியாக்கிவிடும். துறவறத்தில் அவரை மேலும் ஈடுபடுத்த அந்த விஷயம் உதவுமானால், அதை உன்னிடம் நான் சொல்லக் கூடாது. இல்லையா?''

பதில்கள் தராமல் வினாக்களாகவே அவர் பேசிக்கொண்டிருக்கும் முறை சத்யாவுக்கு எரிச்சலையும் தோல்வியுணர்வையுமே தந்தது. தன்னை விரட்டியடிப்பதற்காகவே இந்த முறையை அவர் கையாளுகிறார் என்று அவளுக்குத் தோன்றியது. எனவே அவருடைய தந்திரம் பலிக்கும்படி இடம் தரக்கூடாது என்றும் எண்ணிக்கொண்டாள்.

''அவரை நீ மணப்பதாக இருந்தாய் என்றுதானே சொன்னாய்?''

''ஆமாம்.''

''அவரும் உன்னை மணக்க மனப்பூர்வமாய்ச் சம்மதித்துத்தான் இருந்தாரா?''

''ஆமாம்.''

''அதாவது, அவருடைய சந்தோஷத்துக்காகவே நீ அவரைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள இருந்தாய்?''

''ஆமாம்.''

''ஆக, உனக்கு அவரை மணப்பது நோக்கமல்ல, அவர் மகிழ்ச்சியாயிருப்பதுதான் நோக்கம். அப்படித்தானே?''

''ஆமாம்.''

வெற்றியுடன் புன்னகை செய்தார் பவானி மடத்தின் தலைவர். ''அப்படியானால் எவ்விதமான முயற்சியும் செய்யலாமா நீ, அவருடைய வாழ்க்கை முறையை மாற்ற?'' என்று அவர் கூறியபோது, அந்தப் புன்னகையில் ஒரு கடுமையும் கலந்திருப்பதைக் கவனித்தாள் சத்யா. ''துறவு வாழ்வுக்கு மாறிய பிறகு அவர் அமைதியுடனும்

நிறைவுடனும் இருக்கிறார் என்று நீயே நம்புகையில் அதைக் குலைக்க உரிமையுண்டு என்று கருதுகிறாயா, என்ன?''

''வருகிறேன்,'' என்று கும்பிட்டு விட்டு வெளியே வேகமாக வந்தாள் சத்யா. அவள் உள்ளத்தில் புயலும் தீயும் ஒரே சமயத்தில் மூண்டு எதிரெதிராகப் போர் புரிந்தன. அந்த மடத்தைத் திரும்பிப் பார்க்கக்கூட அவளுக்கு மெய் நடுங்கியது. இங்கிதமோ, இதமான பரிவோ, சூடான அன்போ இல்லாமல், யந்திரத்தனமான அறிவொன்றினால் மட்டுமே இயக்கப்படும் தொழிற்சாலையொன்றிலுள்ளிருந்து வெளிவந்த மாதிரி அவளுக்குச் சுவாசம் சீர்ப்பட்டது. அதே சமயம், அந்த மடத்தினுள் தீயதான எதையும் தான் காணவோ உணரவோ அறியவோ இல்லையென்பதையும் அவள் ஞாபகப்படுத்திக் கொண்டாள். இருந்தாலும், அத்தானின் மர்மமான வாழ்க்கையை, சற்றுமுன் நடைபெற்ற பத்து நிமிடப் பேட்டி மேலும் மர்மமானதாக ஆக்கிவிட்டது என்பதும் தெரிந்தது. எனவே காஷ்மீருக்குப் போகக் கூடாது என்ற அவரது தடையினால் ஏற்கெனவே உந்தப் பட்டிருந்த அவளுடைய ஆவல் இப்போது இன்னும் பன்மடங்கு அதிகரித்தது.

யோசித்தபடியே சிறிது தூரம் நடந்துவிட்ட சத்யா, ''ஏய் ஸில்லி! என்ன, உங்கள் ஒட்டை மதறாஸ் என்று நினைப்பா?'' என்ற அதட்டல் கேட்ட பிறகே நினைவுக்கு வந்தாள்.

அவளை உராய்ந்தாற்போல ஜெகாதான் தனது வாகனத்தை நிறுத்திக்கொண்டு, ''டெல்லி ஆஸ்பிடல்களில் பெட் கிடைக்கிறது ரொம்பக்கஷ்டமடி சத்யா! நீபாட்டுக்கு ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டு எங்கே கிளம்பினாய்?'' என்று அடுக்கடுக்காய் கேள்விகளை வீசினாள்.

அவ்வளவுக்கு சத்யா உற்சாகமாயிரா விட்டாலும் தோழியைக் கண்டதில் கொஞ்சம் குழப்பம் நீங்கி ஆறுதலும் அமைதியும் அடைந்தவளாக, பவானி மடத்துக்குத் தற்செயலாகச் செல்ல நேரிட்டதையும் மடத்தின் தலைவருடன் பேசியதையும் கூறினாள்.

ஜெகா அபிப்பிராயம் எதுவும் தெரிவிக்காமல், ''சரி, ஏறிக்கொள். இன்றைக்கு இரண்டு மூன்று எங்கேஜ்மெண்டுகள் கான்ஸலாகிவிட்டது. ரொம்ப அனெக்ஸ்பெக்டட். பாவம், உனக்காவது கம்பெனியாயிருக்கலாமென்றுதான் திரும்பிக் கொண்டிருந்தேன்,'' என்றாள்.

ஸ்கூட்டர் சிறிது தூரம் சென்ற பிறகே, ஜெகா, ''என்னைக் கேட்டிருந்தால் முதலிலேயே சொல்லியிருப்பேன், போகவேண்டாமென்று,'' என்றாள்.

''எது ஜெகா?''

''பவானி மடத்துக்கு நீ போனதைத்தான் சொல்கிறேன். அவர்கள் விவகாரமெல்லாம் ரொம்ப பெகூலியர். எனக்குப் புரிவதுமில்லை. நார் டு ஐ லைக் இட்.''

''ஏதாவது... கெட்ட... கெடுதலான நடவடிக்கைகள் உண்டா?'' சத்யாவின் திகில், பேச்சைத் தடுத்தது.

''அப்படியெல்லாமில்லை. த மேன் யூ மெட் ஜஸ்ட் நௌ அவர்தான் சீஃப். வினோத் என்று பெயர். வருஷத்தில் பத்து மாசம் ஐரோப்பாவிலும் ஸ்டேட்ஸிலும் தான் சுற்றிக் கொண்டிருப்பார். இந்தியாவில் நாலைந்து சென்ட்டர்கள் இருக்கிறது...''

''பெகூலியர் என்றாயே, அப்படியொன்றும் தெரியவில்லையே நீ சொல்வதில்?'' என்று சத்யா இடைமறித்தாள்.

இதற்குள் அவளுடைய வீடு வந்துவிட்டதாகையால் ஜெகா, ஸ்கூட்டரை மாடிப் படிக்கட்டின் கீழே நிறுத்திவிட்டு சத்யாவைப் பின்தொடர்ந்த மாதிரி வந்தாள். ''அவர்கள் கொள்கைகள், நடவடிக்கைகள் இதெல்லாம் ஒரு தினுசு என்பார்கள். ஆரம்பத்தில், ஒரு பன்னிரண்டு

குடும்பத்தாருடைய தொடர்புடன் இந்த மடம் ஆரம்பிக்கப் பட்டதாம். ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒவ்வொரு பிள்ளையை இந்த மடத்துக்காக வழங்குவது என்று அப்போது நிர்மானித்து, ஏதோ சில பேர் கொஞ்ச காலம் அப்படிச் செய்தார்கள். சில பேர் விட்டுவிட்டார்கள் என்பார்கள். 'ஸ்கெலிடன் இன் த கப்போர்டு.' இதெல் லாம் துருவிக் கொண்டிருக்க முடியுமா?''

''குடும்பத்துக்கு ஒரு பிள்ளையா...'' என்று சத்யா முணுமுணுத்துக் கொண்டிருந்தாள்.

''நான்சென்ஸ்! அதெல்லாம் பழைய கதை. குடும்பத்துக்கொரு பிள்ளையைக் காட்டுக்கு அனுப்புவ தாவது! அத்தோடு அந்தக் குடும்பங்கள் பூரா குஜராத்திலிருந்து வந்தவை என்பார்கள். உன் அத்தானுக் கும் குஜராத்துக்கும் என்ன சம்பந்தம்? உன் அத்தான் சமாசாரம் கம்ப்ளீட்லி டிஃபரண்ட். அதை நாம் காஷ்மீருக்குப் போய்த்தான்...''

''பார்த்தாயா ஜெகா! மறந்தே போனேனடி!'' என்று, ஜாக்கெட்டுக்குள்ளிருந்து தந்தியை எடுத்துக் காட்டினாள் சத்யா.

தந்தியைப் படித்த பின்னர் மேஜைமீது அதை எறிந்து விட்டு, தாழ்ந்த தொனியில் சீட்டியடித்தவாறு சிறிது நேரம் உலாவினாள் ஜெகா. பிறகு, ''டூ திங்ஸ் ஆர் க்ளியர், சத்யா. உன் அத்தானைக் கண்டுபிடிப்பதுதான் முக்கிய மான வேலையென்றால், நீ காஷ்மீருக்குப் போகத் தேவை யில்லை. உன் அத்தானின் காவி வேட்டிக்குக் காரணம் கண்டுபிடிப்பதுதான் முக்கியமான வேலையென்றால் நீ காஷ்மீர் போகத்தான் வேண்டும். உன் சாய்ஸ் என்ன?'' என்றாள்.

சத்யா கட்டிலில் உட்கார்ந்தபடி பரிதாபமாகத் தோழியை நோக்கி, ''எனக்கு நீ யோசனை சொல்வாயாக்



கும் என்று பார்த்தால், நீ என்னையே கேட்கிறாயே?'' என்று சொன்னாள்.

''என் யோசனையை நீ ஒப்புக்கொள்ள மாட்டாய்.''

''ஒப்புக் கொள்கிறேன். சொல்.''

''நீ ஸ்ரீநகருக்குப் போகத்தான் வேண்டும்.''

சத்யா அவள் முகத்தையே பார்த்தவாறு முழந் தாளிட்டு அமர்ந்திருந்தாள்.

''உன் அத்தானென்று இல்லை, எந்த ஆண்பிள்ளையா யிருந்தாலும் சரி, ஹீரோ ஒர்ஷிப் பண்ணு, கோவில் கட்டிக் கும்பிடு, ஐ டோண்ட் அப்ஜெக்ட். ஆனால் அதற்கு முன்னால், அந்த அளவு பக்திக்கும் காதலுக்கும் தகுந்த நபர்தானா என்பதைத் தெரிந்துகொண்டு செய். ஆமாம், அப்பவே உன்னைக் கேட்க நினைத்து ஐ கம்ப்ளீட்லி ஃபர்காட். உன் ஆள் காஷ்மீருக்குப் போனது எந்தத் தேதி?''

சத்யா உத்தேசமாகத் தேதியைச் சொன்னதும், ஜெகா பாக்கெட் டயரியொன்றை மேஜையிலிருந்து எடுத்துப் பிரித்தாள். பரபரவென்று பக்கங்களைப் புரட்டினாள். ''ஐ தாட் ஸோ, சபாஷ்,'' என்று தன்னைத்தானே மெச்சிக் கொண்டாள்.

''என்னடி அது?''

''என்னவோ ஒன்று! ஸ்ரீநகரில் அந்தத் தேதிகளில் உன் ராதா என்ன பண்ணினார் என்ற தகவல்தானே தேவை? கைமேலே கிடைக்கப் போகிறது பார்! ஆள் பிடித்து விட்டேன்!''

''நிஜமாகவா?''

''அதைப்பற்றி இப்போதென்ன? முதலில் நான் சொல் வதைக் கேள். அந்த ராதா என்கிற ஆள் சுத்த ஃபிராடு, சும்மா ஊரை ஏமாற்றுகிறான் என்கிறதுக்குக் கடுகத்தனை ஆதாரம் கிடைத்தாலும் சரி, நீ...''

"நான்?"

"டால் ஏரியிலாவது ஜீலம் நதியிலாவது ஒரு முழுக்குப் போட்டுவிட வேண்டும். இந்த அத்தான் மோகத்துக்கு சம்மதமா?"

சத்யா மௌனமாக இருந்தாள்.

"சொல்லு. மனசிலே அந்தத் திடம் இருக்கிறதா என்று உன்னையே கேட்டுக்கொள். இருந்தா, என்னோடு காஷ்மீரத்துக்கு வா. இல்லையா, இப்போதே சொல்லி விடு. சாயந்தரமே மதராஸுக்கு டிலக்ஸ் ஏஸி இருக்கிறது. போன் பண்ணி டிக்கெட் புக் செய்து விடுகிறேன். என்ன சொல்கிறாய்?"

"உன்னோடு காஷ்மீருக்கு வருகிறேன் ஜெகா. ஆவது ஆகட்டும்," என்று சத்யா பதிலளித்தாள்.

காலைச் சிற்றுண்டி, காப்பி முதலியவற்றுடன் ஓர் ஆப்பிளும் வைத்திருந்தாள் விமானப் பணிப்பெண். உயர எழும்பி வருவதுபோல் தோன்றிய ஸ்ரீநகர் விமான தளத்தையும் பசேலென்றிருந்த குன்றுகளையும் பார்த்த வாறே ஆப்பிளைக் கடித்துக் கொண்டிருந்தாள் சத்யா. வலதுபுறத்தில் உட்கார்ந்திருந்த ஒரு சீக்கியப் பிரமுகர் ஜெகாவுக்கு அறிமுகமானவர் போலும்— பாலம் விமான நிலையத்திலிருந்து இருவரும் பேசிக்கொண்டேயிருந்தனர் ஓயாமல்.

இறங்கியதுமே சத்யா ஆச்சரியப்பட்டது சுள்ளென்று உறைத்த வெய்யிலைக் கண்டுதான். ஜெகா விடுவிடுவென லௌஞ்சிலும் மற்ற இடங்களிலும் தேடி விட்டுத் திரும்பி னாள். "பிஜு வரக் காணோமே... பரவாயில்லை. நாம் என்ன பள்ளிக்கூடக் குழந்தைகளா? வா," என்று கூறி, சத்யாவை அழைத்துக்கொண்டு வெளிப்புறம் வந்தாள். சட்டென நினைவு வந்தவளாக 'விசாரணை' மேசையை



அடைந்து, "ஜெகா என்கிற பெயருக்கு ஏதாவது மெஸேஜ் உண்டா?" என்று கேட்டாள்.

"ஜெகா?" என்று திருப்பிச் சொன்னபடி சில உறை களைப் புரட்டிவிட்டு, கடைசியில் ஒரு துண்டுக் காகிதத் தைத் தந்தாள் அந்தப் பெண்மணி.

சத்யா எட்டிப் பார்த்தாள், காகிதத்தை. பிஜு என்ற கையெழுத்துடன் இரண்டு வரி இருந்தது.

"பதல்கோட்லரை அவசரயாகப் போகிறேன். டால் ஏரியில் நேரு பார்க் துறைக்குப் போ. ரெயின்போ படகு வீடு ஏற்பாடு பண்ணியிருக்கிறேன்.

பிஜு."

"குட்!" என்று சொல்லிவிட்டு அந்தத் துண்டுக் காகிதத்தைக் கிழித்தெறிந்தாள், ஜெகா. "சலோ ரெயின்போ!" என்றாள் உற்சாகமாக.

## முப்பது

பூல்வாலா ஹுஜூர்!

தேகமெங்கும் ஓர் ஆனந்தச் சிலிர்ப்புப் பரவ, சத்யா கண்ணை இரண்டு மூன்று முறை மூடி மூடித் திறந்தாள்.

நம்பிக்கையினாலும் ஆசையினாலும் அவள் உள்ளம் பரபரத்துக் கொண்டிருந்தது. அத்தானுக்கு இங்கே என்ன தான் நேரிட்டதென்று விரைவில் தெரிந்துவிடும். ஜெகா வாக்களித்திருக்கிறாள். நிச்சயம் நிறைவேற்றுவாள்...

நித்திய யௌவனமுள்ள காஷ்மீரத்தின் மனோரம்ய மான காற்று, ஜன்னல் திரைச் சீலையைக் குசலம் விசாரித்துவிட்டு நழுவியது. அந்தப் பளபளப்பான பச்சை நிற மெல்லிய துணி, சத்யாவின் உடலைத் தடவிக் கேசத்

ளைக் கோதிவிட்டு மறுபுறம் சென்று இங்கே பார் என்று அழைப்பதுபோல் ஆகாயத்தின் பக்கமாக உயர்ந்து நின்றது.

கவிழ்ந்து படுத்திருந்த சத்யா, இரு கைகளிலும் முகத்தைத் தாங்கிக் கொண்டாள்.

பூல்வாலா ஹாஊஸ்!

அம்மா! அங்கே மிதந்து செல்வது படகல்ல, ஒரு பூக்காடு! எத்தனை வண்ணங்கள்! எவ்வளவு வகை வகையாக, கலையுணர்வோடு, அடுக்கி வைத்திருக்கிறான் அந்தப் பூக்காரன்! மொசேக் தரையிலே பாம்பு நழுவினால்கூட ஓசை கேட்குமோ என்னவோ, இந்தப் பூப் படகு துளிச் சத்தமின்றி ஏரியில் அவளுடைய ஜன்னலைக் கடந்து சென்றது.

இருள் பூரணமாக விலகாததால் கருநீலமாகத் தெரிந்தது நீர்ப்பரப்பு. தேவதாரு மரத்திலே செய்யப்பட்ட படகு வீடு, சத்யா படுத்திருந்த அறை உள்பட, கோர வர்ணத்தைப் பூசிக்கொண்டு இயற்கைக்கு விரோதமாகக் காட்சி தரவில்லை. நிறம் மட்டுமல்ல, மணம் கூடத்தான். இந்த மரச் சுவர்களுக்கு எத்தனை இனிய மணம்! சத்யா, இருதயம் நிரம்பச் சுவாசித்து, மூச்சை விட்டாள். கலகலவென்று குழந்தைகள் சிரிக்கின்றன. படகின் இன்னொரு கோடியில், 'ஹாஞ்சி'யின் குழந்தைகள் போலும்.

கம்பளிக்குள்ளும் புகுந்துவிட்ட இதமான குளிரை நெகிழ நெகிழ அனுபவித்தபடி சத்யா குனிந்து நோக்கினாள்.

முகத்தை எடுத்தபோது அந்த வெல்வெட் தலையணையில் ஏற்பட்டிருந்த விசித்திரமான பள்ளம் கொஞ்சம் கொஞ்சமாகச் சுருக்கங்கள் விரிந்து நிரம்பிக்கொண்டிருந்தது. வேண்டுமென்றே இன்னொரு தரம் தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விட்டு மறுபடி



எடுத்துவிட்டு, இன்னொரு தரம் அந்தப் பள்ளம் மெல்ல நிரம்புவதை வேடிக்கை பார்த்தபடி 'ஹா ஹ் ஹா' என்று சிரித்தாள் வாய்விட்டு.

அந்தக் குறிப்புக்காகவே காத்திருந்த மாதிரி, உள்ளே வந்தான் ரசூல்— படகுக்காரன்.

''மிஸ் ஜெகா அம்மா ப்ரெக்ஃபஸ்டுக்குக் காத்திட்டிருக்கிறார்கள், மேடம்,'' என்று சுத்தமான ஆங்கிலத்தில் அழைத்துவிட்டு அகன்றான்.

''பலகாரத்துக்கா! அதற்குள்ளா?'' என்று சத்யா தமிழிலேயே கேட்டதும் ரசூலின் ஆழமான கண்கள் மேலும் ஆழமாயும் விரிவாயும் ஆகின. சத்யா அதைப் புரிந்து கொண்டு, ''இதோ வருகிறேன்,'' என்று ஆங்கிலத்தில் சொல்லியனுப்பினாள். பிறகு ஒரே ஒரு பெரிய சால்வையை மட்டும் போர்த்துக் கொண்டு— 'இதென்ன, சாதாரண மார்கழி மாதக் குளிர்கூட இல்லையே!'— கட்டிலுக்குக் கீழே காலால் துழாவினாள். ஒரு ஸ்லிப்பர் மட்டுமே கிடைத்தது. குனிந்து தேடி இன்னொன்றையும் மாட்டிக் கொண்டபின் வெளியே வந்தாள்.

டைனிங் ஹாலை அடையுமுன்பே ஜெகாவின் படபடா கேட்கத் துவங்கிவிட்டது. ''சே சே சே! பழைய காஷ்மீரா இது! வர வர உங்களுக்கு ஃப்ளவர் அரேஞ்ஜ்மெண்ட் கலைகூட மறந்துவிட்டது! இதோ பார்! ரசூல், உன்னைத்தான்! இப்படியா பூங்கொத்துகளை வைத்து அடைப்பது? எங்கள் ஊரில் வைக்கோல் கன்றுக்குட்டி என்று ஒன்று உண்டு! அது இதைக் காட்டிலும் அழகாயிருக்கும்.........''

சத்யா எட்டிப் பார்த்தாள்.

டைனிங் மேஜைமீது வைத்திருந்த பூச்சாடியிலிருந்து கொத்துக்களை எடுத்து விட்டு, நிறங்களுக்கும் தன்மைகளுக்கும் தகுந்தவாறு வேறு விதமாக ஜெகா மாற்றி அடுக்கிக் கொண்டிருந்தாள். வாட்ட சாட்டமான

வஸ்தாதான ரகுல்கூட, ஜெகாவிடம் பயப்பட்டவன் போல எட்ட நின்றிருந்தான் மரியாதையாக.

''பல் விளக்கிவிட்டு வரட்டுமா, ஜெகா?'' என்று சத்யா கேட்டாள்.

ஜெகா சீறினாளே பார்க்க வேண்டும்! ''சோம்பேறி! தூங்குவதற்குத்தான் இங்கே வந்தாயா நீ! இதென்ன காலேஜ் வகுப்பா, அல்லது நோயாளி சாகக் கிடக்கிற ஆபரேஷன் டேபிளா, நீ பாட்டுக்கு ஜாலியாய்த் தூங்க?''

மேற்கொண்டு அர்ச்சனைகளைப் பெற்றுக்கொண்டிராமல், ''காசிம்!'' என்று கூப்பிட்டவாறு பாத்ரூமுக்குள் புகுந்து கொண்டு விட்டாள் சத்யா.

காசிம் என்ற உதவியாள், ''அந்தக் குழாயைத் திருப்புங்கம்மா. வெந்நீர் வரும்,'' என்று சிறிது கொச்சை ஆங்கிலத்தில் கூறினான்.

''இதென்ன படகா, பங்களாவா?'' என்று வியந்த சத்யா, குழாயில் தண்ணீர் கொப்புளித்துக் கொண்டு சூடாக வருவதைக் கவனிக்காததால், ''ஸ்!'' என்று கையை உதறினாள்.

''ஸாரி மேடம். ரொம்ப சூடாயிட்டுதா? அதோ குளிர்ந்த நீர்,'' என்று சொல்லி, இரண்டையும் பக்குவமாக அளாவிக் கொடுத்துவிட்டு வெளியேறினான்.

கதவை உட்புறம் சாத்திக் கொண்டாள் சத்யா. சொட்டென்று ஒரு பொட்டுத் தண்ணீர் தலைமீது விழுந்தது. நிமிர்ந்தாள்.

ஓ! ஷவரே இருக்கிறதே!

குழாயைத் திருப்பினாள். சர்ரென்று நீர் நூல்கள் இறங்கின. ஸ்பரிசித்தாள். அப்படியொன்றும் சில்லென்று இருக்கவில்லை. முழு வேகத்துடன் குழாயைத் திருப்பி விட்டாள். கழுத்தை வளைக்க வளைக்க முகத்தின்



எல்லாப் பகுதிகளுக்கும் தோள்களுக்கும் ஷவர் தண்ணீர் பாய்ந்தது.

முந்திய நாள் மாலையில் வந்திறங்கியபோது புலப்படாத சுவைகளெல்லாம் இப்போதுதான் அவளுக்குப் புலனாயின.

அப்போது களைப்பு; அவசரம்; பசி; அலுப்பு.

ஏரோட்ரோமில் பிஜுவைக் காணாமல் அவருடைய குறிப்பை மட்டும் கண்டதால் ஜெகா அசந்துபோய் உட்கார்ந்துவிடவில்லை.

யாரோ ஒரு ராணுவ அதிகாரியைப் பிடித்தான். விமான நிலையத்தின் பஸ் புறப்படுமுன் ஒரு ஜீப் கிடைத்துவிட்டது இவர்களுக்கு. லக்கேஜ்கள் வந்து சேரத்தான் நேரம் பிடித்தது.

''டாமிட்! டாமிட்!'' என்று திட்டிக் கொண்டே ஒரு வழியாய் எல்லாவற்றையும் சேகரித்துக் கொண்டு புறப்பட்டபோது இருட்டி வெகுநேரம் ஆகிவிட்டது. சத்யா அரைக் கண்ணைத் திறந்தபடிதான் ஊருக்குள் நுழைந்தாள் என்று சொல்ல வேண்டும். 'உலக மொத்தத்தையும் கொந்தளிக்க வைக்கிற இந்த காஷ்மீரம், தான் மட்டும் எத்தனை அமைதியாயும் இயல்பாயும் இருக்கிறது?' என்பது ஒன்றுதான் அவளுக்கு ஏற்பட்ட எண்ணம். டால் ஏரிக் கரையோரமாக, சிமெட்டிச் சாலை வழியே ஜீப் சென்றபோது, எதிர்க் கரையில் வரிசை வரிசையான படகு வீடுகள்— கொலுவில் வைத்த செப்புகளைப்போல— சிமிழ் சிமிழாக நிற்பதையும், அவற்றினுள்ளிருந்து பளீர் பளீரென்று வண்ண விளக்குகள் பிரகாசிப்பதையும் கண்டாள். அதற்குமேல் அவளால் காணவும் முடியவில்லை.

''சாப்பாட்டை இங்கேயே முடித்துக் கொண்டு விடலாம் சத்யா,'' என்று சொல்லி ஏதோ ஓர்

ஓட்டலுக்குள் நுழையும்படி டிரைவருக்குச் சொன்னாள் ஜெகா. அங்கே சாப்பாடு நன்றாகவே இருந்தபோதிலும், ருசிக்கிற மனநிலை இரண்டு பேருக்குமே இருக்கவில்லை.

படகுத் துறையில், சிறிய படகுகள் பல காத்திருந்தன. ஜெகா பல சிறுவர்களை விரட்டி, பெரியவர்களை அதட்டி, பெண்களைத் துரத்தியபின், ஒரு சிறு படகைத் தேர்ந்தெடுத்தாள். வெறும் படகு அல்ல; ஸ்ப்ரிங் ஆசனங்களும் திண்டுகளும் காலை நீட்டிக் கொள்ளும் வரை மெத்தையும் இருக்கின்றன என்பது சத்யாவுக்குத் தெரிந்தது. மேலே கூரையுடனும் பக்கவாட்டில் திரைகளுடனும் இருந்த அந்தத் தோணி போன்ற படகு, ஏரியில் செல்லச் செல்ல, இருள் அவர்களைப் போர்த்துக் கொள்ளத் தொடங்கியது. கறுத்த யானைகள் படுத்துக் கிடப்பதைப்போல, தொலைவில் இமயத் தொடர்ச்சி தெரிந்தது. அதிலிருந்து தெறித்த மாதிரி நட்சத்திரங்கள் துள்ளித் திரிந்தன.

திடீரென வரிசையாகப் பல படகு வீடுகள் பளபள வென்று தென்பட்டன. படகுப் பையன் குரல் கொடுத்தான். எதிர்க் குரல் வந்தது ஒரு படகு வீட்டிலிருந்து.

''வானவில்,'' என்றாள் ஜெகா.

சின்னப் படகு, பெரிய படகு வீட்டின் பாதங்களை முத்தமிட்டபோது, மேல்படியில் நின்றிருந்த ரசூல், நெடிய சரீரத்தை வளைத்துக் குனிந்து, ''ஹார்ட்டி வெல்கம் டு மை போட் மேடம்,'' என்று வரவேற்றான். ''பிஜு பாபு சொல்லியிருந்தார்.''

சத்யாவுக்கு அதன் பின்னும் கனவு போலவே இருந்தது. அழகிய சிறு பங்களா இது. வெளியே விரிந்து பரந்திருக்கும் நீரைப் பார்த்தால்தான் தெரியும் இது படகு என்று. மற்றபடி இதோ வரவேற்பு அறை; மெத்தென்ற சோபாக்கள்; விரிப்புகள்; ரேடியோ; புத்தக ஷெல்பு; படுக்கையறை......



சத்யா பெருமூச்சு விட்டாள். சந்தேகமில்லை. எப்படிப்பட்ட மன உறுதி படைத்தவரையும் மயக்கவல்ல மோகனச் சூழ்நிலைதான் இது. உல்லாசப் பிரியரான அத்தானுக்கு என்னென்ன வலைகள் விரிக்கப் பட்டனவோ!

ஒரு நிமிடம் காஷ்மீரின்மீது வெறுப்பும் ஏற்பட்டது அவள் இதயத்தில்.

''எங்களுக்கு ஒரு கப் பால் போதும். வேறு தொந்தரவு செய்யாதே,'' என்று அறிவித்துவிட்டாள் ஜெகா. அதன்பின் முகம் கழுவிக்கொண்டு சில நிமிடம் உட்கார்ந்திருந்ததுதான். மணக்க மணக்க சூடான பாலை அருந்தியவுடனே நித்திரை கண்ணை அழுத்திவிட்டது......

ஷவரை நிறுத்தினாள் சத்யா. உடம்பைத் துவட்டிக் கொண்டிருந்தபோதுகூட, தூங்கும் குழந்தையின் சிணுங்கல் மாதிரி மெல்லச் சொட்டிக் கொண்டிருந்தது நீர்.

''ஐ அம் ஆஃப்!'' என்று அறிவித்துவிட்டாள் ஜெகா, சத்யா உடை மாற்றிக்கொண்டு வருவதற்குள்.

''என்னடி, முதல் நாள், முதல் வேளை இந்தக் காஷ்மீரச் சொர்க்கத்தில் சேர்ந்து சாப்பிட வேண்டாமா?'' என்று சத்யா கோபித்துக் கொண்டாள்.

''நான் சாப்பிட்டு முடித்து விட்டேன்!''— ஒரு பூங்கொத்தை உருவி அவள் தலையில் தட்டினாள் ஜெகா. ''ஐந்தே நிமிடத்தில் உன் அத்தான் சமாசாரத்தைக் கண்டுபிடித்துக்கொண்டு திரும்புகிறேன், பார். அந்த உற்சாகத்தில் இருக்கிறேன் நான்! நீ மெதுவாய் எல்லா அழகுகளையும் கவனித்துக் கொண்டிரு... இதோ வந்து விடுகிறேன்.''

''நான் வரவேண்டாம்?...''

''எதற்காக? எனக்குத் தகவல் கொடுக்கப் போகிற ஆளை, காதைப் பிடித்து இங்கே இழுத்து வராவிட்டால் என் பெயர் விசுவநாதசர்மாவின்மகள் விசால ஜெகதாம்பாள் இல்லை!''

''அடிப்பாவி! அவ்வளவு நீளமான பெயரா உன் அம்மா வைத்தாள்!'' என்று சந்தியா சிரித்துக் கொண்டிருக்கையில் ஜெகாவுக்குப் படகு வந்துவிட்டது. சில நிமிடங்களில் பார்வையிலிருந்து அவள் மறைந்தும் விட்டாள்.

''சேப், ஹொராயில்......''

தண்ணீரில் காலை நனைத்துக்கொண்டு படியில் உட்கார்ந்திருந்த சந்தியா, புன்னகையுடன் தலையசைத்து, ''ஊஹூம்'' என்றாள்.

''ஸ்னோ...... க்ரீம்...... சாக்லேட்......''

''நோ, தாங்ஸ்.''

அந்தப் படகு சொந்தக்காரன் விடுவதாயில்லை. ''பிஸ்கெட்.... பெஸ்ட் பிஸ்கட்ஸ்.''

''வேண்டாம்.''

''சிகரெட்?''

''மை காட்!'' சந்தியா குபீரென்று சிரித்ததும் அவன் போய்விட்டான். பின்புறம் நின்றிருந்த ரகுல், ''சில பெண்கள் சிகரெட்டும் பிடிப்பது உண்டு இங்கே,'' என்று தெரிவித்தான்.

''எனக்குப் பழக்கமில்லை,'' என்றாள் சந்தியா.

க்ளிக் க்ளிக் க்ளிக் என்று இரைச்சல் கேட்டது. அடுத்து என்ன வியாபாரி என்று பார்க்கத் திரும்பினாள்.

அம்மாடி! எத்தனை வாத்துக்கள்! வெள்ளை, கருமை, வெளுப்பும் கறுப்பும், திட்டுத் திட்டான சாம்பல்—



இப்படிப் பல நிறத்தவை, காலட்சேபம் கேட்கச் செல்லும் மயிலாப்பூர் சீமாட்டிகளைப்போல அமர்க்களமாய்ப் பேசிக்கொண்டே சந்தியாவைக் கடந்து சென்றன.

''டக்ஸ்!'' என்று சந்தியா மெதுவே அழைத்தாள்.

''என்ன வேணும்?'' என்று கேட்கிற பாவனையில் ஒரே ஒரு வாத்து மட்டும் நின்று, தலையைத் திருப்பி அவளைப் பார்த்துவிட்டு, ஓட்ட ஓட்டமாய்த் தன் கும்பலில் திரும்பப் போய்ச் சேர்ந்து கொண்டது.

சந்தியா மனம்விட்டு— வாய்விட்டுச் சிரிக்கலானாள்.

படகு வீடுகளை ஒட்டினாற்போல் மெல்லச் சென்று கொண்டிருந்த ஓர் அலங்காரப் படகில், தோளோடு தோள் இடிக்க, கழுத்தின்மீது கைபோட்டுக் கொண்டு வீற்றிருந்த ஒரு காதல் ஜோடி, எதற்கோ விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருந்தது.

பின் மாலைப் போதானதால், ஏரியின் நீலம் மஞ்சள் வெய்யிலில் தழுவிக் கொண்டிருந்தது. படகு வீட்டை ஒட்டிய ஆழமற்ற பகுதிகளில், கீழே அடர்ந்து படிந்திருக்கும் பாசிகளும் கோரைத் தண்டுகளும் கொடிகளும் தெளிவாய்த் தெரிந்தன.

''மிஸ் ஜெகா வருகிறார்கள்,'' என்று அறிவித்தான் ரகுல்.

சந்தியா திரும்பிப் பார்த்தாள். ஆம், அதோ வருவது ஜெகா தான். ஆனால் ஏன் அவள் முகம் வாடியிருக்கிறது? ஏன் தன்னைக் கண்ட பின்னும் கையை வீசி ஆட்டாமலிருக்கிறாள்?

ஜெகா மௌனமாகப் படகு வீட்டினுள் நுழைந்தாள். ரகுலின் நீட்டிய கையைப் பற்றிக்கொண்டு, ''டேய் பையா முதலில் உன் படகில் ஸீட் விரிப்புகளையெல்லாம் மாற்றடா ஒரே டர்ட்டி!'' என்று தன்னை அழைத்து வந்த பையனிடம் சீறிவிட்டு உள்ளே சென்றுவிட்டாள்—

வழியில் சத்யா உட்கார்ந்திருந்ததே கண்ணில் படாத மாதிரி.

திகைப்புடன் சத்யா எழுந்து உள்ளே சென்றாள்.

வரவேற்பு அறையில் காலை நீட்டி சோபாவில் சாய்ந்திருந்தாள் ஜெகா. பழைய தினசரியொன்றைப் புரட்டியவாறே, "நாம் டெல்லி திரும்பவேண்டியதுதான், சத்யா. லக்கேஜ்களை ரெடி செய்துகொள்," என்றாள்.

தோழியின் தோளை அணைத்துக் கொண்டு உட்கார்ந்தாள் சத்யா. "ஏன் ஜெகா, என்ன நடந்தது?"

"ஒன்றும் சுவாரஸ்யமில்லை, விடு."— ஜெகாவின் கையிலிருந்த பேப்பர், அறையின் மூலைக்குப் பறந்தது.

அதை எடுத்து மடித்து ஷெல்பின்மீது வைத்தாள் சத்யா. "போன காரியம் வெற்றியில்லை. அவ்வளவுதானே? ரொம்ப எதிர்பார்த்தாய். ரொம்ப ஏமாறுகிறாய். எனக்கு மட்டும் ஆரம்ப முதலே அத்தனை நம்பிக்கை இல்லை."

"ஸ்! யூ டோண்ட் நோ சத்யா," என்றாள் ஜெகா, விரக்தியாக.

"என்னதான் நடந்தது? சொல்லேன்."

ஒரு பெருமூச்சுடன் ஜெகா கூறினாள்: "பிரமாதமாய் ஒரு திட்டம் வைத்திருந்தேனே, அது ஃப்ளாப். உன் அத்தான் இங்கே எப்போது வந்தாரென்று தேதி கேட்டேனில்லையா? என் டயரியை ஒப்பிட்டுப் பார்த்தேன். அப்புறம்தான் நினைவு வந்தது. உன் அத்தானும், என் அண்ணா கோதண்டமும்தான் சேர்ந்து புறப்பட்டிருந்தார்கள்.

"அட!"

"ஒரு அடவுமில்லை போ, கடைசியில். அண்ணாவோடு அவனுடைய கார் டிரைவர் ஜிட்டு என்கிறவனும் போய் இருந்தான் அப்போது. அண்ணாவுக்கும் உன் அத்தாவுக்கும் கல்யாணம் ஒத்துக்கொள்ளவில்லையோ என்னமோ, கோதண்டம் மூன்றாம் நாளே திரும்பி விட்டான். ஆனால் டிரைவர் ஜிட்டு மாத்திரம் ஒரு மாதம் கழித்துத்தான் திரும்பினான் என்பது எனக்கு நன்றாய் நினைவு இருந்தது. அந்த டிரைவர் கொஞ்ச நாள் கழித்து மறுபடி காஷ்மீருக்கே போகிறேன் என்று என்னிடம் சொன்னான். டூரிஸ்ட் டிபார்ட்மெண்டில் வேலை கிடைத்து விட்டது என்றும் சொன்னது ஞாபகமிருந்தது."



"ஆக, அவனை இங்கே பிடித்து விசாரித்தால் எல்லாம் தெரிந்துவிடும் என்று நினைத்தாய்?"

"நினைத்து நாசமாய்ப்போனேன் போ!"

"என்னதான் ஆச்சு, கடைசியில்? அவன் மறுபடி டெல்லிக்கே போய்விட்டானா?"

"அவன் ஏன் போகிறான்? மைல் கல்லாட்டம் இங்கே தான் இருக்கிறான், ரோக்! பார்த்து விட்டுத்தான் வருகிறேன்."

"என்ன சொல்கிறான்?"

"அந்த ஒரு மாதகாலமும் அவன் உன் அத்தானோடு இருக்கவில்லை. ஜெயிலில் இருந்தானாம்!"

"என்ன?"

"ஜெயிலில் என்றேன். பிள்ளையாண்டான் ஒரு ட்ரைவிங் எக்ஸ்பர்ட்! டில்லி போலீஸ் மொத்தமும் சிநேகம். என்ன ஆக்ஸிடெண்ட்டானாலும் கண்ணை மூடிக்கொண்டு போய்விடுவான்கள். இங்கே அப்படியில்லை! வந்த முதல் நாளே, எவன் காரையோ எடுத்துக்கொண்டு போய், எவனோ ஒரு வெள்ளைக்காரனின் ஸ்கூட்டர்மீது மோத, தீட்டி விட்டார்கள் ஒரு மாதம்! புரிந்ததா? கட்டு கடையை! காஷ்மீரில் நமக்கென்ன வேலை இனிமேலே!"

"ஏன் ஜெகா, நாமே இங்கே ஒவ்வொரிடமாக விசாரிக்க முடியாதா?"

"நான்சென்ஸ்!" என்று கையை விரித்தாள் ஜெகா. "இங்கே சுமார் இரண்டாயிரம் போட் ஹவுஸ்களும் இரு நூறு ஒட்டல்களும் இருக்கின்றன. மனித ஆயுளே அதிக பட்சம் நூறு! அதிலும் கால், போயாகிவிட்டது."

சத்யா யோசனையிலிருந்தாள்.

"என்ன விஷயம்?"

"இவ்வளவு தூரம் நான் இன்னொரு சமயம் எங்கே வரப்போகிறேன், ஜெகா? கொடுத்து வைத்திருக்க வேண்டாமா இந்த சொர்க்கத்திலே கால் படுவதற்கு? வந்ததுதான் வந்தோம், இரண்டு நாள் இருந்துவிட்டுப் போகலாமே?"

ஜெகா அவளை உற்று நோக்கினாள். விண்ணைச் சாடி நிற்கும் மலை வரிசையின்மீது ஏக்கத்துடன் படிந் திருக்கும் சத்யாவின் பார்வையைக் கவனித்தாள்.

"ரைட்டோ ஸத்!" என்று பழைய உற்சாகத்தில் பாதியுடன் எழுந்து கொண்டாள். "உண்மை. உனக்கு மனசுக்கு அமைதியாயிருக்கும். எனக்கும் கொஞ்சம் லோகல் கலர் சேகரித்த மாதிரி இருக்கும். இதைச் சொல்லத்தான் இப்போது வந்தேன். ரசூல், படகைக் கூப்பிடு கொஞ்சம்."

"எங்கே மறுபடி?" என சத்யா திகைத்தாள்.

"நீ ஸீனரியை அனுபவி. எனக்குப் பாலிடிக்ஸ் இருக் கிறது. பிரதம மந்திரியின் ப்ரஸ் கான்ஃபரன்ஸ் இன்று மாலை இருக்கிறதென்று காலையிலேயே ஒருவர் வந்து சொல்லிவிட்டுப் போனார். நான் போகிறேன். நீயும் வருகிறாயா? தமாஷாயிருக்கும்."

"நீ போ. நான் ஓரிடத்துக்கும் வரவில்லை," என்றாள் சத்யா. தன்னையறியாமலே ஜெகா மீது அவளுக்குக் கோபம் கோபமாய் வந்தது. பிரமாதமாய்க் கிழித்து விடப் போவதாக அளந்தாளே, என்ன ஆயிற்று? ஒரு மண்ணுமில்லை. ப்ரஸ் கான்ஃபரன்ஸாம், ப்ரஸ் கான்ஃபரன்ஸ்! அதற்காகவே வேலை மெனக்கட்டுச் சென்னையிலிருந்து வந்த மாதிரி!



களைப்புற்ற வழிப்போக்கன் போல, இரவு தயங்கித் தயங்கி வந்து கொண்டிருந்தது. வாசல் படியில் மீண்டும் உட்கார்ந்தவண்ணம், காசிம் கொணர்ந்து தந்த சூடான சோளத்தைக் கடித்துக் கொண்டிருந்தாள் சத்யா.

சிலுசிலுவென்று தூறல் விழுந்து கொண்டிருந்தது ஏரி யெங்கும். சற்று முன் நீலமாயிருந்த நீர்ப் பரப்பு, திடீரெனக் கறுப்புப் போர்வை போர்த்துக் கொண்டது. க்வாக் க்வாக் என்று வாத்துகள் அவசரமாக ஓடின.

"காசிம், குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வாயேன்," என்று சத்யா குரல் கொடுத்தபோது, ரசூல் தான் வந்தான். "அந்த சைத்தானைக் காணோம் அம்மா," என்று தானே தண்ணீர் கொணர்ந்து கொடுத்தான்.

சத்யா, "நன்றி," என்று கூறி அதை அருந்துகையில், "நீங்கள் மத்றாஸியா அம்மா?" என்றான்.

"ஆமாம். ஜெகாவும்தான். ஆனால் அவர்கள் டெல்லி யிலே இருக்கிறாங்க. நான் மதராஸிலேயே இருக்கிறேன்." தாராளமாகவே பேசினாள் சத்யா.

"பழம் சாப்டு, சாப்டு. காஷ்மீர் நல்லா நல்லா"— தமிழிலேயே இப்படிக் கூறிவிட்டு அவன் சிரித்தான்.

"அடே! தமிழ் வார்த்தையும் கற்று வைத்திருக் கிறாயா?" என்று சத்யா பாராட்டினாள். "இங்கே மதராஸிகளும் வந்து தங்குவது உண்டா?"

"இந்த குலாம் ரசூலின் படகு வீட்டில் தங்காதவர்கள் கிடையாது மேடம். எக்ஸலண்ட் சர்வீஸ், பெஸ்ட் மீல்ஸ் என்றுதான் எல்லாரும் எழுதித் தருவார்கள். கொஞ்சம் இருங்க..."

ரகுல் எழுந்து சென்று, ஆல்பம் போன்ற ஓர் அழகிய புத்தகத்தை எடுத்து வந்து காட்டினான். ''இவ்வளவும் சர்டிபிகேட், பிரித்துப் பாருங்கள்.''

சத்யா ஒவ்வொன்றாய்ப் புரட்டிப் பார்க்கலானாள். வெவ்வேறு மொழிகளில் பலவகை வாக்கியங்களில் இருந்தாலும் அவையனைத்தும் ரகுலின் திறமையையும் நாணயத்தையும் பாராட்டுவனவாகவே இருந்தன. ஆகவே கொஞ்ச நேரத்தில் சத்யா சலித்துப் போனவளாகச் சும்மா ஒவ்வொன்றாய்ப் புரட்டலானாள். கை புரட்டிக்கொண்டிருந்தது. கண் ஏரியையும், மலைகளையும் ஆகாயத்தையும் மாறி மாறிச் சுவைத்துக் கொண்டிருந்தது.

திடீரென அவள் மடியிலிருந்த புத்தகத்திலிருந்து ஒரு காகிதத்தை வெடுக்கெனக் கிழித்து வைத்துக்கொண்டான் ரகுல்

''என்ன அது?'' என்று சத்யா திடுக்கிட்டாள்.

ரகுலின் முகம் வெளிறியிருந்தது. ஆனால் சிரித்துக் கொண்டே, ''அது வெறும் கிறுக்கல்... புத்தகத்தின் அழகைக் கெடுக்கிறது... இதோ, இதைப் பார்த்தீர்களா அம்மா... டெல்லியிலே கவர்மெண்ட் செக்ரட்டரி...... வாசிக்கிறேன், கேட்கிறீங்களா?'' என்றான்.

பதற்றத்தினால் விசித்திரமாகிவிட்ட அவன் முகத்தையே பார்த்தாள் சத்யா அவளுக்கும் குழப்பம ஏற்பட்டது. எதைக் கண்டு... என்ன விஷயத்தின் பேரில் இப்படித் தடுமாறிவிட்டான் இந்த ரகுல்?

''கொஞ்சம் தூங்குகிறேன்'' என்று சொல்லி, எழுந்து தன் அறைக்குத் திரும்பினாள்.

யோசனையுடன், கட்டிலின் தலைமாட்டிலிருந்த மேஜை விளக்கைத் தட்டினாள். வெளிச்சம் அறையெங்கும் பரவியது.

அமைதி இழந்திருந்த மனத்தை எப்படிப் பதப்படுத்துவது என்று யோசிக்கலானாள்... என்ன அது?



எங்கேயோ எதுவோ பொசுங்கும் நாற்றம்... காகிதம் பொசுங்கும் நாற்றம்...

எழுந்து பார்த்தாள்.

பின்னங்கோடியிலிருந்த சமையலறையில், எரிந்து கொண்டிருந்த ஸ்டவ்வில், ஒரு காகிதத்தை ரகுல் கொளுத்திக் கொண்டிருந்தான்.

சற்றுமுன் ஆல்பத்திலிருந்து கிழித்த காகிதம்தான் அது என்பதையும் அறிந்தாள்.

## முப்பத்தொன்று

காகிதம் பொசுங்குகிற நாற்றம் நின்று போய் வெகு நேரமாகிவிட்டது.

ஆனாலும் இழந்த அமைதியைத் திரும்பப் பெறுவது சத்யாவுக்குச் சுலபமாயில்லை.

'வானவில்'லுக்கு இந்தண்டையோ அந்தண்டையோ படகு வீடு எதுவும் கிடையாது. ஆகவே தோணிகளின் ஓசை கேட்டுக் கேட்டு மறைந்ததே தவிர, சத்யாவை நோக்கி எதுவும் வருவதாய்த் தெரியவில்லை. கடைசியில், ஒரே ஒரு சிறு படகின் நிழலுருவம் தென்பட்டது. அம்மாடி என்று நிம்மதியுடன் பெருமூச்சுவிட்டாள் சத்யா. இத்தனை நேரமாய்த் தான் பட்ட உளைச்சல்கள் வெறும் பிரமையாயும் சிறுபிள்ளைத்தனமான பயங்களாகவும் தோன்றின. புயலில் சிக்கியவனுக்குக் கோட்டையொன்று கிடைத்த மகிழ்ச்சியுடன், ஜெகா படியேறி வருமுன்னே, ''இத்தனை நேரம் ஆகுமென்று தெரிந்திருந்தால் நானும் வந்திருப்பேன். நீ இல்லாமல் எவ்வளவு வெறிச்சென்று ஆகிவிட்டது தெரியுமா?'' என்று குழந்தை போல் சத்யா சிணுங்கினாள்.

"ஆமாம் கிழித்தாய்!" என்று அவள் கன்னத்தைச் செல்லமாய் இடித்தாள் ஜெகா. "காஷ்மீரைப் பார்க்கிறதென்றால், இங்கே உட்கார்ந்து கொண்டு ரஜுலைப் பார்த்துக் கொண்டிருப்பதாகும்!" ரஜுல் என்ற பெயரைச் சொன்னதும் சத்யாவின் கண்ணில் ஒரு கருமை தோன்றி மறைவதை அவள் கவனிக்கவில்லை.

சாப்பாட்டின்போது ரஜுலைப்பற்றிப் பேச்சு வந்தது.

"லுக் ஹியர்!" என்று காசிமைக் கூப்பிட்டு, டைனிங் மேஜைமீதிருந்த விரிப்பைக் காட்டினாள் ஜெகா. "டர்ட்டி க்னாத்! காலையில் கொட்டிப் போன சூப் அப்படியே இருக்கிறது! மாற்றுவதற்கு வேறு விரிப்புக் கிடையாது? எங்கே உங்கள் முதலாளி ரஜுல்? ரஜுல் எங்கே? நான் வந்ததிலிருந்து கண்ணில் படவேயில்லையே!"

"அவருக்கு ஜுரம். படுத்திருக்கிறார் சாயந்தரத்திலிருந்து," என்றபோது காசிமின் பார்வையும் சத்யாவின் பார்வையும் சந்தித்தன.

சத்யா, மறந்திருந்த ரஜுல் மீண்டும் நினைவுக்கு வந்ததால், "வயிறே சரியில்லை எனக்கு," என்று பாதிச் சாப்பாட்டிலேயே எழுந்து கைகழுவிக்கொண்டு விட்டாள்.

அப்போதே ஜெகா கவனித்து விட்டாளோ என்னவோ, சத்யாவின் அமைதியின்மையை. மணி பத்து ஆகும் வரையில் ரேடியோவின் அருகேயிருந்த பழைய ஆங்கிலப் பத்திரிகைகளையும் துப்பறியும் நாவல்களையும் புரட்டிக் கொண்டிருந்த சத்யா, அதன் பின்னரும் தூங்கப் போகாமல் ஜெகாவின் படுக்கையிலே திரும்ப வந்து உட்கார்ந்து கொண்டாள்.

"சரி. நான் ஊர் சுற்றத் தயார். நீ புரோகிராம் அமைத்துக் கொடு. நாளைக் காலையில் எங்கெங்கே போகலாம்?" என்று அவள் கேட்டதும் ஜெகா ஒரு நிமிடம் அவளை உற்றுப் பார்த்தாள். பிறகு அவள் கழுத்தை அணைத்துத் தன்னோடு இழுத்துக் கொண்டாள்.



"ஏய், நிஜத்தைச் சொல்லு. வாட் இஸ் ராங் வித் யூ?" என்றாள்.

"ராங்? என்ன ராங்? ஒன்றுமில்லையே!" என்று சத்யா மறுத்தும் பயனில்லை. "டோன்ட் ப்ளஃப்!" என்றாள் ஜெகா. "உன் கண்ணின் இமை மேலே தூக்கம் வந்து உட்கார்ந்திருக்கிறது. என்னடாவென்றால், நாளை புரோக்ராம் போடு என்று இங்கே வந்து உட்கார்ந்திருக்கிறாய். உன் ரூமிலே போய்த் தனியாய்ப் படுத்துக் கொள்ள பயமாயிருக்கிறது? அதுதானே?"

"அப்படியில்லை..."

"ஸில்லி! நீ இங்கேயே படுத்துக் கொள்," என்று தன் அறையிலேயே இருந்த இன்னொரு கட்டிலில் தலையணைகளைக் கொணடு வந்து போட்டாள் ஜெகா. "நௌ டெல் மி. என்ன சமாசாரம்?"

அதற்குமேல் மறைக்க முடியாமல் சத்யா, ரஜுலின் மர்மமான நடவடிக்கைகளைப்பற்றித் தெரிவித்தாள். "என்னவோ அவன் நம் கண்ணில் படாமல் ஒளிகிற மாதிரி தோன்றுகிறது," என்றும் கூறினாள்.

ஜெகா சற்று நேரம் மௌனமாகவே யோசனையில் ஆழ்ந்திருந்தாள். பிறகு, "அதெல்லாம் எதுவும் இருக்காது. இந்த ஜனங்கள் நல்லவர்கள். நாணயமானவர்கள். நாளைக்கு நானே விசாரிக்கிறேன், பார். கடைசியில் விழுந்து விழுந்து சிரிக்கிற மாதிரி ஏதாவது அற்ப சமாசாரமாயிருக்கும்," என்றாள்.

"இருந்தால் சரிதான்."

"டைத டை. நாளைக்கு நிஷாத் கார்டன்ஸ் போய் விடலாம் முதலில். முக்கியமாய்ப் பார்க்க வேண்டிய இடம் அது! என்ன?"

"சரி, ஜெகா."

"ஸ்......அப்பாடா," என்று காலை நீட்டிக்கொண்டு தன் கட்டிலில் படுத்து, போர்வையை மேலே இழுத்து

விட்டுக் கொண்டாள் ஜெகா. சத்யா இன்னும் விழித்துக் கொண்டேயிருப்பது தெரிந்தது.

''வாட் எ டே! டெரிபிள்!'' என்றாள் ஜெகா. சத்யாவின் சிந்தனைகளை மாற்றும் உத்தேசத்துடன். ''ப்ரஸ் கான்ஃபரன்ஸ் முடிந்ததும் முதலமைச்சர் சாதிக்குடன் ஒரு பர்சனல் இண்டர்வ்யூவும் முடித்துக் கொண்டு விட்டேன்! எப்படி?''

''கெட்டிக்காரிதான்.''

''நீ பார்க்காமல் போய்விட்டாயே அவரை! நம்ம தஞ்சாவூர் மிராசுதார் போல, கையில் ஒரு வெள்ளி வெற்றிலைப் பெட்டி வைத்துக் கொண்டிருக்கிறார். தாம்பூலத்தை இடித்து வைத்துக்கொண்ட மாதிரி என்னவோ ஒரு சிலப்புத் தூள் இருக்கிறது அந்தப் பெட்டியில். அடிக்கடி எடுத்து வாயில் போட்டுக்கொண்டு மெல்கிறார். வேடிக்கையாயில்லை?''

''ஆமாம்.''

''கரன்சிங் அவர்களையும் இண்டர்வ்யூ பண்ண எங்கேஜ்மெண்ட் கேட்டிருக்கிறேன். அதற்காவது நீ வா.''

ஜெகாவின் முயற்சி கொஞ்சம் பலித்தது போலும். ''அவர் காலை இழுத்து இழுத்து நடப்பார் என்கிறார்களே, அது நிஜமா ஜெகா?'' என்று கேட்டாள் சத்யா.

''ஆமாம். சின்ன வயசில் ஒரு கார் ஆக்ஸிடெண்ட்டில் சிக்கிக் கொண்டார். எவரிபடி நோஸ் இட்,'' என்று சொல்லிவிட்டு, ''அவருடைய அரண்மனை கட்டாயம் பார்க்க வேண்டிய ஒன்று சத்யா. ரியல் ஃபோர்ட்தான். ஆனால் அந்தக் காலத்தில் ஜனங்களை அடியோடு மறந்து விட்ட சமஸ்தானம் ஒன்று உண்டென்றால், அது இதுவாகத்தான் இருந்தது. வரி வசூல் பண்ணுவதைத் தவிர வேறு தெரியாது. அதனால்தான் அந்த நாளில் ஷேக் அப்துல்லாவும் நேஷனல் கான்ஃபரன்ஸூம் கிடுகிடுவென்று புகழ் சம்பாதிக்க முடிந்தது. ஸ்டில்......''



பத்து நிமிட நேரத்துக்குக் கடகடவென்று தனது அரசியல்— சமூகக் கொள்கைகளைப் பொழிந்து தள்ளி விட்டு சத்யாவைப் பார்த்தாள் ஜெகா. அவள் நிம்மதியான நித்திரையில் ஆழ்ந்துவிட்டது தெரிந்ததும், தன் திட்டம் வெற்றி பெற்ற மகிழ்ச்சியுடன் தனக்குத்தானே சிரித்துக் கொண்டு, சத்யாவின் கட்டிலில் போர்வையின் ஓரங்களை இழுத்துச் செருகினாள் படுக்கையுடன். கள்ளங்கபட மில்லாவிட்டாலும் ஆழ்ந்த துயரத்துக்குட்பட்டிருக்கும் அந்த முகத்தை ஒரு கணம் பார்த்துக்கொண்டே நின்றாள். பிறகு சந்தடியின்றி விளக்கை அணைத்துவிட்டு, கதவையும் சாத்திக்கொண்டு வெளியே வந்து, ''காசிம்!'' என்று மெதுவாக, ஆனால் உறுதியாகக் குரல் கொடுத்தாள்.

கடைசிக் கட்டிலிருந்து வெளிப்பட்டு வந்த காசிம், ''பால் வேணுமா அம்மா?'' என்று வினவினான்.

''உன் முதலாளி வேணும்,'' என்றாள் ஜெகா. ''ரசூலைக் கூப்பிடு.''

''அவருக்கு ஜுரம், மிஸ்.''

''அந்த ஜுரம் ஏன் வந்தது என்று எனக்குத் தெரியும். நான் கூப்பிட்டதாகச் சொல். ஐ வில் பி வெயிட்டிங் இன் த டிராயிங் ரூம்,'' என்று கட்டளையிட்டு விட்டு, முன்புறம் நோக்கி நடந்த ஜெகா, விடி விளக்கைத் தவிர மற்றவற்றை நிறுத்திவிட்டு, சோபாவில் அமர்ந்து கொண்டாள்.

விடிகாலையில் சத்யாவுக்கு விழிப்புக் கண்டது. காசிமுக்கு அது எப்படித்தான் தெரியுமோ? சுடச்சுட ஒரு கோப்பைத் தேநீருடன் தலைமாட்டில் வந்து நின்று கொண்டிருந்தான்.

படுக்கையில் படுத்தபடியே தேநீரை அருந்திவிட்டு, ''ஜெகா எழுந்துவிட்டாளா, என்ன?'' என்று விசாரித்தாள் சத்யா. பக்கத்துப் படுக்கை காலியாயிருந்தது.

''சோம்பேறி! நான் குளித்துக்கூட ஆயிற்று. இன்னும் பத்து எண்ணுவதற்குள் எழுந்தாக வேண்டும். இல்லாவிட்டால் கட்டிலோடு தூக்கி ஏரியில் போட்டு விடுவேன்,'' என்று எச்சரிக்கை செய்தபடி, ஒரு நீண்ட 'பாத் டவலை' உடம்பின்மீது சுற்றிக்கொண்டு உள்ளே வந்தாள் ஜெகா.

காசிம் நாசூக்காக நழுவிவிட்டான்.

''அட! உன் தோளுக்குக் கீழே ஒரு மச்சம் இருக்கிறதே!'' என்று சொல்லித் தோழியை அணைத்துக் கொண்டாள் சத்யா. ''இந்த மாதிரி இருந்தால் அதிர்ஷ்டமாம். அம்மா சொல்லியிருக்கிறாள்.''

''தட்ஸ் ட்ரூ.'' என்று ஜெகா ஆமோதித்தாள். ''ப்ரைம் மினிஸ்டர்களென்ன, சமஸ்தானாதிபதிகளென்ன, இந்த ஜெகா தன்னை இரண்டு நிமிடம் இன்டர்வ்யூ பண்ணமாட்டாளா என்று ஏங்குகிறார்களே, சும்மாவா?...... சரி, சரி, ஜோஸ்யம், பட்சி சாஸ்திரம் எல்லாம் அப்புறம் பார்க்கலாம். முதலில் குளியல், சாப்பாடு எல்லாம் முடியட்டும். உம்! ஒன், டு, த்ரீ......''

''இதோ போகிறேன்,'' என்று பொய்ப் பயத்தை வெளிப்படுத்திக் கொண்டு சத்யா அவளிட்ட உத்தரவுகளையெல்லாம் விரைவாக நிறைவேற்றினாள். ரகுல் நடுநடுவே தலைகாட்டியும்கூட, அவளுக்கு முந்திய தினத்துச் சஞ்சலங்கள் மறந்து விட்டிருந்தன. ஆசியாவின் வெனீஸ் என்று புகழ்பெற்ற இந்தச் சொர்க்கத்தின் பல பகுதிகளைப் பார்க்கப் போகிறோம் என்ற இன்பப் பரபரப்பு அவள் உள்ளத்தில் வேறெந்த எண்ணமும் தலைதூக்காமல் செய்துவிட்டது.

காலைச் சிற்றுண்டியை முடித்துக்கொண்டு அலங்காரங்களைச் சரி செய்துகொண்டு அவர்கள் புறப்படத் தயாரானபோது பிளாஸ்டிக்கில் செய்த அழகிய பிக்னிக் கூடையில், பலகாரங்களை நிரப்பிக் கொணர்ந்து வைத்தான் ரகுல்.



''ஹூம்! பழம்தான் கண்ணிலேயே காட்ட மாட்டேனென்கிறாய்! பரவாயில்லை. வழியில் பார்த்துக் கொள்கிறோம்,'' என்றாள் ஜெகா.

வெளியே சின்னப் படகு தயாராயிருந்தது.

''சொல்வதைக் கவனமாகக் கேள். அப்புறம் நத்துப் பித்தென்று விழித்தாயோ, நான் ஜவாப்பில்லை,'' என்றாள் ஜெகா.

''சொல்லு.''

''கரைக்குப் போனதும் ஒரு டாக்ஸி பிடித்துத் தருகிறேன். அவனிடம் சொல்லி விடுகிறேன் நானே. நேரே நிஷாத் கார்டன்ஸுக்குப் போய்......''

''நீ?'' என்று அவசரமாகக் குறுக்கிட்டாள் சத்யா.

''முழுக்கக் கேட்காமல் பேசினால் அறைந்து விடுவேன்,'' என்று கையை ஓங்கினாள் ஜெகா. ''ஒபிராய் ஓட்டலில் மானேஜருடன் ஒரு எங்கேஜ்மெண்ட் இருக்கிறது. அதை விடக்கூடாது. ஆகவே நீ முன்னாலே போய், நிஷாத் கார்டன்ஸில் சுற்றிக்கொண்டிரு. கொஞ்சம்கூட அலுப்பே தெரியாது. நான் ஒரு மணிக்கெல்லாம் வந்து விடுகிறேன். என்ன? பயப்படமாட்டாயே?''

''பயமா?'' என்று சத்யா சிரித்தவாறு ஒப்புக் கொண்டாள். ஆனால் ஜெகா இல்லாமல் தான் மட்டும் முன்னால் போகவேண்டி இருக்கிறதே என்று சிறிது வருத்தம் இருந்தது.

தன்னை ஒரு டாக்ஸியில் ஏற்றியனுப்பிய ஜெகா, ஒபிராய் ஓட்டலின் பக்கம் திரும்பாமல், துறையில் இறங்கி, 'வானவில்'லுக்கே திரும்புவதை அவள் கண்டிருந்தால் வருத்தம் மறைந்து வியப்பும் குழப்பமும் ஏற்பட்டிருக்கும்.

ஆனால் சத்யா கவனிக்கவில்லை. சுரையை ஒட்டினாற்போல் உள்ள சாலையின் அழகை ரசிப்பதிலே அவள் ஈடுபட்டிருந்தாள்.

ஒன்று எப்போதோ தாண்டிவிட்டது. இரண்டை நோக்கித் தவழ்ந்துகொண்டிருந்தது குட்டி முள்.

சத்யாவுக்குக் காலில் வலியெடுத்து விட்டது. மைல் கணக்காகப் பரந்து கிடக்கும் புல்வெளிகளில் திரியத் திரிய வியர்க்கவில்லையே தவிர, உடம்பு கெஞ்சத் தொடங்கியிருந்தது. அசல் மலை அடிவாரத்தையே, பத்து அடுக்குகளாக வெட்டிச் சமப்படுத்தியதுதான் இந்த நிஷாத் கார்டன்ஸ் என்பதை சத்யா கண்டுகொண்டாள். அகல் விளக்கின் பின்னேயுள்ள முதுகைப்போல இத்தனை புல் படிகளுக்கும் பின்னே ஓங்கி உயர்ந்து நின்றிருந்தது மலைச் சரிவுகள். பசேலென்ற தேவதாரு விருட்சங்களின் நெடிய உருவங்களைத் தோட்டத்தின் நடுவே ஓடும் நீண்ட நீர் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

பிக்னிக் கூடையை வேறே தூக்கிக்கொண்டே போனதால், அலுப்புடன் ஒரு மண்டபத்தின் ஓரத்தில் அதை டொக்கென்று வைத்து விட்டு, தானும் உட்கார்ந்தாள். கறுப்புச் சலவைக் கல்சுவர்களில், முன்பு மாணிக்கக் கற்கள் புதைக்கப்பட்டிருந்த இடங்கள் இப்போது வெற்றுக் குழிகளாகக் சோகத்துடன் காட்சி தந்தன.

பசி ஒருபுறம் வாட்ட, கைக்கடிகாரத்தை நோக்கினாள். இப்போது இரண்டைத் தாண்டிவிட்ட குதூகலத்துடன் பெரிய முள் உற்சாகமாகக் கீழிறங்கிக் கொண்டிருந்தது. பிக்னிக் பொட்டலங்களைப் பிரித்தாள். ரொட்டித் துண்டங்களுக்கு ஜாம் தடவாமல் மிளகுப் பொடியும் உப்பும் தூவிக் கொண்டு இரண்டு விள்ளல் கடித்தாள்.

விக் என்று ஒரு விக்கல் புறப்பட்டது. அடுத்த விள்ளலைக் கடிக்கு முன்பு மூன்று நான்கு விக்கல்கள் கிளம்பி விட்டன.



டக்.

வியப்புடன் திரும்பிப் பார்த்தாள். ஒரு கண்ணாடித் தம்ளரில் குளிர்ந்த நீர் ததும்பிக் கொண்டிருந்தது. நிமிர்ந்தாள்.

பரமசிவனின் நாகம்போல், காமிராவும் அதையொட்டிய சாதனங்களும் மேனியெங்கும் சஞ்சரிக்க, தடித்த கண்ணாடியும், காந்தத்தில் இரும்புத்தூள் ஒட்டிக்கொண்டாற்போன்ற கிராப்பும் கொண்ட ஓர் இளைஞன் அவளைப் பரிவோடு நோக்கியபடி நின்றிருந்தான்.

''ரொம்ப நன்றி,'' என்று புன்சிரிப்புடன் தெரிவித்துவிட்டுத் தண்ணீர் வாங்கிக் குடித்தாள் சத்யா. விக்கல் டக்கென்று நின்றது. அந்த இளைஞன் ஓடிப்போய், ஓடையிலிருந்து இன்னொரு டம்ளர் மொண்டு எடுத்து வந்து அவளருகில் வைத்தான். ''நீங்களும் எடுத்துக் கொள்ளுங்களேன்,'' என்று சத்யா அவனைச் சிற்றுண்டிக்கு அழைத்ததும், அவன் சிறிதும் மறுக்காமல் உட்கார்ந்தான். ஆனால், கழுத்தில் கண்டபடி மாட்டியிருந்த காமிராக் கருவிகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளவே பல விநாடிகள் பிடித்தன. ''இப்படி, இப்படி எடுங்கள்,'' என்று சத்யாவே உதவி செய்தாள்.

எல்லாவற்றையும் எடுத்து வைத்தான பின்னர், ஓர் ஆப்பிளைக் கடித்துக்கொண்டே, ''நீங்கள்... தப்பாக நினைக்காமல் இருந்தால், ஒரு கேள்......'' என்று தயங்கினான் அவன்.

''என்ன, சொல்லுங்களேன்......''

''மதறாஸிலிருந்து வந்திருக்கிற சினிமா நட்சத்திரமா?''

சத்யா வாய்விட்டுச் சிரித்து, ''இல்லை. நான் சாதாரண ஆள்தான். சிநேகிதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்'' என்றாள்.

''ஓஹோ. உங்கள் சிநேகிதி நட்சத்திரமா?''

''ஆமாம். ஆனால் பத்திரிகை உலக நட்சத்திரம்.''

அவனுடைய முகத்தில் ஏமாற்றம் ததும்பியது. ''நான், டெல்லியில் ஒரு அட்வர்டைஸ்மெண்ட் கம்பெனியின் காமிராமேன். ஒரு விளம்பரப் படம் தயாரிப்பதற்காக வந்தேன். யாரோ தென்னிந்திய சினிமா நட்சத்திரம் வருவார்கள் என்று சொன்னார்கள். அவரை இந்தப் பின்னணியில் எடுக்கவேண்டும்...'' திடீரென்று அவன் முகம் பிரகாசித்தது. ''ஓர் உதவி செய்கிறீர்களா?''

''என்னைப் போஸ் கொடுக்கச் சொல்கிறீர்களா?''

''மதறாசிகளே கெட்டிக்காரர்கள்தான்,'' என்று பாராட்டினான் அந்த காமிராமேன். ''நீங்கள் நல்ல பர்ஸனாலிட்டியுடன் இருக்கிறீர்கள். ஸ்டார் என்ன வேண்டிக் கிடக்கிறது, ஆயிரத்தெட்டு மேக்கப் செய்து கொண்டு! சுத்தக் கன்னராவி! உங்களைப்போல நேசுரலான பெண், இந்த நேசுரலான சூழ்நிலையில்......''

''நான் ரெடி,'' என்று எழுந்து கொண்டாள் சத்யா. ''உச்சி குளிரப் பேசுவதில் நீங்கள் டிப்ளமா வாங்கக் கூடியவர்கள்தான்.''

அந்த மண்டபத்தின் ஓரமாகவே அவளை நிற்கச் சொல்லி, காமிராவை முடுக்கினான் அவன். ஆனால் அது கிர்ரென்று சப்திக்க ஆரம்பித்ததுமே நிறுத்திவிட்டு, சத்யாவின் அருகில் வந்தான். அவள் கண்ணெதிரில் தன் கை விரல்களைப் பிரித்துக் காட்டி, ''எத்தனை?'' என்று கேட்டான்.

''மூன்று.''

''இது?''

''நாலு.''

''என் ஸ்லாக் என்ன நிறம்?''

''வெளிர் நீலம்.''



''தாங்ஸ்,'' என்று கூறிவிட்டு, காமிராவின் மீட்டரை அவள் முகத்தருகே நீட்டி, வெளிச்சத்தைக் கணக்குச் செய்து கொண்டபின், மறுபடி காமிராவை இயக்கினான்.

அரைமணி நேரத்தில் வேலை முடிந்தது.

''பாக்கி டிபனையும் தீர்த்து விடலாம், வாருங்கள். இனிமேல் என் சிநேகிதி வரமாட்டாள்,'' என்று கூறி, கூடையை எடுத்துக்கொண்டு, நிழலான ஒரு மரத்தடிக்குச் சென்றாள் சத்யா.

அவன் தன்னுடைய கருவிகளைச் சுருட்டி மடக்கி எடுத்துக்கொண்டு வரப் பல நிமிடங்கள் பிடித்தன. அவன் வந்து உட்கார்ந்ததும், ''இப்போது சொல்லுங்கள். எதற்காக என் கண் பார்வையைப் பரீட்சித்தீர்கள்?'' என்று சத்யா விசாரித்தாள்.

அவன் வாய் நிறைய ஆகாரம் திணித்துக்கொண்டே, ''அதுவா? போன வருஷம் இங்கே வந்திருந்தபோது ஒரு சோகமான அனுபவம்,'' என்றான். கண்களில் வருத்தத்தின் சாயை படிந்தது.

சத்யா எதுவும் கேட்காமல் அவன் முகத்தைப் பார்த்தாள்.

அவனே தொடர்ந்தான்: ''இதே மாதிரி சூழ்நிலைதான். ஆனால் ஷாலிமார் கார்டன்ஸ். உங்களைப் போலவே ஒரு யுவதியைத் தற்செயலாகச் சந்தித்தேன். குஜராத்திப் பெண். எவ்வளவு இனிய சுபாவம்!'' பழைய நினைவுகளில் ஆழ்ந்து கண்களை மூடிக் கொண்டான் அவன். ''ஒரு வார்த்தை மரியாதைக் குறைவாகவோ பதற்றமாகவோ வந்திருக்க வேண்டுமே! ஊஹூம்!''

''மேலே சொல்லுங்கள்.''

''இதேபோல்தான், ஒரு விளம்பரப் படத்துக்குப் போஸ் கொடுங்கள் என்று கேட்டுக் கொண்டேன். மறுக்காமல் ஒப்புக் கொண்டாள். ஆனால் நான்தான்......

சே! கொடூரமாக அவள் மனசை நோகப் பண்ணி விட்டேன்!''

''என்ன செய்தீர்கள்?''

''இப்படித் திரும்பு, அந்தப் பக்கம் பார் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தேன்.''

''அதிலென்ன தப்பு?''

''அவள் நான் சொன்ன பக்கம் திரும்பாமல் வேறு பக்கம் திரும்பிக் கொண்டிருந்தாள். 'என்னம்மா, பார்வைக் கோளாறா?' என்று விளையாட்டாகக் கேட்டேன். 'ஆமாம்' என்றாள் அவள்!''

இதைச் சொல்லி விட்டு, அவன் தலையைக் குனிந்து கொண்டான். அந்த அதிர்ச்சியான தகவல் சத்யாவையும் சில நிமிடங்களுக்கு வாயடைக்கச் செய்து விட்டது. இறுதியில் அவள் மௌனத்தைக் கலைத்து, ''பார்வையில்லாத பெண்ணா அவள்?'' என்று கேட்டாள்.

''ஆமாம். அது ஒரு விசித்திரமான கோளாறு. பகலில் நன்றாகத் தெரிந்து கொண்டிருந்து மாலை வேளை நெருங்க நெருங்கப் பார்வையும் மங்கும். இரவில் எதுவுமே தெரியாது. ஏதோ ஒரு விஷ ஜுரத்தினால் அப்படி ஆகிவிட்டதாம். அதற்குச் சிகிச்சையே கிடையாதாம். எல்லாம் அவளே சொன்னாள்......''

''பின்னே தனியாகவா ஷாலிமார் கார்டனுக்கு வந்திருந்தாள்?''

''வேறு யாரோ சிநேகிதர் வருவார் என்று எதிர் பார்த்திருந்தாளாம். அவர் வரக் காணோம். கடைசியில் நானே அவளை அவளுடைய படகு வீட்டில் சேர்ப்பித்து விட்டுத் திரும்பினேன். என் முரட்டுத்தனமான பேச்சுக்குப் பிறகும்கூட அவள் ஒரு சொல் கோபமாகப் பேசவில்லை. முகத்தில் கடுகத்தனை சிடுசிடுப்பும் காட்ட வில்லை. நான்தான் அந்தச் சம்பவத்துக்குப் பிறகு ஒரு



வார காலம் சரியாய்ச் சாப்பிடவோ தூங்கவோ இல்லை. அந்தப் பிலிமையும் விளம்பரத்துக்குத் தரவில்லை. தர மனமே வரவில்லை.''

''ஆச்சரியமான அனுபவம்தான்......''

''துன்பமான அனுபவம்,'' என்று திருத்தினான் அவன். ''இரண்டாம் தரமும் அதே மாதிரி முட்டாள்தனம் பண்ணி விடக் கூடாதென்றுதான் உங்களை முன்கூட்டியே பரீட்சித்துக் கொண்டேன்.''

சத்யா மௌனமாக இருந்தாள். அந்தக் குஜராத்திப் பெண்ணின் பண்பாடு நிறைந்த கதையைக் கேட்டபின், அவளை நெடுங்காலமாக அறிந்தாற் போல ஒரு நெகிழ்ச்சி அவள் மனத்தில் பிறந்திருந்தது.

''அப்புறம் நீங்கள் அவளைப் பார்க்கவேயில்லையா?''

''அன்று ராத்திரியே நான் டெல்லி திரும்பி விட்டேன். கனவு மாதிரி எல்லாம் மறந்துவிட்டது. ஆனால் என்ன அற்புதமான, அழகான, இனிய கனவு!''

பிக்னிக் கூடையை மூடிக்கொண்டு எழுந்தாள் சத்யா.

ஜெகா வேறெங்கேயோ போய் அகப்பட்டுக்கொண்டு விட்டாள். அதனால்தான் வரவில்லை என்று நினைத் திருந்தாள் சத்யா. ஆகவே, தன் அறையில் ஹாய்யாக ஜெகா படுத்திருப்பதைக் கண்டதும் பிய்த்துக் கொண்டு வந்தது கோபம்.

''நல்ல ஒழுங்காயிருக்கிறதே வேலை! இதுதான் நிஷாத் கார்டனா?''

''த்ஸூ'' தலையின் கீழே இரு கைகளையும் கோத்துப் படுத்திருந்த ஜெகா விழிகூடத் திருப்பவில்லை.

''உன் த்ஸூவை நீயே வைத்துக்கொள்!'' என்று சீறினாள் சத்யா.

அப்போதும் ஜெகா பதில் சொல்லக் காணோம்.

''உன்னைப் போய்த் துணைக்குக் கூப்பிட்டேனே? நீ ஒரு மரம். காகிதமும் பேனாவும்தான் உனக்கு. இந்த மாதிரியான ஆனந்தச் சூழ்நிலையை ரசிக்கக்கூட உனக்குத் தெரியாது! ஹூம்! அத்தான் வந்திருந்தால்...''

''வந்திருந்தால் கையில் விலங்கு மாட்டிக்கொள்வான்.''

திடுக்கிட்ட சத்யா அவள் முகத்தை உற்று நோக்கினாள். ஜெகாவின் வழக்கமான கலகலப்பு இல்லாமல், முகத்தில் ஒரு தீவிரமும் அழுத்தமும் புலப்படுவதை இப்போதுதான் உணர்ந்தாள்.

''என்ன உளறுகிறாய்? அத்தான் கையில் விலங்கா?''

''முதலில் கையில் விலங்கு. பிறகு கழுத்தில் சுருக்கு.''

''ஜெகா!''

படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள் ஜெகா. சத்யாவை ஆழ நோக்கியபடி சொன்னாள்:

''பக்கத்துப் படகில், பார்வை இழந்திருந்த ஒரு குஜராத்திப் பெண்ணைக் கொலை செய்துவிட்டு ஓடியவனுக்கு வேறு என்ன கிடைக்கும், சத்யா? நீதான் சொல்லேன்.''

## முப்பத்திரண்டு

''சீ! என்னடி பிதற்றுகிறாய்?'' என்று கையை ஓங்கிவிட்டாள் சத்யா.

ஜெகா சொன்ன தகவல் அத்தனை அபத்தமாயும், நம்ப முடியாததாயும், ஆத்திரமூட்டுவதாயும் இருந்தது.

ராதா அத்தான் கொலைகாரனாம்! பக்கத்து வீட்டில் எவளோ ஒரு குஜராத்திப் பெண் இருந்தாளாம், அவளைக் கொலை செய்து விட்டு ஓடிவிட்டானாம்! அத்தான் கொஞ்சம் முரடர், சுதந்திரமான சுபாவம் உள்ளவர், யாருக்கும் எதற்கும் தலையாட்டுகிறவரல்ல என்பதற்காக என்ன அபாண்டத்தை வேண்டுமானாலும் அவர் தலையில் கட்டி விடுவதா என்ன? நன்றாயிருக்கிறதே நியாயம்?

கண்கள் சிவந்து மின்ன, ரத்தம் கொதித்துத் தேகம் படபடக்க, ஆங்காரமே உருவாய் நிற்கும் சத்யாவைத் துளியும் பொருட்படுத்தவில்லை ஜெகா. சத்யாவின் ஓங்கிய கைகளைப் பிடித்து இறக்கி விட்டு, ''ஐ நோ வாட் ஐ அம் டாக்கிங். சும்மா ஆய் ஊய் என்று சத்தம் போடாமலிரு. வந்த சுவடு தெரியாமல் டெல்லிக்குத் திரும்பி விட வேண்டும். அதுதான் நாம் செய்யக்கூடிய— செய்ய வேண்டிய— அடுத்த வேலை,'' என்றாள். அவளுடைய வழக்கத்துக்கு நேர் விரோதமாக அவள் குரல் தாழ்ந்தும், நிதானமாயும், ஆழத்துடனும் இருந்தது. அது ஒன்றே சத்யாவை அச்சுறுத்தவும், நிலைமை உண்மையாகவே கடுமையானதுதான் என்பதை உணர்த்தவும் போதுமானதாயிற்று.

கண் கொட்டாமல் பீதியுடன் தன் தோழியை நோக்கியவாறே பொத்தென்று கட்டிலில் உட்கார்ந்தாள் சத்யா.

ஜெகா, ஸ்டாண்டில் மாட்டியிருந்த தன் புடைவைகளையும் சோளிகளையும் எடுத்து உதறிப் பெட்டியில் அடுக்கிக்கொண்டு, நிதானமாகப் பேசினாள்:

''லட் மி டெல் யூ ஒன் திங். உன்னை நிஷாத் கார்டனுக்கு அனுப்பி விட்டு, நான் ஒபிராய் ஓட்டலுக்குப் போகவில்லை. நேற்று ராத்திரி நீ தூங்கிய பிறகு சில விஷயங்களை விசாரித்தேன் அதெல்லாம் உண்மைதானா என்பதை இன்று பூரா வெரிஃபை செய்துகொண்டேன்.''

''அப்படியானால்......நீ......''

''ஆதாரத்துடன்தான் பேசுகிறேன்,'' என்று அழுத்தமாக ஜெகா சொன்னாள். ''இப்போது எதையும் கேட்காதே. ஊருக்குப் போகும்போது, அல்லது டெல்லியில் என் ரூமை அடைந்த பிறகு ஐ வில் டெல் யூ எவரி திங். சாப்பாடு முடிந்ததும் உன் சாமான்களையெல்லாம் பாக் பண்ணி விடு. காலை எட்டு மணிக்குப் பிளேன். டிக்கெட் எடுத்துவிட்டேன்.''

சாப்பாடு என்பது ஒரு பெரும் சித்திரவதையாகத்தான் இருந்தது சத்யாவுக்கு. வேறு யாரோ ஒரு மூன்றாவது நபருக்குப் பயங்கரமான அனுபவங்கள் நிகழ்வது போலவும், அவற்றைத் தான் பார்த்துக் கொண்டிருப்பது போலவும் இருந்தது. நேரமாக ஆக, அவள் உள்ளம் மரக்கத் தொடங்கியதால், எந்த உணர்ச்சியும் தன் உள்ளத்தில் பிறந்து தன்னைப் பாதிப்பது போலவே தோன்றவில்லை.

தட்டுக்கள் நகர்த்தப்படுவது, கரண்டிகள் சந்திப்பது, கிண்ணங்கள் வைக்கப்படுவது— போன்ற ஊமை ஒலிகளைத்தான் கேட்க முடிந்ததே தவிர, பேசத் தெரிந்த மனிதர்கள் இருக்குமிடமாகத் தெரியவில்லை அந்த டைனிங் ஹால்.

ரசூல் குறுக்கும் நெடுக்கும் போய்க்கொண்டுதான் இருந்தான். அவனது தோரணையில் சிறிது தன்னம்பிக்கை புலப்பட்ட போதிலும், கண்களிலிருந்த மிரட்சி அகலவில்லை.

ஜெகாவைப் பார்க்கும்போதெல்லாம் அவன் விழிகள் கெஞ்சுவதைச் சத்யா கவனித்தாள் ஆனால், எதற்காகக் கெஞ்சுகிறான் என்று அவளுக்குத் தெரியவில்லை.

சாப்பாடு முடிந்ததும், முன் பக்கத்து வரவேற்பு அறையில் சற்று நேரம் உட்கார்ந்திருந்தார்கள் சத்யாவும் ஜெகாவும். இரண்டு பேரும் பேசிக் கொள்ளவில்லை. சத்யா சிந்தனையுடன் ரேடியோவைத் திருகிக்கொண்டிருந்தாள்.



மீட்டரின் முகத்தில் பளீரென்று வெளிச்சம் பரவி, பின்பு மங்கி, பின்னர் மறுபடி பிரகாசித்ததும் லதா மங்கேஷ்கரின் தேன் குரலில் பாட்டொன்று மிதந்து வந்தது. ஏரியெங்குமிருந்த நூற்றுக் கணக்கான படகு வீடுகளில் வண்ண வண்ணமாக விளக்குகள் ஒளிவீசிக் கொண்டிருந்தன. பூச்சாடிகளின் நீண்ட நிழல்களும், காற்றில் அசைந்தாடும் ஜன்னல் திரைகளும் சூழ்நிலையான திகிலுக்குப் பின்னணி இசைத்தன.

லதாவின் பாட்டுக்கள் முடிவடைந்து ஓர் கனமான ஆண் குரல் சாஸ்திரீயமான ஹிந்துஸ்தானி இசையைப் பொழிய ஆரம்பித்தது. ஒபிராய் ஓட்டலிலும் நாகின் கிளப்பிலும் பொழுதைக் கழித்து விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தார்கள் பலர். மினுக்மினுக்கென்ற விளக்குகளுடனோ அல்லது விளக்கேயில்லாமல் வெறும் துடுப்புச் சத்தத்துடனோ அவர்களுடைய உல்லாசத் தோணிகள் படகு வீடுகளை நோக்கிச் சென்று கொண்டிருந்தன.

''ரசூல்,'' என்று ஜெகா அழைத்தாள்.

அறை வாயிலில் அவனுடைய உயரமான உருவம் தென்பட்டது.

''கொண்டு வா,'' என்று ஜெகா கட்டளையிட்டாள்.

ரசூல் தயக்கத்துடன் அவளையும் சத்யாவையும் மாறி மாறிப் பார்த்தான்.

''பரவாயில்லை. கொண்டு வா,'' என்று ஜெகா சொன்னாள்.

சத்யாவுக்கு அந்த மர்ம நாடகத்தின் முழுப் பொருளும் அப்போது விளங்கவில்லை. ஆனால் சில நிமிடங்களுக்கெல்லாம் ரசூல் தூக்கி வந்து அவர்கள் முன்னால் வைத்த பொருளைக் கண்டதும், தீயை மிதித்து விட்ட மாதிரி சரேலென இருக்கையிலிருந்து எழுந்து கொண்டாள்.

''உட்கார்,'' என்று அவனைச் சமாதானப்படுத்தி சோபாவில் அமர்த்தினாள் ஜெகா. பிறகு, ''திற,'' என்றாள் ரகுலிடம்.

சத்யா படபடவென்று துடிதுடிக்கும் உள்ளத்துடன் பார்த்தவாறிருந்தாள்.

மூன்று சோபாக்களுக்கு நடுவே, ரத்தினக் கம்பளத்தின் மீது ரகுல் கொண்டு வந்து வைத்திருந்த ஸூட்கேஸை அவளுக்கு மிக நன்றாய் அடையாளம் தெரிந்தது.

ராதா அத்தான் அதை சைனா பஜார் ஷாப்பொன்றில் வாங்கியபோது அவளும்தான் கூட இருந்தாள். ''அசல் தோல்தானா, இல்லை அட்டையா?'' என்று கேட்டபடி ராதா வெளியே தெரு வெளிச்சத்துக்கு எடுத்துச் சென்று பரிசோதித்த போது அவளும்தான் பார்த்தாள். பில் போடுகிற சமயத்தில், வலது புறத்தில் பிடி சரியாயில்லை என்று கூறி வேறு பெட்டி மாற்றச் சொன்னதும் அவள் தான். ஏன், பெட்டியை எடுத்துக் கொண்டு வாசலுக்கு வந்தபோது, பிரஷும் டப்பாவுமாக நின்றிருந்த பையனிடம் அதைக் கொடுத்து இடது புறத்து மூலையில் 'ராதாகிருஷ்ணன்' என்று அழகாக, சிறிதாகப் பெயர் எழுதச் சொன்னதே அவள்தான்.

(நன்றாய் ஞாபகமிருக்கிறது. ''ராதாகிருஷ்ணன் வேண்டாம். ராதா என்றே எழுது,'' என்று அந்தப் பையனிடம் கூறிவிட்டு அத்தான் குறும்புத்தனமாய் சிரித்தார். ''அதிலே ஒரு ஜோக் இருக்கிறது சத்யா. ரயிலிலே பஸ்ஸிலே இதை எடுத்துப்போனால், நாலு பேர் பார்வையிலே படுகிறமாதிரி வைத்துவிட்டு, தள்ளி உட்கார்ந்து விடுவேன். வருகிற பயல்களெல்லாம், 'ராதா' என்கிற பெயரைப் பார்த்துவிட்டு, எவளாயிருக்கும் என்று பெண்கள் பக்கத்தையே நோட்டம் விட்டுக்கொண்டிருப்பான்கள்!''—)

ரகுல் ஸூட்கேஸைத் திறந்து, ஒவ்வொரு உடுப்பாய் வெளியே எடுத்து வைக்கத் தொடங்கினான். மடிப்புக் கலையாத உயர் ரகத் துணிகளில் பாண்ட்டுகளும் ஸ்லாக்குகளும் டைகளும் புல்லோவர்களும் வெளிப்பட்டன. பிறகு சோப்புப் பெட்டி, ரேசர் செட், நாப்கின்கள், பற்பசை, பிரஷ் முதலியன வரிசை பரப்பின.



எல்லாம் ராதா அத்தானுடையவை.

''ஒன்றைக்கூட நான் விற்கவுமில்லை, உபயோகப் படுத்தவுமில்லை,'' என்று ரகுல் தெரிவித்தான். அப்படி அவன் இல்லை, சொன்னது தனது நேர்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாக இந்த விஷயத்தில் எத்தனை பயத்துடன் இருக்கிறேன் பாருங்கள் என்பதற்குச் சாட்சியம்தான். அவன் குரலிலும் முகபாவத்திலும் தெளிவாய்த் தெரிந்தது அது.

''நீ பணம் வைத்திருக்கிறாயல்லவா?'' என்று ஜெகா வினவியதைச் சில வினாடிகள் கழித்தே கிரகித்துக் கொண்டாள் சத்யா. அவள் சிந்தனை அந்த ஸூட்கேசின் மீது ஆழமாகப் பதிந்திருந்ததே காரணம்.

''எவ்வளவு?'' என்று கேட்டாள்.

''எவ்வளவு?'' என்று ரகுலைத் திருப்பிக் கேட்டாள் ஜெகா.

அவன் தனது பாக்கெட் நோட்டைப் பிரித்து, ''முந்நூற்றுப் பத்து ரூபாய்,'' என்று தெரிவித்தான்.

''கொடுத்துவிடு, சத்யா.''

தன் அறைக்குச் சென்று, பெட்டியைத் திறந்து, பர்ஸைப் பிரித்துப் பணத்தை எண்ணி எடுத்து வந்த சில நிமிடங்களுக்குள் சத்யா பல விஷயங்களை ஊகித்துக் கொண்டாள்.

அத்தான் இதே படகு வீட்டில்தான் தங்கியிருக்கிறார். திடீரென்று காணாமற் போய்விட்டார். தனது உடைமைகளைக்கூட எடுத்துக் கொள்ளாமலே தலை மறைவாகி விட்டார். ஏன்? ஏனோ? 'ஒரு கொலை செய்துவிட்டு'

என்றுதான் சொல்லுகிறாளே ஜெகா. இந்த ரசூலும் காசிமும் விஷயம் வெளிப்பட்டால் தங்கள் பிழைப்புக்கு ஆபத்து என்று பீதியடைந்தோ என்னவோ— எதையும் யாரிடமும் சொல்லாமல் அமுக்கியிருக்கிறார்கள்.

பக்கத்துப் படகிலிருந்த பெண்...

பணத்துடன் வரும்போதே, சத்யாவின் பார்வை ஜன்னல் வழியே வெளியே பாய்ந்தது.

இவர்களுடைய 'வான வில்லுக்கு' இந்தப் பக்கமோ அந்தப் பக்கமோ எந்தப் படகு வீடும் இருக்கவில்லை. மிகத்தள்ளி ஒன்றே ஒன்று தென்பட்டது. அதைப் 'பக்கத்துப் படகு வீடு என்று அழைக்க முடியாது.

குழப்பத்துடன் அவள் முன்னறைக்கு வந்தாள். ''கொடு ரசூலிடம். அந்த ஸூட்கேஸைக் கொண்டுபோய் உன் அறையில் வைத்துக்கொள்,'' என்றாள் ஜெகா.

பணத்தைப் பெற்றுக் கொண்டதும் ரசூலின் விழிகள் நன்றியினால் பாதியும் அச்சத்தினால் பாதியுமாகப் பளபளத்துக் கொண்டிருந்தன. நோட்டுக்களை மடித்துக் கால்சராயின் பையில் பத்திரப்படுத்திக் கொண்டவன், ஜெகாவை நெருங்கிச் சென்று கையெடுத்துக் கும்பிட்டான். ''போலீஸினால் எனக்கு ஒரு தொல்லையும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளணும், மேடம்!'' என்று பரிதாபத்துடன் வேண்டிக்கொண்டான்.

''டோன்ட் ஒர்ரி. நான் எத்தனை தரம் வாக்குக் கொடுத்திருக்கிறேன்!'' என்று ஜெகா கண்டிப்பான பதிலளித்ததும், சத்யாவுக்கு ஒரு கும்பிடு போட்டு கண்ணாலேயே கெஞ்சிவிட்டு அகன்றான் ரசூல்.

ஸூட்கேஸை எடுத்துக் கொண்டு தனது அறைக்குச் சென்றாள் சத்யா. ஜெகா சொன்ன பிரகாரம் துணிமணிகளைப் 'பாக்' செய்யத் தொடங்கினாள். போலீஸ் என்று ரசூல் சொன்னதற்குப் பிறகு, அவளுடைய எண்ணங்கள்



இன்னும் குழம்பிவிட்டன. எவ்வளவோ கேடிகளும் ரௌடிகளும் அப்பாவிடம் சக்கையாய் உதைகள் பெற்றுக் கொள்வதை அவள் கண்ணால் கண்டதுண்டு. ஒரு பெரிய போலீஸ் அதிகாரியின் மகளாகவும் இருந்துகொண்டு, ஒரு கொலைக் குற்றவாளியை அத்தானாகவும் பெற்றிருக்கும் தன்னுடைய நிலைமையை எண்ணவே பயங்கரமாக இருந்தது அவளுக்கு.

அத்தானின் உடைகளைக் குவியலாக அள்ளி மார்புறத் தழுவிய வண்ணம் கட்டிலில் அமர்ந்திருந்தபோது, உலக மொத்தமும் அவரை எதிர்த்துச் சதி செய்கிறது என்ற எண்ணம்தான் சத்யாவுக்கு ஏற்பட்டது.

நிஷாத் கார்டனில் புகைப்படக்காரர் சொன்ன அதே பெண்தான் இப்போது அத்தானுக்கு அவதூறு ஏற்படுத்தியிருப்பவள் என்பது ஓரளவு புரிந்தது. ஆனால் அப்போது ஏற்பட்டிருந்த மன நெகிழ்வு இப்போது அகன்றுவிட்டது. பண்பாடும் இனிமையும் நிறைந்து, தன்னோடு நெடுங் காலமாகப் பழகி வந்தவள்போல் தோன்றிய அதே குஜராத்திப் பெண்ணை இப்போது தனது பிறவிப் பகையாளியாக, தனது வாழ்வைக் குலைக்கவே பிறந்த எதிரியாக எண்ணலானாள் சத்யா.

டெல்லியை நோக்கி வைகவுண்ட் புறப்பட்டுக்கொண்டிருந்தபோது வானநிலை மப்பும் மந்தாரமுமாயிருந்தது. வெகு கீழே, நிலத்தை மழை குளிப்பாட்டிக் கொண்டிருந்ததால் வெறும் கருமையான போர்வைதான் கண்ணுக்குத் தெரிந்தது. திடுமென மேலெழுவதும் குபீரெனக் கீழிறங்குவதுமாக விளையாட்டுக் காட்டியது விமானம்.

நீராவியில் சிக்கிக்கொண்ட கெட்டில் மூடிமாதிரி சுபசுபவென்று ஆடிக்கொண்டு முன்னேறும்போது, ''ஹௌ ப்ளஸெண்ட்!'' என்று ஓர் ஐரோப்பியப் பெண்மணி தன் கணவனிடம் கூறிச் சிறுபிள்ளைபோல் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தாள்.

சத்யாவும் ஜெகாவும் அருகருகாக அமர்ந்திருந்தார்கள். மடிமீதிருந்த ஆங்கிலத் தினசரியை மடித்து எதிரிலிருந்த பையினுள் செருகிவிட்டு, இடுப்புப் பெல்ட்டையும் கழற்றி விட்டு, "சொல்கிறேனென்றாயே?" என்று ஜெகாவிடம் நினைவூட்டினாள் சத்யா.

ஜெகா தன்னைச் சுற்றி ஒரு நோட்டம் விட்டுக் கொண்டான். அனேகமாக வெள்ளைக்காரர்களும் பஞ்சாபிகளுமே நிறைந்திருந்தார்கள். தமிழரென்ன, மதறாஸி எனப்படும் தென்னிந்திய முகம்கூடத் தென்படக் காணோம்.

அந்த நற்சாட்சி பத்திரங்கள் கொண்ட 'ஆல்பத்'தை பறித்து, ரகுல் கிழித்தெறிந்த காகிதம் ராதா எழுதிக் கொடுத்ததுதான். ராதா வந்திருந்தது, தங்கியிருந்தது முதலான எல்லா விவரங்களையும் ரகுல் மிக எச்சரிக்கையாக மறைத்து வைத்திருந்தும் இந்த ஒன்றை மட்டும் மறந்து விட்டான். (என்று கூறத் தொடங்கினான் ஜெகா.)

ஸ்ரீநகருக்கு வந்ததும், ஜெகாவின் அண்ணாவுடன் முதல் மூன்று நாள் வேறு ஏதோ ஓர் ஓட்டலில் தங்கியிருந்திருக்கிறான் ராதா. அப்புறம்தான் அவர்களுக்குள் ஏதோ தகராறு வந்திருக்கிறது. ஜெகாவின் அண்ணா டெல்லிக்குத் திரும்பி விட்டான்.

ஏதாவதொரு படகு வீட்டில் தங்கினாலென்ன என்ற யோசனையுடன் நேரு பார்க் துறையில் கையில் பெட்டியுடன் நின்றிருந்த ராதாவை, ரகுல்தான் முதலில் பார்த்துத் தன் இல்லத்துக்கு வரும்படி அழைத்தான்.

"உன் படகு வீட்டை வந்து பார்ப்பேன். எனக்குப் பிடித்திருந்தால் தங்குவேன். இல்லாவிட்டால் திரும்பி என்னை இங்கேயே கொண்டு வந்துவிடவேண்டும்" என்றான் ராதா, விளையாட்டாக.



"என் படகு வீட்டுக்குள் கால் வைத்தால், அப்புறம் நீங்கள்தான் போக மறுப்பீர்கள்," என்று உத்தரவாதம் கொடுத்து அழைத்துச் சென்றான் ரகுல்.

ராதா 'வானவில்'லில் நுழைந்ததும் ராஜோபசாரத்துடன் வரவேற்கப்பட்டான். அவனுடைய கோட்டையும் சட்டையையும் கழற்றுவதும், காலணிகளுக்குப் பாலிஷ் போடுவதுமாய்க் காசிம் ஒருபுறம் உபசரிக்க, சுடச்சுடத் தேநீர் தயாரித்து ரகுல் கொண்டுவந்து தந்து, "பார்த்தீர்களா சார்? வீடு எப்படி இருக்கிறது?" என்று ஆவலுடன் கேட்டான்.

"பூ! எங்கள் ஊரில் இதைப்போல நூறுமடங்கு பிரமாதமான படகு வீடுகள் இருக்கிறதாக்கும்!" என்று ராதா சொன்னதைக் கேட்டு ரகுல் வாயடைத்துப் போய் விட்டான். ராதா கண்ணைச் சிமிட்டிக் கொண்டிருப்பதைக் கவனித்த பிறகுதான் அது விளையாட்டென்று புரிந்தது.

ராதா கால்மீது கால் போட்டு அமர்ந்து கொண்டு, தேநீரை ருசித்தபடியே, வாடகை முதலான விவரங்களை விசாரிக்கத் தொடங்கினான். காசிமிடம், "பூட்ஸில் பளபளப்பே ஏறவில்லையே! இன்னும் நன்றாய்ப் பாலிஷ் போடு," என்று சொல்லிக் கொண்டிருந்தவன், சட்டெனச் சுற்றும்முற்றும் நோக்கினான். எதையோ கூர்ந்து கேட்கிற மாதிரி அவனது தலை அசையாமல் நின்றது.

"என்ன அங்கே சத்தம்— யாரோ [illegible]?" என்று கேட்டான் ராதா.

MADRAS DIST... 16888 3289699

## முப்பத்து மூன்று

"என்ன அங்கே சத்தம்?" என்று ராதா கேட்டதும் ரகுலின் முகம் வெளிறிப் போயிற்று. (என்று சத்யாவிடம் தொடர்ந்தான் ஜெகா.)

''பக்கத்துப் படகில் யாரோ வந்திருக்கிறார்கள்,'' என்றான்.

''அதற்கு இத்தனை சத்தம் போட வேண்டுமா, என்ன? வாயை மூடிக் கொண்டு இராவிட்டால் வெளியே துரத்தச் சொல்லு, அந்தப் படகுக்காரனிடம்,'' என்று ராதா சொன்னதைக் கேட்டதும் ரசூலுக்கு என்னவோ போலாகி விட்டது. அண்டை அயல் படகுகளைக்கூட இவனுக்காக அடக்க முடியுமா என்ன?

ராதாவை அவ்வளவு வலிய வலியக் கூப்பிட்டுத் தன் படகுக்கு அழைத்து வந்தது தப்பு என்று முதல் தடவையாக அவனுக்குத் தோன்றத் தொடங்கியது.

ரசூலுக்குத் தெரிந்த வரையில் பக்கத்துப் படகுக்கு வந்திருந்தவள் ஒரு பெண். வயது இருபது இருபத்திரண்டு இருக்கும். அதிகமாக வெளியில் வருகிறவளாக இல்லை. அவளுடன்கூட உறவினர்களோ நண்பர்களோ வந்திருப்ப தாயுந் தெரியவில்லை. சாயந்தர வேளைகளில் சில சமயம் வாசல்புறத்து சோபாவிலாவது, அல்லது மாடியிலே போட்டிருந்த கட்டிலிலாவது அவள் உட்கார்ந்திருப்பதை ரசூல் கண்டதுண்டு. ஏரியைப் பார்த்தபடி மௌனமாய் அமர்ந்திருப்பாள் வெகு நேரம் வரைக்கும். சுருண்ட கேசத்தை இரட்டையாகப் பின்னவிட்டுக் கொண்டு, இரு பக்கத்துக்கும் ஒவ்வோர் பூ செருகிக் கொண்டிருப்பாள். ஒற்றை நாடியான உடம்பு. ஆனால் சோனியோ சோகையோ அல்ல. பஞ்சாப் அல்லது டெல்லிப் பக்கத்தைச் சேர்ந்த பெண்ணல்ல என்பது மட்டும் ரசூலுக்குத் தெரிந்தது. அவன் காஷ்மீரை விட்டு வெளியே அதிகம் போகாதவனாகையால், அவள் எந்த இடத்திலிருந்து வந்தவள் என்பதை அவனால் அறியக் கூடவில்லை.

பக்கத்துப் படகுக்காரனான ஹருமியுடன் அவனுக்குச் சரியான உறவு இல்லை. ஏழெட்டு மாதங்களுக்கு முன்பு ஸ்ரீநகரில் ஒரு கலவரம் ஏற்பட்டபோது படகு படகாகப் போலீசாரின் விசாரணை நடைபெறலாயிற்று. அந்தச்



சமயத்தில், ரசூல் ஊரிலேயே இல்லை. ஜம்முவுக்குப் போயிருந்தான், ஒரு சிநேகிதனின் மகளுக்குக் கல்யாணம் என்று.

ஹருமி வேண்டுமென்றுதான் செய்தானோ, இல்லை, தெரியாத்தனமாக உளறி விட்டானோ, போலீசார் வந்து அவன் படகில் விசாரித்தபோது, ரசூலைக் கைகாட்டி விட்டான் அவர்களிடம். ரசூல், அரசியல் பொதுக் கூட்டங்கள் என்றால்— அது நேஷனல் கான்ஃபரன்ஸ் கூட்டமானாலும் சரி, சில்லறைக் கட்சிக் கூட்டமானாலும் சரி,— வேடிக்கை பார்க்கப் போவது வழக்கம். ஆனால் எந்தக் கட்சியுடனும் தொடர்பு கிடையாது. அப்படியிருந்தும், ஒரு பயங்கரப் புரட்சிக்காரனை மடக்குகிற மாதிரி ரசூலை மடக்கி, ஜெயிலில் மூன்று நாள் தள்ளிவிட்டார்கள் போலீசார். நல்லவேளையாக, பக்ஷி குலாமின் வீட்டுச் சமையற்காரன் ரசூலின் உறவுக்காரனாக இருந்ததால், பெரிய இடத்துச் சிபாரிசுகளும் தலையீடும் கிடைத்தன. செத்தேன் பிழைத்தேன் என்று தப்பி ஓடிவந்தான். ஆனால் தான் கம்பிக்குப் பின்னாலிருந்த அந்த மூன்று நாட்களுக்குள், போலீஸ் பெயரைச் சொல்லிக்கொண்டு எந்தப் போக்கிரிகளோ அவனுடைய அழகிய படகு வீட்டைத் தலைகீழாய்ப் புரட்டியெடுத்திருந்தார்கள். அவனுடைய மனைவி மக்கள், ஜீலம் நதிக்கரையோரத்தில் வைத்திருந்த ஒரு புராதனப் படகில் போய் ஒளிந்து கொண்டிருந்தார்கள்.

குடும்பத்தையும் வீட்டையும் சரிப்படுத்த ரசூலுக்கு ஒரு மாதமும் ஆயிரம் ரூபாயும் பிடித்தன. அவ்வளவு துன்பத்துக்கும் காரணமானவன் ஹருமிதான் என்று முடிவு செய்து கொண்ட ரசூல் அவனோடு பேச்சு வார்த்தைகூட வைத்துக் கொள்வதில்லை என்று தீர்மானம் கொண்டு விட்டான். ஹருமியும் அவனும் நெருங்கிப் பழக வேண்டிய கட்டாயங்கள் பல ஏற்பட்ட போதிலும், ரசூல் பிடிவாதமாக இருந்து வந்தான்

ஹரூமியின் படகுவீட்டில் தங்குகிற விருந்தாளிகளை அவன் ஏளனமாய்த்தான் நோக்குவது வழக்கம்.

சென்ற ஒரு மாத காலமாய் அங்கே வசித்துக் கொண்டிருக்கும் பெண்ணைப் பற்றியும் அவன் கவலைப்படாமல் தான் இருந்து வந்தான். அவளுக்குக் கண் பார்வை சரியில்லை என்றும், அதனால்தான் அதிகம் சுற்றுவதில்லை என்றும் காசிம்தான் சொன்னான், ஒரு நாள்.

''கண்ணில்லாமல் காஷ்மீருக்கு எதற்காக வர வேண்டும்?'' என்று கேட்டு விட்டு, அத்தோடு மறந்து விட்டான் ரகூல்.

இரண்டு நாளாய் அவளுக்குக் காய்ச்சலாம். (அதுவும் காசிம் மூலமாய்த்தான் தெரியும்.) குளிர் ஜுரம் போலிருக்கிறது. சிறிது முனகல்கள் கேட்டன நடுநடுவே. ஹரூமி ஒருமுறை மருந்துச் சீசாவுடன் படகில் செல்வதைப் பார்த்தான்.

இப்போது ராதா விசாரித்தது அந்த முனகல் சத்தத்தைத்தான். பக்கத்துப் படகுக்காரருக்கு உடம்பு சரியில்லை என்று சொல்லப்போய், 'ஆஸ்பத்திரிக்கு அனுப்பு அவர்களை!' என்று அவன் சீறுவானோ என்ற பயம் ஏற்பட்டது ரகூலுக்கு. ஆகவேதான் மழுப்பி விட்டான் சரியாய்ப் பதில் சொல்லாமல்.

ஆனால், பிற்பகல் மூன்று மணி சுமாருக்கு, ராதா ஒரு சிகரெட்டைப் பிடித்துக்கொண்டு வாசலில் உட்கார்ந்திருந்தபோது, அந்த ஹரூமியே வந்து, கெடுத்து விட்டான் காரியத்தை.

''சலாம் சாப். மாத்திரை ஏதாவது இருக்குதா?'' என்று தன் வீட்டு வாசலில் இருந்தவாறே ஹரூமி ராதாவையே கேட்டுவிட்டான். (ஹரூமிக்கு நன்றாய் ஆங்கிலம் பேசத் தெரியும்.)

''மாத்திரையா? என்ன மாத்திரை?'' என்று ராதா திகைத்தான்.



''ஏதாவது கொடுங்கள். இங்கே என் விருந்தாளி உடம்பு சரியில்லாமல் படுத்திருக்கிறார்கள். நல்ல ஜுரம். உங்களைப் பார்த்தால் டாக்டர் மாதிரி இருந்தது. அதனால்தான் கேட்டேன்.''

''ரகூல்!'' என்று உள்புறம் பார்த்துக் கூப்பிட்டான் ராதா. ரகூல் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டுதான் நின்றிருந்தான். அவன் ஒரு முறைப்பு முறைத்ததுமே ஹரூமி தன் வீட்டுக்குள் ஓடிவிட்டான்.

''சரியான ஆஸ்பத்திரிக்குத்தான் என்னை அழைத்து வந்திருக்கிறாய்! ரொம்பத் தாங்ஸ்!'' என்று ராதா சீறிய போது, பாவம் ரகூலினால வாயே திறக்க முடியவில்லை.

''தங்களுக்குத் தொந்தரவில்லாமல் பார்த்துக்கொள்கிறேன்,'' என்று பயத்துடன் உறுதி கூறிவிட்டு, காசிம் மூலம் ஹரூமிக்கு எச்சரிக்கை அனுப்பி வைத்தான்—'இன்னொரு தரம் மாஸ்டர் சாஹிபை அவன் நேரடியாக நெருங்கினானோ ரொம்பப் பொல்லாதவனாயிருப்பேன்!'' என்று.

ரகூலின் பொல்லாத்தனத்தைக் காட்ட அன்று இரவே சந்தர்ப்பம் வந்துவிட்டது.

ஒன்பதரை மணி இருக்கும். மேஜை விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது. ஒரு நாவலைப் படித்துக்கொண்டிருந்த ராதா, சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு, ''சிகரெட் டின்னும் கிடையாதாப்பா இங்கே?'' என்று ஒரு சத்தம் போட்டுவிட்டு ஓய்ந்து இரண்டு நிமிடம்தான் ஆகி இருக்கும். மேஜைக்கொரு சிகரெட் டின்னும் இரைபடுகிற வீட்டில் அப்போது பார்த்து ஒன்றுகூடக் கிடைக்கவில்லை. தேடியெடுத்து, கண்டுபிடித்துக் கொண்டு போய்க்கொடுத்து, இரண்டு திட்டும் வாங்கிக் கொண்ட பின், தலைவிதியை நொந்துகொண்டு ரகூல் உட்கார்ந்த போது, ஹரூமி அவசர அவசரமா, பின்பக்கத்துக் கரை வழியாக நுழைந்தான் ரகூலின் வீட்டுக்குள்.

''அடே பத்மாஷ்! என்ன துணிச்சல் என் வீட்டுக் குள்ளேயே வர! போடா வெளியே!'' என்ற ரசூல் அவன் கழுத்தைப் பிடித்து வெளியே நெட்டித் தள்ள முயன்றும் பலன் இருக்கவில்லை.

''கொஞ்சம் விஷயத்தைக் கேள்,'' என்று கெஞ்சினான் ஹரூமி.

''மரியாதையாய் நீ வெளியே போகாவிட்டால் இங்கே கொலை விழும்!'' என்று ரசூல் உண்மையான கோபா வேசத்துடன் சொன்னதோடு, இடுப்பில் எப்போதும் இருக்கின்ற சூரிக் கத்தியைக்கூட உருவி விட்டான். அவன் தொனி தாழ்ந்து ஆங்காரத்துடன் ஒலித்தது. ராதா படுத்திருக்கும் அறையைச் சுட்டிக் காட்டி, ''அவர் எழுந்து வருவதற்கு முன்னால் போய்விடு. உஷார்!'' என்று பயமுறுத்தினான்.

ஹரூமி அவனுடைய கையைப் பிடித்துக் கொண்டு, ''இதற்கு முன்பு நான் என்ன செய்திருந்தாலும் தயவு பண்ணி மன்னித்து விடு, ரசூல். இப்போது நிஜமாகவே ஆபத்தான சமயம்...... அந்தப் பெண் இருக்குமே......'' என்று புலம்புவதற்கும், ''டேய்!...'' என்று ரசூல் அவன் மீது கத்தியைப் பாய்ச்சுவதற்கு ஓங்கவும், ''என்ன அங்கே கலாட்டா?'' என்று கேட்டவண்ணம் கதவைத் திறந்து கொண்டு ராதா வெளிவரவும் சரியாகிவிட்டது.

''சாப்!'' என்று ஒரு விம்மலுடன் ஹரூமி ரசூலை விட்டு விட்டு ராதாவைப் பிடித்துக் கொண்டான். ''ஒரு நிமிஷம்... ஒரே நிமிஷம் என் படகுக்கு வந்து பாருங் களேன்,'' என்றான்.

''போகாதீர்கள் சார். இவன் ஒண்ணாம் நம்பர் அயோக்கியன். உங்களுக்கு ஏதாவது கெடுதல் பண்ணி விடுவான்,'' என்று தடுத்தான் ரசூல். இதற்குள் காசிமும் எழுந்துவந்து ''நீ போப்பா,'' என்று மெல்ல ஹரூமியை வெளியேற்றுவதில் ஈடுபட்டான்.



''உஸ்! இருங்கள்,'' என்ற ராதா சிகரெட்டைக் கீழே போட்டுக் காலால் தேய்த்து அணைத்து விட்டு, ''என்ன சமாசாரம்?'' என்று ஹரூமியை வினவினான்.

''எங்கள் வீட்டில் ஒரு பெண் வந்து...'' என்று ஹரூமி ஆரம்பித்ததும் ரசூல் மறுபடி குறுக்கிட்டு, ''அது சைத்தான் பிசாசு. நீங்கள் போகாதீர்கள் சார்,'' என்றான்.

''சைத்தானுக்கு என்ன வயசு?'' என்று ராதா கேட் டான் ஹரூமியை.

''இருபது இருக்கும் சார்.''

''தனியாகவா வந்திருக்கிறாள்?''

''ஆமாம் சார்.''

''சரி. புறப்படு.'' புறப்பட்டு விட்டான் ராதா.

அதற்குமேல் அவனைத் தடுப்பது இயலாத காரியம் என்று உணர்ந்து கொண்ட ரசூலும் காசிமும் ஹரூமியைத் திட்டியவாறு அவனைப் பின் தொடர்ந்தார்கள்.

ஹரூமியின் படகு வீட்டுக்குப் பெயர் 'பட்டுப் பூச்சி.' ராதா அங்கே கால் வைத்ததும், திரும்பிப் பார்த்து ஹரூமி யிடம், ''அந்தப் பெண்ணைப் பார்க்கப் போகு முன்னால் விஷயத்தைச் சொல்லு,'' என்றான்.

''என்ன விஷயம்?'' என்றான் ஹரூமி.

''அவள் பெயர், ஊர்.''

''குஜராத் பக்கத்திலிருந்து வந்த பெண் சார்.''

''குஜராத்தியா?'' என்று ஆச்சரியம் தெரிவித்தான் ராதா.

''ஆமாம் சார். அகமதாபாத் என்று சொன்னாள்.''

''ஓ.'' ராதா மெல்லச் சீட்டியடித்தான். ''மதுரைக் காலேஜிலே படிக்கிறபோது எனக்கு நெருங்கிய சிநேகிதன் ஒருத்தன் குஜராத்திக்காரன். அவர்கள்

பாஷையிலே எனக்குப் பேசக்கூடத் தெரியும்! சரி, இவள் பெயர்?''

''ஆஷா, சார். முக்கியமான தகவலை மறந்து விட்டேனே... அவள்...வந்து... பார்வை சரியில்லாதவள்...''

''குருடா?'' என்று ராதா திகைத்தான்.

''முழுக்க முழுக்க இல்லை, சார். வந்த புதிதில், சாயந்தர வேளைக்கப்புறம் கண் சரியாய்த் தெரிவதில்லை என்று சொன்னாள். ஒரு ஜுரம் வந்தது. அதற்குப் பிறகு, பகலிலேகூட மசமசவென்று தெரிகிறதே தவிர, தெளிவாய்த் தெரியவில்லை என்றாள். இப்போதெல்லாம் தனியே வெளியே போவதில்லை. யாரையாவது துணைக்குக் கூப்பிடுகிறாள்.''

ராதா சிறிது நேரம் யோசித்தவாறு நின்றிருந்தவன், ''சரி, இப்போது என்ன ஆபத்து என்று எங்களையெல்லாம் கூப்பிட வந்தாய்?'' என்று கேட்டான்.

ஹரூமி தயங்கினான். ''ஆபத்து என்று இல்லை சார்... எனக்குத்தான் பயமாயிருக்கிறது...... நேற்று எனக்குத் தெரிந்த ஒரு டாக்டர்கிட்டே இந்தப் பெண் உடம்பைப் பற்றி நானே போய்ச் சொல்லி ஒரு மருந்து வாங்கி வந்தேன். நேற்று ராத்திரி ஒரு வேளை சாப்பிட்டாள். ஜுரம் கூடக் கொஞ்சம் இறங்கியிருக்கிற மாதிரி தெரிந்தது...... இன்று காலையிலிருந்து அதைத் தொட மாட்டேனென்கிறாள்...... மருந்து மாத்திரமில்லை. ஆகாரம், ஏன், தண்ணீர்கூடத் தொடவில்லை.''

''ஏனாம்?''

''அதுதானே தெரியவில்லை! என்னவோ சொல்கிறாள். எனக்குப் புரியவில்லை. இந்தப் பெண் எங்கிருந்து வந்தாளோ, இவளுக்கு வேண்டியவர்கள் எங்கேயிருக்கிறார்களோ— எதுவுமே தெரியாது எனக்கு. ஒன்று கிடக்க ஒன்று நேர்ந்து விட்டால் என் கதி என்ன ஆவது?''



''ஏய் சைத்தான்! சும்மாயிரு!'' என்று ரசூல் திட்டுவதைக் கேட்ட பிறகுதான், ஹரூமியின் கண்ணிலிருந்து நீர் வழிவதைக் கவனித்தான் ராதா.

''சரி. நீங்கள் வெளியிலேயே இருங்கள்,'' என்று சொல்லிவிட்டு, ஹரூமியின் உதவியாளரிடமிருந்து ஒரு கப் சூடான தேநீர் வாங்கிக் கொண்டான்.

ஆஷா படுத்திருக்கும் அறையின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான். விளக்கைப் போட்டான்.

ஜுர வேகத்தினாலும் களைப்பினாலும் கண்மூடிப் படுத்திருந்த ஆஷா, சந்தடி கேட்டதும் திடுக்கிட்டெழுந்தாள். போர்வையை மார்புவரை இழுத்துவிட்டுக் கொண்டு திகில் நிறைந்த குரலில், ''யார்? யார் வருவது?'' என்று ஆங்கிலத்தில் கேட்டாள்.

அப்போதுதான் ரசூல் அவள் முகத்தை முழுதாகப் பார்த்தான். அந்த மாதிரியான ஒரு சாந்தத்தையும், தெய்வீகப் பொலிவையும் எந்தப் பெண்ணின் முகத்திலும் அவன் கண்டதில்லை அது வரையில். தாயைப் போலவும், சகோதரியைப் போலவும், ஒரே சமயத்தில் ஒரு முகம் தோற்றமளிக்க முடியுமானால் அது இந்த முகம்தான் என்று புலப்பட்டது.

அவளுடைய கண்கள் பூ விழுந்த மாதிரியோ, ஊனம் கொண்ட மாதிரியோ இருக்கவில்லை. வேறேதோ ஒரு கனவிலே ஒன்றியிருக்கிற மாதிரி குறிப்பிட்ட பார்வையாக இல்லாமல் பொதுப்படையான பார்வையாக இருந்தது.

''யார்...... யாரங்கே?'' என்று அவள் மறுபடியும் கேட்டாள். அந்தக் குரல், மென்மையிலும் மென்மையாய், அச்சத்தினால்கூட விகாரப்படாத இனிமையோடு ஒலித்தது.

ராதா ஏதோ பதிலளித்தான். அவளுடைய சொந்த மொழியான குஜராத்தியாக இருக்க வேண்டும். ஏனெனில்

ஆஷாவின் முகத்திலே ஒரு வியப்பும் மலர்ச்சியும் தென்பட்டன.

அவளும் ஏதோ பதிலளித்தாள்.

ராதா தனது கையிலிருந்த தேநீர்க் கோப்பையை அவளிடம் நீட்டி ஏதோ கூறினான்.

அவள் தலையசைத்து மறுத்தாள்.

ராதா வற்புறுத்திக் கொண்டேயிருந்தான்.

அவள் மறுபடி மறுபடி மறுத்தாள்.

ராதா கடைசியில் என்ன சொன்னானோ தெரியவில்லை. "அப்படியா? நிஜமாகவா?" என்பது போல் அவள் கூறிவிட்டு, அவனை— அவன் இருக்கும் திசையை— ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

தான் சொன்னதைத் திரும்ப ருசுப்படுத்துவதுபோல ராதா பேசினான்.

அவள் கைகள் குவிந்தன. படுக்கையிலிருந்தவாறே, காய்ச்சலினால் தளர்ந்திருந்த சரீரத்தை வளைத்து, அவன் முன்னிலையில் வணங்கி எழுந்தாள்.

"ஊம்," என்று ராதா தேநீர்க் கோப்பையைக் கொடுத்தான் அவளிடம்.

இப்போது, ஏதோ ஒரு சக்திக்குக் கட்டுப்பட்டவள் போல் ஆஷா, அதைப் பணிவோடு பெற்றுக் கொண்டாள்.

"மருந்து!" என்று வாசலை நோக்கிக் கூவி விரலைச் சொடுக்கினான் ராதா.

ஹருமி ஓட்டமாய் ஓடிச் சென்று மருந்தைத் தந்தான் அவனிடம். குறித்த அளவுப்படி ஒரு கிண்ணத்தில் அதை ஊற்றி ஆஷாவிடம் கொடுத்தான் ராதா.

மருந்து, தேநீர் இரண்டையும் குடித்தாள் அவள்.



அன்றைய இரவு மட்டுமல்ல, இன்று வரையில் ரகுவும் சரி, ஹருமியும் சரி, மண்டையை உடைத்துக் கொண்டு யோசித்துப் பார்த்து விட்டார்கள்.

ஆஷாவை அப்படி உடனே பணிய வைக்கும்படி ராதா என்னதான் சொல்லியிருப்பானென்று அவர்களால் ஊகிக்க முடியவில்லை.

## முப்பத்து நான்கு

மருந்தும் உட்கொண்டு, ஆகாரமும் அருந்திய பிறகு, ஆஷா என்கிற அந்த குஜராத்திப் பெண்ணின் உடல்நிலை தேறத் தொடங்கியது. (என்று ஜெகா மேலும் விவரிக்கலானாள் சத்யாவிடம்.)

ராதாவின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு மந்திரம் போட்டமாதிரி நடந்துகொண்டாள் ஆஷா.

"படுத்துக் கொள்," என்றான்.

பழக்கப்பட்ட பூனைக்குட்டி போல ஆஷா படுத்துக் கொண்டாள். போர்வையை உதறி, காய்ச்சலால் பளபளத்துக் கொண்டிருந்த மேனியின்மீது போர்த்தினான். போர்வையின் ஓரங்களை அவள் உடம்போடு ஒட்டினாற் போல் செருகிவிட்டு, நெற்றியில் கைவைத்துப் பார்த்தான்.

"இப்போது தேவலையா?" என்று கேட்டான். (அப்படித்தான் அவன் கேட்டிருக்க வேண்டும். ரகுவுக்கு, அவன் பேசிய குஜராத்தி மொழி புரியவில்லை.) கண்களில் பயமும் பக்தியும் ஒளி வீச, ஆஷா அவனை இமை கொட்டாமல் பார்த்தபடி, 'தேவலை' என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தாள்.

"பேசாமல் தூங்கணும் இனிமேல், என்பதுபோல் ராதா ஏதோ சொன்னான்.

'சரி' என்று அதற்கும் பயத்துடன் தலையாட்டினாள்.

ஹருமியைச் சுட்டிக் காட்டினான் ராதா. "அவனுக்கு ஒன்றும் தொந்தரவு தரக்கூடாது. சொன்னபடி கேட்க வேண்டும்."

விடி விளக்கைத் தவிர, மற்றவைகளை அமர்த்தி விட்டுக் கதவைச் சாத்திக்கொண்டு வெளியே வந்தான் ராதா. வாசலில் நின்றுகொண்டிருந்த ரசூலிடம், "நீ போகலாம்," என்று கூறிவிட்டு, ஹருமியிடம், "அந்த டாக்டரின் விலாசத்தைக் கொடு," என்று கேட்டு எழுதி வாங்கிக் கொண்டான்.

'வானவில்'லுக்கு அவன் திரும்பி வந்தபோது, நடையில் உல்லாசம் தெறித்தது. மெல்லச் சீட்டியடித்தபடியே படுக்கையில் சாய்ந்துகொண்டு, "காசிம்! ஒரு கப் ஆப்பிள் ஜூஸ் கொண்டு வா!" என்று கட்டளையிட்டான். (மதுபான வகைகளில் அவனுக்கு நாட்டம் கிடையாது என்பதை அவன் வந்து சேர்ந்தவுடனேயே தெரிந்து கொண்டு விட்டான் ரசூல்.)

ராத்திரி பதினொரு மணிக்குமேல் ராதாவுக்கு ஆப்பிள் ஜூஸ் கொண்டுபோய்க் கொடுத்த காசிம், அவன் உதட்டில் தொத்திக் கொண்டிருந்த சிகரெட்டுக்கு நெருப்பும் பற்ற வைத்துக் கொடுத்துவிட்டு வெளியேறுகையில், "காசிம்! என்னவோ ஸ்ரீநகர் அழகி, குல்மார்க் ஒய்யாரி என்று அளக்கிறீர்களே! இந்தக் குஜராத்தி மோகினியைப் பார்த்தாயா?" என்று கேட்டுக் கண் சிமிட்டினான் ராதா.

காசிம், எல்லா ரக மனிதர்களையும் பார்த்தவன். ஆகவே ராதாவின் பேச்சைக் கேட்டு ஆச்சரியமோ அதிர்ச்சியோ அடையாமல், "ஆமாம் சார், குஜராத்தி அழகிகளின் முன் இந்தியாவில் எந்தப் பெண்ணும் நிற்க முடியாது சார்!" என்று வாயார ஆமோதித்து விட்டு வெளியேறினான்.



இரவு வெகுநேரம் வரையில் ராதாவின் சீட்டியொலி கேட்டுக்கொண்டேயிருந்தது. ராதா எப்போது தூங்கினான் என்பது காசிமுக்கும் ரசூலுக்கும் தெரியாது. அதே போல், ராதா மறுநாள் காலையில் எப்போது எழுந்து கொண்டானென்றும் அவர்களுக்குத் தெரியவில்லை. படகு வீட்டு விருந்தாளிகள், பொதுவாக விடிய விடியக் கண் விழித்துவிட்டு, பொழுது சாயச் சாயத் தூங்குவது வழக்கமாயிருக்க, ரசூலும் காசிமும்கூட எழுந்திருக்கும் முன்னால் ராதா எழுந்து கொண்டிருந்தான். வெந்நீர்க் குழாயில் அப்போது ரிப்பேர் ஏற்பட்டிருந்தது. அதையும் பொருட்படுத்தாமல் குளிர்ந்த நீரிலேயே குளித்திருந்ததோடு, உடை கூட மாற்றிக்கொண்டு விட்டான்.

காசிம் தலையை நீட்டியதும், "ப்ரெக்ஃபஸ்டை அங்கே எடுத்து வந்துவிடு," என்று ஹருமியின் படகைக் காட்டினான். தொலைவில் சமையலறையிலிருந்து இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த ரசூலுக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. எந்த ஹருமியின் முகத்தில் விழிக்கக்கூடாது என்று அலட்சியமாக இருந்தானோ, அதே பேர்வழியின் வீட்டுக்குச் சாப்பாட்டைத் தூக்கிக்கொண்டு போகவேண்டும்! குற்றேவல்கள் செய்யவேண்டும்! பல்லை நறநறவென்று கடித்துக் கொண்டு பொறுத்துக்கொண்டான். ரொம்ப மோசமான 'ச்சன்' அது. டூரிஸ்டுகள் வருகை என்பது அத்தி பூக்கிற அதிசயமாயிருக்கையில், வருகிறவர்களையெல்லாம் பகைத்துக்கொள்ள முடியுமா?

அவசர அவசரமாகக் காலைச் சிற்றுண்டிகளைத் தயாரித்து காசிம் பின்தொடர, ஹருமியின் படகை அடைந்தான் ரசூல். அவனுடைய கோபப் பார்வையைப் புரிந்து கொண்ட ஹருமி அவனைச் சாந்தப்படுத்துகிற நோக்கத்துடன் தானும் கூடமாட இரண்டொரு வேலைகளைச் செய்து ஒட்டிக்கொண்டான் ரசூலுடன். உள்ளூர அவனுக்கும் ஒரு பதற்றம் இருக்கத்தான் செய்தது—

இந்தப் புது விருந்தாளிகளால் கெடுதி எதுவும் ஏற்படாமல் நல்லபடி முடிய வேண்டுமே என்று.

ரசூல் சென்றபோது, ஆஷாவும் எழுந்து, முகம் கழுவி, பனிச்சென்று உடைமாற்றிக் கொண்டிருந்தாள். காய்ச்சல் அடியோடு இறங்கிவிட்டதால் அவள் வதனத்தில் சாந்தம் நிலவியிருந்தது.

ராதா—

கையில் பலகாரத் தட்டுக்களுடன் திடுக்கிட்டு நின்றான் ரசூல், அந்தக் காட்சியைக் கண்டு.

ஏனெனில், ராதா, அவளுடைய கட்டிலின் கீழே அமர்ந்து, ஆஷாவின் ஸூட்கேஸ்களில் ஒன்றைத் திறந்து வைத்துக் கொண்டிருந்தான். அந்தப் பெட்டியில் சிறுசிறு தந்தப் பேழைகளும் வெல்வேட் கேஸ்களும் இருந்தன. குஜராத்திகள் அணிகின்ற பலவகையான ஆபரணங்கள் ஒவ்வொரு பேழையிலும் காணப்பட்டன. உரிமையோடு அவற்றைப் பிரித்துப் பார்த்துக் கொண்டிருந்த ராதா, தனக்குப் பிடித்தமான ஒன்றை எடுத்து ஆஷாவிடம் நீட்டி, ''மாட்டிக்கொள்,'' என்று சொல்லிக்கொண்டிருந்தான்.

ஆஷாவின் முகம் குங்குமச் சிவப்பாய் மாறிக்கொண்டிருந்தது. ''ஊஹூம்...... வேண்டாம்......'' என்று அவள் முதலில் மறுப்பாள்.

''நான் சொல்லுகிறேன், அணிந்துகொள்,'' என்று அழுத்தமாக, பணியாளுக்கு எஜமானன் கட்டளையிடுவது போன்ற குரலில் கூறுவான் ராதா.

அவள் அதற்குக் கீழ்ப்பணிந்து, அவன் கொடுத்ததைச் செவியிலோ, மூக்கிலோ, நெற்றியிலோ, கழுத்திலோ அணிந்து கொள்வாள்— ஆபரணத்துக்கு ஏற்றமாதிரி. ''அருமையாயிருக்கிறது உனக்கு. ஏன் இவைகளை அணியப் பயப்படுகிறாய்? இளமையை அனுபவிப்பது பாவமல்ல, ஆஷா. உடம்பைக் கொடுத்த கடவுள், அதை அழகுபட வைத்துக்கொள்வதையா ஆட்சேபிப்பான்?'' என்று ராதா கூறுவான். (பெரும்பாலும் குஜராத்தியில் தான் அவர்கள் பேசிக்கொண்டார்களாயினும், நடுநடுவே ஆங்கிலம் வந்தது.)



ரசூல் பிரமை பிடித்தவன்போல் நின்றுவிட்டான் இந்த நிகழ்ச்சிகளைக் கண்டு.

ஆஷாவின்மீது திடீரென்று எப்படி இவனுக்கு ஆதிக்கம் வந்தது? எந்த உரிமையின் பேரில் அவளுடைய அந்தரங்க உடைமைகளைக்கூட இவனால் கையாள முடிகிறது? என்ன சக்தி அவளை இவனுக்கு இப்படி அடிமைப்பட வைத்திருக்கிறது?

இந்த ரகசியங்களை அறியமாட்டாதவனாக ரசூல் வெளியிலேயே ஆணியடித்த மாதிரி நின்றிருந்தபோது, ராதா அவனைக் கவனித்துவிட்டான்.

''ஏனப்பா நிற்கிறாய்? உள்ளே வைத்து விட்டுப் போயேன்! மெதுவாய் வா. அவசரமில்லை,'' என்றான்.

அது ரசூலுக்கு இரண்டாவது அதிர்ச்சி! ஒரு சிகரெட் கிண்ணத்துக்காக ஊரைக் கூட்டியவன், ஆஸ்பத்திரிக்கா அழைத்து வந்தாய் என்று சீறுசீறென்று சீறியவன்— அதோ ராதாதானா இவன்? குரலில் எதற்காக, இப்படியொரு கனிவும் அன்பும் ததும்ப வேண்டும்?

''மெள்ள, மெள்ள. இப்படி வையப்பா,'' என்று மறுபடியும் அதே இனிமையான தொனியில் சொல்லி டீபாயை மெதுவாய் நகர்த்தினான் ராதா.

ரசூலுக்காவது கொஞ்சம் கொஞ்சம் மனத் திடம் இருந்தது—தன் உணர்ச்சிகளைக் காட்டாதிருக்க. ஆனால் அப்பாவிக் காசிமோ, ராதாவின் குரல் மாறுதலால் ஏற்பட்ட அதிர்ச்சியோடு, அத்தனை நகைப் பேழைகளைத் திடீரென்று கண்ணுற்ற திகைப்பும் சேரவே, தன்வசம் இழந்துவிட்டான். அவன் கைகள் வெடவெடக்கத் தொடங்கின. அடுத்த வினாடி—

ஏந்தி வந்த தேநீர்க்கோப்பை கை நழுவி, தடாலென்று அவன் காலிலேயே விழுந்து கவிழ்ந்தது. கொதிக்கக் கொதிக்கக் கொண்டு வந்திருந்த தேநீர்க்கஷாயம் அவனுடைய வெற்றுக்காலில் சர்ரென்று பாயவே, 'அம்மா' என்று அலறிவிட்டான்.

ஆனால் அவன் அலறலைக்கூட அமுக்கியவண்ணம் ராதாவின் குரல் கோபாவேசத்துடன் ஒலித்தது. ''முட்டாள்!'' என்று கத்தியவன், தனது வெள்ளைப் பாண்ட்டில் தெறித்துவிட்ட தேநீர்க்கஷாயத்தை ஒருமுறை பார்த்து விட்டு, பளீரென்று காசிமின் கன்னத்திலும் அறைந்து விட்டான்.

இத்தனையும் கண்மூடிக் கண் திறப்பதற்குள் நிகழ்ந்து விட்டன. கட்டிலில் அமர்ந்திருந்த ஆஷா, ''என்ன, என்ன?'' என்று பதறிக்கொண்டு எழுந்திருக்க முனைந்த பிறகுதான் அந்தச் சூழ்நிலையில் நிதானம் பிறந்தது.

ராதா சட்டென எழுந்து அவள் கையைப் பற்றிக் கொண்டு, ''ஒன்றுமில்லை, பதறாதே!'' என்று மணிக்கட்டில் மெல்லத் தட்டிக் கொடுத்து அவளை ஆசுவாசப்படுத்தினான். நொடி நேரத்துக்குள் அவன் குரலில் அந்தப் போலி நிதானம் திரும்பி விட்டது. வியக்கத் தக்க அமைதியுடனும் இனிமையுடனும், ''ரசூல், பாவம், ஏன் காசிமின்மீது அத்தனை கோபிக்கிறாய்? ஏதோ கை தவறிவிட்டது. அதற்காக அவனை அடிக்கலாமா? தப்பு அப்பா, தப்பு,'' என்று சொல்லலானான்.

''என்ன!'' என்று ரசூலும் காசிமும்— ஹரூமியும் பின்னாலிருந்து கவனித்துக் கொண்டிருந்தான்— வியப்பும் சினமுமாய்க் கூவுமுன், ராதாவின் பர்ஸ் திறந்து கொண்டது. முழுசாக மூன்று ஐந்து ரூபாய் நோட்டுக்கள் வெளிப்பட்டு, ஒவ்வொருவர் கைக்கும் ஒவ்வொன்றும் வந்தன. ஆஷாவின் பார்வை சரியில்லாததை எத்தனை சாமர்த்தியமாக ராதா பயன்படுத்திக் கொண்டு விட்டான்!



''ரசூல், இந்த மாதிரி நீ கோபக்காரனாக, அடக்க மில்லாதவனாக இருப்பதானால் இப்போதே சொல்லி விடு,— நான் ஏன், மிஸ் ஆஷாவும்கூட— வேறு படகுக்குப் போய்விடுகிறோம். என்ன ஆஷா?''

கலங்கிக் குழம்பியிருந்த ஆஷாவின் வதனம் இப்போது தான் தெளிவுற்றது. கத்தியதும், அறைந்ததும் ரசூல் தான் என்று எண்ணிக்கொண்ட பின்னர் அவளுக்கும் படபடப்புக் குறைந்தது ''ஆமாம்,'' என்றாள் மெல்ல.

குறிப்பறிந்து கொள்ளத் தெரியாதவன் ஸ்ரீநகரில் ஹாஞ்சியாக வாழ முடியுமா? ''ஸாரி மேடம்,'' என்றான் காசிம். 'காலிலே சூடாய்த் தேநீர் கொட்டிவிட்டதால் கத்திவிட்டேன்.''

ஆஷாவின் முகத்தில் வேதனை படர்ந்தது. ''அடப் பாவமே, இங்கே அருகில் வா,'' என்று அழைத்துக் கையை நீட்டித் துழாவினாள். காசிம் அருகில் வந்ததும், அவன் காலைத் தொட்டுப் பார்த்து, ''கப்போர்டில் மேல் தட்டில் ஒரு சின்ன டப்பா வைத்திருக்கிறேன், பார். ஆயிண்ட்மெண்ட், எடு'' என்றாள்

தயக்கத்துடன் காசிம் ராதாவைப் பார்த்தான். 'அவள் சொல்கிறபடியே செய்' என்று ஜாடையிலேயே பதில் கிடைத்தது.

காசிம் அந்தக் களிம்புச் சிமிழை எடுத்துக் கொண்டு, ''நானே போட்டுக் கொள்கிறேன், மேடம்,'' என்றான்.

''உனக்குத் தெரியாது. இப்படிக் கொடு,'' என்று சொன்ன ஆஷா, சிறிதும் கூச்சமோ அருவருப்போ கொள்ளாமல், அந்த ஏழைப் படகுக்காரனின் அழுக்குப் படிந்த எலும்புக் கால்களைப் பிடித்து, தன் கையாலேயே மருந்து பூசிவிட்டாள். ''தண்ணீர் படாமல் பார்த்துக் கொள், என்ன?'' என்றாள்.

''ஆகட்டும் அம்மா,'' என்றான் காசிம்.

''ரசூல், உங்களுக்கெல்லாம் பாவம், சிரமம். ப்ரேக்ஃபஸ்டு நாங்களே சாப்பிட்டுக் கொள்கிறோம். நீங்கள் போய், ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள் கொஞ்ச நேரம்,'' என்று அன்பு ததும்பக் கூறிய ராதா, அவர்களை நெட்டித் தள்ளாத குறையாக அறைக்கு வெளியே அனுப்பி விட்டு, கதவை உட்புறம் தாழிட்டுக்கொண்டாள்.

அரை மணி நேரத்தில் அவர்களது காலையாகாரம் முடிவடைந்தது. வெளியே வந்த ராதா, ரசூலையும் மற்றவர்களையும் படகின் மறுகோடிக்குத் தனியே அழைத்துச் சென்றாள். தாழ்வான குரலில், ''அந்தப் பெண்ணுக்குக் கண் உபாதை மட்டுமல்ல, ஒரு விசித்திரமான மனநோயும் பிடித்திருக்கிறது. அதைச் சரிப்படுத்துவதற்காக நானும் விசித்திரமான முறையில் அவளுடன் பழக நேரிடும். உங்களுக்குச் சில சமயம் ஆச்சரியமாயிருக்கலாம். சில சமயம் கோபம் வரலாம். சில வேளைகளில் பயப்படும் படிகூட இருக்கும். எப்படி இருந்தாலும் சரி, அவள் முன்னிலையில் நீங்கள் எதையும் காட்டிக் கொள்ளக் கூடாது. புரிகிறதா?'' என்றாள்.

ரசூலும் காசிமும் சம்மதித்துத் தலையாட்டினார்கள். ஆனால் ஹருமியின் பார்வையில் திகில் படர்ந்திருந்தது. ''அவர்கள்... எத்தனை நாளைக்குத் தங்கியிருப்பார்கள்?...'' என்று இழுத்தாற்போல் கேட்டான்.

அவனுக்குத் தைரியம் அளிக்கும் விதத்தில் ராதா, ''பயப்படாதே. எத்தனை நாள் தங்கினாலும் அவளுக்குப் சேர்த்து நானே தந்துவிடுகிறேன், உனக்குச் சேரவேண்டிய பணத்தை. ஆனால் அதற்கு அவசியமிருக்காது. அவளே நல்ல பணக்காரி என்று தெரியவில்லை?'' என்றாள்.

ஹருமியும் சமாதானமடைந்தவனாய், ''நான் போய் டாக்டரை அழைத்து வருகிறேன்,'' என்று புறப்பட்டான்.

அப்போது, தன் படகு வீட்டின் வாசலிலேயே அமர்ந்திருந்தாள் ஆஷா. அவனது காலடியோசையைக்



கேட்டதும் சரேலெனப் பணிவுடன் எழுந்து, மரியாதையுடன் விலகி நின்று கொண்டாள். அவள் தோளைத் தொட்டு உட்கார்த்தி வைத்து, அன்புடன் இரண்டொரு வார்த்தை பேசிய பிறகு ஷிகாராவில் புறப்பட்டுப் போனான் ராதா.

ஆஷாவுக்கு உடம்பு அனேகமாய்ச் சரியாகி விட்டது. நன்றாக உணவருந்தி, பூரணமாக ஓய்வெடுத்துக் கொண்டாள். ஹருமியும் ரசூலும் சேர்ந்தேதான் அவளைக் கவனித்துக் கொள்ளும்படி இருந்தது. அவர்களிடம், ''மலை எந்தப் பக்கத்தில் இருக்கிறது? இந்தப் பூ என்ன நிறம்? ஏரியில் சத்தம் கேட்கிறதே, யார் போகிறார்கள்?'' என்றெல்லாம் அவள் கேட்டுத் தெரிந்து கொண்டிருந்தபோது, ராதா திரும்பி வந்தாள், ஒரு புது நபருடன்.

தாடியும் மீசையுமாக, தலையில் சடை சடையான கேசத்துடன், மேலே ஒரு கம்பளி மட்டுமே மடித்துப் போட்டுக் கொண்டிருந்த அவன், கையில் ஒரு நீண்ட இரும்புத் தடி வைத்திருந்தான். டங்கென்று அதைத் தரையில் ஊன்றியபோது, அதன் கைப்பிடியருகே கோத்திருந்த இரும்பு வளையங்கள் கலகலவென்று சப்தித்தன.

''இப்படி உள்ளே வா,'' என்று இந்தியில் கூறிய அவன், ஆஷாவை அவளுடைய அறைக்குள் அழைத்துச் சென்றான்.

ரசூலுக்கு இப்போது சிறிது தைரியம் வந்துவிட்டது. ராதாவின் நடவடிக்கைகள் அப்படியொன்றும் நேர்மையானவையோ, சந்தேகத்துக்கு அப்பாற்பட்டவையோ அல்ல என்று புரிந்துவிட்ட பிறகு, தானும் அப்படியொன்றும் நடுங்கத் தேவையில்லை என்று கண்டு கொண்டான். ஆகவே, ராதாவிடம், ''டாக்டரை அழைத்து வருவதாகச் சொல்லி யாரையோ அழைத்து வந்திருக்கிறீர்களே?'' என்று கேட்டுவிட்டான்

''இவரும் டாக்டர்தான். ஆஷாவின் வியாதிக்கேற்ற டாக்டர்,'' என்று பதிலளித்தான் ராதா.

அன்றைக்கு எட்டாம் நாள் ஆஷா கொலையுண்டாள். ரகுல் அதைத் தன் கண்ணால் கண்டான்.

## முப்பத்தைந்து

ஆஷாவுக்கு உடம்பு பூரண குணமடைய இரண்டு நாளைக்குமேல் தேவைப்படவில்லை. (என்று மேலும் கூறலானாள் ஜெகா, சத்யாவினிடத்தில்.)

பட்டுப்போகவிருந்த பூங்கொடி துளிர்த்துப் பசுமையான மாதிரி, அவள் தோற்றத்தில் வாட்டம் ஒரு பக்கமும் பொலிவு மறுபக்கமும் தென்பட்டன. அவளுடைய வழக்கமான அடக்கத்தோடு, ஆரோக்கியத்தின் அழகும் சேர்ந்து கொண்டு, அவளை இனிமையின் உருவாக்கிற்று.

ரகுலாகட்டும், காசிமாகட்டும், ஹருமியாகட்டும் அவளிடம் ஞாபக மறதியாய்ச் சற்று இரைந்த குரலில் பேசிவிட்டால்கூட, பெரும் பாவம் செய்துவிட்டாற்போல மனத்துக்குள் புழுங்கி அவமானப்பட்டுப் போனார்கள். எந்த வினாடி அவள் காசிமின் காலைத் தொட்டு மருந்து தடவி விட்டாளோ அந்த வினாடி முதல் ஹருமி குலாமாகி விட்டான் ஆஷாவுக்கு. அவள் பொருட்டு, நெருப்பிலே விழவும், மலையிலிருந்து விழவும்கூட தயாராயிருந்தான்.

ரகுலின் நிலைமை தர்மசங்கடமாயிருந்தது. பாம்பு என்று தாண்டவும் முடியாமல், பழுதையென்று மிதிக்கவும் இயலாமல் அவன் தவித்தான். ராதா என்னவோ ஒரு மோசடி நாடகம் நடத்திக் கொண்டிருக்கிறான் என்று பலமான சந்தேகம் அவன் மனத்தில் உறுத்திக்கொண்டுதான் இருந்தது. ஆனால் யாருக்கு எதிராக மோசடி



செய்கிறான்? ஹருமியின் விருந்தாளியான அந்தப் பெண் ஆஷாவையா? அப்படியானால் அவளல்லவா புகார் செய்ய வேண்டும்? இல்லையே! ராதாவிடம் பரிபூரணமான நம்பிக்கையும் விசுவாசமும் மரியாதையும் கொண்டவளாக அல்லவா தோன்றுகிறாள்? அவனுடைய காலடிச் சத்தம் கேட்டாலே எழுந்து கொள்கிறாள். அவன் முன்னிலையில் உட்காரவோ, அதிரப் பேசவோ மறுக்கிறாள். அவன் மிதித்த மண்ணைப் பூஜித்து அவன் கால்கழுவிய நீரைத் தலையில் தெளித்துக்கொள்ளும் அளவுக்கு அந்தப் பெண், ராதாவிடம் பயபக்தி கொண்டவளாயிருக்கிறாள்.

ரகுலுக்கு ஆச்சரியமும் குழப்பமும் அளித்த விஷயம் அதுதான். ராதா, எந்த விதத்திலும் அத்தனை பணிவுக்கும் மரியாதைக்கும் ஏற்றவனல்ல. ஆஷா இருக்கும்போது மட்டும் சுபாவத்தை மாற்றிக் கொண்டானே யொழிய, மற்ற வேளைகளில் வழக்கமான வேட்டை நாயாகத்தான் இருந்தான். அதுவொன்றே அவன் வஞ்சகமாய் என்னவோ செய்ய முனைந்திருக்கிறான் என்பதை எடுத்துக் காட்டியது.

ஆஷாவுக்கும் ராதாவுக்கும் பழக்கமாகி மூன்று நாட்கள் தாண்டிவிட்டன. அந்தத் தாடி மீசைப் பேர்வழி அடுத்த நாளும் வந்திருந்து சிறிது நேரம் ஆஷாவின் அறையில் தங்கிவிட்டுச் சென்றான். அதற்கப்புறம் வரவில்லை. பத்து ரூபாய் நோட்டுக்களில் ஏழெட்டு அவனுக்குத் தந்து ராதா அனுப்பியதைத் தான் பார்த்ததாகக் காசிம் வந்து சொன்னான்.

வரவர ராதா ரகுலின் 'வானவில்'லில் தங்குவதைக் காட்டிலும் ஹருமியின் 'பட்டுப் பூச்சி'யில் தயங்குவதே அதிகமாயிற்று. ஒருதரம் ராதாவின் கையைப் பிடித்துக் கொண்டு ரகுலின் படகுக்குள் ஆஷா வந்தாள். ஆனால் அவன் வழக்கமாக உட்காரும் இடங்களில் தான் உட்கார மறுத்துவிட்டாள். பெரும்பாலும் கையால் ஸ்பரிசித்துப்

பல பொருள்களை வியந்தாள். ராதா கொணர்ந்து தந்த பழரசத்தை அருந்திவிட்டு, அவன் கையைப் பற்றியவாறே தன் படகுக்குத் திரும்பிவிட்டாள்.

ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் ரகுலுக்குச் சிறிது சந்தோஷம். ராதா— ஆஷாவின் உறவு தப்பானதாகப் போகவில்லை— குறைந்த பட்சம் அவனறிந்த மட்டில். இரவு எந்நேரமானாலும் ராதா தன் படகுக்குத் திரும்பி விட்டான். ஆஷா அவள் அறையில் தங்கிக் கொண்டாள். அப்படி ஏதேனும் ரசாபாசமாக நடப்பதாய்த் தெரிந்ததோ அந்த நிமிடமே இரண்டு பேரையும் இரண்டு படகிலிருந்தும் விரட்டியடித்து விடவேண்டும் என்று தீர்மானமாயிருந்தான் ரகுல். ஓட்டல் நடத்துபவர்கள், ஓட்டலின் நற்பெயர் கெடாமல் பாதுகாக்கிற மாதிரி, படகுக்காரர்களுக்கும் அக்கறை இருக்குமல்லவா?

அந்த விஷயத்தில் அவன் கண்குத்திப் பாம்பாயிருந்த போதிலும், ராதாவின் நடத்தையில் குற்றம் காணமுடிய வில்லை. ஆகவே, ஆஷாவின் அழகை ருசிப்பதைக் காட்டிலும், அவளுடைய பணத்தை அபகரிப்பதுதான் ராதாவின் நோக்கமோ என்று ரகுல் சந்தேகம் கொள்ளலானான்.

அதை நிரூபிக்கிற மாதிரியான சந்தர்ப்பம் நான்காம் நாள் காலையில் கிடைத்தது.

'டயம்ஸ் அஃப் இந்தியா' தினசரியை ஆஷாவுக்கு வாசித்துக் காட்டிக்கொண்டிருந்த ராதா, ஹரூமியைக் கூப்பிட்டனுப்பினான். (அப்போது 'பட்டுப் பூச்சி'யில் தான் இருந்தான் அவன்.)

உறுதியான நல்ல வெள்ளைத் துணி கொஞ்சம், தைக்கும் ஊசி, நூல்கண்டு, கத்தரிக்கோல், அரக்கு ஆகியவை வாங்கி வரும்படி சொல்லி, பணமும் கொடுத்தான் ஹரூமியிடம்.



தரையிலமர்ந்து, புல்புல்தாரா வாத்தியத்தை மெல்ல மீட்டிக்கொண்டிருந்த ஆஷா சற்று நிறுத்தி, "இன்றைக்கே அனுப்பிவிடப் போகிறீர்களா?" என்று கேட்டாள் ராதாவிடம். அவளது மொழி புரியாவிட்டாலும், "இன்றைக்கே அனுப்பிவிடுவதுதான் நல்லது. இதெல்லாம் அவ்வளவு பந்தோபஸ்தான இடமல்ல," என்று ராதா ஆங்கிலத்தில் பதிலளித்ததைக்கொண்டு ஹரூமி ஊகித்துக் கொண்டான். பிறகு ராதா தனது (புதிய) வழக்கம்போல, "மழை பெய்கிறது போலிருக்கிறதே ஹரூமி? எப்படியப்பா போவாய்?" என்று கேட்டான் இனிமையாக.

"என்னிடம் குடை இருக்கிறது, சார்," என்றான் ஹரூமி.

"கொண்டுவந்து காட்டு, பார்க்கிறேன்."

ஓலையினால் செய்த நைந்துபோன தாழங்குடையை ஹரூமி கொண்டு வந்து காட்டியபோது, இரக்கமற்றுச் சிரிக்கவில்லை ராதா. "த்சு, த்சு! அடப் பாவமே," என்று வாய்விட்டு அனுதாபம் தெரிவித்ததோடு, "இதைத் தொட்டுப் பார், ஆஷா," என்று குடையை அவளிடமும் காட்டினான்.

தாமரை கூம்பிய மாதிரி அவளது வதனம் சோகத்தால் இருண்டது. குடையினுடைய கையகலப் பரப்பு, ஓட்டை, கிழிசல்கள் முதலியவற்றை ஸ்பரிசத்தால் அறிந்து கொண்டாள்.

"ஹரூமி! நான் சொன்னதாக ரகுலிடம் சொல். பஜாரில் நேற்று நான் வாங்கி வைத்திருக்கிற புதுக் குடையை எடுத்துக்கொண்டு போப்பா. மழையில் நனையாதே," என்று சொல்லி அவனை அனுப்பினான் ராதா. சுத்தைவத் தாண்டுகையில் ஹரூமியின் காதில் விழுந்தது, ராதா மேற்கொண்டு பேசியது.

"என்ன எளிமையான, ஏழையான ஜனங்கள், பார் ஆஷா! பாரத தேசமெங்கிலும் இவர்களைப் போலக்

கோடிக்கணக்கான பேர்கள் இருக்கிறார்கள். இவர்களுடைய துயரத்தைத் துடைக்காமல்......''

ஹரூமி சிரிப்பதா அழுவதா என்று தெரியாமல், ரசூலிடம் சென்று நடந்ததைச் சொல்லிக் குடையை வாங்கிக் கொண்டு புறப்பட்டான். ஆப்பிள் பழம் கொஞ்சம் அதுங்கினாற் போலிருந்தது என்று முந்தினை நாளிரவு காசிமின் முகத்தில் விட்டெறிந்த மனிதர், குடையில்லாமல் நனைகிறவர்களை நினைத்து அழுகிறாராம்!

ஹரூமிக்கு எரிச்சலென்றால், ரசூலுக்குத் திகைப்பேற்பட்டது— ராதா வாங்கி வரச் சொன்ன பொருள்களை எண்ணி, எதையோ பார்சல் கட்டி அரக்கு முத்திரை வைக்கப் போகிறார் என்று அவன் ஊகித்தான். ஆனால் எதை?

ராதா கேட்ட பொருள்களுடன் ஹரூமி திரும்பிய சிறிது நேரம் கழித்து, சில பிஸ்கெட்டுக்களும் சூடான டீயும் எடுத்துக்கொண்டு ஆஷாவின் அறைக்குள் நுழைந்தான் ரசூல்.

திகிலென்று அவன் அடிவயிற்றைப் பிடித்தாற் போலிருந்தது ராதா செய்துகொண்டிருந்த காரியம்.

ஆஷாவின் ஸூட்கேஸிலிருந்த ஆபரணப் பேழைகளை ஒவ்வொன்றாய் எடுத்து, துணியில் அடுக்கி இறுக்கிக் கட்டிக் கொண்டிருந்தான் ராதா.

ரசூல் தேநீரை வைத்ததும், ''தயவு பண்ணிக் கொஞ்சம் வெளியிலே இருக்கிறாயா, ரசூல்? உள்ளே யாரையும் அனுமதிக்காதே. ஒரு சொந்தக் காரியம் கவனிக்கிறேன். தப்பாக நினைக்கமாட்டாயே?'' என்றான் ராதா, குளிர்ந்த குரலில்.

''நோ ஸார்,'' என்று கூறிவிட்டு வெளியேறுவதைத் தவிர வேறு வழி?

ஆனால் ரசூல் தன் படகுக்குத் திரும்பி விடவில்லை. ஹரூமியையும் காசிமையும் சத்தம் போடாதிருக்குமாறு



எச்சரித்துவிட்டு, பலகைச் சுவரிலிருந்த ஓர் இடுக்கு வழியாகப் பார்த்துக்கொண்டு நின்றான்.

சிறியதும் பெரியதுமாகப் பல நகைகளைத் துணியில் கட்டி, வாய்களை நூலினால் தைத்தான் ராதா. பிறகு, சிறிய முட்டை விளக்கை ஏற்றி வைத்துக்கொண்டு, அரக்குத் துண்டைக் காய்ச்சி சீல் வைத்தான். உருகிய அரக்கின்மீது ஏதாவதொரு முத்திரை வைக்க விரும்பினான் போலும். சுற்றுமுற்றும் எதையோ தேடினான். பிறகு அவளைக் கேட்டான். அவள் புன்னகையுடன் கையை விரித்து இல்லையென்றாள்.

உதட்டைச் சுழித்தவாறு யோசித்த ராதா, அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். சரேலென, அவள் கழுத்திலிருந்த பவுன் சங்கிலியைப் பற்றினான். அதன் முகப்பில் பைசாவைவிடச் சிறிய அளவில் சிறு பதக்கம் கோத்திருந்தது; அதனால் முத்திரை வைக்கலாம் என்று சொன்னான் போலிருக்கிறது. ஆனால் ஒரு நிமிட காலத்துக்கு அந்தச் சங்கிலியில் வைத்த கையையும் அவள் முகத்தில் வைத்த கண்ணையும் ராதா எடுக்காமலே இருந்தான்.

அவன் தன் கழுத்தைத் தொட்டபோதோ சங்கிலியைப் பறித்தபோதோ ஆஷாவின் முகத்தில் எவ்வித விகற்ப உணர்ச்சியும் தோன்றவில்லை. ''போயும் போயும் இதைக் கேட்டீர்களே!'' என்று பரிகாசம் பண்ணுவது போல் சிரித்துக்கொண்டு, அந்தச் சங்கிலியைக் கழற்றித் தந்தாள். மறுபடி ஒருமுறை அவளுடைய பார்வையற்ற கண்களை உற்று நோக்கினான் ராதா. பின்னர், தையல் முனைகளில் மீண்டும் இளக்கிய அரக்கை வைத்து, அந்தச் சங்கிலிப் பதக்கத்தை அழுத்தி ஒற்றி எடுத்தான். எல்லாப் பார்சல்களுக்கும் முத்திரை வைத்தானதும், பதக்கத்தில் ஒட்டியிருந்த அரக்குப் பிசிறுகளைச் சுரண்டி எடுத்துவிட்டு அவள் கழுத்திலே தன் கையினாலேயே அணிவித்தான்.

இன்ஷ்யூர் செய்த தபால் பார்சல்களாக அவை போகப் போகின்றன என்பதை மட்டும் ரகுல் புரிந்து கொண்டான். அவள்தான் எங்கேயோ அனுப்பும்படி சொல்லியிருக்கிறாள் என்றே வைத்துக் கொண்டாலும், அவள் சொன்ன விலாசத்துக்குத்தான் அவை போகின்றனவா? பார்வையில்லாத ஒரு பெண் எப்படி அதைத் தெரிந்துகொள்ளப் போகிறாள்?

ரகுல் குறுகுறுப்புடன் காத்துக் கொண்டிருந்தான்— தபாலுக்குத் தன்னை அனுப்புகிறாளா பார்க்கலாம் என்று.

ராதா தரவில்லை.

ஷிகாராவில் ஏறிச் சென்று கரையில் இறங்கிக் கொண்டு தானே சென்றான். வெகு நேரம் கழித்துத்தான் திரும்பி வந்தான். நேரே ஆஷாவிடம் சென்று, ரசீதுகளைக் காட்டினான்.

துன்பச் சேற்றிலே ஆழ்ந்து அமிழ்ந்திருக்க வேண்டியவளான அந்தப் பெண் வேண்டுமென்றே அதைக் கூர்ந்து கவனித்துப் படிப்பவள்போல் பாசாங்கு செய்துவிட்டுக் கலகலவென்று சிரித்தாள். ராதாவும் அவளுடன் சிரித்தான். ரகுல் பல்லைக் கடித்துக் கொண்டான்.

அன்று மாலை முதன் முறையாக ஆஷா ராதாவுடன் வெளியே புறப்பட்டாள். ''நீயும் வா,'' என்று ராதா அழைத்தபோது முதலில் ரகுலுக்கு விளங்கவில்லை. கரையில் இறங்கிக் கொண்ட பிறகு, ''ஜீலம் நதியில் படகில் போகவேண்டும். தயவு பண்ணிச் சிரமத்தைப் பாராமல், ஏற்பாடு பண்ணிக் கொடுக்கிறாயா?'' என்று கேட்டான் ராதா.

ஜீலம் நதியின் மூலமாக ஸ்ரீநகரின் ஏழு பாலங்களைத் தாண்டிக்கொண்டு செல்ல உல்லாசப் படகுகள் உண்டு. நகரத்தின் இருபுறத்தையும் பார்த்துக்கொண்டு செல்லலாம். நதியோரங்களில் பல படகுக்காரர்களின் ஏழைப்



படகுகள் இருப்பதைக் காணலாம். படகினுள் இருந்தவாறே தண்ணீரில் குதிப்பவர்களையும், துணி அலசுவோரையும், பாத்திரங்களைக் கழுவுவோரையும் பார்த்துக்கொண்டே செல்லச் செல்லத் துளியும் அலுப்பிராது.

ராதாவும், ஆஷாவுடன் அப்படித்தான் சென்றான். உல்லாசப் படகின் திண்டுகளில் அவளை மட்டுமே சாய்ந்து கொண்டு சௌகரியமாக இருக்கும்படி கூறிவிட்டு, ஆஷா மறு ஓரத்தில் மரியாதையாகவே உட்கார்ந்திருந்தாள். ரகுல் சட்டசபைக் கட்டிடம், கல்லூரிகள், மருத்துவமனைகள் ஆகியவை எங்கெங்கே இருக்கின்றன என்பதை விளக்கும் போதெல்லாம், அவன் தன் கண்களை அகல விரித்து அதிசயிக்கும் போதெல்லாம், ரகுலுக்குக் கண்ணிலே நீர் துளிப்பது வழக்கமாயிற்று.

ஏழு பாலங்களையும் தாண்டியான பிறகு, கரையில் இறங்கிக்கொண்டு, ஒரு டாக்ஸியில் டால் ஏரிக்குத் திரும்பினார்கள் மூவரும். ஆனால், படகுப் பையனிடம் சொல்லி, ஆஷாவை மட்டுமே 'பட்டுப்பூச்சி'க்குத் திருப்பியனுப்பினான் ராதா. ரகுலைத் தன்னுடன் இருத்திக்கொண்டவன் ஆஷாவின் படகு மறைகிறவரையில் நின்றிருந்து விட்டு, ''பஜாருக்குப் போகலாம் வா,'' என்று ரகுலை அழைத்தான்.

''என்ன வாங்கப் போகிறீர்கள்?'' என்று ரகுல் விசாரித்தான்.

''இந்தக் காஷ்மீர் எதற்கெல்லாம் புகழ் பெற்றதோ அதையெல்லாம் வாங்கப் போகிறேன். ஆனால் ஆஷாவுக்குப் பயன்படும்படி இருக்க வேண்டும்,'' என்றான் ராதா.

''அதாவது துணிகள், நகைகள்— அந்த மாதிரி.....''

''ஆமாம். காஷ்மீர டிரஸ், காஷ்மீர அலங்காரங்கள், பாஷன்கள்......''

"கவர்மெண்ட் எம்போரியத்துக்கு வாருங்கள். எல்லாம் கிடைக்கக்கூடிய இடம்," என்று அழைத்துப் போனான் ரசூல்.

காஷ்மீர உல்லனில் நெய்த விலையுயர்ந்த துணிகளையும் ஆபரணங்களையும் அன்று வாங்கிக்கொண்டேயிருந்தான் ராதா சளைக்காமல். கிட்டத்தட்ட ஆயிரத்தைந் நூறு ரூபாய்க்குப் பக்கமாகப் பில் ஏறியபோது, கனக்கக் கனக்க அந்த மூட்டைகளைச் சுமந்து கொண்டபோது, ரசூலின் சந்தேகங்கள் உறுதியாகிவிட்டன. அவள் அவனை நம்பிக் கொடுத்த நகைகளைத் திருட்டுத்தனமாக விற்றுச் சுருட்டிவிட்டான் பணம். அவளிடம் அன்பு கொண்டவன் போல் வேடம் போடுவதற்காகச் சும்மா இந்த நாலு பொருள்களை வாங்கியிருக்கிறான். இவைகளையும் எப்போது சுருட்டிக் கொண்டு கம்பி நீட்டப் போகிறானோ?...

'வானவில்'லுக்கு அவர்கள் திரும்பியபோது, இரவு வெகுநேரம் ஆகிவிட்டது. 'பட்டுப்பூச்சி'யில் எல்லா விளக்குகளும் அணைக்கப்பட்டுவிட்டதால் ஆஷா தூங்கச் சென்றுவிட்டாள் என்பது தெரிந்தது. வாங்கிய பொருள்களைத் தன் அலமாரியில் வைத்துக் கொண்டுவிட்டான் ராதா.

அடுத்த நாள் காலையில். ரசூலைக் கூப்பிட்டனுப்பினான் அவன். முந்தின இரவு வாங்கிய பொருள்களை அவனிடம் ஒப்படைத்து, "உன் மனைவியிடம் கொடுத்து ஆஷாவுக்கு அணிவிக்கச் சொல்லு," என்றான். விகாரமான வெறியினால் அவன் கண்கள் மின்னின. நாக்கைச் சுழற்றிக்கொண்டு சீட்டியடித்தான்.

ரசூல் தனது திகைப்பை அடக்கிக் கொண்டு சொன்னபடியே செய்தான். ஆனால் ஆஷாதான் உடனே ஒப்புக் கொள்ளவில்லை. "எதற்காக எனக்கு இதெல்லாம்?" என்று ஆட்சேபித்தாள், ரசூலின் குடும்பம் இருந்த பகுதியில், படுதாவுக்கு மறுபுறம் இருந்தவாறே.



அங்கே நுழைவதற்கு உரிமையில்லாமல் வெளியே குறுக்கும் நெடுக்கும் உலாவிக் கொண்டிருந்த ராதா, "நீதானே ஆஷா நேற்றுச் சொன்னாய், ஜீலம் நதியில் போய்க் கொண்டிருந்தபோது? மறந்து விட்டாயா அம்மா?" என்றான்.

"என்ன சொன்னேன்?"

"இந்துக் கோயிலும் முஸ்லிம் மசூதியும் ஒரே கட்டடத்திற்குள் மாடியிலும் கீழுமாக இருப்பதாக ரசூல் காட்டினானே, அப்போது சொல்லவில்லை?"

"ஆம்...... பார்க்க வேண்டுமென்று சொன்னேன்."

"இப்போது அங்கேதான் போகப் போகிறோம். அந்த ஆலயம் காட்டுகிற அதே ஒற்றுமையை நீ காட்ட வேண்டாமா, ஆஷா? இந்துப் பெண்— முஸ்லிம் அலங்காரம்!" என்றான் ராதா.

ஆஷா வெட்கத்துடன் சிரித்துவிட்டாள். ஆனால் அதன் பிறகு தடை ஏதும் சொல்லாமல் அலங்கரித்துக் கொண்டு, வெளியே வந்தாள்.

விழி தெறித்துவிடுகிறாற்போல் தன்னை ராதா நோக்குவது அவளுக்குத் தெரியாது. "நான் போய் ஒரு சாமான் எடுத்து வருகிறேன்," என்று கூறிவிட்டுத் தன் படகுக்குச் சென்றாள், காசிமின் கையைப் பிடித்துக் கொண்டு. படகுக்காரர்களின் நாடோடிப் பாடல்கள்கூட இப்படி ஒரு அழகியை வர்ணித்து ரசூல் கேட்டதில்லை.

"பார்த்தாயா ரசூல்?" என்று வெட்கங்கெட்டவனாகச் சிரித்தான் ராதா. "என்னவோ உங்கள் காஷ்மீரப் பெண்கள்தான் மகா அழகு என்று தமுக்கடிப்பீர்களே, இயற்கையிலேயே அழகியான ஆஷா, இதையும் அணிந்து கொண்டால் எப்படியிருப்பாள் என்று நேற்று எண்ணிப் பார்த்தேன். எண்ணிப் பார்த்ததைக் கண்ணாலும் கண்டு விட்டேன்!" என்று பீற்றிக் கொண்டான்.

சில நிமிடங்களில் ஆஷா திரும்பி வந்து, ''போகலாம்,'' என்றாள். இப்போது அவள் கையில் ஒரு சிறு பிரம்புப் பெட்டி இருந்தது.

''என்னது அது?'' என்று ராதா முகத்தைச் சுளித்தான்.

''உங்கள் விருப்பப்படி இப்போது இந்த உடை அணிந்திருக்கிறேன். ஆலயத்தில் தரிசனமெல்லாம் முடிந்த பிறகு என் விருப்பப்படி உடுத்திக்கொள்ள வேண்டு மல்லவா? அதற்கு இது,'' என்று பதிலளித்தாள் ஆஷா.

''பிக்னிக்குச் சாப்பாடெல்லாம் எடுத்து வைத்திருக் கிறாயல்லவா ரசூல்?'' என்று ராதா கேட்டதும் ரசூலுக்கும், அவன் பின்னே நின்றிருந்த காசிமுக்கும் ஹரூமிக்கும் தூக்கி வாரிப் போட்டது. காலையிலிருந்து அவர்களும் அவர்கள் வீட்டுப் பெண்களும் இந்தப் புதுக் கூத்திலே கலந்துகொண்டு விட்டதால், சமையலறைப் பக்கம் செல்லவில்லை யாரும்.

''பிக்னிக் என்று சொல்லவில்லையே!'' என்று கையைப் பிசைந்தான் ரசூல்.

முகம் குப்பென்று சிவக்க, ஆங்காரத்துடன், ''முட்...'' என்று கையை ஓங்கிப் பாயவிருந்த ராதா, கண்ணிமைக்கும் நேரத்துக்குள் நிதானமடைந்தான். ''பரவாயில்லை. இதற்குப் போய் ஏன் பதறுகிறாய் ரசூல்? மெல்லத் தயார் செய்துகொண்டு எடுத்து வா. நீயும் எங்களுடன் பிக்னிக்கில் கலந்து கொள்ளேன். எங்களுக்குச் சந்தோஷமாயிருக்கும். இல்லையா, ஆஷா?''

''யார், ரசூல்தானே? ஓ! குழந்தைகளைக்கூடக் கூட்டி வரட்டும். தமாஷாகப் பொழுது போகும்,'' என்று ஆஷாவும் அழைத்தாள்.

''எந்த இடத்தில் வந்து பார்க்கட்டும்?'' என்று ரசூல் கேட்டான்.



''ஏரோட்ரோமிலிருந்து வருகிற வழியில், ஒரு சின்னக் குன்றும் நீரோடையும் பார்த்தேன்...... அது எந்த இடம்?''

வேறு சில அடையாளங்களையும் விசாரித்தான பிறகு அது எந்த இடம் என்பதைப் புரிந்துகொண்ட ரசூல், அதற்கு எப்படிப் போக வேண்டும் என்பதையும் விளக்கினான்.

ஆஷாவும் ராதாவும் புறப்பட்டுப்போன இரண்டு மணி நேரம் கழித்து, பிக்னிக் பலகாரங்கள் தயாராகின. ''அந்த ஆசாமி ஒரு இனுசு. நான் குழந்தைகளை அனுப்ப மாட்டேன்,'' என்று மறுத்துவிட்டாள் ரசூலின் மனைவி. காசிமுக்குப் பலமான காய்ச்சல். முடங்கிவிட்டான். ஹரூமிக்கு அழைப்பில்லாத இடத்தில் ஆஜராக விருப்ப மில்லை. ஒதுங்கிவிட்டான்.

ஆக, சாப்பாட்டுக் கூடையுடன் ரசூல் மட்டுமே கிளம்பிச் சென்றான்.

ராதா குறிப்பிட்டிருந்த இடத்தில் ஜனநடமாட்டம் அவ்வளவாக இராது என்று ரசூலுக்குத் தெரியும். அதிலும் அன்றைய தினம், பக்கத்திலோ ஏதோ ஒரு சந்தை நடைபெற்றதால், எதிரில்தான் ஜனங்கள் வந்துகொண் டிருந்தார்களே தவிர, போகப் போக யாரையும் காணோம்.

குறிப்பிட்ட இடம் வந்தது.

அங்கே குன்று இருந்தது அமைதியாக. நீரோடை ஓடியது தெளிவாக. காற்று வீசியது மனோகரமாக.

''சார்!'' என்று கூப்பிட்டான் ரசூல், அடர்த்தியாக வளர்ந்திருந்த தினார் மரங்களை நோக்கி.

ஒரே ஓர் ஆடுதான் அவனைத் தாண்டிக்கொண்டு ஓடியது.

''சார்! சார்! மேடம்!'' என்று திரும்பத் திரும்பக் கூவிக்கொண்டே, தடவைக்குத் தடவை குரலை உரக்கச்

செய்தபடி, மரங்களினூடே அலைந்து திரிந்து தேடலானான் ரகுல்.

திடீரென யாரோ சரசரவென்று நகருகிற சப்தம் கேட்டது. திடுப்பென நின்றது. பிறகு மறுபடி கேட்டது.

திகில் வசப்பட்டவனாக, ஒரு பாறையின் இடுக்கில் ஒளிந்துகொண்டு, மூச்சை அடக்கியவாறு நோக்கினான் ரகுல்

''ஐயோ!'' என்று தன்னை மறந்து அலறிவிட்டான். அல்லது, சொல்லவொண்ணாப் பீதிதான் அவன் வாயைக் கட்டிவிட்டதோ?

நாக்கு மட்டுமல்ல, அவன் புலன்கள் மொத்தமும் இற்று விழுந்தன அந்தக் காட்சியைக் கண்டபோது.

ஆஷாவைத் தன் தோளில் தூக்கிப் போட்டுக்கொண்டு, பதுங்கிப் பதுங்கி ஓடிக் கொண்டிருந்தான் ராதா. அவன் ஆடைகளும் உடலும் நனைந்து, ஈரம் சொட்டிக் கொண்டிருந்தன.

ஈரம் மட்டுமல்ல, செக்கச் சிவந்த ரத்தத் துளிகளும் சொட்டின.

ரகுல் பார்த்துக் கொண்டிருக்கும்போதே ராதா மறுபுறத்து மரங்களின் அடர்த்தியில் மறைந்து போனான்.

போனவன் போனவனே. பிறகு படகு வீட்டுக்குத் திரும்பவேயில்லை.

அவனும்தான்; அவளும்தான்.

ஆஷாவைக் கொலை செய்துவிட்டு ராதா ஓடி விட்டான் என்பதில் இனியும் என்ன சந்தேகம்?

# முப்பத்தாறு

பழைய டெல்லியின் பல இடங்களில் யமுனையின் வெள்ளம் புகுந்திருந்த சமயம் அது.



லைகவுஸ்ட்டிலிருந்த பலர், 'அதோ அங்கேதான் அதிகச் சேதம்...... அடடா! தண்ணீர் எவ்வளவு தூரம் உள்ளே வந்திருக்கிறது!' என்றெல்லாம் ஒருவருக்கொருவர் சுட்டிக் காட்டி ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கையில், விமானம் 'பாலம்' தளத்தை நோக்கிக் கிடுகிடுவெனத் தாழ்ந்து கொண்டிருந்தது.

இரண்டு பேருக்கு அந்தப் பரபரப்பில் அக்கறை இருக்கவில்லை: சத்யா; ஜெகா.

''கதை அவ்வளவுதானா?'' என்று சத்யா கேட்டான்.

ஜெகாவின் முகத்தில் சீற்றம் பளபளத்தது. ''இவ்வளவு விஷயமும் வெறும் கதைதான் என்கிறாயா கடைசியில்?''

''ஸாரிடி, ஜெக்,'' என்று சொல்லி விட்டு, காலடியில் இருந்த பையைக் கையில் எடுத்துக்கொண்டு இடுப்புப் பெல்ட்டைத் தளர்த்திக் கொண்டான் சத்யா. விமானம் தரையைத் தொட்டுவிட்டதற்கு அடையாளமாகத் தட்தட் தட் என்ற இதமான குலுக்கல்கள் பிரயாணிகளை உலுக்கின. ''நீ சொல்ல வேண்டிய விஷயம் அவ்வளவு தானா, இன்னும் இருக்கிறதா என்பதற்காகக் கேட்டேன். டாக்ஸியில் போகும்போது மற்றதைச் சொல்லு.''

எழுந்துகொண்ட சத்யாவின் முகத்தை, எழுந்திராமலே உற்றுக் கவனித்தாள் ஜெகா. தான் சொன்ன விவரங்களை— அந்த விவரங்களின் வழியே அடையும் முடிவை— அவன் நம்பவுமில்லை, ஒப்புக் கொள்ளவுமில்லை என்பது சத்யாவின் முகத்தில் எழுதி ஒட்டினாற் போல் தெரிந்தது. அவளுக்குக் கோபமும் வந்தது. ஏமாற்றமாயும் இருந்தது. ஆனால் அவனை எதும் கேட்க நேரமில்லை. பிரயாணிகள் அப்போது எழுந்திருந்து இறங்கத் தொடங்கியிருந்தார்கள். அதன் பிறகு வெளியே வந்து லக்கேஜுகளுக்காக அலையவும் டாக்ஸிக்காரனுடன் பேரம் செய்யவுமே நேரம் சரியாக இருந்தது. விமான நிலையத்தை விட்டுச் சுமார் ஒரு மைல் வந்த பின்னர் சத்யாவே கேட்டான்:

''இவ்வளவு தகவல்களையும் எப்படிச் சேகரித்தாய் நீ? நான்தான் உன் கூடவே இருந்தேனே?''

ஜெகாவுக்கு ஓரளவு ஆறுதலேற்பட்டது இந்தப் பாராட்டினால். ''ஏன்? ஐ அம் எ ஜர்னலிஸ்ட் அண்ட் எ பக்கா ஒன் டூ. எனக்கா சொல்லித் தரவேண்டும் வித்தை? ரசூலின் நடவடிக்கையைப்பற்றி நீ சந்தேகம் தெரிவித்த அன்று ராத்திரியே, நீ தூங்கியான பிற்பாடு, அவனைக் குடைந்து குடைந்து விசாரித்தேன். அந்த ஹூமி தன் படகு வீட்டோடு எங்கேயோ போய்விட்டதாக ரசூல் சொன்னான். அவனையும் விடவில்லை. மறுநாள் யூ னோ வாட் ஐ டிட்? உன்னை நிஷாத் கார்டனுக்கு அனுப்பி விட்டு, ரசூலுடன் தால் ஏரி பூராவும் சுற்றி ஹூமியைக் கண்டுபிடித்தேன். ரசூலை அனுப்பிவிட்டு, ஐ செக்டு ஆல் த டீடெய்ல்ஸ். எல்லாம் கரெக்ட். அப்புறமென்ன?''

''கெட்டிக்காரிதான்,'' என்று மொழிந்துவிட்டு, டாக்ஸிக்கு வெளியே பார்வையைச் செலுத்தினாள் சத்யா. ''ஒரே அயல்நாட்டுத் தூதராலயங்களாக இருக்கிறதே, இதுதான் சாணக்யபுரி என்கிறதா ஜெகா?''

''ஏய்!'' என்று மீண்டும் சினமுற்றவளாக ஜெகா அதட்டினாள். ''நான் சொன்னதையெல்லாம் நீ நம்பு கிறாயா, இல்லையா?''

''நம்பாமலென்ன?'' என்று அசிரத்தையாகப் பதிலளித் தாள் சத்யா. ''ஹூமியும் ரசூலும் காசிமும் உன்னிடம் சொன்ன தகவல்கள் உண்மையாயிருக்கலாம். ஆனால், அதைக்கொண்டு நீ தப்பான முடிவுக்கு வந்து விட்டாய் என்பது நிச்சயம்.''

''ஐ ஸீ!'' என்று ஜெகா பல்லைக் கடித்தாள். ''அயோக்கியனானாலும் அத்தான் என்று சொல்கிற பெண் பிள்ளைப் பட்டாளத்தில் நீயும் ஒருத்திதானே? மறந்து விட்டது எனக்கு!''



''கோபிக்காதே ஜெகா. மீதி விவரத்தையும் சொல்லு. அப்புறம் அவர்கள் தங்கள் படகு வீடுகளுக்கு வரவே யில்லையாமா?''

''இல்லை.''

''வேறிடத்திலேயும் ரசூல் அவர்களைப் பார்க்கவே யில்லை?''

''நோ.''

''கொலை செய்துவிட்டு, ஓடி ஒளிந்தவனைப்பற்றி ஏன் ரசூலோ ஹூமியோ போலீசுக்குப் புகார் செய்ய வில்லையாம்?''

''அப்ஸர்ட்! ஏற்கெனவே போலீசில் மாட்டிக்கொண்டு திண்டாடினவர்கள் இரண்டு பேரும். இன்னொரு தரம் போவார்களா? அத்தோடு— ஜஸ்ட் இமேஜின்— இவர் களுடைய படகு வீடுகளில் தங்குகிறவர்களுக்கு இப்படிப் பட்ட அபாயமெல்லாம் ஏற்படும் என்றால், பெயர் என்ன ஆவது? பிழைப்பு என்ன ஆவது? எவன் வந்து தங்குவான் அப்புறம்? ஸோ தே கிப்ப்ளி ஷட் தெர் மௌத் டைட்.''

சிறிது மௌனத்துக்குப் பின் சத்யா, ''ரசூல் கொலையைக் கண்ணால் கண்டான் என்று சொன்னாயே, அது தப்பு. - ரத்தம் சொட்டுகிற ஒரு பெண்ணின் உடம்பைத் தூக்கிக் கொண்டு போனதைத்தான் அவன் பார்த்திருக்கிறான்,'' என்றாள்.

''சத்யா! கோர்ட்டுக்கு வந்து பார், யூ வுட் அண்டர் ஸ்டாண்ட். நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது கேஸ் களில், கொலை நடக்கிறபோது நேருக்கு நேர் பார்த்த சாட்சி இருக்காது. ஆனால், குற்றவாளியின் தன்மை, கொலைக்கான நோக்கம்...''

''ஆ, அதைச் சொல்லு!'' என்று சத்யா குறுக்கிட் டாள். ''என் அத்தானுக்கு எவளோ ஒரு பெண்ணைக் கொலை செய்து என்ன ஆகவேண்டும்?''

''உலகத்தில் ஒவ்வோர் அசைவுக்கும் காரணமாயிருக்கிற அதே சொல்தான்— பணத்தாசை.''

''பணத்தாசையா?'' சத்யா சிரித்துவிட்டாள்.

''ஏன் சிரிக்கிறாய்? அந்தக் குஜராத்திப் பெண் பணக்காரி. நிறைய நகைகள் கொண்டு வந்திருந்தாள். அதை அவன் எங்கே அனுப்பச் சொன்னாளோ— இவன் தன் விலாசத்துக்கே அனுப்பிக்கொண்டு விட்டான். பிற்பாடு அவள் கண்டுபிடித்து விடுவாளே, அதற்காகக் கொலை!''

''ஜெகா! ராதா அத்தான் குமார் பத்து லட்ச ரூபாய் சொத்துக்கு வாரிசுதாரர் என்று உனக்குத் தெரியுமா?''

''தெரியும். அண்ட் ஐ நோ ஒன் மோர் திங். அந்தப் பணம் மொத்தமும் உன் அப்பாவிடம் இருக்கிறது அதிலே ஒரு பைசாகூட உன் அத்தானுக்குத் தரத் தயாரா யில்லை அவர். செலவாளியும் ஊதாரியும் உல்லாசியுமான உன் அழகான அத்தானுக்கு வேறு வழி? மர்டர். தன்னை நம்பிய, பார்வையில்லாத ஒரு பெண்ணை ஈவிரக்கமில்லாமல் கொலை பண்ணிவிட்டான்.''

சத்யா எதிர்த்துப் பேசவில்லை. ஆனால் அவள் இதழ்களில் இளநகை அரும்பியிருந்தது.

''எதற்காகச் சிரிக்கிறாய்?'' என்று ஜெகா கோபத்துடன் வினவினாள்.

''ஒன்றுமில்லை. பணம் தேவைப்பட்டது. பணக்காரக் குருடி அகப்பட்டாள். கழுத்தை நெரித்தோ, தலையில் பாறாங்கல்லைப் போட்டோ கொலை பண்ணினார். சவத்தைப் புதைத்தார் அல்லது எரித்தார். ரொம்பச் சரி. பேசாமல் சென்னைப் பட்டணத்துக்கு ஜாம்ஜாமென்று திரும்பி வந்து, கொள்ளையடித்ததைக் கொண்டு ஆனந்தமாய் வாழ வேண்டியதுதானே? அதை விட்டுவிட்டு, ஏன் சன்னியாசியாக மாறவேண்டும்?''



சிரிப்பு, இப்போது ஜெகாவின் முறையாயிற்று. ''நிஜமாய், சத்யா, யூ ஆர் அன் இன்னொஸென்ட் பேபி. பைத்தியமே! நம்முடைய மாபெரும் தேசத்தில், எல்லா அயோக்கியத்தனங்களுக்கும் லைசன்ஸ் பில்லை எது? காவிவேட்டிதானே? த மர்டரர் சோஸ் த ஸேஃபஸ்ட் டிஸ்கைஸ். ஏதாவது புகைகிறதா என்று கொஞ்ச காலம் இப்படிப் பதுங்கிப் பார்க்கிறான். லெட் மி டெல் யூ. இன்னும் கொஞ்ச நாளிலே அவன் இந்தக் காவித் துணிக்கு முழுக்குப் போட்டுவிட்டுக் கிளம்புகிறானா இல்லையா, பார்.''

''அப்படி நேர்ந்தால் என்னைவிடச் சந்தோஷப்படக் கூடியவர்கள் இருக்க முடியாது, ஜெகா!''

''ஓகோ! ஆகக்கூடி, அவன் பக்காக் கொலைகாரனாக இருந்தாலும் நீ உன் பித்தை விடப் போவதில்லை?''

''அவர் கொலைகாரர் என்பதை நான் நம்பத் தயாரா யில்லை என்கிறேன்.''

ஜெகாவின் முகத்தில் கடுமை மின்னியது ஒரு கணம். மறுகணம், ''டாமிட்! எக்கேடோ கெட்டுப் போ. ஃபூல்ஸ் ரூல் த வோர்ல்ட். ஐயோ பாவம், வாழ்க்கையே இனிமேல் தான் ஆரம்பமாக வேண்டிய பிராயம், புத்திசாலியான பெண், நல்ல தொழிலுக்குப் படித்தவள்— ரூயின் ஆகக் கூடாது என்பதற்காகச் சொன்னேன். மண்ணை அள்ளித் தலையில் போட்டுக்கொள்ளத்தான் போட்டுக்கொள்வேன் என்றால்— ரைட்டோ! கோ ஆன்! பை ஆல் மீன்ஸ் ரூயின் யுவர்செல்ஃப்!''

வரவர அவள் குரலில் சூடேறுவதை உணர்ந்த சத்யா, சமாதானமாக, ''நீ என் நன்மையை விரும்பாதவள் என்றா சொன்னேன், ஜெகா? என்னிடம் அக்கறை இல்லாமலா காஷ்மீருக்கு அழைத்துச் சென்றாய்? அன்பு இல்லாமலா பல இடங்களில் சிரமப்பட்டு விவரங்கள் விசாரித்தாய்? நீ உனக்குத் தோன்றியதைச் சொன்ன

மாதிரி நானும் எனக்குத் தோன்றியதைச் சொன்னேன்,'' என்றாள்.

ஜெகா அவளுக்குப் பதில் கூறாமல் ''லெப்ட்டில் திரும்பப்பா. வைகண்ட் பில்டிங்,'' என்றாள் டாக்ஸி டிரைவரிடம்.

சத்யா தொடர்ந்து, ''நான் சென்னைக்குப் போனதும் சும்மா இருப்பேனென்று நினைக்கிறாயா ஜெகா? நேரே போகமாட்டேன், பவானி மடத்துக்கு? ராதானந்த சுவாமிகளை நேருக்கு நேராகவே கேட்டுவிட மாட்டேன்?'' என்றாள்.

''உடனே உன்னிடம் ஒப்புக்கொண்டு விட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பார்! வீல் இட், ஐ ஸே!''

ஜெகாவின் போக்கில் நிச்சயமான மாறுதல் ஏற்பட்டு விட்டதை சத்யா கண்டு கொண்டாள். அவள் காஷ்மீர் போயிருக்கையில், மணி டில்லிக்கு அனுப்பியிருந்த டிராஃப்ட்டை ஜெகாவின் உதவியாளன் வாங்கி வைத் திருந்து இப்போது கொடுத்தான். அதை மாற்றுவதற்கு உதவி கேட்டபோதுகூட ஜெகா அலட்சியமாகவே பதிலளித்தாள். அதைத் தன் சொந்த முயற்சியிலேயே பணமாக்கிக்கொண்டாள் சத்யா. காஷ்மீருக்குப் போய் வந்த செலவுகளைத் தானே தந்துவிட வேண்டும் என்று முன்பு அவள் எண்ணியிருந்தாள். இப்போதுள்ள மன நிலையில், ஜெகா அந்தப் பணத்தைத் திருப்பி எறிந்தாலும் எறிந்து விடுவாள்! ஊருக்குப் போய், பக்குவமாய் ஒரு கடிதத்துடன் தொகையை அனுப்பிக் கொள்ளலாமெனத் தீர்மானித்துக் கொண்டாள்.

''காரவெலில் இன்றே புறப்பட்டு விடலாமென்று இருக்கிறேன் ஜெகா,'' என்று அவள் சொன்னபோது, ''செய்,'' என்று கூறிவிட்டாள் ஜெகா.

விமான நிலையத்துக்கும் வரவில்லை அவள். முன்ன தாகவே தன் அலுவலகத்துக்குப் புறப்பட்டு விட்டாள்.



சத்யாதான், கிளம்புமுன் டெலிபோன் பண்ணினாள் அவளுக்கு.

''ரொம்ப ஒத்தாசை பண்ணினாய், ஜெகா. நான் மறக்கவே மாட்டேன்,'' என்றாள்,

''இதிலே என்ன?''

''நீ சொன்னதை யெல்லாம் நினைவு வைத்துக் கொண்டிருக்கிறேன். போனதும் கேட்டு விடுகிறேன் அவரை.''

''செய்''

ஜெகா டெலிபோனை வைத்துவிட்டாள்.

காரவெல் விமானத்தினுள் நுழைந்து கொண்டிருந்த போது, சத்யாவின் இதயம் நொந்திருந்தது. அத்தான்மீது அவதூறு பொழிவதில் ஏன்தான் இவர்களெல்லாம் இத்தனை அக்கறையாயிருக்கிறார்களோ?

''இதோ இப்படி வையப்பா.''

பெட்டி படுக்கைகள் டாக்ஸியிலிருந்து இறக்கப்பட்டு உள்ளே கொணர்ந்து வைக்கப்படும் ஓசை கேட்டது. டாக்ஸியின் பெட்டி டொம்மென்று மூடிக்கொள்ளும் சத்தம் தொடர்ந்தது.

''அப்பா! அப்பா!''

உள்ளேயிருந்து அவர் வந்தார்— விரைந்தல்ல, சற்றுத் தளர்ந்த நடையில்தான்.

''என்ன, தேச சேவையெல்லாம் இப்போதுதான் ஒருவழியாய் முடிந்ததாக்கும்?''

''என்னப்பா ஒரு மாதிரியாய்ப் பேசுகிறீர்கள்?''

''மாதிரியா? என்ன மாதிரி? எதுவுமில்லை. இந்தப் பிரயாண அழுக்கையெல்லாம் கழற்றி எறிந்துவிட்டு, கை கால் கழுவிக்கொண்டு உள்ளே வா. இட்டிலி சூடாயிருக் கிறது.''

குழப்பத்துடன் தந்தையின் முகத்தைப் பார்த்தவாறே சென்று, உடைகள் மாற்றிக்கொண்டு திரும்பினார் டாக்டர் சம்பத்.

ஆவி புகையும் இட்டிலிகளை மகனுக்காக எடுத்துப் போட்டு, எண்ணெய் மிளகாய்ப் பொடியுடன் அருகில் உட்கார்ந்தார் மணவாளன். "உன் டீமில் வந்த மற்றப் பேர்களையாவது ஒழுங்காகத் திருப்பிக் கொண்டுவந்து சேர்ப்பித்தாயா?"

இட்டிலியை விண்டு வாயில் போடவிருந்த டாக்டர், திகைப்புடன் அப்பாவைப் பார்த்தார். "என்னப்பா விசித்திரமான கேள்வி?"

"வேதனையான கேள்வி என்று சொல். அந்தப் போலீஸ்காரனின் பெண் விஷயத்தில் நீ செய்தது நியாயமா?"

டாக்டர் சம்பத் அமைதி அடைந்தார். "சத்யாவைச் சொல்கிறீர்களா? டிஸிப்ளின் இல்லாதவளை வைத்துக் கொண்டு என்ன செய்ய? மதறாசுக்கு ரயிலேற்றி விட்டேன்."

"மதறாசுக்கா, காஷ்மீருக்கா?"

"காஷ்மீருக்கா?"

ஒன்றுமே தெரியாததுபோல் மகன் பேசுகிறானென்று எரிச்சல் அடைந்தார் மணவாளன். "ராயலசீமைக்கு உன்னோடு புறப்பட்டவள், அங்கிருந்து டெல்லிக்குப் போய், டெல்லியிலிருந்து காஷ்மீருக்குப் போயிருக்கிறேன் என்று கடிதம் எழுதியிருக்கிறாளாம். ஏற்கெனவே அந்தப் போலீஸ்காரன் திமிர் பிடித்தவன். இப்போ சும்மாவானும் எனக்குப் போன் பண்ணி, 'உங்கள் பிள்ளை வந்ததும் சொல்லுங்கள். நான் கொஞ்சம் பேசவேண்டும்' என்று மிரட்டுகிறான்."

டாக்டர் சம்பத் மௌனமாய்ப் பலகாரம் அருந்திக் கொண்டிருந்தார். தந்தையின் மனத்தாங்கலோ, சாரங்கபாணியின் விசாரணைகளோ அவருடைய மனத்தில் இடம் பெற்று நிற்கவில்லை.



சத்யா தன்னந்தனியாய் எங்கெங்கோ போய்க் கொண்டிருக்கிறாள்... என் முட்டாள்தனம்... மருத்துவக் குழுவில் கட்டுப்பாட்டுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துவிட்டு, மனித உணர்ச்சிகளுக்குக் குறைந்த மதிப்பு அளித்ததன் விளைவு...... கொஞ்சம் பரிவோடு விட்டுக்கொடுத்திருந்தால்...

சாப்பிட்டு முடிந்து எழுந்து கொண்டார் டாக்டர். "நீங்கள் சொல்கிற தகவல்கள் எனக்குப் புதிதாயிருக்கிறது அப்பா. நான் விசாரிக்கிறேன்."

"மேலும் மேலும் உளையில் சிக்கிக் கொள்ளாதே. அந்தப் பெண்ணின் சம்பந்தமே உனக்கு வேண்டாம்."

எதற்கும் 'சரியப்பா' என்று கூறுபவர் இதற்குச் சொல்லவில்லை.

சில நிமிடங்களுக்குப் பிறகு அவருடைய கார் சாந்தோமை நோக்கிப் பறந்து கொண்டிருந்தது.

சாந்தோமில், பவானி மடத்தை நோக்கி.

அவருடைய சிந்தனை தெளிவாயிருந்தது. கேட்கப் போகிற கேள்வி, எழுத்து எழுத்தாய், வார்த்தை வார்த்தையாய், வாக்கியம் வாக்கியமாய் அவருடைய நாவில் முழுமையுடன் நின்றிருந்தது: "ஓர் இளம் பெண்ணின் வாழ்க்கையை இன்னும் எத்தனை நாளைக்கு இப்படி நரகமாக்கிக் கொண்டிருக்கப் போகிறீர்களோ?"

## முப்பத்தேழு

மீனம்பாக்கத்தின் காற்றுக்குத் தனியானதொரு வெப்பமும் வேகமும் உண்டு.

விமானத்திலிருந்து இறங்கி, கெட்டியான தரையில் காலை வைத்ததும் சத்யாவின் உணர்வுகள் விழித்துக் கொண்டுவிட்டன.

பொழுதையே ஒரு போதையாக்கும் அந்தக் காஷ்மீரின் ஏரிகளுக்கும் அவளுக்குமிடையே இருந்த தூரம் அதிகரிக்க அதிகரிக்க, ராதா அத்தானைப் பற்றிக் கேள்வி பட்டதெல்லாம் கட்டுக்கதைதான் என்ற எண்ணம் உறுதிப் பட்டது. விமானத்தில் சென்னை நோக்கி வந்து கொண் டிருக்கும்போது அவளுடைய காதல் நிறைந்த உள்ளம் தனக்கேற்ற விதத்தில் எல்லாக் கற்பனைகளையும் பொருத்தமாகச் செய்துகொண்டது. இப்போது லௌஞ்சை நோக்கி நடக்கையில், அந்தக் கற்பனை இன்னும் யதார்த்த மாகத் தோன்றிவிட்டது.

"பிரயாணமெல்லாம் சௌகரியமாயிருந்ததா?"

குரலைக் கேட்டு முதலில் ஆச்சரியமும் பிறகு மகிழ்ச்சி யும் அடைந்தாள் சத்யா.

"டிரைவர் லீவு போட்டிருந்தான் உங்கள் தந்தி கிடைத்தபோது நானே காரை எடுத்து வந்தேன்," என்றான் மணி.

வெகுநாளாக இழந்து விட்டு, இழந்ததுகூடத் தெரியா மலே இருந்துவிட்டு, திரும்பத் தன் வலது கையை அடைந்த மாதிரி இருந்தது சத்யாவுக்கு, அவனுடைய தன்னம்பிக்கை நிறைந்த தோற்றத்தைக் கண்டு, பரிவு நிறைந்த குரலைக் கேட்டபோது.

டிக்கியைத் திறந்து சத்யாவின் பெட்டியை வைத்த மணி, "போகலாமா?" என்று கேட்டான்.

"ஓ!"

பழக்கமான சாலையில் கார் விரையத் தொடங்கி யதும், சத்யாவின் உள்ளத்தில் தெம்பு ஊற்றெடுத்தது.

"தப்பாக நினைக்க மாட்டீர்களே?" என்றான் மணி.



"என்ன?"

"கொஞ்சம் கறுத்திருக்கிறீர்கள். ஆனால் களை போட்டிருக்கிறது."

சத்யா வாய் விட்டுச் சிரித்தாள். "அப்பாடா! அம்மா விடம் தப்பித்தேன்."

மணி தன் நெற்றிக்கு மேலிருந்த கண்ணாடி வழியே அவளைப் பார்த்து, "நீங்கள் காஷ்மீர் போயிருக்கிற சமாசாரம் கிடைத்ததும், பாவம், அம்மா ரொம்பக் கலங்கி விட்டார்கள். நான்தான் ஆறுதல் சொன்னேன், சுவாமி களைப் பற்றிய சமாசாரம் விசாரித்து வரத்தான் போயிருப்பீர்களென்று," என்றான்.

"சுவாமிகளா? என்ன சுவாமிகள்?"

"ராதானந்த— உங்கள் அத்தான் மிஸ்டர் ராதா கிருஷ்ணனைச் சொன்னேன். அவருக்குக் காஷ்மீரில் என்ன நடந்ததென்று விசாரித்துத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம்தானென்று நான் எடுத்துச் சொன்னபிறகு தான், பணம் கொடுத்தார்கள் உங்களுக்கு அனுப்பும்படி."

"பார்த்தீர்களா, மறந்தே போனேன் மணி. பணம் கிடைத்தது. ரொம்பத் தாங்ஸ்."

கிண்டிப் பாலத்தின் இறக்கத்தில் காரின் வேகம் சிறிது மட்டுப்பட்டது.

முன்புறம் குனிந்து சத்யா கேட்டாள்: "மணி, என் அத்தான், விளையாட்டுக்காரர், வேடிக்கைக்கு அஞ்சா தவரே தவிர, பொல்லாதவர், வஞ்சகர் என்று நீங்கள் என்றைக்காவது எண்ணியது உண்டா?"

"சே, சே!"

"உங்களையும் என்னையும்போல் கரெக்டாய்ச் சிந்தனை பண்ணி, கரெக்டான முடிவுக்கு வருகிறவர்கள் உலகத்தில் கொஞ்சம். அதுதான் என் அத்தானின் துரதிருஷ்டம்."

மணி மௌனமாக இருப்பதை சத்யா கவனிக்கவில்லை.

''சுத்த அரைகுறை மனிதர்கள்! இங்கே கொஞ்சம் அங்கே கொஞ்சம் என்று தப்பும் தவறுமாய்க் கேள்விப்பட வேண்டியது. தாங்களாகவே காது மூக்கு வைத்துப் பெரிது பண்ணவேண்டியது. பிறகு அத்தானைத் தூற்ற வேண்டியது. என்ன பண்ண முடியும் இவர்களை? ஐயோ பாவம் என்று அனுதாபப்பட வேண்டியதுதான்.''

லிஃப்டிலே நன்கு சாய்ந்துகொண்டு இருபுறமும் கைகளைப் பிரித்துக் கொண்டாள் சத்யா. அவள் கண்கள் லேசாய் மூடிக்கொண்டன. அலட்சியமான சிரிப்பு ஒன்று அவள் இதழ்களை மொய்த்திருந்தது.

அரைகுறை மனிதர்கள்!

அப்படியொரு பட்டியல் எடுத்தால், முதல் பெயர் 'ஜெகா' என்றுதான் இருக்கும்.

ஸ்கூட்டர் ஓட்டுவது எத்தனை ஒழுங்காயிருக்கிறதோ அத்தனை ஒழுங்குதான் அவளுடைய சிந்தனையிலும் இருக்கும் போலும். எழுத்துப் படிப்பில்லாத ஹரூமிளை யும் ரகுலையும் காசிமையும்கூடச் சேர்த்துக் கொள்ளலாம். அவர்கள் தாங்கள் பார்த்ததைத்தான் சொன்னார்கள். அதையெல்லாம் கோவையாக வரிசைப்படுத்தி, ஒவ்வொன் றுக்கும் ஒவ்வொரு தப்பான அர்த்தம் கற்பனை செய்து, இறுதியில் ஒரு பொய்க் காவியத்தையே வடித்தெடுத்த பெருமை ஜெகாவையே சேரும்.

அவளைச் சொல்லிக்குற்றமில்லை. பத்திரிகைக்காரி. பரபரப்புக்காகவே உயிர் வாழ்பவள். உண்மையைத் திருகித் திரித்துக் கொடுப்பதே அவள் மூச்சு. கற்பனை உள்ளமும் இளம் வயதும் சுதந்திர வாழ்க்கையும் அவளுடைய பொறுப்புணர்ச்சியை அடித்துத் துரத்தி விட்டன போலும்......

க்ர்ர்க்.



கியரை இழுக்கும் ஓசை கேட்டபிறகே சத்யா உணர்வு பெற்றாள். கார் நின்றிருந்தது— அவளுடைய பங்களா வாசலில்.

''முதல் நெம்பர் முட்டாள் என்றால் நீதான்!'' என்று சாரங்கபாணி இடிக் குரலில் சீறினார். ''சரியாய் ஆறு மணிக்கு செக்ரடேரியட்டில் கான்ஃப்ரன்ஸ் இருப்பதை ஞாபகப்படுத்த வேண்டாம்? டயம் என்ன இப்போ? ஐந்தே முக்கால்! காரையும் எடுத்துக்கொண்டு......'' காரிலிருந்து இறங்கி வரும் மகளை அப்போதுதான் அவர் கவனித்தார். ''ஓகோகோ! ராணியம்மா வந்தாயிற்றா! திக் விஜயம் எல்லாம் முடிந்ததா மேடம்?''

''முடிந்தது ஸார்! ரொம்பத் தாங்க்ஸ். உங்கள் ஸி. ஐ. டி. ஆட்கள் பிரமாதமாய் ஸெக்யூரிடி ஏற்பாடுகள் செய்து தந்திருந்தார்கள். என் பாராட்டை அவர்களுக்குத் தெரிவியுங்கள். ப்ளேன்தான் லேட்டாகி விட்டது.'' என்று சத்யா கேலியாகச் சொல்லிக் கொண்டிருக்கையில், அவளுடைய குரலைக் கேட்டு உள்ளேயிருந்து ஓடோடி வந்துவிட்டாள் மீனலோசனி.

''என்னடி பெண்ணே, இப்படி எல்லாரையும் கலங்க வைத்துவிட்டாய்?'' என்று தொண்டை கம்மக் கூறியபடி மூக்கைச் சிந்தி, கண்களைத் துடைத்துக்கொண்டு மகளை அவள் ஆரத் தழுவிக் கொண்டது சாரங்கபாணிக்கு எரிச்சலாயிருந்தது.

''ஆமாம். பெண்ணுக்கு ஆரத்தி சுற்றிக் கொட்டு.'' என்று உறுமிவிட்டுக் காரிலேறி மடாலென்று கதவைச் சாத்திக் கொண்டார்.

''மணி, நீங்கள் இருங்கள். அப்பாவை நான் கொண்டு போய் விடுகிறேன். செக்ரடேரியட்தானே?'' என்று முன் புறம் தாவிக் கொண்டாள் சத்யா.

''என்னடி இது, ஒருவாய் காப்பிகூடக் குடிக்காமல்...'' என்று தாய் தடுத்ததற்கு, ''எல்லாம் ப்ளேனிலேயே ஆகி

விட்டதம்மா,'' என்று சொல்லிவிட்டு, கையை உயர்த்தி உதறிக்கொண்டாள். ''அம்மாடி! ஸ்டீரிங்கைத் தொட்டு எத்தனை நாளாகிறது; கை துருதுருவென்கிறது.''

பின் ஸீட்டில் உர்ரென்று உட்கார்ந்திருந்த சாரங்கபாணியைக்கூடப் பேசவைத்து விட்டது சத்யாவின் சுறுசுறுப்பு.

''ஷெர்லக்ஹோம்ஸ் என்றுதான் நினைப்பு! காஷ்மீருக்கு போனாயே என்ன கிழித்தாயாம்?'' என்று முணுமுணுத்தார் அவர்.

''நீங்கள் எல்லோரும் நினைக்கிறபடி அத்தான் வேஷக்காரரல்ல என்று கண்டுபிடித்தேன்.''

''ஆகாகா!''

சாரங்கபாணி கேலியாகச் சிரித்ததும் சத்யாவுக்குக் கோபம்தான் வந்தது. 'என் மனசுக்கு உண்மை தெரியும். இவர்களுக்கெல்லாம் விளக்க வேண்டுமென்று கட்டாயமா என்ன?' என்று வீம்புடன் வாயை மூடிக்கொண்டாள்.

''அந்த வேப்பமரத்தடியில் நிறுத்து. அரை மணியில் வந்து விடுகிறேன்,'' என்று தெரிவித்து விட்டு, சாரங்கபாணி செக்ரடேரியட் கட்டிடத்துக்குள் நுழைந்து மறைந்து விட்டார்.

'அப்பா கேலியாய்ச் சிரிக்கட்டும்; ஜெகா கடுமையாய்க் குற்றம் சாற்றட்டும். எனக்கு நன்றாய்த் தெரிகிறது நடந்த விஷயம் பூராவும்' என்று எண்ணியபடி காரை விட்டிறங்கி, சிறிது காலாற நின்று கொண்டாள் சத்யா.

காஷ்மீரில் அத்தானுக்கு நேர்ந்தவற்றை அவளால் கற்பனை செய்ய முடிந்தது.

'பாவம், பார்வை இழந்த பெண்' என்று இரக்கம் காட்டியிருக்கிறார் அத்தான். அதுதான் தப்பு. மருந்து குடிக்கமாட்டேன், ஆகாரம் சாப்பிடமாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தவளை, தன் பேச்சுத் திறமையினால் வழிக்குக் கொண்டு வந்திருக்கிறார்.



சரி, அந்தப் பெண் தனியாய் ஏன் காஷ்மீர் வந்தாள்? கணவனுடன் மனத்தாங்கலால்தான் வேறென்ன? அதுதான் நகை நட்டோடு ஓடி வந்திருக்கிறாள். அத்தானும் அதைத் தெரிந்து கொண்டு விட்டார் போலிருக்கிறது.

அவள் போக்கைத் திருத்திவிட வேண்டுமென்று அவர் எண்ணியிருக்கிறார். முதலில் நகைகளை அவளுடைய கணவனின் விலாசத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறார். படகு வீட்டில் அவைகளை வைத்திருப்பது புத்திசாலித்தனம் அல்ல என்று எடுத்துக் காட்டியிருப்பார். அவள் ஒப்புக் கொண்டதும், ஏதாவது பாங்குக்குப் பத்திரமாய் அனுப்பி வைப்பதாய்ச் சொல்லிவிட்டு, அவளுடைய கணவனின் விலாசத்துக்கு அனுப்பியிருப்பார்.

விலாசமா, ஆஷாவின் பெட்டியில் இல்லாமற் போகுமா? பார்வை சரியில்லாதவளாகையால், அவளறியாமல் இதையெல்லாம் எளிதாய்ச் செய்திருக்கிறார்.

அடுத்த காரியம்—

ஆஷாவின் மனதை மாற்றுவது.

பிக்னிக் என்று புறப்பட்டாரே, அன்று அதைத்தான் செய்திருக்கிறார் கல்யாணமான ஒரு பெண்ணின் கடமை என்ன என்பதைப் பலவிதங்களில் எடுத்துச் சொல்லி வாதாடியிருக்கிறார். அத்தானுக்கா பேசக் கற்றுத் தரவேண்டும்? அந்தப் பெண்ணின் மனம் இளகிக் கொண்டே வந்திருக்கும். அதற்குள் காரியம் கெட்டுவிட்டது.

வேறு யாரால்? அவளுடைய கணவனால்தான். அவன் பொல்லாத முரடன் என்பது நிச்சயம். இல்லாவிட்டால் எந்த தாலி கட்டின மனைவியும் அப்படி ஓடிவரமாட்டாளே? அவன் எங்கெல்லாமோ அலைந்து

திரிந்து விசாரித்து ஆஷாவின் இருப்பிடத்தைக் கண்டு பிடித்து, ஸ்ரீநகருக்கே வந்து விட்டான். ஆனால் அவள் எங்கே தங்கியிருக்கிறாள் என்பது தெரியாமல் பிக்னிக்கு ஜனங்கள் வரக்கூடிய இடங்களில் ஒவ்வொன்றாகத் தேடிக்கொண்டு இருந்திருக்கிறான்.

ராதா அத்தான், ஆஷாவின் மனத்தை மாற்றுவதற்காக வாதாடிக் கொண்டிருந்த சமயத்தில், அந்த முரடனின் கண்ணில் அவர்கள் பட்டிருக்கிறார்கள். மடையன், அதை விபரீதமாக அர்த்தம் செய்துகொண்டு விட்டான். பணக்காரனானபடியால் கையில் ரிவால்வர் எப்போதும் வைத்திருப்பான். அல்லது கத்தி, பிச்சுவா ஏதேனும் கையில் இருந்ததோ என்னவோ.

ஆஷாவைத் தாக்கிவிட்டு ஓடியிருப்பான்.

படுகாயமடைந்த ஆஷாவையும் தூக்கிக்கொண்டு, சுட்டவனையும் தேடி ஓடியிருப்பார் ராதா அத்தான். கடைசியில் அவனைக் கண்டுபிடித்து, உண்மையையும் விளக்கியிருப்பார்.

ஆஷாவைப் பகிரங்கமாக எந்த ஆஸ்பத்திரியிலாவது சேர்ப்பித்தால், அவள் கணவன்மீது குற்றம் சேருமே என்பதற்காக ரகசியமாக எந்த டாக்டரிடமோ அவளை ஒப்படைத்து, அவசர சிகிச்சைகள் செய்வித்து, இருவரையும் ரகசியமாகவே ஊருக்கு அனுப்பி வைத்திருக்கிறார் ராதா அத்தான். தன்னையும் குடைந்து கேட்பார்கள் என்று யாரிடமும் சொல்லாமலே புறப்பட்டுவிட்டார். ஆனால்—

அறிந்தோ அறியாமலோ ஒரு குடும்பத்தில் ரகளை ஏற்படுத்தி விட்டோமே என்ற வருத்தம் அவரைத் துறவியாக்கிவிட்டது......

ஒரு நெட்டுயிர்ப்புடன் தலை நிமிர்ந்தாள் சத்யா.

எத்தனை கச்சிதமாக எள்ளத்தனை பிசிறுமில்லாமல் அத்தானைப் பற்றிய மர்மம் தெளிவாகிவிட்டது!



நடந்தவைகளைப் பற்றித் தெளிவான முடிவுக்கு வந்து விட்டதால், நடக்கப் போவதைப் பற்றிய குழப்பமும் அகன்றுவிட்டது சத்யாவிடமிருந்து.

ஒரு வருடம், ஒரு வருடம் என்று அந்தக் கெடுவும் இதோ தீரப்போகிறது இரண்டொரு மாதத்தில். அதற்குள் அத்தானைப் பல முறை சந்திப்பது; கொஞ்சம் கொஞ்சமாக அவருடைய இதயத்தின் ரணங்களை ஆற்றுவது; இதமாகப் பேசிப் பழகுவதன் மூலம் அவரை இக வாழ்க்கைக்குத் திருப்புவது. இது ஒரு பெரிய காரியமா?

''அத்தான்! ஏதோ உங்கள் ஆசைக்கு, ஆறுதலுக்கு ஒரு வருஷம் இருந்தாகிவிட்டது துறவியாக. என்னவோ தவறு இழைத்து விட்டோம் என்று பிராயச்சித்தம் செய்ய நினைத்தீர்கள். செய்தாகிவிட்டது. போதும், வாருங்கள்,'' என்று அழைக்கவேண்டும்.

''நீ சொல்வது சரிதான், சத்யா, ஆனால்...'' என்பார்.

''ஆனால் என்ன?''

''மடத்தின் பொறுப்பை யாரிடம் விடுவது?''

''ஏன்? சின்னச் சாமியார் இல்லையா, உங்களைக் காட்டிலும் வயதிலும் அனுபவத்திலும் பெரியவராக? நான்கூடக் கேள்விப்பட்டேன்— உங்களுக்குப் பதில் அவர்தான் இந்த மடத்தின் தலைவராக வந்திருக்க வேண்டியவர் என்று. அவரிடம் ஒப்படையுங்கள். சந்தோஷமாய் ஏற்றுக் கொள்வார்.''

''உலகம் சிரிக்காதா சத்யா— துறவியொருவன் திடீரென்று கிரகஸ்தனாக ஆனால்?''

''உலகம் எதற்குத்தான் சிரிப்பதில்லை? குடும்பஸ்தன் துறவியானால்கூடத்தான் சிரிக்கிறது. அப்படியே சிரித்தாலும், சிரிப்பவர்களின் மத்தியிலே நாம் வாழ்ந்தாக வேண்டும் என்று கட்டாயமா என்ன? வடக்கே

எத்தனையோ ஊர் இருக்கிறது. வைத்தியரையே பார்த்திராத கிராமங்கள் எத்தனை இல்லை? அங்கே போய் இருப்போம். என் டாக்டர் படிப்பும் வீணாகாதபடி அங்கே தொழில் நடத்துகிறேன். நீங்களும் உங்கள் மனசுக்கேற்ற விதத்தில் ஒரு வேலை பார்த்துக் கொள்ளலாம். ஏன், நம் விவாகம் நடந்து விட்டால் அப்பா தான் உங்கள் சொத்தை வட்டியும் முதலுமாகக் கொடுத்து விடுவாரே! அதை வைத்துக்கொண்டு, பெரிய தொழிற்சாலைகூட நீங்கள் ஆரம்பித்து நடத்தலாம்.''

''ஆமாம், சத்யா. நீ சொல்வதுதான் உண்மை. இப்போதுதான் எனக்குக் கண்ணே திறந்த மாதிரி இருக்கிறது. வா, போகலாம்.''

டொக்கென்று தலையில் ஏதோ விழுந்தது.

ஒரு வேப்பம் பழம்!

சிரித்துக்கொண்டே கைக்குட்டையால் தலையைத் துடைத்துக்கொண்டாள் சத்யா.

வேப்பம் பழம்! என்ன நல்ல சகுனம்! 'அத்தானும் நீயும் இணைய வேண்டிய காலம் வந்துவிட்டது' என்று நினைவூட்டுகிறதோ?

முன்பொருமுறை மகாபலிபுரத்துத் தோப்பின் வழியே உலாவிக் கொண்டிருந்தபோது—

''வேப்பம் பழம் சாப்பிட்டிருக்கிறாயா சத்யா?'' என்று கேட்டார் அத்தான்.

''வேப்பம் பழமா? ஐய்ய!''

''இதற்கு ஒரு அலாதித் தித்திப்பு உண்டு; கடித்து மெல்லாமல் சும்மா ஒரு முறை உறிஞ்சிவிட்டுத் துப்பிவிட வேண்டும்.''

''நீங்களே சாப்பிடுங்கள்.''



''சரி, தாவணியைப் பிரித்துக்கொள் இப்படி.'' அத்தானே அவளுடைய முந்தானையை விரித்துப் பிடித்துக் கொள்ளும்படி செய்துவிட்டு, ஒரு கிளையைப் பிடித்து உலுக்கினார். படபடவென்று வேப்பம்பழங்கள் விழுந்தன.

சத்யாவின் இதயம் படபடத்தது அந்த நினைவில். முந்தானையை அவர் தொட்டபோது அவளுக்கு அப்போது ஏற்பட்ட நாணம், அப்போது மனம் அனுபவித்த கிளுகிளுப்பு, அப்போது அவன் வீசிய பார்வை, வெகுவெகு நேரத்துக்கு அவளைக் கிறங்கச் செய்துகொண்டிருந்த பரவசம்— எல்லாவற்றையும் மீண்டும் இந்த வினாடியில் துய்ப்பது போலிருந்தது.

அவள் கால்கள் அதற்குமேல் இந்த வெறும் மண்ணில், அத்தானில்லாத சூனியப் பிரதேசத்தில் நின்றிருக்கத் தயாராயில்லை. கைக்கடியாரத்தைப் பார்த்தாள். மணி ஏழை நெருங்கிக் கொண்டிருந்தது.

சாவியைக் காரினுள் வைத்துவிட்டுக் கதவை மூடினாள் சத்யா. கடற்கரைச் சாலைக்குச் செல்லும் வாசல் வழியே வெளியே வந்தாள். அமளியில் முடிவுற்ற பொதுக்கூட்டம் போல, அலைகளின் சங்கமம் ஒன்றோடொன்று முட்டிக் கொண்டு பெரும் இரைச்சலை எழுப்பிக் கொண்டிருந்தது. பகலின் ஆதிக்கத்தை நீல விளக்குகள் மெல்ல மெல்ல உடைத்துத் தனது ஆட்சியைச் சிறிது சிறிதாக நிலை நாட்டிக்கொண்டிருந்தது. வேகமாக அவள் நடந்தாள்.

சாந்தோம் கடற்கரையை ஒட்டிய பவானி மடத்தினுள் சத்யா நுழைந்தபோது தாயை மடியச் செய்து விட்டுப் பிறக்கும் சிசுவைப்போல, பகலின் மரணத்தில் இரவு ஜனித்திருந்தது.

பிரார்த்தனை நேரம் அப்போதுதான் முடிந்திருக்க வேண்டும். கையில் மலர்களும் நெற்றியில் குங்குமமுமாய்ப் பலர் அவள் எதிரில் சென்றுகொண்டிருந்தார்கள். காலணி

களை வெளியே விட்டுவிட்டு, பிரார்த்தனை மண்டபத்தினுள் பிரவேசித்தாள் சத்யா.

தெய்வ உருவங்களின் அடியிலே பெரிய குத்து விளக்கு ஒன்று மட்டுமே எரிந்துகொண்டிருந்தது. சிவந்த புஷ்பக் குவியல்களின் மணத்துடன் அகிற் புகையின் தூபமும் சேர்ந்து இழைந்தது.

ஹோவென்று வெறித்துக் கிடந்த மண்டபத்தில், புஜங்களை மார்பின்மீது கட்டிக்கொண்ட நிலையில், தன்னந்தனியராய்க் கண்மூடி அமர்ந்திருக்கும் அந்த உருவத்தை நெருங்கவே அச்சமேற்பட்டது சத்யாவுக்கு. ஓசைப்படுத்தாமல் அடி வைத்து முன்னேறி, அவர் பார்வையில் படுகிற மாதிரி பணிவுடன் உட்கார்ந்து கொண்டாள்.

சில நிமிடங்கள் கழித்து ராதானந்தர் கண் விழித்தார். வினாடி நேரம் அவர் பார்வையில் வியப்புத் தென்பட்டது.

''இன்று மத்தியானம்தான் வந்தேன்,'' என்று தானாகவே தெரிவித்துக்கொண்டாள் சத்யா. ''வந்து...... உங்கள் வார்த்தையை மீறிக்கொண்டு காஷ்மீர் போய் விட்டேன்...... மன்னிக்க வேண்டும்......''

''பரவாயில்லை.''

குத்து விளக்கின் ஆடி அசையும் ஒளி, ராதானந்தரின் முகத்தில் கோலமிட்டுக் கொண்டிருந்தது.

''போன இடத்தில் உங்களைப் பற்றி எத்தனை கட்டுக் கதைகள் கேட்டேனென்கிறீர்கள்!''

''கட்டுக் கதை என்று எப்படிச் சொல்கிறாய்?''

வெளிச்சமும் இருட்டும் கலக்குமிடத்தில் அவர் அமர்ந்திருந்ததால் அவரது முகத்தைச் சரியாய்க் கவனிக்க முடியவில்லை சத்யாவினால். குத்து விளக்கோ, ஓயாத விளையாட்டில் திளைத்துக் கொண்டிருந்தது. மேலே பேச வேண்டாம் என்று எண்ணினாள். ஆனாலும் பேசினாள்:



''யாரோ ஆஷாவாம். குஜராத்திப் பெண்ணாம். அவளுடன் கூத்தடித்தீர்களாம் காஷ்மீரில்.''

''உண்மைதானே?'' என்று அவர் சொன்னதும், அவள் திகில் அதிகரித்தது. அடுத்த வாக்கியத்தை அடக்க முயன்றாள். அதற்குள் அது தானாகவே வெடித்துவிட்டது.

''கடைசியில் அவளுடைய நகைகளைத் திருடிக் கொண்டீர்களாம்.''

''அப்படியா?''

''அந்தப் பெண்ணைக் கொலை செய்துவிட்டு ஓடி வந்து விட்டீர்களாம்.''

திடீரென்று குத்து விளக்கின் சுடர் அசையாமல் நின்றது. அதன் வடிவம் பெரிதாகி, தன் ஒளி முழுவதையும் ராதானந்தரின் முகத்தின்மீது வீசிற்று.

ஒரு பெரும் போராட்டத்தின் ஆவேசத்தை அந்த முகத்திலே கண்டாள் சத்யா. தன்னைத் தானே அடக்கி ஒடுக்கிக் கொள்ளும் சித்திரவதையான வேதனையை அவரது கண்களிலே கண்டாள். பழுக்கக் காய்ச்சிய இரும்புத் துண்டம் போல் அவருடைய நெஞ்சுப் மோவாயும் நாசியும் நெற்றியும் பளபளப்பதைக் கண்டாள். அந்தப் பளபளப்புடன் கூடவே, ஆறிக் கெட்டிப்பட்ட எஃகின் உறுதியையும் கண்டாள்.

''நீ கேள்விப்பட்ட விவரங்கள் வேண்டுமானால் ஒரு வேளை முன்பின் மாறுதலாக இருக்கலாம். ஆனால் நான் ஒரு கொலை செய்தேன் என்பது உண்மை. பின்னே இந்தக் கோலத்துக்கு வேறென்ன காரணம்?'' என்றார் ராதானந்தர்.

MADRAS ... KOLATHUR, CH...
16888
3289699

## முப்பத்தெட்டு

''மணி, கொஞ்சம் இப்படி வாப்பா!''

தலைக்குமேல் என்றால் நிஜமாய்த் தலைக்கு மேலேயே வேலையிருந்தது மணிக்கு. அன்றும் மறுநாளும் ஆவடிக்கருகே அனைத்திந்திய மாதர் மாநாடொன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதற்கான பாதுகாப்புப் பொறுப்புகள் பூரா சாரங்கபாணியின்மீது விழுந்திருந்ததால், அதில் சரிபாதியை மணி கவனிக்குமாறு நேரிட்டிருந்தது. இருந்தாலும் இப்போது சத்யாவின் அம்மா கூப்பிட்டதும் எழுந்து வந்தான்.

தோட்டத்தின் பின்புறத்தில், அவரைப் பந்தல் போடப் பட்டிருக்கும் இடம் வரையில் மீனலோசனி மௌனமாகவே சென்றாள்.

பிறகு சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, ''என்ன செய்கிறாள்?'' என்று விசாரித்தாள்.

''உங்கள் பெண்ணைக் கேட்கிறீர்களா?''

''ஆமாம்.''

''மாடியில் ஏதோ படித்துக் கொண்டிருக்கிற மாதிரி இருக்கிறது. கதவைச் சாத்திக் கொண்டிருக்கிறார்.''

''படிக்கிறானாவது, நாசமாய்ப் போகிறதாவது! அந்தக் கற்பகாம்பிகைக்குத்தான் வெளிச்சம்.'' கண்ணைத் துடைத்துக் கொண்டாள் மீனலோசனி.

''ஏனம்மா, சத்யாவுக்கு என்ன?'' என்று மணி அனுதாபம் தொனிக்கக் கேட்டான். அவள் போக்கில் ஒரு மாறுதலேற்பட்டிருக்கிறது என்பது தோட்டக்காரனுள்பட அனைவரும் அறிந்தது தானென்றாலும், தனக்குத் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளக் கூடாதென்று மணி முடிவு செய்திருந்தான்.



''என்னடாப்பா நீயே இப்படிக் கேட்கிறே? பதினைந்து நாளாயிற்றே, அவள் ஒழுங்காக இலையில் உட்கார்ந்து முழுசாய் ஒரு வாய் ஆகாரம் சாப்பிட்டு?''

''அடப் பாவமே!''

''பரீட்சை சமயமோ என்னமோ, படிப்பு அதிகமோ என்னமோ, அதனால் குழந்தை இப்படி இருக்கிறாளோ என்று நினைத்தேன். அதுவுமில்லை. அவள் சிநேகிதி இங்கே போன் பண்ணிக் கேட்கிறாள்— ஏன் சத்யா சரியாகவே ஆஸ்பத்திரிக்கு வருவதில்லை என்று!''

''ஆச்சரியமாயிருக்கிறதே! காஷ்மீருக்குப் போய் வந்ததிலிருந்து அவ்வளவு கலகலப்பாயில்லைதான். நான்கூடக் கவனித்தேன். ஆனால் இத்தனை மோசம் என்று எனக்கு இப்பத்தானே தெரிகிறது?'' என்றான் மணி.

''எனக்காக ஒரு ஒத்தாசை செய்வாயா, மணி?''

''என்னம்மா அப்படிக் கேட்டுவிட்டீர்கள்? சொல்லுங்கள்.''

மீனலோசனி மறுபடி ஒரு முறை நாற்புறமும் பார்த்துக்கொண்டு விட்டு, குரலை இன்னும் சிறியதாக்கிக் கொண்டாள். ''வந்து... டெல்லியிலே அந்த மேலூர் பிள்ளையாண்டானுடைய தங்கை இருக்கிறாளில்லையா...''

''ஆமாம், அம்மா. ஜெகா என்று பெயர். அவளுடன் தான் உங்கள் பெண் காஷ்மீர் போனாரென்று அப்போதே சொன்னேனே?''

''அவள் விலாசம் உன்னிடம் இருக்கிறதில்லையா?''

''ஓ.''

''அவளுக்கு ஒரு கடுதாசி எழுதிப் போடு. இன்றைக்கே.''

''என்னவென்று?''

"நீயேதான் சொல்கிறாயே, சத்யா காஷ்மீர் போய் விட்டு வந்ததிலிருந்து மாறிவிட்டாள் என்று. அப்படி என்ன சமாசாரம் அங்கே என்று எழுதிக் கேளேன்."

"ஏன், நீங்களே உங்கள் பெண்ணைக் கேட்கக் கூடாதோ?"

"நானா கேட்காமல்? நூறாயிரம் தரம் கேட்டு விட்டேன், என்னடி என்னடி என்று. அவள் வாயைத் திறந்தால்தானே? ஏரோட்ரோமிலிருந்து வந்தாளே அப்போ என்னவோ குதிகுதியென்று குதித்துக்கொண் டிருந்தாள் உற்சாகத்துடன்."

"ஆமாம், ஸாரைக்கூடத் தானே செக்ரடேரியட்டுக்கு அழைத்துப் போனாரே," என்று மணி ஞாபகப் படுத்தினான்.

"அவரை அங்கே இறக்கிவிட்டாளோ இல்லையோ, திரும்பி வந்து அவர் பார்க்கிறாராம், இவளைக் காணோமாம். கார் மட்டும் சாவியோடு அங்கேயே இருக்கிறதாம். கொஞ்ச நேரம், இவரே கூடத் தவித்துப் போய் விட்டாராம். அப்புறம், யாராவது சிநேகிதி வந்திருப்பாள், அவளுடன் போயிருப்பாள் என்று சமாதானப்படுத்திக் கொண்டு வீட்டுக்கு வந்தார்."

"ஒகோ...... சார் புறப்பட்ட கொஞ்ச நேரத்துக் கெல்லாம் நானும் போய்விட்டேன். அதனாலே எனக்கு அதெல்லாம் தெரியாது."

"அவர் வந்தபோதே மணி எட்டரை ஆகியிருந்தது. 'போன் பண்ணியாவது தகவல் சொல்ல வேண்டாம்? பொறுப்பற்ற கழுதை!' என்று சத்யாவைத் திட்டிக் கொண்டே அவர் சாப்பிட்டுவிட்டுப் படுக்கவும் போய் விட்டார். எனக்குத்தான் வயிற்றைப் பிசைந்தது வேதனை. தண்ணீர்கூடக் குடிக்காமல் கொட்டு கொட்டென்று உட்கார்ந்திருந்தேன். பதினொரு மணி இருக்கும், இவள் வருகிறாள்!"



"தனியாய்?"

"தன்னந்தனியாய். முகத்தைப் பார்த்தால் பேயறைந்த மாதிரி இருக்கிறது. என்ன கேட்டாலும் பதிலில்லை. அதற்கப்புறம் இப்படியேதான் இருந்து கொண்டிருக் கிறாள். அவள் அப்பாவுக்கோ, வீட்டைக் காட்டிலும் ஸ்டேஷன்தான் பெரிதாய்த் தெரிகிறது. அப்படியே அவர் அதட்டிக் கேட்டாலும் இவள் நின்று, மரியாதையாய்ப் பதிலா சொல்லப் போகிறாள்? ஹூம்!"

"நீங்கள் கவலைப்படாதீர்களம்மா. நான் விசாரிக் கிறேன்," என்று மணி தேறுதல் சொன்னான்.

"ஒன்றும் வேண்டாம். அந்த ஜெகாவுக்கு ஒரு கடிதாசி எழுதிப் போட்டு, ஏன் இவள் இப்படி இருக்கிறாள் என்று விசாரி, போதும்."

"இன்றைக்கே செய்கிறேன், அம்மா."

"மகராசனாயிருப்பாய்," என்று ஆசீர்வாதம் பண்ணி விட்டு மீனலோசனி உள்ளே போனாள்.

நகத்தைக் கொறித்துக்கொண்டு சிறிது நேரம் நின்று யோசனை செய்தபின் தன் இருக்கைக்குத் திரும்பினான் மணி. பால்பாயிண்ட் பேனாவைத் திறந்து, லெட்டர்ஹெட் தாளை விரித்துக் கொண்டான்.

தலைப்பில் சாரங்கபாணியின் பெயரும் வீட்டு விலாச மும் இருந்தன. அந்த இடத்தை மடித்துக் கிழித்து எறிந்து விட்டு, தன்னுடைய வீட்டு விலாசத்தைக் குறிப்பிட்ட பின்பு, 'அன்புள்ள மிஸ் ஜெகா அவர்களுக்கு' என்று எழுதத் தொடங்கினான்.

அடுத்த வரியை அவன் யோசனை செய்து கொண் டிருக்கையில், அதுவரையில் குளியலறையில் இருந்த சாரங்கபாணி இடுப்பில் கட்டிய துருக்கித் துவாலையுடன் உள்ளே நுழைந்தார் திடும் பிரவேசமாக.

''என்ன அது, காகிதத்தைக் கிழித்துக் கத்திக் கப்பல் பண்ணிக் கொண்டிருக்கிறாய்?'' என்ற அவரது குரல் கேட்டதும், ''இல்லை சார், டைப்ரைட்டருக்கு ரிப்பன் மாற்றிக் கொண்டிருந்தேன்,'' என்றான் மணி அவசரமாகத் தட்டெழுத்து யந்திரத்தைத் தன் பக்கம் இழுத்துக் கொண்டு.

''அதை அப்புறம் கவனிக்கலாம். உன் மெமோ நோட்டில் குறித்துக் கொள். ஃபயர் சர்விஸில் பந்தோபஸ்து அவ்வளவு போதாது என்று நேற்று யாரோ என் காதில் போட்டார்கள். பத்மனாபனிடம் அதுபற்றிப் பேசணும்.''

''எஸ் ஸார்.'' எழுதத் தொடங்கிய கடிதத்தை மடித்துப் பையில் போட்டுக் கொண்டான் மணி.

வேலையாள் எடுத்துவந்த உத்தியோக உடுப்புக்களை அந்த அறையிலேயே மாட்டிக் கொள்ளலானார் சாரங்கபாணி. ஒவ்வொரு பொத்தானைப் போடும் போதும் ஒவ்வொரு விஷயம் ஞாபகம் வந்த மாதிரி, மணிக்கு அடுத்தடுத்துக் குறிப்புக்கள் கொடுத்துக் கொண்டேயிருந்ததால், அவர் உடையணிந்து தயாரான போது, ஃபைலைத் தூக்கிக்கொண்டு அவர் பின்னால் புறப்படத்தான் அவனுக்கு நேரம் சரியாயிருந்தது.

''ஆவடிக்கு விடு,'' என்று டிரைவருக்குக் கட்டளையிட்டார் சாரங்கபாணி. ''அரை மணியில் அங்கே வேலைகளை முடித்துக்கொண்டு ஆபீசுக்குத் திரும்பிவிட வேண்டும்.''

மணியின் புரோக்ராமைச் சாரங்கபாணி கெடுத்தாரென்றால், அவரது தீர்மானங்களை முறியடிப்பதற்காகவே வந்த மாதிரி, போலீஸ் மந்திரி காத்திருந்தார் ஆவடி மாநாட்டில்.

''ஏற்பாடுகளெல்லாம் நன்றாய்த்தான் பண்ணியிருக்கிறீர்கள். இருந்தாலும்...'' என்றவாறு சாரங்கபாணி



யின் தோள்மீது கை வைத்துப் பேசிக் கொண்டே அழைத்துச் சென்றார் அமைச்சர்.

இந்த மாதிரி சமயங்களில் சாரங்கபாணி குறிப்பாகச் சாடை காட்டினாலொழிய மணி பின்தொடர்வது வழக்கமில்லை. இப்போது அப்படிக் குறிப்பு வராததால், காருக்கு அருகிலேயே நின்றுகொண்டு மாநாட்டின் கோலாகலங்களை வேடிக்கை காணத் தொடங்கினான். போலீஸ்காரர்களில் ஒரு சிலர் அவனுக்கு சல்யூட் போட்டு விட்டுப் பேசினார்கள். ஒரு நாற்காலி கொண்டுவரச் சொல்லி, காருக்குப் பக்கத்தில் போட்டுக்கொண்டு உட்கார்ந்தான்.

கும்பல் போட்ட வேர்க்கடலைப் பையன்களை வேறிடத்துக்கு அவன் விரட்டிக் கொண்டிருந்தபோது—

''ஒரு உதவி செய்ய முடியுமா? ஐ வுட் லைக் டு ஸீ ஒன் மிஸ்டர் மணி ஹியர்,'' என்ற குரல் அவனை நிமிர்ந்து பார்க்கச் செய்தது.

வழவழா குழகுழா இல்லாமல் பளிச்சென்று கேள்வி வந்ததாலும் கேட்டது பெண் குரலாயிருந்ததாலும் மணி சிறிது வியப்படைந்து, ''ஏன், நான்தான் மணி,'' என்றான்.

முதலிலிருந்த பணிவை உடனே தூக்கியெறிந்தாள் அவள். ''ஸோ யூ ஆர் த பர்ஸன்!'' அவனை மேலும் கீழும் நோக்கினாள். ''என்ன சார் அரேஞ்ஜ்மெண்ட் பண்ணியிருக்கிறீர்கள் பிரஸ் குவார்ட்டர்ஸில்! ஒரே மெஸ்! காலையிலிருந்து ஐ அம் ஊஸிங் ஹெவன் அண்ட் எர்த் ஃபர் எ பக்கெட் ஆஃப் வாட்டர்! கிடைக்கவில்லை. நிர்வாகிகளைக் கேட்டால், 'அப்படியா? இதோ வருகிறோம்' என்று சொல்லி விட்டு எங்கேயோ பறக்கிறார்கள். கடைசியில் போலீஸ் ஆபீசர்களிடம் ரிப்போர்ட் பண்ணினால்தான் நடக்கும் என்று போனேன், அங்கே ஸம்படி டோல்ட் மீ டு காண்டாக்ட் யூ......''

மணி, "ஐ அம் ஸோ ஸாரி. இதோ வருகிறேன் உங்களுடன்," என்று புறப்பட்டான்.

தாங்ஸ். வந்து பார்த்தால்தான் தெரியும்," என்று கூறிய அந்தப் பெண்மணி, தன் பாப் தலையை ஒரு சிலுப்புச் சிலுப்பி ஒதுக்கிக்கொண்டு, குதிகால் செருப்பு டக்டக்கிட முன்னே நடந்தாள். ஆனால் போகும்போதும் முனகல் நிற்கவில்லை. "சே, சே! இப்படி இருக்குமென்று தெரிந்திருந்தால் ஐ வுட் நாட் ஹேவ் கம் ஆல் த வே ஃப்ரம் டெல்லி!"

மணி நின்றான். "ஓ! டெல்லியிலிருந்து வந்திருக்கிறீர்களா? உங்கள் பெயர்?"

"ஜெகா," என்றவள், தான் எந்தப் பத்திரிகையின் பிரதிநிதி என்பதையும் தெரிவித்தாள். மணியின் புருவம் உயர்ந்தது. "உங்கள் உறவுக்காரர்— சத்யாவின் அப்பா— சாரங்கபாணிதான் இங்கே செக்யூரிடி ஏற்பாடுகள் செய்திருக்கிற போலீஸ் ஆபீசர். அவருடைய பர்சனல் அஸிஸ்டெண்ட்தான் நான்."

"தெரியுமே? அவரையும் பார்த்தேன். அவருக்கு என்னை அடையாளம் தெரியவில்லை."

"இங்கே இத்தனை அசௌகரியம் என்கிறீர்கள், வீட்டுக்கு வந்திருக்கலாமே?"

"வந்திருக்கலாம். சத்யாவுக்குப் பிடிக்குமோ பிடிக்காதோ என்றுதான் வரவில்லை."

மணி அவள் முகத்தைப் பார்த்தான். சத்யாவிடம் உறவு சரியில்லை என்பதை ஊகித்துக் கொண்டான்.

"உங்களுக்கும் ஒரு கடிதம் எழுதவிருந்தேன் இன்றைக்கு," என்று கூறி, ஸ்வாக் பையிலிருந்து அந்த ஒற்றை வரிக் காகிதத்தைக் காட்டினான் மணி.

"எதற்கு இது?"



"வாருங்கள், சொல்கிறேன்," என்று அவளை அழைத்துச் சென்றான் மணி.

தடதடவென்று மின்சார ரயில் ஓடும் ஓசை கேட்டது. முதலில் எங்கோ கனவில் கேட்பது போலவும் பிறகு, திடீரெனத் தன் உடம்பின்மீதே வண்டி ஓடுவது போலவும் உணர்ந்தார் டாக்டர் சம்பத். மேஜைமீது தலை கவிழ்த்துச் சில நிமிடங்கள்தான் உறங்கியிருப்பார். ஆனாலும் விழிப்பு வந்தபோது, பல நாட்களாகத் தூங்கியிருந்து எழுந்தாற்போல் ஓர் அசதி அவர் தேகத்தை வாட்டியது.

மின்சார ரயில் தனது தவளைக் குரலில் உறுமி விட்டுத் தேய்ந்ததும் அவர் எழுந்துகொண்டு, பேசினிலிருந்து பச்சைத் தண்ணீரை எடுத்து முகத்தில் அடித்துக் கொண்டார். நீர் மிகவும் சில்லென்று உறைத்த மாதிரி தோன்றியது. கண்ணாடியில் தன் கண்களையும் நாக்கையும் பார்த்துக் கொண்டவர், சிறிய அலமாரியைத் திறந்து ஒரு மாத்திரை எடுத்து விழுங்கினார். சாளரத்தில் கையூன்றியபடி சில நிமிடங்கள் நின்றபோது, மெல்ல வீசிய காற்றில் அசதி சற்று மறைந்த மாதிரி தோன்றியது.

கண்களை நன்கு திறந்து நோக்கினார். 'அவுட் பேஷண்ட், வார்டில் சந்தடிகள் மேல் ஸ்தாயியை எட்டியிருந்தன. நிழல்கள் இன்னும் நீண்டு சாய்ந்திருந்த போதிலும் வெய்யிலின் உக்கிரம் ஏறிக் கொண்டிருந்தது.

அறைக்குள் பளீரெனப் பிரகாசம் அடித்து மறைந்தது. டாக்டர் சம்பத் ஊகித்துக்கொண்டார், நர்ஸ் மரகதத்தின் வெள்ளை யூனிபாரத்தின் பிரதிபலிப்புதான் அது என்பதை. சனிக்கிழமை, டாக்டருக்கு ஆபரேஷன் தினம். அன்றைய கேஸ்கள் எத்தனை என்பதை நினைவூட்டுவது மரகதத்தின் பொறுப்பு.

நெஞ்சுக்கு நேரே ஸ்கர்ட்டின் நடுவில் செருகிக் கொண்டிருந்த பேனாவை எடுத்து டயரியைப் பிரித்துக் கொண்டாள் மரகதம்.

''ஸாரி மரகதம். நீ கேட்ட தைலம் இன்றைக்கும் மறந்துவிட்டேன்,'' என்றார் டாக்டர் சம்பத்.

''நீங்கள் ஒன்று, டாக்டர்,'' என்று சிரித்தபடி தலையைத் தடவிக் கொண்டாள் நர்ஸ் மரகதம். அவள் வயது முப்பத்தைந்துக்கு அந்தண்டைப் பக்கம் போய் விட்டதால் கேசத்தில் இரண்டொன்று கருமை இழக்கத் தொடங்கியிருந்தன. டாக்டர் சம்பத் ஒருநாள் அதைக் கவனித்து, தனக்குத் தெரிந்த ஒரு தைலத்தைப் பற்றி பிரஸ்தாபித்து விடவே, குழந்தை மாதிரி அதைப் பிடித்துக் கொண்டு விட்டாள் மரகதம்.

ஆனால் இன்றைக்கு நர்ஸ் மரகதத்தின் நினைவு அதில் இல்லை. இன்றைய ஆபரேஷன்கள் மூன்றிலுள் இரண்டு சற்றுக் கடினமானவை. பகல் ஒரு மணிக்குள் எல்லாமே முடியுமா, முடிந்தாலும் வெற்றிகரமாக முடியுமா என்ற கவலை டாக்டரைக் காட்டிலும் அவளுக்கே அதிகமிருந்தது.

சம்பத், ஆபரேஷனைப் பற்றிச் சொல்ல வேண்டிய தகவல்களைச் சொல்லிவிட்டு, ''மரகதம், இன்றைக்கு என் யூனிட்டில் யாரும் வராதிருக்கக்கூடாது. முக்கியமான ஆபரேஷன்கள். ஆகவே கட்டாயம் நேரில் கவனிப்பதற்கு வரவேண்டும் அவர்கள்,'' என்றார்.

''எல்லோரிடமும் சொல்லி விடுகிறேன்,'' என்று கூறி விட்டுப் புறப்பட்டாள் நர்ஸ்.

''சொன்னால் போதாது. அவர்கள் வரவேண்டியது உன் பொறுப்பு.''

மரகதம் கதவினருகே தயங்கி நின்றாள்.

''என்ன?''

''ஒன்றுமில்லை.''

''சொல்.''



''எல்லோரும் வந்து விடுவார்கள். வந்து... சத்யாவைப் பற்றித்தான் சந்தேகம்.''

''ஏன், அவள் வந்துகொண்டுதானே இருக்கிறாள்?''

''வருகிறாள்...... ஆனால் அதிக நேரம் தங்குவதாய்த் தெரியவில்லை. இரண்டு மூன்று ராத்திரி இருக்க வேண்டியவள், இருக்காமலே போய்விட்டாளாம்.''

''இதை என்னிடம் நீ முன்னாடியே ரிப்போர்ட் பண்ணியிருக்க வேண்டாமா?'' என்றார் டாக்டர் சம்பத். ''இப்போது எங்கே இருக்கிறாள்?''

''கிருஷ்ணய்யா வார்டுக்கு வெளியே பார்த்தேன்.''

''நீ தியேட்டருக்குப் போய் மற்ற ஏற்பாடுகளைக் கவனி,'' என்று கூறிவிட்டு வேகமாக வெளியேறும் டாக்டரை நர்ஸ் மரகதம் பயத்துடன் நோக்கினாள். ராயலசீமைக்கு 'மெடிகல் டீம்' போன காலம் முதல் அவருக்கும் சத்யாவுக்கும் ஒத்துக்கொள்ளவில்லை என்பது பகிரங்கமான விஷயம்.

கிருஷ்ணய்யா வார்டை நோக்கி நடந்தார் டாக்டர். தொண்டை ஆபரேஷன் செய்யப்பட்டோருக்காக ஏற்பட்ட வார்டு அது. வெளியே உள்ள மரப்பெஞ்சில் ஒருக்களித்தாற் போல் உட்கார்ந்து கொண்டு, ஸ்டெதாஸ்கோப்பின் முனையினால் பெஞ்சின் மீது கீறிக் கொண்டிருந்த சத்யாவைத் தூரத்திலிருந்தே கண்டார் அவர்.

வார்டை நெருங்கிய போது, ஒரு மெலிந்த குரல் அவர் செவியில் விழுந்தது.

மிக ஈனமான சுரத்தில், ''நர்ஸ், நர்ஸ்,'' என்று பரிதாபமாக அழைத்துக் கொண்டிருந்தார் உள்ளே ஒரு நோயாளி. கழுத்தின் மத்தியில் ஓட்டை போட்டு, அதன் வழியே சுவாசம் விடும்படி செய்திருந்தார்கள். சளி அடைத்துக் கொள்ளும் போது, அந்தத் துவாரத்தில்

சுத்தம் செய்வதற்கான ஒரு கருவியும் படுக்கைக்குப் பக்கத்திலேயே இருந்தது. துரதிருஷ்டவசமாக, அவர் கூப்பிட்டபோது நர்ஸை அருகில் காணவில்லை.

டாக்டர் சம்பத் அந்த நோயாளியையும், அவர் குரலைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் உட்கார்ந்திருக்கும் சத்யாவையும் ஒரு வினாடி மாறிமாறிப் பார்த்தார். அடுத்த வினாடி விரைந்து சென்று, அந்த நோயாளியின் நெஞ்சுக் குழியை சுத்தப்படுத்தி, வேதனையைக் குறைத்து, மெல்லப் படுக்க வைத்தார்.

வெளியே நின்றிருந்த சத்யாவுக்குச் சுருக்கென்று தைத்தது போலும். தயக்கத்துடன் டாக்டரை அணுகி வந்து நின்றாள்.

''கொஞ்சம் தலைவலி... அதனால் இன்று ஆபரேஷன் தியேட்டருக்கு வரவில்லை...'' என்றாள் தானாகவே.

''அடடே! அப்படியா? வீட்டில் போய்ப் படுத்துக் கொள், சத்யா. உடம்பைக் கண்டபடி அலட்டிக் கொள்ளலாமா?''

டாக்டர் சம்பத்தின் காலடியோசை வார்டின் மறு கோடிக்குச் சென்று, படிக்கட்டுகளில் இறங்கி விட்டது.

சத்யா வெராந்தாவில் நின்றிருந்தாள், அவர் போன திசையையே பார்த்தபடி.

இந்தண்டைக் கோடியிலிருந்து வேறு யாரோ வரும் சப்தம் கேட்டது.

''எம். எஸ். வந்தாரா இங்கே?''

வந்தவர்கள் இரண்டு டாக்டர்கள் என்று தெரிந்ததும் சத்யா எழுந்து கொண்டாள். ''இப்போதுதான் ஆபரேஷன் தியேட்டருக்குப் போனார்.''

''டாக்டர் சம்பத்தைக் கேட்கிறேன்,'' என்றார் அவர் திகைப்புடன்.

''அவரைத்தான் சொல்கிறேன், டாக்டர்.''



''ஹூம்! சுத்தப் பிடிவாதக்காரர்!'' என்று முணுமுணுத்துவிட்டு அவர் நகர்ந்தார். ஆனால் நன் சகாவிடம், ''நேற்று சரியான டெம்பரேச்சர். ஹண்ட்ரண்ட் டூ. நான் தான் மிக்ஸ்சரும் டேப்லட்டும் கொடுத்தேன். 'இன்றைக்கு ரெஸ்ட் எடுத்துக்கொள்ளுங்கள் வீட்டிலேயே' என்று சொன்னேன். கேட்காமல் வந்துவிட்டு ஆபரேஷன் வேறே பண்ணப் போயிருக்கிறார் பாருங்கள்,'' என்று அவர் சொல்லிக்கொண்டே சென்றது சத்யாவுக்குத் தெளிவாய்க் கேட்டது.

சத்யா மீண்டும் பெஞ்சில் உட்கார்ந்தாள். இரண்டு நிமிடங்கள்தான், எழுந்து விரைந்தாள் உடனே.

அவள் உள்ளே நுழைவதற்கும் ஆபரேஷன் தியேட்டரின் கதவுகள் சாத்திக் கொள்வதற்கும் சரியாயிருந்தது. டாக்டர் சம்பத்தின் முகத்தைத் திரை மூடியிருந்தாலும் அவர் கண்களில் மகிழ்ச்சியைக் கண்டாள் சத்யா.

அன்று மாலை சாரங்கபாணியின் வீட்டுக்குத் திரும்ப வில்லை மணி. நேரமாகிவிட்டதால் அப்படியே தன் ஜாகைக்குப் போய்விட்டான்.

ஆகவே மறுநாள் காலைதான் மீனலோசனி அவனைக் கண்டாள்.

''கடுதாசி போட்டாயாப்பா?'' என்று கேட்டாள்.

''ஜெகாவுக்குத்தானே? போடாமலிருப்பேனாம்மா? உடனே போட்டுவிட்டேன். பதில் வரட்டும், தெரிவிக்கிறேன்,'' என்றான் மணி.

## முப்பத்தொன்பது

மூட்டையாய்க் கட்டிப் போட்டிருந்தார்களோ வானத்தை? யாராவது இப்போது பிரித்து உதறினார்களோ? பலபலவென்று உதிர்ந்து கொண்டிருக்கும் காலைப்

பொழுதைப் பார்க்கையில் அப்படித்தான் நினைக்கத் தோன்றியது.

பவானி மடத்தின் தோட்டத்தில் பூப்பறித்துக் கொண்டிருந்தார் சின்னச் சாமியார். ஈர வேட்டியைக் களைந்து உலர்ந்த வேட்டி அணியவில்லை அவர். விடிகாலை நேரமானாலும், காற்றில் குளிர்ச்சி காணோம். வெம்மையுடன் தொடங்கிய வேளைக்கு, அரையில் ஈரத் துணியுடன் இருப்பது இதமாயிருந்தது.

சுவாமி ராதானந்தர் பூஜை அறையில் காத்திருப்பார் என்று அவருக்கு நினைவு வந்தது. ஆனால் அவருக்காக விசேட அவசரம் காட்ட இயலவில்லை. "வரவரப் புஷ்பச் செடிகள்கூட மலடாகி வருகின்றன," என்று முணுமுணுத்துக் கொண்டார். ஆடுமாடு தொல்லை வேறே. வாசல் புறத்துக் கேட்டைப் பலப்படுத்த வேண்டும். காவல்காரனையும் எச்சரிக்க வேண்டும். இதற்கெல்லாம் ராதானந்த சுவாமிகளிடம் முன்னனுமதி பெற வேண்டும். அவரோ, வரவர வெளி அலுவல்களில் அக்கறை குறைந்து தனக்குள் தானே அமுங்கிக் கொள்வது அதிகமாகிவிட்டது. அல்லது உள்ளூர ஏதேனும் கவலையா? என்ன கவலை இருக்க முடியும் ஒரு முற்றும் துறந்த மனிதருக்கு?

"கும்பிடறேன் சாமியாரே!"

திரும்பிப் பார்த்தார் சின்னச் சாமியார். அவர் முகம் மலர்ந்தது.

"ஹரி என்ன பண்ணுகிறான்?" என்று ஆர்வத்துடன் விசாரித்தார்.

அவரெதிரில் நின்று கொண்டிருந்தவன், முன்பு மடத்தில் தோட்டக்காரனாயிருந்த துரைசாமிதான். அப்துலைத் தன்னுடன் வைத்துக் கொண்டு வளர்ப்பதில் பலவகை இடைஞ்சல்கள் இருந்ததால், துரைசாமியிடமும் அவன் மனைவியிடமும் அந்தச் சிறுவனை ஒப்படைத்திருந்தார் சின்னச் சாமியார். அவர்களுடைய குடிசைக்கருகே



ஒரு பள்ளிக்கூடம் இருந்ததால், அப்துலின் படிப்பும் தடங்கலில்லாமல் வளர்ந்தது. மடத்தின் அபிமானிகளில் ஒருவரான வங்காளிக்காரர் புத்தகங்களுக்கும் துணிமணிக்கும் சாப்பாட்டுக்கும் உதவி வந்தார்.

மாதத்தில் இரண்டுமுறை அப்துலே துரைசாமியுடன் வருவான். ஒருமுறை சின்னச் சாமியார் தாமே அவனைப் பார்க்கச் செல்வார்.

ராதானந்தர் ராயவசீமைக்குப் புறப்பட்டதிலிருந்து, சின்னச் சாமியாரின் பொறுப்புக்கள் அதிகமாயிருந்தன. அவர் திரும்பி வந்தபிறகும் ஒன்றுவிட்டு ஒன்று அலுவல் வந்து கொண்டேயிருந்தது. அதிலும் கொஞ்ச நாட்களாக, ஆயுர்வேத ஆஸ்பத்திரி விஷயமாகச் சின்னச் சாமியாருக்குப் பல அலைச்சல். எப்பாடு பட்டேனும் அதை மடமே நடத்துவது என்று ராதானந்தர் தீர்மானித்திருந்தார். அந்தத் தலைவலிக்கு முழுக்குப் போட்டுவிடலாம் என்பது சின்னச்சாமியாரின் சொந்த அபிப்பிராயமாக இருந்த போதிலும், கட்டுப்பாட்டுக்கு உட்படப் பழக்கப்பட்டவராகையால் எதிர்த்துப் பேசவில்லை. ஆனால் ராதானந்த சுவாமிகள் ஆஸ்பத்திரியை விடுவதில்லை என்று தீர்மானித்துவிட்டாரே தவிர, சர்க்காரிடம் ஒப்படைக்க வாக்களித்தபின் அதை வாபஸ் பெறுவதற்கும் பல சடங்குகள் உண்டு என்பதை அறியாதவராகவும், அறிந்தாலும் செய்யாதவராகவும் இருந்துவிட்டார். ஆகவே அந்தத் தொல்லையையும் தன் மீதே இழுத்துப் போட்டுக்கொண்டு, அது சம்பந்தமாக அதிகாரிகளைப் பார்ப்பதும் போவதுமாக இருபத்து நாலு மணி நேரம் போதாமல் தவித்துக் கொண்டிருந்தார் சின்னச் சாமியார்.

இந்தக் காரணங்களினால் அவர் அப்துலைப் பார்த்துக் கிட்டத்தட்ட இரண்டு மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டது என்று சொல்லலாம். 'ஹரி சௌக்கியமாயிருக்கிறானா?' என்று அவர் கேட்டபோது அந்தக் கேள்வியில்

அன்பும் ஆதங்கமும் கவலையும் பரிவும் கலந்து பெருகிய தில் வியப்பில்லை.

துரைசாமி உடனே பதில் சொல்லாமல் தலையைச் சொறிந்துகொண்டு நின்றான். தோளில் போட்டிருந்த சிவப்பு— கறுப்புக் கரை போட்ட சிறிய துண்டின் நுனி களை முறுக்கியபடியே, "இருக்கிறானுங்க" என்று இழுத் தாற் போலவே சொன்னான்.

சின்னச் சாமியார் பூக்குடலையைச் சிமெட்டிப் பெஞ்சின் மீது வைத்தார் "ஒளிக்காமல் பேசு, துரைசாமி! ஹரிக்கு உடம்பு சுகமில்லையா?"

"அது நல்லாத்தாங்க இருக்குது, சாமியாரே," என்றான் துரைசாமி. "அந்தக் கல்கத்தா ஐயாதானுங்க படுத்தபடுக்கையாய்க் கிடக்கிறாரு ரெண்டு மாசமா."

"சட்டர்ஜியா!" சின்னச் சாமியார் தமது மதியீனத் தைத் தாமே நொந்துகொண்டார். யாரோ, எப்போதோ அவருக்கு உடல் நலமில்லை என்று பேசிக் கொண்டது நினைவு வந்தது. மாதத்துக்கு ஒரு முறையாவது மடத் துக்கு வருபவர், கொஞ்ச நாளாக வரலேயில்லை என்பதும் ஞாபகத்தில் எழுந்தது.

"இன்றைக்குச் சாயந்தரமே நான் போய்ப் பார்த்து விட்டு வருகிறேன் சட்டர்ஜியை," என்று தெரிவித்தார் சின்னச் சாமியார். "அதைச் சொல்லத்தானே வந்தாய்?"

"ஆமாங்க," என்றான் துரைசாமி. ஆனால் அவன் அதைச் சொன்ன தோரணை, 'இல்லீங்க' என்ற மாதிரி இருந்தது. "வேறே என்ன?" என்று சின்னச் சாமியார் மேலும் கேட்டார்.

"சீக்கா படுத்திட்டிருந்தாலும், போன மாசம் வழக்கப் போல இருபது ரூவா அனுப்பிட்டாருங்க. இந்த மாசம் தான் பணம் வரலை. வீட்டாண்டை போய்ப் பார்த்தேன். ஒரே கலாட்டாவாயிருந்தது. ஏகப்பட்ட சனங்க. ஆனா என்னா சமாசாரம்னு ஒருத்தர்கூடக் கேட்கக் காணோம்..."



"வேண்டாம், வேண்டாம். சட்டர்ஜி அவ்வளவு உடம்பாய்ப் படுத்திருக்கிற போது நீ போய்த் தொந்தரவு பண்ணாதே."

"அதாங்க திரும்பிட்டேன். ஆனால் செலவுக்கு இனி மேல் கொண்டு......"

"நான் ஏதாவது வழி பண்ணுகிறேன்."

"நான் விசாரிச்சேனுங்க." மடியிலிருந்து ஒரு பழுப்புக் காகிதத்தை எடுத்துச் சின்னச் சாமியாரிடம் நீட்டினான் துரைசாமி. "ஒரு சேட்டுக் கம்பெனியிலே இந்த மாதிரிப் புள்ளைங்களுக்கு எல்லா உதவியும் பண்றாங்களாம். இதைப் பூர்த்தி பண்ணி ஒரு பெரிய கவர்மெண்ட் ஆபீசரண்டை சிபாரிசுக் கடிதமும் வாங்கிட்டு வந்து கொடுக்கணுமாம்."

"பலே, இவ்வளவு அக்கறை எடுத்துக் கொண்டு செய் திருக்கிறாயே! சரி, நீ போ. நான் சாயந்தரத்துக்குள் இந்த விஷயங்களைக் கவனிக்கிறேன்," என்று கூறித் துரைசாமியை அனுப்பினார் சின்னச் சாமியார்.

பின்னர் தான், தமது கடமையில் மிகவும் நேரம் தவறி விட்டதை உணர்ந்தார் போலும். அவசர அவசரமாகப் பூக்களைப் பறித்துக் குடலையில் கொட்டிக் கொண்டு வேகமாக உள்ளே நடந்தார்.

பூஜை மண்டபத்தின் தெய்வ சன்னிதியில் உட்கார்ந் திருக்கவில்லை ராதானந்தர். சின்னச் சாமியாரின் வருகையை எதிர்நோக்கி வாசலிலேயே காத்திருந்தார். அங்கிருந்தபடி பார்த்தால் தோட்டத்தில் எது நடந்தாலும் காணமுடியும். ஆகவே, பூஜை நேரத்தில் வீண் பேச்சுப் பேசியபடி தான் நேரம் கடத்திவிட்டதையும் அவர் அறிந் திருப்பார் என்று சின்னச் சாமியாருக்குத் தெளிவாகப் பட்டது.

ஆனால் ராதானந்தர் எதுவும் கேட்கவில்லை. பூக் கூடலையை வாங்கிக் கொண்டு நேரே சென்று விட்டார். ஆசனப் பலகைகள் போடுவது, விளக்குகள் ஏற்றுவது, தூபம் போடுவது முதலான தமது வாடிக்கையான பணிவிடைகளைக்கூட இன்று ராதானந்தரே செய்து விட்டதைச் சின்னச் சாமியார் கவனித்தார். வேண்டு மென்றே தம்மைத் தண்டிப்பதற்காக ராதானந்தர் செய் திருக்கிறார் என்று எண்ணியபோது அவருக்கு ரோஷமா யும் கோபமாயும் வந்தது. 'ஒரு சிறு குழந்தையின் நலனுக் காகச் சில நிமிடங்கள் பேசிக்கொண்டிருந்தேன். அது ஒரு தப்பா?' என்று மனத்துக்குள் பொருமியவாறு மௌன மாகவே பூஜையில் கலந்து கொண்டார்.

காலை நேரமானாலும் வழக்கமாக வரும் சிறு கூட்டம் அன்றும் கூடியிருந்தது. பழைய மாம்பலத்திலிருந்து வந்திருந்த மூதாட்டியொருவர், தளர்ந்த குரலில் பல பாசுரங்கள் பாடினார். சிறுகச் சிறுக பூஜை முடிந்தது.

ஒவ்வொருவராக ராதானந்தரிடம் மலர்கள் பெற்றுக் கண்ணில் ஒற்றியபடி செல்லலாயினர். சின்னச் சாமியார் தமது முறை வந்தபோது கையைப் பிரித்து ஏந்தினார்.

''அந்தக் காகிதத்தை அந்தண்டை வையுங்களேன்,'' என்றார் ராதானந்தர்.

திடுக்கிட்டு நோக்கினார் சின்னச் சாமியார். பிறகு தான், துரைசாமி கொணர்ந்து தந்த பழுப்புக் காகிதம் தன் கையிலேயே இருப்பது தெரிந்தது. அவருக்கே வெட்கம் ஏற்பட்டு விட்டதை அறியாமல் அருகிலிருந்த சிலர் மெல்லச் சிரித்துக்கொண்டே சென்றார்கள்.

வினாடி நேரம் அந்த அவமானத்தினால் புழுங்கினா ரெனினும், எல்லோரும் அகன்ற பின்னர் அந்தக் காகிதத் தைப் பிரித்துக் காட்டச் சின்னச் சாமியார் தவறவில்லை.

கையில் வாங்காமலே அதைப் பார்த்தார் ராதானந்தர். ''என்ன அது, அப்துல் விவகாரமா?''



''ஆமாம். ஹரிக்காக ஓர் ஏற்பாடு.''

''என்ன செய்ய வேண்டும்?''

''கவர்மெண்ட் உத்தியோகஸ்தர் கையெழுத்துப் போடணுமாம். மடத்துக்குத் தெரிந்த யாரிடமாவது தாங்கள் சொன்னால் நன்றாயிருக்கும்.''

''பல சமயங்களில் பரிகாசமாகச் சொல்லிவிட்டேன். இப்போது கண்டித்துச் சொல்ல வேண்டியிருக்கிறது.'' தமது அறையை நோக்கி நடந்தவாறே பேசினார் ராதானந்தர். ''அன்பு இருக்க வேண்டியதுதான். அது பாசமாகவும் பந்தமாகவும் வளர்ந்து விட இடம் கொடுக்கக் கூடாது.''

''நான் கொடுக்கவில்லை,'' என்று சின்னச் சாமியார் பதிலளித்தார்.

''கொடுத்தோம், கொடுக்கவில்லை என்பது தங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று ராதானந்தர் திருப்பிக் கேட்டார். ''எதுவானாலும் நான் தங்களுக்கு உடந்தையாகவோ உதவியாகவோ இருக்க விரும்ப வில்லை. மன்னிக்க வேண்டும்.''

அறைக்குள் அவர் நுழைந்துவிட்டார். சின்னச் சாமியார் பின்தொடரவில்லை. அறை வாயிலில் நின்ற படியே ''ஹரிக்காக நானாகவே ஏதாவது ஓர் ஆபீசரிடம் போகலாமல்லவா? அதில் ஆட்சேபமில்லையே தங்களுக்கு?'' என்று வினவினார்.

''தங்கள் இஷ்டம்.''

புத்தக அலமாரியின் பக்கமாகத் திரும்பிக் கொண்டு விட்ட அவரைப் பார்த்தவண்ணம் சில நிமிடங்கள் நின்றிருந்தார் சின்னச் சாமியார். பிறகு ஒரு முடிவுக்கு வந்தவராக அவ்விடத்தை விட்டு அகன்று, யோசனை செய்தவாறே வாசலுக்கு வந்தார்.

ஆஸ்பத்திரி விவகாரத்தினால் சந்திக்க நேர்ந்த ஒரு பெரிய அதிகாரியைப் பற்றி நினைவு வந்தது. வெய்யில் ஏறாத வேளையில் மயிலாப்பூர் கச்சேரி ரோடு வழியே நடந்து கொண்டிருந்தபோது, அவரை அனுகூலாம் என்றுதான் எண்ணியிருந்தார். அப்புறம்தான் ஒரு கசப்பு நெஞ்சில் கரித்தது. அந்த ஆபீசரைக் கடைசி முறையாகப் பார்த்த போது, வேறு ஏதோவொரு அலுப்பினாலோ என்னவோ அவர், "சாமியார்கள் வேதாந்த விஷயங்களில் ஈடுபடாமல் ஏன் இந்த மாதிரி உலக விவகாரங்களில் இறங்குகிறீர்கள்? உங்களுக்கு இதுவும் வராது, அதுவும் தெரியாது," என்று சொல்லியிருந்தார். அவரிடம் போய் எப்படிச் சிபாரிசு கேட்பது?

லஸ் முனையில் நின்றபடி யோசனையிலாழ்ந்தார் சின்னச் சாமியார். போக்குவரத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்த போலீஸ்காரரின்மீது பார்வை பாய்ந்தது.

சட்டென அவர் முகத்தில் மலர்ச்சியும் மனத்தில் தெளிவும் பிறந்தன.

விறுவிறுவென்று நடக்கலானார்

"என்டாப்பா மணி, டெல்லியிலிருந்து பதில் ஏதாவது வந்ததோ?" என்று விசாரித்தாள் மீனலோசனி.

ப்யூஸ் போய்விட்ட பல்பைக் கழற்றிக் கொண்டிருந்தான் மணி. குரலைக் கேட்டதும் முக்காலியை விட்டிறங்கி வெளியே வந்து, "இல்லையேம்மா. தகவல் கிடைத்தால் சொல்லமாட்டேனா?" என்றான்.

"மறந்து விட்டாயோ என்று பார்த்தேன். ஆனால், என்னவோ அந்த ஆஞ்சநேயர் கிருபையிலே இவளும் கொஞ்ச நாளாய் மாறியிருக்கிற மாதிரி இருக்கிறாள். நீ கவனித்தாயோ மணி?"

"சத்யாவையா சொல்கிறீர்கள்?"



"ஆமாம். வேறே ஒன்றும் இல்லாவிட்டாலும் வேளா வேளைக்குச் சாப்பிடுகிறாள். வாயைத் திறந்து இரண்டு வார்த்தை பேசுகிறாள். ஆஸ்பத்திரிக்கும் கூடப் போய் வருகிறாள் இல்லையோ? என்ன சொல்கிறாய்?"

"ஆமாம்மா. எனக்குக்கூட அப்படித்தான் தோன்றிற்று."

"எதற்கும் நீ விசாரிக்கிறதை விசாரி, விட்டு விடாதே." என்று சொல்லிவிட்டு, பிளாஸ்டிக் பையுடன் வெளியே புறப்பட்டாள் மீனலோசனி. அவள் காய்கறி வாங்கச் செல்கிற நேரம்.

ப்யூஸ் போன பல்பை எறிந்துவிட்டு டைப்ரைட்டரின் முன் உட்கார்ந்து கொண்டான் மணி.

ஜெகாவிடம் தகவல் சேகரித்த நாள்தொட்டு, மனத்துக்குள் வைத்துப் பொருமிக் கொண்டிருந்த குமைச்சலோடு, இப்போது மீனலோசனியம்மாள் தெரிவித்து விட்டுச் சென்ற விஷயத்தினால் எரிச்சலும் சேர்ந்து கொண்டது.

சத்யா மனம் மாறி வருகிறாளாம்! பேசுகிறாளாம், சாப்பிடுகிறாளாம், ஆஸ்பத்திரிக்குப் போகிறாளாம்! எதனால்? அந்தப் பண்டாரமும் அவளும் தனியே சந்தித்திருப்பார்களோ? 'என் கொலைகாரத்தனத்தை வெளியே சொல்லாதே. நான் சீக்கிரத்தில் கிரகஸ்தாசிரமத்துக்குத் திருப்பி உன்னைக் கைப் பிடிக்கிறேன்' என்று அவன் பேரம் பேசி முடித்திருப்பானோ?......

ஆத்திரத்துடன் டைப் செய்யத் தொடங்கினான், சில கடிதங்களை.

திடீரென்று ஒரு நாற்றம் அவன் நாசியைத் துளைத்தது.

மொசைக் தரையைத் தண்ணீர் விட்டுக் கழுவும் நாற்றம்தான். வேலைக்காரி பக்கெட்டும் குச்சியுமாக

நின்றிருந்தவள், ''கொஞ்சம் எழுந்துக்கிறீங்களா ஐயா?'' என்று கேட்டாள்.

''அதற்கு இளிப்பு என்ன?'' என்று எரிந்து விழுந்தவாறு எழுந்து கொண்ட மணி, வேலைக்காரி ஏதோ காகிதத்தைப் பொறுக்கி எடுத்துக் கொள்வதைக் கண்டு, ''என்ன அது?'' என்று அதட்டினான்.

''வெறும் காகிதங்க.''

''நிஜத்தைச் சொல்லு.''

''டிராமா டிக்கெட்டுங்க...... கீழே கிடந்திச்சு. இதுக்கு நான் போறேனுங்க......''

''அடச் சீ! இப்படிக் கொடு,'' என்று அதைப் பறித்துப் பாண்ட் பையில் போட்டுக் கொண்டான். கழுவிய நாற்றம் அடங்குவதற்குப் பல நிமிடங்கள் பிடிக்கும் என்று தோன்றியது. வெளிப் பக்கத்து அறைக்குத் தட்டெழுத்து யந்திரத்தை எடுத்துச் சென்று வேலையைத் தொடர்ந்தான்.

''உதவிக் கமிஷனர் இருக்கிறாரா?''

நினைவுகளிலிருந்து விடுபட்டு நிமிர்ந்து பார்த்தான் மணி ஆச்சரியமும் மகிழ்ச்சியும் ஏற்பட்டன ஒரே சமயத்தில்.

''அடடா! சின்னச் சாமியார் அவர்களா! வாருங்கள். சொல்லியனுப்பியிருந்தால் நானே வந்திருப்பேனே'' என்று உபசரித்து, நாற்காலியை இழுத்துப் போட்டு, மேஜை விசிறியை அவர் பக்கமாய்த் திருப்பினான்.

''பரவாயில்லை,'' என்றபடி உள்ளே வந்து அமர்ந்த சின்னச் சாமியார், ஒரு பழுப்புக் காகிதத்தை மணியிடம் நீட்டி, அப்துலைப் பற்றிச் சொன்னார்.

''அந்தப் பையனா? நினைவிருக்கிறது. சத்யாவே அவன் செலவுக்குத் தந்திருப்பார்களே?''

''அப்போது தருகிறேன் என்றார்கள். வேண்டாமென்று, நானே ஏற்றுக் கொண்டேன். மடத்தில் வைத்துக் கொள்ள வசதியில்லை. பெரியவருக்கும் விருப்பமில்லை.''



''ராதானந்த சுவாமிகள் தடுக்கிறார்களா?''

''நியாயமானதைத்தான் சொல்கிறாரென்று வைத்துக் கொள்ளுங்கள்.''

''ஆமாம். எந்த நிமிஷத்திலும் அவர் தலைக்கே கத்தி வரக்கூடிய நிலைமையில் இருக்கிறார், பாவம். இன்னொருவருக்கு ஆதரவு கொடுக்க எப்படி முடியும்? கஷ்டம்தான்,'' என்றான் மணி.

சின்னச் சாமியாரின் முகம் வெளுத்தது. ''நீங்கள்...... நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்று தடுமாறினார்.

## நாற்பது

''ஸ்கூட்டரை ரொம்ப அழகாய்த் துடைத்து வைத்திருக்கிறாயே, வீரப்பா.''

மணியின் குரல் இரைந்ததாக இருந்தால் சமையற்கார வீரப்பன் பயப்படமாட்டான். சும்மா போலி மிரட்டல் என்று தெரியும். ஆனால் அடிவயிற்றிலிருந்து நிதானமாயும் கனமாயும் வந்தால், கழுத்துக்கு மேலே சுருக்குக் கயிறு தொங்குவது கண்ணுக்குப் பிரத்தியட்சமாய்த் தெரியும்.

கால்கள் வெடவெடக்க வீரப்பன் நின்று கொண்டிருந்தான்.

''பிரமாதமாய்த் துடைத்திருக்கிறாய் என்றேன். காதிலே விழவில்லையா, வீரப்பா?''

வெராந்தாவில் நிறுத்தப்பட்டிருந்த ஸ்கூட்டரைப் பார்த்தான் வீரப்பன், பரிதாபமாக. எஜமானரைப் பார்த்தான் நடுக்கத்துடன். எங்கே என்ன தப்புப் பண்ணியிருக்கிறோம் என்று புரியவில்லை. வாகனம் என்னவோ பளபளப்பாய்த்தான் இருந்தது. ஆயில் போட வேண்டிய இடங்களில் ஒன்றுகூட மறக்கவுமில்லை.

அவனுடைய திகிலை அதிகரிக்கும் வண்ணம் மணியின் கேள்வி திடீரென்று வேறு விஷயத்துக்குத் தாவியது.

''புதிசாய் டெரிலின் சட்டை வாங்கிக் கொண்டாய் போலிருக்கே நேற்று?''

''ஆமாங்க... சும்மா சீப் ரகம்... ரெடிமேடு...''

''எதானாலும் இருபது ரூபாய்க்குக் குறைச்சலிராதே?''

''இருபத்திரண்டு ரூபாயுங்க.''

''கொஞ்சம் கொண்டுவா, சொல்கிறேன்.''

கலவரத்துடன் வீரப்பன் அங்கேயே நின்றான்.

''கொண்டுவாப்பா...''

சற்றைக்கெல்லாம் நீல நிற ஸ்லாக் வந்தது. அதைச் சுருட்டிப் பந்தாக்கி, ஸ்கூட்டரின் கீழே எறிந்தான் மணி.

''கீழே நல்ல மொசைக் தரையில் ஆயில் சிந்தியிருக்கிறது, பார்த்தாயா? அதைத் துடைத்துவிட்டு ஸ்லாக்கை எடுத்துக்கொண்டு போ.''

''சார்!''

''நானேதான் துடைக்கணும் என்கிறாயா?'' மணி எழுந்து கொண்டான். ''நான் துடைத்தால், துடைத்த ஸ்லாக்கைத் தெருவில் எறிந்து விடுவேன். நீ துடைத்தால் திருப்பி எடுத்துக் கொண்டாவது போகலாம். எது தேவலை?''

கண்ணில் முட்டித் தளும்பும் நீருடன், புத்தம் புது டெரிலின் ஸ்லாக்கைக் கொண்டு கீழேயிருந்த எண்ணெய்க் கறையைத் துடைத்தான் வீரப்பன்.

''துடைப்பதற்கும் ஒற்றுவதற்கும் வித்தியாசம் தெரியாதா, வீரப்பா? நான் துடைத்துக் காட்டட்டுமா?''



வீரப்பன் அவசர அவசரமாக அழுத்தித் துடைத்து விட்டு, பாழாகிவிட்ட சட்டையை மார்போடு அணைத்துக்கொண்டு வெளியேறினான்.

மணி தனது பிரம்பு நாற்காலியில் திரும்ப உட்கார்ந்தான். இன்னொரு நாற்காலியின் முதுகின்மீது காலைத் தூக்கிப் போட்டுக் கொண்டு ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தான்.

வேலைக்காரனை வாட்டி வதைத்ததன் மூலம், கடந்த அரை மணி நேரமாகக் குமுறிக் கொண்டிருந்த ஆத்திரம் சற்று அடங்கிய மாதிரி இருந்தது அவனுக்கு.

கொஞ்சம் முன்னால்தான் சின்னச் சாமியார் வந்திருந்தார். ஒரு வாரம் முன்பு அவன் மிக நம்பிக்கையுடன், வெகு சாமர்த்தியமாகக் கொளுத்தி வைத்திருந்த வத்தி பிசுபிசுத்து விட்டதைத் தெரிவித்துவிட்டுப் போய் விட்டார்.

ராதா ஒரு கொலைகாரன் என்பதை எத்தனை அழகாக அன்றைக்கு எடுத்துரைத்தான்! எவ்வளவு அனுதாபத்துடன் பரிவு கலந்து கொட்டுகிற மாதிரி பேசி, முறுக்கேற்றி அனுப்பி வைத்தான் சின்னச் சாமியாரை! அவ்வளவும் வீணா?

''காதில் பட்டதைச் சொல்கிறேன். மனசில் வைத்து இருங்கள். மடத்துக்கு ஒரு கெட்ட பெயர் ஏற்படுத்துவதற்காக எவனாவது புரளி கட்டியிருந்தாலும் இருக்கும்,'' என்ற பீடிகையோடு ஜெகா மூலம் தான் கேள்விப் பட்டதைக் கொஞ்சம் கொஞ்சமாய் விவரித்தபோது—

சின்னச் சாமியாரின் பெரிய ஆகிருதி எப்படித் தடதடத்துவிட்டது! ''என்னால் நம்பவே முடியவில்லையே!'' என்று மனிதர் எத்தனை தரம் திரும்பத் திரும்பப் புலம்பினார்!

''என்னால் மட்டும் நம்ப முடிகிறதா, என்ன?'' கூடப் பாடினான் மணி. ''ராதானந்தருடைய தேஜஸ் என்ன,

கம்பீரம் என்ன— அவராவது, கொலைகாரராக இருப்பதாவது!''

''அப்படி ஏதாவது இருந்திருந்தால் டெல்லி சுவாமிகள் அவரை இங்கே நியமித்திருப்பாரா என்ன?'' என்று சின்னச் சாமியார் திகைத்தார்.

''அதனால்தான் எனக்குக்கூட ஒன்று தோன்றியது,'' என்று குரலைத் தாழ்த்திக் கொண்டான் மணி. தொலைவில் அந்த வேலைக்காரியின் தலை மறுபடி தெரிந்தது. ''ஏய்! நீ போ அப்பாலே!'' என்று அவளை விரட்டி விட்டுத் தொடர்ந்தான். ''எதற்கும் நீங்கள் டெல்லிக்கு நாசூக்காய்த் தெரிவித்து, எச்சரிக்கை பண்ணி வையுங்கள். உண்மையோ பொய்யோ, அவர்கள் ஏதாவது ஏற்பாடு பண்ணுவார்கள்.''

''அப்படித்தான் செய்ய வேண்டும்,'' என்று சின்னச் சாமியார் யோசனையுடன் தலையாட்டிக் கொண்டிருக்கையில் எங்கிருந்தோ மீனலோசனி முளைத்துவிட்டாள்.

''யார், சுவாமிகளா?'' என்று தடாலென்று விழுந்து நமஸ்காரம் பண்ணிவிட்டு எழுந்து கொண்டு, ''ஏனப்பா மணி, எனக்கு ஒரு வார்த்தை சொல்லியனுப்ப வேண்டாம்? பேசாமல் இருந்து விட்டாயே!'' என்று குறைப்பட்டாள்.

''நான் இப்பத்தான் வந்தேன்,'' என்றார் சின்னச் சாமியார். ''ஹரி விஷயமாக......''

''யாரது ஹரி?''

பிறகுதான் சின்னச் சாமியாருக்கு நினைவு வந்தது. தான் சூட்டிய பெயர் எல்லோருக்கும் தெரிந்திருக்க நியாயமில்லை என்பது. ''அப்துல் என்று ஒரு முஸ்லீம் பையன்... இங்கிருந்து அனுப்பி வைத்தீர்களே... அவனுக்குப் படிப்புச் சொல்லித் தர ஏற்பாடு பண்ணியிருந்தேன்...... அது சரிப்பட்டு வரவில்லை...... வேறே ஏதாவது செய்யலாமென்று......''



''நன்றாய்ப் போச்சு! நாங்களெல்லாம் வேறு எதற்கு இருக்கிறோம்? என்ன வேண்டும் சொல்லுங்கள், நான் தருகிறேன்,'' என்று மீனலோசனி உடனே கூறியதும் மணிக்குத் திக்கென்றது. சின்னச் சாமியார் மீது உள்ள ஒரே பிடிப்பையும் இவள் இப்படி அகற்றிவிட்டால் அப்புறம் என்ன ஆவது?

''நானே ஏற்பாடு பண்ணிவிட்டேனம்மா,'' என்று சட்டெனக் குறுக்கிட்டு, ''அதுதான் அடுத்த வாரம் வந்து பாருங்கள் என்றேனே?'' என்றான் சின்னச் சாமியாரிடம்.

அவர் குழப்பத்தில் ஆழ்ந்திருந்தபோதிலும் மணியின் சாடையைக் குறிப்பறிந்து கொண்டார். மீனலோசனி பால் பழம் கொண்டு வருவதாகச் சொன்னதைத் தடுத்து விட்டு உடனே புறப்பட்டு விட்டார்.

தன் திட்டம் பலித்துவிடும் என்ற நம்பிக்கையில் நிம்மதியாயிருந்தான் மணி.

போலீசுக்கு ராதானந்தரைப் பற்றித் தெரிவிப்பதைக் கடைசி பட்சமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பது அவன் திட்டம். ஆஷா என்கிற பெண்ணின் பிரேதமோ, அவளைக் காணோமென்ற புகாரோ இல்லாதபோது ராதானந்தர் மீது நடவடிக்கை எடுப்பது அவ்வளவு எளிதாயிராது. காஷ்மீர் ராஜ்யப் போலீசார்தான் அதையும் செய்யவேண்டும். அந்தப் படகுக்காரர்கள் இரண்டு பேரும் போலீஸ் என்றாலே நடுங்குகிறவர்கள் என்று தெரிகிறது. ஆகவே அவர்கள் சரியானபடி சாட்சி சொல்வார்கள் என்பது நிச்சயமில்லை.

இதெல்லாம் போக, ராதாவைச் சிக்க வைத்தது யார் என்பது தெரிந்துவிட்டால், அதற்கப்புறம், குடும்ப கௌரவத்தைக் குலைத்த தன்னிடம் சத்யாவுக்கும் சாரங்கபாணிக்கும் தீராத பகைமையும் வெறுப்பும்தான் ஏற்படும். சத்யாவை அடைய வேண்டும் என்ற நோக்கம் குட்டிச்சுவர்தான்.

இதையெல்லாம் யோசித்த மணி, போலீசுக்குப் போகாமலே ராதானந்தரை ஒழிக்க வேண்டுமென்று விரும்பினான். அதற்கேற்றாற்போல் சின்னச் சாமியார் வந்து சேரவே, பழம் நழுவிப் பாலில் விழுந்தது என்றே எண்ணினான். மடத்தின் தலைமைக்கு 'வத்தி' வைத்தால், அவர்கள் ராதாவை இறக்கி விடுவார்கள் பீடத்திலிருந்து. அவமானத்துக்குப் பயந்து, நல்லவேளை இத்தோடு விட்டார்களே என்ற சந்தோஷத்துடன் ராதானந்தர் எங்காவது கண்காணாத இடத்துக்கு ஓடித் தொலைவார்.

இவ்வளவு சவிஸ்தாரமாகக் கட்டியிருந்த மணியின் மனக் கோட்டையைத்தான் சற்று முன் வந்த சின்னச் சாமியார் தகர்த்துத் தரைமட்டமாக்கிவிட்டுப் போய் விட்டார். (சாரங்கபாணியின் பங்களாவில் தேடிவிட்டுப் பிறகு இங்கே மணியின் வீட்டுக்கே வந்தாராம்.)

டெல்லியிலுள்ள மடத்தின் தலைமைக்குக் கடிதம் போட்டிருந்தாராம். அங்கிருந்து வந்த பதிலைக் காட்டினார்.

''ராதானந்த சுவாமிகளின் பூர்வாசிரமம் பூராவும் எமக்குத் தெரியும். அவரை என்ன செய்யவேண்டும், எப்படிச் செய்ய வேண்டும் என்று தெரிந்து வைத்திருக்கிறோம். ஊர் வதந்திகளைப்பற்றிக் காதில் போட வேண்டாம். மடத்துக் காரியங்களில் அவருக்கு முழு ஒத்துழைப்பும் தரவும்.''

ஏமாற்றத்தால் முகம் வெளுக்கக் கடிதத்தைத் திருப்பித் தந்த மணி, ''இனி?'' என்றான்.

''மடத்தின் ஆணைகளுக்குக் கட்டுப்பட்ட தொண்டன் நான். அவர்கள் வாக்குத்தான் வேத வாக்கு. அதை ஒரு நாளும் மீறமாட்டேன்,'' என்றார் சின்னச் சாமியார் தீர்மானமாக.

''ஆகா! பேஷ்!'' என்றான் மணி எரிச்சலுடன். ''அப்புறம் எங்கே வந்தீர்கள்? உமது கட்டுப்பாட்டையும் டிசிப்ளினையும் பாராட்டி மெடல் வாங்கிக்கொண்டு போகலாமென்றா?''



''பாரம் வாங்கிக் கொண்டு போகலாமென்று வந்தேன்.''

''அது இன்னும் கையெழுத்தாகவில்லை. ஒரு மாசம் ஆகும். போய் வாரும்,'' என்று விரட்டாத குறையாக அவரைத் துரத்திவிட்டு, புகைந்து கொண்டிருந்த ஆத்திரத்தை அணைக்கத் தெரியாமல் அப்பாவி சமையற்காரனை மணி வதைத்துக் கொண்டிருந்த சமயத்தில்—

சைக்கிளில் ஓர் ஆள் வந்து இறங்கினான்.

சாரங்கபாணியின் வீட்டோடேயே 'டூட்டி' பார்க்கும் சேவகன்தான் அவன்.

''பவானி மடம் சின்னச் சாமியார் ஏதோ பாரம் கொடுத்தாருங்களாமே, அம்மா வாங்கியாரச் சொன்னாங்க,'' என்றான் வந்தவன்.

''சாமியார் அங்கே வந்திருக்கிறாரா?''

''காத்திட்டிருக்காங்க. யாரோ பையனுக்காக உதவி கேட்டாராமே? அதை அம்மாவே கொடுக்கப் போறாங்களாம் அந்த இஸ்கூல் பாரத்தை வாங்கிவரச் சொன்னாரு.''

அன்று கழற்றிப்போட்ட பாண்ட்டின் பையில் சின்னச் சாமியாரின் பாரத்தை வைத்திருந்தான். அந்தப் பாண்ட்டுடன் வாசலில் திரும்பிவந்து உட்கார்ந்து காகிதத்தை எடுத்துத் தந்தான். என்ன கெட்டிக்காரர் அந்தச் சாமியார்!

சைக்கிள் பியூன் போய்விட்டான்.

உதட்டைக் கடித்தபடி, மணி அந்தப் பழைய பாண்ட்டின் பையை நெருடிக் கொண்டிருந்தபோது இன்னொரு சீட்டும் தட்டுப்பட்டது.

அன்றைக்கு வேலைக்காரியிடமிருந்து பறித்து வைத்திருந்த டிராமா டிக்கெட்.

முதலில் அசிரத்தையாகப் பார்த்தான். பிறகு விழிகள் விரிந்தன.

நாடகம் அன்றைய மாலை நடக்கவிருக்கிறது என்பது மட்டுமல்ல, அவன் வியப்புக்குக் காரணம்.

நடத்துவது, ராணியின் குழு!

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் ராணியைப்பற்றியும், முன்னொரு காலத்தில் அவளுக்கும் ராதானந்தருக்கு மிருந்த தொடர்பைப்பற்றியும் நினைவுகள் எழுந்தன மணிக்கு.

சின்னச் சாமியாரை நம்பியதுதான் பிசுபிசுத்து விட்டது. இவளாவது புண்ணியப்படுகிறாளா, பார்ப் போமே...

"என்னய்யா இழவு இது? கண்ணாடியா, தகரப் பலகையா?" என்று முணுமுணுத்தாள் ராணி.

"ஏம்மா?"

"முகரக்கட்டை! கொஞ்சமாவது முகம் தெரிகிறதா பாரேன்."

மேக்கப்மேன் பிரான்சிஸுக்குக் கோபமும் ரோசமும் பொத்துக்கொண்டு வந்தன. "பெல்ஜியம் நிலைக் கண்ணாடி கொணாந்து மாட்ட, இதென்னம்மா, ராஜா அண்ணாமலை மன்றமா, ரசிக ரஞ்சனி சபாவா? ஏதோ இருப்பத்தஞ்சு ரூபா வாடகைக்கு இந்த ஹாலாச்சும் கிடைச்சிச்சேன்னு பாருங்க. இதிலே க்ரீன் ரூம்னு ஒண்ணு தட்டி போட்டுக் கட்டி வச்சிருக்கானே அதைச் சொல்லுங்க," என்றான்.

"அதை நீதான் மெச்சணும். கன்னம் பூராவும் சடை சடையாய் என்னவோ அப்பி வைத்திருக்கிறாயே, ஐயா?"



"அது ஒண்ணும் தெரியாதம்மா. ஸ்டேஜ் லைட் ரொம்ப மங்கல் இங்கே," என்று ஆறுதல் தெரிவித்துவிட்டு, மாடியிலிருந்து தெருவை எட்டிப் பார்த்தான் பிரான்சிஸ்.

கிழிசல் பக்கம் வெளித் தெரியாதபடி புடைவைகளை அணியவும், பளபளப்பான பகுதிகள் தெரியும்படி 'நகை'களைப் பூணவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்த ராணி, "என்ன, கீழே க்யூ ஏதாவது நிற்கிறதா?" என்று விசாரித்தாள்.

"ஊம். ஊம், நாலைஞ்சு பேர் நிற்கிறாங்க," என்றான் மேக்கப்மேன்.

"ஹூம்!" என்று பெருமூச்சுவிட்டாள் ராணி "இப்படியும் ஒரு காலம் வந்தது பார், எனக்கு."

தட்டிக் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள். இசைக்குழு என்ற பெயருடன், கண்ட கோமாளித் துணிகளைச் சட்டை தைத்து மாட்டிக் கொண்டிருந்த நாலைந்து பேரில் ஒருவன் முன்வந்து, "மானேஜர் எங்கேயம்மா இருப்பார்? அட்வான்ஸ் தருவதாகச் சொன்னார். தரவில்லை," என்று கேட்டான்.

"நாடகமே அரை மணியில் ஆரம்பமாகப் போகிறது. இனிமேல் என்ன அட்வான்ஸ்? மொத்தத் தொகையும் வாங்கிக்கொண்டு போங்கள்," என்று அவனைச் சமாளித்து விட்டு அந்தண்டை நகர்ந்தால், "என்ன, ராணியம்மா ரெடியாயிட்டாப் போல இருக்கு?" என்று, வாயில் சகிக்க முடியாத பீடியும் கோரமான இளிப்புமாகக் குசலம் விசாரித்தான் சுதா நாயக அமெச்சூர்.

தடதடவென்று மாடிப்படி சத்தமிட்டது. நாடகம் நடைபெறும் ஹால் அந்தப் பழைய கட்டிடத்தின் மாடிப் பகுதியில் இருந்ததால், கீழேயிருந்து ஏறிவர வளைவு வளைவான மாடிப்படிகள் உண்டு. மரத்தாலானவை ஆதலால் சாதாரணமாக வந்தாலே டொம் டொம்மென்று ஓசையிடும். ஓடிவந்தால் கேட்கவே வேண்டாம்.

கீழே, தெருப் பக்கத்து அறையில் டிக்கெட் விற்றுக் கொண்டிருந்த வாலிபன்தான் வந்தவன். ''இந்தாங்கம்மா, அந்தக் கங்காராம் சேட்டை என் ரூமிலேயிருந்து வெளியே போகச் சொன்னீங்கன்னா, டிக்கெட் இஷ்யூ பண்றேன். இல்லாட்டி, எனக்கு வேறே ஏதாச்சும் வேலை கொடுங்க, செய்யுறேன். அந்த ஆளோடே பெரிய பேஜாராய்ப் போச்சு! சே!'' என்றான்.

''அந்தப் பாவி எங்கே வந்து சேர்ந்தான்?'' என்று வாய்விட்டு ஆச்சரியம் அடைந்தவளாகக் கீழே இறங்கினாள் ராணி.

சரிகைக் குல்லாயையும் மஸ்லின் ஜிப்பாவையும் கழற்றி மடியில் வைத்துக்கொண்டு, புழுக்கம் தாளாமல் ஒரு பத்திரிகையால் விசிறிக்கொண்டு உட்கார்ந்திருந்தார் ஒரு சேட்.

''சேட்ஜி! நீங்கள் செய்வது கொஞ்சங்கூட நன்றா யில்லை. அவ்வளவுதான் சொல்வேன்,'' என்றாள் ராணி, கோபத்தை அடக்கிக்கொண்டு.

''ஏம்மா? ஏன்?'' என்றார் சேட். ''வசூலானதும் நம்ம வட்டிப் பாக்கியையாச்சும் எடுத்திட்டுப் போவலாம்னு குந்திட்டிருக்கிறேன். என்ன அதிலே?''

''என்னவா? வருகிறவர்கள் இந்த வேடிக்கையைப் பார்ப்பார்களா, நாடகத்தைப் பார்ப்பார்களா? எழுந்திரு. இடத்தைக் காலி பண்ணு முன்னாலே.''

''மிரட்றியே?''

''கையெடுத்துக் கும்பிடுகிறேன். சொல்கிறதைக் கேள், சேட். என் ராஜா இல்லை?'' அடுத்த அஸ்திரத்தைப் பயன்படுத்தப் பார்த்தாள் ராணி. அவர் மசியவில்லை.

''என் ராணி இல்லை, சும்மா போ, இது துட்டு சமாசாரம்,'' என்றார் சேட்.

''என்ன கலாட்டா இங்கே?''



மூன்று பேரும் திரும்பிப் பார்த்தார்கள். ஒரு போலீஸ் ஜவான் கை கட்டி நிற்க, டிப்டாப்பான உடையில் உள்ளே பிரவேசித்த மணியைக் கண்டாள் ராணி. அவனுடன் நெருங்கிய பழக்கமில்லையே தவிர, பல சந்தர்ப்பங்களில் பார்த்துப் பேசியதுண்டு.

ஒரு நிமிடத்துக்குள் மணி நிலைமையை ஊகித்துக் கொண்டான்.

''சேட், இது நாடகம் நடைபெறுகிற பொது இடம். கலாட்டா பண்ணுவது சட்ட விரோதம். தெரியு மில்லையா?'' என்று அவன் வினவிய தோரணையிலேயே கங்காராம் சேட் அரண்டுபோய் எழுந்து நடையைக் கட்டி விட்டார்.

''வாருங்கள் மிஸ்டர் மணி,'' என்று அவன் கையை உரிமையுடன் பற்றி மேலே அழைத்துச் சென்றாள் ராணி. சந்தர்ப்பம் புரிந்துகொண்ட பிரான்சிஸ் மேக்கப் 'அறை'யைக் காலி செய்தான்.

அந்த உடைசல் நாற்காலியில் மணி உட்காரவில்லை. சூழ்நிலையின் தரித்திரத்தையும் ராணியின் தோற்றத்தில் ஏற்பட்டிருந்த ஏழ்மையையும் ஏற இறங்கப் பார்த்தான்.

''நாடகம் இந்த இடத்தில் நடைபெறுகிறது என்று தெரிந்தபோதே திக்கென்று இருந்தது. இங்கே வந்து பார்த்தால்... என்ன நேர்ந்தது உனக்கு?'' என்றான் ஆச்சரியத்துடன்.

தன் நிலைமைகளை மறைக்கலாமென்று ராணிக்குக் கொஞ்ச நஞ்ச நப்பாசை இருந்திருக்குமோ என்னவோ, அது இனிமேல் சாத்தியமில்லை என்று கைவிட்டாள். 'ஹூம்!' என்ற பெருமூச்சுடன் கைக்குட்டையால் முகத்தை ஒற்றிக் கொண்டாள். துணியில் ஒட்டிக்கொண்ட சிவப்புக் கறையைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்தவா றிருந்தவள், ''என் மாமாவை ரொம்ப நம்பியிருந்தேன். அவன் எல்லாவற்றையும் அடித்துக்கொண்டு ஓடி விட்டான்,'' என்றாள்.

''போலீஸ் கம்ப்ளெயிண்ட் கொடுப்பதற்கென்ன?''

''ஆதாரம்?'' என்று புருவத்தை உயர்த்தினாள் ராணி. 'நான் வேறு அவன் வேறு என்று இருக்கவில்லை. அடித்துக் கொண்டு போனது என்னுடையதுதான் என்று எதை வைத்துச் சொல்வது? தன்னுடைய பணம் என்கிறான். அப்புறம்?''

''சுலபமாய் ஏமாறுகிற டைப்தான் நீ.'' விழியை நகர்த்தாமல் அவளை உற்றுப் பார்த்தான் மணி. ''உன் கைப்பிடியிலிருந்த லட்சாதிபதியைக் கோட்டை விட்டாயே, அப்போதே நினைத்தேன்.''

''யாரைச் சொல்கிறீர்கள்?''

''சாந்தோம் சுவாமிகளைத்தான்.''

''ராதானந்தரையா?''

''மைனர் ராதா,'' என்று திருத்தினான் மணி.

ராணியின் நினைவு வேறு பாதையில் போய்க் கொண்டிருந்தது போலும். ''என்னோடுகூட நவகுமாரி என்று ஒரு பெண் இருந்தாளே, நினைவிருக்கிறதா?''

''தெரியாது. அவளுக்கு என்ன?''

''எப்படியோ நாலு காசு சேர்த்துக் கொண்டாள். மகாராஷ்டிரம் பூரா டான்ஸ் கச்சேரிகள் ஏற்பாடு பண்ணிக் கொண்டு புறப்பட்டு விட்டாள். எனக்குச் சேடியாய்த் தட்டுத் தூக்கிக்கொண்டு நின்றவள்! ஹஉம்.''

''அதற்கென்ன இப்போது?''

''அப்புறம், எங்க நட்டுவனார் கிழே, எனக்கு மூன்று வருஷம் ஜூனியர் ரமாமணி— ஜெர்மனியில் கல்சுரல் டெலிகேஷனாம். போயிருக்கிறாள்.''

''எதற்குச் சொல்கிறாய்?'' என்றான் மணி, பொறுமை இழந்தவனாக.

ஒரு பெருமூச்சுடன் தொடர்ந்தாள் ராணி: ''என்னைக் கூடத்தான் ஒரு டூர் போகிறாயா என்று இங்கே சிலபேர்



கேட்கிறார்கள். ஆரம்பச் செலவையெல்லாம் நான்தான் போட்டுக் கொள்ள வேண்டுமாம். ஆனால் ஆயிரக் கணக்கில் வசூல் அள்ளி விடலாம் என்கிறார்கள்...'

பணத்துக்கு அடி போடுகிறாள் என்பது புரிந்ததும் மணி நழுவப் பார்த்தான்.

''டெல்லிக்கும் காஷ்மீருக்கும், க்ரூப்போடு போய் வருவதென்றால் சும்மாவா? ஐயாயிரம்...''

மணி சட்டென நின்றான். ''எங்கே? என்ன இடம் சொன்னாய்?''

''டெல்லி, ஆக்ரா வட்டாரத்தில் ஒரு ஏழெட்டு பர்ஃபாமென்ஸ்...''

''அப்புறம்?''

''ஜம்மு காஷ்மீரில் ஒரு நாலைந்து...''

மணியின் முகம் மலர்ந்தது: ''செலவு எவ்வளவு ஆகுமென்றாய்?''

''ஐயாயிரம் தேவைப்படும். திரும்பி வந்ததும் சுலபமாய்த் திருப்பிவிடலாம். ஆனால் யார் தருவார்கள்? நான் இருக்கிற நிலைமையில்......'' அடிக்கண்ணால் அவனை ஆழம் பார்த்தாள் ராணி.

''நானே தருகிறேன்,'' என்றான் மணி. ''காஷ்மீரில் உன் டான்ஸ் டிராமாக்களைக் கவனித்துக்கொண்டு, எனக்காகவும் ஒரு வேலை செய்ய வேண்டும். செய்வாயா? பணம் நாளைக்கு ரொக்கமாய்க் கொண்டு வந்து தருவேன்.''

''எது வேணுமானால் செய்ய ரெடி. சொல்லுங்க'' என்றாள் ராணி ஆர்வத்துடன்.

# நாற்பத்தொன்று

"போகிற வழிதானே? என்னைக் கொஞ்சம் இறக்கி விட்டுப் போகக் கூடாதா?" என்று மீனலோசனி கெஞ்சினாள்.

இடுப்புப் பெல்ட்டை இறுக்கிக் கொண்டிருந்த சாரங்கபாணி, "வரவர உன் தொல்லை ரொம்ப அதிகமாய்ப் போய்விட்டது. ஒன்று, உனக்காக ஒரு சைக்கிள் ரிக்ஷாவும் ஆளும் வீட்டோடு வைத்து விடுகிறேன். இல்லை, அந்தப் பண்டாரத்தின் மடத்து வாசலிலேயே உனக்கும் ஒரு குடிசை போட்டுத் தரச் சொல்லி விடுகிறேன்," என்று எரிந்து விழுந்தார்.

"போகிற வழிதானே என்றேன்......"

"மறுபடியும் மறுபடியும் அதே பல்லவியைப் பாடுகிறாயே? நாம் எங்கே இருக்கிறோம், என் ஆபீஸ் எங்கே இருக்கிறது, பவானி மடம் எங்கே இருக்கிறது? இனிமேல் எழும்பூர் போகிற வழிதானே என்று தஞ்சாவூரில் இறக்கி விடும்படிகூடக் கேட்பாய்!" என்று இரைந்தவர், மனைவியின் பரிதாபமான முகத்தை நோக்கியதும் சற்று இளகினார். "சரி, போய் ஏறு வண்டியில்," என்றார்.

"இதோ," என்று குடுகுடுவென்று காருக்கு ஓடி, பயபக்தியுடன் மூலையில் ஒடுக்கமாக உட்கார்ந்து கொண்டாள் மீனலோசனி. சில நிமிடங்களில், மணியை அருகில் அமர்த்திக்கொண்டு சாரங்கபாணியே காரைச் செலுத்தலானார். அவரை மறுபடி ஏதாவது சீண்டப் போய் நடு வழியில் இறக்கி விட்டுவிடுவார் என்ற பயத்தில் மீனலோசனி வாயே திறக்கவில்லை, சாந்தோமை அடைகிற வரையில்

பவானி மடத்தின் வாசலில் அவள் இறங்கிக்கொண்ட போது, பிரார்த்தனை மணியின் ஓசை உள்ளிருந்து



காற்றில் தவழ்ந்து வந்து அவர்களை அழைத்தது. மாலைப் பிரார்த்தனைக்காக வந்திருந்த பலர், வெளியே நின்று பேசிக் கொண்டிருந்தவர்கள், உள்ளே நுழைந்தார்கள்.

மீனலோசனி மிகவும் தயங்கியபிறகு, "நீங்களும் இறங்கி வாருங்களேன்......" என்று தடுமாறினாள்.

உதவி கமிஷனரின் இரண்டு கண்களும் இரண்டு நெருப்புக் கோளங்களாக மாறின. "ஏன், உன்னைப்போல என்னையும் நினைத்து விட்டாயா, ரோஷம் கெட்டவனென்று?" காரை ஸ்டார்ட் செய்த அவர், "முக்கால் மணி நேரத்தில் நான் திரும்பி விடுவேன். இதே இடத்தில் நீ ரெடியாய் நிற்க வேண்டும். என்ன?" என்றார்.

"பிரார்த்தனை முடிந்துவிட்டால்... வந்துவிடு கிறேன்..."

"போனால் போகிறதென்று உனக்காக இரண்டு தரம் ஹாரன் கொடுக்கிறேன். நீ வரவில்லையோ, நான் பாட்டுக்குப் போய்விடுவேன்."

"நான் வந்து விடுகிறேன்," என்று பதிலளித்துவிட்டு மடத்தினுள் விரைந்தாள் மீனலோசனி.

"சுத்த ஃப்ராட் கூட்டம்," என்று முணுமுணுத்துக் கொண்டே வெறுப்புடன் அக்ஸிலரேட்டரை ஒரு மிதி மிதித்தார் சாரங்கபாணி. தன் அபிப்பிராயத்தை அருகிலமர்ந்துள்ள பர்ஸனல் அஸிஸ்டெண்ட் முழுக்க முழுக்க ஆமோதிக்கிறான் என்று அவருக்குத் தெரியாது.

அதேபோல், அலுவலகத்தில் ஐ.ஜி.யும் கமிஷனரும் தனக்காகக் காத்துக் கொண்டிருப்பார்கள் என்பதும் அவருக்குத் தெரியாது 'சில அவசர வேலைகளை முடித்து விட்டுப் போகலாம் என்று நாம்தான் இந்த அகால வேளையில் வந்தோம். இவர்களுக்கு என்ன வேலை?' என்று திகைத்தார் சிறிது நேரம் வரையில். பிறகு, மைசூர் ராஜ்யத்தில் கிளர்ந்திருந்த சில சில்லறைக் கலவரங்களை அடக்குவதற்காகத் தமிழ் நாட்டுப்

போலீஸின் உதவி கோரப்பட்டிருக்கிறது என்று தெரிய வந்தது. அது சம்பந்தமான ஏற்பாடுகளுக்காக எல்லா டி.எஸ்.க்களும் வரவழைக்கப்பட்டிருந்தார்கள். சாரங்கபாணியின் வீட்டுக்கும் போன் செய்தார்களாம். அவர் இங்கேதான் புறப்பட்டு வருவதாக வேலைக்காரன் தெரிவித்தானாம்.

போலீஸ் அதிகாரிகளின் 'மீட்டிங்' ஆரம்பமாகிப் பல விஷயங்கள் தீர்மானமாகிய பிறகுதான் சாரங்கபாணிக்கு வெளியுலக நினைவு வந்தது. சட்டென்று ஒரு துண்டுக் காகிதத்தில் இரண்டு வரி கிறுக்கி, ஒரு ஜவானை அருகில் அழைத்து, "வெளியே மணி இருக்கிறான். அவனிடம் கொடுத்து விடு," என்று கொடுத்தனுப்பினார்.

அதைப் பெற்றுக் கொண்டு, சாரங்கபாணியின் கட்டளையை அறிந்த மணிக்கு எரிச்சல்தான் வந்தது.

"அம்மாவை நீ காரில் அழைத்துக் கொண்டு போய் வீட்டில் விட்டு விடு. நான் வேறு காரில் வந்து விடுகிறேன்," என்று சாரங்கபாணி எழுதியிருந்தார்.

வரும்போது பவானி மடத்தின் வாசலில் நின்ற சில நிமிடங்களே, மணிக்கு ஆத்திரமும் கோபமும் தருவிக்கப் போதுமானதாயிருந்தன. 'பரதேசிப் பயலே, உன் ஆட்டமெல்லாம் கொஞ்ச நாளைக்குத்தான். இரு, இரு,' என்று தனக்குள் கறுவிக் கொண்டான் அப்போது. எப்படியும் ராணி விரிக்கப் போகிற வலையில் ராதானந்த சுவாமிகள் சிக்கத்தான் போகிறார் என்ற நம்பிக்கைதான் அவனைச் சாந்தப்படுத்திக் கொண்டிருந்தது. இப்போது மறுபடியும் ஒருமுறை அங்கே போக வேண்டுமென்று நினைக்கவே ஆத்திரமாயிருந்தது.

எவனாவது ஒரு ஜவானைப் பிடிக்கலாமென்று முயற்சி செய்து பார்த்தான்.

சாதாரண சந்தர்ப்பமாயிருந்தால் அவன் கைச் சொடுக்குக்கு நாலுபேர் ஓடி வருவார்கள். இப்போது



பெரிய ஆலோசனைக் கூட்டம் உள்ளே நடைபெற்றுக் கொண்டிருந்ததாகையால் வசதியான சாக்குக் கிடைத்து விட்டது. அவர் கூப்பிடுவாருங்க, இவர் கூப்பிடுவாருங்க என்று சொல்லி ஒவ்வொருவராகக் கழன்றுகொள்ளவே மணியே காரைச் செலுத்திக் கொண்டு செல்ல நேரிட்டது. நீண்ட லீவு பெற்றுக்கொண்டு வெளியூரில் சுகமாய் உட்கார்ந்திருந்த டிரைவரை மனமாரச் சபித்தவண்ணம் சென்றான்.

அவன் சாந்தோமை அடைந்து பவானி மடத்தின் ஓரத்தில் காரை நிறுத்தியபோது, பிரார்த்தனை முடிந்து விட்டது. மடத்தின் அபிமானிகள் பல பேர், வெளியே வந்து நின்றிருந்தார்கள். இருள் தீவிரமாகப் பரவாததால் நீல விளக்குகள் பிரகாசம் பெறாமல் ரத்தம் இழந்த நோயாளியைப்போல் பலவீனமாகக் காணப்பட்டன.

மீனலோசனியின் அருகில் சின்னச் சாமியாரும் நின்றிருப்பதைக் கண்டான் மணி. இரண்டு மடங்காக ஆத்திரம் எழுந்தது. தன் இருக்கையை விட்டு இறங்காமலே கையை நீட்டிப் பின்புறம் கதவின் லாக்கை நீக்கித் திறந்து விட்டான்.

சின்னச் சாமியார் மீனலோசனியைச் சும்மா வழியனுப்பியிருந்தாலாவது மணியின் எரிச்சல் போகப் போக அடங்கியிருக்குமோ என்னவோ! தன் வெற்றியைப் பறை சாற்றிக் கொள்ள அவருக்கு ஆசை பிறந்து விட்டது போலும்.

"உங்களுக்குச் சிரமம் இல்லாமற் போய்விட்டது," என்றார் மணியைப் பார்த்துக் கிண்டலாக. "குழந்தை ஹரிக்காக எல்லாச் செலவுகளையும் தானே ஏற்றுக் கொள்வதாக அம்மா சொல்லிவிட்டார்கள்."

படீரென்று கதவைச் சாத்தியது ஒன்றுதான் மணி கொடுத்த பதில். அடுத்த நிமிடம் அசுர வேகத்தில் கடற்கரைச் சாலை வழியே பறக்கத் தொடங்கியது.

அப்பாவி மீனலோசனிக்கு அவனுடைய சினம் புரியவில்லை. வெகுளித்தனமாக, "சின்னச் சாமியார் உன்னைத்தானே முதலில் உதவி கேட்டாராம்? நீ செய்திருக்கக்கூடாதோ மணி?" என்று கேட்டு வைத்தாள்.

மணி எதுவும் கூறவில்லை.

"இந்த நாளிலே இவர்கள் மாதிரி ஏழைப் பாழைகளுக்காக உழைக்கிறவர்களை எங்கே பார்க்க முடிகிறது? சின்னச் சாமியார், தங்கம். பெரியவர், சொக்கத் தங்கம்," என்று தொடர்ந்தாள் மீனலோசனி.

மணி குமுறலை அடக்க மாட்டாமல், காரின் வேகத்தை அதிகப்படுத்திக் கொண்டிருந்தான்.

"சத்யாவைக்கூடக் கேட்டேன், அந்தக் குழந்தைக்காக ஏதாவது செய்யலாமாவென்று. செய்யம்மா என்றாள். பாரேன், அவளுக்கும் மடத்தின் சமாசாரம் என்றால் அலாதிப் பிரியம்தான்."

மணி பல்லைக் கடித்துக் கொண்டான். கடற்கரைச் சாலை போகப் போகச் சஞ்சாரமற்று இருந்தது.

"அதென்னமோ, உனக்கும் அவருக்கும்— சத்யாவோட அப்பாவைத்தான் சொல்கிறேன்— மடத்தின்மேல் காரணமில்லாமல் ஒரு துவேஷம். ஹும்."

மணி வெடுக்கென்று தலையைத் திருப்பி, "கொலைகாரப் பேர்வழிகளிடம் போலீஸ்காரர்கள் வேறே எப்படி இருப்பார்களாம்?" என்றான் தன்னை மறந்து.

அவனுடைய முகத்தில் ஜொலித்த சீற்றத்தையும் பேசிய பேச்சிலே தெறித்த வெப்பத்தையும் அப்போதுதான் கவனித்தாள் மீனலோசனி. முதல் தடவையாக அவளுக்கு நடுக்கம் ஏற்பட்டது.

"எ...... என்ன...... சொன்னாய்?" என்று நாக் குழறினாள்.



"டெல்லிக்கு எழுதிக் கேட்கச் சொன்னீர்களே, உங்கள் மருமானின் லட்சணத்தைப்பற்றி? ஜெகா இங்கேயே வந்திருந்தாள். நேரிலேயே நான் கேட்டுத் தெரிந்து கொண்டாயிற்று."

"சரி...... அதற்கு ஏன்டாப்பா இப்படிப் படபடக்கிறாய்?"

"ஏன் படபடக்கிறேனா? ஒரு கொலைகாரன் சன்னியாசி வேஷம் போட்டுக் கொண்டு ஊரை ஏமாற்றுகிறானே என்றுதான். என்ன முழிக்கிறீர்கள்? இன்னும் உங்கள் கணவருக்கும் போலீஸ்காரனுக்கும்தான் தெரியாது. நான் போனால் போகிறதென்று, உங்கள் மூஞ்சிக்காக மறைத்து வைத்திருக்கிறேன். இதுவும் அதிக நாளைக்கில்லை. உங்கள் மருமானைத் தூக்கு மேடைக்கு அனுப்புவதோ அனுப்பாததோ, எவ்வளவு தூரம் என் பேச்சுக்கு நீங்கள் கட்டுப்படப் போகிறீர்கள் என்பதைப் பொறுத்திருக்கிறது."

மீனலோசனி காண்பதையும் கேட்பதையும் நம்ப முடியாதவளாக, ஆவேச வெறியுடன் பேசும் மணியை இமை கொட்டாமல் பார்த்தவாறு, ஸீட்டோடு ஸீட்டாக உறைந்து போய் உட்கார்ந்திருந்தாள்.

மணி, காரைக் கடற்கரைச் சாலையோரத்தில் நிறுத்தினான். ஐந்து நிமிடம் முன்னால் வரையில் அவனிடம் திட்டம் எதுவும் இல்லை. கோபாவேசத்துடன்தான் சொற்களைக் கொட்டியிருந்தான். ஆனால் இப்போது அவன் மனம் தெளிவு பெற்றிருந்தது.

என்ன பேச வேண்டும், எப்படிப் பேச வேண்டும் என்பதைக் கச்சிதமாகத் தீர்மானித்து வைத்துக்கொண்டு, "கேளுங்கள்," என்று ஆரம்பித்தான்.

"என்னப்பா இது? நீங்கள் செய்கிற காரியம் துளிக்கூட நன்றாயில்லை."

வெடுக்கென்று மின்சார பிளக்கை, ஸ்விட்ச் துவாரத்திலிருந்து பறித்தெடுத்து, ஒயரைச் சுருட்டி வைத்தார் டாக்டர் சம்பத்.

''நகருங்களப்பா,'' என்று அவர் கோபமாகச் சொன்னபோதும் மணவாளன் புன்னகை புரிந்தவாறு இருந்தார்.

''நகருங்கள் சொல்கிறேன்.'' அவர் கையிலிருந்து மின்சார இஸ்திரிப் பெட்டியையும் பறித்தார் டாக்டர்.

''சலவைக்காரன் வரவில்லையடா.''

''வராவிட்டால் பரவாயில்லை.''

''ஒவர்கோட்டை நான் பாழாக்கி விடுவேனென்று பயமா?''

''அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்களேன்,'' என்று டாக்டர் சம்பத் முறைப்பாகவே பதிலளித்த போதிலும், பளபளவென்று துவைத்து உலர்த்தி, மொடமொடவென்று மடிப்புப் போடப்பட்டுவிட்ட தன் வெள்ளை மேலங்கியையும், அவ்வளவு காரியத்தையும் ஒன்றியாகவே செய்து முடித்த தன் வயோதிகத் தந்தையையும் மாறி மாறிப் பார்க்கையில் மேற்கொண்டு பேச முடியாமல் அவர் தொண்டை கம்மி விட்டது.

''நீங்கள் செய்வது நன்றாயில்லை அப்பா. நன்றாகவே இல்லை,'' என்றார் மீண்டும்.

புன்சிரிப்பு மாறாமல் இஸ்திரி மேஜைக்கருகேயிருந்த பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார் மணவாளன்.

''நீங்கள் சிரிக்காதீர்கள் அப்பா. ஆமாம். சிரிக்காதீர்கள் என்றால் சிரிக்காதீர்கள். எனக்குக் கெட்ட கோபம் வருகிறது. எனக்காக என்ன செய்வது, என்ன செய்வதில்லை என்று ஒரு வரையறை கிடையாது? சே, சே!''



மணவாளன் தன் புன்னகையை அடக்கிக் கொண்டார். சிறிது அச்சம் கலந்திருந்தது அவர் குரலில். ''ஏன்டா சம்பத்து, ஒன்றுமில்லாததற்கே இப்படிக் கடுகு தாளித்த மாதிரி வெடிக்கிறாயே, நான் உனக்காக ஒரு காரியம்— ரொம்பப் பெரிய காரியம்— பண்ணி வைத்திருக்கிறேனே! அதுவும் உன்னைக் கேட்காமலே?......''

டாக்டர் சம்பத் பதற்றமடைந்தவராக, ''ஐயையோ! என்ன பண்ணி வைத்திருக்கிறீர்கள் அப்படி?'' என்று குறுக்கிட்டார்.

''வாயால் சொல்லப் பயமாயிருக்கிறது......''

''விளையாட்டு இருக்கட்டும், சொல்லுங்களப்பா. எனக்கு வயிற்றைக் கலக்குகிறது.''

''சரி, என்னோடு வெளியே புறப்படத் தயாராயிருக்கிறாயா?''

''கார் சர்வீசுக்கு விட்டிருக்கிறேன்.''

''சரி, ஒரு டாக்ஸி பிடி,'' என்றார் மணவாளன்.

அவரைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே வாசலுக்குச் சென்றார் டாக்டர் சம்பத். நிஜமாகவே அவருக்குக் கலக்கமேற்பட்டிருந்தது. ''எல்லாம் உன் நன்மைக்காகத்தானடா!'' என்று சொல்லி என்னத்தையாவது செய்து வைத்திருப்பார் தன் தந்தை என்று அச்சமுற்றார் அவர்.

*

''நீங்களும் உங்கள் மர்மமும்! இனிமேலாவது சொல்லுங்கள்!'' முகம் சுளித்தார் டாக்டர் சம்பத், டாக்ஸியில் போய்க் கொண்டிருக்கும்போது.

''இவ்வளவு பொறுத்தவனுக்குச் சில நிமிடங்கள் பொறுக்க முடியவில்லையா?'' என்று மகனின் ஆண்மை மிக்க புஜத்தைத் தொட்டுச் சாந்தப்படுத்தினார் மணவாளன். முன்புறம் லேசாய்க் குனிந்து, ''மெயின் ரோடில்

இரும்பு, டிரைவர். நாலாவது பங்களா...... ஆமாம்...... புதிதாயிருக்கிறதே, அதுதான்,'' என்றார்.

டாக்ஸி நின்றதும், தந்தையையே கூலி கொடுப்பதற்கு விட்டுவிட்டுச் சூழ்நிலையைச் சுற்றுமுற்றும் ஆராய்ந்தார் சம்பத்.

காந்தி நகரின் புதிய பகுதி என்பது தெரிந்தது. குளுகுளுவென்று காற்று வீசியதால், கடற்கரைக்குச் சமீபமான இடம் என்று தெரிந்தது. அவர்கள் இறங்கியிருந்த கட்டிடம் புதிதாயிருந்தாலும் இன்னும் முற்றுப்பெறவில்லை. வாசல்புறத்தில் தெரிந்த கதவுகளுக்குச் சில ஆட்கள் பெயின்ட் செய்துகொண்டிருந்தார்கள். ஈரமான காரைக் குழியல்களைக் கால்கள் ஸ்பரிசிக்க, கண்கள் பளிச்சென்ற வண்ணங்களைப் பார்க்க, நாசியைப் புதுமணம் வரவேற்றது.

''என்ன பார்க்கிறாய்?'' என்று மணவாளன் அவன் தோளைத் தொட்டார்.

''இது யார் வீடு? இங்கே...... நாம்......''

''மேலே பாரேன். போர்டு அழகாயில்லை?'' என்று மணவாளன் சுட்டிக் காட்டினார்.

டாக்டர் சம்பத் குழப்பத்துடனும் படபடப்புடனும் நிமிர்ந்து நோக்கினார். எழுத்துக்கள் பளீரெனத் துலங்கின.

''நாயகி நர்ஸிங் ஹோம்...''

''அப்பா!'' என்று தந்தையைக் கட்டிக்கொண்டார் டாக்டர் சம்பத்.

நாயகி என்பது அவரது மூன்று வயதில் பிரிந்து சென்ற தாயின் திருநாமம்.

''வாங்க அய்யா,'' என்று அழைத்துக்கொண்டு உள்ளிருந்து வந்தார் கண்டிராக்டரொருவர்.



''கையாலாகாத தகப்பன், காலணாவுக்குப் பிரயோசனமில்லாத அப்பா என்றுதானே என்னை நினைத்திருந்தாய்? பார்த்துக் கொள்,'' என்றார் மணவாளன் விளையாட்டாய். மகனின் ஆனந்த அதிர்ச்சியைக் காணக் கான அவருக்குப் பெருமிதம் பொங்கி வழிந்தது.

டாக்டர் சம்பத், கனவில் நடக்கிறவர்போல ஒவ்வோர் பகுதியாக, அறையாகப் புகுந்து புகுந்து பார்த்துக் கொண்டே சென்றார். நவீனமான முறையில் கட்டப்பட்ட வெயிட்டிங் அறை, கன்ஸல்டிங் அறை, அவசர ரண சிகிச்சைகள் செய்யும் பகுதி, முக்கியமான மருந்துகளைப் பாதுகாக்கும் குளிர் சாதனப் பெட்டி, அழகிய 'பெட்'கள் போடப்பட்ட அரை டஜன் அறைகள், அறைக்கு அறை மின்சார விசிறிகள், காலிங் பெல்கள், வாஷ் பேஸின்கள்!

பார்க்கப் பார்க்க டாக்டரின் பிரமை அதிகரித்தது.

மணவாளனின் பின்னாலேயே வந்துகொண்டிருந்தார் கண்டிராக்டர். ''சும்மா இல்லை தம்பி. மூன்று லட்சம் ரூபாய் சாப்பிட்டிருக்கிறது. ஆனால் ஆறே மாசத்தில் வேலையை முடித்தாகிவிட்டது. ஒயிட்வாஷ், பெயின்டிங், கார்டனைக் கொஞ்சம் சரி பண்ணணும். பிறகு ஜாம்ஜாம் என்று நீங்கள் இங்கே பிராக்டிசை ஆரம்பித்துவிடலாம்,'' என்றார்.

''சமையல்காரனை வைத்துக் கொள்வதற்கென்ன, வேலைக்காரனைப் போட்டுக் கொள்வதற்கென்ன என்று எப்போது பார்த்தாலும் குற்றம் சொல்வாயே, இப்போது தெரிகிறதா? நானும் கவர்மெண்ட் உத்தியோகம் பார்த்து ரிடையர் ஆனவன்தான். புத்திசாலித்தனமாய் அந்த நாளிலேயே இங்கே ஐந்து கிரவுண்டு வாங்கிப் போட்டவன்தான். உன்னை என்றைக்கு ஹைஸ்கூலுக்கு அனுப்பினேனோ அப்போதே இந்தத் திட்டம் உண்டாகி விட்டது. அவள்— உன் அம்மா— பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை. அதுதான் என் வருத்தம்,'' என்று பேசிக் கொண்டே வந்தார் மணவாளன்.

"நான்பாட்டுக்கு, அந்தச் சாரங்கபாணியின் மனையை வாங்கி நானும் ஒரு நர்ஸிங்ஹோம் கட்டியிருந்தால் என்ன ஆகியிருக்கும்?" என்றார் டாக்டர்.

"என்ன ஆகியிருக்கும்? உனக்கிருக்கிற திறமைக்கு, பட்டணத்தில் நாலு இடத்திலேகூட நர்ஸிங்ஹோம் கட்டிப் பிராக்டிஸ் பண்ணலாம்," என்றார் மணவாளன். "ஆனால் முக்கியமாய் நீ யாருக்கும் கடமைப்பட்டவனாகக் கூடாது என்று கவலைப்பட்டேன். கடவுள் அருள், அந்த இடம் தகையாமல் என் திட்டமே முதலில் பூர்த்தியாகி விட்டது. எதற்காக ஆனைவம் பிடித்த போலீஸ்காரர்களின் தயவில் நீ நிற்பது?"

டாக்டர் சம்பத்தின் முகம் சற்று இருண்டது. "அவருக்காகவோ, அவருடைய இடத்துக்காகவோ இல்லை, அப்பா...... எனக்கே உண்மையில் அவள்... சத்யா மீது..."

"புரிகிறது. அந்தப் பெண்ணுக்கு?"

டாக்டர் சம்பத் தலையைக் குனிந்துகொண்டார். என்னவிதமான முடிவான விடையும் தரமுடியாத கேள்வியல்லவா தந்தை கேட்டது?

கட்டிடத்தின் பின்புறத்தை அடைந்து விட்டார்கள். வேப்ப மரத்திலிருந்து காற்று வீசியது இதமாக. இன்னும் மின்சாரக் கனெக்ஷன் தரப்படாததால் கட்டிடத்தின் உட்புறங்களில் இருள் படியத் தொடங்கியது. கன்டிராக்டரிடம் கூலி பெற்றுக்கொண்டு ஆட்கள் புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

"நான் கொஞ்ச நேரம் இங்கே இருந்துவிட்டு வருகிறேனப்பா. நீங்கள் போங்கள்," என்றார் டாக்டர்.

'அதற்குள்ளேயே இவ்வளவு பிடித்து விட்டதா உனக்கு' என்று உள்ளுக்குள் மகிழ்ந்தபடி கன்டிராக்டருடன் மணவாளன் புறப்பட்டுச் சென்றார்.



சம்பத், பின்பக்கத்து வெராந்தாப் படியில் முழந்தாளிட்டவாறு உட்கார்ந்து கொண்டார். அந்தப் பரந்து விரிந்த கட்டிடத்துக்கு இன்னும் ஏதோவோர் உயிர்த் துடிப்பு தேவைப்படுவதாக அவருக்குத் தோன்றியது. எல்லா லட்சணங்களும் நிரம்பியும் எங்கோ ஒரு சூனி தென்படுவதாக அவர் உணர்ந்தார்.

கொஞ்சம் கொஞ்சமாக அவருக்குப் புரிந்தது.

வனப்போடு பணமும் சேர்வதற்கு எது தேவை என்ற தெரிந்தது அவருக்கு.

வாஷ் பேசினில் கை கழுவும்போது ஸ்டிரிலைஸ் செய்த துவாலையுடன் அருகில் நிற்க; களைத்து நாற்காலியில் கண் மூடிச் சாய்ந்திருக்கும் வேளையில் குறிப்பறிந்து, காத்திருக்கும் நோயாளியைத் தானே முன் வந்து கவனிக்க; புரிபடாத ஒரு வைத்தியச் சிக்கலில் மூளையைக் குழப்பிக் கொள்ளும்போது தெளிவு கொடுக்க; நோயுடன் வந்தவரை ஆரோக்கியவானாக வழியனுப்பும்போது அந்த வெற்றியைப் பகிர்ந்து கொள்ள—

யார் தேவை என்று ஐயமறத் தெரிந்தது டாக்டர் சம்பத்துக்கு. இழுக்கும் ஒவ்வொரு மூச்சோடும் எவளுடைய நினைவு உள்ளத்துக்குச் சென்று நிறைவு தருகிறதோ அந்த சத்யா அவர் கண்முன் வந்து நின்றாள். இந்தக் கணத்தில் அவளையும் அருகில் அழைத்துக்கொள்ள வேண்டும். இதைப் பார்த்தாயா, அதைப் பார்த்தாயா என்று அவளுக்கு ஒவ்வொன்றையும் ஆசை ஆசையாய்க் காட்ட வேண்டும் என்ற பரபரப்பு அவரைச் சரேலென எழுந்திருக்க வைத்தது.

டாக்டர் சம்பத் வேகமாக நடையைப் போட்டார், பப்ளிக் டெலிபோனைத் தேடி. கடற்கரையை ஒட்டிய சாலை சிறிது இருட்டினாற் போன்றிருந்தது.

டெலிபோன் கூண்டை நெருங்கிய பிறகுதான் கவனித்தார், சற்றுத் தள்ளி ஒரு கார் நின்றிருப்பதை. பேச்சுக் குரல் கேட்டது.

'சத்யா' என்ற வார்த்தை காதில் விழுந்ததும் திடுக்கிட்டு நின்றார் டாக்டர் சம்பத்.

"ஆமாம். உங்க மருமானின் தலை தப்ப வேண்டுமென்றால் எனக்கு அப்படி வாக்குறுதி கொடுங்கள். எனக்கென்ன குறைவு? சத்யாவைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள எந்த விதத்தில் தகுதி இல்லாமல் போயிற்று? யோசனை பண்ணுங்கள்."

டைலிபோன் கூண்டோடு கூண்டாக ஒட்டிக்கொண்டு டாக்டர் சம்பத் முன்னேறினார். காருக்குள் இருப்பவர்கள் யார் என்பதையும் கவனித்து வைத்துக்கொண்டார்.

## நாற்பத்திரண்டு

"ஏது, உனக்குக்கூட வரவர ரோஷம், கோபம் அது இது என்றெல்லாம் வருகிறது!" என்று கொஞ்சம் விளையாட்டாகவும் கொஞ்சம் நிஜமான அதிசயத்துடனும் கேட்டார் சாரங்கபாணி.

மீனலோசனி பதில் கூறவில்லை. கணவர் ஏதோ கேட்கிறார் என்பது தெரிந்தது. ஆனால் ஓசை மட்டும் கேட்ட மாதிரி தோன்றியதே தவிர, என்ன விஷயமாய்ப் பேசுகிறார் என்பது மூளைக்கு எட்டவில்லை. ஏதாவது பதில் சொல்ல வேண்டுமென்பதற்காக, 'உக்கும்' என்று தலையசைத்து விட்டு, எஃகு அலமாரியின் இடுக்குகளில் பாச்சை உருண்டைகளைப் போடுவதில் தன் பாட்டுக்கு ஈடுபட்டாள்.

சாரங்கபாணி தங்க மெடலையும் பாராட்டுப் பத்திரத்தையும் மேசைமீது வைத்தார். மனைவியையே உற்று நோக்கினார். எஃகு அலமாரியில் பாச்சை உருண்டைகளைப் போடும் வேலையை, ஏதோ ஜீவமரண வேலையைச் செய்வது போல் அக்கறையாகச் செய்துகொண்டிருக்



கும் மனைவியை நம்ப இயலாதவராக, கண் கொட்டாது நோக்கினார்.

இந்த முப்பது வருட காலத்தில், அவளிடம் இந்த மாதிரியான விநோதப்போக்கை அவர் கண்டது கிடையாது. தன் முன்னிலையில், அற்ப வேலையை அவள் பெரிதாகச் செய்து கொண்டிருந்து அவர் பார்த்ததேயில்லை. ஆகவே தன்னுடன் பேசப் பிடிக்காமல் வேறு பக்கம் திரும்பிக் கொள்கிறாள் என்று போலீஸ் அதிகாரியான அவர் வெகு எளிதில் ஊகித்துக் கொண்டார். ஆனால் அவள் ஏன் அப்படி இருக்கிறாள் என்று அவரால் கொஞ்சமும் ஊகிக்க முடியவில்லை.

விரைந்து சென்று மீனலோசனியைத் தன் பக்கப் திருப்பி, "என்ன உக்கும்?" என்றார்.

மீனலோசனியின் முகம் வெளுத்திருந்தது. ஒரே வாரத்துக்குள் பதினைந்து இருபது வருடங்கள் கூடிப் போன மாதிரி அவள் முகமெங்கும் கோடுகளும் சுருக்கங்களும் விழுந்திருந்தன. கண்கள் விரலை விட்டுத் துழாவித் தேடினால்தான் அகப்படும்போல் அவ்வளவு ஆழத்துக்கு இறங்கி, குழி விழுந்திருந்தன. இங்கொன்றும் அங்கொன்றுமாகத் தென்பட்டுக் கொண்டிருந்த நரை, தலைமுழுவதையும் வியாபித்துக்கொண்டு விட்டாற் போலாகிவிட்டது.

"வந்து... நீங்கள் என்னவோ கேட்டீர்களே... அதற்குத்தான் ஆமாம் என்றேன்..." என்றாள் பயத்துடன்.

ஒரு பெருமூச்சு விட்டு விட்டுத் திரும்பினார் சாரங்கபாணி.

"சத்யா! உன் அம்மாதான் உன் முதல் பேஷண்ட்டாயிருப்பாள் என்று நினைக்கிறேன். ட்ரீட்மெண்ட்டை இப்போதே ஆரம்பித்துவிடு," என்றார் மகளிடம்.

"நீங்கள் என்னப்பா அம்மாவைக் காபரா படுத்திக் கொண்டு," என்று தந்தையை மெல்லக் கடிந்துகொண்டு அம்மாவிடம் சென்றாள் சத்யா. பாச்சை உண்டைப்

பாக்கெட்டுகளைப் பறித்து, பீரோவுக்குள் எறிந்துவிட்டு, கதவைச் சாத்தி, பூட்டி, சாவியை அம்மா இடுப்பில் செருகினாள். "இப்படி உட்கார் சொல்கிறேன்," என்று கூறி ஒரு மடக்கு நாற்காலியை எடுத்து வந்து தாயின் அருகில் போட்டு, தோளை அழுத்தி உட்கார்த்தினாள்.

"சும்மா இரடி. எனக்கு ஒரு கேடும் இல்லை," என்று சிணுங்கினாள் மீனலோசனி. அவளுக்கு மகள்மீது கோபம்— ராதாவுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தைத் தன்னிடம் கூட அவள் சொல்லவில்லையே என்று.

"என்ன கவலையானாலும் என்னிடம் சொல்லம்மா."

"கவலை என்ன கவலை? எனக்கு ஒரு கவலையுமில்லை." நான்பாட்டுக்கு என் வேலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அவ்வளவுதான்."

"நன்றாயிருக்கிறதே உன் வேலை? எவ்வளவு பெரிய போலீஸ் கான்ஃபரன்ஸில், கவர்னர் கையாலேயே அப்பா மெடல், பாராட்டுப் பத்திரம் எல்லாம் வாங்கி வந்திருக்கிறார்! விழாவுக்குத்தான் வரவில்லை. இங்கே கொண்டு வந்து காட்டினால்கூடச் சந்தோஷப்படமாட்டேனென்கிறாயே?"

"என்டி பெண்ணே அப்படியெல்லாம் பேசுகிறாய்? எனக்கா சந்தோஷமில்லை? எவ்வளவு பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறேன், தெரியுமா? கன்னாபின்னாவென்று பேசுகிறாயே" என்று படபடப்பாய்ச் சொல்லும்போதே மீனலோசனிக்குக் குரலும் கம்மி, கண்ணில் ஒரு பொட்டு நீரும் புறப்பட்டது.

"விடு அவளை, சத்யா!" என்றார் சாரங்கபாணி. "அவளுக்கு என்ன மனசில் இருக்கிறதென்று எனக்குத் தெரியும்."

அதிர்ச்சியுடன் அவரை ஏறிட்டு நோக்கினாள், மீனலோசனி "இல்லை, இல்லை. எனக்கு மனசில் என்ன இருக்கிறது? ஒன்றுமில்லை. நான் எப்பவும் போலத்தான் இருக்கிறேன்...!" என்று கடகடவெனக் கூறியவளைக் குறுக்கிட்டு, "எல்லாம் அந்த அழகு மருமான் இருக்கிறானே, சாமியார் மருமான், அவனால்தான்," என்றார் சாரங்கபாணி மேலும்.



"ஒருநாளுமில்லை," என்று கிட்டத்தட்ட அலறல் போல மீனலோசனி பதில் கொடுத்தது மற்ற இருவருக்கும் ஆச்சரியத்தைக் கொடுத்தது.

"தெரியும், தெரியும்," என்று தொடர்ந்தார் சாரங்கபாணி "அன்றைக்கு உன்னை மணியை விட்டு அந்த சாந்தோம் மடத்திலிருந்து அழைத்து வரச் சொன்னேனே, அதற்கப்புறம் நீ அங்கே போனாயோ?"

மீனலோசனியின் முகம் மேலும் மேலும் வெளிறிற்று.

"உன் அம்மாவுக்கு அதுதான் கோபம்," என்று பெண்ணைப் பார்த்துச் சொன்னார் சாரங்கபாணி. "என்னை உள்ளே வா என்று கூப்பிட்டாள். நான் மாட்டேன் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டேன். திரும்பி நானே வந்து காரில் வீட்டுக்கு அழைத்துப் போகிறேன் என்றேன். ஆனால் நான் வராமல் மணியை அனுப்பிவிட்டேன். அதனால், தீர்மானம் பண்ணிவிட்டாள், அங்கே இவள் போவது வருவது எனக்குப் பிடிக்கவில்லை, மருமானைப் பார்க்கப் போனால் நான் திட்டுவேன் என்று."

சாரங்கபாணி சொல்லச் சொல்ல அவரைப் பார்க்காமல் அம்மாவின் முகத்தையே கவனித்துக் கொண்டிருந்தாள் சத்யா. கொஞ்சம் கொஞ்சமாக, வெளிறிய இடங்களில் ரத்தம் பரவுவதையும், விறைத்திருந்த உடம்பு மெல்லத் தளர்ந்து சுபாவமான தன்மைக்குத் திரும்புவதையும், படபடப்பாக வந்துகொண்டிருந்த மூச்சு நிம்மதியாய் நிதானமடைவதையும் அவளால் நன்கு காண முடிந்தது.

"இதோ பார்," என்றார் சாரங்கபாணி மனைவியிடம். "நீ நினைக்கிற மாதிரி நான் தடுக்கவுமில்லை,

எனக்குக் கோபமும் கிடையாது. தாராளமாய் நீ போய் வந்து கொண்டிரு. அவ்வளவுதானே! சரிதானே?''

''என்னென்னவோ சொல்கிறீர்கள். எனக்கு அப்படி எதுவுமில்லை,'' என்று மறுத்தாள் மீனலோசனி. ''வீட்டுக் காரியம் சரியாயிருந்தது. ஒழிவேயில்லை.''

''ஆ, பிரமாத காரியம்!'' என்று சொல்லிவிட்டுச் சட்டென எழுந்துகொண்ட சாரங்கபாணி, கைக் கடியாரத்தைப் பார்த்தார். ''மணி ஆறடிக்கப் போகிறது. சரி, எழுந்திரு.''

''எங்கே? எதற்கு?''

''நான் சந்தோஷமாயிருக்கிற சமயத்தில், நீ மட்டும் முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்வதாவது! எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை,'' என்றார் சாரங்கபாணி. ''கிளம்பு, டிரைவர் வீட்டுக்குப் போய்விட்டான். பரவா யில்லை. நானே உன்னை அழைத்துப் போய் விட்டு வருகிறேன். உள்ளே மட்டும் கூப்பிடக் கூடாது. ஆமாம்.''

''மடத்துக்கா? வேண்டாம். வேண்டாம்'' என்று மறுபடியும் பதறலானாள் மீனலோசனி.

''எனக்குக் கோபம் வருகிறது, மீனா.''

''போய்விட்டுத்தான் வாயேன் அம்மா,'' என்றாள் சத்யா.

''என்னடி இது, நீங்கள் இரண்டு பேரும் இல்லாத கூத்தெல்லாம் அடித்துக்கொண்டு!'' என்று மீனலோசனி முணுமுணுத்துக்கொண்டே— ஆனால் கணவரின் கோபத்தைக் கிளறி விடக்கூடாது என்ற அச்சத்துடன்— எழுந்து கொண்டாள்.

''போய் வா,'' என்று மனைவியை இறக்கிவிட்டு, கதவைச் சாத்திக்கொண்டார் சாரங்கபாணி. தயாராய்க் கொணர்ந்திருந்த 'நியூஸ்வீக்' பத்திரிகையை அவர் கைகள் புரட்டத் தொடங்கின.

16888
3289699

இரும்புக் குண்டுகள் கட்டப்பட்டாற்போல் கனத்த கால்களை இழுத்துக்கொண்டு பவானி மடத்திற்குள் நுழைந்தாள் மீனலோசனி.

நீண்ட சாலை, இருளடர்ந்த கடற்கரை, அங்கே நிற்கும் கார்—

மணியையும் அவன் பேச்சையும் நினைத்தபோதே உடம்பு ஒருமுறை குலுங்கி ஆடிற்று. ஓட்ட ஓட்டத் திரும்ப வரும் கெட்ட கனவின் நினைவைப் போல, அன்று மணி சொன்ன தகவலும், விசித்திர நிபந்தனையும் அவள் ஞாபகத்துக்கு மீண்டும் மீண்டும் வந்து வாட்டின. யாரிடமும் எதும் சொல்லத் தெரியாமல், மடியில் நெருப்பைக் கட்டிக்கொண்டு பிரமை பிடித்தவளாக வளைய வந்தாள். பவானி மடத்துக்குச் செல்லவோ ராதானந்தரைச் சந்திக்கவோ அவளுக்குத் துணிச்சல் வரவில்லை. அதே சமயத்தில், அன்னாவின் குமாரனிடம் அவள் கொண்டிருந்த பழைய வாஞ்சை ஊற்றெனப் பெருக்கெடுத்தது. அவன் மணி சொன்ன மாதிரி செய்திருப்பானா மாட்டானா என்று அவள் யோசித்துக் கொண்டிருக்கவில்லை. அவனை எச்சரிக்க வேண்டும், காப்பாற்ற வேண்டும் என்ற துடிப்புத்தான் அவள் சிந்தையில் மேலோங்கி நின்றது. அதே சமயத்தில் அவனை நேருக்கு நேர் பார்க்கும்போது தம்மையறியாமல் என்னென்ன உளறி, அவனுக்கு மேலும் அதிகயான ஆபத்தை விளைவித்து விடுவோமோ என்றும் பயப்பட்டாள்.

எதை ஒத்திப் போட்டுக் கொண்டிருந்தாளோ அதிலிருந்து இனித் தப்பிக்க முடியாது...

பிரார்த்தனை மண்டபம் நிறைந்திருப்பதை அவளது தாழ்ந்த கண்கள் கண்டன. யாரோ மெல்லிய குரலில் தோத்திரம் பாடிக் கொண்டிருப்பதை அவள் செவிகள் கேட்டன. ஆயினும் தலை நிமிர்த்து எல்லோரையும்—

முக்கியமாக ராதானந்தரை— பார்ப்பதற்கு அவனால் முடியவில்லை.

கூட்டத்தின் விளிம்பில் அவன் உட்கார்ந்து கொண்டான் ஓசைப்படாமல். ஆனால் சில நிமிடங்கள்தான். மின்சார விசிறியின் காற்றில் குத்துவிளக்குகளின் சுடர் ஆடி அலைக்கழிந்ததால், வேகத்தை மட்டுப்படுத்துவதற்காக இந்தண்டைப் பக்கமாக வந்த சின்னச் சாமியார் அவனைப் பார்த்துவிட்டார்.

"என்ன, நீங்கள் இங்கே உட்கார்ந்திருக்கிறீர்கள்? எழுந்திருங்கள், அப்படி முன்பக்கம் வாருங்கள்," என்று உபசரிக்கவே அவன் பாடு தர்மசங்கடமாகிவிட்டது. தன்னை நாலு பேர் பார்க்கிறார்கள் என்று தெரிந்ததும் அவனுக்குச் சின்னச் சாமியாரின்மீது கோபம்தான் வந்தது. ஆனால் சலசலப்பு ஏற்படுத்த வேண்டாம் என்பதற்காகக் குனிந்தவாறே மற்றவர்களைக் கடந்து முன்வரிசையில் சென்று அமர்ந்து கொண்டான். ராதானந்தர் உட்கார்ந்திருக்கிறார் என்பதை உணர்ந்தான் அவருடைய பார்வை தன்மீது விழுந்திருப்பதையும் கண்ணால் பாராமலே கண்டான். அவன் தவிப்பு நிமிடத்துக்கு நிமிடம் அதிகரித்துக் கொண்டிருந்தது.

நல்ல வேளை, அவன் வேதனையை அகற்றும் வகையில் பிரார்த்தனைப் பாடல்கள் முடிந்தன. சின்னச் சாமியார் நாமாவளி சொல்லி அர்ச்சனைகள் முடித்தார். எல்லோரும் எழுந்துகொண்டதிலிருந்து தீபாராதனை நடைபெறுகிறது என்பதை ஊகித்த மீனலோசனி தானும் எழுந்தான்.

ஒவ்வொருவராக ராதானந்தரின் அருகில் சென்று வணங்கி, பூக்கள் பெற்று, கண்ணில் ஒற்றிக் கொண்டு சென்றார்கள்.

மீனலோசனியால் திரும்பிச் செல்ல முடியவில்லை.

தன் முறை வந்தபோது, நடுக்கத்துடன் நகர்ந்து, குனிந்த தலையுடனேயே கைகளை நீட்டினான்.



"என்ன, அத்தை அம்மாள் ஒரு வாரம் லீவு?" என்றார் ராதானந்தர்.

வேண்டுமென்றே கிண்டலாக உறவு முறைபோட்டு அழைப்பது அவர் வழக்கம். மற்றவர்களுக்கும் அது தெரியும். ஆகவே அருகிலிருந்தவர்கள் மெதுவாகச் சிரித்தார்கள்.

கண்ணீரில் மிதக்கும் விழிகளை முதல் முறையாக உயர்த்தி, அவரைப் பார்த்து, துயரத்துடன் சிரிக்க முயன்றான் மீனலோசனி.

அந்தப் பரிதாபமான முயற்சியைப் பார்த்த பிறகு ராதானந்தர், "நீங்கள் இருங்கள் இப்படி. கடைசியாய்ப் போகலாம்," என்று கூறி மற்றவர்களுக்குப் பிரசாதம் வழங்கி அனுப்பி வைத்தார்.

முதல் தயக்கம் விலகி விட்டதால் மீனலோசனிக்குச் சிறிது தெம்பு பிறந்தது. ஆனால் அச்சம் அகலவில்லை.

கூட்டம் கலைந்ததும், "அத்தையம்மாவுக்கு ஏதோ தனியாய்ப் பேசணும். இல்லையா?" என்று ராதானந்தர் கூறவே, குறிப்பறிந்து வெளியே சென்றுவிட்டார் சின்னச் சாமியார்.

சொல்ல நினைத்த வாக்கியங்களனைத்தும் திரளாகப் பொங்கியெழுந்து தொண்டையில் சிக்கிக் கொண்டமாதிரி இருந்தது மீனலோசனிக்கு. கடந்த சில மாதங்களாக அவன் போற்றிப் பூஜித்து வரும் சன்னியாசியின் எதிரில் நிற்கிறோம் என்று அவன் இப்போது நினைக்கவில்லை. சிசுவாயும் பாலகனாயும் காளையாயும் பார்த்துப் பழகிய மருமகனை வெகு நாட்கள் கழித்துச் சந்திக்கிறோம் என்ற பாச உணர்ச்சி மேலிட்டது. அவன் ஆபத்தில் சிக்கியிருக்கிறான் என்ற பதைப்பு மேலிட்டது. எப்படியும் அவனைக் காப்பாற்ற வேண்டுமே என்ற ஆதங்கம் மேலிட்டது.

தன்னை மறந்தவளாக, "ராதா... ராதா..." என்று விம்மிவிட்டாள்.

ராதானந்தர் திடுக்கிட்டாரென்றால், அந்த அதிர்ச்சி கண்ணிமைக்கும் நேரத்துக்குள் மறைந்து விட்டிருக்க வேண்டும். ஏனெனில் அது வெளித் தெரியவில்லை. அதற்கு மாறாக, வழக்கமான புன்னகையோடு, "ஆக, அத்தையம்மாவுக்கு தெரிந்துவிட்டது. அப்படித்தானே?" என்றார்.

மீனலோசனியின் கன்னங்களில் தாரை தாரையாக நீர் வழிந்தோடியது. 'என்ன குறும்புக்காரப் பிள்ளை இது! என்னென்னவோ அசட்டுத்தனம் பண்ணிவிட்டு இன்னும் இப்படி விளையாட்டுத்தன்மாகவே இருக்கிறானே!' என்று எண்ண எண்ண அவள் துக்கம் பன்மடங்கு பெருகியது. ராதானந்தரின் கைகளைப் பிடித்துக்கொண்டு, "எல்லாம் தெரிந்துமா நீங்...நீ கவலையில்லாமல் உட்கார்ந்திருக்கிறாய்?" என்றார்.

"இந்த உடையையும் அணிந்துகொண்டு, கவலையுடனும் இருக்கச் சொல்கிறீர்களா அத்தையம்மா?" என்று தன் காவி வஸ்திரத்தைக் காட்டினார் ராதானந்தர்.

"விளையாடதே. எனக்கு எல்லாம் தெரியும்." மீனலோசனி சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டு குரலைத் தாழ்த்திக்கொண்டாள். "நான் சொல்வதைக் கேள். அவரிடம் நான் எதுவும் சொல்லவில்லை. உனக்கு என்ன தேவையோ, கேள். எங்கேயாவது என் சொந்தப் பொறுப்பில் வாங்கி வந்து தருகிறேன். போய்விடு. கண்காணாமல் எந்த இடத்திலாவது சௌகரியமாயிரு. ராதா, சொல்வதைக் கேள்..." என்று பரபரப்பாகப் பேசினாள்.

அவளைக் கூர்ந்து நோக்கி, உதட்டைப் பிதுக்கியவாறு புன்சிரிப்புக் காட்டினார் ராதானந்தர். "பாவம், அத்தையம்மா எனக்காக ரொம்பக் கவலைப்பட்டுக்கொண்டிருப்பதாய்த் தோன்றுகிறதே," என்றார்.



"வேண்டாம் ராதா, விளையாடதே ராதா," என்று மீனலோசனி மன்றாடினாள்.

"நேரமாகிறது. நீங்கள் புறப்படுங்கள்," என்று பேச்சை முடித்துவிட்டார் ராதானந்தர். "உங்கள் யோசனைக்கும் உதவிக்கும் ரொம்ப நன்றி. ஆனால் ராதானந்த சுவாமிகள் இந்த மடத்தை விட்டு ஓட்டம் பிடிக்கிற உத்தேசத்தில் இல்லை."

வெளியேறிக் கொண்டிருக்கும் அவரையே பார்த்தபடி சில நிமிடங்கள் நிலைகுத்தி நின்றிருந்தாள் மீனலோசனி. பிறகு கண்களைப் புடைவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள்.

தெய்வ சன்னதியில் குத்து விளக்குகள் சலனமற்றுப் பிரகாசித்தன. சிதறிக் கிடந்த புஷ்பங்களை எடுத்துக் கண்ணில் ஒற்றிக்கொண்டு, தெய்வங்களையெல்லாம் மனமார வேண்டிக் கொண்டுவிட்டு வாசலுக்கு வந்தாள்.

"என்ன, மனசெல்லாம் சரியாகி விட்டதா? இனிமேல் என்மீது கோபிக்க மாட்டாயே?" என்று கேலியாக அவளை வரவேற்றுக் காரைக் கிளப்பிய சாரங்கபாணி, மனைவியின் முகத்தைக் கவனிக்கவில்லை போலும். "வேறொரு சமயமாயிருந்தால், இத்தனை நேரமானதற்கு உன்மீது ஒரே எரிச்சலாயிருந்திருப்பேன் இந்தப் பத்திரிகைக்காரன் உன்னைக் காப்பாற்றினான்," என்று அந்த ஆங்கில வார இதழை மீனலோசனியின் மடியில் எறிந்தார்.

கணவர் என்ன சொல்கிறாரென்பதைப் புரிந்து கொள்ளக்கூடிய மனநிலையில் அவள் இல்லை. ஆனால் அலட்சியமாய் இருந்துவிட்டு அவர் கோபத்தைச் சம்பாதித்துக் கொள்வோமோ என்ற அச்சத்தினால், "என்ன, என்ன இதிலே போட்டிருக்கிறது?" என்று கேட்டாள்.

"சுவாரஸ்யமான கட்டுரை படித்துக்கொண்டிருந்தேன், நேரம் போனது தெரியாமல்," என்று விளக்கினார்

உதவிக் கமிஷனர். "அமெரிக்காவிலே போன வருஷம் கொலைக் குற்றத்துக்காக எத்தனை பேரை மின்சார நாற்காலியில் கொன்றார்கள். எத்தனை பேருக்குத் தூக்குத் தண்டனை போட்டார்கள், எத்தனை பேருக்கு ஆயுள் தண்டனை......"

"போதும், நிறுத்துங்கள். நல்ல கண்ணராவிக் கணக்கு!"— வெலவெலத்துப் போன மீனலோசனி தன்னை அடக்கமாட்டாதவளாகக் கூவி விட்டாள்.

"ஏய்!" என்று அதட்டிய சாரங்கபாணி, சாலையோரமாகக் காரை நிறுத்திவிட்டு, மனைவியின் முகத்தைத் தன் பக்கம் முரட்டுத்தனமாகத் திருப்பி அவள் கண்களை உறுத்துப் பார்த்தார். "என்ன வந்துவிட்டது உனக்கு? இத்தனை நெர்வஸாக ஏன் இருக்கிறாய் ஒரு வாரமாக?" என்று திகைத்துப் போன குரலில் கேட்டார்.

நடாலென்று அவர் மீது சாய்ந்து, ஹோவென்று கதறிவிட வேண்டும் போலிருந்தது மீனலோசனிக்கு. தன் உள்ளத்தைக் குடைந்து கொண்டிருக்கும் வேதனையை அவரிடம் உடைத்துச் சொல்லிவிட்டால் என்ன? ராதாவைப் பற்றி மணி சொன்ன தகவலையும், அதை வெளிப்படுத்தாமல் இருப்பதற்காக அவன் கேட்ட பரிசையும் இதோ இப்போதே சொல்லிவிட்டால்? வாழ்க்கைப் பட்ட நாள்தொட்டு இதுவரை எதையும் அவரிடம் மறைத்தறியாள் அவள். எந்தச் சந்தர்ப்பத்திலும் அவளைக் கைவிட்டவரல்ல அவர். அந்தப் பிள்ளையோ, வந்திருக்கிற ஆபத்தை உணராமல் விளையாட்டுப் பண்ணுகிறான். இப்போது இவர் துணையையும் உதறிவிட்டால் உலகத்தில் வேறு யார் வந்து கை கொடுக்கப் போகிறார்கள் அப்புறம்?

அடுத்த கணம் அவள் அறிவு விழித்துக் கொண்டது. 'பைத்தியக்காரி! பக்கத்திலே இத்தனை பரிவுடன் உட்கார்ந்திருப்பவர் கணவர் மட்டுமல்ல, பெரிய போலீஸ் அதிகாரியும் கூட. பாசம், பந்தம் என்றெல்லாம் உனக்குத்



தான் உண்டு. கடமையை மட்டுமே பெரிதாக நினைக்கிறவரிடம் போய் ராதாவைப் பற்றிச் சொன்னால் வேறு வினையே வேண்டாம்!' என்று எச்சரித்தது.

முகபாவத்தை மாற்றிக் கொண்டாள் உடனேயே. ஒரு மெல்லிய புன்னகையுடன், "எனக்கு என்ன? ஒன்றுமில்லை. நன்றாய்த்தான் இருக்கிறேன். கொஞ்சம் மனக்கவலை. அவ்வளவுதான்," என்றாள்.

"அட! அப்படி என்ன மேடம் மனக் கவலை?" என்றார் சாரங்கபாணி.

"சத்யாவின் கல்யாண விஷயம்தான்..." என்று கூறிவிட்டு அவர் முகத்தைப் பார்த்தாள் மீனலோசனி.

"ஆமாம், கவலிக்க வேண்டியதுதான்," என்ற சாரங்கபாணி, ஸ்டீயரிங் சக்கரத்துக்குப் பக்கத்திலிருந்த சிறு அறையைத் திறந்து ஓர் அழைப்பிதழை எடுத்து அவளிடம் தந்தார். "டாக்டர் சம்பத்தின் நர்ஸிங்ஹோமின் நாளைக்குக் கிரகப் பிரவேசம். இன்விடேஷன் அனுப்பியிருக்கிறார்கள்," என்றார்.

மீனலோசனியின் பதற்றம் அதிகரித்தது. 'ஐயோ கடவுளே! இப்போது எதற்கு அந்தப் பிள்ளையாண்டானைப் பற்றி இவர் பேசவேண்டும்?......'

சாரங்கபாணி தொடர்ந்தார்: "இவன் தகப்பன் பெரிய எம்டன். மனை தருகிறேன், நர்ஸிங்ஹோம் கட்டித் தருகிறேன் என்று இந்தப் பிள்ளையை வளைக்க நினைத்திருந்தேன். அதற்கு இடம் கொடுக்காமல் பண்ணிவிட்டான் தகப்பன்காரன். அதனாலே இனிமேல் சத்யாவுக்கு வேறே இடம் பார்த்தால் நல்லதுதான்."

'அம்மாடி' என்று நெஞ்சைத் தடவிக் கொண்டாள் மீனலோசனி. ஆனால் அதன் பின்னரும் அவள் பதற்றம் முற்றிலும் ஓயவில்லை. எப்படி ஆரம்பிப்பதென்று தெரியவில்லை "வந்து...... வந்து...... எனக்கென்ன தோன்றுகிறதென்றால்...... ஏழெட்டு வருஷமாய் நெருங்கிப் பழகு

கிறார்கள்... அவனும் கௌரவமான வேலையில், கண்ணுக்கு லட்சணமாய்... யோக்கியமானவனாய்...''

''பெயரைச் சொல்லு.''

''வந்து... மணியைத்தான் சொல்கிறேன்...''

''மணி!'' பிரமித்துப் போய் மனைவியை வெறித்துப் பார்த்தார் சாரங்கபாணி. அடுத்த விநாடி, பெரிய தமாஷைக் கேட்டவர் போல, ''மணி! ஹாஹ்ஹா! மணியாம்! மணி என்றா சொன்னாய்? ஹோஹ்ஹோ!'' என்று சிரித்துக்கொண்டே காரைக் கிளப்பினார்.

வழிநெடுகச் சாரங்கபாணி சிரித்துக் கொண்டே யிருந்தார்.

பங்களாவை அடைந்ததும் மாடிப் படியில் தாவித் தாவி ஏறி, ''சத்யா! கேட்டாயா உன் அம்மா சொல்வதை! ஹாஹ்ஹா! என்ன ஜோக்!'' என்று இரைந்து சொன்னவாறே சென்றார்.

மாடியறையில் படித்துக் கொண்டிருந்த சத்யா, புத்தகத்தைக் கவிழ்த்து வைத்துவிட்டு வெளியே வந்து, ''என்னப்பா விஷயம்?'' என்று கேட்டாள்.

''உன்னை மணிக்குக் கல்யாணம் செய்து தருவதாம்! எப்படி? மணிக்கு! உன் அம்மா சொல்கிறாள்! ஹாஹ்ஹா!''

''ஏனப்பா, மணிக்கு என்ன குறை?'' என்று கேட்டாள் சத்யா.

## நாற்பத்து மூன்று

தலையில் இடி விழுந்திருந்தால்கூட அப்படி அதிர்ச்சி அடைந்திருக்க மாட்டார் சாரங்கபாணி.

கண்ணுக்குத் தெரியாத ஒரு பயங்கர சக்தி அவருடைய வாயைக் கட்டிப்போட்ட மாதிரி, அவருடைய நகைப்பு



சரேலென நின்றது. வீசியாடிய ஊஞ்சலில் ஒரு கயிறு மட்டும் படக்கென்று அறுந்து கொண்டாற்போல அவருடைய வாய் பாதி திறந்து, விகாரமாய் அப்படியே நின்றது.

''என்னப்பா அப்படிப் பார்க்கிறீர்கள்?'' என்று கேட்டுவிட்டுத் தன் மேசைக்குத் திரும்பினாள் சத்யா.

கவிழ்த்து வைத்திருந்த புத்தகத்தைக் கையிலெடுத்து, அதன் நுனிகளை நாணத்துடன் மடித்தும் பிரித்தும் குறும்பு செய்தவாறு நிற்கும் மகளை நம்ப மாட்டாதவராக நோக்கினார் சாரங்கபாணி. பிறகு தானும் அவள் அறைக்குள் பிரவேசித்து, சத்யாவின் மோவாயைத் தொட்டு, குனிந்திருந்த முகத்தை நிமிர்த்தினார், பார்த்தார்.

கலக்கத்துக்கும் அந்த முகத்துக்கும் வெகு தூரம் இருந்தது. துயரத்துக்கும் அதற்கும் எவ்விதமான சம்பந்தமும் இருக்கவில்லை. சொன்னதை உணர்ந்துதான் சொன்னாள் என்று தெரிவிக்கும் வகையில், அதிலே செம்மையும் அடக்கமும் பொலிவுமே தென்பட்டன.

அப்படியும்கூட, சாரங்கபாணியினால் செரித்துக் கொள்ள முடியவில்லை.

''நீ பைத்தியமா, உன் அம்மா பைத்தியமா என்று எனக்குப் புரியவில்லை,'' என்றார்.

''இரண்டு பேரும் நல்ல புத்தியோடுதான் இருக்கிறோம், அப்பா. நீங்கள் ஏன் மனசைக் குழப்பிக் கொள்கிறீர்கள்?''

நாற்காலியில் அமர்ந்தார் சாரங்கபாணி.

''மணி...... மணியை உனக்கு...'' சொல்லும்போதே, மிகக் கசப்பான பொருள் நாக்கில் பட்டுவிட்ட மாதிரி அருவருத்துக் கொண்டார்.

சத்யா தயங்கித் தயங்கிப் பேசினாள். ''அம்மாவிடம் நான் சொல்லக்கூட இல்லை. இருந்தாலும் என் மனத்தை அறிந்துதான் அவனும் சொன்ன மாதிரி இருக்கிறது...''

''உன்னுடைய படிப்பென்ன, என்னுடைய அந்தஸ்தென்ன? மணி என் கீழே வேலை செய்கிற குமாஸ்தா...''

''கிராஜுவேட் தானே? டிபார்ட்மெண்டலாக எத்தனை பரீட்சை எழுதலாம்! எழுதி, மேல் பதவிகளுக்கு வரலாம் ஏன், நீங்கள் பார்த்து அவரைக் கைதூக்கிவிட்டு முன்னுக்குக் கொண்டு வர முடியாதா அப்பா?''

அவள் வாதாட வாதாட, சாரங்கபாணியின் குழப்பம் அதிகரித்ததுதான் மிச்சம். ''சகிக்கவில்லை இந்தச் சமாசாரம்,'' என்று படபடப்போடு கூறிவிட்டு, மாடியிலிருந்து இறங்கிக் கீழே வந்தார்.

அத்தனை நேரமும் மீனலோசனி மாடிப்படியின் கீழே தான் நின்றுகொண்டிருந்தாள். கடகடவென்று வெறி பிடித்த மாதிரி சிரித்துக் கொண்டு மேலே ஏறிச் சென்ற கணவர் எப்படித் திரும்பி வருவாரோ என்ற கவலையுடன் அண்ணாந்து நோக்கியவாறே இருந்தது அவள் முகம். செய்தியைக் கேட்டு, சத்யா வேறே என்ன கோபத்துடனும் ஆங்காரத்துடனும் பாய்ந்து கொண்டு வரப்போகிறாளோ என்ற அச்சமும் அவள் பார்வையில் கலந்திருந்தது. அல்லது இரண்டு பேருமே சிரித்துக்கொண்டு இறங்கி வருவார்களோ என்றும் குழம்பிக் கொண்டிருந்தாள்.

அவளை ஒரு வினாடி முறைத்துப் பார்த்தார் சாரங்கபாணி. பிறகு பேசாமலே போய் விட்டார். மீனலோசனியின் பயம் அதிகரித்தது. கணவரின் பின்னாலேயே சென்று, ''வந்து... சத்யா என்ன சொல்கிறாள்?'' என்று விசாரித்தாள்.

''சொன்னாள், சுரைக்காய்க்கு உப்பில்லை என்று!'' சீறினார் சாரங்கபாணி, ''என்னிடம் இப்போதுதான் சொல்கிறாய். ஆனால், உன் பெண்ணின் மனசை ரொம்ப



நாளாகவே கெடுத்துக் கொண்டு வருகிறாய் என்று இப்போதல்லவா தெரிகிறது?''

''அவளை... நான்... என்ன கெடுத்தேன் என்கிறீர்கள்?''

''பின்னே? நீதான் மட்டித்தனமாய்ப் பிதற்றினாய் என்றால், மேதாவிப் பெண்ணும் 'ஆமாம் அப்பா' என்கிறாளே. இந்தக் கூத்துக்கு நான் எங்கே போய் முட்டிக்கொள்ளட்டும்?'' என்று சுவீரென்று தன் நெற்றியில் அடித்துக் கொண்டார் சாரங்கபாணி. ''தயவு பண்ணிக் கொஞ்ச நேரத்துக்கு என் கண்ணில் படாமல் எங்கேயானும் இரு. எனக்குப் பற்றிக்கொண்டு வருகிறது!''

மீனலோசனி திகைத்து நின்றாள். கூடவே ஆறுதலும் பிறந்தது.

சத்யாவுக்கும் இந்தச் சம்பந்தத்தில் சம்மதம்தானா? மணியைப் பண்ணிக் கொள்கிறேன் என்று அவளும் தெரிவித்து விட்டாளா?

மாடிப்படியில் அவள் ஏறுவது கிடையாது, மூச்சு வாங்குகிறது என்பதால். ஆனாலும், இப்போது தன் சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்வதற்கும் நிம்மதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் சத்யாவை நேரே கேட்கத்தான் வேண்டும் என்று முடிவு செய்தவளாக ஒவ்வொரு படியாக, முடிந்த மட்டில் வேகமாக ஏறினாள்.

சத்யாவின் அறையைச் சமீபித்தபோது திடீரென வேறோர் எண்ணம் தோன்றியது. நின்றாள்.

தன்னை மிரட்டிய மாதிரி அவளையும் மிரட்டியிருப்பானோ மணி? ராதாவைக் காப்பாற்றுவதற்காகத் தான் பணிந்த மாதிரி சத்யாவும் பணிந்திருப்பாளோ? இருக்காது.

'என் வயிற்றில் பிறந்து, என் கையால் வளர்த்த மகளை எனக்குத் தெரியாதா? என்னைப்போல் கோழை

இல்லை சத்யா. எந்த மிரட்டலுக்கும் பணிந்து தன் மனதை மாற்றிக்கொள்ள மாட்டான். அவனுக்காகவே மணியிடம் ஏதோ நெருக்கம் ஏற்பட்டிருக்கிறது... அவரிடம் நான் சும்மாவாவது சொன்னேனே, இத்தனை நாள் கூடவே பழகியதால் அவர்களுக்குள் ஒரு இது ஏற்பட்டுவிட்டதென்று. அதுவே உண்மையாயும் இருக்குமோ?'

மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு பெண்ணின் அறைக்குள் நுழைந்தாள் மீனலோசனி. ''என்னம்மா?'' என்று வினவிய சத்யாவை மெதுவே தன் மார்போடு சாத்திக்கொண்டு, ''ஏதோ...... அப்படி ஒரு எண்ணம் என்று அப்பாகிட்டே சொன்னேன் சத்யா... நீ வந்து... எனக்காக ஒப்புக்கொண்டாயா?'' என்று கேட்டாள்.

சத்யா சிரித்தபடி, ''ஏம்மா, எனக்கு என்ன வயது ஆகிறது என்கிறாய்?'' என்றாள்.

''வந்து... வருகிற சித்திரைக்கு இருபத்தொன்று நிறைகிறது. ஏன்?''

''இந்த இருபத்தொரு வருஷத்தில், 'ஐயோ பாவம், அம்மாவுக்காக' என்று நான் எந்தக் காரியமாவது செய்த துண்டா?''

''உனக்கு இஷ்டம்தானா அப்படியானால்?''

''ஏனம்மா குரலிலே கடுகத்தனைகூடச் சந்தோஷமில்லாமல் கேட்கிறாய்? உனக்குத்தான் இதிலே திருப்தியில்லை என்று தோன்றுகிறது.'' என்று சத்யா கூறியதும் மீனலோசனிக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''சீ சீ, எனக்கும் சந்தோஷம்தான்,'' என்று கூறும் போதே, அவள் உள்ளம் சோகத்தில் தோய்ந்து கொண்டிருந்தது. ''என்ன இருந்தாலும் ஒரு தாயாரின் மனசு தனிதானே, சத்யா? முன்னெல்லாம் என்னவோ நினைத்திருந்தேன் உறவு முறையிலே எவ்வளவோ விமரிசையாய் நடக்குமென்று. அது எப்படியோ போய்விட்டது. பரவாயில்லை. நல்ல பணக்கார இடத்திலே, உன் படிப்புக்கும் அந்தஸ்துக்கும் தகுந்த மாதிரி...''



''பணமா அம்மா பெரிது? கண்ணுக்கு லட்சணமாயிருக்க வேண்டும். வாலிபமாய், ஆரோக்கியமாய் இருக்க வேண்டும். நல்ல குணமுள்ளவராக இருக்கவேண்டும்...'' என்று சத்யா சொன்னபோது மீனலோசனிக்குச் சுருக்கென்றது. 'முதல் இரண்டும் சரிதான். ஆனால் நல்ல குணம் உள்ளவனாக... மணியா? ஈசுவரா! ஏன்தான் என்னை இப்படி வாட்டுகிறாயோ?'

ஆபீசர்ஸ் கிளப்பில் பகல் சாப்பாடு சாப்பிட்டிருக்கலாம். ஆனால் உணவை ருசிக்கும் மனநிலையில் சாரங்கபாணி இல்லை.

ஓய்வு அறையில், மின்சார விசிறியைப் போலவே அவரது எண்ணங்களும் சுழன்றன.

கூண்டிலடைபட்ட புலிபோல் உலவிக் கொண்டிருந்தார் அவர், குறுக்கும் நெடுக்குமாக.

குடும்பத்தில் ஏற்பட்டிருந்த இந்த இரண்டாவது திருப்பத்தை இன்னும் அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை.

இதிலே என்னவோ மர்மம்— ஆங்கிலத்தில் 'ஸம்திங் ஃபிஷி' என்பார்களே அப்படியொன்று— புதைந்திருப்பது போல் தோன்றியதேயொழிய அது என்னவாக இருக்கும் என்பது அவருக்குப் புலப்படவில்லை.

டக் கடகட டக்.

பக்கத்து அறையில் பில்லியர்டு பந்துகள் ஒன்றோடொன்று மோதின. பெரிய இடத்துப் பூசல்களைப்போல, அந்த மோதலின் ஓசை ஆழமாயும் கனமாயும் வெளி ஆர்ப்பாட்டமில்லாமலும் கேட்டது.

''பெரிய தலைவலி முடிந்தது போம்!'' என்று ஆட்டக்காரர்களில் ஒருவர் பேசிக் கொண்டிருந்தார். ''அந்த

மயிலாப்பூர் ஆயுர்வேத ஆஸ்பத்திரி விவகாரம் நேற்றோடு முடிந்தது. அதை செலிபரேட் பண்ணுவதற்காக இன்று லீவ் போட்டு விட்டு வந்தேன்.''

''முந்தின சாமியார் நடத்தமுடியாதென்று கொடுத்ததை இந்தச் சாமியார் ஏற்று நடத்தப் போகிறாராமா? சும்மா கதை.''

''உமக்குத் தெரியாது. போலீஸ் சாரங்கபாணி இல்லை, அவரோட மைத்துனர் பிள்ளைதானே இந்தச் சாமியார்? எக்கச்சக்கமாய் இவன் பணம் அவர் கிட்டே மாட்டிக் கொண்டிருக்கிறது. அது எப்படியும் கிடைத்து விடும் என்ற நம்பிக்கையால் இந்த ஸ்பெலோ......''

''இருக்கலாம், இருக்கலாம்,'' என்று ஆமோதித்தார் இரண்டாமவர். ''இந்த ராதானந்தர் சுத்தச் சிறு பிள்ளை. எசுப்பட்ட காரியங்களில் காலை விட்டுக் கொண்டிருக்கிறார் போல் தெரிகிறது. எப்படியும் பணம் தேவை, லட்சம் லட்சமாய். இல்லாவிட்டால் பவானி மடத்தின் மானம், சாந்தோம் காற்றிலே பறந்துவிடுமாம்!''

பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த சாரங்கபாணி திடுக்கிட்டு நிமிர்ந்து அமர்ந்தார்.

ராதானந்தருக்குப் பணமுடை!

இரண்டு நிமிடங்களில் அவர் முகம் மலர்ந்தது. கைக்கடியாரத்தைப் பார்த்தார். மணி இரண்டு நாற்பது. இப்போதே புறப்பட்டால், பாங்க் செக்ரட்டரியைச் சந்தித்து எல்லாக் காரியங்களையும் சாயங்காலமே முடித்துக் கொள்ளலாம்.

பரபரவென்று எழுந்தார் சாரங்கபாணி.

சாயந்திரம் ஐந்து மணிக்கு அவர் பவானி மடத்தினுள் நுழைந்தபோது அவருடைய கார் பல இடங்களுக்கு அலைந்து பல மைல்களுக்கு ஓடிவிட்டது.



சட்டைப் பையிலிருந்த டிராஃப்டை ஒருமுறை தொட்டுப் பார்த்துக் கொண்டார்.

அவருடைய அகமும் முகமும் தெளிவாயிருந்தன.

'சத்யா! என்னையே மடக்கப் பார்த்தாயே!' என்று நினைத்துக் கொண்டார்— கோபமில்லாமல். மகள்மீது அவருக்குப் பிரியமும் பெருமையுமே ஏற்பட்டிருந்தன இப்போது.

சத்யாவின் நோக்கம் அவருக்குத் தெரிந்துவிட்டது.

அத்தானின்— ராதானந்த சுவாமிகளின்— பண நெருக்கடி அவளுக்குத் தெரிந்திருக்கிறது. அப்பாவிடமிருந்து பணத்தைப் பெற்று அவரிடம் தர நினைத்திருக்கிறாள். அதைச் செய்யத்தான் இந்தக் கெட்டிக்காரத் திட்டம்.

'ராதானந்தரை மற. வேறு யாரையேனும் கல்யாணம் செய்துகொள். உன் அத்தானின் பணத்தை அவன் மூஞ்சியில் எறிந்து விடுகிறேன்,' என்று அப்பா சொல்லியிருக்கிறார். ஆகவே வேறொருவரை மணக்கத் தான் தயார் என்று சொல்லுகிறாள் சத்யா. டாக்டர் சம்பத்தின் பெயரைச் சொன்னால் அப்பா சம்மதித்து விடுவார். கல்யாணம் நடந்துவிடும். அது கூடாது. ஆகவே மணியின் பெயர். அப்பா சம்மதிக்க மாட்டார். ஆனால் அத்தானின் பணத்தைத் தர அதற்கப்புறம் மறுக்க முடியாது! அதற்குச் சாக்குக் கிடையாது.

'சத்யா! நீயே இத்தனை சாமர்த்தியக்காரியானால் உன் அப்பா எத்தனை சாமர்த்தியக்காரனாக இருக்க வேண்டும்!' என்று மனத்துக்குள் சிரித்துக்கொண்டார் சாரங்கபாணி

''ராதா...... ராதானந்த சுவாமிகளை எங்கே பார்க்கலாம்?'' என்று மடத்தினுள் நுழைந்து விசாரித்தார்.

''நேரே போங்கள்,'' என்று யாரோ கை காட்டினார்கள்.

# நாற்பத்து நான்கு

''டெபுடி கமிஷனரா? அதிசயமாயிருக்கிறதே!''

ராதானந்தர் வியப்பு நிரம்பிய குரலில் அழைத்தார்.

சாரங்கபாணி சட்டைப் பையிலிருந்து டிராஃப்டை எடுத்து ராதானந்தரின் முன்னே வைத்தார்.

''எட்டரை லட்சத்துக்கு டிராஃப்டு. ஒரு மாத அவகாசம் கொடுத்தால் பாக்கியையும் கணக்குப் பார்த்துத் தீர்த்துவிடுகிறேன்,'' என்றார்.

வழவழப்பான அந்த டிராஃப்டு காகிதத்தை விரல்களால் நீவியவண்ணம் அதையே பார்த்துக் கொண்டிருந்தார் ராதானந்தர். பிறகு, ''ஹூம். ஆண்டவன் சித்தம்,'' என்று சொல்லி, கையிலிருந்த புத்தகத்தைப் பிரித்து அதற்குள் வைத்தார்.

''என்ன கஷ்டமிருந்தாலும் அந்த மயிலாப்பூர் ஆயுர்வேத ஆஸ்பத்திரியை மட்டுமே எடுத்து நடத்துவது என்று தீர்மானம் செய்தோம். 'முதலில் நீ தீர்மானத்தைச் செய்துகொள். பிறகு, நான் உதவிக்கு வருகிறேன்' என்று தெய்வம் நினைத்திருந்தது போலிருக்கிறது!......''

சாரங்கபாணியின் மனம் நெகிழ்ச்சியுற்றிருந்தது. ராதானந்தரின் பணத்தைக் கொடுத்து விடுவது என்று எப்போது முடிவு செய்தாரோ, அப்போதே அவரைப் பற்றிய அபிப்பிராயங்களையும் மாற்றிக் கொண்டிருந்தார். முதல் தடவையாகத் தன் மைத்துனர் குமாரனை முற்றும் துறந்த துறவியாகக் கண்டவுடனேயே அவருக்குப் பரவசமும் பெருமிதமும் ஏற்பட்டுவிட்டன ராதானந்தரின் பதவிசான பேச்சையும் கேட்ட பிறகு, நமக்கு முன்பே நமது மனைவி இவரை மதிக்கவும் வணங்கவும் தெரிந்து கொண்டு விட்டாளே என்ற வெட்கம்கூட ஏற்பட்டது.

அவரது எண்ணங்களை ஊகித்த மாதிரி, ''ரொம்ப எதிர்பாராத காரியம்தான் செய்திருக்கிறீர்கள். இதில்



வேறு நோக்கம் எதுவும் இல்லையே?'' என்றார் ராதானந்தர்.

''நோக்கமா?'' சாரங்கபாணி சிரித்தார். ''கொடுக்க வேண்டிய வேளை வந்துவிட்டது என்று தோன்றியது. கொடுத்துவிட்டேன். பெற்றுக் கொண்டதற்கு ஒரு ரசீது தந்தால் போதும்.''

ராதானந்தர் மௌனமாகத் தலையசைத்தவாறு, அருகிலிருந்த மேசைமீது குனிந்து ஒரு காகிதத்தில் எழுதிக் கொடுத்தார்.

சாரங்கபாணி எழுந்து கொண்டார்.

''நீங்கள் பிரார்த்தனைக்கு இருக்கப் போவதில்லையா?''

''மன்னிக்க வேண்டும். டாக்டர் சம்பத்தின் புதிய நர்ஸிங்ஹோம் இன்று திறப்பு விழா. நான் கட்டாயம் இன்னொரு நாள் வருகிறேன்,'' என்று புறப்பட்டார் சாரங்கபாணி.

சுகாதார அமைச்சர் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டார். வழியனுப்புவதற்காகக் கார் வரை வந்த மணவாளனிடம், ''நர்ஸிங்ஹோம் ரொம்ப நன்றாய்க் கட்டியிருக்கிறீர்கள். இந்த ரிஸப்ஷனோடு நிறுத்தி விடாமல், அடுத்த ரிஸப்ஷனுக்கும் சீக்கிரத்திலேயே ஏற்பாடு செய்யுங்கள்,'' என்றார்.

டாக்டர் சம்பத் லஜ்ஜையுடன் சிரிக்க, மணவாளன், ''உங்கள் ஆசீர்வாதம் இருந்தால் அதுவும் நடந்து விடுகிறது,'' என்றார்.

பெரிய ஆஸ்பத்திரியின் டீன் உள்படப் பல புள்ளிகள் வருகை தந்திருந்தபோதிலும் டாக்டர் சம்பத்தின் கண்கள் எதையோ தேடித் தேடி அலைந்தன.

ஏன் சத்யாவை இன்னும் காணோம்? அத்தனை தூரம் படித்துப் படித்துச் சொல்லியிருந்தும்......

''எல்லாம் மாடர்னாயிருக்கிறது, டாக்டர்,'' என்று யாரோ அவர் கையைக் குலுக்கினார்கள். இன்னொருவர், ''நீர்தானே இன்று ஹீரோ? பாட்டுக் கச்சேரியில் நடுநாயக

மாய் வந்து உட்காராமல் இங்கே நின்றுகொண்டால் எப்படி?'' என்று உள்ளே வரும்படி இழுத்தார் அவரை. யாரோ கூல் டிரிங்கைக் குடித்துவிட்டு நாற்காலி அடியிலே வைத்திருந்த கண்ணாடி டம்ளர் ஓர் அம்மாளின் காலில் இடறி ணங்கென்று விரித்தது. ''ஸ்டேட்ஸிலே இரண்டு வருஷம் ட்ரெயினிங் ஆகித்தானே வரணும்?'' என்று எவரைப் பற்றியோ ஒரு விளக்கம் தரப்பட்டுக் கொண்டிருந்தது. இவைகளை ஒருபுறம் கவனித்தவாறே சத்யாவையும் தேடிக் கொண்டிருந்தார் டாக்டர் சம்பத்.

அதோ!

சாரங்கபாணியின் கார் எதிர்ச்சாரியில் நிறுத்தப் படுவது தெரிந்தது.

''இதைக் கொஞ்சம் பிடியுங்கள்,'' என்று வெள்ளிச் சந்தனப் பேலாவைத் தகப்பனாரின் கையில் திணித்து விட்டு, வந்தவரை வரவேற்க விரைந்தார் சம்பத்.

மணவாளன் மகனுடைய அவசர காரணத்தைப் புரிந்து கொண்டு, தமக்குள் நகைத்துக் கொண்டார்.

காரை நெருங்கியதும் டாக்டர் சம்பத்தின் முகம் ஏமாற்றத்தால் கூம்பியது— சாரங்கபாணி மட்டுமே தனியே வந்திருப்பதைக் கண்டு.

ஆனால் அவருடைய ஏமாற்றத்தைச் சாரங்கபாணி கவனித்துக் கொண்டு நிற்கவில்லை. வாழை மரமும் தோரணமும் அலங்காரப் பந்தலும் மின்விளக்குமாய் அமர்க்களப்படும் நர்ஸிங்ஹோமைப் பார்த்தவாறு சில விநாடிகள் பிரமித்து நின்றார்.

''அப்பா! டெபுடி கமிஷனர் வந்திருக்கிறார்,'' என்று அறிமுகப்படுத்தினார் சம்பத்

சந்தனக் கிண்ணத்தில் இல்லாத துரும்பை அகற்ற முயலும் சாக்கில் தலைநிமிராமலே இருந்த மணவாளன், அப்போதுதான் கவனித்த மாதிரி, ''அடடா! வாருங்கள், வாருங்கள்.'' என்று வரவேற்று, ''யாரடா அங்கே தாமோதரம்? கூல்டிரிங் கொண்டு வா. ஸாரை உள்ளே எல்லாம் அழைத்துக் கொண்டுபோய்க் காட்டுகிறேன்.



வாருங்கள் சார்,'' என்று உள்புறம் அழைத்துச் சென்றார்.

பிள்ளையையும் தன்னையும் கௌரவிப்பதற்காகச் சாரங்கபாணி வந்திருக்கிறபோது, பழைய கசப்பைக் காட்டிக்கொள்ளக் கூடாது என்று மணவாளன் எண்ணியிருந்தார். மனத்துக்கு மனமே சாட்சி என்பது உண்மை தான். அவரைப் போலவே சாரங்கபாணிக்கும் இணக்கமான மனப்பாங்கு ஏற்பட்டது. நர்ஸிங் ஹோம் கட்டப்பட்டிருந்த அழகைத் தாராளமாகப் பாராட்டிக் கொண்டே வந்தார். 'முன்பொருமுறை இந்தச் சம்பந்தத்தை உதறியது முட்டாள்தனம். எப்படியும் மறுபடி முயன்று பார்க்க வேண்டும்' என்று அவருக்குத் தோன்றிக் கொண்டேயிருந்தது.

கடைசியாக ரிஸப்ஷன் கச்சேரி நடைபெற்றுக் கொண்டிருந்த ஹாலை அடைந்து முன் வரிசை நாற்காலியொன்றில் அப்பாடா என்று உட்கார்ந்து கொண்டார்.

வேலையில்லாத வெட்டிப் பேர்வழிகளுக்காக ஏற்பட்டதுதான் சங்கீதம் என்பது அவருடைய சொந்தக் கருத்து. அதுவும் கொஞ்ச நாளாக, கல்யாண மண்டபங்களின் ஒலி பெருக்கி நியூசென்ஸைப் பற்றி ஏராளமான புகார்கள் பத்திரிகைகளில் வெளிவந்து கொண்டிருந்தன. கமிஷனர் கூட ஒரு சமயம் அவரிடம், ''மிஸ்டர் சாரங்கபாணி, நீங்களாவது இதற்கு ஏதாவது வழி பண்ணக்கூடாதா?'' என்று கேட்டிருந்தார். ஆகவே, சங்கீதத்திலும் 'வரவேற்பு சங்கீதம்' என்பது ஒழிக்கப்பட வேண்டிய சத்துரு என்றுதான் அவர் முடிவு கட்டி இருந்தார். இருந்தாலும் உள்ளத்தின் அப்போதைய உல்லாச நிலையில், 'பாவம், பாட்டுக்காரர்களும் பிழைக்கத்தானே வேண்டும்' என்று மன்னிக்கத் தயாரானார்.

அவர் உட்கார்ந்து இரண்டு நிமிடம் ஆகியிருக்காது.

''இதோ, உங்கள் அப்பாகூட இங்கேதான் இருக்கிறார். வாருங்கள். நீங்களும் உட்காரலாமே மணி?''

டாக்டர் சம்பத் சுறுசுறுப்புடன் உபசாரம் செய்து விட்டு அகன்றுவிட்டார்.

குபீரென்று தீப்பிடித்த மாதிரி சாரங்கபாணியின் உடம்பெல்லாம் எரிந்தது.

அவருக்கு இந்தண்டை நாற்காலியில் குதம்பத்தின் மணம் வீச, அந்தண்டை நாற்காலியில் சென்ட்டின் நெடி அடித்தது. மணி, சத்யா இருவரும் சேர்ந்து வந்திருக்கிறார்கள்!

''காலையில் நான் எழுந்திருப்பதற்கு முன்னாலேயே புறப்பட்டு விட்டீர்களே அப்பா!'' என்று சத்யா எதுவும் நடவாத மாதிரி பேசினாள். ''அம்மா கவலைப்பட்டாள் என்று உங்கள் ஆபீசுக்குக்கூடப் போன் பண்ணிப் பார்த்தேன்.''

''நான்தான் டெலிபோனை எடுத்து, 'இங்கே வரலேயில்லை. வேறெங்கேயோ போயிருக்கிறார் போலிருக்கிறது' என்று சொன்னேனே, சத்யா?'' என்றான் மணி மறுபுற நாற்காலியிலிருந்து.

கண்ணில் பொறி பறக்கச் சரேலென எழுந்திருக்க முனைந்த தந்தையை, மெல்லத் தொடையில் அழுத்தித் திரும்ப உட்கார்த்தினாள் சத்யா. ''என்னப்பா இது, பண்பாடில்லாமல்? உங்கள் கோபத்தையெல்லாம் இங்கே வந்தா காட்டுவது?'' என்று அவள் சொல்லாமல் சொன்னாள்.

திடீரென்று அவருக்குச் சிரிப்பு வந்தது. கஷ்டத்துடன் அடக்கிக் கொண்டார். மறந்திருந்தது நினைவுக்கு வந்தது. மகள் நடிக்கிறாள்! அப்பாவை மிரட்டுவது என்ற தீர்மானத்தை எவ்வளவு தூரம் அமுலாக்க முடியுமோ அவ்வளவு தூரம் செய்கிறாள்! அதை இந்த மடையனும் நம்பிக்கொண்டிருக்கிறான்!

நகைப்பை விழுங்கிக் கொண்டு, சட்டைப் பையிலிருந்து ராதானந்தரின் ரசிதைத் தொட்டுப் பார்த்துக் கொண்டார் சாரங்கபாணி.



''நான் இனிமேல் உங்களுடைய பர்சனல் அஸிஸ்டெண்ட் அல்ல சார்,'' என்று தாழ்ந்த தொனியில், ஆனால் அகங்காரம் நிறைந்த புன்சிரிப்புடன் குறுக்கிட்டான் மணி. ''உறவுகளெல்லாம் மாறப் போகிற போது, உத்தியோகம் பழையபடி இருக்கலாமா? ஸென்ட்ரல் இன்டலிஜென்ஸுக்கு வேலை கேட்டு விண்ணப்பம் செய்திருக்கிறேன். உங்கள் எண்டார்ஸ்மெண்ட்டுக்காக மேஜைமீது காத்திருக்கிறது. நாளைக்கு ஆபீசுக்கு வந்ததும் அதில் கையெழுத்திட்டு விடுங்கள்.''

''ஆகா! அப்படியே செய்து விடுகிறேனப்பா!'' என்று இன்டலாகப் பேசினார் உதவி கமிஷனர்.

மணியை ஒரு சாக்காக வைத்து சத்யா சும்மா மிரட்டுகிறாள் என்று நினைத்தது சரி. ஆனாலும் இவனும் அளவுக்கு மீறிக் கூத்தடிப்பதாவது?

என்னதான் நாடகம் என்றாலும், மணி உட்கார்ந்திருக்கும் பக்கமாகத் திரும்பக்கூட அவருடைய உடம்பு மறுத்தது. எனவே தரையைப் பார்த்துக் கொண்டு, அவனுக்கு மட்டுமே கேட்கும்படி கூறினார்:

''உன்னுடன் அப்புறம் பேசிக் கொள்கிறேன்; இப்போது மரியாதையாய் எழுந்து போய் வெளியே இரு. என் இடுப்புப் பையில் எப்போதும் என்ன வைத்திருப்பேன் என்று உனக்குத் தெரியும். இல்லையா?''

மணியின் கண்கள் தாழ்ந்து நகர்ந்தன. டெபுடி கமிஷனரின் காக்கி உடைக்குள்ளே புடைத்துத் திமிறிய அந்த எஃகு எமனின் வடிவத்தை அவன் கண்டு கொண்டான்.

ஆனால் சாவதானமாக எழுந்துகொண்டான். ஒரு சிகரெட்டை உதட்டில் பொருத்திக்கொண்டான். பிறகு தீப்பெட்டி தேடுகிறவன்போல் பாண்ட், புஷ் ஷர்ட் பைகளைத் தட்டிப் பார்த்துக் கொண்டான். தூரத்தில் யாரோ புகை பிடிப்பது அவன் கண்ணில் பட்டது போலும். முகமலர்ச்சியுடன் அவரை நோக்கி நடந்தான்.

சாரங்கபாணியின் கோபம் ஓரளவு இறங்கியது. ''நீ எதற்காக இப்படி நாடகம் நடத்துகிறாய் என்று எனக்குப் புரிந்துவிட்டது, சத்யா,' என்றார் இளகிய உணர்ச்சிகளுடன்.

தந்தை ஏதோ மிரட்டித்தான் மணியை அனுப்பி விட்டார் என்று சத்யா தெரிந்து கொண்டாள்.

''புரிந்ததோ புரியவில்லையோ, அவரை நீங்கள் அவமானப்படுத்துவதைத் தயவுசெய்து நிறுத்துங்கள். அது என்னையே அவமானப்படுத்தின மாதிரி.''

''அப்படியா? சரி. இதைப் பார்த்து விட்டுப் பேசு,'' என்று ராதானந்தரின் ரசீதைக் காட்டினார் சாரங்கபாணி.

மேலோடு பார்த்தாள் சத்யா. பிறகு, ''சந்தோஷம். ஆனால் இதற்கும் என் கல்யாணத்துக்கும் என்ன சம்பந்தம்?'' என்றாள்.

''இந்தப் பணத்தைக் கொடுத்துவிட வேண்டும் என்று என்னை மிரட்டத்தானே, மணியைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன் என்று பூச்சாண்டி காட்டினாய்? கொடுத்து விட்டேன். அப்புறம்?''

''அப்புறமா? அப்புறம், நாளைக்கு ஒரு ப்ரெயின் ஸ்பெஷலிஸ்டிடம் அழைத்துப் போகிறேன். சம்பந்தமில்லாத விஷயத்துக்கெல்லாம் முடிச்சுப் போடுகிற அளவுக்கு ஏன் உங்களுக்குப் புத்தி குழம்பிவிட்டது என்று அவரைக் கேட்கலாம்.'' சத்யா எழுந்து கொண்டாள். ''அப்பா! நான் மணியை மணக்கிறேன் என்றது வேறெதற்காகவுமல்ல. மணிக்காகவேதான். நீங்கள் செய்கிற எந்தக் காரியமும் அதிலிருந்து என்னைத் தடுத்து நிறுத்தாது. வரட்டுமா? அவர் காத்திருக்கிறார்.''

## நாற்பத்தைந்து

கச்சேரி நடந்து கொண்டுதான் இருந்தது.

''இப்படி உட்காருங்கள்,'' என்று சாரங்கபாணியின் பக்கத்தில் சத்யாவையும் மணியையும் அமர்த்தி விட்டுச்



சென்ற வினாடி முதல் டாக்டர் சம்பத் இருக்கை கொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தார்.

மறுகோடியில் பல நாற்காலிகள் எதிரும் புதிருமாகக் கலைந்திருந்தன, சண்டை போட்டுக் கொண்ட மாதிரி. ஆனால், அவற்றில் உட்கார்ந்திருந்தவர்கள், சம்பத்தின் நண்பர்களே. பளார் பளாரென்று முதுகுகளில் சொட்டு விழும் ஓசையும், அட்டகாசமான சிரிப்பின் ஒலியும், வரம்பு மீறிப் போகும்போது டாக்டர் சம்பத் தலையிட்டு, ''உஸ்! என்ன இது? மற்றவர்களெல்லாம் பாட்டுக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்,'' என்று சிரித்துக் கொண்டே அதட்டி விட்டுப் போவார். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் தானே திரும்பி வந்து, ''என்ன ஜோக்? எனக்கும் கொஞ்சம் சொல்லுங்களேன்!'' என்று கேட்பார். அதற்கடுத்த நிமிடம், புறப்பட்டுக்கொண்டிருக்கும் ஒருவருக்கு விடை கொடுப்பதோடு, மெடிகல் காலேஜில் அவர் மகனுக்கு இடம் பிடிக்க யாரைப் பிடிக்க வேண்டும் என்பதையும் ரகசியமாய்த் தெரிவிப்பார். இன்னொரு சந்தர்ப்பத்தில் பாடகருக்குக் கிரஷ் உடைத்து வைக்குமாறு ஒரு வேலையாளை ஏவுவார். அதற்கப்புறம் வாசல்புறத்தில் நிற்கும் தந்தையை அணுகி, ''மஃப்ளர் கட்டிக் கொண்டாவது இந்தப் பனியில் நிற்பானேன்? எட்டாகிவிட்டது. இனிமேல் யாரும் வரமாட்டார்கள். உள்ளே போய் ரெஸ்ட் எடுத்துக் கொள்ளுங்கள்,'' என்று கோபிப்பார்.

இவ்வளவு காரியங்களும் செய்து கொண்டே, அவற்றில் ஒட்டாமலும் இருந்தார் சம்பத். தாமரையிலை மீது தண்ணீர்கூடத்தான் குடுகுடுவென்று இங்குமங்குமாய் உருண்டு ஓடுகிறது!

அவருடைய எண்ணமும் பார்வையும் திரும்பத் திரும்ப சத்யாவையே வட்டமிட்டுக் கொண்டிருந்தன. உதடு சிரித்தபோதிலும் உள்ளம் புழுங்கிக் கொண்டிருந்தது வெகு நேரமாக, காரின் முன் புறத்தில் உட்கார்ந்து ஓட்டி வரும் மணியுடன் ஒட்டியவாறு

எப்போது சத்யா வந்திறங்கினாளோ அப்போது முதல்.

டாக்டர் என்ற முறையில் எத்தனையோ பெண்களுடன் எவ்வளவோ அந்தரங்கமான முறைகளில் பழகியவர்தான் அவர். உடல் என்பது விஞ்ஞான ரீதியில் ஆராயப்படுகிற பொருள் என்று எண்ணி வந்திருந்த டாக்டருக்குக்கூட, மணியோடு உராய்ந்து கொண்டு வந்த சத்யாவைக் கண்டு பொறாமையும் ஆத்திரமும் எழுந்தன.

இந்த நெருக்கத்துக்கு ஒரே ஒரு காரணம்தான் இருக்க முடியும். அப்படியானால்—

'அடிப் பாவி!' என்று அவர் நெஞ்சுக்குள் புழுங்கிக் கொண்டே, "வா சத்யா," என்று மலர்ச்சியுடன் அவளை வரவேற்றார். மணியை லட்சியம் செய்யாமலே, "இப்படி வா," என்று அவளை அழைத்துச் சென்றார், ரிசப்ஷன் மண்டபத்தின் முன்வரிசைக்கு. "ட்ரிங்க் கொண்டு வா," என்று யாருக்கோ கட்டளையிட்டுவிட்டு சத்யாவை அவள் தந்தைக்கருகே உட்கார்த்தி வைத்தார்.

இருவரும் சேர்ந்து உட்காராமல், சாரங்கபாணியின் ஒரு புறத்தில் மணியும் மற்றொரு புறத்தில் சத்யாவும் அமர்ந்து கொண்டதும் சிறிது ஆறுதல் பெற்றது அவர் உள்ளம்.

குளிர் பானங்களை வழங்கிவிட்டு, நண்பர்களின் கூட்டத்துக்குத் திரும்பிவிட்டாரெனினும், பல்வேறு அலுவல்களில் தம்மை மூழ்கடித்துக் கொள்ள முயன்றாரெனினும், பார்வை முன் வரிசைக்கே தாவியது. எங்கெங்கோ பறந்து திரிந்தாலும் கூட்டைத் திரும்ப அடையும் பறவைபோல, அவர் மனம் சத்யாவிடமே அடைக்கலம் புகுந்தது.

சத்யா! பொறுமை இல்லாத பேதைப் பெண்ணே! நான் பார்த்துக் கொள்கிறேன், சமாளித்துக் கொள்கிறேன் என்றெல்லாம் அந்தச் சனிக்கிழமை இரவு என்னிடம் சவால்விட்டாயே, அத்தனையும் இதற்குத்தானா? என் உதவியை மறுத்து விட்டு, நீயே வழி கண்டு கொள்கிறேன் என்றாயே, அது இந்த விபரீத வழிதானா?......

போன சனிக்கிழமையன்று இரவு தந்தையுடன் முதன் முதலாக இதே இடத்துக்கு வந்தது டாக்டர் சம்பத் நினைவில் எழுந்தது.

அப்பா போனதும், என்னவொரு ஆவேசத்துடன் சத்யாவை உடனே வரவழைத்து இந்தக் கட்டிடத்தைக் காட்ட வேண்டுமென்று துடிதுடித்தார் டாக்டர் சம்பத். அங்கேயே அப்போதே போன் செய்யலாமென்றால், நர்ஸிங் ஹோமுக்கு இன்னும் டெலிபோன் தரப்படவில்லை. என்ன ஆர்வத்துடன் கடற்கரைச் சாலையிலுள்ள டெலிபோன் கூண்டுக்கு ஓடினார்!

ஆனால், அதிர்ச்சிக்குமேல் அதிர்ச்சியான பல விஷயங்களை டாக்டர் சம்பத் அங்கே தெரிந்துகொள்ள நேர்ந்தது.

முதல் அதிர்ச்சி, டெபுடி போலீஸ் கமிஷனரின் கீழே குமாஸ்தாவாக இருக்கும் ஒரு சாதாரண ஆள், டெபுடி கமிஷனரின் மனைவியையே மிரட்டிக் கொண்டிருப்பது.

இரண்டாவது, மதிப்புக்குரிய துறவியாகப் பவானி மடத்தில் வீற்றிருக்கும் ராதானந்தர்— மீனலோசனியின் அண்ணன் மகன்— சத்யாவின் அத்தான்— காஷ்மீரில் ஒரு கொலையைச் செய்துவிட்டு ஓடி வந்திருப்பதாக மணி கூறியது.

மூன்றாவது பெரிய அதிர்ச்சி: இந்த ரகசியத்தை வெளியிடாதிருக்க மணி கேட்ட பரிசு. ராதானந்தரைத் தூக்கு மேடைக்குப் போகாமல் அவன் காப்பாற்றுவானாம். அதற்குப் பதிலுபகாரமாக, மீனலோசனி, தன் மகளை அந்த அயோக்கியனுக்குக் காவு கொடுக்க வேண்டுமாம்!

இவ்வளவு அதிர்ச்சிகளையும் கிடுகிடுவென்று ஒரே சமயத்தில் வாங்கிக்கொள்ள நேர்ந்ததால், டாக்டர் சம்பத்தின் உடம்பே தள்ளாடியது.

"சார், டெலிபோன் பண்ணப் போகிறீர்களா, பண்ணிவிட்டு வருகிறீர்களா?" என்று ஒரு ஜிப்பாக்காரர் கடுகடுத்தபிறகே அவர் சுதாரித்துக் கொண்டார். டெலிபோன் கூண்டின் கதவைப் பிடித்துக்கொண்டு நின்றிருப்பதை உணர்ந்தார். ஜிப்பாக்காரருக்கு வழிவிட்டு ஒதுங்கிக்கொண்டார். அந்த நபர் டெலிபோனைப் பயன்படுத்தி முடிப்பதற்குள் டாக்டர் சம்பத், தம் உணர்ச்சிகளை ஒருமுகப்படுத்தி நிதானித்துக் கொண்டார். அதற்குள் மீனலோசனியின் காரும் புறப்பட்டுவிட்டது.

நர்ஸிங் ஹோமைப் பற்றிய பெருமிதம், திடீரென்று அதைக் கண்டதால் ஏற்பட்ட பரவசம், அதை உடனே சத்யாவுக்குக் காண்பிக்க வேண்டுமென்ற துடிப்பு— அனைத்தும் சம்பத்தின் நெஞ்சினின்றும் மறைந்தன.

சத்யா, அவள் அத்தானுக்கு முளைத்திருக்கும் அபாயம், அவர்கள் குடும்பத்துக்கு விளைந்துள்ள பழி— இவை மட்டுமே அவர் இதயத்தைக் கசக்கலாயின.

தன்னுடைய பெருமையைப் பறைசாற்றிக் கொள்ள ஏராளமாய் அவகாசமிருக்கிறது. சத்யாவைக் காப்பாற்றத்தான் கடியாரத்தின் முட்கள் குறுகிக் கொண்டே போகின்றன.

டெலிபோன் கூண்டினுள் மறுபடி புகுந்தாரே தவிர, பதற்றம் முழுதும் குறையாததால், தேவையான நாணயம் உடனே கைக்குக் கிடைக்கவில்லை. ஆஸ்பத்திரியில் இன்று சத்யாவுக்கு 'டியூட்டி' என்று தெரிந்திருந்தாலும், எந்த இடத்துக்குக் கூப்பிட்டால் அவளுடன் பேசமுடியும் என்பது உடனே நினைவுக்கு வர மறுத்தது.

இறுதியில், அலுப்புடன் கொக்கியில் டெலிபோன் குழாயை எறிந்துவிட்டு, டெலிபோன் கூண்டின் கதவைத் திறந்தபடி போட்டுவிட்டு, கடற்கரைச் சாலை வழியே வேகமாக நடக்கலானார்.

வழியில் ஏதாவது டாக்ஸி கிடைக்கலாம் என்ற நம்பிக்கை, பர்லாங்குக்குப் பர்லாங்கு தேய்ந்து கொண்டே போயிற்று. இங்கொன்று அங்கொன்றாக பிரைவேட்



கார்கள் மட்டுமே பறந்தன. அதிலேகூட யாராவது ஒரு தெரிந்தவர், "ஹலோ டாக்டர்! எங்கே போகவேண்டும்?" என்று கூப்பிட மாட்டார்களா என்ற நைப்பாசையும் மடிந்த தருணத்தில் அவர் ஆஸ்பத்திரியையே அடைந்து விட்டார்.

இது அவருக்கு ட்யூட்டி நேரமல்ல. அப்படியே இருந்திருந்தாலும், இப்படி வேகமாகவும் பதற்றத்துடனும் வெராந்தாக்களில் அவர் நுழைந்தது கிடையாது. வார்டுகளில் விடி விளக்குகள் மட்டுமே முனகிக் கொண்டிருந்தன, சில கட்டில்களுக்குச் சுருதியாக. வார்டு நடுவே போடப்பட்ட மேஜைகளில் குனிந்து, குறிப்பேடுகளைப் பூர்த்தி செய்வதில் முனைந்திருந்தார்கள் நர்சுகள்.

"டாக்டர்! என்ன இது?"

பேசின் நிறைய ஐஸ் கட்டிகளை எடுத்துச் சென்று கொண்டிருந்த ஒரு ஸ்டாஃப் நர்ஸ் அவரை ஆச்சரியத்துடன் விசாரித்தாள்.

"சத்யாவைப் பார்த்தாயா லில்லி?"

"எச். எஸ். குவார்ட்டர்ஸ் பக்கம் இப்போதுதான் போனார். நான் போய்ச் சொல்கிறேன்," என்று வேகமாய்த் திரும்பினாள் அந்த நர்ஸ்.

இரண்டே நிமிடத்தில் அவள் பின்னால் வந்தாள் சத்யா, கையில் ஊசலாடும் ஸ்டெதாஸ்கோப்புடன் அவளுடைய வெண்ணிற ஓவர் கோட் பித்தான் மாட்டப்படாமல் திறந்தே இருந்ததால், நீலநிற டெரிகாட்டன் புடைவையும், மார்பில் புடைவைக்கு வெளிப்புறமாக எடுத்து விடப்பட்டிருந்த செயினும் பதக்கமும் அந்த மங்கிய ஒளியிலும் பளிச்சென்று பிரகாசித்தன. இறுக்கமான கொண்டையைத் தளர்த்திவிட்டுக் கொண்டிருந்த போது நர்ஸின் செய்தி கிடைத்தது போலும். கூந்தல் அலசரமாக அள்ளி முடிக்கப்பட்டிருந்தது.

கடல் காற்றில் கலைந்திருந்த டாக்டரின் கிராப்பையும், வேகமாய் வந்ததால் நெற்றியில் முத்திட்டிருந்த

வியர்வைத் துளிகளையும் கண்டு சத்யா திடுக்கிட்டாள். கொஞ்ச காலமாக, டாக்டர் சம்பத் மணப்பேட்டை மிட்டாதாரின் உடல் நிலையை அபிவிருத்தி செய்வதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார் என்று அவள் அறிவாள். ஏதோ ஸீரியஸாக ஆகிவிட்டிருக்க வேண்டும் என்று அவள் நினைத்திருக்க வேண்டும். அதே சமயம், அப்படி ஸீரியஸாகவிருந்தால் பெரிய டாக்டரிடம் போகாமல் தன்னைப் போன்ற கற்றுக்குட்டியிடம் வந்திருப்பாரா என்ற சந்தேகமும் உதித்தது. ஆகவே, ''அந்த மிட்டாதாருக்கு...டாக்டர் கே. ஜே.யைக் கூப்பிட்டுக் கொண்டு போக வந்தீர்களா...'' என்று குழம்பினாள்.

டாக்டர், ''தாங்க்ஸ் லில்லி, நீ போகலாம்,'' என்று நர்ஸை அனுப்பிவிட்டு, ''இப்படி வா,'' என்று வெராந்தாவின் கிராதிப்படியருகே அழைத்துச் சென்றார் சத்யாவை.

கீழேயிருந்த மைதானம் இருளில் அமுங்கிக் கிடந்தது. அதன் நான்கு விளிம்புகளுக்கும் எல்லை கிழித்தாற்போல வார்டுகளின் வெளிச்சம் கோடு கட்டியிருந்தது. குழாய்க்குப் பக்கமிருந்த சிறு மேடையில் இரண்டு காவல்காரர்கள் பீடி புகைத்துக் கொண்டிருந்தார்கள்.

கிராதியின் மீது இரு கைகளையும் அகட்டி ஊன்றிக் கொண்டபோது, மரச்சட்டத்தின் சிலாம்புகள் டாக்டரின் உள்ளங்கைகளை உறுத்தின.

''சத்யா, என்னைப் பரிபூரணமாக நம்பி, என்னிடம் எதையும் மறைக்காமல் பேசுவதாக முதலில் வாக்குக் கொடு,'' என்றார் சம்பத்.

ஓவர் கோட்டைக் கழற்றிப் பிடித்தவாறு அவரையே ஆவலுடன் நோக்கிக் கொண்டிருந்த சத்யா திடுக்கிட்டாள். இருந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாதிருப்பதே டாக்டரின் பதற்றத்தைக் குறைக்க வழி என்று நினைத்தவளாக, ''வாக்கு என்று ஒன்று தனியாகத் தர வேண்டுமா டாக்டர்; சொன்னாலும் சொல்லாவிட்டாலும் உங்களிடம்தான் எனக்குப் பரிபூரண நம்பிக்கை,



உங்களிடம்தான் நான் எதையும் ஒளிக்கவோ மறைக்கவோ மாட்டேன்,'' என்றாள் அழுத்தமாக.

''அப்படியானால்...'' அவள் புறம் திரும்பினார். ''உன் அத்தான் காஷ்மீரில் ஒரு பெண்ணைக் கொலை செய்துவிட்டு இங்கே ஓடி வந்து, சாமியார் வேடம் போடுகிறார் என்பது உண்மையா?''

''டாக்டர்!'' அரை நிமிடம் முன்பு செய்துகொண்ட சத்யாவின் சங்கல்பம் மறைந்து விட்டது. விவரிக்க இயலாத பீதியையும் திகைப்பையும் அவள் கண்களில் காண முடிந்தது. ஆனால் உடனே அதை மறைக்க முயன்றவளாக, பொய்யான சிரிப்பினால் ஒதுக்கப் பார்த்தாள். ''என்ன டாக்டர் இதெல்லாம்? நடு ராத்திரியில் வந்து என்னென்னவோ சொல்லிக்கொண்டு......''

''விளையாடுகிற விஷயமில்லை, சத்யா!'' என்றார் டாக்டர் கடுமையாக. ''உனக்கு ஒருத்திக்குத்தான் இது தெரியும் என்று நினைத்திருக்கிறாயே, அந்த நினைப்பை மாற்றிக் கொள். உன் அப்பாவின் பி.ஏ.வான மணிக்குத் தெரியும்.''

''மணிக்கா? மணி எப்படி......'' மூச்சுத் திணறிய மாதிரி சத்யாவுக்கு வார்த்தைகள் சிக்கிக் கொண்டன.

''ஜெகா என்று உனக்கு ஒரு தோழி உண்டா? அவள் உன்னோடு காஷ்மீருக்கு வந்தாளா?''

''ஆமாம், ஆமாம். ஆனால்......''

''அவள் மணிக்குச் சொல்ல, அதை வைத்து மணி உன் அம்மாவை மிரட்டிக் கொண்டிருப்பதை இந்த இரண்டு காதாலும் கேட்டு, இரண்டு கண்ணாலும் கண்டு, உன்னிடம் சொல்வதற்காகத்தான் ஓடி வந்தேன்.''

அருகிலிருந்த பெஞ்சியில் உட்கார்ந்தாள் சத்யா. ''டாக்டர்...... எனக்குத் தலை சுற்றுகிறது......''

சம்பத் தனது தவற்றை உடனே உணர்ந்துகொண்டார். சத்யாவைப் பீதியிலாழ்த்துவதற்காகவா ஓடோடி வந்தார்! அவளுக்குத் தைரியம் கொடுத்து, நிமிர்ந்து

நிற்குமாறு செய்ய வேண்டுமென்றல்லவா வந்தார்! அவரே மிரண்டதாகக் காட்டிக் கொள்ளலாமா?

''சத்யா!'' சிரித்த குரலில் அவள் முதுகில் தட்டினார் டாக்டர். ''பயந்து விட்டாயா என்ன? அசடே! இது இருபதாம் நூற்றாண்டா, காட்டுமிராண்டிகள் காலமா? எவனோ எங்கேயோ கொலை செய்தானென்று ஒரு பொய்யை வீசி, பிளாக்மெயில் பண்ணிவிட முடியுமா எவனாலும்?''

''இல்லை டாக்டர். உங்களுக்குத் தெரியாது,'' என்று அவசரமாகக் குறுக்கிட்டாள் சத்யா. ''மணி சொன்னது...''

அவள் நிறுத்தியதை முடித்தார் டாக்டர்: ''மணி சொன்னது உண்மை என்றே வைத்துக்கொண்டாலும், அதைச் சொல்லி ஒருவன் மிரட்டுவதென்றால், போலீஸ் எதற்கு, சட்டம் எதற்கு......''

சத்யாவின் தேகம் சிலிர்த்தது. அச்சம் நிரம்பிய விழிகளை அங்குமிங்கும் திருப்பியபடி, ''போதும், டாக்டர். இத்தோடு நிறுத்திக் கொள்வோம். இதைப் பற்றிப் பேசுவதுகூட அபாயம்,'' என்றாள்.

''சத்யா! நான் சொல்ல வந்ததை நீ முழுக்கக் கேட்கவில்லை. மணி உன் அம்மாளை என்னவென்று மிரட்டுகிறான் தெரியுமா?''

''என்னவென்று?''

''உன்னை அவனுக்கு கல்யாணம் செய்து தந்தால், அவள் அண்ணன் மகனைப்பற்றிய ரகசியத்தை வெளியே விடாமல் காப்பாற்றுகிறானாம், எப்படி இருக்கிறது, பார்த்தாயா!''

''என்னை...... அவனுக்கு......'' சத்யாவுக்கு அந்தத் திசையில் புத்தி செல்லவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. ''எதானாலும் சரி, நான் பார்த்துக் கொள்கிறேன். தயவுசெய்து இத்தோடு விட்டு விடுங்கள், அத்தானைப்பற்றிய பேச்சை!''



''சத்யா! அக்கிரமத்துக்குத் தலை வணங்கிப் போக வேண்டுமென்றா சொல்லுகிறாய்? நானில்லை உனக்குத் துணையாக? இந்த உடம்பில் ரத்தம் ஓடவில்லை? மானாவமானம், ரோஷம், நியாய உணர்ச்சி அத்தனையும் துடைத்துவிட்ட வெறும் மரக்கட்டை என்று என்னை மதிப்பிட்டு விட்டாயா? என்ன வந்தாலும், இதைக் கடைசி வரையில்......''

''வேண்டாம், வேண்டாம்,'' என்று அவரது கைகளைப் பற்றிக் கொண்டாள் சதயா. ''தயவு பண்ணி என் பிரசினையை என்னிடமே விட்டு விடுங்கள். உங்களுடைய உதவிக்கும் ஆவேசத்துக்கும் ஆயிரம் நன்றி. நீங்கள் இத்தனை தூரம் சொன்னதே போதும். மேற்கொண்டு எதுவும் செய்ய வேண்டாம். நான் பார்த்துக் கொள்கிறேன்.''

வேகமாக வெளியேறியவள், உடனேயே திரும்பி வந்தாள். ''ஒன்று இரண்டு என்று பல பேருக்குத் தெரிந்து விட்டது அத்தானின் சமாசாரம். போதும் உங்களுடன் அது நின்று விடட்டும். உங்கள் காலைப் பிடித்துக் கொண்டு வேண்டுகிறேன். என்மீதே ஆணை. இதை யாரிடமும் சொல்லாதீர்கள். யார் உதவியையும் கேட்காதீர்கள், இந்த விஷயத்துக்காக. என்னை நானே காப்பாற்றிக் கொள்ள முடியும். அதற்கு வழியும் தெரியும்......''

''இலை போடலாமா என்று அப்பா கேட்கிறார்.'' சமையல்காரனின் குரல்.

தூங்கியவனின் மேனியில் சுள்ளென்று வெய்யில் உறைத்தாற்போல, சம்பத்தை விழிக்க வைத்தது அந்தக் கேள்வி. அவருடைய நினைவுகள் கலைந்தன.

''இலை?...... இலைதானே? ஆமாம் போடுங்கள்.''

சமையல்காரர் போய்விட்டார்.

டின்னருக்கு இருக்க வசதிப்படாதவர்கள் ஒவ்வொருவராய்க் கிளம்பிக் கொண்டிருந்தார்கள். ''எம். எஸ் எஸ்.

தர்ட்டி எய்ட் ட்வெண்டி ஸெவன்...... எம். எஸ். டபிள்யூ ஸெவன்டிஃபைவ் ஜீரோ டூ,'' என்று அவர்களுடைய கார்களைப் போலீசார் அழைக்கும் குரல் ஒலிபெருக்கியில் பலக்கக் கேட்டது.

முன் வரிசையில் கண்களைச் செலுத்தினார் டாக்டர் சம்பத்.

மணி, உதட்டில் தொத்திய சிகரெட்டுடன் ஸ்டைலாக எழுந்து, தீப்பெட்டிக்காகப் பைகளைத் தடவுவதையும், பிறகு வாசலை நோக்கி வெளியேறுவதையும் கண்டார் ஊன்றிக் கவனித்த சம்பத்துக்குத்தான் தெரிந்தது— அவன் தானாகப் போகவில்லை. டெபுடி கமிஷனரின் சீற்றம் அவனைத் துரத்தி விட்டது என்று.

ஏன் சத்யாவும் எழுந்து சென்றாள்? அப்பாவைப் பார்த்து என்னவோ கோபமாகச் சொல்லிவிட்டுப் புறப்படுகிறாளே! வாசலருகே காத்து நிற்கும் மணியுடன் சேர்ந்துகொண்டு காரை நோக்கிக் கிளம்புகிறாளே!

அதற்கு மேல் சம்பத்துக்குப் பொறுக்கவில்லை. நாலே எட்டில் அவர்களை அடைந்தார். வந்தது போலவே இப்போதும் அவன் பக்கத்தில் அவள் அமர்ந்திருப்பதைக் கண்டதும், பேச நினைத்ததெல்லாம் ஒரு நிமிடம் மறந்து போயிற்று. தான் வருவதை ஓரக்கண்ணால் பார்த்தவுடனே, சத்யா கைப் பையில் தீவிரமாக எதையோ தேடுவதுபோல் தலையைக் குனிந்து கொள்வதையும் கவனித்தார் அவர்.

''நல்லவர்களுக்கு அடையாளம் சொல்லாமல் கிளம்புகிறதாக்கும்? இறங்கு, இறங்கு. டின்னருக்கப்புறம்தான் காரை வெளியே விடுவேன்,'' என்றார் குரலில் வேடிக்கையைக் கஷ்டப்பட்டு வரவழைத்துக்கொண்டு.

மணி கிளட்சைத் தளர்த்திக் கொண்டே, ''ஸாரி டாக்டர், எங்களுக்கு இன்னும் இரண்டு மூன்று எங்கேஜ்மெண்ட் இருக்கிறது,'' என்றான்.

சத்யா அதுவும் சொல்லவில்லை.



''நான் சத்யாவைக் கேட்டேன்,'' என்றார் டாக்டர் உஷ்ணத்துடன். மணியின் முகம் சிறுத்தது.

''சத்யா!'' என்று அவளிடம் குனிந்தார் சம்பத் ''சாயந்தரம் நாலுமணி முதல் உனக்காக நான் எவ்வளவு ஆவலாகக் காத்திருந்தேன் என்று உனக்குத் தெரியுமா? கட்டிடம் அரைகுறையாய் முடிந்திருந்தபோதே உன்னை அழைத்துவந்து காட்ட வேண்டுமென்று துடித்தேன். வாய்க்கவில்லை. இப்போதாவது நீ கொஞ்ச நேரம் இருந்து விட்டுப் போகக்கூடாதா?''

சத்யா அப்போதும் வாய் திறக்கவில்லை. சங்கடம் அதிகரிப்பது, அவள் விரல்களின் பதற்றத்தில் புலப்பட்டது.

''இஷ்டமில்லாதவர்களை ஏன் டாக்டர் தொந்தரவு செய்கிறீர்கள்?'' என்றான் மணி.

சம்பத், தன் வசம் இழந்தார். ''நீ எல்லை மீறிப் போகிறாய் என்று நினைக்கிறேன் மணி.''

''உரிமை இருப்பதால்தான், டாக்டர்.''

கார் கிளம்பிற்று.

அதிர்ச்சியுற்றவராக அங்கேயே நின்றார் டாக்டர் சம்பத்.

## நாற்பத்தாறு

சத்யா மணியுடன் போய் விட்டாள்.

தன்னைப் போலவே இன்னோர் உருவமும் இடிந்து உட்கார்ந்திருப்பதை டாக்டர் சம்பத் கண்டார்.

சத்யாவின் தந்தை!

டாக்டர் தன்னைக் கவனிப்பதைக் கண்டதும், சாரங்கபாணி தலையைத் திருப்பிக் கொண்டார்.

டாக்டர் தன்னிடம்தான் வருகிறார் என்பதைக் கண்டு கொண்டார் போலும். எதற்காக வருகிறார் என்பதையும் அவர் என்னென்ன கேட்கப் போகிறார் என்பதையும் அவரால் கற்பனை செய்துகொள்ள

முடிந்தது. என்ன பதில் சொல்லப் போகிறோம். சொல்ல முடியும் என்று தான் தெரியவில்லை.

தனது எரிந்த சிவந்த கண்களை டாக்டர் சம்பத் காணக்கூடாதென்று தலையைத் தாழ்த்திக் கொண்டு, இரண்டு முழங்கால் முட்டியையும் கைகளால் பிடித்துக் கொண்டார் சாரங்கபாணி. புறங்கையில் புடைத்த நரம்புகள் அவர் எத்தனை ஆழமாகத் தன் உணர்ச்சிகளைப் புதைக்க முயல்கிறார் என்பதைக் காட்டி விட்டன.

இயல்பாக வந்தாற்போல சாரங்கபாணியின் பக்கத்தில் அமர்ந்தார் சம்பத். சில நிமிடங்களுக்குமுன் அதே நாற்காலியில்தான் சத்யா உட்கார்ந்திருந்தாள். அவள் கையில் வைத்திருந்த சிறு பூச்செண்டு இப்போது அங்கே கிடந்தது. விரல்களால் அதைச் சுழற்றித் திருகியவாறு முகர்ந்தார் சம்பத். மேடையில் பாடிக் கொண்டிருந்தவர் பாடியபடியே அவரை நோக்கி முறுவல் செய்யவே, பாட்டை ரசித்துத் தலையாட்டிவிட்டு, ''டின்னருக்கு சத்யா தான் இருக்க முடியவில்லை. நீங்களும் போய் விடாதீர்கள், சார்,'' என்றார்.

''கிண்டல் செய்கிறீர்களா, டாக்டர்?'' என்று சாரங்கபாணி தலை நிமிராமலேயே கேட்டார். ''டின்னர் சாப்பிடக் கூடிய மனநிலையில் நான் இருக்கிறேனென்று நிஜமாகவா நினைத்தீர்கள்? நீங்கள் பார்க்கவில்லை, இங்கே சத்யா அடித்த கூத்தை? பார்த்து விட்டுத்தானே வந்தீர்கள்— விளக்கம் கேட்க?''

''ஆமாம்,'' என்று டாக்டர் சம்பத் ஒப்புக் கொண்டார்.

''டாக்டர்,'' என்று மெதுவே நிமிர்ந்து அவரைப் பார்த்த சாரங்கபாணி, ''இது, இது, இது,'' என்று தன் தலை, தனது உடுப்பு, நிஜார்ப் பையிலிருந்த ரிவால்வர் ஆகிய மூன்றையும் தொட்டுக் காட்டினார். ''இந்த மூன்றையும் கொண்டு எந்த இருதயத்தையும் ஆழம் பார்த்து, எந்த மர்மத்தையும் தோண்டி எடுத்துவிட முடியும் என்று முப்பது வருட காலமாக நான் நம்பியிருக்



கிறேன். இரண்டே நாளில் அதைப் பொடிப்பொடியாகத் தகர்த்துவிட்டார்கள், என் மகளும் அவளைப் பெற்றவளும். எனக்கு இது வேண்டியதுதான் டாக்டர். ஐ டிஸர்வ் இட்.''

படபடவென்று அவையில் கரகோஷம் எழுந்தது. சாரங்கபாணியும் சம்பத்தும் மரியாதை கருதி அதில் கலந்து கை தட்டினார்கள்.

''பைத்தியம் பிடித்திருக்கிறது, டாக்டர். என் குடும்பத்தில் மொத்தப்பேருக்கும் சித்தப்பிரமை ஏற்பட்டிருக்கிறது.'' பல்லை அழுத்திக் கொண்டு பேசினார் சாரங்கபாணி. அதனால் அவர் தாடையின் ஒவ்வொரு சிறு அசைவும் பெரிதாகத் தெரிந்தது. ''போகிறானே இதோ, நான் தூக்கியெறிந்த பையைப் பொறுக்கிக்கொண்டு ஓடுகிற க்ளார்க், அவனுக்கு என் பெண்ணைத் தர வேண்டுமாம்! அம்மா சிபாரிசு பண்ணுகிறாள்! மகள் ஒத்துப் பாடுகிறாள்!''

கொஞ்சம் நஞ்சமிருந்த சந்தேகமும் சம்பத்துக்கு அகன்று விட்டது.

ராதானந்தரைக் காப்பாற்றுவதற்காக ஒருபுறம் மீனலோசனி தன் மகளைத் தியாகம் செய்கிறாள். அதே ராதானந்தரைக் காப்பாற்றுவதற்காக இன்னொரு புறம் சத்யா, தன் காதல், தன் எதிர் காலம், தன் படிப்பு எல்லாவற்றையும் தியாகம் செய்கிறாள்!

மீனலோசனியையாவது மணி நேரடியாக மிரட்டினான்; அவள் பணிந்தாள். சத்யா கெட்டது தன்னால் தானே? டாக்டர் சம்பத் மனம் நொந்தார். 'உன் அம்மாவை மணி பயமுறுத்துகிறான்,' என்று சொல்லாமலே இருந்திருந்தால், சத்யா மாறாமல் இருந்திருக்கக் கூடும். ஏன், மணியை மணக்கும்படி அம்மா யோசனை சொல்கையில், எரிமலையாக நெருப்புக் கக்கி எதிர்த்துக் கூட நின்றிருப்பாளே!

டாக்டரின் மூளை கொதித்தது. அதே சமயம் சாரங்கபாணியைச் சமாதானப்படுத்த வேண்டிய பொறுப்பும் ஏற்பட்டிருந்தது.

''இதெல்லாம்...... எங்கள் வயசில் இருந்தால் உங்களுக்குப் புரிந்திருக்கும்,'' என்று அவர் புன்னகையுடன் பேச முயன்றார். ''காரணம் கண்டுபிடிக்க முடியுமா இதற்கெல்லாம்...... காதல் என்பது......''

''நான்சென்ஸ்!'' சம்பத்தின் கைகளை உதறிவிட்டு, வெறுப்புடன் சிரித்தார் சாரங்கபாணி. ''காதலைப் பற்றி எனக்குத் தெரியாது என்கிறீர்களா? நேற்றுவரை ராதாவை நினைத்து நினைத்து சத்யா தேய்ந்து கொண்டிருந்தானே, அதை நான் கண்ணால் பார்த்திருக்கிறேன். அதைச் சொல்லுங்கள் காதலென்று, ஒப்புக்கொள்கிறேன். அல்லது அவள் மனம் உங்கள் பக்கம் திரும்பியதாகச் சொல்லுங்கள், ஏற்றுக் கொள்கிறேன் காதலென்று. அதற்கெல்லாம் அர்த்தம் இருக்கிறது, அடிப்படை இருக்கிறது, ஆரம்பம் இருக்கிறது. இது, இது டாக்டர், நாடகம்! இருதயத்திலிருந்து வராமல் வேறெங்கிருந்தோ வருவது. நான் போலீஸ்காரன். மோப்பம் பிடிப்பேன். பார்த்துக் கொண்டேயிருங்கள். கையும் களவுமாக இதை நான் பிடிக்கத் தவறினால், அதற்கப்புறம் அரை வினாடி நேரத்துக்குக்கூட இந்த உடம்பிலே இந்த உடை இருக்காது. வருகிறேன்.''

சாரங்கபாணி எழுந்து சென்று விட்டார்.

சின்னச் சாமியார் நூல் நிலையத்தின் கதவுகளைப் பூட்டிக் கொண்டிருந்தார்.

சில குறிப்புக்கள் எடுத்துக்கொள்ள வேண்டி, பிற்பகல் மூன்று மணி சுமாருக்கு வந்திருந்த ஜெர்மன்காரர், குறிப்பு எடுத்து முடிக்க இத்தனை நேரமாகி விட்டது.

''தேவையான தகவல்கள் கிடைத்தனவா?'' என்று ராதானந்தர் விசாரித்தார், ஜெர்மன்காரரிடம்.

''நிறைய! உங்கள் உதவியாளர் ரொம்பக் கெட்டிக்காரர்'' என்று புருவங்களை உயர்த்திய வண்ணம்



பிரேமில்லாத மூக்குக் கண்ணாடியைத் துடைத்தவாறு பேசினார் அந்த ஜெர்மன்காரர்.

''சந்தேகமில்லாமல் அவர் என்னைக் காட்டிலும் அதிக அனுபவமுள்ளவராயிற்றே?'' என்று அந்தப் பாராட்டில் கலந்துகொண்டார் ராதானந்தர்.

தவளை போன்ற குட்டிக் காரில் அந்த ஜெர்மன் அறிஞர் போய்விட்டார்.

அந்தச் சில நிமிடங்களுக்குள் சின்னச் சாமியாரின் முகம் கறுத்துச் சிறுத்துவிட்டது.

ஜெர்மன்காரருடன் சேர்ந்துகொண்டு ராதானந்தரும் தன் திறமையைப் பாராட்டினாரே என்பது அவர் மனத்தில் பதியவில்லை. மாறாக, ஏதோ அலுவலகச் சிப்பந்தியைக் குறிப்பிடுவதுபோல 'உதவியாளர்' என்று அவரை ஜெர்மானியர் சொன்னபோது, அதை ராதானந்தர் மறுக்கக் காணோமே என்ற புழுக்கம்தான் மேலிட்டது. கொஞ்சநாள் முன்பானால், 'ஆமாம். நான் இந்த மடத்தின் தலைவருக்கு உதவியாள்தானே?' என்று சகஜமாக அவர் ஏற்றுக் கொண்டிருப்பாரோ என்னவோ, ஆனால், மணியின் மூலம் ராதானந்தரைப் பற்றிய ரகசியத்தை அறிந்தபிறகு அவரால் எதையும் அப்படிப் பெருந்தன்மையுடன் பார்க்கவோ ஆராயவோ முடியவில்லை.

தியான அறையை நோக்கி நடந்த ராதானந்தரின் பின்னே சென்றது அவர் பார்வை.

புனிதமான அந்தக் காவி வேட்டியினுள் இருப்பது ஒரு கொலைகாரனா!

அருவருப்பினால் சின்னச் சாமியாரின் வாயின் உட்புறம் கசந்து குமட்டியது.

சென்ற வாரம் வரையில் ராதானந்தரைப்பற்றி வேறு விதமான சந்தேகம்தான் அவருக்கு இருந்தது.

லட்சக்கணக்கான பணம் இவருக்கு வரவேண்டியிருக்கிறது. யோக்கியமான பிள்ளையாயிருந்தால்தான்

இவரிடம் அதைக் கொடுக்கலாம் என்று அந்தப் போலீஸ் கமிஷனருக்கு அதிகாரம் தரப்பட்டிருக்கிறதாம் உயிலில்.

'முற்றும் துறந்த சாமியாராகிவிட்டதாக அந்தப் போலீஸ்காரரின் கண்ணில் மண் தூவத்தான் இந்த வேடம்' என்று சின்னச் சாமியார் சிறிது சந்தேகப்பட்டுக் கொண்டிருந்தார்.

ஆனால், எட்டரை லட்ச ரூபாய் டிராஃப்டு கிடைத்த மறுநாள், ராதானந்தர் சின்னச் சாமியாரையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு பாங்க்கை அடைந்தார். மடத்தின் பெயரிலேயே மொத்தப் பணத்தையும் கட்டிய தோடு, முதல் தடவையாக, சின்னச் சாமியாருக்கும் செக்குகளில் கையெழுத்திட்டுப் பணம் வாங்கிக் கொள்ளும் அதிகாரத்தைப் பெற்றுத் தந்தார். பாங்க் ஏஜெண்டு, "ஒருவர் பெயரிலேயே இருப்பது நல்லது, சுவாமிஜி. இரண்டு பேர் பெயரில் இருந்தால், தங்களுக்குத்தான் கணக்கில் குழப்பம் ஏற்படும்," என்று ஜாடையாகத் தடுக்க முயன்றதையும் ராதானந்தர் பொருட்படுத்த வில்லை.

சொந்தத்தில் ஒரு செப்புக் காசும் வைத்துக் கொள்ள வில்லை இவர் என்று அறிந்தபிறகு, ராதானந்தரைப் பற்றிய சுசப்பு ஆட்டம் கண்டது.

இருந்தாலும்......

இரவும் இருளும் கைகோத்தபடி பவானி மடத்தின் தாழ்வாரங்களில் தவழ்ந்து கொண்டிருந்தன.

சமையலறை ஊழியன் ராதானந்தருக்குத் தண்ணீர் மட்டும் எடுத்துச் சென்று கொண்டிருந்தான்.

"பால் கொண்டு போகவில்லை?" என்று அவனைத் தடுத்து நிறுத்திக் கேட்டார் சின்னச் சாமியார்.

"சாயந்தரம் ஆறு மணிக்குப் பிறகு சுவாமிஜி எதுவுமே சாப்பிடுவதில்லையே, உங்களுக்குத் தெரியாதா சாமி?" என்றான் அவன்.

"அப்படியா? எப்போதிலிருந்து?"



"ராயலசீமையிலிருந்து திரும்பி வந்தது முதல்," என்று சொல்லிவிட்டு அவன் போய்விட்டான்.

வெளியே மழைவானம் உறுமிக் கொண்டிருந்தது

யோசனை செய்தவாறே அலுவலறையை அடைந்து மேஜையின் எதிரில் நின்றார் சின்னச் சாமியார். சென்ற பத்துப் பதினைந்து தினங்களாக, ஃபைல் செய்யப்பட வேண்டிய பல கடிதங்கள் வெறுமே மடித்து வைக்கப்பட் டிருந்தன. 'பஞ்ச்சிங்' கருவியைக் கொண்டு ஒவ்வோர் கடிதமாகத் துளைகள் போடத் தொடங்கினார். கைகளுக்கும் கருவிக்கும் வித்தியாசமில்லாமல் இருந்ததே தவிர, உள்ளம் உயிர்த் துடிப்புடன் இயங்கிக் கொண் டிருந்தது. தாள்களின்மீது நுனியெழுத்தை மேய்ந்தவா றிருந்தன அவருடைய கண்கள். சில கடிதங்கள் தட்டெழுத் திலும் சில கையெழுத்திலும் காணப்பட்டன. பதில் களுக்குக் கார்பன் நகல்கள் இருந்தன. தாம் கவனித்து வரவேண்டிய தபால் வேலைகளைக் கொஞ்ச காலமாக ராதானந்தரின் வசமே விட்டுவிட்டதை இப்போதுதான் உணர்ந்தார் சின்னச் சாமியார். குற்ற உணர்ச்சி குறுகுறுத்தது.

"சுவாமி பிரம்மானந்தா......" என்று ஒரு கடிதத்தில் தென்பட்டது.

சுவாமி பிரம்மானந்தா!

தன் பெயரைத் தானே சொல்லும்போது யாருக்கும் ஏற்படுகிற கூச்சம் ஏற்பட்டது.

அதுதான் அவருடைய சன்னியாச ஆசிரமப் பெயர். ஆனால்...... எத்தனை வருடமிருக்கும் கடைசியாக அந்தப் பெயரைக் கேட்டு? பல பேருக்கு அது தெரியக்கூடத் தெரியாது. 'சின்னச் சாமியார்'தான் அவர் எல்லோருக்கும்.

இருபது வயது நடந்து கொண்டிருந்த இளமைப் பிராயத்தில், முன்பிருந்த பெரிய சுவாமியாரின் முன்னிலை யில், இதே பவானி மடத்தின் கட்டிடத்தில் தீட்சை பெற்று, 'சுவாமி பிரம்மானந்தா' என்ற பெயரையும்

ஏற்றுக் கொண்ட காட்சிகள் நினைவு வந்தன. அப்போது ஏற்பட்ட நெஞ்சக் கிளர்வையும் பூரிப்பையும் மீண்டும் அனுபவித்தவண்ணம், ஏன் அந்தப் பெயர் ஒரு கடிதத்தில் இடம் பெற்றது என்ற வியப்போடு, தபாலைப் பார்த்தார்

டெல்லியிலுள்ள தலைமை அலுவலகத்துக்கு, இரண்டு நாள் முன்பு ராதானந்தர் எழுதிய ஒரு கடிதத்தின் நகல் அது.

அதில் எதற்காகத் தனது பெயர் வரவேண்டும்? புகாரா? புகார் செய்யும் அளவுக்கு என்ன குற்றமிழைத்தோம்— வெளிப்படையாக?

சில வரிகளை வாசித்ததுமே, மூச்சு நின்றுவிட்டாற் போன்ற பிரமிப்பு ஏற்பட்டது.

''...... தொகை கிடைத்து விட்டதால், திடமான ஏற்பாடுகளைச் செய்துவிட்டுப் புறப்படலாமென எண்ணியிருக்கிறேன்.

''தங்களது அன்பினாலும் எனது உணர்ச்சி வசப்பட்ட இயல்பினாலும் இந்தப் பதவியில் இருந்து வருகிறேனே தவிர சுவாமி பிரம்மானந்தா அவர்களின் திறமையிலும் ஆர்வத்திலும் அனுபவத்திலும் நூற்றிலொரு பங்குகூட எனக்குக் கிடையாது என்பதை உணர்கிறேன். இப்படியே அடிப்படை இல்லாத ஆன்மீக வாழ்வு வாழ்ந்து கொண்டிராமல், இரண்டு மூன்று ஆண்டுகளுக்காவது இமயச்சாரலில் தனியே தங்கியிருந்து, பயிற்சி பெற்று, ஓரளவேனும் தகுதி பெற்றவனாக இத்துறைக்குத் திரும்ப வேண்டுமென்பதே எனது விருப்பம். தாங்கள் அனுமதி தரவேண்டும்.

''அந்த இடைக்காலத்திலும் சரி, நான் திரும்பாமலே இருந்து விட்டால் எதிர்காலத்திலும் சரி, சுவாமி பிரம்மானந்தா அவர்களே இந்தப் பீடத்தை அலங்கரிக்க முற்றிலும் தகுதி வாய்ந்தவர்...''

பதறும் விரல்களில் கடிதத்தைப் பிடித்தவாறிருந்தார் சின்னச் சாமியார்.



வெளியே மழைக் காற்று சீறிக் கொண்டிருந்தது. பைலை மூடினார்.

எதையும் சிந்தனை செய்யக்கூடச் சக்தியற்றவராக, உள் புயலையும் வெளிப் புயலையும் ஒப்பிட்டுப் பார்க்க விரும்பியவர் போல் வெளியே வந்தார்.

திடுக்கிட்டார் மீண்டும்.

வெராந்தாவின் இறக்கத்தில், மழையில் நனைந்தவாறு குனிந்து ஏதோ வேலையில் ஈடுபட்டிருந்த உருவம் ராதானந்தர் தான் என்பதை அவர் கண்கள் கண்டன.

திகைப்புடன் விரைந்தார் அங்கே.

''ஒன்றுமில்லை, சின்னச் செடிகளுக்காக......'' என்று சிரித்துச் சொல்லிக் கொண்டே, கையில் ஒட்டியிருந்த ஈர மண்ணைத் தட்டி உதறிவிட்டு அவரைக் கடந்து சென்றார் ராதானந்தர்.

சின்னச் சாமியார் குனிந்து கவனித்தார்.

வெராந்தாவை ஒட்டினாற் போல் சிறு துலுக்க சாமந்திச் செடிகள் வளர்ந்திருப்பது வழக்கம். மழையின் வேகத்திலும் காற்றின் மூர்க்கத்தனத்திலும் தள்ளாடிச் சாய்ந்திருந்த அவற்றை, பக்கத்தில் சின்னக் குச்சிகள் நட்டு, முட்டுக் கொடுத்துக் கட்டி வைத்திருந்தார் ராதானந்தர்.

சின்னச் சாமியார் குழம்பிப் போனார்.

பூச்செடியின் துவளலைப் பொறுக்கமாட்டாத இந்த மனிதர் மனமார ஒரு கொலையைச் செய்திருக்க முடியுமா? ரத்தத்தில் தோய்ந்த கைகள் ஒரு பசுஞ் செடிக்குப் பரிவு காட்ட முடியுமா...?

அன்று சத்யாவுக்கு இரவு ட்யூட்டி. ஆஸ்பத்திரிக்குப் போக ஆயத்தமாகப் பிளாஸ்டிக் கூடையில் டூத் பிரஷ், சோப்பு, டவல் முதலானவற்றைச் சீராக அடுக்கிக்கொண்டிருந்தாள். மூசுமூசென்று இரைக்க அம்மா வருவதைக் கண்டதும் அவளுக்குத் திகைப்பு உண்டாயிற்று. ''சத்யா! எனக்கு ஒரே பயமாயிருக்கிறதம்மா. என்னவோ இதெல்லாம் நல்லதுக்கு இல்லை என்று தோன்றுகிறது.''

என்று தழுதழுத்த குரலில் தாய் பேசிக்கொண்டிருக்கும் போதே...

கீழே காரின் கதவு படேலெனச் சாத்திக் கொள்ளும் ஓசையும் டர்ரென்று கார் பாய்ந்து புறப்படும் சத்தமும் கேட்டன.

"உன் அப்பாதான்! ராத்திரிச் சாப்பாட்டுக்குத் தங்காமலேயே மறுபடி புறப்பட்டு விட்டார் பார்த்தாயா? எட்டு நாளாக, அம்மாடி! வீடா இது! சுண்ணாம்புக் காளவாயில் நிற்கிறமாதிரி இருக்கிறது!" என்றாள் மீனலோசனி.

சத்யா தன் மனச் சுமையை மறைத்துக் கொண்டு சிரித்தாள். "இருக்கட்டும் அம்மா. இன்னும் கொஞ்ச நாள்தானே! கல்யாணம் நடந்து விட்டால் எல்லாம் சரியாகிவிடும்."

தலையைத் திருப்பி மகளின் முகத்தைக் கவனித்தாள் மீனலோசனி. "ஏன் சத்யா, நிஜமாகவே அப்படியெல்லாம் நடக்குமென்று நம்பிக்கை இருக்கிறதா உனக்கு?"

"அம்மா, ராதா அத்தானிடம் உனக்கு உள்ள அக்கறை எனக்குக் கிடையாதா? அவரைத் தப்புவிப்பதற்காக நீ படுகிற கஷ்டத்தை நான் மட்டும் படமாட்டேனா, என்ன?"

மீனலோசனியின் முகம் வெளிறியது.

"சத்யா! அப்படியானால் நீயும்..."

"ஆமாம், அம்மா. உனக்காகட்டும், எனக்காகட்டும், அத்தானைக் காப்பாற்ற வேண்டியதுதான் முக்கியம். மணியின் வாயை மூட வைப்பதற்காகத்தானே நீ இந்தக் கல்யாணத்துக்குச் சிபாரிசு செய்தாய்? அதே எண்ணத்தினால்தான் நானும் சம்மதித்தேன்."

மகளை இறுகக் கட்டிக் கொண்டபோது மீனலோசனியின் மெய் நடுங்கியது. "சத்யா...... ராதா அப்படியெல்லாம் பண்ணியிருப்பானா? விளையாட்டுப் புத்தி உண்டே தவிர, கொலை......"



"ஸ்!" சரேலென அம்மாவின் வாயைப் பொத்தினாள் சத்யா. "மறந்தும் இதைப் பற்றி நீ வாய் திறக்கக் கூடாது! புரிகிறதா அம்மா? டாக்டர் சம்பத்துக்குத் தெரியும் உன்னை மணி மிரட்டியதெல்லாம். என்னிடம் எவ்வளவோ உறுதி சொன்னார், நம்மைக் காப்பாற்றுகிறேனென்று. அத்தானைப் பற்றிய சமாசாரம் பரவிக் கொண்டே போகுமென்றுதான் அவர் உதவியை மறுத்து விட்டேன். இந்த மாதிரி தியாகங்கள் செய்ய வாழ்க்கையில் அடிக்கடி சந்தர்ப்பம் கிடைக்காது, அம்மா. ஆகவே பழைய விஷயங்களை அடியோடு மறந்துவிடு. யாரிடமும் பேசாதே. இப்போதுகூட யாரோ வந்தமாதிரி ஓசை கேட்டது......" என்று சொல்லி, வெளியே வந்து பார்த்தாள்.

யாரையும் காணோம்.

காணோமென்று சத்யா நினைத்துக் கொண்டாள்.

## நாற்பத்தேழு

வேகமாகப் படியிறங்கிப் போய்க் கொண்டிருந்த சின்னச் சாமியாரை சத்யா கவனிக்கவில்லை.

அப்துல் ரொம்ப சோனியாயிருந்ததால் டானிக் எழுதித் தந்திருந்தார் ஒரு டாக்டர். அதற்குப் பணம் கேட்பதற்கு மீனலோசனியைத் தேடி வந்திருந்தார் அவர். பங்களா வாசலில் சாரங்கபாணியின் கார் அவரை உராய்ந்த வண்ணம் சீறிக்கொண்டு சென்றது. அடிக்கடி அவரைப் பார்த்திருந்த வேலைக்காரன், "பெரியம்மா மாடிக்குப் போனாங்க இப்பத்தான்," என்று கை காட்டினான்.

சத்யாவுக்கும் மீனலோசனிக்கும் நடந்த உரையாடல்கள், விருப்பமின்றியே அவரது செவியில் மோதின. அதற்கு மேல் அவரால் அங்கு நிற்க முடியவில்லை. திரும்பி விட்டார்.

டாக்டரின் டானிக் சீட்டு தெருக் காற்றிலே பறந்து, நடைபாதையில் திறந்திருந்த ஒரு பள்ளத்தின் வழியாக ஜலதாரையை அடைந்து ஊறி அமுங்கியது.

சின்னச் சாமியார் அதைப் பற்றிக் கவலைப்பட வில்லை. அப்துலைப் பற்றிய சொற்பமான கவலைகளும், ராதானந்தரைப்பற்றிய அற்பமான மாற்சரியங்களும் அவர் உள்ளத்திலிருந்து அடியோடு மறைந்தொழிந்தன.

ராதானந்தருக்காக இரண்டு பெண்கள்— ஒரு தாயும் மகளும்— மகத்தான தியாகம் செய்யத் துணிந்து நிற்பதை அவர் கண்ணாரக் கண்டுவிட்டார். சுவாசகோசத்தின் இரண்டு பகுதிகளும் இணைந்து இயங்குவதைப்போல இரண்டு பெண்களும் சேர்ந்து, தங்களுடைய அன்புக்குரிய ஒரு மனிதருக்கு உயிர் கொடுக்கும் பணியில் ஈடுபட்டிருப்பதை உணர்ந்தபோது புலன்களனைத்தும் செயலற்றுப் பிரமித்து நின்றன. அந்தப் புனிதமான வேள்வித்தீயில் தானும் குதிக்கவேண்டுமென்ற ஒன்றைத் தவிர மற்ற எண்ணங்கள் அத்தனையும் அவருக்கு மறந்து போயின.

மணியின் அக்கிரமத்துக்கு அந்தப் பேதைகளைப் போலவே தானும் அடிபணிந்து கிடந்ததை நினைக்க நினைக்க அவருக்கே வெட்கமாயிருந்தது. அந்த முட்டாள்தனத்துக்குப் பிராயச்சித்தமாக இப்போதேனும் ஏதாவது செய்ய வேண்டுமெனத் துடித்தார்.

ஆனால் என்ன செய்வது?

யாரோ காதில் ஓதிய மாதிரி அந்தப் பெயர் அவருக்கு ஞாபகம் வந்தது.

அதற்கடுத்த முப்பதாவது நிமிடம், சம்பத்திடம் தம் கதையைக் கூறி முடித்தார் சின்னச் சாமியார்.

“டேய்!”

இரைந்தான் மணி

சமையலறையிலிருந்து வீரப்பன் ஓடி வந்தான்.

''டம்ளரைத் தொட்டுப் பார்.''



நடுங்கியபடி நின்றான் வீரப்பன்.

''பாரேண்டா!''

''அப்போதே கொண்டுவந்து விட்டேன். நீங்கள் கவனிக்கவில்லை. ஆறிப் போய்விட்டது.'' சொல்ல வேண்டிய பதில் வீரப்பனின் நாவிலேயே ஒட்டிக்கொண்டிருந்தது.

''தொட வேண்டாம். இப்போது சொல்!'' மணி பளீரென அவன் முகத்தில் வீசினான் காப்பி மொத்தத்தையும்.

''சூடாயிருக்கிறா, சில்லென்றிருக்கிறதா?''

வீரப்பன் புறங்கையால் வழித்துத் துடைத்துக் கொண்டான். காப்பியோடு அவன் கண்ணீரும் கலந்து வந்தது.

எஜமானருக்குக் கோபம் வந்து வீரப்பன் பார்ப்பது இது முதல் தடவையல்ல.

ஆனால் ஓசையுடன் வெடித்துக்கொண்டு வருவது இதுவே முதல் தடவை. ஆத்திரம் அவருக்குள் பொங்கியது உண்டு. ஆனால் கண்ணுக்குத் தெரியும்படி அது வெளி வழிந்ததில்லை இதுவரை. இதற்கு முன்பும் அவருடைய நரம்புகள் புடைத்திருக்கின்றன. ஆனால் சதையைக் கிழித்துக்கொண்டு துருத்தி நின்றது கிடையாது. ஏன் இந்த மாறுதல்? புரியவில்லை வீரப்பனுக்கு.

சத்யாவின் கரம் பற்றுவதென்பது வெறும் கனவா யிருந்த நிலையிலிருந்து எப்போது நனவாகக்கூடிய நிலைக்கு வந்ததோ, அப்போது பிடித்து மணி நிதானம் இழந்துவிட்டிருந்தான். வெற்றி நெருங்க நெருங்க, அளந்து முடிவெடுக்கும் ஆற்றலும் பதற்றமில்லாத கண்ணோட்டமும் அவனிடம் விடைபெற்றுக்கொண்டு விட்டன.

கொஞ்சமும் எதிர்பாராத விதத்தில் ஜெகாலைச் சந்தித்து ராதானந்தரைப் பற்றிய ரகசியத்தை அறிந்ததும்; அந்த ரகசியத்தைக் கொண்டு மீனலோசனியை மிரட்டியவுடனே அவன் அவன் ஆசையை நிறைவேற்றுவ

தாக ஒப்புக் கொண்டதும்; தாய் என்ன கெஞ்சினாலும் கட்டுப்படாமல் சீறிக்கொண்டு வருவாள் என்று அவன் நினைத்திருந்த சத்யா பெட்டிப் பாம்பாய் ஒடுங்கிப் போனதும்—

நினைக்க நினைக்க அவனுக்கே பெரிய கனவு போலத் தான் தோன்றியது. கனவல்ல, உண்மையான நடப்புதான் என்று உணர்ந்ததும் ஒரு திமிர் உண்டாயிற்று.

ஆணவம், அவனுடைய நிதானத்தைச் சிதறப்பண்ணி விட்டது. எந்தச் சிறு தடையையும், எந்த அற்பத் தாமதத்தையும் அவனால் பொறுத்துக்கொள்ள முடிய வில்லை.

ஆணவத்தோடு கூட, அச்சமொன்றும் உதித்தது அவன் மனத்தில்.

கனவிலும் கற்பனை செய்ய முடியாத இந்த அதிர்ஷ்டம் எதிர்பாராமல் வந்தாற்போலவே எதிர்பாரா மல் கை நழுவிப் போய்விட்டால்?

மளமளவென்று திகில் வளர்ந்தது. கைக்கெட்டியதை வாய்க்கெட்டியதாகப் பண்ணிக்கொள்ள வேண்டும் என்ற துடிப்பு அவனைப் பரபரக்க வைத்தது.

பின்கையைக் கட்டிக்கொண்டு குறுக்கும் நெடுக்குமாக வேகமாக உலாத்தினான் சிறிது நேரம். பிறகு, திடீரென்று நின்றான்.

முடிவு தோன்றியது.

டெலிபோனை நோக்கி ஓடினான்.

அலாரம் கிணுகிணுத்தது.

ஐந்தரை.

காலை ஐந்தரை அல்ல. மாலை ஐந்தரை.

தூக்கத்திலிருந்தல்ல. விழிப்பிலிருந்தே தன்னை எழுப்பி விடத்தான் சத்யா அலாரம் வைத்திருந்தாள்.

உலகம் என்று ஒன்று இயங்குகிறதா அல்லது நின்று விட்டதா என்பதுகூடத் தெரியாமல் தன் சோகத்தில் தானே அமிழ்ந்து மூழ்கிக்கொண்டிருந்த அவள், ஒன்றிக்கட்டை யாய்க் காட்சியளித்த ஒரு வரியையே நூறாம் தடவை



யாகப் படிக்கும் வீண் முயற்சியை நிறுத்திக் கொண்டு புத்தகத்தை மூடிவிட்டு எழுந்தாள்.

சீக்கிரம் உடைமாற்றிக்கொண்டு ஆஸ்பத்திரிக்குப் புறப்பட வேண்டுமென்ற எண்ணத்துடன் கீழேயிறங்கி வந்தாள். அம்மாவும் எங்கேயோ வெளியே கிளம்பு வதற்குத் தயாராய்க் காத்திருப்பதைக் கண்டதும் ஆச்சரியம் ஏற்பட்டது.

''எங்கேயம்மா போகப் போகிறாய்?'' என்று கேட்டாள்.

''உன்னோடுதான். ஆனால் ஆஸ்பத்திரிக்கு இல்லை. ராயப்பேட்டையில் ஒருத்தரைப் பார்க்க வேண்டும். போகிற வழியில் என்னை இறக்கி விட்டுவிடு,'' என்றாள் மீனலோசனி.

''சரியம்மா. நீ இங்கேயே இரு. பத்து நிமிடத்தில் வந்து விடுகிறேன்,'' என்று சென்ற சத்யா அதேபோல் திரும்பி விட்டாள். ஆனால் அதற்குள்ளே மீனலோசனிக்கு இனமறியாத பயம் கண்டுவிட்டது. கணவர் இன்னும் ஆபீசிலிருந்து திரும்பவில்லை. திடீரென்று வந்து சேர்ந்து ஏதாவது கேட்டு, விடப் போகிறார் என்ற பதைப்புடன், மகளுக்கும் முன்னதாகக் கார்ஷெட்டை அடைந்து, தோட்டக்காரனைக் கொண்டு கதவைத் திறக்கச் சொல்லி, காருக்குள்ளேயே உட்கார்ந்து கொண்டாள். காரின் கதவை ஓசைப்படாமல் சாத்த முயன்றாள். சாத்த முடிய வில்லை. திறந்து கொள்ளாதபடி கையினால் பிடித்த வண்ணமாகவே இருந்தாள்.

சத்யா வந்து, காரை வெளியிலெடுத்து, தெருவுக்கு வந்து இரண்டு வீட்டையும் தாண்டிய பின்னர், ''கதவு சரியாய்ச் சாத்தவில்லையா, அம்மா? சத்தம் வருகிறதே!'' என்று கேட்டபோதுதான், அச்சம் நீங்கியவளாகப் படக்கென்று கதவைத் தாழிட்டு 'அம்மாடி' என்று மார்பைப் பிடித்துக் கொண்டாள் மீனலோசனி.

தெருக்கோடியில் கார் யூவென வளைந்து திரும்பியது.

''யாரம்மா ராயப்பேட்டையில்?'' என்றாள் சத்யா.

''ராயப்பேட்டையில் யார் இருக்கிறார்கள் எனக்கு?'' என்று சத்யா சலித்ததை மெய்யாக்கினாள் மீனலோசனி. ''அந்த...... அவன்... மணியைத்தான் சொல்கிறேன்...... உன்னோடும் என்னோடும் உடனே பேச வேண்டுமாம். அதனால், நீ புறப்படுகிறபோது என்னையும் வரச் சொல்லிக் கொஞ்சம் முன்னால் டெலிபோன் பண்ணி னான்......''

சத்யாவின் முகம் இருண்டது.

டிராபிக் விளக்குகள் அனுமதி தராததால் வண்டியைச் சிறிது நிறுத்தினாள்.

''எங்கே வருகிறேன் என்று சொன்னான்? எத்தனை மணிக்கு?''

மீனலோசனி பதில் சொல்லத் தேவையிருக்கவில்லை.

காரின் கதவைத் திறந்துகொண்டு முன்ஸீட்டில் சடக்கென ஏறிக் கொண்டான் மணி.

''விடு. க்ரீன் லைட் எரிகிறது,'' என்றான்.

சத்யாவின் நரம்புகள் முறுக்கேறுவது அவளுடைய விறைத்த சரீரத்திலிருந்து விளங்கியது. பச்சை விளக்கைத் தாண்டிச் சிறிது தூரம் சென்றதும் காரைச் சாலையோரமாய் நிறுத்திவிட்டு, பின்பக்கம் திரும்பினாள். ''மணி, இப்படிக் கண்டபடியெல்லாம் என் விஷயத்தில் குறுக்கிடக் கூடாது என்று முன்பே ஒருமுறை உங்களிடம் சொல்லி விட்டேன். எல்லை மீறிப் போகிறீர்கள்,'' என்றாள்.

அவள் மனநிலைக்கு ஏற்றதாகவே இருந்தது மணியின் மனநிலையும், ''ஏன் சத்யா, நீயும் அந்த டாக்டரும் ஒரே டயலாக்கைத்தான் நெட்டுரு பண்ணிக்கொண்டு ஒத்திகை பார்க்கிறீர்களா என்ன?''

முன்பு, முஸ்லிம் கிழவரின் சவ அடக்கத்தின் போது, ஓர் முழு இரவு சத்யாவும் தானும் தனியே இருக்க நேர்ந்ததை மணி அடிக்கடி நினைத்துக் கொள்வதுண்டு. அவளிடம் யோக்கியப் பட்டம் பெற வேண்டுமென்பதற்காகத், துளிக்கூட அவளை நெருங்காமலே திரும்பிப் போய் விட்டது சுத்த ஏமாளித்தனம் என்று பல தடவை



ஏக்கத்துடன் பெருமூச்சு விட்டிருக்கிறான். அதற்கு வட்டியும் முதலுமாக இப்போது அவள் பக்கத்தில் நெருங்கி அமர்ந்து கொள்ளும் உரிமை கிடைத்து விட்டது. அவளுடைய நைலக்ஸ் புடைவையின் பளபளப்புடன் அவனுடைய டெக்ரான் பாண்ட்டின் மொறமொறப்பும் நெருங்கி உறவாடின. அவளுடைய ஸ்டீரிங் பிடித்த சிவந்த முழங்கை அவன் கையை இடித்தது. சிற்பம் செதுக்கினாற் போன்ற நாசியையும் உதடுகளையும் பூவிதழ் போன்ற காது மடலையும் ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டிருந்தான் மணி.

''மணி, நீங்கள் இறங்கப் போகிறீர்களா, இல்லையா?'' என்றாள் சத்யா.

''இல்லை. நீங்கள் இருவரும் இறங்கி வரப் போகிறீர்களா, இல்லை, நான் என் கடமையைச் செய்யட்டுமா என்று கேட்கத்தான் வந்திருக்கிறேன்.''

''கடமையா! அப்படி ஒன்று உங்களுக்கு இருக்கிறதா? என்ன ஆச்சரியம்!''

''ஆச்சரியமென்ன அதிலே? போலீஸ் இலாகாவில் வேலை பார்க்கிற ஒருவன், கொலை செய்துவிட்டு வந்த ஒருவனைச் சட்டத்திடம் பிடித்துக் கொடுப்பது கடமையில்லையா, சத்யா?''

''சத்யா!'' என்று கெஞ்சினாள் மீனலோசனி.

அவளுடைய உள்ளத்தின் உதறல் குரலிலே தெரிந்தது.

சத்யா, ''கல்யாண விஷயத்தில்தான் நாம் ஒரு உடன்பாட்டுக்கு வந்தாயிற்றே? அம்மாவும் சொன்னாள், நானும் ஒப்புக்கொண்டு விட்டேன். இனிமேல் என்ன?'' என்றாள்.

''உன் அப்பா?''

''அவரிடமும் சொல்லி விட்டோம்.''

''அவர் ஒப்புக் கொண்டாயிற்றா என்று கேட்கிறேன்.''

தாயும் மகளும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

வலுவற்ற குரலில், ''கொஞ்ச நாளில் அப்பாவும் இணங்கி வந்து விடுவார்,'' என்றாள் சத்யா.

''டெபுடி போலீஸ் கமிஷனர் உயர்திரு. சாரங்கபாணியா!'' என்று எகத்தாளமாக நகைத்தான் மணி. ''உயிரைக் கொடுத்தாவது இந்தக் கல்யாணத்தைத் தடுத்து விடுவது என்று அவர் தீர்மானமாயிருக்கிறார். அது உங்களுக்குத் தெரியும். தெரிந்துதான் அவரைச் சாக்காக வைத்து நாளைக் கடத்தலாம் என்று பார்க்கிறீர்கள்.''

''அப்படியெல்லாம் இல்லைப்பா மணி.'' மீனலோசனி இறைஞ்சினாள்.

''சொல்லிவிட்டால் ஆயிற்றா? நிரூபித்துக் காட்டுங்கள்.''

''எப்படி நிரூபிப்பது?''

''அவருக்குத் தெரியாமல் கல்யாணத்தை முடித்துவிட வேண்டியது. அப்புறம் அவர் என்ன முட்டிக்கொண்டு என்ன பண்ண முடியும்?''

சத்யாவின் முகம் ஜில்லென்று சிவந்தது மீனலோசனி, திடீரென ஜன்னி கண்ட மாதிரி, ''அவருக்கு... தெரியாமல்... கல்யாணமா...'' என்றாள்.

சத்யா உடனே ஆங்காரமாக, இந்த மாதிரித் திருட்டுத்தனங்களுக்கெல்லாம் நான் சம்மதிக்க மாட்டேன்,' என்றாள்.

''வேறு பல திருட்டுத்தனங்களையும் கொலைகாரத்தனங்களையும் மறைக்கத்தானே சத்யா, இதெல்லாம்? அதை நினைவில் வைத்துக்கொண்டு பேசு,'' என்றான் மணி.

மீனலோசனி மன்றாடினாள். ''மணி, நான் சொல்வதைக் கேள். சத்யாவின் அப்பா கொஞ்ச நாளில் பிடிவாதத்தைவிட்டு, இறங்கி வந்து விடுவார். ஊரெல்லாம் ஆச்சரியப்படுகிற மாதிரி, அமோகமாய் நடத்தலாம் கல்யாணத்தை.''



''அதெல்லாம் அப்புறம் வேண்டுமானால் நடத்திக் கொள்ளலாம்,'' என்றான் மணி. ''முதலில் கல்யாணத்தை முடியுங்கள். திருநீர்மலைக்குப் போய் மாலை மாற்றிக் கொள்ளலாம். கல்யாணத்தை முடித்து விட்டால்தான், அவர் சும்மா இருப்பார். வேறு வழியே கிடையாது. இங்கேயே, இந்தக் காரிலேயே உங்கள் முடிவைச் சொல்லுங்கள். வேண்டுமென்கிற அவகாசம் தருகிறேன்.''

''நான் என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?'' என்று கேட்டாள் சத்யா.

மணியின் முகம் மலர்ந்தது. ''எந்த மாதிரியான கல்யாணத்தை நீ விரும்புகிறாய்?''

''எதுவானாலும் சரி.''

''சத்யா!'' என்று மீனலோசனி பதற்றத்துடன் மகளின் தோள்களைப் பற்றினாள். ''நீ சும்மாயிரு அம்மா,'' என்று அவள் கைகளை உதறிவிட்டு, ''எதுவானாலும் சரி,'' என்றாள் சத்யா மீண்டும் அழுத்தமாக.

''ரைட்டோ!'' என்று காரிலிருந்து இறங்கிக்கொண்டு கதவைச் சாத்தினான் மணி. ''நாளைக் காலை இதே இடத்தில் இதே நேரத்துக்கு வந்து விடுங்கள். ஏற்பாடுகளைச் செய்து வைத்துக் கொண்டு அழைத்துப் போகிறேன். யார் கிட்டேயும் மூச்சு விடக்கூடாது. என்ன?''

''சரி,'' என்றாள் சத்யா.

மீனலோசனி கற்சிலையாய் உட்கார்ந்திருந்தாள். சத்யா உயிரற்ற யந்திரம்போல் காரைச் செலுத்தினாள். மணி திருப்தியுடன் சிகரெட் கேஸை வெளியிலெடுத்து ஒரு சிகரெட்டைக் கொளுத்திக் கொண்டு, குப்பெனப் புகையை உமிழ்ந்தான்.

MADRAS DISTRICT ... LIBRARY ATHUR 16888 3289699

## நாற்பத்தெட்டு

ஜேம்ஸ் பாண்ட் நாவலொன்றில் முக்குளித்துக் கிடந்தாள் நாயகி நர்ஸிங் ஹோமின் நர்ஸான கிறிஸ்டி.

மணி ஒன்றடித்துப் பத்து நிமிடம் ஆகியிருந்தது. சாப்பாட்டு வேளை.

நர்ஸிங் ஹோம் ஆரம்பமாகிச் சில நாட்களே ஆகியிருந்ததால், அறைக்கு அறை பேஷண்ட் என்று ஏற்படவில்லை. கீழே ஆறு பேர். மாடியில் ஒன்று.

கொஞ்ச நேரம் ஜேம்ஸ்பாண்டை ரசிப்பதும், கொஞ்ச நேரம் காரில் வருவோர் போவோர்களைத் திறந்த ஜன்னல் வழியே கவனிப்பதுமாயிருந்தாள் கிறிஸ்டி. நீளமும் குட்டையுமான கார்கள்; மூக்கு வைத்ததும் இடுப்பு வைத்ததுமான பிளாஸ்குகள்; வெள்ளியிலும் எவர்சில்வரிலுமான கூஜாக்கள், தூக்குகள், ஸ்பூன்கள், சம்புடங்கள். காஞ்சிபுரம், ஆரணி, நைலக்ஸ், ட்ரில், ஷார்க்ஸ்கின், டெரீன்—

திடுக்கிட்டு எழுந்தாள் கிறிஸ்டி. ஆங்கில நாவலை நாற்காலியின் பின்னால் எறிந்தாள். வெண்ணிற ஸ்கர்ட்டை இழுத்துவிட்டுக் கொண்டு, விறைப்பாக நின்று கொண்டாள். மேஜைமீதிருந்த குறிப்புக்களைப் பென்ஸிலால் டிக் செய்யத் தொடங்கினாள்.

காலையில் ஆஸ்பத்திரிக்குப் போகுமுன் ஒரு விசிட்; சாயந்தரம் ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பும்போது ஒரு விசிட். அத்தோடு சரி. நடுவில் வரவே மாட்டாரே, டாக்டர் சம்பத்? இன்று என்ன அவசியம் வந்தது?

கிறிஸ்டியின் அறையைக் கடக்கையில் டாக்டரின் கால்கள் சிறிது தயங்கின. 'நீயும் வா,' என்று சைகை காட்டிவிட்டு மாடிப் படியை நோக்கி நடந்தார்.

மாடியில் இருப்பது ஒரே ஒரு நோயாளிதான். அதுவும், கிறிஸ்டிக்கே விவரமாய்த் தெரியாது. முந்தின இரவு சேர்க்கப்பட்ட கேஸ். எதற்காகவும் அங்கே போக வேண்டாமென்றும், தானே கவனித்துக் கொள்வதாயும் கூறியிருந்தார் டாக்டர். இன்று காலை அங்கே அவர் போனபோதுகூட, கிறிஸ்டியை அழைத்துக் கொள்ளவில்லை. ஒரு 'லச்சி'யை மட்டுமே எடுபிடி வேலைக்காகவும் காவலுக்காகவும் அங்கே உட்கார்த்தி வைத்திருந்தார்.

''நர்ஸ்!'' டாக்டரின் குரல்.

உள்ளே சென்றவுடனே கிறிஸ்டியின் கண்கள் கண்டது, கட்டிலில் கிடத்தப்பட்டிருந்த பெண்ணைத் தான்.

இருபது, இருபத்திரண்டு வயது இருக்கும். பணக்கார இடம். உயர்ந்த ரக உடையை மாற்றாமலே படுக்கையில் கிடந்தாள். தூங்கி வழிவது போன்ற கண்கள் அரை மூடியிருந்தன. உடலில் சொல்ல முடியாத சோர்வு. ஆனால் நெடுநாளைய நோயாளிக்கான அறிகுறிகள் தென்படவில்லை.

''இப்போது அவசியமில்லை,'' என்று சொன்னவாறு கிறிஸ்டியிடம் ஓர் ஊசி மருந்தைக் கொடுத்தார் டாக்டர். ''சாயந்தரம் ஆறு மணிக்குக் கொடு. வேறொன்றும் வேண்டாம். நீ போகலாம்.''

கீழ்ப்படியில் கிறிஸ்டிக்காகக் காத்திருந்த சின்ன நர்ஸ் விமலி, ''என்ன அக்கா? மாடியிலே இருப்பது யார்? ராத்திரி டாக்டர் அழைத்துக்கொண்டு வருகிறபோது நன்றாய்த்தான் இருந்தாள். மாடியில் அந்த ரூமில்தான் இரண்டு பேரும் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்புறம் அங்கேயே படுத்துக்கொள்ள வைத்துவிட்டு டாக்டர் போய்விட்டார்,'' என்றாள்.

''ஸ்! உனக்கேன் ஊர் வம்பு? அந்தக் கலெக்டர் சம்சாரத்துக்கு இன்னொரு தலையணை வேணுமாம். கொண்டுபோய்க் கொடு,'' என்று அவளை விரட்டிவிட்டு டாக்டர் ஒப்படைத்த ஊசி மருந்தைப் பார்த்தாள் கிறிஸ்டி.

மூச்சு நிற்கிற மாதிரி ஆயிற்று.

க்யுராரி! நரம்புகளைச் சோர்வடையச் செய்து, ஆளை அடித்துப் போட்டாற்போல் படுக்கையில் கிடத்தும் ஊசி மருந்து.

'அப்படியானால் மாடியில் இருப்பது மெண்ட்டல் கேஸா! கொஞ்சம்கூட அப்படித் தெரியவில்லையே! பின்னே எதற்காக இதைக் கொடுக்கச் சொன்னார்?' என்று தனக்குள் ஆச்சரியத்துடன் சொல்லிக்கொண்டே அந்தச் சிறு குப்பியைத் திரும்பத் திரும்பப் பார்த்தாள் நர்ஸ் கிறிஸ்டி.

தேகத்தில் சோர்வையும் அரை மயக்கத்தையும் ஏற்படுத்தி, எழுந்து ஓடியாட முடியாதபடி படுக்கையோடு கிடத்துவதற்காக உபயோகப்படுத்தப்படும் அந்த மருந்து...

மாடியில் கட்டிலின் ஓரத்தில் உட்கார்ந்திருந்த டாக்டர் சம்பத், ''சத்யா,'' என்று கனிவுடன் அழைத்தார்.

சத்யாவின் கண்கள் பெருத்த முயற்சிக்குப் பிறகு பலவீனமாக நகர்ந்தன அவரை நோக்கி.

''பயப்படாதே, சத்யா. என் நர்ஸிங் ஹோமில்தான் இருக்கிறாய்,'' என்றார் டாக்டர். ''என்னை மன்னித்து விடு. வேறு வழியில்லாமல்தான் இப்படிப் பண்ணினேன்.'' மெதுவாகச் சொல்லும்போதே, 'சுறுசுறுப்பும் இளமையும் வேகமும் உணர்ச்சித் துடிப்பும் கொண்ட சத்யாவை, இப்படிக் கை கால் முடமான மாதிரி, பலவந்தமாய்க் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறோமே,' என்று அவருடைய உள்ளம் புண்ணாயிற்று.

''என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்கிற தோரணையில் சத்யாவின் உதடுகள் அசைந்தன. ஆனால் யாரிடம் அந்தக் கேள்வியைக் கேட்பது என்று அவனுக்குப் புரியவில்லை. டாக்டர் சம்பத்தைப்போலத் தோற்றமளித்த உருவம் மசமசவென்று தெரிந்தது. அந்த உருவத்தின்



பேச்சோ, ஏதோவொரு எட்டாத் தொலைவிலே ஒலிப்பது போலிருந்தது. வேறெதுவும் செய்ய முடியாத நிலையில், கண்ணில் நீர் துளிப்பது ஒன்றுதான் அவனுக்கு இயலுகிற செயலாயிருந்தது போலும். விழிக்கடையில் முத்திட்டு நின்றது ஒரு கண்ணீர்ப் பொட்டு. ஆனால் சத்யா மல்லாந்து கிடந்ததால், எங்கும் உருண்டோடச் சக்தியற்றதாக அவனைப் போலவே அந்தக் கண்ணீர்த் துளியும் பரிதாபமாகத் தத்தளித்தபடி நின்றது.

டாக்டர் சம்பத் தமது வெள்ளைக் கைக்குட்டையை எடுத்து, அந்தக் கண்ணீர்த் துளியை ஒற்றியெடுத்தார். கிழிந்த நார்போல் துவண்டு கிடக்கும் கையைப் பரிவுடன் தம் உள்ளங்கையில் எடுத்து, பூவைத் தொட்டாற்போன்ற மென்மையுடன் பற்றிக் கொண்டார். அப்படிப் பற்றும் போதே அவனுடைய நாடித் துடிப்பையும் அவரது அறிவு கணித்துக்கொண்டது. அதில் ஏதும் கவலைப்படும்படி இல்லாததால் முகம் திருப்தியைக் காட்ட, ''ஆமாம், சத்யா. வேறு வழியில்லாமல்தான் இந்தக் கட்டாயத்துக்கு ஆளானேன். உன் அத்தானுக்காகத் தியாகம் செய்வதாய் நினைத்துக்கொண்டு, ஒரு பெரிய அசட்டுத்தனத்தை— இல்லை, அபாயத்தை— செய்கிறாயே, அதிலிருந்து உன்னைத் தடுக்க இது ஒன்றுதான் மார்க்கமாயிருந்தது. இந்த மிருதுவான கைகளையும் கால்களையும் கட்டிப் போட்டு யாருமில்லாத இடத்திலே உன்னை அடைத்துப் போட எனக்கு மனம் வரவில்லை. உன் மேனிக்கு ஊறு விளைவிப்பது, என்னால் கற்பனையும் செய்ய முடியாத காரியம். அதற்காகத்தான் க்யுராரி கொடுத்து உன்னைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறேன். சொற்ப நேரத்துக்குத்தான் இப்படி உன்னைச் சிறைப்படுத்துகிறேன் என்றாலும், ஒவ்வொரு வினாடியும் என் கண்ணில் ரத்தம் வழிந்துகொண்டிருக்கிறது.''

சத்யாவின் விழிகள் தாழ்ந்து சுழன்றன. இருக்கும் இடம், பேசுகிறவரின் உருவம், பேசப்படும் வாக்கியம்

எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக, மழை நீரில் மிதந்து வரும் கூளங்களைப் போல, தனித்தனியாயும் திடீரென்றும் நினைவில் நகர்ந்து வந்தன.

முந்தின இரவு— முந்தின இரவுதானா, அல்லது ரொம்ப நாள் முன்பா? அவளுக்கு நைட் டூட்டி. ஆஸ்பத்திரிக்கு வருகிறாள் அம்மாவுடன்...... மணி...... ஆமாம்...... இரண்டு பேரும் போன பிறகு...... யார் வந்தது? ஆஸ்பத்திரி வாசலில்? டாக்டர். டாக்டர் சம்பத் அவர்தான். அவசரக் கேஸாம். தன்னோடு வரும்படி கூப்பிடுகிறார். நர்ஸிங்ஹோம்— இங்கேதானோ? இருக்கலாம். ஆமாம், இந்த அறைதான். எதற்கு டாக்டர் கூப்பிட்டார்?

"ரொம்ப பலவீனமாய் ஆகிக்கொண்டு வருகிறாய். இன்றிலிருந்து லிவர் எக்ஸ்ட்ராக்ட் தரப் போகிறேன்," என்றார்...... வேண்டாம் என்றாள்...... ஊசி போட்டார்...

சோபாவில் சாய்ந்தது நினைவிருக்கிறது...... அப்புறம்? அப்புறம்......?

அவளுடைய எண்ணங்களைப் படித்துவிட்டாரோ டாக்டர் சம்பத்?

''அப்போது முதல் நீ இங்கேதான் இருக்கிறாய்,'' என்றார் டாக்டர் சம்பத்.

சத்யா எழுந்திருக்க முயன்றாள். இயலவில்லை.

''ஸாரி, சத்யா. உன் திருமணத்தை நிறுத்தித்தான் விட்டேன். இன்று காலையில் எட்டு மணிக்குக் கோவிலில் நடந்திருக்க வேண்டும், இல்லை?''

தன் மனோபலம் முழுவதையும் திரட்டிக்கொண்டு, எழுந்திருக்க முயலுகிறமாதிரி மீண்டும் திமிறினாள் சத்யா. ஆனால் அவளால் முடிந்ததெல்லாம் ஒரே ஒரு சுண்டு விரலின் அசைவுதான்......



டாக்டர் எழுந்து வெளியே சென்று பார்த்துவிட்டு, கதவையும் சாத்திக்கொண்டு திரும்பத் தன் முக்காலிக்கே வந்தமர்ந்தார்.

''இன்று இரவு பவானி மடத்துக்கு மணி வரப் போகிறான். ராதானந்தரைத் தாக்கப் போகிறான்.''

சத்யா திடீரென விழித்துக் கொண்டாள். இமைகள் படபடவென்று கொட்ட, இதழ்கள் வெடவெடவென்று நடுங்கின. ''பயப்படாதே. வெறும் நாடகம்தான்,'' என்று அவள் கையை மெல்லத் தட்டி ஆறுதல் கூறினார் சம்பத்.

''அங்கே ராதானந்தர் இருக்க மாட்டார். ஆயுர்வேத ஆஸ்பத்திரியில் டாக்டராயிருந்த அனந்தாச்சாரியை அழைத்து வருவதற்காக, எண்ணூர்ப் பக்கமுள்ள ஒரு குக் கிராமத்துக்குப் போயிருக்கிறார் அவர். அது மணிக்குத் தெரியாது. ராதானந்தரின் வேடத்தில் நான்தான் இருப்பேன். அது தெரியாமல் மணி தாக்குவான், என்னை. அவன் கையில் என்ன ஆயுதம் இருக்குமோ எனக்குத் தெரியாது. ஆனால் நான் இறக்கப் போவது...''

டாக்டரின் கையைப் பற்றியிருந்த அவள் கரம் இறுகியது.

டாக்டர் புன்னகை செய்தார். ''கலவரப்படாதே. எனக்கு ஒன்றும் நேராது. நான் இறந்துவிட்ட மாதிரி விழுந்துவிடுவேன். திடீரென ஓடிவருவார் சின்னச் சாமியார். மணியைப் பிடித்துக் கொள்வார். என்னைப் புரட்டிப் பார்த்து, நான் இறந்துவிட்டேன் என்பதை அறிவிப்பார் மணிக்கு. மூளை குழம்பிக் கொதித்த அந்த நிலையில் அவன் அதை நம்புவான். அவனைக் காப்பாற்றுவதாக வாக்களித்து என் சடலத்தை ரகசியமாக அப்புறப் படுத்துவார் சின்னச் சாமியார். அதற்கப்புறம் நான் சென்னையில் இருக்கமாட்டேன். சம்பத் என்றொரு டாக்டர் இருந்ததும், சத்யா என்ற பெண்ணை அவர் உயிராய் நேசித்ததும், அவளுக்காகக் காலமெல்லாம் அவர்

நவம் கிடந்ததும் பொய்யாய்ப் பழங்கதையாய்ப் போய் விடும்.''

சத்யாவின் பிடி இறுகிக்கொண்டே போயிற்று

டாக்டரின் புன்னகை விரிந்தது. ''ஆமாம் சத்யா. சின்னச் சாமியார் என்னைப் புதைத்து விட்டதாகவோ மறைத்துவிட்டதாகவோ மணிக்கு வாக்களிப்பார். அதை மெய்ப்பிப்பதென்றால், ஆயுளுக்கும் நான் யார் கண்ணிலும் படாமல் தலைமறைவாகத்தானே போயாக வேண்டும்?''

கூடாது. வேண்டாம். ஊஹூம். சத்யா தன் தலையைப் பலமாக அசைப்பதாய் நினைத்துக் கொண்டாள். இப்படி ஓரங்குலம் அப்படி ஓரங்குலம், தலை அசைந்ததோடு சரி.

''மணியினால் எனக்கு உண்மையாகவே இங்கு வந்து விட்டது. நிஜமாகவே நான் உயிர் துறக்க நேரிட்டது என்று வைத்துக் கொள். இன்னும் சந்தோஷப்படுவேன் நான். சின்னச் சாமியார் பொய் சொல்லி, பொய்யராக நடிக்க வேண்டிய அவசியமேயில்லை. அதற்கப்புறம் சத்யா, யோசித்துப் பார். மணியின் கொலைகார ரகசியம் சின்னச் சாமியாரின் கையிலே இருக்கும். அவர் சொன்னபடி அவன் ஆடவேண்டும். ராதானந்தரின் வழிக்கோ, உன் வழிக்கோ போகக் கூடாதென்பதைச் சாமர்த்தியமாக, உறுதியாக அவனுக்கு எச்சரித்து வைப்பார். அதிக நாளைக்கு மணி சென்னையில் தங்கியிருக்கவும் மாட்டான். உன் வாழ்க்கையில் குறுக்கிட்டுக் கொண்டிருக்கவும் மாட்டான். கொஞ்ச காலம் வரையில் உன் மனத்தில் வேதனை இருக்கும். ஆனால் நீயாகவே கழுத்தைச் சுற்றிக் கொண்டிருந்த இந்தக் கயிறு அவிழ்ந்தான பிறகு நீ நிதானத்துக்கு வருவாய். உன் தன்னம்பிக்கை திரும்பும். எதிர்காலத்தைச் செம்மையாய்த் திட்டமிட்டுக் கொள்ளும் சக்தி கிட்டும். மிஞ்சிப் போனால் ஒரு வருஷம்— டாக்டர் சத்யா என்ற போர்டு பளபளக்கும் உன் இல்லத்தின் வாசலில். யார் கண்டது, இதே நர்ஸிங்ஹோம்கூட உன்னுடைய சேவையினால் பிரகாசம் பெறலாம். என் சத்யா, அழுகிறாயா என்ன? பைத்தியமே!''



டாக்டர் துடைக்கத் துடைக்க அவளுடைய கண்ணீர் பெருகிக்கொண்டேயிருந்தது.

''சீ சீ. அசடு. எனக்கு எதுவும் நேராது. இந்தியாவின் ஊர் பேர் தெரியாத ஏதோ ஒரு மூலையில் இருந்து கொண்டு உன்னைப் பற்றிக் கேள்விப்பட்டுக் கொண்டேயிருப்பேன். உன் வளர்ச்சியை அறிந்து அறிந்து இந்த மார்பு பெருமையுடன் விரிந்துகொண்டே போகும். பாரேன். சத்யா நிச்சயமான வார்த்தை இது.''

நம்ப முடியாதவள்போல் அவரை நோக்கினாள் சத்யா.

அவள் அச்சத்தை அறிந்தவராக டாக்டர் சம்பத், ''பயப்படாதே. மணியினால் ஒன்றும் செய்ய முடியாது. பிளாக்மெயிலை பிளாக்மெயிலாலேயே முறியடிப்பது என்று திட்டமிட்டுத்தான், உன்னை லஜுக்கட்டாயமாகப் பிடித்து வைத்திருக்கிறேன்,'' என்றார்.

சத்யா குழம்புவது தெரிந்தது. டாக்டர் தொடர்ந்து, ''நீ இங்கே இருப்பது யாருக்கும் தெரியாது. இந்தச் சமயம் பார்த்து ராதானந்தரும் வெளியூர் போயிருக்கிறார். நீயும் ராதானந்தரும் ஒரே சமயத்தில் காணாமற் போயிருக்கிறீர்கள்!'' என்றார்.

கலவரமும் திகிலும் சத்யாவின் முகத்தில் குடிகொண்டன. அவள் விழிகள் வேகமாய் உருண்டன.

''மணிக்கு ஆத்திரம் பொங்கட்டும். பொங்கி வெறியனாகட்டும் என்றுதான் இவ்வளவும் ஏற்பாடு பண்ணியிருக்கிறேன்.''

டாக்டர் தம் கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டார். ''ஓ! மணி இரண்டாகிவிட்டது.'' என்று எழுந்த

கொண்டார். "என் அப்பா— அந்தக் கிழவரை நினைத்தால் சிறிது வருத்தமாயிருக்கிறது. பரவாயில்லை. அவரை நீ உன் அப்பாவாக ஏற்றுக் கொள்ளாமலா இருப்பாய்? நான் வருகிறேன். அந்தக் கிழவருடன் சில மணி நேரம் தங்கிவிட்டு, என் புதிய வாழ்க்கைக்குப் போயாக வேண்டும். வரட்டுமா?"

"டாக்டர்!" என்று வாய்விட்டுக் கூவும் வரையில் சத்யாவுக்குச் சக்தி இருந்தது. பிறகு எல்லையற்ற அயர்வினால் அவள் கண்கள் மூடிக் கொண்டன.

இன்னும் பத்து நிமிடம் பார்ப்போம்.

காலை ஏழு மணி முதல் எட்டு ஐம்பதுவரை கால் கடுக்க நின்றுகொண்டிருந்த மணி, தனக்குத்தானே இன்னொரு பத்து நிமிடம் கொடுத்துக் கொண்டான்.

என்ன யோசித்தும் சத்யாவுக்கு என்ன நேரிட்டிருக்கும் என்று அவனுக்குப் புலப்படவில்லை. உதவிப் போலீஸ் கமிஷனரின் இல்லத்தில் வைத்திருந்த கையாள், சத்யா ஆஸ்பத்திரியிலிருந்தே வரவில்லை என்று தெரிவித்துவிட்டுப் போனான் எப்படியும் வீட்டுக்கு வந்து, அம்மாவையும் அழைத்துக் கொண்டு திரும்புவதென்றால் நேரம் பிடிக்கத்தானே செய்யும் என்று சமாதானம் செய்து கொண்டான் மணி.

ஒரு பாக்கெட்டுக்கு மேல் சிகரெட்டுகள் சாம்பலாகி அவன் காலடியில் குவிந்தன. சிறிது சிறிதாக மணி குழப்பப்படலானான்.

பரபரப்பு அவனை ஆட்கொண்டிருந்த போதிலும் பொறுமை இழக்கவில்லை; நம்பிக்கை தளரவுமில்லை. அவ்வளவு மிரட்டிய பிறகு சத்யாவும் அவள் அம்மாவும் தன்னை ஏமாற்றத் துணிவார்கள் என்று அவன் நினைக்கவில்லை.

"என்ன சார் இங்கே நின்னுக்கிட்டிருக்கீங்க?" என்று விசாரித்தார் ஒரு நெட்டைப் பேர்வழி. எங்கேயோ



பார்த்த ஞாபகம் இருந்ததே தவிர, திட்டமாய் நினைவு வரவில்லை.

"நான் ராணியோட குரூப்பிலே டிக்கெட் விற்கிற குமாஸ்தாவாக இருந்தேன், சார்," என்றார் அந்த ஆள்.

ராணி! மணிக்கு நினைவு வந்தது.

"நீ போகவில்லையா காஷ்மீர் டூரில்?"

"இல்லை சார். சிக்கனம் பண்ணுவதாய்ச் சொல்லிக்கொண்டு என்னை நிறுத்திவிட்டு, எந்தக் கழுதையையெல்லாமோ கூட்டிக்கொண்டு போயிருக்கிறார்கள்," என்று நெடுமூச்செறிந்தார் நெட்டை. "இன்றைக்கு வருகிறார்களாம். நான் வரட்டுமா?"

இழந்திருந்த உற்சாகம் திரும்பி வந்தது ஓரளவு. இன்று ராணி வந்துவிடுகிறாள்! சத்யாவின் திருமணம் முடிந்த பிறகு, ராதானந்தரின் கையில் விலங்கு ஏற்றிவிடலாம். எதிரியொருத்தன் நிரந்தரமாய் ஒழிந்தான் என்ற திருப்தியோடு வாழ்க்கை நடத்தலாம். சாரங்கபாணியின் பகைமையுடன் சென்னையில் குடித்தனம் போட முடியாது என்பது முன்பே முடிவு கட்டிவிட்ட விஷயம். கல்கத்தாவிலுள்ள ஒரு சிநேகிதனுக்கு எழுதியிருந்ததற்குப் பதில்கூட வந்துவிட்டது. அங்கே நல்ல வேலை சுலபமாய்க் கிடைத்து விடுமாம்.

எல்லாவற்றுக்கும் முன்னால், திருமணம் முடிய வேண்டுமே! இருப்புக் கொள்ளாமல் வீட்டை அடைந்தான் மணி.

வேறு திசையிலிருந்து ஓட்டமும் நடையுமாக வந்து சேர்ந்த வீரப்பன், ஒன்றியாக எஜமானைக் கண்டதும் தயக்கத்துடன் நின்றான்.

"உன்னை அங்கே கோவில்லதானே இருக்கச் சொன்னேன்?" என்று மணி பல்லைக் கடித்தான்.

''ஆமாங்க. உங்க சினேகிதங்க இரண்டு மூணு பேர் காத்திட்டிருக்காங்க. குருக்கள்தான், நீங்க ஏன் இன்னும் வரலேன்னு பார்த்திட்டு...''

''தெரியும் எனக்கு, எப்போது வரவேண்டுமென்று. நீ போய் அங்கேயே இரு,'' என்று அவனை விரட்டிவிட்டு, வாசலிலேயே நின்றவாறு தெருவின் இரண்டு கோடிகளையும் கவனித்துக் கொண்டிருந்தான் மணி. சுள்ளென்று வெய்யில் உடம்பில் உறைக்கலாயிற்று. அலுவலகத்துக்கும் கல்லூரிக்கும் போவோரின் கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைந்து கொண்டிருந்தது. சத்யா வருகிற வழியாய்த் தெரியவில்லை.

## நாற்பத்தொன்பது

எங்கேதான் போயிருப்பாள்? மூளை குழம்பிவிட்டது மணிக்கு.

சத்யா தன்னை ஏமாற்றியிருக்கக் கூடுமா? அப்படி நினைக்கத் தோன்றவில்லை. அத்தானின் உயிரைப் பணயமாக வைத்துள்ள பிரச்னையில், அசட்டுத்தனமாக அவள் விளையாட மாட்டாள்.

பின்னே? உடம்பு ஏதாவது சரியில்லையா? இருக்க முடியாது. முந்தின மாலை சந்தித்தபோது நன்றாய்த்தான் இருந்தாள். இந்தச் சில மணி நேரத்துக்குள் அவளுக்கு எதுவும் நேர்ந்திருக்க முடியாது.

ஆஸ்பத்திரியில் ஏதாவது அவசர கேஸ் எதிர்ப்பட்டு, விடுவித்துக்கொண்டு வர முடியாதபடி சிக்கியிருப்பாளோ?

பக்கத்தில் தெரிந்த ஒரு கடையினுள் நுழைந்து டெலிபோன் செய்தான்.

ஆஸ்பத்திரியிலிருந்து வந்த பதில் அவனைத் திடுக்கிட வைத்தது.



''சத்யாவா? அவள் இங்கே வரவேயில்லையே நேற்று இரவு?'' என்று ஒரு நர்ஸ் தெரிவித்தாள்.

திகைத்தான் மணி.

அவள் ஆஸ்பத்திரிக்குப் போய்க் கொண்டிருந்தபோது தானே வழிமறித்துக் காரில் ஏறிக்கொண்டு பேசினான். அதற்குப் பிறகு மறுபடி வீட்டுக்குத் திரும்பிவிட்டாளா என்ன?

மறுபடியும் டெலிபோனை எடுத்து, சாரங்கபாணியின் வீட்டுக்குச் சுழற்றினான்.

''சத்யா இன்னும் ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பவில்லை'' என்று கடுகடுப்பான குரலில் சாரங்கபாணியே பதில் கொடுத்தார்.

நிச்சயமாகத் தான் ஏமாந்து விட்டோம் என்ற எண்ணம் ஏற்பட்டதும், ஆத்திரத்தினால் அவன் கழுத்து நரம்புகள் புடைத்தன. முகம் ஜிவுஜிவுவென்று சிவப்பாயிற்று. கண்கள் தீ கக்கலாயின.

ரொட்டிக் கடைக்காரரின் மேஜைமீது ஓர் அரை ரூபாய் காசை விட்டெறிந்துவிட்டு படியிறங்குகையில், ''குட்மார்னிங் சார்!'' என்ற சிறுவனொருவனின் குரல் அவனை நிறுத்தியது.

அந்த வட்ட முகம், சின்னக் கண்கள், அரை டிராயர்— எங்கோ பார்த்தமாதிரி இருந்தது. அந்தச் சிறுவனை ஆனால் நினைவு வரவில்லை. நினைவை வருத்திக் கொள்ளும் அளவுக்குப் பொறுமையும் இல்லை.

''தள்ளு அப்பாலே,'' என்று அந்தச் சிறுவனை முரட்டுத்தனமாக வழியிலிருந்து விலக்கினான் மணி.

''என்னாங்கோ சார், இந்த அப்துலை மறந்திட்டீங்களே!'' என்றான் அவன். ''பிஸ்கெட் வாங்கித் தருவீங்களாக்கும்னு நெனைச்சி வந்தேன். சத்யா அக்கா எத்தினி லாட்டி வாங்கித் தந்திருக்கிறாங்க? ஏன், சாமிகூடச் சாக்லேட் வாங்கித் தந்திருக்காங்க. நீங்கதான்......''

கண்ணைக் கசக்கிக் கொண்டே சிறுவன் போய் விட்டான்.

உலகத்தைச் சுட்டுப் பொசுக்கி விடவேண்டும் போன்ற வெறுப்புடன், பாண்ட்டின் இரு பைகளிலும் இரு கைகளை நுழைத்துக்கொண்டு, தெருவோடு நடக்கலானான் மணி.

'ஆஸ்பத்திரியில் கேட்டால், வீடு. வீட்டில் விசாரித்தால் ஆஸ்பத்திரி! நாடகம்தான் ஆடுகிறார்கள்!'

அடுத்து என்ன செய்வது என்ற வழி தெரியாமல் சட்டென அவன் நடை நின்றது. தூரத்தில், தெருவின் திருப்பத்தில் மறைந்து கொண்டிருந்த சிறுவனின் உருவம் மீண்டும் அவன் கண்ணில் பட்டது.

அவன் யாரென்று நினைவு வந்து விட்டது. சாரங்கபாணியின் பங்களாவில் தண்டச்சோறு தின்ற பிச்சைக்காரப் பட்டாளங்களில் ஒன்று. சின்னச் சாமியாரின் செல்லச் சுவீகாரம். சத்யாவின் அபிமானத் தம்பி.

சட்டென வேறொரு நினைவு மணியைத் தாக்கியது.

சத்யா— சாமி என்று அந்தப் பையன் சற்றுமுன் சொன்னது காதில் ஒலித்தது.

ஏன் அப்படி இருக்காது?

சத்யா, ராதானந்தரிடமே போயிருந்தால்? 'மணி என்னை மிரட்டுகிறான்' என்று அந்தப் பண்டாரத்தின் காலிலேயே சத்யா விழுந்திருந்தால்?

பண்டாரம் எதற்கும் துணிந்தவன். 'நான் உன்னைக் காப்பாற்றுகிறேன்' என்று அபயம் கொடுத்திருப்பான். அதற்கப்புறம்?—

பவானி மடத்தை நோக்கி அவன் கால்கள் விரைந்தன.

ராதானந்தரையும் காணோம், சத்யாவையும் காணோம்.



பொறுப்பாகப் பதில் சொல்கிறவர்கள் இருக்கிறார்களா என்றால் அதுவுமில்லை. கிட்டத்தட்ட நடுப்பகல் வேளையாதலால், பிரார்த்தனைக்கோ மனச்சாந்திக்கோ வருகிறவர்களும் அதிகம் கண்ணில் படவில்லை.

தோட்டத்தில் ஒரு செடியின் நிழலில் மண்ணைத் தோண்டிக் கொண்டிருந்த அப்துல், "பெரியசாமி எங்கியோ தெரியாதுங்க. சின்னச் சாமி மட்டும்தான் ரூமிலே இருக்குது," என்று தயங்கித் தயங்கிச் சொன்னான்.

இந்தச் சாதாரணத் தகவலைச் சொல்லதில் இத்தனை தயக்கம் ஏன், மர்மம் எதற்காக என்று புரியாமல் சின்னச் சாமியாரின் அறையை நாடினான் மணி. சத்யாவைத் தேடி வந்த இடத்தில் ராதானந்தரையும் காணவில்லை என்பதை உணர உணர, இனம் தெரியாத திகிலொன்று முளைத்து, கோபமாக உருவெடுக்கத் தொடங்கியது.

கோபம் காரணமாக, சின்னச் சாமியாரின் அறைக்குள் அவன் பிரவேசித்தபோது, குரல் நிதானத்தை இழந்திருந்தது. "எங்கே அந்த சீனியர் ஆண்டி?" என்று குத்தலாகக் கேட்டான் சின்னச் சாமியாரிடம்.

மேஜைக்குள் எதையோ தேடிக்கொண்டே, "இங்கேதான்... எங்கேயோ போனார். குளிக்கவோ என்னவோ......" என்றார் சின்னச் சாமியார்.

"நிமிர்ந்து பார்த்துத்தான் பேசுங்களேன்," என்று அதட்டினான் மணி.

"மன்னிக்கணும்," என்று சொல்லிவிட்டு அங்கிருந்து நழுவினார் சின்னச சாமியார். "ஒன்றுமில்லை...... மயிலாப்பூர் ஆயுர்வேத ஆஸ்பத்திரியை மடத்திலேயே நடத்துவதாயிருக்கிறோம்...... அதுதான். அதற்காக......"

"ஊர்க்கதை கேட்கவில்லை, பெரிய சுவாமியார் எங்கே என்றுதான் கேட்டேன்."

''அதுதான் சொன்னேனே, கொஞ்சம் அவசரவேலை... அந்த ஆஸ்பத்திரி விஷயமாய் இன்விடேஷன் அச்சடிக்கக் கொடுக்கணும். இங்கேயே இருங்கள். அரை மணி நேரத்தில் திரும்பி விடுகிறேன்'' என்று கெஞ்சிவிட்டுச் சின்னச் சாமியார் போய் விட்டார்.

ராதானந்தரைப்பற்றி எதுவுமே சொல்லாமல் அவர் மழுப்பி விட்டது மணியின் ஆத்திரத்தைக் கிளப்பியது. கூண்டிலடைபட்ட புலி போல் குறுக்கும் நெடுக்குமாய் அறைக்குள் நடை போட்டபோது, தற்செயலாய் மேஜை மீது அவன் பார்வை சென்றது

அழைப்பிதழ் ஆயுர்வேத ஆஸ்பத்திரி திறப்புவிழா அழைப்பிதழ்!

ரத்தம் கொதித்தது மணிக்கு. என்ன மோசடிக்காரர்கள்! இனிமேல் அச்சடிக்கத் தரவேண்டும் என்று சொல்லி விட்டு இந்த ஆள் போகிறார் வெளியே. ஆனால் ஏற்கெனவே அச்சடித்துத் தயாராயிருக்கிறது அழைப்பு!

ஆத்திரம் வெறியைத் தூண்ட, வெளியே வந்து பார்த்த மணிக்கு, மறுபடி அந்தச் சிறுவன்தான் கண்ணில் பட்டான். இரண்டு எட்டில் அவனை அடைந்து கிராப்பைப் பிடித்து எழுப்பி, ''பெரிய சாமியார் எங்கே போனார்? சத்யா இங்கே வந்தாளா? எப்போது?'' என்று சரமாரியாகக் கேள்விகளைக் கொட்டினான் அந்தச் சிறுவன்மீது.

அப்துலின் முகம் வெளுத்தது பயத்தினால். ''அக்காவா...... நான் பார்க்கலையே...'' என்று குழறியதோடு மணியின் கையிலிருந்து தன் தலைமயிரை விடுவித்துக் கொள்ளவும் திமிறினான்

மணி, பளீரென்று அறைந்து விட்டான் சிறுவனின் கன்னத்தில் ''சொல்லடா நிஜத்தை! எங்கே எல்லாரும்?''

அப்துலின் பதில் விம்மலாகத்தான் வெளிப்பட்டது. ''ராத்திரி...... அக்கா...... வந்திருந்தது......'' என்றான்.



''எங்கே அவர்கள்?'' சிறுவனின் தலையை விட்டு விட்டு, கையை முறுக்கினான் மணி.

''வலிக்குதுங்க, வலிக்குதுங்க......'' என்று வீறிட்டுக் கொண்டே, ''விடிகாலையிலே ரெண்டு பேரும்...... பெரிய சாமியாரும் அக்காவுமாய் புறப்பட்டுப் போனாங்க... இரண்டு பேரும் கல்யாணம் கட்டிக்கப் போறாங்களாம்!''

கல்யாணம்! நரம்பு முறுக்கேற, ''அப்புறம்?'' என்று மணி உறுமினான்.

''வேறே ஒண்ணும் தெரியாதுங்க......''

பளீரென்று இரண்டாவது கன்னத்தில் இரண்டாவது அறை பாய்ந்தது.

ஹோவென்று அழ ஆரம்பித்துவிட்டான் அப்துல். ''அவரு...... பெரிய சாமியாரு மட்டும்...... ராத்திரி வந்து... பணமெல்லாம் எடுத்திட்டுப் போகப் போறாராம்... சின்னச் சாமியாரிடம் சொல்லிட்டிருந்தாரு ரகசியமாய்...''

''கொன்று விடுவேன் கொன்று! பெரிய சாமியாரும் சத்யாவும் இப்போ எங்கே ஒளிந்து கொண்டிருக்கிறார்கள்?'' என்று சிறுவனின் கையை மேலும் முறுக்கினான் மணி. என்ன செய்தும் தகவல் கிடைக்கவில்லை. ''நானே பார்த்துக் கொள்ளுகிறேன்,'' என்று உறுமிவிட்டுப் போய் விட்டான்.

கிழக்கே இரண்டு பர்லாங்கு நடந்தான். வானொலி நிலையக் கட்டிடத்துக்கு எதிரிலிருந்த மணற்பகுதியில் உட்கார்ந்து கொண்டான்.

எல்லாம் முடிந்து விட்டது— ஒன்றே ஒன்றைத் தவிர.

மணமகன் ராதானந்த சுவாமிகள் தூக்குமேடையில் ஏற வேண்டியதுதான் பாக்கி. ஏற்றி வைக்க வேண்டிய கடமை ஒன்றுதான் நமக்குப் பாக்கி.

நேரே சாரங்கபாணியிடம் சென்று எல்லாவற்றையும் சொல்லிவிட்டால் தீர்ந்தது என்று சில நிமிடங்களுக்கு முன்னால் மணி நினைத்தான். ஆனால் அதனால் பயன் விளையாது.

சாரங்கபாணி என்னதான் கடமை தவறாத அதிகாரி என்றாலும், குடும்ப கௌரவத்தைக் கெடுத்துக் கொள்ளும் அளவுக்குப் போகமாட்டார். அதுவும், தன் மகளுக்குக் கணவனாக ஆகிவிட்ட பிற்பாடு, ராதானந்த சுவாமிகளுக்கு மரண தண்டனை வாங்கித் தந்து, மகளை விதவையாக்கவா நினைப்பார்? ஒரு நாளுமில்லை. பெரிய அதிகாரி. பெரிய இடங்களில் செல்வாக்குப் படைத்தவர். எப்பாடு பட்டேனும் ஒரே அமுக்காக அமுக்கி, ஒரு கேசுப் இல்லாமற் பண்ணி விடுவார்.

வெறுப்புடன் மணலைத் தட்டி விட்டு எழுந்து கொண்டான் மணி.

இன்று ராத்திரி ராதானந்தர் வருவாராம் மடத்துக்கு!

மடையர்களா! வரமாட்டார் அவர்! அவர் வருகிற வரையில் நான் காத்திருக்கவும் போவதில்லை. இந்த நிமிடத்தில் சுவாமிகள் எங்கே இருக்கிறாரோ அங்கேயே சென்று, என் கையாலேயே அவருக்கு மரியாதை நடத்தப் போகிறேன்!

ஆனால் எங்கே அந்த ஆள்? எங்கே ஒளிந்திருக்கிறான், தன் திருட்டுக் கல்யாணத்தை நடத்திக் கொள்ள?

ராதானந்தர் அண்டை அயலூருக்குச் செல்வதென்றால், டவுனில் உள்ள ஒரு சேட்டின் காரை வாங்கிக் கொள்வதுண்டு என்று நினைவு வந்தது.

மீண்டும் தன்னம்பிக்கை பெற்றவனாக நிமிர்ந்து நடந்தான் மணி. சௌகார்ப்பேட்டையில் இரவு நேரக் கோலாகலங்கள் கொட்டி முழங்கிக் கொண்டிருந்தன, அவன் சேட்ஜியின் வீட்டை அடைந்தபோது.



அவருடைய கார், வாசலிலேயே நிற்கிறதே! ராதானந்தர் இதில் போகவில்லையா? அப்படியானால்?

எதிரிலிருந்த லாலா கடையிலிருந்து அப்போதுதான் டிரைவரும் வெளிப்பட்டான்.

''ஏனப்பா, பவானி மடம் சுவாமிஜிக்கு இந்த வண்டி நானே போவது வழக்கம்?'' என்று மணி கேட்டான் மரியாதையுடன்.

டிரைவர் வணக்கத்துடன் கும்பிட்டு, ''ஆமாம் சாமி,'' என்றான். அவன் நெற்றியில் சந்தனப் பொட்டு பளபளத்தது. சுவாமிஜியைப் பற்றிப் பேச்சு எடுத்தாலே, பயபக்தியுடன் பதில் சொல்கிறவன் போலும்.

''சுவாமிஜி எங்கேயோ வெளியூர் போயிருக்கிறாராமே, வந்து விட்டாரா?'' என்று கேட்டான் மணி.

''தெரியாதுங்க. கேட்டனுப்பிச்சிருந்தாரு, வண்டி வேணுமின்னு. நரசிம்மலுபேட் போகணும்னு சொன்னாரு. இதுதான் இருபது நாளாய் எஞ்ஜின் ரிப்பேராகிக் கிடக்குதுங்களே, எங்கே போறது? வேறே ஏற்பாடு பண்ணிக்கிட்டார் போலிருக்குது. எங்க சேட்ஜிக்குக்கூட ரொம்ப வருத்தம், சாமிக்கு உதவ முடியலையேன்னு.''

மணி வேறு யோசனையில் இருந்தான். ''நரசிம்மலு பேட்டா? எங்கே இருக்கிறது அது?''

''சுத்தக் குக்கிராமமுங்க. எண்ணூர் தாண்டி, ஐந்து மைல். கார்கூட முழுக்கப் போக முடியாதுங்க. நிறுத்திட்டுப் படகிலே போகணுமாம். நம்ம சாமி ஒருத்தர்தான் அங்கெல்லாம்கூடப் போய் ஜனங்களுக்கு நல்லது செய்யறாரு...''

'ஆமாம். அந்த மாதிரி ஆளில்லாத குக்கிராமம்தானே வேண்டும், அவனுடைய திருட்டுக் கல்யாணத்துக்கு!' என்று நினைத்துக்கொண்டு திரும்பினான் மணி.

சாரங்கபாணி இன்னும் எரிச்சலிலேதான் இருந்தார்.

குளிர்ந்த நீர் அவர்மீது கொட்டிக் கொண்டிருந்தது.

சோப்புக்காகப் பக்கத்து ஸ்டாண்டில் துழாவியபோது வேறு ஏதேதோ இருந்தனவே தவிர, அவருக்குப் பிடித்தமான சந்தன சோப்பைக் காணோம். மனைவியின்மீது உள்ள வழக்கமான எரிச்சலுடன், கணவனின் சொந்தத் தேவைகளைக்கூடக் கவனிக்காமல் அப்படி என்ன வெட்டி முறிக்கிறாள் என்ற கோபமும் ஏற்பட்டது.

குளியலறைக்கு வெளியே டவல், புது உடைகளுடன் நின்றிருந்த வேலைக்காரனிடம் "அம்மா எங்கேடா?" என்று கேட்டார்.

"வாசலிலே நின்னுட்டிருக்கிறாங்க," என்று அவன் தெரிவித்தான்.

வாசலிலேயா? யாரை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள், காலை எட்டு மணி வாக்கில்? வியப்பாயிருந்தது சாரங்கபாணிக்கு.

உடை மாற்றிக்கொண்டு அலுவலறைக்கு அவர் வந்தபோது, "பலகாரம் ரெடி," என்று சொல்லக்கூட மீனலோசனி வரவில்லை. சமையல்காரன்தான் கூப்பிட்டான்.

"அம்மா கேட்டருகில் நிற்கிறார்களாம். நான் வரச் சொன்னேன் என்று சொல்," என்றார்.

அப்புறமும்கூட, அவர் இரண்டாம் தரம் இட்டிலி போட்டுக் கொண்டிருந்தபோதுதான் மீனலோசனி வந்தாள்.

"என்னத்தைக் கெட்டுப் போக்கிவிட்டுத் தவிக்கிறாய்!" என்று கேட்டார்.

"கெட்டுப் போக்கினேனா?...... எதை? ஒன்றுமில்லையே?" என்று குழம்பிப் போனாள் மீனலோசனி.



"பின்னே எதற்காகக் காலையிலிருந்து வாசலுக்கும் உள்ளுக்குமாய் நடை போடுகிறாய்?"

ஒன்றுமில்லையே...... சத்யா ராத்திரி டூட்டிக்குப் போனவள், இன்னும் வரக் காணோமே என்று பார்த்தேன்..."

"பச்சைக் குழந்தை திருவிழாவில் காணாமற் போய் விட்டாளாக்கும்? என்னிடம் வேண்டுமானால் கம்ப்ளெயின்ட் எழுதிக் கொடேன்!" என்று சொல்லி விட்டு எழுந்து போய் விட்டார் சாரங்கபாணி.

அன்று பகல் பூரா அலுவலகத்தில் வேலை சரியாயிருந்த போதிலும்— ஹைகோர்ட்டில் ஒரு கொலைக் கேசுக்குச் சாட்சி கூறக்கூடப் போய் வந்தார்— நடுநடுவே மீனலோசனியின் முகம் அவர் நினைவில் வட்டமிட்டுக் கொண்டேயிருந்தது. சத்யா பல சந்தர்ப்பங்களில் சேர்ந்தாற்போல் இரண்டு நாட்கள்கூட ஆஸ்பத்திரியில் இருந்ததுண்டு. அதற்கெல்லாம் கவலைப்பட்டிராத தாய், இன்று ஏன் காலை எட்டு மணிக்கே மகள் வரவில்லையே என்று துடித்துக் கொண்டிருக்கிறாள்?

இரவு ஏழு மணி சுமாருக்கு வீட்டினுள் நுழைந்தவர், மனைவிக்குத் தெரியாமலே மாடியை அடைந்தார்.

இரண்டு எண்ணங்கள் அவருக்கு இருந்தன.

மகளின் அறையைச் சோதனை போட வேண்டியது. ஒன்று.

கணவர் வெளியே போயிருக்கிறார் என்ற எண்ணத்தில், மீனலோசனி என்ன செய்கிறாள் என்பதைக் கண்காணிப்பது. இரண்டாவது.

டார்ச் விளக்கின் ஒளி, சத்யாவின் மேஜை மீதும் கட்டிலின் மீதும் அலமாரி மீதும் தவ்விக் குதித்தது.

கசப்பான வேலை! சாரங்கபாணியின் உள்ளத்துக்குள் ஒரு மெல்லிய வேதனை அரித்தது. எவ்வளவோ குற்றவாளி

களின் இல்லங்களையும் கிடங்குகளையும் சோதனை போட்டுப் போட்டு மரத்திருந்த உள்ளம், தன் சொந்தப் பெண்ணின் அறையையே சோதனையிடவும், அவனுக்குத் தெரியாமல் அவனுடைய உடைமைகளைக் குடையவும் நேரிட்ட இந்தச் சந்தர்ப்பத்தை எண்ணி நொந்தது. அதுவும், அவளுடைய வார்ட்ரோபில் பல உயர்ந்த ரகப் புடைவைகளின் கீழே மிக பத்திரமாக வைத்திருந்த அந்தத் துண்டுக் காகிதத்தைக் கண்டபோது, கல்நெஞ்சக்காரரான அந்தப் போலீஸ் அதிகாரியின் கண்ணில்கூட ஒரு பொட்டு நீர் துளிர்த்தது. கோணல் மாணலாக வரையப்பட்ட ஒரு கழுதையின் படத்தையும், அதன் கீழே, 'சத்யாக் கழுதை' என்று எழுதப்பட்டிருந்த வரிகளையும் கண்டு, டெல்லியிலிருந்து ராதா போன வருடம் அனுப்பியது என்று ஊகித்துக் கொண்டார். எத்தனை பிரியமாக உள்ளே எடுத்து வைத்திருக்கிறாள்! பேதைப் பெண்! இந்நேரம் எவ்வளவு ஆனந்தமாக, உல்லாசமாக அமைந்திருக்க வேண்டும் அவள் வாழ்க்கை? எப்படியெல்லாம் திசை கெட்டுத் திரும்பிவிட்டது...!

அந்தச் சமயத்தில்தான், தெருவில் ஒரு பளீரென்ற வெளிச்சத்தைக் கண்டார். டக்கென்று அணைந்து விட்டது அந்த வெளிச்சம்.

தெருப் பக்கம் இருட்டாயிருந்த போதிலும், காம்பவுண்டு சுவர் ஓரமாக ஒரு கார் நிறுத்தப்பட்டிருப்பதை சாரங்கபாணியினால் காண முடிந்தது. யாரோ ஓர் ஆள் இறங்கி வந்து கூர்க்காவிடம் ஏதோ விசாரிப்பதைக் கண்டார். கூர்க்கா வீட்டுக்குள் நுழைந்தான். மறுபடி வாசலுக்குத் திரும்பினான். அவன் பின்னாலேயே மீனலோசனி சென்றாள்.

திக்கென்று நின்றார் சாரங்கபாணி.

மீனலோசனியின் உறவுக்காரர்கள் யாரேனும் வந்திருப்பார்களோ என்று முதலில் எண்ணினார். ஆனால் அப்படி இருந்தால் நேரே உள்ளே வந்திருப்பார்களே



தவிர, வாசலில் நின்று கொண்டு மீனலோசனியை வரச் சொல்ல மாட்டார்களே!...

குழப்பத்துடனிருந்த சாரங்கபாணிக்குத் திடீரெனத் தெளிவு பிறந்தது. மறுவினாடி தாங்க முடியாத சினம் வந்தது.

வாயில் கேட்டருகில் உள்ள விளக்கின் வெளிச்சத்தில் மணியின் தலையை அவர் அடையாளம் கண்டு விட்டதே காரணம்.

## ஐம்பது

என்ன துணிச்சல்! இந்த வீட்டு வாசலுக்கே வந்து, இந்த வீட்டின் எஜமானியையே வரவழைப்பதா!

நிமிட நேரமும் தயங்கவில்லை சாரங்கபாணி, தட தட வென்று மாடிப்படியில் இறங்கினார். வேகமாகத் தோட்டத்துக்கு வந்தார்.

உடனே நிதானமடைந்தார். மணியைப் பிடித்து நாறு அறை விடுவதால் எந்த மர்மமும் விளங்கிவிடப் போவதில்லை. எந்தச் சிக்கலும் தீர்ந்துவிடப் போவதில்லை. அதற்குப் பதில் பொறுமையாயும் ரகசியமாயும் கவனித்தால்...

காம்பவுண்டு சுவருக்கு மறுபுறத்தில் அவர்கள் நின்றிருந்தார்கள். காவல்காரக் கூர்க்காதான் அவரைக் கண்டதும் ஏதோ கெடுத்து விடுவான் போலிருந்தது. ஆனால் அவனும், அவர் மறைவாகக் கவனிக்க விரும்புகிறார் என்பதைப் புரிந்து கொண்டான். தலையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு விறைப்பாக நின்று கொண்டான்.

முதலில் மீனலோசனியின் பயந்த குரல்தான் கேட்டது. ''நான் ரெடியாய்த்தான் இருக்கிறேனப்பா, மணி. அவளைக் காணோமே— சத்யாவை?''

''சரிதான் போங்கள்! அவள் அங்கே காத்திருக்கிறாள் சாயந்தரத்திலிருந்து! உங்களை அழைத்துப் போகத்தான் வந்தேன். ஏறுங்கள் வண்டியில்... ராத்திரியே முகூர்த்தம்!''

''அவன் இங்கே வருவதாகச் சொன்னானே!... காலையில்கூட ஆஸ்பத்திரியிலிருந்து வராமல்...''

''ஆஸ்பத்திரியில் ஒரு பெரிய ஆபரேஷன் கேஸாம். அவன் இருக்கிறாற்போல் ஆகிவிட்டதாம். அப்புறம் இங்கே வந்து, அப்பா எங்கேயாவது தடுத்துவிட்டால் என்ன பண்ணுவதென்று...... நீங்கள் வாருங்கள், போகும்போது சொல்கிறேன்.''

''இப்பவேயா?'' என்று மீனலோசனி குழம்பினாள். ''அவர் வந்தால் தேடுவார்......சமையல்காரனை வீட்டுக்கு அனுப்பணும்...''

''அதெல்லாம் தன்னாலே நடக்கும். முகூர்த்த நேரம் தாண்டுகிறது, வாருங்கள். இந்தாப்பா கூர்க்கா, ஐயா வந்தால் அவசரமா வெளியே போனார்களென்று சொல்லு. நீங்கள் ஏறுங்கள் அம்மா.''

''வந்து...... மணி... நான் என்ன சொல்கிறேனென்றால்...''

''எதுவும் வேண்டாம்...... ஏறுங்கள் வண்டியில்!''

கார் கிளப்பும் ஓசை. கதவு சாத்தப்படும் சத்தம்.

சாரங்கபாணி, திடீரென விழித்துக் கொண்டார். ஒரே பாய்ச்சலில் மணியைப் பிடிக்க நினைத்தார். ஆனால் காம்பவுண்டு சுவருக்கு இந்தப் பக்கம் இருந்தாராகையால், உடைந்த தொட்டிகளையும் செடிகளையும் விலக்கிக் கொண்டு வாசல்புறம் வருவதற்குள் கார் போய்விட்டது.

சினத்தின் தீப்பொறிகள் சாரங்கபாணியைக் காலோடு தலை கொட்டின. அவருடைய சொந்தப் பெண்ணுக்குத் திருட்டுக் கல்யாணம் நடத்துவதைப்பற்றி அவருடைய



வாசலிலேயே சதி! அதற்கு அவருடைய சொந்த மனைவியே உடந்தை! அதுவும், ஒரு பக்கா அயோக்கியனுடன் சேர்ந்து கொண்டு!

சாரங்கபாணியின் கையும் காலும் பறந்தன.

எங்கே போகிறார்கள் இப்போது?

கார் நம்பர் அவர் நினைவில் இருந்தது. வேகமாக வீட்டுக்குள் ஓடினார்.

டெலிபோன் டயல் சுழன்றது பல முறைகள்.

பின்னர் கார் ஷெட்டுக்குத் திரும்பினார் சாரங்கபாணி.

ஜேம்ஸ்பாண்ட் நாவலை முடித்துவிட்டுத் தலை நிமிர்ந்தாள் நர்ஸ் கிறிஸ்டி. துப்பறியும் நவீனத்தின் கடைசி வரிகளைப் படித்து முடித்ததும் ஏற்படுகிற திருப்தி, ஏக்கம் இரண்டுமே அவளுக்கு ஏற்பட்டன.

புத்தகத்தின் வழுவழுப்பான அட்டையைத் தடவியபடி, முகப்பில் காட்சி தந்த இளமங்கையின் 'ஹேர் டு'வையும் ரசித்த வண்ணம் சற்று நேரம் உட்கார்ந்தே இருந்தவள் திடுக்கிட்டுத் துள்ளியெழுந்தாள்.

அவளை எழுப்பியது சுவர்க் கடியாரத்தின் அலாரம் தான்.

மணி ஏழா!

ஆமாம். இரவுச் சாப்பாட்டுக்காக, அடுத்த படையெடுப்பும் முற்றுகையும் அமர்க்களங்களும் பெரிய இடத்துக்கேற்ற நாகுக்குடன் நடந்தேறிக் கொண்டிருந்தன.

சின்ன நர்ஸ்கூடத் தன்னைக் கூப்பிடவில்லையே என்று கோபம் வந்தது முதலில். பிறகு, அவள் நடுநடுவே வந்து என்னவோ கேட்டதும் தான் தலையாட்டி அவளை

அனுப்பிக் கொண்டிருந்ததும் ஞாபகம் வந்தது. ஆகவே அவள் மீது தப்பில்லை.

எதேச்சையாக மேஜையின் டிராயரைத் திறந்தாள் கிறிஸ்டி. மறுகணம் தேள் கொட்டினாற் போன்ற அதிர்ச்சியுடன், நாக்கை வெடுக்கென்று கடித்துக் கொண்டாள்.

மாடியிலிருக்கும் பேஷண்ட்டுக்கு, மாலை ஆறு மணிக்குப் போடும்படி டாக்டர் கொடுத்துவிட்டுப் போன ஊசி மருந்து அப்படியே இருந்தது.

மணியோ ஏழு. மருந்தையும் சிரிஞ்சையும் எடுத்துக் கொண்டு மாடிப்படியில் தாவி ஏறினாள் கிறிஸ்டி, சரக் சரக்கென்று ஸ்கர்ட் ஓசையிட. சின்ன நர்ஸ் குறுக்கே வந்து, ''அந்த கலெக்டர் சம்சாரம்......'' என்று ஏதோ ஆரம்பித்ததும், ''அவளைக் கொண்டு போய் மார்ச்சுவரியில் போடு,'' என்று சீறிவிட்டு மாடிக்கு விரைந்தாள். மத்தியானம் வந்திருந்த அறையை மறுபடி அடைந்தாள். கதவைத் திறந்து கொண்டு, ''ஸாரி...'' என்றபடி உள்ளே நுழைந்தாள்.

மூச்சு நின்றது, அவளுக்கு.

கட்டில் காலியாயிருந்தது.

''லச்சி! ஏ கிழவி!'' என்று அவள் கூவியதும், கூட்டுகிற கிழவி ஓடிவந்து ''இன்னாம்மா?'' என்று கேட்டாள்.

''இங்கே படுத்திருந்த அம்மாள் எங்கே? பாத்ரூமுக்குப் போயிருக்காங்களா?''

''இந்த அம்மாவா......அவங்க......'' கிழவியின் முகம் வெளுத்தது. ''பகல் மூணு மணிக்குப் போனாங்க. அப்பவே திரும்பி வந்தாங்க போல இருந்திச்சே. மறுபடி போயிருக்குதா......''



அவளுக்கு முன்னால் கிறிஸ்டியே ஓடிப் போய்ப் பார்த்தாள், வெராந்தாவின் கடைசியிலிருந்த பாத்ரூமை. வெளியிலிருந்தபடியே, ''அம்மா......மிஸ்......அம்மா,'' என்று குரல் கொடுத்தாள். பதில் காணோம்.

சாத்தியிருந்த கதவைத் தட்டினாள். உள்ளே தாளிடப் படாததால் உடனே திறந்து

எவரையும் காணவில்லை.

கிறிஸ்டியின் இதயம் வெடித்துக் கொண்டிருந்தது. கண்கள், நீரை வெள்ளமாகக் கொட்டத் தயாராகிக் கொண்டிருந்தன. ''கிழவி......நீ எங்கேயாவது போயிருந்தாயா?'' என்றாள் பரிதாபமாக.

''நகருவேனா அம்மா. டாக்டர் அத்தினி வாட்டி சொல்லியிருக்கிறப்போ......புகையிலை வாங்கத்தான் ஒரே ஒரு நிமிட்டு இறங்கிப் போனேன்......''

''அது போதாதாடி பாவி!'' என்று பல்லைக் கடித்துவிட்டு, வெராந்தாவின் மறுபுறத்திலிருந்த மாடிப் படிக்கட்டின் வழியாக இறங்கினாள். நர்ஸிங் ஹோமின் பின்புறக் காம்பவுண்டும், அங்கே ஒரு கதவும் இருந்தன. கதவு திறந்திருந்தது. கதவுக்கப்பால் உள்ள சிறு சந்து, சில கெஜ தூரத்தில் பெரிய சாலையை அடைந்தது.

கிறிஸ்டியின் பதைப்பு பூகம்பமாய் வெடித்துக் கொண்டிருந்தது. சின்ன நர்ஸை மெதுவாய்க் கூப்பிட்டு, தனியே அழைத்துப்போய், ''மாடியிலிருந்த பேஷண்டைக் காணோமே. நீ பார்த்தாயா?'' என்று கேட்டதுதான் தாமதம், ''ஐயையோ! அவங்களைக் காணோமா? டாக்டர் என்னைக் கொன்று போட்டு விடுவாரே அக்கா!'' என்று அவள் தோளைக் கட்டிக்கொண்டு ஓவென்று அழவே ஆரம்பித்து விட்டாள் அவள்.

அவளைச் சமாதானப்படுத்திவிட்டு, மனத்தைத் திடப்படுத்திக் கொண்டாள் கிறிஸ்டி.

நிதானமாக டெலிபோன் டயலைச் சுழற்றலானாள்.

டாக்டர் ஆஸ்பத்திரியில் இல்லையாம். ஏதோவொரு கிராமத்துக்கு அவசரமாய்ப் போவதாகப் பகல் மூன்று மணி சுமாருக்கு டெலிபோனில் தெரிவித்திருந்தாராம்.

கிறிஸ்டி தனது அழகிய பாப் தலையைச் சொறிந்து கொண்டான் நளினமாக.

கிராமங்களிலெல்லாம் டாக்டருக்குப் பிராக்டிஸ் இருக்கிறதா? இது எந்தக் கிராமத்தில்?......

ராணியின் இதயத்தில் சந்தோஷம் நிரம்பியிருந்தது.

கைப் பையிலிருந்து சிறு கண்ணாடியையும் பஃப்பையும் எடுத்தாள். முகத்துக்கு ஒருமுறை ஒற்றிக்கொண்டு உதட்டைச் சுழித்து அழகு பார்த்துக் கொண்டாள்.

டாக்ஸி போய்க் கொண்டிருந்தது.

பல நாட்கள் கழித்து, சென்னை டாக்ஸியில் அமரும் அனுபவத்தைப் பெற்றபோது, சொந்த வீட்டில் நுழைந்த மாதிரி ஒரு திருப்தியும் பாதுகாப்பான உணர்வும் பிறந்தன. ஆனால் வேகம் பற்றவில்லை.

''என்னய்யா மெட்ராஸ் டாக்ஸி! டெல்லியிலும் காஷ்மீரிலும் பார்க்க வேண்டும் வேகத்தை! தலையை வெளியிலே நீட்டினாயோ அவ்வளவுதான்! வேறே மேக்கப்தான் போடணும் அப்புறம்!''

டாக்ஸி டிரைவர் மகிழ்ச்சியுடன் அவளுடன் கூடச் சேர்ந்து சிரித்தான். ஒரு பிரபல நாடக நடிகை, ஒய்யாரமாக மேக்கப் செய்து கொண்டிருப்பவள், தன் டாக்ஸியில் ஏறியிருக்கிறாள் என்ற பெருமையும் கிளுகிளுப்பும் ஏற்கெனவே அவன் நெஞ்சை நிறைத்திருந்தன. இப்போது அவள் வேடிக்கையாகவும் பேசவே டிரைவரின் ஆனந்தம் அவனது இதயத்தின் வழியே காலுக்குப் பாய்ந்து, ஆக்ஸிலரேடரில் படிந்து ஸ்பீடாமீட்டரில் பிரதிபலித்தது.



''பவானி மடம்னுதானே அம்மா சொன்னீங்க?'' என்று கேட்டான்.

''ஆமாம்,'' என்று சொல்லிவிட்டுக் கடியாரத்தைப் பார்த்துக்கொண்டாள் ராணி.

மணி மூன்றரை.

சுவாமிஜி ஓய்வாயிருப்பாரோ?

தன்னையறியாமலேயே 'சுவாமிஜி' என்று அவரை நினைத்துவிட்டது அவளுக்கு வேடிக்கையாயிருந்தது.

ராதா...... சுற்றிச் சுற்றி வட்டமடித்துக் கொண்டிருந்த ராதா......

அவள் மேனி ஒருமுறை நடுங்கி ஒடுங்கிற்று.

'இல்லை, இல்லை...... இன்னொரு முறை அப்படி நினைக்க மாட்டேன்,' என்று தன்னைத்தானே கண்டித்துக் கொண்டாள்.

சுவாமிஜியின் காலில் விழுந்து ஆசி பெற வேண்டும். 'சாமி, முன்னே ஒரு தடவை உங்களை என் நாடக மேடையிலே ஏற்றிவைத்து அவமானப்படுத்தினேன். மறுநாளே ஆண்டவன் எனக்குப் படியளந்து விட்டான்! என் மாமன்காரன், ஒரு திருகாணிகூட மிச்சம் வைக்காமல் அத்தனையும் அடித்துக் கொண்டு போனானே, அது தண்டனையில்லாமல் வேறென்ன? அப்பவே கன்னத்தில் 'புத்தி புத்தி' என்று போட்டுக் கொண்டேன். மறுபடி மணி வந்து என் புத்தியைக் கெடுக்கப் பார்த்தான்...... நல்ல வேளையில்...'

''இதுதானுங்களே?'' என்று கேட்டுக்கொண்டே டிரைவர் டாக்ஸியை நிறுத்திவிட்டு, கதவையும் திறந்து விட்டான் ராணிக்காக.

டாக்ஸி நின்றதும் இறங்கியபோது, அவளுடைய நடையுடை பாவனையில் ஒரு மரியாதையும் அச்சமும்

ஏற்படுவதைக் கண்டு டாக்ஸி டிரைவருக்கு ஆச்சரியமேற்பட்டது. புடைவைத் தலைப்பை இழுத்துப் போர்த்துக் கொண்டாள். கட்டிடத்துக்குச் செல்லும் படிக்கட்டுக்கு வெளியிலேயே ஸ்லிப்பரைக் கழற்றிக் காலால் ஓரமாய்த் தள்ளினாள். சிறு சிலுத்திருந்த கூந்தலை அடக்கமாக அமுக்கிவிட்டுக் கொண்டாள்.

வெராந்தாவைக் கடக்குமுன் ஒரு சிறுவன் எதிர்ப்பட்டான்.

குனிந்து, பரிவோடு அவனைத் தட்டிக் கொடுத்து, ''உன் பேர் என்ன தம்பி?'' என்று கேட்டாள் ராணி.

''ஹரின்னும் சொல்வாங்க. அப்துல்னும் சொல்வாங்க'' என்றான்.

''நல்லா காமெடி பண்றியே?'' என்று அவனைப் பாராட்டிவிட்டு, ''சுவாமிஜி இருக்கிறார்களோ உள்ளே?'' என்றாள்.

''ஊரிலேயே இல்லை,'' என்றான் அப்துல்.

''எந்த ஊருக்குப் போயிருக்கிறார்? நான் அவரிடம் ரொம்ப முக்கியமான சமாசாரம் ஒண்ணு சொல்லணுமென்று வந்தேனே......''

ராணியின் முகத்தில் கவலை படர்வதைக் கவனித்த அப்துல், ''ரொம்பத் தூரமில்லை. நீங்களும் போகலாம். நரசிம்மலுபேட்,'' என்றான், பிறகு, ''டாக்டர் சம்பத்தும் சின்னச் சாமியாரும்கூட அங்கேதான் போனாங்க கொஞ்ச நேரம் முன்பு,'' என்ற தகவலையும் சேர்த்துச் சொன்னான்.

''தாங்க்ஸ்டா தம்பி,'' என்று சொல்லிவிட்டு, டாக்ஸிக்குத் திரும்பிய ராணி, ''நரசிம்மலு பேட்டாமே, எங்கே இருக்கிறது, தெரியுமா?'' என்று டிரைவரை விசாரித்தாள்.

அவனுக்குச் சட்டென நினைவு வரவில்லை போலும்.



யோசனை செய்தவாறே சாலைக்கு டாக்ஸியை நகர்த்தியவன் சடக்கெனப் பிரேக் போட்டான். ''ஏம்மா, எங்களை ஜெயிலுக்கு அனுப்புறதுக்குன்னே வர்றீங்களா?'' என்று திட்டினான், வெளியே தலை நீட்டி.

''சத்யா!'' என்று கூவி விட்டாள் ராணி. ''டெபுடி போலீஸ் கமிஷனரின் பெண்...... சாமியாருக்கு முறைப் பெண்ணாயிருந்தவள்...... நிறுத்தப்பா, நிறுத்து, நிறுத்து!'' டாக்ஸியிலிருந்து சரேலெனக் குதித்து, சத்யாவை ஆதரவுடன் தாங்கிக்கொண்டாள். அவளுடைய தள்ளாடிய நடை, செருகிக் கொள்ளும் பார்வை, மெல்லத் துடிக்கும் உதடு— என்ன இதெல்லாம்? ராணிக்கு எதுவும் புரியவில்லை.

''என்னம்மா உனக்கு? உடம்பு சரியில்லையா? மயக்கமாயிருக்கிறதா?''

ஊஹூம். எந்தக் கேள்விக்கும் பதில் பிறக்கவில்லை.

கைத்தாங்கலாக சத்யாவை அழைத்து வந்து காரில் தன்மீது சாத்தினாற்போல அமர்த்திக்கொண்டாள் ராணி.

'வீட்டிலே கொண்டு விடுவதா?...... ஒருவேளை வீட்டிலேயிருந்துதான் இங்கே வந்திருக்கிறாளோ, அத்தானைப் பார்க்க வேண்டுமென்று? அவர்தான்......'

நகத்தைக் கொறித்தபடி யோசனை செய்தாள் ராணி. பிறகு ஒரு முடிவுக்கு வந்தாள்.

சரித்திரப் புத்தகத்தில் சேர்க்க விட்டுப்போன ஓர் ஏடு!

காலத் தாயின் கையைப் பிடித்துக்கொண்டு முன்னேறாமல் பின் தங்கி நின்றுவிட்ட ஒரு குழந்தை.

அதன் பெயர் நரசிம்மலுபேட்.

இருபதாம் நூற்றாண்டின் முடிவுக் காலத்தில், நாகரிகம் கொழிக்கும் சென்னை நகரத்துக்கு மிக அருகில், மின்சாரத்தையும் பள்ளியையும் பாதையையும் பார்க்காத இப்படிப்பட்ட குக்கிராமமொன்றும் இருக்க முடியுமா?

இருந்தது. இருக்கிறது.

பஸ்ஸோ காரோ போகக்கூடிய பாதை கிடையாது. நரசிம்மலுபேட்டையை அடைய. என்னூரிலிருந்து சுமார் ஐந்து மைல் தூரத்தை உப்பங்கழியில் படகு மூலம் கடந்து கிராமத்தை அடைய வேண்டும்.

முந்தின தினம், ராதானந்தர் வந்தபோது, காற்று வசதியாக வீசிக் கொண்டிருந்தது. படகும் அதிகச் சிரமமின்றி இரண்டு மணி நேரத்தில் பயணத்தை முடித்துக் கொண்டது.

அவர் தமக்குள் புன்னகை புரிந்து கொண்டார்—ஏறத்தாழ ஒரு வருட காலத்துக்குள் இரண்டாம் முறையாகப் படகில் ஏறி நீரைக் கடக்க நேரிட்ட போது.

ஆனால் அதற்கும் இதற்கும் எத்தனை வித்தியாசம்! நிமிர்ந்தால் மலை தெரியும் அங்கே. இங்கே, நிமிர்ந்தால் மரத் தடுப்புகள் தெரிந்தன. தெளிந்த குளிர்ந்த நீர் அது. இது கலங்கிய உப்பங்கழி. அந்தப் படகில் ஸ்பிரிங் வைத்த மெத்தைகள் உடம்பை ஆதரவாய் அணைத்துக் கொள்ளும். இங்கே ஈரமான மரப் பலகை உறுத்தியது.

அதெல்லாம் போக, அப்போதிருந்த கோலத்துக்கும் இப்போதுள்ள கோலத்துக்கும் எத்தனை வேற்றுமை! மேலே போர்த்தியுள்ள துணியிலாகட்டும், உள்ளே நிறைந்துள்ள எண்ணங்களிலாகட்டும், அப்போதைக்கும் இப்போதைக்கும் எவ்வளவு மாறுபாடுகள்!

கையில் ஒரே ஒரு பையுடன் கரையில் இறங்கிக் கொண்டபோது, மாலை நேரத்துப் பொன்னிறம் வானை



யும் பூமியையும் சேர்த்து முத்தமிட்டுக் கொண்டிருந்தது. இங்கொருவர் அங்கொருவராகச் சில மீனவர்கள் தென்பட்டார்கள்.

படகுக்காரன் சில்லறை பெற்றுக்கொள்ள மறுத்து விட்டான். "சாமியைப் போலப் பெரியவங்க தெனம் தெனமா வர்றாங்க? எத்தினியோ பாவம் பண்றோம், இது ஒரு புண்ணியம் இருக்கட்டுங்க," என்று அவன் கூறிய போது, "இந்த வேட்டியையும் தலையையும் கண்டு ஏமாறாதே!" என்று விளையாட்டாக அவனை எச்சரித்தார் ராதானந்தர். பிறகு, "அனந்தாச்சாரி என்ற ஆயுர்வேத வைத்தியர் பட்டணத்திலிருந்து வந்து தங்கியிருக்கிறாராமே, உனக்குத் தெரியுமாப்பா?" என்று விசாரித்தார்.

"அந்த கிழவருங்களா? யாரைக் கேட்டாலும் சொல்லுவாங்க...... தோப்பைத் தாண்டிப் போங்க," என்று பதிலளித்தான் படகுக்காரன். "இங்கேயே காத்திட்டு இருக்கட்டுங்களா, சாமி?" என்றும் கேட்டான்.

"வேண்டாம். நான் எப்போது திரும்புவேனோ தெரியாது. எனக்காக நீ மறுபடியும் நஷ்டப்படாதே. கிராக்கி வந்தால் போய்விடு," என்று சொல்லிவிட்டு ராதானந்தர் கிராமத்தை நோக்கி நடந்தார்.

முதலில் ஒரே அடர்த்தியான முந்திரித் தோப்பு மட்டுமே கண்ணுக்குத் தெரிந்தது அதைக் கடந்து சென்றதும், ஒரு சின்னஞ் சிறிய பிள்ளையார் கோவிலும், அதையொட்டி, சத்திரம் போன்ற ஒரு கறுப்புக் கட்டிடமும், அதன்மீது சாய்ந்தாற்போல இருபது ஓட்டு வீடுகளும் தென்பட்டன.

நாலாவது வீட்டின் வாசலில், மூன்று நடுத்தர வயதுக்காரர்கள சீட்டாடிக் கொண்டிருக்க, ஒரு சிறுவன் கையில் தண்ணீர்க் கூஜாவுடன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். ராதானந்தரின் தோற்றத்தைக்

கண்டதும், சீட்டாடிக் கொண்டிருந்தவர்களில் இரண்டு பேர் முகத்தைத் திருப்பிக் கொண்டார்கள்— காலி வேட்டியின் உரிமையோடு யாசகத்துக்குப் பிடித்துக் கொள்வாரோ என்ற பயத்துடன். ஒருவர் மட்டும் இறங்கி வந்து, ''யாரைப் பார்க்க வேண்டும்?'' என்று விசாரித்தார். ''ஆயுர்வேத வைத்தியர் அனந்தாச்சாரி,'' என்று ராதானந்தர் கூறியதும், ''ஓஹோ! கல்யாணத்துக்கு வந்தீர்களா? அதோ அந்தக் கோடி வீடு வாழை மரம் கட்டியிருக்கிறது, பாருங்கள்,'' என்று சுட்டிக்காட்டினார்.

ராதானந்தர் வேகமாக நடக்கவில்லை. அழைக்கப்படாத கல்யாண வீட்டுக்குச் செல்லலாமா என்பதல்ல அவர் தயக்கத்துக்குக் காரணம். திருமண வீட்டில் சன்னியாசிக்கு இடமுண்டா என்பதும் அவருக்கு நிச்சயமாய்த் தெரியாதிருந்தது.

அதற்குள், கூஜாவை விட்டுத் திண்ணையிலேயே வைத்துவிட்டு, ''நான் அடையாளம் காட்டறேன், வாங்க,'' என்று அந்தச் சிறுவன் ஓடி வந்தான்.

சரி, வந்த காரியத்தை முடித்துக்கொண்டு உடனே திரும்பிவிடலாம் என்று எண்ணிக் கொண்டவராக ராதானந்தர் அவனைத் தொடர்ந்தார்.

வாழை மரத்தையும் நாதசுரக்காரனையும் விட்டுவிட்டால், கல்யாண வீடு என்பதற்கான எவ்வித அறிகுறியும் அங்கே தென்படவில்லை. அந்தக் குக்கிராமம் மொத்தமுமே அங்கு குழுமியிருந்தால்கூட இரண்டு டஜன் மனிதர்களுக்கு மேல் இருந்திருக்க முடியாது. காலையிலேயே முகூர்த்தம் முடிந்துவிட்டது போலும். நாலைந்து பெண்கள் மட்டுமே கண்ணில் பட்டார்கள். சிறிய ஓட்டு வீடு. நடையில், ஒரு கர்னாடகமான ஈஸிசேரில் சாய்ந்து படுத்திருந்த ஆயுர்வேத வைத்தியருக்கு, முதலில் ராதானந்தரை இன்னாரெனத்



தெரியவில்லை. நெற்றியின்மீது கையைச் சார்ப்புக் கட்டிப்பார்த்தார்.

''நான் பவானி மடம்,'' என்று சொல்லிக்கொண்டு, ராதானந்தர் சுவாதீனமாக பக்கத்திலிருந்த குட்டித் திண்ணையில் அமர்ந்து கொண்டதும்தான் வைத்தியருக்குப் புரிந்தது. வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்திருக்க முனைந்த போதிலும், தளர்ந்த சரீரம் ஒத்துழைக்கவில்லை.

காலைத் தொட்டு வணங்க முற்பட்டவரைச் சரேலெனத் தடுத்துப் பிடித்துக் கொண்டார் ராதானந்தர். ''நான்தான் தங்களிடம் உதவி கேட்டு வந்திருப்பவன். ஆஸ்பத்திரியை மடத்திலேயே நடத்துவதென்று முடிவாகியிருக்கிறது. அதற்குத் தேவையான நிதி வசதியும் கிடைத்துவிட்டது. தங்களைப் பட்டணத்துக்கு அழைத்துப் போவதற்காகவே வந்திருக்கிறேன்,'' என்றார்.

அந்த வயோதிக வைத்தியரின் முகம், நம்பவியலாத பரவசத்தினால் ஜொலித்தது. ''அப்படியா? நிஜமாகவா? என் பெண் கல்யாணம் நடந்ததைக் காட்டிலும் இது பெரிய சந்தோஷம் எனக்கு...... இவ்வளவு தூரம் தாங்கள் வந்தது குழந்தையின் பாக்கியம்...... அவர்களை ஆசீர்வாதம் பண்ண வேண்டும்......'' என்று, தூங்கிக் கொண்டிருந்த மாப்பிள்ளையையும், மாலை நலங்குக்காக அலங்காரம் செய்துகொண்டிருந்த பெண்ணையும் அவசரமாக வரவழைத்தார். ''சுவாமிஜிக்கு நமஸ்காரம் பண்ணுங்கள்,'' என்றார் தாகத்துக்கு மோராவது அருந்த வேண்டும் என்று வற்புறுத்திக் கொடுத்தார்.

''இருட்டிவிட்டதே என்று பார்க்கிறேன். இப்போதே புறப்பட வேண்டும்போல் இருக்கிறது...... ஆஸ்பத்திரியை விட்டுவிட்டு வர எனக்கு மனசேயில்லை...... உங்களுக்குத் தெரியும்......'' என்றார் வைத்தியர்.

''ஆமாம், ஆமாம். சுவாமி பிரம்மானந்தா— சின்னச் சாமியார்— என்னிடம் எல்லாம் சொல்லியிருக்கிறார். உங்களுடைய உழைப்பினாலும் அறிவினாலும் வளர்ந்தது அந்த ஆஸ்பத்திரி. அதைப் போய்ச் சர்க்காரிடம் ஒப்படைத்து விடுவது என்று தீர்மானித்தால் உங்களுக்கு மனமொடியாமல் இருக்குமா? அதனால்தான் நானே உங்களை நேரில் அழைக்க வேண்டுமென்று வந்தேன்...''

''வயதானவர்களுக்கு யார் இந்தக் காலத்தில் மதிப்புத் தருகிறார்கள், தங்களைப் போல்!''

''நீங்களா வயதானவர்!'' என்று சிரித்தார் ராதானந்தர். ''எத்தனை உற்சாகத்துடன் உழைக்கிறவர் நீங்கள் என்பதை என் கண்ணால் பார்த்திருக்கிறேன். ஆஸ்பத்திரிக்கு எதிரிலுள்ள போலீஸ் ஸ்டேஷனில் போலீஸ்காரர்கள் உங்களைப்பற்றி எத்தனை உயர்வாகப் பேசினார்கள்! என் காதால் கேட்டிருக்கிறேன்!''

அனந்தாச்சாரி கூச்சப்பட்டவராக, ''நாளைக் காலையில் புறப்பட்டுவிடலாம்,'' என்று பேச்சை மாற்றினார்.

''அவ்வளவு அவசரப்பட வேண்டாம். கல்யாண காரியங்கள் நன்றாய் முடியட்டும். உங்கள் ஊர் ரொம்பப் பிடித்திருக்கிறது. இந்த அமைதியை இரண்டு நாளாவது அனுபவிக்க......''

''ரொம்ப சந்தோஷம், ரொம்ப சந்தோஷம்,'' என்று சொல்லிக்கொண்டேயிருந்தார் வைத்தியர். வேறு சொற்கள் அவருக்கு அகப்படவில்லை.

அதிருஷ்டவசமாக, பிள்ளையார் கோவிலுக்குப் பக்கத்தில் சத்திரம்போல் காட்சி தந்த கறுப்புக் கட்டிடம் உண்மையிலேயே சத்திரம்தான் என்று தெரிய வந்தது. முன்னொரு காலத்தில் வடக்கேயிருந்து வந்த ஒரு துறவி வெகு நாட்கள் அங்கே தங்கியிருந்ததுண்டு என்று சொன்னார்கள். ராதானந்தர் அங்கேயே தாமும் அடுத்த



இருபத்துநான்கு மணி நேரம் தங்கியிருக்க ஏற்பாடு செய்துகொண்டார்.

அந்த இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் தம் வாழ்க்கையிலும், தம்மைச் சுற்றியிருப்போரின் வாழ்க்கையிலும் எத்தகைய மாற்றங்கள் நேரிடப் போகின்றன என்று அப்போது அவருக்குத் தெரியாது.

## ஐம்பத்தொன்று

அடுத்த நாள் பிற்பகல் நான்கு மணி சுமாருக்கு—

எண்ணூரையடுத்த படகுத் துறையிலிருந்த படகுக்காரன், கையிலிருந்த பீடியை எறிந்துவிட்டு அவசரமாக எழுந்து கொண்டு, ''வாங்க சாமி,'' என்று வரவேற்றான்.

ஓட்டமும் நடையுமாகப் பதற்றத்துடன் வந்து கொண்டிருந்தார்கள் இரண்டு பேர். நேற்றைப் போலவே இன்றைக்கும் ஒரு தலைமழித்த சாமியாரைப் பார்த்ததும் படகுக்காரனுக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. இவர் பருமனாயும் நடுத்தர வயதைத் தாண்டியவராயும் இருந்தார். இவருடன் கூட ஒரு ஸூட்டுக்கார இளைஞரும் வந்திருந்தார். முதலில் இளைஞர் படகில் தாவி ஏறிக்கொண்டு, சற்றுப் பயந்தவராகக் காணப்பட்ட சாமியாரைக் கை நீட்டிப் பிடித்துப் படகில் அழைத்துக் கொண்டார்.

''சீக்கிரம் போப்பா,'' என்றார் ஸூட்டுக்காரர்.

''இன்னும் யாராச்சும் வருவாங்க. கொஞ்சம் பொறுத்துக்குங்க சாமி,'' என்றான் படகுக்காரன்.

''நோ, நோ! எங்களுக்கு அவசரமாய்ப் போயாகணும் நரசிம்மலுபேட்டுக்கு. விடு, விடு. வேறே கிராக்கியில் வரக்கூடிய பணத்தையும் நானே சேர்த்துக் கொடுத்து விடுகிறேன். ஊம், ஊம். போ,'' என்றார் ஸூட்டுக்காரர்.

உப்பங்கழியில் தன் ஐந்து மைல் பயணத்தைத் தொடங்கியது படகு.

சின்னச் சாமியார் உள்ளுக்குள் பதற்றப்பட்டுக் கொண்டிருந்தார். அதிகம் பேசவில்லை. கையைப் பிசைவதும் நெட்டி எடுத்துக் கொள்வதுமாய் வெகு நேரம் தவித்துக்கொண்டிருந்தவர், கடைசியில், "இப்படி நம் திட்டமெல்லாம் கெட்டுவிட்டதே டாக்டர்? என்ன ஆகுமோ என்று பயமாயிருக்கிறதே டாக்டர்," என்றார்.

"கெட்டுத்தான் போய்விட்டது! சட்!" தன் உள்ளங் கையில் வெறுப்புடன் ஒரு குத்து விட்டுக்கொண்டு தன்னையே நொந்து கொண்டார் டாக்டர் சம்பத்.

"சுவாமிஜி ராத்திரி மடத்துக்கு வருவார் என்று திருப்பித் திருப்பிச் சொன்னானே ஹரி? அப்போது பார்த்துக் கொள்ளலாம் என்று இருந்திருக்க வேண்டிய மணி சுவாமிஜியையே தேடிக் கொண்டல்லவா புறப்பட்டு விட்டான்?"

"நாசிம்மலுபேட்டைக்கு அவன் போகாதிருக்க வேண்டுமே? அதுதான் எனக்குக் கவலை... என்னப்பா, படகு இதற்கு மேல் வேகமாய்ப் போகாதா?"

"இதோ சாமி."

"போயிருக்க மாட்டான். அவனுக்கு எப்படித் தெரியும்? ஹரிதான் கடைசி வரையில் சொல்லவில்லையே!" என்றார் சின்னச் சாமியார்.

"போலீஸில் இருக்கிறவனாயிற்றே! எங்கெல்லாம் அவனுக்கு ஆள் இருக்குமோ? சுவாமிஜிக்கு ஒன்றும் நேர்ந்துவிடக் கூடாது. அதைத் தடுக்க வேண்டுமென்று தான் இத்தனை அவசரப் படுத்தி உங்களை அழைத்து வந்தேன்."

"நாம் ஏதோ ஒன்று நினைத்து ஏதோ ஒன்று பண்ணப் போக, அது சுவாமிஜிக்கு ஆபத்தாய் முடிந்து



விட்டது. அவரை நான் தப்பாய் நினைத்தவன்தான். மதிக்காமல் நடந்து கொண்டவன்தான். ஆனால் உங்களிடம் வந்தேனே ஒருநாள், அன்றைக்கு என் உள்ளத்தில் பெரிய மாறுதல் ஏற்பட்டுவிட்டது. அன்று உங்களிடம் சொன்ன மாதிரி சுவாமிஜியின் நகத்துக்குத் தீங்கு ஏற்படுவதாயிருந்தால்கூட, இந்தக் கட்டை அதைக் காப்பாற்ற உயிரைக் கொடுக்கத் தயார்."

டாக்டர் சம்பத்தை வேறு கவலைகளும் வதைத்துக் கொண்டிருந்தன.

சத்யா பத்திரமாய்த்தான் இருப்பாள் நர்ஸிங்ஹோமில் ...கிறிஸ்டி பார்த்துக்கொள்வாள்... ஆனால் மணிக்கு எங்கேயாவது செய்தி எட்டி, அவன் சத்யாவைப் பிடித்துக் கொண்டால்?... அவளைத் தனியாக விட்டு விட்டு வந்தது பிசகோ? இல்லை... மணி ராதானந்தரைத் தேடித்தான் கிளம்பியிருக்கிறான்...

"ஏனப்பா, இன்று பதினொரு பன்னிரண்டு மணிக்குப் பிறகு யாராவது பட்டணத்திலிருந்து உன் படகில் வந்தார்களா?" என்று படகுக்காரனைக் கேட்டார் டாக்டர். "வாலிப வயசாய், டிப்டாப்பாய் டிரஸ் பண்ணிக் கொண்டு சிகரெட் பிடிக்கிற பிள்ளை......"

"அப்படி யாரும் வரலீங்க. ஒரு கெழவிதான் சொத்த வால் சாவடியிலே முந்திரி கொண்டுபோய்ப் போட்டிட்டுத் திரும்பிச்சு."

"உன்னைத் தவிர இங்கே எத்தனை படகுக்காரர்கள் இருக்கிறார்கள்?" என்று சின்னச் சாமியார் கேட்டார் கவலை தீராதவராக.

"இன்னும் ரெண்டு மூணு ஆள் உண்டு, சாமி...... ரெண்டு நாள் முன்னே நாலுவாட்டி வாந்தியெடுத் தான்னு சொல்லி, ஒருத்தனைத் தண்டையார்ப்பேட்டை ஆஸ்பத்திரியிலே சேர்த்திட்டாங்க ரெண்டு பேரு. சோமாரிப் பசங்க, படகை விட்டிட்டு எங்கேயோ

போயிருக்கிறான். இப்பத்துக்கு நான் ஒருத்தன்தான் இருக்கிறேனுங்க,'' என்றான் படகோட்டி.

இருட்டும் வேளைக்குச் சற்று முன்னதாக, நரசிம்மநு பேட் கரையை அடைந்தது படகு.

''ஆயுர்வேத வைத்தியர் அனந்தாச்சாரியின் வீடு எங்கேயப்பா இருக்கிறது?'' என்று டாக்டர் கேட்டார்.

''தோப்பைத் தாண்டிப் போங்க. நேத்தோ இன்னைக்கோ கல்யாணமுங்க அவரு வீட்டிலே,'' என்று கைகாட்டிவிட்டு, காது இடுக்கிலிருந்து ஒரு பீடியை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான் படகோட்டி.

முந்திரிக் காட்டுக்குள்ளாக இரண்டு உருவங்களும் மறைந்தன.

புகையுடன் தன் ஆச்சரியத்தையும் வாய்விட்டு வெளியிட்டான் படகோட்டி. 'நேத்து இதே நேரத்துக்கு வைத்தியரைத் தேடிக்கிட்டு ஒரு சாமியார் போனாரு; இன்னைக்கு இன்னொரு சாமியார், ஒரு டாக்டரையா...... இன்னாடா வந்திச்சு இந்த ஒட்டை நரசிம்மநு பேட்டைக்கு!'

அதே இருட்டவிருந்த வேளையில் ஆயுர்வேத வைத்தியர் தம் வீட்டைவிட்டுப் புறப்பட்டுச் சத்திரத்தை அடைந்தார்.

முட்டை விளக்கின் வெளிச்சத்தில் தியானத்தில் ஆழ்ந்திருந்த ராதானந்தரைத் தொந்தரவு செய்யாமல் காத்திருந்தார். தியானம் கலைந்து அவர் விழித்த பிறகு, ''ஒரு பத்து நிமிடம் என் இல்லத்துக்கு எழுந்தருள வேண்டும்,'' என்று கேட்டுக்கொண்டார்.

''என்ன விஷயம்?''

''வந்தால் சொல்கிறேன்,'' என்றார் கிழவர்.

ராதானந்தர் மெல்லச் சிரித்துக் கொண்டே அவரைப் பின்தொடர்ந்தார். இந்தக் கிராமத்தையும் ஜனங்களையும் அவருக்கு மிகவும் பிடித்துவிட்டது. ஒரு தொழிலாளியும் அவன் மனைவியும் தங்கள் குழந்தையை எடுத்து வந்து அவர் முன்னிலையில் கிடத்தி, பெயர் சூட்டும்படி கேட்டுக் கொண்டார்கள். ஒரு முதியவர், தன் பேரன் அமெரிக்காவுக்குப் போய் ஒரு வெள்ளைக்காரியை மணந்து கொண்டு விட்ட கதையைச் சொல்லிப் புலம்பினார். இன்னோர் அம்மாள், தான் மடத்துக்கு வந்து தங்கியிருந்து கூட்டி மெழுகி, சமையல் செய்து உதவத் தயாராயிருப்பதாகவும் வரலாமா என்றும் கேட்டாள். தியானத்தின்போது மனம் ஒருநிலைப்பட மாட்டேனென்கிறதே, என்ன செய்யலாம் என்று கேட்டவரும் ஒருவர் இருந்தார்.

ஆக, மக்கள் தனக்களிக்கும் மதிப்பையும் மரியாதையையும் கண்டு மனநெகிழ்வுற்றிருந்தார் ராதானந்தர்.

வைத்தியரின் வீட்டு முன்புறத்தில் இரண்டு பெட்ரோமாக்ஸ் விளக்குகள் புஸ்ஸென்று பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தன. ஜமுக்காளம் ஒன்று விரிக்கப்பட்டிருந்தது. இருபது முப்பது பேர் உட்கார்ந்திருந்தார்கள். புதுமணத் தம்பதிகளும் சாதா உடையில் முன் வரிசையில் காணப்பட்டார்கள்.

வீட்டை அடைந்ததும் அனந்தாச்சாரி, ''வேறொன்றுமில்லை. கல்யாண வீடாயும் இருக்கிறது...... நாலு பேர்...... சேர்ந்து கூடியிருக்கிறார்கள்...... தாங்கள் இரண்டு வார்த்தை உபதேசம் பண்ணினால் எல்லோருக்கும் சந்தோஷமாயிருக்கும்...... அதற்குத்தான் கூப்பிட்டுக் கொண்டு வந்தேன்,'' என்றார்.

ஜமுக்காள விரிப்பில் அமர்ந்திருந்த சிலர் எழுந்து ஒதுங்கி நின்று வழிவிட்டார்கள்.

வினாடிக்கும் குறைவான நேரம் தயங்கினார் ராதானந்தர். பிறகு ஒரு புன்சிரிப்புடன் உள்ளே சென்று, முன் வரிசைக்குப் போய் நின்று கொண்டார். ''பெரியவர்கள் மன்னிக்க வேண்டும். இன்னும் லௌகீக

வாசனைகள் போகாதவன் நான். உபன்னியாசங்கள் செய்யத் தகுதியுமில்லை. பழக்கமும் கிடையாது. அதற்கு ஏற்றவர் சுவாமி பிரம்மானந்தர்......'' திடுப்பென்று அவர் பார்வை தெருவை நோக்கி நிலைகுத்தி நின்றது. விழிகள் விரிந்தன வியப்பினால். ''அதோ அவரே வந்து விட்டார்,'' என்று கூட்டத்தினருக்கு அறிவித்தவர், ''இப்படி வாருங்கள். தங்களுக்காகத்தான் காத்திருக்கிறோம்,'' என்று அழைத்தார்.

சூழ்நிலையை மறந்தவராகச் சின்னச் சாமியார் ஓடி வந்தார். கூச்சமின்றிக் காலில் விழுந்து வணங்கினார். ''சுவாமிஜீ......... நான்......... தங்களுக்கு ஆபத்து எதுவுமில்லையே?'' என்றார் தழுதழுத்த குரலில். ''நானும் டாக்டர் சம்பத்தும் முக்கியமான காரியமாகத்தான் வந்திருக்கிறோம். தாங்கள் தயவு பண்ணிப் புறப்பட்டால் நல்லது,'' என்று அவசரப்படுத்தினார்.

''இருக்கட்டும், இருக்கட்டும். இதுவும் முக்கியமான வேலைதான்,'' என்றார் ராதானந்தர். பின்னர் சின்னச் சாமியாரிடம், ''ஆன்மீக விஷயமாய் இரண்டு வார்த்தை பேசவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். தாங்கள் தான் பொருத்தமானவர் என்று சொல்லிக் கொண்டிருந்தேன், வந்து விட்டீர்கள். பேசுங்கள்,'' என்று சொல்லி விட்டுச் சட்டென உட்கார்ந்து விட்டார் முன் வரிசையில்.

''நான்...... நான்...... இந்த நிலையில்......'' சின்னச் சாமியாரின் கண் முனையில் நீர் தளும்பிற்று. ஆனாலும் ஆசிரியருக்குப் பயப்பட்டு நடக்கும் மாணவனைப் போலத் தழுதழுத்த குரலிலேயே, ''சுவாமிஜியின் கட்டளைப்படி,'' என்று பீடிகை போட்டுக்கொண்டு, பத்து நிமிடங்கள் வரையில் தெளிவாகவும் செறிவுடனும் பேசினார். கனல் தெறிக்க வைக்கும் பேச்சாளரல்ல என்றாலும், மிகவும் இயல்பான, நேரடியான தோரணையில் பேசியதால்,



முதல் இரண்டு வாக்கியம் முடியுமுன்னே அந்த இருபது இருபத்தைந்து பேரும் கட்டுண்டு போனார்கள்.

டாக்டர் சம்பத் ஒருவர்தான் இருப்புக் கொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தார். வந்த காரியம் என்ன, இங்கே நடப்பதென்ன? 'ராதானந்தர் இந்த இடத்தை விட்டே புறப்பட்டிருந்தால் நல்லதாயிற்று. இல்லாவிட்டால் கைப்பிடியாகப் பிடித்து, பத்திரமான, ரகசியமான வேறோர் இடத்துக்கு அழைத்துச் சென்று விடவேண்டும்' என்ற தீர்மானத்துடன் வந்திருந்தவருக்கு, ராதானந்தரின் பதற்றமின்மையும், சின்னச் சாமியாரின் ஆன்மீகச் சொற்பொழிவும் எப்படிப்பட்ட எரிச்சலைத் தந்திருக்கும் என்று சொல்லத் தேவையில்லை.

இன்னும் அவர் தோல்வியை ஒப்புக் கொள்ளத் தயாராயில்லை. மூளை ஒரு பக்கம் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தது.

எந்த நிமிடத்திலும் மணி வரத்தான் போகிறான் இங்கே. எந்த நிமிடத்திலும் ராதானந்தரைத் தாக்கத் தான் போகிறான். சென்னை பவானி மடத்தில் நடத்த விருந்த நாடகத்தை ஏன் இந்தக் குக்கிராமத்தில் நடத்தக் கூடாது? ஏன் ராதானந்தரை அப்புறப்படுத்திவிட்டு, அந்த இடத்தில் தான் இருந்துகொள்ளக் கூடாது?......

தன் பழைய திட்டத்தைத் திரும்ப அலசிப் பார்த்துக் கொண்டிருந்தார் டாக்டர்.

''மன்னிக்கணும்...... குறுக்கே பேசுகிறேன் என்று கோபிக்கக் கூடாது......''

ஒரு பெண் குரல் கேட்டது, கூட்டத்தின் பின் கோடியிலிருந்து.

திடுக்கிட்டவர்களாய், அத்தனை பேரும் திரும்பிப் பார்த்தார்கள்— டாக்டர் உள்பட!

அடுத்த வினாடி, ''சத்யா!'' என்று கூவியவண்ணம் எழுந்து பின்னே ஓடினார் சம்பத். இங்கே ஏன் இவள் வந்தாள்? எப்படி வந்தாள்?

கண்கள் செருகிய நிலையிலிருந்தாள் சத்யா. அவளைத் தன்மீது சாய்த்தவாறே அணைத்து நடத்திக் கொண்டு, ராதானந்தரிடம் வந்தாள் ராணி.

இருபது பேர்தான் என்றாலும் மகாமகக் கூட்டம் போன்ற சந்தடி ஏற்பட்டது அங்கே. கிழவர் அனந்தாச்சாரி, பாவம், நிலை குலைந்தவராக, ''என்னது? என்னது?'' என்று சுற்றிச் சுற்றி வந்தார் கூட்டத்தினரை.

ராதானந்தர் மட்டும் அமைதி இழக்காதவராக, ''என் சொந்தப் பிரச்சினை,'' என்றார் புன்முறுவலுடன்.

ராணி கைகளைக் குவித்து, பயபக்தியுடன் ராதானந்தரிடம் சொன்னாள்:

''நல்ல விஷயத்தைப் பற்றி உபன்னியாசம் நடந்து கொண்டிருக்கிறபோது, நான் கெடுப்பது தப்புதான். ஆனால் இந்தப் பெண்ணோட பரிதாபமான நிலைமையையும் பார்க்க வேண்டாமா? எனக்குப் பொறுக்கவில்லை...... இங்கே அழைத்து வந்துவிட்டேன்......''

ராணியைப் பின்தள்ளிக்கொண்டு சத்யாவை நெருங்கினார் டாக்டர் சம்பத். ''சத்யா! எப்படி நீ இங்கே வந்தாய்? நர்ஸ் உனக்கு இன்ஜெக்ஷன் போடவில்லை?'' என்று கையைப் பிசைந்து கொண்டார்.

''இஞ்செக்ஷனோ இன்னொன்னோ எனக்குத் தெரியாதுங்க,'' என்று குறுக்கிட்டுப் பதிலளித்தாள் ராணி. ''மடத்தின் வாசலிலே இவங்க தள்ளாடி விழுகிற மாதிரி வந்து கொண்டிருந்தபோது நல்ல வேளையாய் நான் பார்த்தேன். சுவாமிஜியைத்தான் தேடிக் கொண்டு வந்தார்கள் என்று இங்கே அழைத்து வந்தேன்.''

''சத்யா! நிமிர்ந்து என்னைப் பார்! சத்யா!'' என்று அதட்டினார் ராதானந்தர்.



கொஞ்சம் கொஞ்சமாய் சத்யாவுக்கு உணர்வுகள் திரும்பினாற்போலாகின. கண்களின் கலக்கமும் மயக்கமும் தெளிந்தன. பல விஷயங்களை ஒரே சமயத்தில் நினைவுபடுத்திக்கொள்ள முயன்றவளாகப் புருவங்களை நெரித்துச் சிரமப்பட்டாள். ''அத்தான்......'' என்ற வார்த்தை அவள் நாவைப் பிய்த்துக் கொண்டு வெளிப்பட்டது. பிறகு ஒரேயடியாக எல்லாம் ஞாபகத்துக்கு வந்தனவோ? விம்மலும் புறப்பட்டது. கண்ணிலிருந்து தாரை தாரையாய் நீர் கொட்டியது.

''சத்யா! உனக்கு நன்றாய்த் தேவலையா இப்போது? மயக்கம் நீங்கிவிட்ட மாதிரி இருக்கிறதா?'' என்று பரிவோடு அவளைத் தன்மீது அணைத்தவாறு விசாரித்தார் டாக்டர் சம்பத்.

''ஊம்...... தேவலை...... நீங்கள்... என்னவென்னவோ ஆபத்தில் மாட்டிக்கொள்ளப்போவதாகச் சொன்னீர்களே, அதனால்தான்...... பதறிப்போய்......''

''நர்ஸிங் ஹோமிலிருந்து எப்படியோ தப்பியோடி வந்து விட்டாய்! ஹும்!'' துயரத்துடன் சிரித்தார் டாக்டர் சம்பத். ''நன்றாய்ப் பார்த்துக்கொள். ஒரு கேடுமில்லாமல் பாறாங்கல் குண்டாய் இருக்கிறேன்! என்றைக்குமே எனக்கு ஆபத்துக் கிடையாது, சத்யா. மற்றவர்களுக்குத்தான் என்னால் ஆபத்து!''

இதற்குள் ராணி திரும்பவும் ராதானந்தரின் காலடியில் விழுந்து வணங்கி எழுந்தாள். ''சுவாமிஜி, நீங்கள் ரொம்பப் பெரியவர்கள். மகான். அறிவாளி. அந்த நாளில் நான் என்ன தப்புப் பண்ணியிருந்தாலும் இப்போது மன்னிக்கணும். தங்களுக்கு நான் எதுவும் சொல்லக்கூடாதுதான். வயசிலும் அறிவிலும் சின்னவள் நான். ஆனால் இந்தப் பெண்ணை இப்படிப் பைத்தியம் பிடித்துத் திரியும்படி பண்ணிவிட்டீர்களே என்றுதான் வருத்தமாயிருக்கிறது... அவ்வளவுதான் நான் சொல்வேன். தப்பானால் மன்னியுங்கள்.''

''நீ சொல்வது தப்பில்லை, ராணி,'' என்றார் ராதானந்தர். பிறகு சத்யாவைக் காலோடு தலை அனுதாபத்தோடு, கனிவோடு, பரிதாபத்தோடு பார்த்தார். ''ஆமாம், சத்யா. உன்னை இப்படிப் பைத்தியம்போல் அலையவிடுவது தப்புதான். ஒன்றியாக உன்னை இத்தனை நாள் இருக்க அனுமதித்தது பெரிய பிசகுதான்,'' என்று தாழ்ந்த குரலில் கூறிவிட்டு, ''யாரங்கே? ஒரு மஞ்சள் சரடு இருந்தால் கொண்டு வாருங்கள். இல்லாவிட்டால், ஒரு நூலை மஞ்சள் நீரில் நனைத்து, ஒரு மஞ்சளை முடிந்து கொண்டு வாருங்கள். இப்போதே, இங்கேயே முடித்து விடுகிறேன்,' என்றார்.

''ஏண்டாப்பா மணி, எங்கெங்கேயோ அழைத்துக் கொண்டு போகிறாய்? எனக்குப் பயமாயிருக்கிறதப்பா,'' என்றாள் மீனலோசனி.

மணியிடமிருந்து ஒரு குரூரச் சிரிப்பு வெடித்தது. ''பயமா! சே, சே! எவ்வளவு துணிச்சல்காரப் பெண்ணையும் எத்தனை தந்திரக்கார மருமானையும் பெற்றிருக்கிறீர்கள்! நீங்கள் போய்ப் பயப்படுவதாவது! ஏறுங்கள் படகில்!''

படகு புறப்பட்டது.

''கோல் போடுடா! சீக்கிரமாய்ப் போகணும்!''

'டா' போட்டுப் பேசப்பட்டதில் படகுக்காரனுக்குக் கோபம். மீனலோசனியோ, வீட்டிலிருந்து கிளம்பியபோது மணி காட்டிய பதற்றத்துக்கும் இப்போது தொனிக்கும் கிண்டலுக்கும் உள்ள வேற்றுமையை எண்ணி வாயடைத்துப் போனவளாகப் படகின் மூலையில் ஒடுங்கிக்கொண்டிருந்தாள்.

இரண்டு மணி நேரப் பயணம் முடிவதற்குள் பல திட்டுக்களையும் சீறல்களையும் கேட்டுவிட்டான் படகுக்காரன். பின்னாலேயே இன்னொரு படகு வந்து கொண்



டிருக்கும் ஓசை அவனுடைய பழக்கப்பட்ட செவிகளுக்குத் தெளிவாய்க் கேட்டன. கொஞ்சம் நின்று, அந்தப் படகுக்காரனையும் துணை சேர்த்துக்கொண்டு இந்தப் பட்டணத்தானை நாலு வாங்கலாமா என்றுகூட அவன் நினைத்தான்.

கரையில் தாவினான் மணி.

முந்திரித் தோப்பைக் கடந்ததும் வீடுகள் தென்பட்டன.

''பட்டணத்திலேயிருந்து ராதானந்தர் என்று வந்திருக்கிறாரே...'' தெருவில் தென்பட்ட முதல் நபரைக் கேட்டான் மணி.

''அதோ, கல்யாண வீடு தெரியவில்லை?'' என்று சுட்டிக் காட்டினார் அவர்.

மீனலோசனி இழுத்துச் செல்லப்படாத குறைதான்.

''கல்யாண வீடாம்! கேட்டீர்களா? கல்யாண வீடு! உங்கள் பெண்ணுக்கும் மருமானுக்கும்!'' என்று மணி உறுமியதும் அவள் திகில் அதிகமாயிற்று.

''நீ என்ன சொல்கிறாய்? ராதா... ராதானந்தரா...''

''ஆனந்தர்தான்! ஆனந்தரின் ஆனந்தத்தை நேரிலே பார்க்கலாம், வா!''

கல்யாண வீடு!

அவன் வாசலை அடைந்த சமயம்—

கையில் தாலிச் சரட்டுடன் ராதானந்தர் நின்றிருப்பதும், எதிரிலே சத்யா நிற்பதும்தான் தெரிந்தன.

ராதானந்தரின் குரல்:

''எப்போதோ முடிந்திருக்க வேண்டிய காரியம். எனக்கு நெஞ்சிலே துணிவில்லாததால் தள்ளிப் போட்டுக்

கொண்டிருந்தேன். இனிமேல் யாரும் தடுக்க முடியாது. இப்படி முன்னால் வா சத்யா!''

மணியின் மூளை வெடித்தது. புலன்கள் சிதறின. அறிவு நீக்கிற்று.

பாண்ட் பையிலிருந்த ரிவால்வரைக் கை உருவியது ஒன்றுதான், அவன் நினைவறிந்து செய்த ஒரே காரியம்.

படீலென்று வெடியோசை.

''கொன்று விட்டானே! பாவி!'' என்று பதறியோடி வந்தார்கள் டாக்டர் சம்பத்தும் ராணியும். ஓசையின் அதிர்ச்சியினால் சத்யாகூடத் தனது அரை மயக்கத்தி லிருந்து விடுபட்டாள்.

ராதானந்தருக்கு, தண்ணீரில் மூழ்கிய மாதிரி மூச்சுத் திணறியது. கண்கள் இருண்டன.

அவரது வாழ்வின் மிக முக்கியமான நிகழ்ச்சி கண்முன் வர, ''ஆஷா... ஆஷா...'' என்று அவர் முணுமுணுத்தார்.

அவ்வளவுதான் அவருக்கு நினைவு இருந்தது.

MADRAS DISTRICT [illegible] LIBRARY
16888
3289699
KOLATHUR, CHENNAI 99

## ஐம்பத்திரண்டு

மரணம்!

மூச்சு அடைத்து அடைத்து [illegible] தத்தளிக்கிறது. தோட்டா துளைத்த இடத்தில் குருதி பெருகி வழிந்து உடலை நனைக்க, நரகத்தினும் கொடிய வேதனை ஓயாது புறப்படுகிறது. உடல் சில்லிடுகிறது.

இது இரண்டாவது மரணம்.

ஏறக்குறைய ஓராண்டுக்கு முன்பு ஒரு சாவு நேர்ந்தாகி விட்டது!



காஷ்மீரில்—

ராதாகிருஷ்ணன் என்ற பெயருடன் உல்லாச வாலிபனாயிருந்தபோது.

அந்த மரணம், ஆஷா என்ற குஜராத்திப் பெண்ணின் கையால் கிடைத்தது.

அந்த இறப்பின்போது, கூடவே ஒரு பிறப்பும் இருந்தது. ராதாகிருஷ்ணனின் சிதையில் ராதானந்த ஒளி முளைத்தது!

சிகரெட்டை ஒரு சுண்டு சுண்டி— ஆமாம், என்ன தெளிவுடன் ஒவ்வொன்றும் நினைவுக்கு வருகின்றன!— தால் ஏரியிலே எறிகிறேன்.

'வானவில்' படகு வீட்டில் ராஜோபசாரம் நடந்து கொண்டிருக்கிறது. ரசூல் சூடான தேநீரை என்னிடம் தந்து விட்டு, ரேடியோவில் பாட்டு வரவழைக்கும் முயற்சி யில் இருக்கிறான். காலடியில் காசிம் என் ஷூக்களுக்குப் பாலிஷ் ஏற்றிக் கொண்டிருக்கிறான்.

''கண்டேன் ஒரு சொர்க்கத்தைப் பூலோகத்தில்! கண்டேன் சொர்க்கத்தை!'' என்று ஜஹாங்கீர் ஆனந்தக் கூச்சலிட்டானாம், இந்த அழகுச் சூழ்நிலையைப் பார்த்ததும்! ஏன் மாட்டான்?

காலை நீட்டிக்கொண்டு சுற்றிலும் பார்க்கிறேன்—

என் சோபாவுக்கு அருகே மரச் சுவரில் மாட்டப்பட் டிருக்கிறது ஒரு வண்ணப் படம். தால் ஏரியில் சூரியாஸ்த மனக் காட்சி.

இந்தப் போதையை, மயக்கம் போன்ற அமைதியைத் துளித் துளியாகத் துய்த்துக் கொண்டு இந்தச் சோபா விலேயே கிடந்துவிட வேண்டும் போலிருக்கிறது. இந்த ஆனந்தத்தைக் குலைக்கக்கூடிய எதையும் நான் மன்னிக்கத் தயாராயில்லை.

அதனால்தான் அன்று காலை பக்கத்துப் படகிலிருந்து முனகல் சத்தம் வந்தபோது, "வேறெங்காவது போகச் சொல்லு," என்று சீறுகிறேன். அதனால்தான் அன்று பிற்பகல் சிகரட் புகையின் சுகத்தில் இருக்கும்போது பக்கத்துப் படகுக்காரனான ஹருமி வந்து ஒரு மாத்திரை கேட்டதற்கு, "ஆஸ்பத்திரிக்கா அழைத்து வந்தாய்?" என்று ரகுலிடம் உறுமுகிறேன். அதனால்தான் அன்று இரவு, சிகரட் டின்னையில்லையென்பதற்காகப் படகு வீட்டையே புரட்டி எடுத்துக் கொண்டிருக்கையில் பின் பக்கம் ரகுலும் ஹருமியும் பூசலிடுவதைக் கேட்டு ஆத்திரத்துடன் பாய்கிறேன்.

ஆனால், கள்ளோடு தேன் சேர்ந்தாற் போல், நிலவோடு நதியோரம் சேர்ந்தாற்போல், இன்பத்தோடு இன்பம் சேர்க்க, ஒரு பெண்ணின் கூட்டுறவுக்கும் அந்தக் காஷ்மீர சொர்க்கத்திலே வாய்ப்பு இருக்கிறது என்று அறிந்ததும் எனக்கு உற்சாகம் பீரிடுகிறது. எந்தச் சாக்கிலாவது அவளிடம் நட்புக் கொள்ளும் ஆவலுடன் பக்கத்துப் படகான 'பட்டுப்பூச்சி'க்கு விரைகிறேன்.

அவளுடைய அறை அந்தகாரத்தில் மூழ்கியிருக்கிறது. விளக்கைப் போடுகிறேன்.

"ஹூ இஸ் தட்?"

ஆங்கிலத்தில் கேட்டபடி அவள் சரேலென எழுந்து உட்காருகிறாள். வாயிற்புறத்தை நோக்கி அவள் பார்வை தாவுகிறது. அந்தப் பார்வையின் சூனியத்தை நான் காண்கிறேன். ஒரே சமயத்தில் பரிதாபமும் இவள் எப்படியும் கிடைத்து விடுவாள் என்ற சபலமும் என் உள்ளத்தை நிறைக்கின்றன. ஒரே ஒரு வினாடிக்குள் அந்தக் கொள்ளை அழகின் ஒவ்வோர் அம்சத்தையும் என் ஒவ்வோர் புலனும் வாங்கிக் கொள்கிறது. அவள் பெண்ணுருவெடுத்த கவிதை. காஷ்மீரத்தின் ஒட்டு



மொத்தமான வனப்பைப் போல அவளுடைய எழிலும் சொல்லால் எச்சிற்படுத்த முடியாதது.

என் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. மதுரையில் என் கல்லூரித் தோழன் காந்திலாலிடம் கற்றுக்கொண்ட குஜராத்தி மொழியைப் பயன்படுத்த இப்படியொரு சந்தர்ப்பம் ஏற்படும் என்று நான் நினைக்கவேயில்லை. "நான் பக்கத்துப் படகில் இருப்பவன். உனக்கு உடம்பு சரியில்லை என்று கேள்விப்பட்டு வந்தேன்," என்று குஜராத்தியில் சொல்கிறேன்.

ஒளியற்ற கண்களிலும் ஒரு பிரகாசம். நான் குஜராத்தியில் பேசியதும், "தன்யவத்," என்று புன்னகையுடன் சொல்லிவிட்டு, "தாமே அகமதாபாத் ரஹ்வாஸி சோ?" என்று கேட்கிறாள். "இல்லையில்லை. நான் மதறாசி. ஆனால் குஜராத்தி நன்றாய்த் தெரியும்," என்று சொல்லி விட்டு, "காலையிலிருந்து ஒன்றும் சாப்பிடாமலிருக்கிறாயாமே, இந்தா, தேநீர் குடி," என்று கோப்பையை நீட்டுகிறேன்.

அவளுடைய ஒவ்வொரு பேச்சும் வெல்வெட்டில் வைத்துக் கொடுத்தாற்போல எத்தனை மென்மையுடன் வருகிறது! "மன்னிக்க வேண்டும். இன்று ஏகாதசியல்லவா? உபவாசம் இருக்கிறேன்," என்றாள்.

எனக்கு நகைப்பு வருகிறது. இன்பம் துய்ப்பதற்கென்றே ஏற்பட்ட ஸ்ரீநகர் பட்டணத்தில் ஒரு ஏகாதசிப் பைத்தியமா? "பரவாயில்லை. உடம்பு சரியில்லாத போது மருந்து குடிக்கலாம். உபவாசம் அனுஷ்டிக்கத் தேவையில்லை," என்கிறேன்.

அவள் ஜுர தாபத்துடன் புன்னகையும் செய்து, "சொட்டுத் தண்ணீர்கூட நாக்கில் படக்கூடாது இன்று," என்கிறாள்.

எனக்குக் கோபம் வருகிறது. "யார் சொன்னார்கள்?" என்கிறேன்.

"ஒரு ஸ்வாமிஜி சொன்னார். எனக்கு ஏழு வயதாயிருந்தபோது சொன்னதை இன்றுவரை கடைப்பிடித்து வருகிறேன்."

"நல்லது. இன்றுமுதல் நான் சொல்வதைக் கடைப்பிடி. ஜுரம் இருக்கும்போது எந்த உபவாசமும் தேவையில்லை," என்கிறேன்.

"தாங்கள்......சுவாமியாரா?" என்று கேட்கிறாள்.

எந்த நினைப்புமின்றி, கட்டுப்பாடற்று, "ஆமாம், சாமியார்தான்," என்கிறேன் அழுத்தமாக.

அவள் உதடுகள் துடிக்கின்றன. கையை எடுத்துக் கும்பிடுகிறாள். காய்ச்சலின் நடுக்கத்துடனேயே என்னை வணங்கியெழுகிறாள். அவள் பார்வையில் பயம், மரியாதை அனைத்தும் தெரிகின்றன. உலகில் பொய், பித்தலாட்டம், மோசடி, சூழ்ச்சி முதலிய இருட்டுகளே கிடையாதென்று நம்பும் குழந்தை அவள்.

"ஸ்வாமிஜி...... தங்கள் திருநாமம்......" என்று வினவுகிறாள்.

"ராதானந்தர்," என்கிறேன், அன்று என் புதுப் பிறப்புக்குப் புதுப் பெயர் சூட்டிக்கொண்டாயிற்று என்பதை உணராமலே. "தமிழ் நாடாயிருந்தால் இந்த ராதானந்தரின் வாயசையுமுன்னே காரியம் நடந்திருக்கும். நீதான் பிடிவாதம் பிடிக்கிறாய், என் வார்த்தைக்கு மதிப்பளிக்காமல்," என்கிறேன்.

"ஸ்வாமிஜி அப்படிச் சொல்லாதீர்கள். இதோ குடிக்கிறேன்," என்று என்னிடமிருந்து அவசரமாக வாங்கிக்கொண்டு தேநீரைக் குடிக்கிறாள். ஹெருமியிடமிருந்து



மருந்தை வரவழைக்கிறேன். மறுக்காமல் அதையும் அருந்துகிறாள்.

"தூங்கு," என்று கூறி அவளைப் படுக்கச் சொல்லிப் போர்த்திவிட்டு, என் படகுக்குத் திரும்புகிறேன். இரவு பூராத் தூக்கமில்லாமல் தவிக்கிறேன். அந்த அழகுப் பதுமை என்னைப் புரட்டிப் புரட்டி வாட்டி வதைக்கிறாள்.

உதயத்தின் முதல் கீற்று தால் ஏரியை முத்தமிடுகையில் நான் ஆஷாவின் படகிலே இருக்கிறேன்.

அவளுக்குக் காய்ச்சல் விட்டுவிட்டது.

"நோய் என்பது நாமாகக் கற்பித்துக் கொள்ளும் ஒரு கோலம்தான்," என்று வாதாடுகிறேன். "இந்த நோயாளிக் கோலத்தை விட்டுவிட்டு, உன் உடம்பை ஆரோக்கியமானதென்று எண்ணி அலங்காரங்கள் செய்துகொள்," என்கிறேன்.

கொஞ்சம் கொஞ்சமாய்ப் பேச்சுக் கொடுக்கிறேன்.

மெட்ரிக் வரையில் படித்தவளானாலும், பழமையான பழக்க வழக்கங்களில் ஈடுபாடு கொண்டவளாயிருக்கிறாள் ஆஷா. ஏதாவது காரியத்தில் ஈடுபடும்போது வடமொழியில் சுலோகங்களை மெல்லப் பாடுகிறாள்.

பரம்பரை பரம்பரையாக வந்த விரக்தி— விதியினால் வருவதை எதிர்த்துப் பயனில்லை என்ற உணர்வு— அவளுக்கு யானைப் பலம் தருகிறது. ஆனால் விரக்தியின் கசப்பு அவள் இதழில் படியவில்லை. எந்த இருதயத்தையும் பொடிப் பொடியாக்கி விடக்கூடிய துர்ப்பாக்கியம் நேரிட்டிருந்த போதிலும், புன்னகையுடன் அதைப் பொறுத்துக் கொண்டிருக்கிறாள் அவள்.

அவள் முழுக் குருடி அல்ல. ஆனால் அதைவிட நரகமல்லவா, பார்வையைச் சிறிது சிறிதாக இழந்து கொண்டிருக்கிற துயரம்?

சில ஆண்டுகளுக்கு முன்பு சமூக சேவைப் பயிற்சி என்று பூனாவுக்கருகேயுள்ள ஒரு கிராமத்துக்குச் சென்றிருந்தாளாம். விஷக் காய்ச்சலொன்று பற்றிக்கொண்டது. வருடத்துக்கு இரண்டு மூன்று முறை அது வருமாம். ஒவ்வொரு தடவையும் காய்ச்சல் நீங்கும்போது, அவளுடைய அழகிய விழிகளின் சக்தியிலும் ஒருபகுதி நீங்கியிருக்குமாம். இந்த அதிசய நோயின் மர்மத்தையோ, மருந்தையோ எவரும் கண்டு பிடிக்கவில்லை.

வெறும் உடலின் வனப்பு மட்டுமல்ல, உள்ளத்தின் அழகும் சேர்ந்து அவளிடம் என்னைச் சரணடையச் செய்கிறது. அவளுடைய நட்பையும் நெருக்கத்தையும் இழந்துவிட்டால், ஆடை களையப்பட்டவன் போல வெறுமையாயும் கோரமாயும் நின்று விடுவேன் என்ற அச்சம் என்னை ஆட்டிப் படைக்கிறது. இந்த அச்சம் காரணமாக சும்மா வார்த்தைக்குச் சொன்ன பொய்யை— சாமியார் என்ற கபட நாடகத்தை— நான் தீவிரமாகக் கடைப்பிடிக்கத் தொடங்குகிறேன். ஸ்ரீநகர் பஜாரில், அமர்நாத்திலிருந்து திரும்பிக் கொண்டிருந்த ஒரு பண்டாரத்துக்குப் பணம் கொடுத்து அழைத்து வருகிறேன். தென்னிந்தியாவில் நான் ஒரு பிரபலமான சுவாமிஜீ என்று ஆஷா நம்புமாறு அவனைப் பேச வைக்கிறேன். ஆஷாவின் அருகில் இருக்கும்போதெல்லாம் மற்றவர்களிடம் மிருதுவாகவும் சாந்தமாகவும் உரையாடப் பழகிக் கொள்கிறேன்.

நான் அவளுக்கு அடிமையாகிக் கிடப்பதை அறியாமல் ஆஷா எனக்கு அடிமையாகிறாள். அழைக்கும் இடத்துக்கு வருகிறாள். விடுக்கும் சொல்லுக்குக் கட்டுப்படுகிறாள்.

பத்து வயதுச் சிறுமியாயிருந்தபோது, தன் பெற்றோருடனும் அண்ணன்மார் இருவருடனும் இங்கே இரண்டு வருடகாலம் தங்கி, காஷ்மீரமெங்கும் சுற்றியிருக்கிறாளாம் அவள். அதன் மக்கள், குன்றுகள், கோவில்கள், இசைகள், ஓவியங்கள்— எதுதான் அவளுக்குத் தெரியாதது?



கண்ணை முழுதும் இழக்குமுன் காஷ்மீரத்தை மறுபடி ஒருமுறை பார்க்க வந்தேன் என்கிறாள் ஆஷா. ஆனால் எனக்கு வேறொரு சந்தேகம். வேறோர் ஆழம் காணமுடியாத பந்தம் இந்த ஏரியிடத்தும் மலையிடத்தும் அவளுக்கு இருக்கிறது. என்ன அது?

''காஷ்மீரத்தைப் பார்த்த பிறகு என்ன செய்யப் போகிறாய் ஆஷா? எங்கே போகப் போகிறாய்?'' என்று கேட்கிறேன்.

''ஸ்வாமிஜி, ஒரு சந்தர்ப்பத்துக்காகத்தான் காத்திருக்கிறேன். அப்போது சொல்கிறேன். அதுவரை மன்னியுங்கள்,'' என்கிறாள் ஆஷா.

''சரி, சொல்ல வேண்டாம். ஆனால் அந்த வானுலக சொர்க்கத்துக்குப் போகுமுன்னால் இந்த மண்ணுலக சொர்க்கம் எப்படி இருக்கிறது என்று பார்க்க நான் ஆசைப்படுகிறேன். உனக்குத் தெரிந்த ஊராயிற்றே? என்னை எல்லா இடத்துக்கும் அழைத்துப் போய்க் காட்டுவாயா?'' என்கிறேன்.

லிடார் நதியின் சலசலப்பைப்போல ஆஷா சிரிக்கிறாள். ''பார்வை இழந்தவள், பார்வை இருப்பவருக்கு ஊரைக் காட்டுவது அதிசயம்தான்!'' என்கிறாள். எப்படித்தான் வேதனையில்லாமல் இதைச் சொல்கிறாளோ!

அன்று முதல் ஆஷாவும் நானும் ஒன்றாகவே சுற்றுகிறோம். மங்கிய பார்வையையும் பழைய ஞாபகங்களையும் கொண்டு அவள் எனக்குப் பல விஷயங்களை விளக்குகிறாள்.

மௌல்ய ரிஷியின் பிறந்த நாளை அனந்தநாக் மக்கள்— ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சேர்ந்து— கொண்டாடுகிற ஒற்றுமையையும், ஒரு மண்டல காலத்துக்குப் புலால் உண்ணாமல் முஸ்லிம்களும் விரதம் இருக்கும் உறுதியையும் ஒரு நாள் சொல்கிறாள். ஆயிரம் ஆண்டு

களுக்கு முன்பு நீதா என்ற ஹிந்து மகாராணியின் ஆட்சியில் காஷ்மீர ராஜ்யம் எப்படிச் செழிப்புற்றுப் பிரகாசித்தது என்பதை இன்னொரு நாள் கூறுகிறாள். பிறிதொரு நாள், ஒருமுறை பயிராக்கி விட்டால் அப்புறம் பதினான்கு வருடங்களுக்கு யார் முயற்சியும் இல்லாமல் தானாகவே பூத்துத் தானாகவே மடிந்து கொண்டிருக்கும் காஷ்மீரக் குங்குமப்பூவின் அதிசயத்தை விவரிக்கிறாள். பகல்காமின் பசுமையான மைதானத்தில் எப்படி கால்ஃப் விளையாடப்படுகிறது என்பதைக் காட்டுகிறாள் இன்னொரு நாள்.

அது ஒரு வெள்ளிக்கிழமை. மார்த்தாண்டில் உள்ள, ஆயிரம் ஆண்டுக்கு முற்பட்ட சூரியதேவன் கோவிலைப் பார்க்கப் புறப்படுகிறேன் அவளுடன். டூரிஸ்ட் பஸ்ஸில் வழிய வழியக் கூட்டம். அத்தனை பேருக்கும் வேண்டிய வளாகிவிடுகிறாள் ஆஷா. கல்கத்தாவிலிருந்து வந்திருந்த ஒரு பெண்மணியின் குழந்தை ஓயாமல் அழுதுகொண்டிருக்கிறது. தன் மடியில் அதை இருத்திக்கொண்டு இரண்டே நிமிடத்தில் சமாதானப்படுத்தி விடுகிறாள்.

''கண்டக்டர், இந்த வழியில்தானே 'காகா' கோவில் இருக்கிறது?'' என்று ஒரு மர்மப் புன்னகையுடன் கேட்கிறாள்.

''ஆமாம், சகோதரி. அங்கே நிறுத்தாமலா போவோம்?'' என்கிறான் கண்டக்டர்.

பஸ் நிற்கிறது. சாலையின் இந்தப் பக்கம் ஒரு சிறு கோயில் தெரிகிறது. எதிரில் தாமரைகள் பூத்த குட்டை. கோவில் பக்கமாய் நடக்கும் ஆஷா, கோவிலை ஒட்டிய புல்வெளியில் திரும்புகிறாள். ''பெரிய பூசணிக்காய் அளவில் ஒரு பாறாங்கல் இங்கே தென்படுகிறதா!'' என்று கேட்கிறாள்.

''ஆமாம், அதோ,'' என்கிறேன். அதற்குள் கண்டக்டர் ராட்சசன் போன்றிருக்கும் ஓர் ஐரோப்பியரைக் கூப்பிட்டு, ''அதைத் தூக்குங்கள் பார்க்கலாம்,'' என்கிறாள்.

கையைச் சுருட்டி விட்டுக்கொண்டு அந்த ஐரோப்பியர் அதைத் தூக்க முயலுகிறார். முக்குகிறார். முனகுகிறார். வேர்வை வடிகிறது. முகம் இறுகுகிறது. தரையிலிருந்து ஓரங்குலம் எழும்புமுன் கல்லைப் போட்டு விடுகிறார் கீழே.

ஆஷா கலகலப்பாய் சிரித்துக்கொண்டே, ''பதினொரு பேர் இப்படி வாருங்கள்,'' என்று அழைத்து, கல்லின்பக்கம் குனிந்து உட்காருகிறாள். அவளுக்குப் பக்கத்தில் நானும் இன்னொரு ஒன்பது பேரும் வட்டமாக உட்காருகிறோம். ''ஒவ்வொருவரும் ஒரு ஆள் காட்டி விரலை மட்டும் கல்லின் அடியில் கொடுத்துத் தூக்கினால் போதும். தூக்கும் போது 'கா கா கா' என்று சேர்ந்தாற்போல் சொல்ல வேண்டும்,'' என்கிறாள்.

'கா கா கா' என்று கோஷமிட்டபடியே ஆளுக்கு ஒரு விரல் கொடுக்கிறோம். ''என்ன ஆச்சரியம்!'' என்று யாரோ கூவுகிறார். ஆம். ஒரு சிரமமும் இல்லாமல் பதினொரு விரல்கள் அந்தப் பாறாங்கல்லைக் கிளப்பி விடுகின்றன— ஓரடி உயரத்துக்கும் மேலேயே! குழந்தைகள் போல எல்லோரும் சிரிக்கிறோம்.

எனக்கு அதெல்லாம் தெரியவில்லை. ஆஷாவை நெருங்கினாற்போல் உட்கார்ந்திருக்கிறோம் என்ற போதையொன்றுதான் என் தலைக்கு ஏறுகிறது. நான் எதுவுமே பேசவில்லை. ஆனந்த மயக்கத்தில் இருக்கிறேன்.

சூரியதேவன் கோவிலைக் காணுகிறோம். யானை இறந்து கிடப்பதைபோல, சாவிலும் மாட்சிமையுடன் நிற்கிறது அந்தப் புராதனக் கோவில். பிரகாரத்தில் தரையோடு தரையாகப் புதைத்து வைக்கப்பட்டுள்ள பெரும் பெரும் பானைகளின் வரலாற்று முக்கியத்துவத்தை ஆஷா விவரிக்கிறாள்.

நான் வினாடிக்கு வினாடி அவளிடம் ஒன்றி ஒன்றி அடிமைப்படுகிறேன். எதிலும் நல்லதையே காணும் அவளுடைய இயல்பு என்னை மேலும் கவர்கிறது. வெள்ளைச் சட்டை போட்ட அன்னியனைக் கண்டதும், எந்தக் காஷ்மீரியும் எழுந்து சலாம் போடுகிறான். இது எனக்குப் பிடிக்கவில்லை. "ராஜாக்களின் யதேச்சாதிகார ஆட்சியினால் ஏற்பட்ட அடிமைப் புத்தி இது." என்கிறேன். "அப்படியல்ல. இந்த மக்களுடைய உள்ளம் தங்கமானது. எந்த அன்னியனரையும் நம்பி வரவேற்கும் இனிய பண்பாடு அது." என்று ஆஷா என்னைத் திருத்துகிறாள்.

தால் ஏரியில் விடிகாலைப்போதில் பனி மூட்டம் மெல்ல மெல்ல விலகுகிற மாதிரி, ஆஷாவின் பிறப்பு வளர்ப்பையும் கொஞ்சம் கொஞ்சமாகத் தெரிந்து கொள்கிறேன்.

தன்னுடைய ஆபரணங்களையெல்லாம் ஒருநாள் கழற்றி என்னிடம் தருகிறாள். "டெல்லியில் உள்ள பவானி மடத்துக்கு அனுப்பி விடுங்கள்," என்கிறாள்.

நான் திகைத்துப் போனாலும் அவள் சொல்படியே செய்கிறேன். படகுக்காரர்களின் மூலம் நூலும் துணியும் வரவழைத்து, சிறு பார்சலாகக் கட்டுகிறேன். அரக்கு முத்திரைக்காக அவளுடைய கழுத்தில் பவுன் சங்கிலியி லுள்ள பதக்கத்தின்மீது கை வைக்கும்போது, மனம் பழையபடி போதை கொள்ளுகிறது. எப்போதும்போல் 'இது அல்ல தருணம்' என்று என்னை அடக்கிக் கொள் கிறேன்.

அன்றைக்கு இரவு என்னை நாகின் கிளப்புக்கு அழைத்துச் செல்கிறாள். நாகின் ஏரியின் கரைக்குள்ளே துருத்திக்கொண்டிருக்கும் பிரம்மாண்டமான நடன மண்டபத்தில், தண்ணீரைத் தொட்டுக்கொண்டிருக்கும் இரும்புக் கிராதியின் ஓரமாக நாற்காலிகளை இழுத்துப் போட்டுக் கொள்கிறோம். மேகங்களின் நிழல்கள் நாகின் ஏரியில் குளித்துக்கொண்டிருக்கும் அற்புதத்தை வியந்த வண்ணம் உட்கார்ந்திருக்கையில் ஆஷா சொல்கிறாள்: "என் அண்ணன்களில் ஒருவன் இந்தக் கிளப்பைப்பற்றி எனக்குப் பக்கம் பக்கமாய்க் கடிதம் எழுதுவது வழக்கம்."



நான் ஆச்சரியத்துடன், "ஸ்ரீநகரிலா இருக்கிறான் அவன்?" என்று கேட்கிறேன்.

"ஆமாம், இந்திய ராணுவத்தில் ப்ரிகேடியராகப் பதவி வகித்தான்."

"வகித்தான்?" ஏன் இறந்த காலம்?

"வகித்தான்— எல்லைப்புற மலைவாசிகளுக்கு ஆயுதங்கள் கொடுத்துப் பாகிஸ்தான் அனுப்பியதே, அந்த நாள் வரையில். 1948'ல் அவர்களைத் துரத்தியடித்ததோடு அவன் வாழ்வு முடிந்துவிட்டது."

நான் மௌனமாகிறேன். காஷ்மீரத்தோடு ஆஷாவுக்கு உள்ள அந்தரங்கமான, ஆழமான பிணைப்பின் ரகசியம் ஒருவாறு புலப்படுகிறது.

"இன்னொரு அண்ணன்?" என்று கேட்கிறேன்.

"அப்பா எவ்வளவோ தடுத்தும் கேளாமல் தானும் ராணுவத்திலேயே சேர்ந்து விட்டான். இப்போது எங்கே இருக்கிறானோ தெரியாது. ஒல்லியாய், உயரமா யிருப்பான். அவன் முகம்கூட வரவர மறந்துகொண்டே யிருக்கிறது."

"உன் அப்பா?"

"ஒரு வருடமாகிறது அவர் காலமாகி." ஆஷா நெடு மூச்சு விடுகிறாள். "மாஜி ஜமீந்தார் அவர். மறைந்து கொண்டிருக்கும் தலைமுறையின் கடைசிப் பிரதிநிதி. பவானி மடம் எங்களுக்குக் கோவில் மாதிரி. தாங்கள் அதைப் பற்றிக் கேள்விப்பட்டதில்லையா, ஸ்வாமிஜி?"

"ஏன் கேள்விப்படாமல்? ஆனால், தமிழ்நாட்டில் நான் சேர்ந்திருப்பது வேறோர் மடம்," என்கிறேன் அவசரமாக.

நாகின் கிளப்பின் நடன மண்டபமெங்கும் ஆங்காங்கே உல்லாச யாத்திரீகர்கள் நிறைகிறார்கள். வெள்ளமாய் வழிந்தோடுகிறது மது. கிடுகிடுவென்று புட்டிகள் காலியாகின்றன. கோப்பைகள் நிறைகின்றன. வெள்ளை யூனிபாரம் தரித்த சர்வர்கள் வாத்துப் போல் ஓசையின்றி நடமாடுகிறார்கள். கையில் பழரசத்துடன் அமர்ந்திருக்கும் நான், பழரசத்தைக் காட்டிலும், இனிமையான ஆஷாவையே உற்று நோக்குகிறேன். குஜராத்திப் பெண்ணின் வழக்கப்படி புடைவைத் தலைப்பை மார்பின் மீது இடத்திலிருந்து வலமாகப் போட்டுக் கொண்டிருக்கிறாள். "தலைப்பை வலதிலிருந்து இடமாகத் திருப்பிப் போட்டுக் கொள். அதுதான் அழகு." என்று கூறுகிறேன்.

அவள் நாணத்துடன் சிரித்தவாறு நான் சொன்னதைச் செய்கிறாள். என் தேகத்தில் ஒரு பரவசம் நிகழ்கிறது. ஆனால் ஆஷாவினிடத்தில் எவ்வித விகற்ப உணர்ச்சியும் தென்படக் காணோம். அவள் என்மீது வைத்துள்ள பவித்திரமான மதிப்பில் ஒரு மாற்றும் குறையக் காணோம்.

திடுதிப்பென்று எதிரே நான்கு காஷ்மீரிகள் உட்கார்ந்து பாடத் தொடங்குகிறார்கள். ஒருவன் தபேலா. சாரங்கி ஒருவன். மூன்றாமவன் ஷெனாய்போல ஒரு வாத்தியத்தை ஊதுகிறான். இன்னொருவனிடம் கடம் போன்ற பானை இருக்கிறது.

மொழி புரியாவிட்டாலும், அவர்கள் பாடும் துரிதமான மெட்டு என்னைக் கவர்கிறது. அருகிலும் தொலைவிலும் அமர்ந்திருக்கும் பலர் வேகமாகத் தாளம் போடுகிறார்கள்.



ஆஷா புன்னகையுடன், "காஷ்மீர் இசையில், இந்திய ராகங்களும் பாரசீக மெட்டுக்களும் கலந்திருக்கும் இவர்கள் பாடுவது நாட்டுப் பாடல். கச்ரி என்று சொல்வார்கள். மிக வேகமாய்த் தாளம் போட வேண்டும்," என்கிறாள்.

"நீ பாடுவாயா ஆஷா?" என்று கேட்கிறேன்.

வெட்கத்துடன் சிரித்தபடி பேச்சை மாற்றுகிறாள் ஆஷா. "காஷ்மீரி வார்த்தைகள்கூட எனக்குக் கொஞ்சம் கொஞ்சம் தெரியும்...... இருங்கள், இருங்கள்...... ஆமாம் ஏதோ ஒரு பாண்டத்தை உடைத்து விட்டாளென்று மாமியார் திட்டி விரட்டிவிடுகிறாள் நாட்டுப் பெண்ணை. ஓடைக்கரையில் உட்கார்ந்து தன் விதியை எண்ணிப் புலம்புகிறாள் அந்த மருமகள்...... அதுதான் இந்த நாட்டுப் பாடல்."

பாட்டு நடந்து கொண்டிருக்கும்போதே கடம் போன்ற வாத்தியத்தை வைத்துக் கொண்டிருந்தவன் திடீரென எழுந்து கொள்கிறான். அந்தக் கடத்தை என் மடியில் கொண்டு வந்து வைத்துக்கொண்டு வேகமாக அடிக்கத் தொடங்குகிறான்.

ஓசை அருகியதைக் கொண்டு விஷயத்தை ஊகிக்கிறாள் ஆஷா. "அகப்பட்டுக் கொண்டீர்கள் ஸ்வாமிஜி!" என்று சிரிக்கிறாள்.

"ஏன்? என்ன?" என்று திகைக்கிறேன்.

"ஒன்றுமில்லை. அப்படி உங்கள் மடியில் கொண்டு வந்து வைத்து இசைத்தால், அந்த வாத்தியத்துக்குள் நீங்கள் பணம் போடவேண்டும்."

"அவ்வளவுதானே?" என்று நானும் சிரித்துக் கொண்டே, பையிலிருந்து ஒரு பத்து ரூபாய் நோட்டைப் போடுகிறேன்.

பாட்டுக் கச்சேரி முடிகிறது. ஆங்கில் நடனங்களும் இசைகளும் மதுபானங்களும் அளவுக்கு மீறுகின்றன. போகலாம் என்று புறப்பட்டு விடுகிறாள் ஆஷா.

அன்று இரவுக்குமேல் என்னால் தாள முடியவில்லை.

மறுநாள் ரசூலை அழைத்துக்கொண்டு அரசாங்க எம்போரியத்துக்குப் போகிறேன். கொண்டு வந்திருந்த பணத்தையெல்லாம் செலவழித்து விதவிதமான ஆடையாபரணங்கள் வாங்குகிறேன். ரசூலின் குடும்பத்தினர் உதவியைக்கொண்டு அவளை அலங்கரிக்கிறேன்.

கண்கொள்ளாத எழிலுடன் திகழும் ஆஷாவை அழைத்துக்கொண்டு வெளியே புறப்படுகிறேன். ஒரு பிரம்புப் பெட்டியைக் கையில் எடுத்துக் கொள்கிறாள் அவள்.

எதற்கு என்று கேட்டால் மர்மமாகச் சிரிக்கிறாள்.

ஜீலம் நதிக்கரையில் மசூதியும் மந்திரும் ஒரே கட்டடத்தில் அமைந்துள்ள தலத்தைத் தரிசனம் செய்துவிட்டு வெளிவருகையில் ஆஷா ஒரு தெய்வீகப் பொலிவுடன் பிரகாசிக்கிறாள். அமானுஷ்யமான அந்த அழகைப் பருகப் பருக என்னுள் வெறியும் வேட்கையும் போட்டியிட்டு மேலெழும்புகின்றன.

நடமாட்டமுள்ள ரஸ்தாவை விட்டு விட்டு வேண்டுமென்றே ஒரு குறுக்குப் பாதையில் அவளை அழைத்துச் செல்கிறேன். ஒரு குன்றின் சரிவில், வேகமாகச் செல்லும் ஒரு காட்டாற்றின் கரையில் அமர்கிறோம்.

''அடடா!'' என்று அவள் எதற்கோ சூள் கொட்டுகிறாள். என்னவென்று பார்க்கிறேன். அவள் அணிந்திருந்த ஹவாய் செருப்புக்களில் ஒன்று காது பிய்ந்திருக்கிறது.

''இப்படிக் கொடு,'' என்று வாங்கிக் கொள்கிறேன்.



''ஸ்வாமிஜி! அபசாரம்!'' என்று ஆஷா தடுக்க முனைவதைப் பொருட்படுத்தாமல், பிய்ந்திருந்த வாரின் முனையை மீண்டும் செருப்புக்குள் செருகித் திணிக்கிறேன்.

''இப்போது மாட்டிக்கொள்.''

கண்ணிமைக்கும் நேரம். பூம்பிஞ்சாக மெத்தென்று இருக்கும் பாதத்தை என் கையால் பற்றி அணிந்திருப்பேன். ஆறாவது புலனினால் அதை உணர்ந்தவள் போல் ''ஸ்வாமிஜி!'' என்று என் கைகளை விலக்கிவிட்டு, ''ஸ்வாமிஜி! என்ன காரியம் செய்யவிருந்தீர்கள்!'' என்று விம்மி அழுகிறாள் ஆஷா.

உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாதவனாகிறேன் நான். ''ஆஷா!'' என்று தொண்டையடைக்கக் கூப்பிடுகிறேன்.

அவள் தன் கண்களைத் துடைத்துக் கொள்கிறாள். முகம் மலர்கிறது. ''ஸ்வாமிஜி! ஏனோ தெரியவில்லை. என் மனம் இப்போது நிறைந்திருக்கிறது. இந்த மாதிரியான புனிதமான உணர்வு ஏற்பட வேண்டுமென்று தான் காத்திருந்தேன்,'' என்று சொல்லியபடியே, தான் கொண்டு வந்திருந்த பிரம்புப் பெட்டியைத் திறக்கிறாள்.

உள்ளே—

ஒரு காவிப் புடைவையும் காவிச் சோளியும் காவிப் பாவாடையும் இருக்கின்றன.

என்னிடம் அவற்றைக் கொடுத்து என் முன்னே விழுந்து வணங்கி எழுகிறாள். ''நான் தயாராகி விட்டேன். ஸ்வாமிஜி எனக்குத் தீட்சை கொடுங்கள்,'' என்கிறாள்.

அத்தனை வெறிக்கும் மத்தியில் எனக்குப் பிரமிப்பு ஏற்படுகிறது. ''ஆஷா! என்ன இது?'' என்று கூவுகிறேன்.

''சன்னியாசம், ஸ்வாமிஜி. அதற்குத் தேவையான மனப்பக்குவத்துடன் தான் காஷ்மீருக்கு வந்தேன். தெய்வத்துக்கும் அதுவே சம்மதம். இல்லாவிட்டால் ஏன் தங்களிடம் என்னைக் கொண்டுவந்து சேர்த்திருக்கிறது? வேளை வரும்போது குரு கிடைப்பார் என்று முன்பொரு ஸ்வாமிஜி எனக்குச் சொல்லியிருந்தார். தாங்கள் கிடைத்தீர்கள். வேளை வந்துவிட்டது,'' என்கிறாள் ஆஷா.

ஆத்திரம் என் அறிவை மழுங்க வைக்கிறது. அறிவு மழுங்குவதால் என்னால் எதையும் புரிந்து கொள்ள இயலவில்லை. ''உனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதா ஆஷா? புத்தி சுவாதீனமில்லாமல் பேசுகிறாயா?'' என்று இரைகிறேன்.

''திடுதிப்பென்று சொல்வதால் தங்களுக்குக் கோபம் ஏற்படுவது இயற்கைதான், ஸ்வாமிஜி,'' என்று என் சினத்தை வேறு விதமாகப் புரிந்துகொண்டு மறுமொழி கூறுகிறாள் ஆஷா. ''பவானி மடத்துக்கு எங்கள் குடும்பம் செலுத்தவேண்டிய காணிக்கைதான் என் துறவு. இப்போது புரிகிறதல்லவா?''

''எதுவும் புரியவுமில்லை, புரியவும் வேண்டாம்,'' என்று பொறுமையிழந்து நான் சீறுகிறேன்.

அமைதி சிதறாமல், நிதானம் பதறாமல் பேசுகிறாள் அவள்: ''பவானி மடத்தைத் தொடங்கி வைத்த பன்னிரண்டு குடும்பங்களில் எங்களுடையதும் ஒன்று. ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு தலைமுறையிலும் ஓரோர் உறுப்பினரைத் தரவேண்டும் என்று ஆரம்பத்தில் சங்கற்பம் செய்திருந்தார்கள். என் தகப்பனாரின் சகோதரர்கூட ஒருவர் பவானி மடத்தின் துறவியாகச் சென்றதுண்டு...''

''எதற்கு இந்தப் பழைய கதையெல்லாம்?'' என்று நான் உறுமுகிறேன்.



''என் தந்தை செலுத்த வேண்டிய காணிக்கை தவறிவிட்டது. மூத்த மகன், இதே காஷ்மீரத்தின் விடுதலைப் போரில் உயிர் துறந்துவிட்டான். அடுத்த மகன் அவருடைய விருப்பத்துக்கெதிராக ராணுவத்தில் சேர்ந்து குடும்பத்தை விட்டே போய்விட்டான். போன வருஷம் என் தந்தை உயிர் துறக்கும் சமயம் இந்தக் குறை தீராமலே துடித்தார். நானாகவே அவருக்கு வாக்குத் தந்தேன். 'உங்கள் குமாரர்களால் தீராத குறையை இந்த மகள் தீர்ப்பாள் அப்பா. நான் ஏற்றுக் கொள்கிறேன் சன்னியாசம்' என்றேன். அதன் பிறகே அவர் உயிர் பிரிந்தது.''

''அதற்காக?''

''காஷ்மீரத்தை ஒருமுறை பார்த்துவிட்டு, டெல்லிக்குப் போய், பவானி மடத்தில் துறவு ஏற்பது என்று எண்ணியிருந்தேன். அதற்குள் தாங்களே என்னைத் தேடி வந்து விட்டீர்கள், தீட்சை தருவதற்காக,'' என்று மறுபடியும் என்னை நமஸ்கரிக்கிறாள்.

அழுவதா சிரிப்பதா? ''சன்னியாசத்துக்கு இதுவல்ல பருவம், ஆஷா. சகல சௌபாக்கியங்களையும் கரத்தில் ஏந்திக் கொண்டு காலம் காத்திருக்கிறது. உனக்கு அது தெரியவில்லையா?'' என்கிறேன்.

''தெரியவில்லை ஸ்வாமிஜி. எனக்கு அது வேண்டவும் வேண்டாம். சிறு வயதிலிருந்தே இந்தப் பக்குவம் ஏற்பட்டு வந்திருக்கிறது. வேறு எந்தவிதமான வாழ்க்கையும் எனக்கு ஒட்டாது,'' என்கிறாள் ஆஷா தீர்மானமாக.

இங்கிதமாகப் பேசி அவள் மனத்தை மாற்ற முடியுமா என்று பார்க்கிறேன். ''நீ இந்தத் தியாகம் செய்ய வேண்டிய அவசியம் எதுவுமில்லை ஆஷா! உன் சகோதரன் ஒருவன் நாட்டுக்காக உயிரை அர்ப்பணித்து விட்டான்.

இன்னொருவன், அர்ப்பணிக்கத் தயாராயிருக்கிறான். தேசத்துக்குத் தொண்டு செய்வதும் தெய்வத்துக்குத் தொண்டு செய்வதும் ஒன்றேதான். ஆகவே, ஏற்கெனவே உன் குடும்பம் தன் காணிக்கையைப் பவானி மடத்துக்குச் செலுத்திவிட்டது. நீ உன் இளமையை இழக்க வேண்டாம்."

''என் இளமையா!'' என்று சிரிக்கிறாள் ஆஷா. ''இளமை, மூப்பு, நோய், பருவம், மாறுதல், மரணம் இதெல்லாம் எனக்கு— உண்மையான எனக்கு— உண்டென்றா சொல்கிறீர்கள்? அதெல்லாம் உடலுக்கு அல்லவா ஸ்வாமிஜி?''

என் ரத்தம் தலைக்கேறிக் கொண்டிருக்கிறது. ''போதும் நிறுத்து! பொழுது போகாத பண்டாரங்கள் பிதற்றிய குப்பைகளையெல்லாம் என்னிடம் அளக்காதே!'' என்று இரைகிறேன்.

''ஸ்வாமிஜி!'' என்று முதன்முறையாக அவள் திடுக்கிடுகிறாள். ''ஒரு சன்னியாசி— துறவி— பேசுகிற பேச்சா இது?''

என்னை மறந்து கூவுகிறேன். ''யார்? யாரிங்கே சன்னியாசி? உன் அருகே இருக்கும் இந்த ராதா— உயிரும் உணர்ச்சியும், வாலிபமும் வெறியும், அழகும் ஆண்மையும் கொண்ட நாகரிகமான இளைஞன். உன் பார்வை சரியாயிருந்தால் என்றைக்கோ என்னிடம் மயங்கி உன்னை எனக்கு மகிழ்ச்சியுடன் கொடுத்திருப்பாய்!''

''ஸ்வா—'' அவளுடைய செப்பு அதரங்கள் சற்றே திறந்துகொண்டு, உணர்ச்சி தாங்கமாட்டாமல் துடிக்கின்றன. தீயை மிதித்த மாதிரி அலறித் துடித்துக் கொண்டு எழுகிறாள். ஒளியிழந்த கண்கள் என்மீது கொட்டக் கொட்ட நிலைத்து நிற்கின்றன. வலையில்



சிக்கிய மானைப்போல் மருண்டு மருண்டு பார்க்கிறாள். திக்கற்ற நிலையில், எங்கு, எப்படி, யாருடன் தப்பியோட முடியும் என்று புரியாமல் அவள் தவிப்பது தெரிகிறது.

எல்லாவற்றையும் காட்டிலும், அவளது மலைபோன்றதொரு திட நம்பிக்கை நிலைகுலைந்து விழுவதையும், ஆயுளிலேயே முதல் தடவையாகத் தீமையின் கோர உருவைச் சந்தித்ததால் ஏற்பட்ட அதிர்ச்சி இடியெனத் தாக்கி அவளைத் தள்ளாட வைப்பதையும் கண்கூடாக நான் காண்கிறேன்.

இருந்தாலும் என் வெறி இனி இறங்காது. அது தணிந்துதான் ஆக வேண்டும். அவள் என்ன நினைத்தாலும் சரி. என்ன எதிர்த்தாலும் சரி.

''ஆஷா!'' என்று அவள் பூங்கரத்தைப் பற்ற முயலுகிறேன்.

அவள் பின்னும் நடுங்கியவளாகத் திமிறி விடுபடுகிறாள். ஓடுகிறாள்.

மறுகணம் அவளோ நானோ எதிர்பாராத விபத்து நிகழ்ந்து விடுகிறது.

பாறையொன்று தடுக்கி, தலைகுப்புற, அலங்கோலமாக அந்தக் காட்டாற்றில் ஆஷா விழுந்துவிடுகிறாள்.

''ஆஷா! ஆஷா!'' என்று அலறிய வண்ணம் நான் அவள் அருகே குதிக்கிறேன்.

அதற்குள்ளேயே ஆற்று நீர் சிவப்பாகி விடுகிறது. ஒரு பாறையில் மோதுண்டதால் அவள் தலையில் பெரிய காயம் ஏற்பட்டு, குருதி பெருகிக் கொண்டிருப்பதே அந்தச் சிவப்புக்குக் காரணம்.

மூழ்கி மூழ்கி வெளிவந்து கொண்டிருக்கும் ஆஷாவை, கூந்தலைப் பிடித்து, பெரும்பாடுபட்டுக் கைப்பற்று கிறேன். நீந்திக் கரை சேர்கிறேன். கல்லூரியிலும் பள்ளியிலும் கற்ற முதலுதவிகள் மறந்து போகின்றன. ஆஷாவைத் தூக்கித் தோள்மீது போட்டுக் கொண்டு ஓடுகிறேன், கண்மண் தெரியாமல். தோப்பு வழியாகவும் குன்றுகள் நடுவேயும் ஓடுகிறேன், திக்குத் திசை தெரியாமல்.

ஓர் அகலமான தார் போட்ட ரஸ்தா குறுக்கிடுகிறது. அதன் வழியே ஓடுகையில் கிறீச்சென்ற ஓசையுடன் ஒரு ராணுவ டிரக் நிற்கிறது.

உணர்வு வந்தவனாக, ''ஐயா, தயவு பண்ணி உதவுங்கள்,'' என்று லாரியில் இருப்பவர்களிடம் நான் கெஞ்சுகிறேன். அதற்குள் ''யாரவன் பைத்தியக்காரன்?'' என்று திட்டிக்கொண்டே முன்புறம் லாரிக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த ஒருவன் இறங்கி வருகிறான். லாரியின் பின்புறம் இருந்த என்னைப் பார்க்கிறான். பிறகு மறுபடி அவளைப் பார்க்கிறான். திடீரென்று ''ஆஷா! ஆஷா!'' என்று கத்திவிட்டு என்னை அசுரத்தனமாக உலுக்கி, ''ராஸ்கல்! என் தங்கையை என்ன செய்தாய்? கொலை செய்து விடுவேன் உன்னை! உண்மையைச் சொல்!'' என்று உறுமுகிறான்.

எந்த அதிர்ச்சியும் என்னை இனி சாய்க்காது. நான், ''முதலில் ஆஸ்பத்திரிக்கு இவளை எடுத்துச் சென்று காப்பாற்றுவோம். பிறகு உங்கள் சகோதரிக்கும் எனக்குமுள்ள உறவைச் சொல்கிறேன்,'' என்கிறேன்.

மிலிடரி டிரக் புழுதி வாரியிறைத்துக் கொண்டு புறப்படுகிறது. மற்றவர்கள் ஒதுங்கிக் கொள்கிறார்கள், ஆபீசரான அந்த இளைஞனுக்கு மரியாதையாக.

பலபல வருடங்களுக்குப் பிறகு, எதிர்பாராத சந்தர்ப்பத்திலே சந்திக்கும் தங்கையைத் தடவித் தடவிப் புலம்பு



கிறான் அவன். நான் சுருக்கமாகச் சொல்கிறேன். ''அவளுக்குக் கண் பார்வை போய்விட்டது'' என்று. இப்போதுதான் அறிகிறான் போலும். ''ஆஷா! ஆஷா!'' என்று அவளது மூடிய இமைகளை வருடிக்கொண்டு விம்முகிறான்.

ஆஷாவின் மேனி மெல்ல அசைகிறது. இமைகள் லேசாய்த் திறக்கின்றன. ''மோதி... மோதி...'' என்று முணுமுணுக்கிறாள்.

''ஆமாம் ஆஷா. உன் அண்ணன் மோதிதான்,'' என்று அவன் அவளைத் தன் மடியில் சாய்த்துக் கொள்கிறான்.

அவன் எதிரில் நிற்கத் தைரியமற்று ஒதுங்கியிருந்த என்னை அவள் விழிகள் அலைந்து தேடிக் கண்டு கொள்கின்றன. அதிலே கோபமோ வெறுப்போ குரோதமோ இல்லை. கனிவைத்தான் காண்கிறேன். ''அவருக்கு... ஒன்றுமில்லையே... பேசிக்கொண்டேயிருந்தவள் திடீரெனத் தவறி விழுந்து விட்டேன். அவரும் குதித்தார் காப்பாற்ற...... அதுதான் நினைவு இருக்கிறது...... அப்புறம்......'' என்கிறாள்.

மோதி என்னையும் அவளையும் மாறி மாறிப் பார்க்கிறான், அவநம்பிக்கையுடன். ''வேறொன்றும் தப்புத் தண்டா நடைபெறவில்லை? இவன் உன்னை......''

''சே, சே!'' என்று அண்ணனின் வாயைப் பொத்துகிறாள் ஆஷா.

அவள் கரம் அவன் உதட்டின்மீதே நின்றிருக்கிறது. ஸ்ரீநகர் அரசாங்க ஆஸ்பத்திரியை அடையும்போது.

பின்பு அங்கேயே நின்று விடுகிறது.

''ஆஷா! இந்தக் கோர முடிவை எனக்குக் காட்ட வேண்டுமென்றா குஜராத்திலிருந்து இவ்வளவு தூரம்

வந்தாய்!'' என்று அந்தப் பிரேதத்தின்மீது விழுந்து புலம்புகிறான் மோதி.

அவனே ஈமக் கடன்களை முடிக்கிறான்.

ஆஷா என்ற ஓவியம் தீக்கிரையாகிறது. ஆஷா என்ற கவிதை கிழித்தெறியப்படுகிறது. ஆஷா என்ற கனவு கலைகிறது. ஆஷா என்ற நறுமணம் காற்றில் கரைகிறது. ஆஷா என்ற பூவிதழ் அரைபடுகிறது. ஆஷா என்ற சுடர் அணைகிறது.

மோதிக்கும் எனக்கும் எவ்வித உறவுமில்லை. அவன் என்னை நிமிர்ந்து பார்த்து, ''போய் வாருங்கள்,'' என்று கூடச் சொல்லவில்லை. திருதிருக்கும் சிதையினருகே ராணுவக் குல்லாயைக் கழற்றிக் கையில் வைத்தபடி சில நிமிடங்கள் நிற்கிறான். பின்னர் உணர்ச்சிகளுக்கு அடிமைப்படாத சோல்ஜரின் நடையுடன் வெளியேறு கிறான்.

நான் 'வானவில்'லுக்கும் திரும்பவில்லை, 'பட்டுப் பூச்சி'க்கும் போகவில்லை. யார் இருக்கிறார்கள் எனக்கு?

மூன்று தினங்கள் வரை பைத்தியம்போல் ஸ்ரீநகரெங் கும் சுற்றுகிறேன். என்னையறியாமல் நான்காம் நாள் அந்தக் குன்றின் சரிவுக்குத் திரும்புகிறேன்.

நடமாட்டமற்ற இடமாகையால், அதே ஆற்றின் ஓரத்தில் அப்படியே கிடக்கிறது ஆஷா கொணர்ந்திருந்த பிரம்புப் பெட்டி. அதன் பக்கத்திலேயே சிதறிக் கிடக் கின்றன அந்தக் காவிப் புடைவையும் சோளியும் பாவாடையும்.

பெட்டிக்குள் அவற்றை எடுத்து வைக்கின்றேன். மடியில் பெட்டியை வைத்துக் கொண்டு அதன்மீது கண்ணீர் உகுக்கிறேன். குமுறுகிறேன்.



ஆஷாவிடம் கொடுத்த பெயர்தான் இனி எனக்கு. ஆஷாவிடம் காட்டிய வேடம்தான் இனி எனக்கு. எதைச் சொல்லி ஆஷாவை ஏமாற்றினேனோ அதையே ஆயுளுக் கும் தண்டனையாக ஏற்றுக் கொள்ளுகிறேன்.

தண்டனைதானா? எனக்குத் தெரியாது. ஆனால், எந்தப் பற்றற்ற வாழ்வை வாழ ஆஷா ஆசைப்பட் டாளோ, அதை நான் வாழ்ந்து பார்க்க முயலுகிறேன். எந்தக் காணிக்கையை அவள் பவானி மடத்துக்குச் செலுத்த விரும்பினாளோ அதை நான் செலுத்துகிறேன்.

முடிவு எடுத்துக்கொண்ட பிறகு எனக்கு எதுவும் கஷ்டமாகத் தெரியவில்லை. டெல்லிக்கு வருகிறேன். பவானி மடம் வினோத் சுவாமிஜியிடம் சரணடைகிறேன். அருள் நிறைந்த அவர் எனக்கு அடைக்கலம் தருகிறார். நான் விரும்பிய பெயரையே எனக்குச் சூட்டுகிறார். சில காலம் தன்னோடு வைத்திருந்து சென்னைக்கு அனுப்பு கிறார்.

யாரிடமும் நான் சொல்லவில்லை, என் துறவின் காரணத்தை. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கற்பனையைத் தந்துவிட்டு நான் ஒதுங்கிக் கொள்கிறேன்.

டாக்டர் சம்பத் ஒரு நாள் ஓடி வருகிறார். ''உங்களுக் காகவே ஏங்கி ஏங்கி, வாழ்க்கையை நாசமடித்துக்கொண் டிருக்கிறாளே ஒரு பெண்? இது நியாயமா?'' என்று கேட் கிறார்.

நியாயமில்லை என்று உணர்கிறேன். அவளை என்னிடமிருந்து முற்ற முழுக்க வெட்டுவது எப்படி? நான் திகைத்துக் கொண்டிருக்கும்போது அவள் ஒரு நாள் கேட் கிறாள், ''நீங்கள் ஒரு கொலைகாரரா?'' என்று.

யோசித்துப் பார்க்கிறேன். கொலைகாரப் பட்டம் கிட்ட எனக்கு எல்லாத் தகுதியும் உண்டுதான். ஆஷாவை

நான் விஷம் கொடுத்துக் கொல்லவில்லை. கழுத்தை நெரித்துக் கொல்லவில்லை. சுடவில்லை. குத்தவில்லை.

ஆனால் ஒரு தூய நம்பிக்கையை நான் கொன்றவன். என்னால்தான் ஆஷாவின் உயிர் பிரிந்தது என்பதில் என்ன தவறு?

''ஆமாம் சத்யா. நான் கொலைகாரன்தான்,'' என்று ஒப்புக்கொள்கிறேன்.

'ஒருத்தியைக் கொன்றது போதும். இவளாவது பிழைக்கட்டும். சுட்ட பாண்டத்தோடு ஒட்ட முடியாது என்று உணர்ந்து விலகட்டும்' என்று ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

அதற்குள் இந்த இரண்டாவது மரணம் நிகழ்ந்திருக்கிறது.

இம்முறை ராதானந்தர் என்ற சன்னியாசியின் உடலுக்கு மரணம்.

சாவா வாழ்வா என்ற போராட்டத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கிறேன். என் நாடி தளர்ந்து கொண்டிருக்கிறது.

# ஐம்பத்துமூன்று

''டாக்டர்! அவர் பிழைப்பாரா டாக்டர்? ஸ்வாமிஜி... இல்லை இல்லை. என் மருமான். என் அண்ணா பையன். என் குழந்தை மாதிரி ராதா. அவன் பிழைப்பானா? அவனுக்கு ஒன்றும் ஆபத்தில்லையே? கொஞ்சம் சொல்லுங்கள் டாக்டர். ஒரே ஒரு வார்த்தை சொல்லுங்கள். நான் போய்விடுகிறேன்,'' என்று திரும்பத் திரும்ப டாக்டர் சம்பத்தின் கையைப் பிடித்துக்கொண்டு புலம்பினாள் மீனலோசனி.



வேறு சிலரும் அவள் பின்னால் நின்றனர்.

சிறிது சிறிதாய்ப் புலனுணர்வுகள் திரும்பிக் கொண்டிருந்தன ராதானந்தருக்கு. வலது தோளில் கழுத்துக் கருகே உயிரைப் பறிக்கும் வலியை உணர்ந்தார் அவர். பரிதாபகரமாகப் புலம்பிக் கொண்டிருப்பவள் சத்யாவின் அம்மா என்பதைப் புரிந்து கொள்ளும்போதே மறுபடியும் அவருடைய புலன்கள் மங்கின. அப்படி மங்கிய கடைசி வினாடியில், துப்பாக்கித் தோட்டாவினால் துளை ஏற்பட்ட இடத்திலே ரத்தம் பீச்சிக் கொண்டிருப்பதையும் சத்யாவும் டாக்டர் சம்பத்தும் அவரைத் தாங்கிக் கொண்டிருப்பதையும் தெரிந்து கொள்ள முடிந்தது. ''பயப்படாதே என்று சொல் உன் அம்மாவிடம்...'' என்று ஏதோ கூற ராதானந்தர் முயன்றார். ஆனால் வார்த்தைகள் வெளி வருமுன் கண்கள் செருகிக் கொண்டன.

''போங்கள் வெளியே! போகிறீர்களா இல்லையா?'' என்று முரட்டுத்தனமாக அவர்களை வெளியே தள்ளிக் கதவைச் சாத்திக் கொண்டார் டாக்டர் சம்பத்.

கூட்டத்தில் இருந்த ராணி தன்னைத்தானே நொந்து கொண்டிருந்தாள்.

''எல்லாம் இந்தப் பாவியாலே— என்னாலே வந்தது தான்!'' என்று தன் தலையிலேயே அடித்துக்கொண்டாள். ''சத்யாவை வேலை மெனக்கெட்டு இங்கே அழைத்து வந்து அவர் எதிரில் நிறுத்துவானேன்? 'இவனுக்கு ஒரு வழி சொல்லுங்கள்,' என்று அத்தனை பேருக்கும் மத்தியிலே கேட்பானேன்? என் பொல்லாத நாக்குக்குச் சூடு போட்டால்கூடப் போதாது. அப்படிக் கேட்டதால்தானே, அவர் ஒரு மஞ்சள் கயிற்றை எடுத்தார்? டாக்டர் சம்பத்

கிட்டே கொடுத்து, சத்யா கழுத்திலே கட்டும்படி சொல்லிக் கொண்டிருந்ததை அந்த மணி பார்த்துத்தானே தப்பாய் அர்த்தம் பண்ணிக்கொண்டு, ஸ்வாமிஜியையே கட்டு விட்டான்? "முருகா, நான் பண்ணின குற்றத்துக்கு ஸ்வாமிஜியைப் பழிவாங்கி விடாதே!" என்று மனத்துக்குள் புலம்பிக் கொண்டிருந்தவள், தெருப்புறம் ஆரவாரம் கேட்டு, நிமிர்ந்து பார்த்தாள். உடனே, "அம்மா, அம்மா! இங்கே வந்து பாருங்கள்!" என்று மீனலோசனியை அழைத்துக் கொண்டு வாசலுக்கு விரைந்தாள்.

அங்கே, வெற்றிப் பெருமிதத்துடன் டெபுடி கமிஷனர் சாரங்கபாணி முன்னே நடைபோட்டுவர, பின்கை கட்டப் பட்டவனாக நாலுபேர் புடைசூழ மணி வந்து கொண் டிருந்தான்.

"இங்கேயே தூணோடு தூணாகக் கட்டிப் போட்டு வையுங்கள் ராஸ்கலை!" என்று உத்தரவு பிறப்பித்துவிட்டு "மீனா, அவனுக்கு— அவருக்கு எப்படி இருக்கிறது? என்ன செய்திருக்கிறார்கள்?" என்று கேள்விகளை வீசினார் சாரங்கபாணி.

"என்னை ஒன்றும் கேட்காதீர்கள் எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போலிருக்கிறது!" என்று மீனலோசனி கண்ணைத் துடைத்துக் கொண்டதும், "சரி நானே போய்த் தெரிந்து கொள்கிறேன். நீ, மாப்பிள்ளை யாக்கிக் கொள்ளவிருந்தாயே பெரிய மனிதன், இதோ இருக்கிறான். உபசாரம் பண்ணிக்கொண்டிரு!" என்று பழைய கோபம் போகாதவராகக் கூறிவிட்டுச் சென்று விட்டார் டெபுடி கமிஷனர். மணவியைப் பின் தொடர்ந்து வந்தது எத்தனை புத்திசாலித்தனம் என்று தன்னைத்தானே பாராட்டிக்கொண்டார் அவர்.

மீனலோசனி வெறிக்க வெறிக்க மணி தூணோடு பிணைக்கப்படும் கோலத்தையே பார்த்துக்கொண்டு நின்றாள்.



"என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டது வீண் போகாதடா, பாவி. பகவான் உன்னைக் கேட்பார்!" என்றாள் ஆத்திரம் தாங்காமல்.

மணி வெறுப்புடன் காறித் துப்பினான். "என்னைக் கேட்பதோடு நிற்காது, மாமியாரே! உன் மருமான் இருக் கிறாரே—ராதானந்தசுவாமிகள்— அவர் என் தோட்டா வுக்குத் தப்பினாலும் தூக்குமேடைக்குத் தப்பமுடியாது நினைவு வைத்துக்கொள்!" என்று சீறினான்.

இப்போது ராணி ஆங்காரத்துடன் முன்னே வந்து இடுப்பில் கையுடன் அவன் எதிரில் நின்றாள். "அந்தக் கதையைக் கொஞ்சம் அடக்கியே வை, அண்ணே. நான் கொஞ்சம் புத்தி கெட்டுப்போய், உன்னிடம் வாங்கின லஞ்சத்துக்காகக் காஷ்மீரிலே போய் விசாரிக்கத்தான் விசாரித்தேன்," என்றாள்.

"ஒரு சாட்சியும் அங்கே கிடைக்கவில்லை என்று மூட்டை அவிழ்க்கப் போகிறாயாக்கும்?" என்றான் மணி ஏளனமாக.

"அது உன் தொழில்!" என்று சுடச்சுடத் திருப் பினாள் ராணி. "நான் அங்கே யாரை விசாரிக்கிறதென்று தெரியாமல் விழித்தேன். ராணுவக்காரர்களுக்காகத்தான் முக்கியமாய்ச் சில நிகழ்ச்சிகள் நடந்தது. அதிலே ஒரு ஆபீசரைப் பிடித்தேன். மோதி என்று பெயர் அவர் யார் தெரியுமா?"

"யார்?"

"ஸ்வாமிஜி கொலை பண்ணிவிட்டதாய்ச் சொல்லிக் கொண்டிருக்கிறாயே, ஆஷா என்று ஒரு பெண், அவளுடைய சொந்த அண்ணன்காரன்தான். 'அந்தப் பெண் இயற்கையான முறையில் இறந்து போனாள் நானே என் கையால் தகனம் பண்ணினேன். ஒருத்தர்

மேலும் ஒரு சந்தேகமுமில்லை' என்று சொல்லிவிட்டார் அந்த ஆபீசர்! போதுமா?''

மணியின் தலை தொங்கிப் போயிற்று.

''ஐந்தே நிமிடம்!'' என்றார் டாக்டர் சம்பத்.

ரத்தம் பீய்ச்சி அடித்துக் கொண்டிருந்தது, வலது புஜத்திலிருந்து. வெள்ளைச சுவரின் மீது அந்த ரத்தம் பாய்ந்து அதைச் செந்நிறமாக்கிக் கொண்டிருந்தது.

அடிபட்ட உடனேயே கீழே விழுந்த அதிர்ச்சியினாலும், தூக்கிய நிலையில் கையை வைத்திருந்ததாலும், புஜத்தின் பின்புறம் முழங்கையின் மேல் எலும்பு சதையைக் கிழித்துக்கொண்டு துருத்தி வெளி வந்திருந்தது. இயல்பற்ற முறையில் கோரமாகத் திரும்பியிருந்தது கை.

''கயிறு! கெட்டியாய், சணல், இல்லாவிட்டால் கப்பாணிக் கயிறு கொண்டு வாருங்கள்!'' என்று இரைந்தாள் சத்யா, அறைக்கு வெளியே தலையை நீட்டி.

கழுத்து பட்டையை ஒட்டிய காறை எலும்பின் மீது பெருவிரலை வைத்துப் பலம் கொண்ட மட்டும் அழுத்திக் கொண்டிருந்தார் டாக்டர் சம்பத். ''ரத்தம் இவ்வளவு பீய்ச்சியடிக்கிறதைப் பார்த்தால் ப்ரேக்கியல் ஆர்ட்டெரி வெட்டுப்பட்டிருக்க வேண்டும். ஐந்து நிமிடத்துக்கு மேல் உயிர் நிற்காது! கயிறுக்காகக் காத்திருக்காதே. இங்கே அக்குளில் ஏதாவது துணியால் கட்டுப்போடு, முதலில்! சீக்கிரம்!'' என்று கிடுகிடுவென்று ஆனால் பதற்றமில்லாமல் கட்டளையிட்டார்.

அவர் சொல்லி வாய் மூடுமுன், சத்யா தன் புடைவையின் ஓரத்தில் இரண்டு நீண்ட துண்டுகள் கிழித்து விட்டாள்.



அக்குளின் குறுக்காக அதை இறுக்கமாய்க் கட்டிய போது, பீய்ச்சி அடித்துக் கொண்டிருந்த வெள்ளம் சற்றுத் தடைபட்டு, வெறுமே வழிந்து வெளியேறத் தொடங்கியது. ''போதாது. விகேசர் பண்ணவேண்டும்,'' என்றார் டாக்டர் சம்பத். வாசல்புறம் அவர் பார்வை சென்றது. படகுக்காக விசாரிக்கப் போயிருந்த ஒருவர் ஓட்டமாய்த் திரும்பி வந்து, ''எதிர்க் காற்றாயிருக்கிறதாம். பட்டணம் போய்ச் சேர நாலுமணி நேரமாவது ஆகும். பரவாயில்லையா என்று படகுக்காரன் கேட்கிறான்,'' என்றார்.

டாக்டர் சம்பத், ராதானந்தரைக் கூர்ந்து கவனித்தார்.

ராதானந்தரின் நெற்றியில் வியர்வைத் துளிகள் வெடித்துக் கொண்டிருந்தன. முகம் வெளுத்து, இதயத்தின் துடிப்பு அதிகரித்திருந்தது.

''ப்ளீடிங்கை உடனே அரஸ்ட் பண்ணவேண்டும் சத்யா. ஷாக் ஏற்படும்படி விடக்கூடாது.'' என்றார் டாக்டர் கவலையுடன்.

''ஷாக்கைத் தடுக்க...'' கையைப் பிசைந்தாள் சத்யா. ''மார்பியாவுக்கு எங்கே போவது, டாக்டர்?''

''மார்பியாவா? வசதியில்லாதபோது, எதற்கு வீண் பேச்சு? முதலில் விகேசர் பண்ணிவிடலாம். இன்னும் நாலு நிமிடம்தான்!''

''இங்கேயா? எந்தக் கருவி இருக்கிறது இங்கே? நாமே செப்ஸிஸ் ஏற்படுத்துவதாகி விடாதா, டாக்டர்?''

''பரவாயில்லை.'' டாக்டர் சம்பத், ராதானந்தரின் நாடித் துடிப்பைப் பரிசோதித்தார். அவர் முகம் பீதியைக் காட்டியது. ''பல்ஸ் ரேட் ஒன் ட்வென்டி சத்யா. உடனே ப்ளீடிங்கை நிறுத்தியாக வேண்டும். இதோ இங்கே நீ அழுத்திக் கொண்டிரு.'' காறை எலும்பின்மீது சத்யாவின் பெருவிரலை அமுக்கி வைத்துவிட்டு, வேகமாகக் கதவைத்

திறந்தார். ''உடனே ஒரு சாதாரணத் தையல் ஊசி இருந்தால் கொண்டு வாருங்கள்! சத்யா! நீ கட்டியிருப்பது ஸில்க் புடவைதானே? நாலு நூல் பிய்த்துச் சேர்த்துத் திரித்துக் கொள்! க்விக்!''

ஊசி வந்து விட்டது. டாக்டர் சம்பத், கால்சட்டைப் பையிலிருந்து ஒரு பேனாக் கத்தியை எடுத்தார்.

''புல்லெட் சாய்வாகப் பாய்ந்திருக்கிறது. ஆர்ட்டரி கிழிந்துள்ள இடம் தெரியவில்லை. இன்ஸிஷன் போட்டாக வேண்டும்.'' ஹரிகேன் விளக்கின் கூட்டைக் கழற்றிவிட்டு, சுடரின் ஜுவாலையில் கத்தியைப் பழுக்கக் காய்ச்சினார். ஊசியையும் காய்ச்சினார். ''ஸ்டிரிலைஸ் பண்ண இது தான் ஒரே வழி.''

சத்யா, ஸில்க் நூலைக் கோத்துக் கொண்டாள் ஊசியில்.

''ஸ்வாமிஜி... ஸ்வாமிஜி...'' என்று மெல்ல அழைத்தார் டாக்டர் சம்பத்.

தொய்ந்து கிடந்த இமைகளைச் சிரமத்துடன் உயர்த்தினார் ராதானந்தர். ''என்ன?'' என்று ஜாடையிலேயே வினவினார்.

''உள்ளே ஊசி கொடுத்து, ரத்த நாளத்தைக் கட்டப் போகிறேன். மிகவும் வலிக்கும். ஆனால் வலி மரப்பு மருந்துக்கோ, மயக்கத்துக்கோ வசதியில்லை. ஆகவே...''

''பொறுத்துக் கொள்கிறேன்,'' என்று வேதனையை மறைக்கும் புன்னகையுடன் பதிலளித்தார் ராதானந்தர். அவர் பார்வை கண்ணில் நீர் பளபளக்க அருகில் நின்றுள்ள சத்யாவின்மீது தாவிற்று. ''ஆபரேஷனை... சத்யாவே செய்யட்டும்.''

''ஸ்வாமிஜி!...'' டாக்டர் சம்பத் அந்தக் கோரிக்கையின் உட்பொருள் தெரியாமல் திகைத்தார். ராதானந்தருக்கு சத்யாவின்மீது அத்தனை நம்பிக்கையா, அல்லது தன்மீது அத்தனை அவநம்பிக்கையா?...



''நான் மாட்டேன்! என்னால் முடியாது!'' என்று உடனேயே மறுத்தாள் சத்யா.

''நீ செய்ய முடியாதென்றால், எனக்கு எந்தவிதமான சிகிச்சையும் வேண்டாம். என்னை இப்படியே விட்டு விடுங்கள். என்ன நேருவதானாலும் நேரட்டும்,'' என்றார் ராதானந்தர் உறுதியாக.

தாமதிக்கும் ஒவ்வொரு விநாடியும் எத்தனை ரத்தம் சேதமாகிக் கொண்டிருக்கிறது! டாக்டர் சம்பத் பொறுமையிழந்து, ''சத்யா! இன்னும் மூன்று நிமிடம்கூட இல்லை! அவர் இஷ்டப்படியே நடக்கட்டும். அருகில் நான் இருக்கிறேன். முதல் ஆபரேஷன் என்பதற்காகப் பயப்படாதே,'' என்றார்.

''ஐயோ, உங்களுக்குப் புரியவில்லையே டாக்டர்,'' என்று கையைப் பிசைந்தபோது சத்யாவின் கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடியது.

''என்ன சொல்கிறாய் நீ, சத்யா?''

''பற்று என் கைகளைப் பதற வைக்கும். என் அத்தான் என்ற ரத்த உறவு என் காரியத்தைத் தடை செய்யும். இத்தனை வருடங்களாகப் பழகி வந்த பாசமும் அபிமானமும் அன்பும் காதலும் என் கண்ணை மறைக்கும். மூளையைக் குழப்பும். அறிவைக் கெடுக்கும் நிதானத்தைச் சிதறச் செய்யும்.''

ராதானந்தரின் வெளிறிய முகத்தில் மந்தஹாசம் அரும்பியது. ''சத்யா, இப்போது சொன்னாயே அதே காரணங்களுக்காக நீதான் ஆபரேஷன் செய்ய வேண்டும்.''

ராதானந்தரின் மூச்சுத் திணறியது போலவே, பேச்சும் தழுதழுத்தது. "ஆம்! சத்யா, என்மீதுள்ள இந்தப் பற்று என்றென்றும் அற்றுப் போக, நீதான் ஆபரேஷன் செய்ய வேண்டும். அந்த ரத்த உறவு இற்றுப் போக, நீதான் ஆபரேஷன் செய்யவேண்டும். பழகி வந்த பாசம், அபிமானம், அன்பு, காதல்— அவையெல்லாவற்றையும் மிச்சசொச்சமில்லாமல் வெட்டித் தூர எறி. அதுதான் உனக்கும் நல்லது, எனக்கும் நல்லது."

அவர் அயர்வுடன் கண்களை மூடிக்கொண்டார்.

சத்யா, அசைந்தாடும் விளக்குச் சுடரின் நீலவண்ணத்தைப் பார்த்தாள். உலகத்தின் தூய்மையான, எட்ட முடியாத பொருள்களெல்லாம் அவளுக்கு நினைவு வந்தன. அந்த விளக்கின் சுடரில் பரிசுத்தமடைந்து கொண்டிருக்கும் கத்தியைப் பார்த்தாள். தொட முடியாத பவித்திரத்துடன் திகழும் அந்தக் கத்தியைப் போலவே தூரத்தில் வைத்துப் பூஜிக்கப்பட வேண்டிய பொருள்களும் உலகில் உண்டு என்ற உண்மையை அவள் அறிவு கண்டு கொண்டது. பத்தடிக்குப் பன்னிரண்டடிப் பரப்புள்ள அந்தக் குறுகிய அறையினுள்ளே நடைபெறும் இந்த ஒப்பற்ற நாடகம், இன்றல்ல நேற்றல்ல, என்றைக்கு அவள் சத்யா என்ற பெயர்கூட இல்லாத ஒரு சிசுவாகப் பூமியில் ஜனித்தாளோ அன்றைக்கே ஆரம்பமாகி விட்டதென்பதையும், அந்த நாடகாசிரியனின் எழில் சார்ந்த கற்பனையைப் புரிந்து கொள்ளாமல் போராடியது— நாடகத்தின் போக்கையும் முடிவையும் மாற்றுவதற்காகப் போராடியது— விவேகம் அல்லவென்பதையும் ஒரே கணத்திலே அவள் அறிந்து கொண்டாள்.

"இரண்டு நிமிடம்தான், சத்யா," என்று மீண்டும் டாக்டர் சம்பத் சொன்னதும், சரேலெனக் கத்தியை வாங்கிக் கொண்டாள் சத்யா. தோட்டா துளைத்திருந்த இடத்தினருகே அழுத்தி ஒரு கிழிப்புக் கிழித்தாள்.



செக்கச் சிவந்த சதை திறந்து கொண்டதும் டாக்டர் சம்பத் உள்ளே கிழிந்திருந்த ரத்தக் குழாயின் வாய்ப்புறத்தைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டார். மனிதரின் வாயைத் தைப்பதுபோல் கண்ணிமைப்பதைக் காட்டிலும் வேகமாய், சட் சட்டென்று மூன்று இடங்களில் ஊசியைச் செலுத்தி, முடிச்சுப் போடுகையில் இரண்டாவது முடிச்சு மீண்டும் அறுந்துகொண்டு ரத்தம் பீய்ச்சியடித்தது டாக்டர் சம்பத்தின் முகத்தில்.

"அதையும் சரியாகப் போடு!" என்றார் அவர், கைக் கடியாரத்தைப் பார்த்தவாறே.

ஒரு நிமிடம் பாக்கியிருந்தது.

ஐந்தாவது தையலுடன் ரத்தப் பெருக்கு ஓய்ந்தது. கத்தியால் கிழித்த இடத்தின்மீது துணியை இறுக்கமாய்க் கட்டினாள்.

"மணி ஏழு பத்து," என்றார் டாக்டர். "டை ஸெவன் டென் என்று ஒரு சீட்டில் எழுதி, அந்த அக்குள் கட்டோடு கட்டி வை. அரைமணிக்கொருதரம் கட்டைத் தளர்த்திவிட்டு, மறுபடி கட்டவேண்டும்."

"எஸ் டாக்டர்," என்று அந்த வேலையையும் முடித்தாள் சத்யா. அரைமணிக்கொருமுறை அப்படித் தளர்த்தாவிட்டால், கையில் ரத்த ஓட்டம் அடியோடு நின்றுவிடும் என்று அவள் அறிவாள்.

ராதானந்தரின் முகம், அவர் அனுபவிக்கும் வேதனையினால் இறுகிப் போயிற்று. புடைத்துக்கொள்ளும் தாடை எலும்பும், சுளித்துக்கொள்ளும் கண்களும்தான் அந்த வேதனையைப் பேசினவேயன்றி வாயை விட்டு ஒரு முனகல் கூட வெளிப்படவில்லை.

ராதானந்தரையே பார்த்தவாறு யோசனையில் ஆழ்ந்தபடி நின்றிருந்தார் டாக்டர். அவர் முகத்தைக்

கண்டு திகிலுற்றவளாய், ''என் டாக்டர், ஏதும் புதுக் காம்ப்ளிகேஷனா, என்ன?'' என்று சத்யா கேட்டாள்.

''இல்லையில்லை. படகில் மூன்று நான்கு மணிநேரம் செல்லவேண்டும். ப்ளீடிங்கைத்தான் நிறுத்தியிருக்கிறோமே தவிர, போன் ஃப்ராக்சர் அப்படியே இருக்கிறது. இந்த நிலையில் பிரயாணம் பண்ணுவது நரகவேதனை...''

''பின்னே?''

''அதற்கும் ஓர் எமர்ஜன்ஸி ட்ரீட்மெண்ட் செய்து விடுவோம்.''

சத்யாவின் திகைப்பு அதிகரித்தது. ''சிம்புக்கு இங்கே எப்படி...''

டாக்டர் சம்பத் கதவுக்கு வெளியே எட்டிப் பார்த்து, ''வாழை மரம் இருக்கிறதல்லவா இந்த ஊரில்?'' என்று கேட்டார்.

''நிறைய,'' என்று ஆர்வத்தோடு பதிலளித்தவர் ஆயுர் வேத வைத்தியர்தான்.

''நாலைந்து பட்டை பிய்த்து வரச் சொல்லுங்கள்,'' என்று கூறிவிட்டுத் திரும்பினார் டாக்டர். ''ஸ்வாமிஜி... இனிமேல்தான் நிஜமான வேதனை...''

விழிகளைத் திறவாமலே சம்மதம் என்று தலையசைத்தார் ராதானந்தர்.

எலும்பு நீட்டிக் கொண்டிருந்த பகுதியின் இரண்டு புறத்திலும் இழுத்துப் பிடித்து, உடைந்த முனைகளைப் பொருத்தும் வேலையையும் சத்யாதான் செய்தாள்—டாக்டரின் கட்டளைக்கிணங்க. ஆனால் எலும்பு உள்ளே திரும்ப மறுத்தது.



''எதுவோ தடுக்கிறது, டாக்டர்.''

சம்பத், அந்த இடத்தைப் பார்த்தார், ''புல்லட்.''

உளுத்துப்போன கள்ளிப் பலகை மாதிரி, தோட்டாவின் தாக்குதலினால் எலும்பு பொறுபொறு என்று நொறுங்கியிருந்த இடத்தில் விரலை விட்டு, தோட்டாவை வெளியே எடுக்க முயலுகையில், சிறுசிறு ரத்தக் குழாய்களிலிருந்து பொட்டுப் பொட்டாக ரத்தம் வடியத் தொடங்கியது. விரைவாகத் தோட்டாவை வெளியிலெடுத்து வீசியெறிந்தார் டாக்டர் சம்பத்.

துள்ளி விழுந்து ணங்கென்று தரையில் மோதியது, சிறு டார்ச் ஸெல்லைப் போன்றிருந்த காரீயத் தோட்டா.

அதே சமயம்—

''எல்லாம் சரியாகி விட்டதா டாக்டர்?'' என்று வினவியவண்ணம் உள்ளே நுழைந்த சாரங்கபாணி, அந்தத் தோட்டாவை கைக்குட்டையினால் ஒற்றியெடுத்து கால் சட்டைப் பையில் பத்திரப்படுத்திக் கொண்டார்.

''இனி அபாயமில்லை,'' என்றவாறு எலும்புகளை இழுத்துப் பொருத்தினார் டாக்டர். சத்யா, தன் புடவையிலிருந்து மேலும் கிழித்துத் தந்த துணியைத் தண்ணீரில் நனைத்துப் பிழிந்துவிட்டு, சரத்துடனேயே புஜத்தின் மேற்புறமெங்கும் சுற்றிக் கட்டினார். இரண்டு வாழைப் பட்டைகளை எடுத்து மேலும் கீழுமாகக் கரத்தின்மீது மூடி, அதன் மீதும் கட்டுப்போட்டார். இன்னொரு துணித் துண்டினால் கழுத்தில் ஊஞ்சல் கட்டி, மெல்லக் கையை வளைத்து அதில் படுக்கவிட்டார்.

விளக்கை ஓரமாக வைத்துவிட்டு, கைக்குட்டையை எடுத்தார் டாக்டர் சம்பத். முத்து முத்தாக சத்யாவின் நெற்றியில் துளித்திருக்கும் வியர்வையை ஒற்றியெடுத்தார்.

''போதும் சத்யா, நீ இத்தனை செய்ததே பெரிது. உன் முதல் ஆபரேஷனில் வெற்றி பெற்றுவிட்டாய். கங்கிராஜுலேஷன்ஸ்,'' என்றார்.

சத்யா அவர் முகத்தை ஏறிட்டு நோக்கினாள். அவர் நீட்டிய கரத்தைக் குலுக்குவதற்காகப் பிடித்துக் கொண்டவள் அப்படியே மௌனமாக அவரைப் பார்த்தபடி நின்றாள். கற்பனையும் பண்ணமுடியாத ஒரு காரியத்தைச் செய்து முடிப்பதற்குத் தனக்குச் சக்தியும் வலுவும் தந்தது எது என்று அவளுக்குப் புரிந்துவிட்டது. தனது தன்னம்பிக்கையைத் தூண்டி விட்டு, அறிவைக் கூர்மையாக்கி, செயலுக்குச் சுறுசுறுப்பேற்றும் அளவுக்கு இந்த டாக்டரிடம் என்ன மந்திர சக்தி இருக்கிறது என்று அவளால் அறிய முடியவில்லை. ஆனால் அந்த மந்திரத்துக்குக் கட்டுண்டு விட்டோம் என்றும், இனி என்றும் கட்டுண்டு கிடந்தாலொழிய, தான் பெண்ணாகவோ, டாக்டராகவோ உலவ முடியாதென்றும் புரிந்து கொண்டாள்.

அவள் இதயத்தின் அந்தரங்கமெல்லாம் அவளது ஐந்து விரல்களின் வழியே பாய்ந்துவிட்டதோ? டாக்டர் சம்பத், அவளுடைய மென்மையான கரத்தைக் குலுக்கி, ''உனக்கும் வெற்றி, எனக்கும் வெற்றி,'' என்று பெருமிதத்துடன் கூறினார்.

ராதானந்தரின் விழிகள் மெல்லத் திறந்துகொண்டன. ''எனக்கும் வெற்றிதான், டாக்டர். காலண்டரில் தேதியைப் பாருங்கள்,'' என்றார்.

இரண்டு டாக்டர்களும் அவர் பேச்சைப் புரிந்து கொள்ள இயலாமல், தேதியையும் அவரையும் மாறி மாறிப் பார்த்தார்கள்.

''புரியாது,'' என்று புன்னகையுடன் பேசினார் ராதானந்தர். ''இன்றோடு தான் தீட்சை பெற்று ஒரு



வருடமாகிறது. நானும் ஒரு சோதனையில் வெற்றி பெற்றாகி விட்டது.''

மீனம்பாக்கம்.

ஒரு சக்கரவர்த்தியின் கம்பீரத்தோடு கை வீசி விடை பெற்றுக்கொண்டு, காத்திருக்கும் காரவெல்லினுள் ஏறிக் கொள்கிறார் அந்தச் சன்னியாசி.

வழியனுப்ப வந்தோர்களின் கூட்டம் தாழ்வாரத்தை நிறைத்திருக்கிறது. நெகிழ்ந்த மனத்துடன் ஒருவர் சொல்லிக் கொண்டிருக்கிறார்: ''நேருஜி எழுதியது எத்தனை உண்மை! 'காஷ்மீரம் மீண்டும் மீண்டும் அழைக்கிறது. தடவைக்குத் தடவை அதன் காந்த சக்தி அதிகரிக்கிறது. தன் மாய மந்திரத்தை நம் செவியில் அது கிசுகிசுத்துக் கொண்டே இருக்கிறது. அதன் நினைவு மனத்தைச் சலனப்படுத்தியவாறு இருக்கிறது. காஷ்மீரத்தின் மந்திரச் சக்திக்குக் கட்டுப்பட்ட எவர்தான் அந்த மோகன மயக்கத்திலிருந்து விடுபட முடியும்?' என்று எழுதினார். அது சரிதான். ஸ்வாமிஜி ஒரு வருடத்துக்குள் மறுபடி புறப்பட்டு விட்டாரே அங்கே?''

மீனலோசனியின் கண்களில் நீர் ததும்பியிருக்கிறது.

சத்யாவின் தோளைத் தொட்டவாறு நின்றிருந்த டாக்டர் சம்பத் குனிந்து சத்யாவின் முகத்தைப் பார்க்கிறார்.

''என்ன பார்க்கிறீர்கள், டாக்டர்?''

''நீ கடைசி நிமிஷத்தில் அழுது விடுவாய் என்று நினைத்தேன்.''

''நானா!'' கலகலவென்று சிரிக்கிறாள் சத்யா. ''கண்ணீர் விடப்பட வேண்டிய நிலையைக் கடந்து

நிற்கிறவர் அந்தத் துறவி. கண்ணீர் விடக்கூடிய நிலையைக் கடந்து நிற்கிறவள் இந்த சத்யா. அன்றைக்கு, அந்தக் குக்கிராமத்தில், மயக்க மருந்தோ மரப்பு ஊசியோ இல்லாமல், பழுக்கக் காய்ச்சிய கத்தியின் முனையைச் சதையில் வாங்கிக் கொண்டாரே, ஒரு முனகல்கூட இல்லாமல்? அப்போதே புரிந்துகொண்டேன்— அந்த ஆன்மீக நெருப்பின் பக்கத்திலே நிற்கவும் தகுதியற்றவள் நான் என்பதை. அந்தத் தவ வலிமையைக் குலைக்க முயன்றால் எனக்கும் மேனகைக்கும் வித்தியாசமே இருக்காது என்பதைத் தெரிந்து கொண்டேன். அத்தான் என்று முறை போட்டு, இல்லறச் செப்புக்குள்ளே அவரை அடைக்க எண்ணினால் அதுவே மகத்தான பாவம் என்ற அறிவு எனக்கு அன்றைக்கே வந்துவிட்டது, டாக்டர்.''

ரன்வேயின் நீண்ட பாதையில் நீந்தி, வளைந்து திரும்பி, தன்னைத்தானே உதைத்துக்கொண்டு, நிலத்தின் உறவை வெட்டிக்கொண்டு மேலெழும்புகிறது விமானம்.

மெல்லிய இசைத்தட்டின் ஒலி அடங்குகிறது. சிறிய ஒலிபெருக்கியில் வரவேற்பு கூறப்படுகிறது.

ஒவ்வொருவருடைய சௌகரியத்தையும் விசாரித்த வண்ணம் வரும் பணிப்பெண் ஒரு வினாடி வியப்புடன் நிற்கிறாள். தன் உடையைப் பணிவுடன் சரி செய்து கொள்கிறாள்.

பத்துப் பன்னிரண்டு மாதங்களுக்கு முன்பு, டெல்லியிலிருந்து வந்த துறவியல்லவா இவர்? காற்றுக்குமிழ்கள் குளிர்ச்சியடைந்து நீர் சொட்டி அவரை நனைத்தபோது, தான், ''ஸாரி...'' என்று மன்னிப்புக் கேட்டுக்கொண்டபோது, 'இதுவும் ஓர் ஆனந்தம்' என்று புன்முறுவலுடன் கூறிய அதே இளம் சன்னியாசியல்லவா இவர்? சற்று மெலிந்திருக்கிறார். ஆனால் தேஜஸ் அதிகரித்திருக்கிறது.



குனிந்து மரியாதையுடன், ''ஸ்வாமிஜிக்கு ஒரு பிஸ்லோ எடுத்துத் தரட்டுமா?'' என்று வினவுகிறாள் அவள்.

''வேண்டாமம்மா, நன்றி,'' என்று இனிமையுடன் மறுமொழி தந்துவிட்டு வெளியே நோக்குகிறார் துறவி.

அவரது எண்ணங்கள் விமானத்துக்கும் முன்னதாக விரைந்து, மலைகளால் சூழப்பட்ட ஒரு பொன் ஏரியை அடைகின்றன.

வெறி பிடித்த ஓர் அசுரப் பேராசையினால் உந்தப்பட்ட தீயர்கள் கொள்ளி வைத்துக் குலைத்துள்ள அந்த எழில் பொங்கும் இடத்தை எண்ணி அவர் உள்ளம் ரத்தக் கண்ணீர் வடிக்கிறது.

'பிறரை மகிழ்விப்பதிலேயே தாங்கள் மகிழ்ச்சியுறும் எளிய மக்களான ரசூல், ஹரூமி, காசிம், தளபதியான மோதி, தால் ஏரிக்கு எதிரில் சிகரெட் கடை வைத்திருக்கும் பையன், சிரித்த முகத்தைத் தவிர வேறெதுவும் காட்டாத டூரிஸ்டு இலாகா டைரக்டர், 'காகா' கல்லைத் தூக்கிய பதினொருவர், பஹல்காம் கால்ஃப் கிளப்பில் கூடவே ஓடி வந்த சிறுவன்— இவர்களும் இன்னும் எண்ணற்ற மக்களும் தீரத்துடன் போராடுகிறார்கள். அவர்களுக்கு உதவுவதல்லவா என் வேலை?' என்று நினைக்கிறார்.

தன்னைத்தானே கடிந்து கொள்கிறார் அந்தத் துறவி. 'சே! என்ன அகந்தையான உள்ளம் எனக்கு! அவர்கள் ஏதோ என் உதவிக்காகக் காத்திருப்பதுபோல் எண்ணிக் கொண்டேனே!'

சுவாமி விவேகானந்தரின் அருள் வாக்கு நினைவுக்கு வருகிறது. ''உதவி செய்வதற்கு வாய்ப்பு அளித்ததற்காக அவர்களிடம் நன்றியுடன் இரு,'' என்று கூறிக் கொள்கிறார்.

கண்களை மூடிக் கொள்கிறார் அந்தத் துறவி. அடக்கத்தினால் கடுகினும் சிறுத்தாற்போலவும், உள நிறைவினால் பிரபஞ்சத்தினும் பெரிதானாற் போலவும் சொல்லுக்கு அப்பாற்பட்ட உணர்விலே ஒன்றுகிறது அவர் சிந்தை.

அவர் குறளடிகளைத் தியானிக்கிறார்: யானெனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்குயர்ந்த உலகம் பெறும்.

அவர் கீதையின் திருவாசகத்தைத் தியானிக்கிறார்: எவ்வுயிர்களிடத்தும் பகைமை இல்லாதவனாய், சினேகம் பூண்டவனாய், கருணையே உடையவனாய், எனது, நான் என்னும் எண்ணமில்லாதவனாய், இன்பத்தையும் துன்பத்தையும் சமமாய்க் கருதுபவனாய், பொறுமையுடையவனாய், எப்போதும் சந்தோஷமுடையவனாய், யோகத்தில் நாட்டமுடையவனாய், அடங்கிய மனத்தினனாய், திடமான நிச்சயமுடையவனாய், என்னிடத்தே மனத்தையும் புத்தியையும் அர்ப்பணம் செய்தவனாய் எவன் இருக்கிறானோ, அவன் என் பக்தன்; எனக்குப் பிரியமானவன்.

அவர் பகவான் அரவிந்தரின் பொன்மொழிகளைத் தியானிக்கிறார்: வாள் தன்னை ஆக்கச் சொல்லவில்லை. தன்னை உபயோகிப்பவனைத் தடுக்கவில்லை. தான் உடைந்து போனாலும் ஒதுக்கி வைக்கப்பட்டாலும் வருந்தவில்லை; ஆக்கப்படுவதிலும் ஆனந்தமுண்டு; உபயோகப்படுவதிலும் ஆனந்தமுண்டு; ஒதுக்கி வைக்கப்படுவதிலும் ஆனந்தமுண்டு அந்தச் சமமான ஆனந்தத்தை நீ கண்டுகொள்.

அவர் திருநாவுக்கரசரின் பாடலைத் தியானிக்கிறார்: மனமெனும் தோணி பற்றி மதியெனும் கோலை ஊன்றி, சினமெனும் சரக்கை ஏற்றிச் செருகடல் ஓடும்போது, மதமெனும் பாறை தாக்கி மறியும்போது அறியவொண்ணாது உனையுன்னும் உணர்வை நல்காய்.



அவர் ரமண பகவானின் அறிவுரையைத் தியானிக்கிறார்: தான் என்பது எழுந்தால் சகலமும் எழும். தான் என்பது அடங்கினால் சகலமும் அடங்கும். எவ்வளவுக்கெவ்வளவு தாழ்ந்து நடக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நன்மையுண்டு. மனத்தை அடக்கிக் கொண்டிருந்தால் எங்கே இருந்தாலும் இருக்கலாம்.

அவர் தியானித்துக்கொண்டேயிருக்கிறார்.

விமானம் உயர உயர எழும்பிக்கொண்டேயிருக்கிறது.

★

MADRAS DISTRICT BRANCH LIBRARY
16858
3289699
KOLATHUR, CHENNAI